நிஜமாய் ஒரு கனவு

இன்பா அலோசியஸ்

நிஜமாய் ஒரு கனவு

இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

நிஜமாய் ஒரு கனவு

Nijamai oru kanavu

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

1

சென்னையின் ரங்கநாதன் தெரு... பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. மண்டையைப் பிளக்கும் வெயிலைக் கூட சட்டை செய்யாமல், சென்னையின் மக்களுக்கெல்லாம் ஷாப்பிங் மட்டுமே வேலையா.... என்று வியக்கும் அளவு.... ஒரே மக்கள் வெள்ளம்.

நடைபாதையில் திடீரென முளைக்கும் கடைகள், உணவகங்கள், ஜூஸ் கடைகள், பழக்கடைகள் என நடைபாதைகள் ஆக்கிரமிக்கப் பட்டிருக்க, அங்கேயும் ஒரு கூட்டம் கூடிவிடும்.

பொருட்கள் வாங்க எனச் செல்லும் கூட்டத்தை விட, டைம் பாஸ் பண்ண செல்லும் கூட்டம் இன்னும் அதிகமிருக்குமோ என எண்ண வைக்கும் மக்கள் திரள். வாகனங்கள் அனைத்தும் ஊர்ந்துதான் செல்ல முடியும் என்னும் அளவுக்கு, சாலைகள் கூட மக்கள் திரளால் நிறைந்திருக்கும்.

அங்கே மக்களோடு மக்களாக, கூட்டத்துக்குள் நீந்திக் கொண்டிருந்தனர் நம் கதையின் நாயகி அனன்யாவும், அவள் தோழி மைத்ரேயியும்.

"ஏய் அனு.... என்னடி இது...? இங்கே இருக்கும் கடையெல்லாம் வேடிக்கை பார்க்கவே ஒரு நாள் பத்தாது. இதில் ரெண்டுமணி நேரம்தான்னா.... இதெல்லாம் ரொம்ப அநியாயம்டி...." சாலையின் இரு பக்கமும் இருந்த கடைகளை வேடிக்கை பார்த்தவாறே, மூச்சுவாங்க நடந்தவள், தோழியின் கைகளை இறுக பற்றிக் கொண்டாள். அந்த அழுத்தத்தில் அவளது உற்சாகம், அனன்யாவையும் தொற்றிக் கொண்டது.

"ம்கும்.... ஏன் சொல்லமாட்ட.... வச்சிருக்கிறது ஆயிரம் ரூபா.... அதுக்கு ஒரு சுடிதார் கூட ஒழுங்கா வாங்க முடியாது.

இதில் பெருமூச்சு வேற.... பேசாமல் வாடி..." அவளை இழுத்துக்கொண்டு நடந்தாள்.

"ஏன் சொல்ல மாட்ட.... சும்மா ப்ராஜெக்ட் விஷயம்.... அதனால் ஷாப்பிங் எல்லாம் கிடையாதுன்னு நம்மகிட்டே சொல்லிட்டு, இப்போ இங்கே வந்த பிறகு, ரெண்டுமணிநேரம் டைம்.... என்ன வேண்ணா செய்ங்கன்னு சொன்னால்.... கடுப்பாகுமா இல்லையா...?" அவள் கவலை அவளுக்கு.

"அம்மாடியோ..... கோயம்புத்தூரில் இருக்கும்போதே ஷாப்பிங் அனுப்புவோம்னு சொல்லியிருந்தால் மட்டும், அம்மையார் அப்படியே பத்தாயிரம் ரூபாய் கொண்டு வந்துட்டுதான் மறு வேலை பாத்திருப்பியளோ...." தோழியின் குணம் அறிந்து கலாய்த்தாள்.

அதென்னவோ மைத்ரேயி கையில் எப்பொழுதுமே காசு நிற்காது. அவள் கையில் இன்று ஐம்பது ரூபாய் இருந்தால், அதை செலவழித்தால் தான் அவளுக்கு நிம்மதி. அதை உணர்ந்ததால் தான் அவளை கேலி செய்தாள்.

"வேணாம் அனு..... நெசமாவே அழுதுடுவேன். இப்போ என்ன.... வாங்க முடியாட்டி ஆசைதீர பாத்துட்டுப் போறேன். உனக்கேன் இம்புட்டு நல்லெண்ணம் வாடி..." அவளை எந்த விதத்திலும் தோழியின் கேலி பாதித்ததாகத் தெரியவில்லை.

இதுவும் மைத்ரேயிதான்.... காசு இல்லை என்றாலும் அதற்காக கவலைப்பட மாட்டாள். எப்பொழுதும்போல் தோழியின் குணத்தை ரசித்தவாறே அவளுக்கு இணையாக நடந்தாள் அனன்யா.

ரங்கநாதன் தெருவைக் கடந்து, உஸ்மான் ரோட்டுக்கு வந்தவர்கள், "மையு.... ஜூஸ் ஏதாவது குடிக்கலாமா? ரொம்ப தாகமா இருக்கு..." அனுவின் குரலில், உடனடியாக கண்களை அலைபாயவிட்டாள் மைத்ரேயி.

"அனு.... அந்தா ஒரு கடை இருக்கு பார்.... வா..." நடைபாதையில் இருந்து இறங்கியவள், தோழியின் கைபிடித்து இழுக்க, அதை எதிர்பாராத அனன்யா தடுமாறி விழப் போனவள், சட்டென சுதாரித்து நின்றாள்.

"பிசாசே.... மெதுவாத்தான் போயேன்..." அவள் கடிந்துகொள்ள, "அட.... ரொம்ப தாகமா இருக்குன்னு சொன்னியே.., சட்டுன்னு போய்டலாம்னு பார்த்தேன்... ஈ...." அசடு வழிய அவள் உரைக்க, தோழியை போலியாக முறைத்தாள்.

அதே நேரம்.... சாலையில் தன் உயர்தர சிசி பைக்கில் உச்ச வேகத்தில் வந்துகொண்டிருந்த ஒருவன், திடுமென இவர்கள் அருகில் வந்து, தன் வித்தையை காட்டவேண்டும் என எண்ணினானோ என்னவோ, தன் பைக்கின் ஹானை உச்ச டெசிபலில் ஒலிக்க விட்டவன், ஹேண்டில்பாரை வெடுக்கென திருப்பினான்.

அந்த ஒலியை எதிர்பாராத இருவரும் திக்கென அதிர, அவனோ.... அவர்களை திரும்பிப் பார்த்து நக்கலாக சிரித்துவிட்டு பறக்க, அவன் கவனம் சிதறி, தன் அந்த செயலால், நொடியில் தன்னை மீண்டும் சுதாரிக்க முடியாமல் போனவன், சற்று தடுமாற, அவன் வண்டி எதிர் சாரியில் படாரென புகுந்தது.

"ஏய்...." தன்னை மீறி, கைநீட்டி, பதறி அனன்யா குரல் எழுப்ப, "அனு.... விடுடி..." மைத்ரேயி அவள் கையைப் பிடித்து அழுத்த, "ஐயோ.... அங்கே பாருடி..." வீறிட்டாள்.

அனன்யா காட்டிய திசையைப் பார்த்த மைத்ரேயிக்கு ஒரு நிமிடம் இதயம் நின்று துடித்தது என்றால்.... அனன்யாவுக்கோ நின்றே போனது. எதிர்சாரியில் புகுந்த மற்றவனோ.... அங்கே வந்துகொண்டிருந்த ஒருவன்மேல் நேரடியாக மோதப் போக, அதைப் பார்த்த எதிரில் வந்தவன், தன் ஹேண்டிலை திருப்ப, அவன் வாகனம், அருகில் வந்த வண்டியில் மோதி.., மீண்டும் அடுத்த

வாகனத்தில் மோதி, அந்த வண்டியில் இருந்தவன் தூக்கி வீசபட்டான்.

என்ன நடக்கபோகிறது என யூகித்தவளுக்கு, கண்களை மூடச்சொல்லி உள்ளுணர்வு உந்த, 'அவனுக்கு என்ன ஆகுமோ...?', என்ற மனதின் பதைப்பில் அதைச் செய்ய முடியாமல் போனது.

அவள் செய்யாததை மைத்ரேயி தன் கையால் அவள் விழியை மூட, அவள் கரத்தை விலக்கியவள், அந்த வண்டியில் இருந்தவன், நடு ரோட்டில் தலை மோத விழுவதையும், அவன் ரத்தம் ரோட்டில் சிதறுவதையும் நேரடியாகக் காண.... "ஆண்டவா.... அவரை காப்பாத்து..." அவள் கால்கள் அவனை நோக்கி பாய்ந்தது.

வித்தை காட்டிய மற்றவன் பறந்து விட்டிருக்க, அப்பாவியாக எதிரில் வந்தவனோ, விபத்தில் சிக்கி தன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான். இதுதான் பாவம் ஓரிடம் பழி ஓரிடம் என்பதோ...

"அனு.... வேணாம்டி..." தோழி செய்யப்போவதை உணர்ந்து, அவள் கையைப் பிடித்து தடுக்க, அவளை துரும்பாக விலக்கியவள், அவன் அருகில் ஓடினாள்.

அவனை இடித்துத் தள்ளியவன் அப்பொழுதே சென்றிருக்க, ரோடில் விழுந்தவனோ வலியில் துடித்துக் கொண்டிருந்தான். தலையிலிருந்து வழிந்த ரத்தம்.... அவன் முகம் முழுக்க வழிந்தது. நிச்சயம் ஒரு அகோர காட்சிதான். அதை நேரடியாக காண, மனதில் ஒரு அசாத்திய துணிவு வேண்டும்.

அதற்குள் அவனைச் சுற்றி கூட்டம் கூடியிருக்க, சிலரோ.... நமக்கேன் வம்பு என வேகமாக அங்கிருந்து செல்வது புரிந்தது. ஆண்கள் சிலர், அந்த காட்சியைக் காண முடியாமல், முகத்தை திருப்பிக் கொண்டார்கள்.

"பாத்திங்களாய்யா.... அப்பாவியா வந்தவன் இப்படி சிக்கிட்டான், இவனை இடிச்சு தள்ளிட்டு அவன் பாட்டுக்கு போய்ட்டான் பாருங்க..." ஒருவர் உச்சு கொட்ட,

"அதுதாய்யா.... இந்த சென்னையில் நாம மட்டும் பாத்து போனால் போதாது.... எதிரில் வரவனும் பாத்து வரணும்னு வேண்டிகிட்டே போகணும்.... பாவம் யார் பெத்த புள்ளையோ.... இப்படி அடிபட்டு கிடக்குதே..." மற்றவர் பொருமலையும், தன் அனுதாபத்தை கொட்டினார்.

கூட்டத்தை விலக்கிவிட்டு, உள்ளே பாய்ந்தவள், அவன் வலியில் முனகியவாறு, புழுவாய் துடிப்பதைப் பார்த்தாள். தலை உடைந்து ரத்தம் ஆறாய் பெருக, நிச்சயம் அவன் கையும் காலும் கூட உடைந்திருக்கும் என்பதை ஒற்றை பார்வையில் உணர்ந்து கொண்டாள்.

ஆண்கள் கூட அவனை நெருங்க தயங்க, அவளோ.... எதையும் கண்டுகொள்ளாமல், "எல்லாம் இப்படி சுத்தி இருந்து வேடிக்கை பாக்கறீங்களே.... ஏதாவது செய்ங்க...?" கெஞ்சியவள், தன் துப்பட்டாவை உருவி, அவன் தலையில் அழுந்த முடிச்சிட்டாள்.

அவள் செய்கையில் அடிபட்டவனே.... தன் வலியையும் மீறி, அவளை ரத்தம் வழியும் முகத்தோடு ஏறிட்டான். அவளோ.... தன் செய்கையிலே கவனமாக இருந்தவள்.... தோழியை ஏறிட்டாள்.

அதற்குள்.... "இந்தம்மா.... வயசுப்புள்ளை.... உனக்கு என்னத்துக்கு வம்பு. தூரப்போ..." ஒருவர் தன் அக்கறையை அவளிடம் வெளிப்படுத்த,

"ஏம்மா.... போலீசு கேசு.... உனக்கெதுக்கு பொல்லாப்பு..." அடுத்தவன் அதைத் தொடர,

"ஐயோ.... முதல்ல பேசாமல் ஏதாவது ஆட்டோவை கூப்பிடுங்க..." வீறிட்டாள்.

ரோட்டில் கிடந்தவனோ.... அவனை காக்க வந்த தெய்வமாக, அவள் கரத்தை அழுந்த பற்றிக் கொண்டான்.

"அனு.... என்ன காரியம்டி பண்ற.... முதல்ல வா..." அவள் கையைப் பிடித்து இழுத்தாள் மைத்ரேயி. ஊரு விட்டு வந்து, எதற்காக தோழி வம்பை விலைக்கு வாங்குகிறாள் என்று இருந்தது அவளுக்கு.

"மையூ.... முதல்ல ஆம்புலன்சுக்கு போன் பண்ணுடி..." ரோட்டில் இருந்தவனது மேனி, இப்பொழுது துடிக்கத் துவங்கியது. அவன் முகம் முழுவதும் அடையாளமே தெரிய முடியாத அளவு ரத்தம் தோய்ந்திருக்க.... சுற்றி இருந்தவர்கள் முகம் திருப்ப, அனன்யாவுக்கு அது எதுவும் உறைக்கவில்லை.

அவன் கண்களோ.... தன் துன்பத்திலும், தனக்கு உதவ ஓடி வந்த அவளை பார்க்க முயன்றான். அவள் பதைபதைப்பான முகம் அவன் கண்ணுக்குள் விழுந்து, இதயத்தில் நுழைந்தது. அவளிடம் எதையோ சொல்ல முயன்றாலும்.... வார்த்தை வர மறுக்க.... வலியில் மயக்கம் வரும்போல் இருந்தது.

‘நான் மயங்கக் கூடாது...’, அந்த நிலையிலும் தன்னை நிலை நிறுத்த முயன்றவன்.... ஆதரவாக அவள் கரத்தை இறுக்கினான்.

அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.... அவன் பிழைக்க வேண்டும் என்பது மட்டுமே அவள் நினைப்பில் ஓட, அந்த ரத்தமோ, நிறமோ.... அவளை பாதிக்கவே இல்லை. அவள் கையை அழுந்த பற்றிக்கொண்டு, அவன் துடிதுடிக்க....

அதைப் பார்த்த மைத்ரேயியின் பதட்டம் கூட, "அனு.... வாடி.... எனக்கென்னவோ..." அவன் துடிப்பதைப் பார்த்தவளுக்கு நிலைமை கைமீறி போவதை உணர்த்த, அதை தோழியிடம் சொல்லப் போனவள், அதைச்

சொன்னால் அவள் தாங்கமாட்டாள் என்பதால் பாதியிலேயே நிறுத்தினாள்.

அனன்யாவோ.... "சார்.... பயப்படாதீங்க.... உங்களுக்கு எதுவும் ஆகாது..." அவளைக் கண்டுகொள்ளாமல், அவன் கையின்மேல் தன் கையை அழுத்தி, அவனிடம் உரைத்துக் கொண்டிருந்தாள்.

சுற்றி இருந்தவர்களோ.... "எம்மா.... சொன்னா கேக்க மாட்டியா...?"

"வயசுபொண்ணு என்ன காரியம் பண்ணுது பாருங்க..."

"இப்போ இருக்க பொண்ணுங்களுக்கு, பசங்களை விட தைரியம் ஜாஸ்தி..." ஆளாளுக்கு எதையோ பேசினார்களே தவிர, யாரும் உதவிக்கு முன்வரவில்லை.

அவளோ.... அங்கே சென்ற ஒன்றிரண்டு ஆட்டோவை நிறுத்த முயல, அனைவரும் சொல்லி வைத்தாற்போல், நமக்கேன் வம்பு என விலகிச் சென்றார்கள்.

அதற்குள் அங்கே போலீஸ் வர, ஏதோ ஒரு நல்ல உள்ளம் ஆம்புலன்சுக்கு அழைத்திருந்தது. அடுத்த பத்தாவது நிமிடம் ஆம்புலன்ஸ் ஒலி காதை நிறைக்க, "ஏம்மா.... நீயென்ன இந்த பையனுக்கு உறவா...?" போலீஸ் அவர் விசாரணையைத் துவங்கி இருந்தார்.

"இல்ல சார்.... தெரியாது...?" உரைத்தவள், அவன் தலையில் தான் கட்டியிருந்த கட்டை மீறி வழிந்த ரத்தத்தை, தன் கையால் அழுத்தி, நிறுத்த முயன்றாள்.

அதற்குள் ஆம்புலன்ஸ் அங்கே வர, அதில் இருந்து இறங்கிய செவிலியும், மருத்துவரும் அவனை வண்டியில் ஏற்றி, "இந்தம்மா.... நீயும் ஏறு..." ஆம்புலன்சில் வந்த செவிலி அவளையும் ஏற்ற முயல,

"இல்லங்க.... நாங்க வரலை..." மைத்ரேயி அவள் இடக்கரத்தை அழுத்தமாக பற்றிகொண்டாள்.

"இப்போ ஏறலன்னா நான் வண்டியை எடுக்க மாட்டேன்..." அவன் மனசாட்சியே இல்லாமல் உரைக்க, சட்டென தோழியையும் இழுத்தவாறு உள்ளே ஏறிக் கொண்டாள். அடுத்த நிமிடம் ஆம்புலன்ஸ் சாலையில் சீற மைத்ரேயி தோழியிடம் பாய்ந்தாள்.

"ஏய்.... உன் மனசில் என்னதாண்டி நினைச்சுட்டு இருக்க...?" அடிக்குரலில் அவளிடம் உறுமினாள். அனன்யாவோ தோழியை கண்டுகொள்ளவே இல்லை. அவள் மனம் முழுவதும், அவன் பிழைத்துவிட வேண்டும் என்பதிலேயே நிலைத்து இருந்தது.

"பதில் சொல்லுடி...? உனக்கு இது தேவையா...? நமக்காக எல்லாரும் காத்திட்டு இருப்பாங்க.... அது ஞாபகம் இருக்கா...?" அவளை கலைக்க முயன்றாள்.

அனன்யா அவளைக் கண்டுகொள்ளாமல், அவன்மீதே அவள் பார்வையை செலுத்த, அந்த அரை மயக்க நிலையிலும், அவள் முகத்தை இனம் காண முயன்று கொண்டிருந்தான் அவன்.

"சார்.... சார்.... நான் பேசுறது கேக்குதா...?" செவிலி அவன் கன்னம் தட்ட, அவன் தலை ஆமோதிப்பாக அசைந்தது.

"உங்க நேம் என்ன...? உங்க விலாசம்...? போன் நம்பர்...?" அவள் கேள்வியை அடுக்க, அவனால் வார்த்தை பேச முடியவில்லை.

"சிஸ்டர்.... அவரால் பேச முடியலை..." அவன் அலைப்புறுதல் காணச் சகிக்காமல் அனன்யா உரைக்க, ‘எனக்கு அது தெரியாதா...?’, என்பதுபோல் முறைத்த செவிலி, தன் வேலையைத் தொடர்ந்தாள்.

அவனோ.... என்ன நினைத்தானோ.... கைகள் நடுங்க, விரல்களை முயன்று அசைத்து.... அனன்யாவை அருகில் அழைத்தான்.... அல்லது அழைக்க முயன்றான்.

அவன்மீதே கவனமாக இருந்த அவளால் அதை உணர்ந்துகொள்ள முடிந்தது. சட்டென அவன் அருகில் சென்றவள், அவன் கரத்தை பற்றிக்கொள்ள, மைத்ரேயியால் அதை வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

"ஃப்.... ஃப்...." எதையோ சொல்ல முயன்றவன், அசைய மறுத்த தன் கரத்தை, அவள் கரத்தோடு கோர்த்து, தன் பேண்ட் பாக்கெட்டில் தட்டிக் காட்ட, "சார்.... ஃபோனா...?" அவன் சொல்ல வருவதை உணர்ந்தவளாக கேட்டாள்.

"ம்.... ம்..." அவள் கேட்டதற்கு மொழிந்தானா..? வலியில் முனகினானா அவளுக்குத் தெரியாது. அவன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து அலைபேசியை எடுக்கத் தயங்கினாலும், ஆபத்துக்குப் பாவமில்லை என சமாதானம் செய்தவள், வேகமாக அதை எடுத்தாள்.

"ப்.... ப்..." மீண்டும் அவன் எதையோ அவளைப் பார்த்து உரைக்க, "சார்.... ஸ்ட்ரெயின் பண்ணாதீங்க..." மருத்துவர் கடிய, அவன் கண்களோ, அவளையே வெறித்தது.

"யாருக்கு போன் பண்ணனும்...? சொல்லுங்க...?" அனு பதற, "எம்மா.... கொஞ்சம் தள்ளிப் போ.... நிலைமை தெரியாமல்..." செவிலி எரிந்து விழ, தன்னைச் சுற்றிலும் நடப்பது புரிந்தும் புரியாமல், அவள் முகத்தையே வெறித்தவன், மயக்கத்துக்குப் போனான்.

அவன் மயங்கியதைப் பார்த்தவள்.... "சார்.... சார்.... ஆ..... ஐயோ..." அவனுக்கு ஏதோ ஆகிவிட்டது என அழ, இறுதியாக அவன் காதில் ஒலித்தது அந்த அழுகை மட்டுமே. வேறு எதுவும் அவனைத் தீண்ட மறுத்தது.

"ஷட்அப்.... அவருக்கு மயக்கம் தான்...." மருத்துவர் அனன்யாவை கடிய, சட்டென அவள் அழுகை நின்று, திக்கென அவனைப் பார்த்தாள்.

அடுத்த நிமிடம் அவன் உடல் காக்கா வலிப்பு கண்டவனாக வெட்டி இழுக்க, "ஓ மை காட்..." செவிலி புலம்ப, "ஸ்சு..." அவளை அடக்கிய அந்த மருத்துவர், "சார்.... ரிலாக்ஸ்.... ஒண்ணும் இல்லை..." செயற்கை சுவாசம் சரியாக இருக்கிறதா என பரிசோதித்துவிட்டு, அவன் புஜத்தில் இரண்டு ஊசிகளை செலுத்தி, அவனை கட்டுக்குள் கொண்டுவர முயன்றார்.

அவன் அலைபேசியை கையில் வைத்தவள்.... 'இப்பொழுது என்ன செய்ய...?', அவள் மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது.

"அனு.... என்னடி...?" அவளது வெறித்த பார்வை மைத்ரேயியை கலவரப்படுத்த, அவள் தோளை உலுக்கினாள்.

"ஹாங்..." கலைந்தவள்.... அவன் அலைபேசியை ஆன் செய்தவள், அது பாஸ்வேர்ட் எதுவும் கேட்கக் கூடாதே என்ற வேண்டுதலும் சேர்ந்து எழ, அவள் வேண்டுதலுக்கு பலன் இருந்தது.

வேகமாக கால் ஹிஸ்ட்டரியைப் பார்த்தவள், அங்கே.... அம்மா, அப்பா, தங்கை, ப்ரண்ட், என்ற பெயர்களில் எண்கள் இருப்பதைப் பார்த்தவளுக்கு, அந்த சூழலில் எழுந்த நிம்மதியை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

அந்த நேரத்தில்.... அவன் பெற்றவர்களுக்கு அழைப்பதை விட, அவன் நண்பனுக்கு அழைப்பதுதான் சரியாக இருக்கும் என எண்ணியவள், அந்த எண்ணை அழுத்த, இரண்டாவது ரிங்கிலேயே அது எடுக்கப்பட, "டேய்...? பைக்கை எடுத்துட்டுப் போனவன் எங்கே போன...? டென்ஷனா இருக்குடா...?" பதட்டமாக பேசுவது தெரிந்தது.

"சார்.... இந்த நம்பருக்கு சொந்தக்காரருக்கு ஆக்சிடண்ட் ஆயிடுச்சு.... நீங்க வாங்க..." அவள் உரைக்க, "என்ன...? என்னங்க சொல்றீங்க...?" அவன் உச்ச பதட்டம் அடைவதை, அவளால் நேரில் பார்க்காமலேயே உணர்ந்துகொள்ள முடிந்தது.

"ஆமாங்க.... நீங்க ஜிஹெச் வாங்க...?" அலைபேசியை வைத்துவிட்டாள். அதற்குக் காரணம்.... இங்கே அவனது துடிப்பு அதிகமானதுதான்.

"மையூ.... பயம்மா இருக்குடி.... அவருக்கு எதுவும் ஆகாது தானே...?" ஆம் என்று சொல், என்ற வேண்டுதல் அதில் இருக்க, "ம்ச்.... கவலைப்படாதே, அதான் பாக்குறாங்களே.... எதுவும் ஆகாது..." தோழியின் கையை பற்றிக் கொண்டாள்.

தாங்கள் இருக்கும் சூழ்நிலையில், தோழியின்மேல் கட்டுக்கடங்காத கோபம் இருந்தாலும், அவள் மனதுக்குள் இருக்கும் காயம் புரிந்தவளாக அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

விபத்து நடந்த இடத்தில் ஆயிரம்பேர் இருந்தாலும், கொஞ்சம் கூட தயங்காமல், ரத்தத்தைப் பார்த்து பயம் இருந்தாலும், அதையும் மீறி, அவனுக்கு அவள் உதவக் காரணமே.... போன வருடம் இதேபோல் ஒரு சாலை விபத்தில், அவளது அண்ணன் மரித்ததுதான் என்பது அவளுக்குத் தெரியாததா என்ன?

அன்று மருத்துவர்.... ஒரு பத்து நிமிடத்துக்கு முன்னால் அவனைக் கொண்டுவந்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும் என உரைத்ததும். அதிகப்படியான ரத்த இழப்புமே அவன் மரணத்துக்குக் காரணம் என உரைத்ததும் கூட அவளுக்குத் தெரியுமே.

ஒரு வருடம் ஆன பிறகும்.... ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டாலே பதறும் தோழியும், தன் அண்ணனது இழப்பை தாங்க முடியாமல் அவள் மருகுவதும்.... அவள் அண்ணனின் விபத்தின் பொழுது, ஒருவர் கூட உதவ முன்வராததே

அவன் மரிக்கக் காரணம் என்பதை அறிந்து துடித்தவளாயிற்றே.

அப்படி இருக்கையில்.... அவள் கண் முன்னால்.... ஒரு உயிர் துடிப்பதை அவள் எப்படி பார்த்துக் கொண்டிருப்பாள்?

அதற்காக.... கோவையில் இருந்து, ப்ராஜெக்ட் விஷயத்துக்காக வந்த இடத்தில், என்ன ஏதென்றே தெரியாத சென்னை மாநகரில்.... ஒரு சாலை விபத்தில் தோழி உதவுவதை சட்டென அவளால் ஏற்றுகொள்ள முடியவில்லை.

கோவையாக இருந்தாலாவது, உடனடியாக தங்கள் பெற்றவர்களை அழைத்து, போலீஸ்.... விசாரணை என அனைத்தையும் எதிர்கொள்ள முயலும். அதற்கு அவர்களிடம் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டி இருக்கும் என்பது வேறு விஷயம். இங்கே.... அவள் வயிற்றில் பயப்பந்து சுழன்றது மட்டும் உண்மை.

‘எப்படியாவது இதில் இருந்து கழண்டுகொள்ள வேண்டும்’ என்பது மட்டுமே இப்பொழுது அவள் மூளைக்குள் ஓடிக் கொண்டிருந்தது. அதே நேரம்.... அவள் கையில் இருந்த அலைபேசி ஒலியெழுப்ப, அதில் ஒளிர்ந்த கல்லூரி ஆசிரியையின் எண், அவள் எண்ணத்தை வலுப்பெறச் செய்தது.

ஆம்புலன்ஸ் மருத்துவமனைக்குள் நுழைவதைப் பார்த்த மைத்ரேயி, தோழியின் கையில் இருந்து, அவன் அலைபேசியை வாங்கியவள், அவன் படுத்திருந்த அந்த ஸ்ட்ரெச்சரில், அவன் காலடியில் வைத்தாள்.

அதே நேரம்.... "அனு.... ஹாஸ்பிடல் வந்தாச்சு. இனிமேல் எல்லாம் கடவுள் விட்ட வழி. இங்கே இதற்குமேல் ஒரு நிமிஷம் இருந்தாலும், போலீஸ்.... கேஸ்.... விசாரணைன்னு துளைப்பாங்க. அதாவது பரவாயில்லை.... இப்போ நம்ம மேம் கால் பண்ணிட்டே இருக்காங்க. நாம அங்கே போய் ஆகணும்.

"உன் ஒருத்தியால்.... எல்லாரும் பாதிக்கப்படக் கூடாது. ஒரு வேளை நம்மளை இங்கேயே விட்டுட்டுப் போனால்.... நம் நிலை என்ன ஆகும்ன்னு கொஞ்சம் யோசி..." அவளிடம் அடிக்குரலில் உரைக்க, அப்பொழுதுதான் எதார்த்தம் அவளுக்குப் புரிந்தது.

ஆனாலும்.... அவனுக்கு எப்படி இருக்கிறது எனத் தெரியாமல் அவளால் போக முடியுமா...?' அவள் கண்கள் அதை வெளிப்படுத்த, "நம்மால் முடிந்ததை நாம செய்தாச்சு. போதும் அனு.... போய்டலாம்..." அவள் கெஞ்சல், அனுவை சம்மதமாக தலை அசைக்க வைத்தது.

ஆம்புலன்ஸ் நின்று.... அவனை கீழே இறக்கியவர்கள்.... விபத்துப் பகுதியில் இருக்கும் அவசரப் பிரிவிற்குச் செல்ல, அவர்கள் பின்னால் சற்று தூரம் சென்றவர்கள்.... மைத்ரேயி.... சட்டென தோழியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, பக்கத்து காரிடாரில் திரும்பியவள், திரும்பிப் பார்க்காமல் நடக்கத் துவங்கினாள்.

அனன்யாவுக்கு தான் செய்வது சரியா.... தவறா எனத் தெரியவில்லை. மனதின் ஒரு மூலையில்.... அவனை காப்பாற்றிவிட்டோம் அது போதும் எனப் புலம்ப, பிழைத்துவிடுவான் தானே.... மற்றொரு மனம் தவிக்க, பிழைக்க வைத்துவிடு தாயே.... மனம் வேண்டுதலையும் தொடர்ந்தது.

2

அனன்யாவும், மைத்ரேயியும் மருத்துவமனையை விட்டு வெளியேறிய அடுத்த பத்தாவது நிமிடம், அந்த மருத்துவமனைக்குள் உச்ச பதட்டத்தில் நுழைந்தான் நவீன்.

விபத்துப்பகுதிக்கு விரைந்தவன், அங்கே அமர்ந்திருந்த செவிலியிடம், "சிஸ்டர்.... ஒரு ஆக்சிடண்ட் கேஸ்.... பேர் நகுலன்.... எங்கே இருக்கான்?" உயிரை கையில் பிடித்துக்கொண்டு வினவினான்.

அவனது பதட்டம் அவளிடம் கொஞ்சம் கூட இருந்ததாகத் தெரியவில்லை. "எப்போ வந்தது...?" அவள் லெஜ்சரை பார்வையால் மொய்த்தவாறே கேட்க,

"இப்போதான்..... ஒரு கால்மணி நேரத்துக்கு முன்னாடிதான்.... ப்ளீஸ் சிஸ்டர்.... கொஞ்சம் சீக்கிரம் பாருங்க...?"

"அதான் பாத்துட்டு தானே இருக்கேன்.... கொஞ்சம் வெயிட் பண்ணுங்க..." அவனை கடிந்தவள், இன்னும் நிதானமாகத் தேட, அவனோ.... பொறுமையை நிறையவே இழுத்துப் பிடிக்கவேண்டி இருந்தது.

நிதானமாக தன் தேடலை முடித்தவள், "அப்படி யாரும் இங்கே இல்லை. ஒரு நிமிஷம்.... ஏய் சித்ரா.... இப்போ நான் இல்லாதப்போ ஏதாவது கேஸ் வந்துது...?" தன் அருகில் இருந்தவளிடம் வினவ,

"ஆமா ராணி.... அந்த போலீஸ் கூட.... அந்த கேசோட வந்த பொண்ணுங்களைக் காணோம்னு பரபரப்பா தேடிட்டு அலைஞ்சாரே.... அதோ வரார் பாருங்க..." அவள் கைகாட்ட, அவரை நோக்கி ஓடினான்.

தன் முன்னால் மூச்சு வாங்க நின்ற அவனை ஏற இறங்க பார்த்தவர், "என்னப்பா...?" தன் மொத்த எரிச்சலையும் கூட்டி அவனிடம் கேட்டார். பிறகு.... தன்னோடு வந்த பெண்களை தவறவிட்டுவிட்டேன் எனச் சொன்னால், அவரை சும்மா விட்டு விடுவார்களா?

"சார்.... அந்த ஆக்சிடண்ட் கேஸ்..." அவன் திணறினான்.

"ஓ.... அவன் உனக்கு என்ன வேணும்...? ஆளைப் பாத்தியா? வாப்பா..." அவனை அழைத்துக்கொண்டு அவசரசிகிச்சைப் பிரிவுக்குள் செல்ல, அங்கே தலையில் ஷால் கட்டோடு.... கையில் ஒரு சலைன் பாட்டில் இறங்க, அனாதைபோல் கிடந்த நண்பனைப் பார்த்த அவன் துடித்துப் போனான்.

"நகுல்.... ஐயோ.... ஏன் இப்படி...? டாக்டர்...?" வீறிட்டான்.

"எப்பா.... இங்கே வா.... முதல்ல அவன் பேர் என்ன...? டீட்டெயில்ஸ் சொல்லு..." கடமைதான் முக்கியம் என அவர் மனசாட்சியை புதைத்துவிட்டு குரல் கொடுக்க, கொதித்தே போனான்.

"என்ன சார் விளையாடுறீங்களா? அவன் யார்ன்னு தெரியுமா? அவனைப்போய்.... தள்ளுங்க...." அடுத்த நிமிடம் தன் அலைபேசியை எடுத்தவன், செய்த அழைப்புக்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்.

பணம் பாதாளம் வரை பாயும் என்பது சும்மாவா.... அவன் வீசியெறிந்த பணம்.... அவனை கேள்வி கூட கேட்காமல், முதல் ரிப்போட்டை அவன் கையில் திணிக்க, அதிலேயே அவன் நிலை புரிய, அடுத்த பத்தே நிமிடங்களில், தனியார் ஆம்புலன்சில் நகுலை அழைத்துச் செல்ல, அவனை தடுத்து நிறுத்தினார்.

அவனோ.... "சார்.... உங்க எல்லா கேள்விக்கும் பதில் கண்டிப்பா தரேன்" அவரிடம் உரைத்தவன், "லச்சுமணா.... சாரை கார்ல கூடி வா..." டிரைவரை அழைத்து பொறுப்பை

ஒப்படைத்தவன், அடுத்த நிமிடம் ஆம்புலன்சில் ஏறிவிட்டான்.

நண்பனை மியாட் மருத்துவமனைக்குள் அனுமதித்து, அவர்கள் செய்த அனைத்து பரிசோதனைகளையும் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, 'இதை எப்படி அவனது பெற்றோரிடம் தெரிவிப்பது என்ற மிகப்பெரிய கேள்விதான் அவனை மிரட்டியது.

என்ன ஆனாலும்.... சொல்லித்தான் ஆகவேண்டும்...' எண்ணியவன் அலைபேசியை எடுக்க, அதே நேரம்.... மருத்துவர் அறையை விட்டு வெளியேற, அவர் பின்னால் ஓடினான்.

"டாக்டர்.... அவனுக்கு...?" கேட்கும் முன்னர்.... இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

"வாங்க..." அழைத்துச் சென்றவர் சொன்ன விஷயங்களைக் கேட்டவனுக்கு, கண்கள் தாமாக கண்ணீரை வடித்தது.

'இதில் முடிவெடுக்கும் உரிமை அவனுக்கு இல்லையே.... வேகமாக அரசுவுக்கு அழைக்க, அடுத்த நிமிடம், அவன் முன்னால் இருந்தார்.

"இது எப்படி நடந்தது...?" அவர் கேள்விக்கு, அவனிடம் நிச்சயம் பதில் இருக்கவில்லை.

இப்பொழுது அவனிடம் பேசுவதை விட, மருத்துவரைப் போய் பார்ப்பதுதான் முக்கியம் என்பது புரிய, அவரைத் தேடிச் சென்றார்.

"டாக்டர்.... நகுல்க்கு...?" பல தொழில்களை திறம்பட நடத்தும் அவரது குரல் நடுங்கியது. தன் அத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசு, மனைவி தவமிருந்து பெற்ற வரம்.... தேகம் பதறியது.

"மிஸ்டர் அரசு.... உங்க பையனோட பிரெயின்ல ப்ளட் கிளாட் ஆகி இருக்கு. உடனடியா அதை ரிமூவ் பண்ணியே ஆகணும். அதே நேரம்.... சரியான நேரத்தில், அவர் தலையில் கட்டு போட்டு, பிளட்டை நிறுத்தியதால் தான்.., அவரால் இவ்வளவு நேரம் சர்வைவ் ஆக முடிந்தது. நிஜமாவே அந்த பொண்ணு கிரேட். இன்னும் கொஞ்ச நேரம் விட்டிருந்தாலும்..." மேலும் அவர் சொன்ன விஷயங்கள், அவர் காதில் விழுந்தாலும் கருத்தில் பதியவே இல்லை.

அவர் சொன்ன ஒரு பெண்.... என்பது அவரை அந்த நேரம் கூட ஆச்சரியப்பட வைக்க, மகனது ஆப்பரேஷன் அதை அமிழ்த்தியது.

அவர் கேட்ட பணம் முதல், கேட்ட பக்கங்களில் எல்லாம் கையொப்பம் போட்டுக் கொடுத்தவர், அடுத்த நிமிடம் அங்கிருந்து வெளியேறினார்.

"நாங்க உடனே ஆப்பரேஷன்க்கு ஏற்பாடு பண்றோம்... ஹிவில் பீ ஆல்ரைட்..." அவர் கொடுத்த நம்பிக்கை கூட அவரை மாற்றவில்லை.

தளர்ந்துபோய் வெளியே வந்தவரை தாங்கிக் கொண்டான் நவீன். "எவண்டா...? எப்படிடா...?" தகர்ந்துபோய் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தார்.

"தெரியல சார்.... பிடிவாதமா பைக்கை எடுத்துட்டு போனான்..." அவனுக்கு அவ்வளவுதான் சொல்ல முடிந்தது.

"பைக்.... அவன் வேகமா போக மாட்டானே..." தன் மகனை உணர்ந்தவராயிற்றே.

"உனக்கு எப்படித் தெரியும்...?" தன்னை மீட்டவர் கேட்க,

"ஒரு பொண்ணு போன் பண்ணா.... பேர் கேட்டால் சொல்லலை. திருப்பி கூப்ட்டால்.... பேசவும் இல்லை..." யோசனையாய் உரைத்தான்.

அதே நேரம்.., போலீஸ் அவர்களை நெருங்கியவர், அவனைப் பற்றிய விவரங்கள் கேட்க, அனைத்தையும் உரைத்தவர்களுக்கு, "நீங்க எப்படி அங்கே வந்தீங்க...?" அவர் நவீனிடம் விசாரணையைத் துவங்கினார்.

அவனுக்கும் எவ்வளவு நேரம் இதை தள்ளிபோடுவது என எண்ணியவனாக, "சார்.... நான் வரேன்..." அரசுவை விட்டு விலகிச் சென்றவன், அவர் கேள்விக்கு பதில் கொடுத்தான்.

"அவனோட போன்ல இருந்து ஒரு பொண்ணு எனக்கு போன் பண்ணி சொன்னா..." அவன் உரைக்க,

அவரே.... "ஹம்.... நானும் அந்த பொண்ணை பார்த்தேன்...." துவங்கியவர், அவனுக்காக அவள் பட்ட பாடு, உதவி என விவரித்தவர், "ஹாஸ்பிடல் வந்த உடனே எப்படி மாயமானான்னே தெரியலை. ரொம்ப தைரியமான பொண்ணு. எல்லாருக்கும் போலீஸ் கேஸ் என்றால் பயம் தானே. அவளையும் குறை சொல்ல முடியாது..." எதார்த்தத்தை உரைத்தார்.

அரசுவுக்கு அவர்கள் பேசுவது காதில் விழுந்தாலும், மகனது உடைமைகள் எனக் கொண்டுவந்த அவன் போட்டிருந்த உடை, செயின், மோதிரம், பர்ஸ், போன்.... அதனோடு இருந்த ரத்தம் தோய்ந்த ஷால்.... அதைப் பார்த்தவருக்கு, எவ்வளவு கட்டுப்படுத்தியும் கண்ணீர் வழிந்தது.

அதைப் பார்த்தவன், போலீசை அனுப்பிவிட்டு, அவர் அருகில் விரைய, "என்னப்பா இது...? நீங்களே தைரியத்தை இழந்துட்டா.... அம்மாவுக்கு யார் ஆறுதல் சொல்லுறது...?" அவர் கரத்தை பற்றிக் கொண்டான்.

"இங்கே பார்டா.... எவ்வளவு ரத்தம்...? இதை.... இதைப் பார்த்தால் அவ எப்படி தாங்குவா...? மூளையில் ஆப்பரேஷன்.... கை முறிவு, கால் முறிவு.... இதையெல்லாம் எப்படி அவகிட்டே சொல்வேன்...?" அவர் குலுங்கி அழ, அவனுக்கும் கண்கள் கலங்கியது.

ஒரு பக்கம் நண்பனுக்கு நடக்கும் ஆப்பரேஷன்.... மறு பக்கம் அரசு.... திணறித்தான் போனான். அதைவிட, அப்பாவும் பிள்ளையும் மதிய சாப்பாட்டுக்கு வரவில்லை என, நகுலின் தாய் பார்வதியின் அழைப்பு வேறு, அரசுவின் அலைபேசிக்குப் பாய.... அதைத் தவிர்ப்பது பெரிய விஷயமாகிப் போனது.

மூன்றுமணி நேரம் நடந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு, மருத்துவர் வெளியே வர, "அப்பரேஷன் சக்சஸ்..." அவர் உரைத்த பிறகுதான் இருவரும் நிம்மதியாக மூச்சு கூட விட்டார்கள்.

அவசரசிகிச்சைப்பிரிவின் கண்ணாடி வழியாக.... தலை முழுக்க கட்டோடு, கை, கால்களிலும் முழுதாக கட்டுப் போட்டு படுத்திருந்த மகனை, அவரால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. கண்களில் கண்ணீரோடு பார்வையை விலக்கிவிட்டு வந்து இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

"அப்பா..." தயக்கமாக அவரை அழைக்க, அவர் என்னவென்று ஏறிட, "அம்மாவுக்கு...." அவன் இழுக்க, ‘சொல்...’, என்பதுபோல் அவர் கை அசைத்து அனுமதி கொடுத்தார்.

அடுத்த நிமிடம், தன் அலைபேசியை எடுத்தவனுக்கு, நகுலின் தாயிடம் விஷயத்தைச் சொல்லும் தைரியம் இருக்கவில்லை. மீதி இருப்பதோ நகுலின் தங்கை வருணாதான். அவள் எண்ணை அலைபேசியில் அழுத்தியவனுக்கு.... பச்சை பட்டனை அழுத்தவே பெருத்த யோசனையாக இருந்தது.

ஆனால்.... வேறு வழி இல்லாமல் போக, அவளுக்கு அழைக்க, தன் அலைபேசியில் ஒளிர்ந்த நவீனின் எண்ணை நம்ப முடியாத திகைப்பில் வெறித்தாள். ‘நிஜமாவே அழைப்பது அவன் தானா...?’, யோசனை ஓடினாலும்,

அழைப்பு கட்டாகிவிடக்கூடாதே என்ற தவிப்பில், வேகமாக ஆன் செய்தவள், "நவீன்.... சொல்லுங்க..." அவள் குரல் மன்னிப்பு வேண்டும் பாவனையில் ஒலிக்க, அதை முயன்று தவிர்த்தவன், குரலை சாதாரணமாக்க முயன்றவாறே....

"அம்மா பக்கத்திலேயா இருக்காங்க...?" அவன் கேள்விக்கு, புருவம் நெரிய.... மனம் படபடக்க.., எதையோ அவள் மனம் எதிர்பார்க்க, "இல்ல.... நான் ரூம்ல இருக்கேன்..." அவள் குரலில் இருந்த பாவனை அந்த இக்கட்டில் கூட அவனை எட்டியதுதான் விந்தை.

அதை முயன்று ஒதுக்கியவன், "வருணா.... என்ன ஏதுன்னு சொல்லாமல்.... அம்மாவை மியாட் ஹாஸ்பிடல்க்கு கூட்டி வா..." அவன் குரல் இறுக்கமாக ஒலித்தது.

அவ்வளவு நேரம் இருந்த மனநிலை மொத்தமாக மாற, "என்ன...? யாருக்கு என்ன ஆச்சு...? அண்ணாவுக்குத்தானே.... அவன் போன் ரீச் ஆகவே இல்லன்னு புலம்பிட்டே இருந்தாங்க. அண்ணாவுக்கு ஒண்ணும் இல்லையே..." கிட்டத்தட்ட கத்தினாள்.

"ம்ச்.... அதெல்லாம் எதுவும் இல்லை. சின்ன அடி.... நீ வா..." அவன் அழுத்தி உரைக்க, அதன் பிறகே சற்று நிம்மதியாக உணர்ந்தாள். அவனிடம் மேலும் எதையோ உரைக்க முயல, அதற்குள் அலைபேசியை அவன் வைத்தே விட்டான்.

ஆனால்.... பார்வதியை வெளியே போக கிளம்பச் சொன்னதுமே.... அவருக்கு சந்தேகம் தோன்ற, அவர் அழுத அழுகையில், வருணா விஷயத்தை சொல்லியே விட்டாள். மருத்துவமனைக்குள் கதறியவாறு அவர் வர.... வருணாவை அழுத்தமாக அவன் ஏறிட்டான்.

"நான் சொல்லவே இல்லை.... அம்மாவே கண்டு புடிச்சுட்டாங்க..." சின்னக்குரலில் உரைத்தவளுக்கு, தாயை கட்டுப்படுத்துவது பெரும் பாடாக இருந்தது. அதற்குமேல் அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

அதன் பிறகு அவனுக்கு அவளைப் பற்றியோ, அவளுக்கு அவனைப் பற்றியோ சிந்திக்கவோ, பேசவோ நேரம் இருக்கவில்லை. ஒரு வழியாக அனைவரையும் சம்மாளித்தவன், செவிலி வந்து அவர்களை போகச் சொல்லவே.... பார்வதி கொந்தளித்துவிட்டார்.

"என் புள்ளை இங்கே இப்படிக் கிடக்கான்.... என்னை வீட்டுக்குப் போகச் சொல்லுவியா...?" அவர் போட்ட சத்தத்தில், மருத்துவமனையே கிடுகிடுத்தது.

அவர் உள்ளே சென்று மகனை பார்த்தே தீர்வது என போராட.... இரண்டு நாட்களுக்கு அது முடியாது என அவர்களும் முரண்ட, பெரிய போராட்டமாகத்தான் போனது. மகனது தலை முதல், உடல் முழுவதும் கட்டைப் பார்த்த அவரால் எப்படி பேசாமல் இருக்க முடியும்.

அவர் அழுகையில் மற்றவர்களுக்கு கையைப் பிசைவதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. அவர் அழுகை தாங்க முடியாமல், ஒரு வழியாக அனுமதி வாங்கி உள்ளே செல்ல, அறைக்குள்ளும் அவனைப் பார்த்து கண்ணீர் உகுத்தார்.

மருத்துவமனை ரூல்ஸ் படி.... அங்கே விசிட்டர் அவர்ஸ் தவிர, வேறு நேரம் அங்கே யாரும் இருக்க முடியாது என உரைக்கவே.... அதற்கு அடுத்த போராட்டம் துவங்க, இங்கேயே இருந்தால், பார்வதியையும் இங்கே அனுமதிக்க வேண்டிய நிலை வரும் என உணர்ந்தவராக, மனைவி, மகளை அழைத்துவிட்டு கிளம்பிவிட்டார்.

நவீன் தான் அங்கேயே இருப்பதாக உரைக்க, எப்படியும் நகுல் மயக்கம் தெளிய இருபத்திநாலு மணி நேரங்களுக்கு மேல் ஆகும் என்பதால்.... அவர்களுக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

ஆனால்.... மருத்துவர்கள் உரைத்த இருபத்திநாலு மணி நேரங்கள் கடந்து, மேலும் இருபத்திநாலு மணி நேரங்கள் அவர்களை சோதித்த பிறகே, மெதுவாக விழி திறந்தான் நகுல்.

இமைகளை சோம்பலாகப் பிரிக்க, "நகுல்.... மிஸ்டர் நகுல்.... நான் பேசுறது கேக்குதா...?" மருத்துவர் குரல் கொடுக்க, முயன்று இமை திறந்தான்.

"நகுல்.... கண்ணா.... அண்ணா..." ஒவ்வொரு குரலாக அவனைத் தீண்ட, சோம்பலாக விழியைச் சுழற்றினான்.

"நகுல்.... இங்கே பாருங்க. இவங்க எல்லாம் யார்ன்னு தெரியுதா? இவங்க யார்.... இது...?" ஒருத்தர் ஒருத்தராக அவர் சுட்டிக்காட்டி கேட்க, அனைவரையும் சரியாக அடையாளம் காட்டிய பிறகுதான். அனைவருக்கும் போன மூச்சே திரும்ப வந்தது.

ஆனால்.... அவன் பார்வையோ... மீண்டும் சுழல, அவன் தேடலை உணர்ந்தவர், "நகுல்.... வேற யாரைத் தேடறீங்க...?" அவனிடம் மென்மையாக கேட்டார்.

"அ..வ.... அ..வ.... என்...னை..." மேலே பேச முடியாமல், சட்டென மயக்கத்துக்குப் போனான்.

சுற்றிலும் இருந்தவர்கள் திக்கென அதிர.... "நகுல்..." "டாக்டர்.... என்ன ஆச்சு...?" அரசு பதற, பார்வதி அழவே துவங்கிவிட்டார்.

"சார்.... இது ஜஸ்ட் மயக்கம் தான். அவருக்கு இப்போ நிறைய ஓய்வு தேவை. அவரை ரொம்ப யோசிக்க விடாதீங்க. உங்களை எல்லாம் அடையாளம் காட்டியதே ரொம்ப நல்ல சைன்.... கொஞ்சம் கொஞ்சமாதான் அவரால் மீண்டு வர முடியும். கவலைப்படாமல் போயிட்டு வாங்க..." அவர்களை அனுப்பினார்.

இரண்டு நாட்களாக அவர்களை தவிக்க விட்டவனாயிற்றே. அனைவரும் அங்கிருந்து வெளியேற.... "நவீன்.... நகுல் யாரையோ கேட்டானே.... யார் அது...?" பார்வதி வினவினார்.

"அதும்மா.... நகுல்க்கு அடி பட்டப்போ.... எல்லோரும் வேடிக்கை பாக்க, தன்னோட ஷாலை வைத்து, அவன் தலையில் கட்டு போட்டு, ஆம்புலன்ஸ்க்கு போன் பண்ணி, எனக்கு தகவல் கொடுத்து.... பஸ்ட் எய்ட் கொடுக்குற வரைக்கும் அந்த பொண்ணுதான் கூட இருந்திருக்கா.

"ஜிஹெச் போன பிறகு அவ எங்கே போனா.... என்ன ஆனான்னு எதுவும் தெரியலை..." சங்கடமாக உரைத்தான்.

"நல்லா இருக்குடா. என் புள்ளை உசுரை காப்பாத்திக் கொடுத்திருக்கா. அந்த பொண்ணு யார்.... என்னன்னு தெரியாதுன்னு சொல்றியே.... உனக்கே இது நல்லா இருக்கா? முதல்ல அவளைப் பத்தி விசாரி..." கட்டளையாக உரைத்தார்.

தங்கள் திருமணம் முடிந்து ஆறு ஆண்டுகள் பிள்ளை இல்லாமல், தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளையை காப்பாற்றிக் கொடுத்த அவள்மேல் அவருக்கு பாசம் பொங்கியது. அவளைக் காணவேண்டும் என்ற ஆவலும் எழுந்தது.

அதைவிட.... தன் மகன் இந்த நிலையில் கூட அவளைத் தேடுகிறான் என்றால்.... தாய் அறியாத சூலா.... அவன் ஆசை ஒன்றைக் கூட அவர் நிறைவேற்றாமல் இருந்ததில்லை. இதுவரை எந்த பெண்ணைப் பற்றியும் பேசியிராதவன்.... முதல் முறையாக கேட்கிறான் என்றால்.... நன்றி உரைப்பதற்காக என்றால் கூட, அதை அவரால் நிறைவேற்றாமல் இருக்க முடியாது.

ஏற்கனவே தன்னால் முடிந்த அளவு அவளைப் பற்றி விசாரித்து விட்டான். யாருக்கும் அவளைப் பற்றி தெரியவில்லை. அந்த ஆம்புலன்சில் இருந்த நர்ஸ், டாக்டர்.... அந்த டிரைவர்.... என அனைவருக்குமே.... அவள் அடையாளம் லேசாக தெரிந்ததே தவிர, வேறு விவரம் கொடுக்க முடியவில்லை.

"கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. அவங்க பெயர்.... ரெண்டு பொண்ணு இருந்தாங்கன்னு சொன்னீங்களே...?" அவர்களைத் துருவ,

அந்த செவிலிதான்.... "சார்.... ஒரு பொண்ணு ஹெல்ப் பண்ணா. ஆனா அவளை மத்த பொண்ணு எதுக்கு வம்புன்னு சத்தம் போட்டா. எப்பவோ ஒரு முறை.... அவளை பேர் சொல்லிக் கூட...." அவள் நெற்றியைத் தடவ,

"என்ன பேர்...?" அவன் படபடத்தான்.

"சார்.... இருந்த சூழலில் பேஷண்டை பாக்குறதா இல்ல..." எரிச்சலானவள், திடுமென நினைவுக்கு வந்தவளாக, "ஆங்.... பேஷன்ட்க்கு பிக்ஸ் வந்து மயக்கமானப்போ.... அப்படியே பிரம்ம புடிச்ச மாதிரி நின்னுச்சு. அப்போ அந்த பொண்ணுதான்.... ஏய்.... அனு.... ஹங்.., அனுன்னு தான் கூப்ட்டா சார்" முகத்தில் அப்படி ஒரு சந்தோசம்.

"ஆர் யூ sure...?" அவன் உற்சாகமாக, "கண்டிப்பா சார்.... அந்த பொண்ணு அப்படித்தான் கூப்ட்டா..." அடித்துச் சொன்னாள்.

அதை நினைத்துப் பார்த்தவன், "அம்மா.... அந்த பொண்ணு பேர் அனுன்னு மட்டும்தான் தெரியும். அதுவும் அந்த ஆம்புலன்ஸ் நர்ஸ் சொன்னதால் தான். வேற.... கொஞ்சம் ஒல்லியா, அஞ்சடிக்கு குறையாத உயரம், எல்லோ கலர் சுடிதார்.... நல்ல ஃபேரா இருந்ததா சொன்னாங்க..." அவன் உரைக்க,

தன் மகனுக்காக அவள் துடித்திருக்கிறாள் என்பதை விட, அவளுக்கு யாரென்றே தெரியாத ஒருவனுக்காக.., தவித்திருக்கிறாள். மற்றவரின் உதவி இல்லாமல், தானே தனி ஆளாக அனைத்தையும் செய்திருக்கிறாள் என்பதை எண்ணுகையில், அவள் இரக்க குணம் உணர்ந்து நெகிழ்ந்தவர்.... தன் வாழ்வில் ஒரு முறையாவது அவளை சந்திக்க வேண்டும் என எண்ணிக் கொண்டார்.

நகுலன் இப்பொழுது அறைக்கு மாறியிருக்க, அவன் எழுந்து நடமாட குறைந்தது மூன்று மாதம் எடுக்கும் என உரைத்துவிட்டர்கள்.

கொஞ்ச நாட்கள்.... அவன் எதையும் தீவிரமாக சிந்திக்கக் கூடாது.... தலை சுற்றல், வலி, மயக்கம்.... இப்படி ஏதாவது இருந்தால்.... உடனடியாக மருத்துவமனைக்கு வர வேண்டும் என்ற நிபந்தனையோடு, பதினைந்துநாள் மருத்துவமனை வாசம் முடித்து, வீட்டுக்கு வந்தான்.

இந்த பதினைந்து நாட்களில்.... தன்னைக் காப்பாற்றிய அந்த பெண்ணை அவன் எண்ணாத நிமிடங்கள் கூட இருக்கவில்லை. ‘ஏன் தன் அடையாளத்தை மறைத்துவிட்டு காற்றில் மறைந்தாள்...?’, அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

அவன் அமைதி வீட்டில் இருந்த அனைவரும் களைப்பு என எண்ண.... அவன் தாய் பார்வதிக்கும், அவன் நண்பன் நவீனுக்கு மட்டும் வித்தியாசமாக இருந்தது.

அன்று வீட்டுக்கு வந்த நவீன்.... "நகுல்.... டாக்டர் உன்னை எதையும் யோசிக்கக் கூடாதுன்னு சொன்னால்.... நீ இருபத்திநாலு மணி நேரமும் அதைத்தான் செய்யிற. என்னடா...? உன் மனசில் என்னதான் இருக்கு...?" அவனது அடிபடாத வலக் கையை பற்றிக் கொண்டான்.

"எப்போ நான் எழுந்து நடப்பேன்னு இருக்குடா" அவன் உரைக்க,

"என்ன திடீர்ன்னு...?" கண்களை கூர்மையாக்கினான்.

"எனக்கு அவளைப் பத்தி விசாரிக்கணும். அவகிட்டே நன்றி சொல்லணும்..." நண்பனை பார்ப்பதை தவிர்த்தான்.

"நன்றி மட்டும் சொல்லணும்னா.... அவ இல்லன்னா என்னடா.... ஆண்டவன் கிட்டே அவ எங்கே இருந்தாலும்

நல்லா இருக்கணும்னு வேண்டிக்கோ அது போதாது..." அவனை ஆழம் பார்த்தான்.

நண்பன் அமைதியாக இருக்கவே.... "இது சரியா வருமான்னு கொஞ்சம் யோசி நகுல். இதற்குமேல் நான் எதுவும் சொல்லத் தயாரா இல்லை. இன்னொரு விஷயம்.... அவ பேர் அனு.... அதாவது புல் நேம் தெரியாது. இதுதான் அவளோட உண்மையான பெயரான்னும் தெரியாது. அவளோட இருந்த பொண்ணு அப்படித்தான் அவளை கூப்ட்டாளாம்...." அவன் உரைக்க, நகுலின் முகத்தில் முதல் முறையாக அவ்வளவு பிரகாசம்.

அவன் இதழ்கள்.... "அனு..." மெதுவாக உச்சரிக்க, அவன் தலையில் படிந்த தாயின் கரத்தில், திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

3

நண்பனிடம் பேசிக்கொண்டிருந்த அனைத்தையும் தாய் கேட்டிருப்பாரோ? சிறு திடுக்கிடல் அவனிடம் இருந்தாலும், பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

அவன் தன்னை மீறி திடுக்கிட்ட அந்த விதத்தைப் பார்த்த பார்வதி, "என்னப்பா...? அம்மாகிட்டே என்ன பயம்...?" அவன் தலையை, பாசமாக வருடியது அந்த தாயின் கரம்.

தலையில் இன்னுமே கட்டு பிரிக்கப்படவில்லை. தன் மகன் சாவின் விளிம்புக்குச் சென்று திரும்பியிருக்கிறான் என்ற நினைவில் அவர் விழிகள் கலங்க, எங்கே அவனுக்கு வலிக்குமோ என அவரது வருடல் மிக மென்மையாகவே இருந்தது.

"உங்ககிட்டே எனக்கு என்னம்மா பயம்...?" கேட்டவனிடம் மெல்லிய தயக்கம்.

நகுலின் தாய் வந்துவிட, நாசூக்காக எழுந்து, அந்த அறையை விட்டு வெளியேறிப் போனான் நவீன்.

இதுவரை நகுல் தன் தாயிடம் பகிர்ந்துகொண்டிராத விஷயங்களே கிடையாது. அவன் தந்தையின் கண்டிப்பில் வளர்ந்ததை விட, தாயின் அரவணைப்பில் வளர்ந்தான் என்பதுதான் உண்மை.

குழந்தையாக இருக்கும்பொழுது கார் வேண்டும் என்பதில் துவங்கி, சைக்கிள், பைக்.... கார்.... இப்படி அனைத்து ஆசைகளையும் அவரிடம்தான் முதலில் உரைப்பான்.

பள்ளியில்.... இந்த மிஸ் இதைச் சொன்னாங்க.... இந்த பையன் என்னை அடித்தான்.... இவங்க சண்டை போட்டாங்க.... ஸ்கூல் பாத்ரூமில் அடித்துக் கொண்டார்கள் எனத் துவங்கி.... கல்லூரியில்.... இவன் இவளுக்கு லெட்டர் கொடுத்தான்.... அந்த மேமை பசங்க கலாய்த்தாங்க என

ஆரம்பித்து, இவங்க லவ் பண்றாங்களாம் என்பது வரை.... அனைத்து விஷயங்களையும் அவரிடம்தான் முதலில் சொல்லுவான்.

அதென்னவோ பார்வதிக்கும், அவனுக்கும் இடையே எந்த ரகசியங்களோ, ஒளிவு மறைவோ இருந்ததில்லை. அவனுக்கு தாயே உற்ற தோழியாக இருத்தால்.... எந்தப் பெண்ணிடமும் ஆர்வமாக பேசவேண்டும் என்று கூட தோன்றியது கிடையாது.

அவனுக்கும்.... அவன் தங்கை வருணாவுக்கும் இதற்காகவே அதிகம் சண்டை நடக்கும். தன் தாய்க்கு அவன் செல்லப்பிள்ளையாக இருப்பதில் அவளுக்கு தாள முடியாத மனத்தாங்கல் கூட உண்டு.

ஒரு தாய்க்கு இரண்டாவது குழந்தை பிறந்துவிட்டால், முதல் குழந்தை அவள் மடியை விட்டு இறங்கிவிடும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால்.... பார்வதி.... மகள் வருணா பிறந்த பிறகு கூட, மகனை தன் இடுப்பை விட்டு இறக்கியது கிடையாது.

வருணா கூட பள்ளிக்குச் சென்ற பிறகு அவளாகவே தன் வேலைகளை பார்த்துகொள்ளத் துவங்கி விட்டாள். ஆனால்.... நகுலனை எந்த வேலையையும் செய்ய விட்டதே இல்லை.

இத்தனைக்கும்.... அவனுக்கும் அவளுக்கும் ஐந்து வயது வித்தியாசம் உண்டு. அவன் ஒன்றும் அப்படி பெரிய வேலையைச் செய்துவிடப் போவதில்லை. தானாகவே குளிப்பது, யூனிஃபாம் போடுவது.... ஷூ மாட்டுவது.... இப்படியான சாதாரணமான தன் வேலைகளைத்தான் செய்வான்.

அதற்கு கூட.... அவன் எட்டாம் வகுப்பு முடிக்கும் வரைக்குமே அவன் தலைக்கு குளித்தால்.... ஷாம்பூ போடுவது, சோப்பு போடுவது என அனைத்துமே அவர்தான். ஒரு கட்டத்துக்குமேல் அவனுக்கான இடைவெளியை மனைவி

கொடுக்க மறுப்பதைப் பார்த்து, அரசு தான் மனைவியை கண்டிக்க வேண்டி இருந்தது.

அதற்காக பார்வதி வருணாவையும், கணவனையும் கவனிக்கவே இல்லை எனச் சொல்ல முடியாது. அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் பார்த்து பார்த்து செய்வார் தான். ஆனால்.... அப்படிச் செய்தாலும், நகுல் அவர் கையிலோ, இடுப்பிலோ இருப்பான் என்பதுதான் அங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

அவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது தான்.... அரசுவின் கண்டிப்பால்.... அவன் தனி அறைக்குச் சென்று உறங்கப் பழகினான். அப்படி இருந்தால் கூட, நள்ளிரவில் விழிப்பு வரும் வேளையில், தன் மகனைச் சென்று பார்க்காமல் இருக்க மாட்டார் பார்வதி.

தன் திருமண வாழ்க்கையில் முதல் ஆறு வருடங்கள் அவரை ஏங்கவிட்டு கிடைத்த மழலைச் செல்வமாகையால்.... அவன்மேல் உயிரையே வைத்திருந்தார். அதற்காக அவன்மேல் ஓவர் பொசசிவ் எனச் சொல்லிவிட முடியாது.

மாறாக.... அவன்மேல் கொள்ளை பாசம். அவனது டூர் ஆகட்டும், நண்பர்களோடு வெளியே செல்ல வேண்டும் என அவனது விருப்பமாகட்டும், ஹோட்டல் செல்ல வேண்டும்.... நண்பர்களோடு ஓர் சுற்ற வேண்டும்.... இப்படியான அவன் விருப்பங்களுக்கு அவர் தடை போட்டதே இல்லை.

அதே நேரம்.... அவர் கண்டிப்பிலும் குறை வைத்தது கிடையாது. ஒரு வேளை அரசு, மனைவி இவ்வளவு செல்லம் கொடுத்து, மகனை கெடுத்துவிடுவாரோ என்ற கவலை இல்லாமல் இருந்ததற்கும் அந்த கண்டிப்புதான் காரணம்.

அதற்கு சில சம்பவங்களே சாட்சி. பள்ளிப் பருவத்தில்.... தீக்குச்சியில் விளையாடுவது அவனுக்கு பொழுதுபோக்கு. எத்தனையோ முறை அவனை கண்டித்தும் கேட்காமல்

போக, அன்று கிச்சனுக்குச் சென்றவன், கேஸை திறந்துவிட்டு, தீக்குச்சியை பற்றவைக்க முயன்றுகொண்டிருக்க, கேஸ் ஸ்மெல்லில் கிச்சனுக்குள் நுழைந்தவர், அவன் செய்கையைப் பார்த்து, பதறிப் போனார்.

முதல் வேலையாக கேஸை நிறுத்தியவர், அங்கிருந்த மரக் கரண்டியால் அவனை விளாசித் தள்ளிவிட்டார். தாய் அடித்த அதிர்ச்சியை விட, அவரது அழுகைதான் அவனை மிகவும் பாதித்தது.

"ஏண்டா இப்படிப் பண்ற.., அம்மா சொன்ன கேக்கவே மாட்டியா...?" அவனை அடித்துவிட்டோமே என்ற கவலையில், அழுதவாறு அறைக்குச் செல்ல, அவர் பின்னாடியே அவனும் ஓடினான்.

தாயின் அழுகையை காண சகியாதவன், அவர் அழுகைக்கு தான்தானே காரணம் என துடித்துப் போனான். "அம்மா.... அம்மா.... சாரிம்மா.... இனிமேல் இப்படிச் செய்யவே மாட்டேன். என்னை நம்புங்கம்மா.... அழாதீங்கம்மா..." அவன் அழுகையில் மன்னிப்பு வேண்ட,

"வலிக்குதாடா கண்ணா.... அம்மா உன்னை அடிச்சுட்டேனே..." தான், அடித்த இடத்தை அவர் வருட, "எனக்கு வலிக்கலம்மா.... நீங்க அழாதீங்க..." தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

அதன் பிறகு தாய் சற்று குரல் உயர்த்தினாலே.... தான் செய்வது தாய்க்கு பிடிக்கவில்லை என எண்ணி, அதைச் செய்யவே மாட்டான். அதேபோல்.... கல்லூரியில் மூன்றாம் வருடம் படித்தபொழுது, நண்பனின் பிறந்தநாள் என்று, பீர் குடித்துவிட்டு அவன் வீட்டுக்கு வர,

பழக்கமில்லாத அந்த பானம்.... அவன் தலை பாரத்தை அதிகரித்ததோடு, நடையும் சற்று தள்ளாட, தன் முன்னால் வந்து நின்ற அன்னையிடம், எதையும் மறைத்துப் பழகியிராதவன், "சாரிம்மா.... ப்ரண்ட்ஸ் ரொம்ப கம்பல்

பண்ணாங்க அதான்..." அவன் உரைத்து முடிக்கையில், பார்வதியின் கரம் அவன் கன்னத்தில் இடியென இறங்கியது.

சின்னப் பையனாக இருந்தபொழுது அவரிடம் ஒரு முறை அடி வாங்கியதற்குப் பிறகு, அவருக்கு பிடிக்காததை செய்யாமலே இருந்தவன், தான் உண்மையைச் சொன்ன பிறகும் அடித்ததை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவன் பார்வையும் அதை அவரிடம் வெளிப்படுத்த, "என்னடா.... உண்மையைச் சொன்ன பிறகும் அம்மா அடிச்சுட்டனேன்னு பாக்கறியா.... நான் அதுக்கு அடிக்கலை.... நீ சொன்ன காரணத்துக்குத்தான் அடித்தேன்.." அவர் உரைக்க, குழம்பிபோய் அவரை ஏறிட்டான்.

"நீ சொன்ன பாத்தியா.... ப்ரண்ட்ஸ் கம்பல் பண்ணாங்க குடிச்சேன்னு. அப்போ அவங்க விஷத்தை குடிக்கச் சொன்னா குடிப்பியா..?" அவர் கேள்விக்கு அவன் தலை தானாக கவிழ்ந்தது.

அதைப் பொறுக்காமல்.... அவன் நாடியைப் பிடித்து உயர்த்தியவர், "இதுவே.... அம்மா.... எனக்கு பீர் எப்படி இருக்கும்னு டேஸ்ட் பண்ண ஆசையா இருந்தது.... அதனால் குடிச்சேன்னு சொல்லியிருந்தால், அதை ஏத்துட்டு இருந்திருப்பேன். இனிமேல் உன் செயலுக்கு மத்தவங்களை காரணம் சொல்லக் கூடாது. புரிந்ததா...?" அதற்குப் பிறகு அவன் அதை செய்ததே இல்லை.

நண்பர்களோடு வெளியே சென்றாலும்.... அவர்கள் கட்டாயத்துக்காக என எதையும் செய்ய முயன்றதே இல்லை. அதே நேரம்.... பார்வதியே கூட மகனிடம் சில விஷயங்களை கவனித்திருக்கிறார். மற்றவர்களது காதல் விஷயம்.... நண்பர்கள் பெண்களோடு பேசும் விஷயம், என தன்னிடம் பகிர்பவன், ஒரு முறை கூட, தான் ரசித்த,

ஆர்வமாக பேசிய, பெண்களைப் பற்றி உரைத்தது கிடையாது.

தன் மகன் அதை மட்டும் தன்னிடம் மறைக்கிறானோ என எண்ணியவர், "ஏம்ப்பா நகுல்.... அதென்ன.., மத்தவங்க உன் ப்ரண்ட்ஸ் பண்றதை மட்டும் சொல்ற.... நீங்க மட்டும் பொண்ணுங்க போனால்.... பேசினால்.... கண்ணை மூடிட்டு, வாயை மூடிட்டு இருப்பீங்களாக்கும்...?" கேலிபோல் கேட்டார்.

"ம்ச்.... என்னம்மா நீங்க.... கிளாஸ்ல ஜஸ்ட் ஹாய்.... பாய் சொல்லிக்கிறதுதான். அதைத் தாண்டி.... சைட் எல்லாம்.... ம்ஹூம்.... எந்தப் பொண்ணையும் அந்த நினைப்பில் இதுவரை பார்த்ததில்லை. அதேபோல், எந்த பொண்ணும் என் மனசைத் தீண்டவே இல்லை.

"அப்படி மட்டும் நடக்கட்டும்.... கண்டிப்பா என் காதலை அவகிட்டே சொல்ல முன்னாடி.... உங்ககிட்டேதான் முதல்ல சொல்லுவேன்..." அவன் வார்த்தைகள் அவரை குளிர்வித்துதான் போட்டது.

அப்படிப் பட்ட மகன்.... இன்று தன் மனதுக்குள் இருப்பதை சொல்லத் தயங்க.... அதை அவரால் தாங்கத்தான் முடியவில்லை.

தாயின் மனம் புரிந்தவனாக.... அவர் மடியில் அவன் தலை வைத்துப் படுக்க, "பாத்துப்பா.... தலை வலிக்கப் போகுது...." சற்று பதறியவர், பூப்போல் அவனை அரவணைத்துக் கொண்டார்.

சற்று நேரம் அங்கே ஒரு அவஸ்தையான அமைதி நிலவ, "என்னப்பா.... அம்மாகிட்டே சொல்ல என்ன தயக்கம்...?" அவனை தூண்டினார்.

"அம்மா.... அன்னைக்கு.... ஆக்சிடண்ட் ஆனப்போ..... என்னைக் காப்பாத்தினாளே.., அனு...." அவன் தயக்கமாக

நிறுத்தி, தாயின் முகம் பார்க்க, அவரோ.... அமைதியாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் கண்களோ.... அன்றைய நினைவில் கண்ணீரை வடிக்கத் தயாராக.... மகன் முன்னால் அழக் கூடாது என்ற நினைப்பில், அது அவனுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கும் என்பதால்.... தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

"சொல்லுப்பா..." "நிஜமாவேம்மா.... நான் ரத்த வெள்ளத்தில் தவிக்க, சுத்தி இருந்த ஆம்பளைங்க எல்லாம் தயங்கியபொழுதும், அவ.... தன் மேலே போட்டிருந்த துப்பட்டாவை.... கொஞ்சம் கூட யோசிக்காமல் உருவி, என் தலைக் காயத்தை அழுத்தி முடிச்சு போட்டு.... எத்தனை ஆட்டோவை நிப்பாட்ட துடிச்சா தெரியுமா?

"அந்த நிமிஷம்.... எனக்கு அடி பட்டிருக்கு என்பதை விட, அவ முகமும், அதில் தெரிந்த தவிப்பும்தாம்மா தெரிஞ்சது. அதுக்குப் பிறகு, ஆம்புலன்ஸ்ல ஏறிய பிறகும்.... அவ பேசுனது எதுவுமே என் காதில் விழலை, ஆனா.... நான் மயக்கத்துக்குப் போனப்போ.... அவளோட அழுகைச் சத்தம்.... அது இன்னுமே என் காதுக்குள் கேக்குதும்மா..." இதுவரை தன் மனதுக்குள், ஒரு பெண்ணைப் பற்றிய நினைப்பை தாயிடம் பகிர்ந்து இராததால்.... ஒருவித தயக்கம்...

அதை தூரத் தள்ளியவன்.... "அதுக்குப் பிறகு.... கண் முழிச்சப்போ.... உங்க எல்லோரையும் பார்த்து முடித்த உடனே, என் கண்ணு அவளைத்தான் தேடிச்சு. அவ இல்லன்னப்போ.., என் மனசுக்குள்ளே ஏதோ ஒரு ஏமாற்றம்.... ஒரு வேளை.... நம்மளை காப்பாத்தியதுக்கு நன்றி சொல்லாததால் தான் அப்படி இருக்கோன்னு நானே என்னை சமாதானப் படுத்திகிட்டேன்.

"ஆனா.... மனசு சமாதானமே ஆகலை. அது ஏன்னு அப்போ எனக்குப் புரியலை.... இந்த ஒரு வாரமா.... அவளோட

நினைப்பும், முகமும், அழுகையும், குரலும்.... என்னை ரொம்ப டிஸ்டப் பண்ணுதும்மா. இதே வேளை.... உன்னை ஒரு வயசானவங்க காப்பாத்தி இருந்தால்.... ஒரு ஆம்பளை அதைச் செய்திருந்தால்ன்னு நானும் என்னையே கேட்டுப் பார்த்துட்டேன்...

"என்னதான் செய்தாலும்.... மனசு அவளையே தேடுதும்மா.... கண்டிப்பா இது காதல் தானான்னு என்னால் சொல்ல முடியலை. ஆனா.... அவளைப் பார்த்தே ஆகணும்.... அவளோட தவிப்புக்கு விடையா.... நான் உயிரோடதான் இருக்கேன்..... உன் முன்னாடிதான் இருக்கேன்னு சொல்லணும்னு ஒரு வேகம்.... முடியலம்மா..." இவ்வளவு நேரமாக தன் மனதுக்குள் இருந்ததை தாயிடம் கொட்டிவிட்டதால், மனம் லேசானது போன்ற உணர்வு.

"இவ்வளவு நாளா.... மனசுக்குள் அடைச்சுட்டு இருந்த எதுவோ விடைபெற்று போன மாதிரி இருக்கும்மா...." தாயிடம் உரைத்தவன், நிம்மதியாக விழி மூடினான்.

ஆனால்.... அவன் மனதில் இருந்து இறங்கிய பாரம், பார்வதியின் மனதுக்குள் ஏறிக் கொண்டது. இத்தனை வருடங்களாக, எந்தவொரு பெண்ணைப் பற்றியும் பேசியிராதவன், முதல் முறையாக.... தன் மனதுக்குள் அந்த பெண் வந்துவிட்டாளா இல்லையா.... என்பது தெரியவில்லை.

ஆனால் அவளைத் தேடுகிறேன் என உரைக்க, அவனது எந்த ஒரு ஆசையையும் நிறைவேற்றியிராமல் போன அந்த தாயால் மகனது இந்த ஆசையை நிறைவேற்றாமல் போய்விடுவோமோ என அச்சம் கொண்டார்.

கடந்த பதினைந்து நாட்களாக, நவீனை அவர் துளைக்காத நேரமில்லை. அனுவைப் பற்றி அதற்குமேல் ஏதாவது விவரம் தெரிந்ததா என அவனை விரட்டவே செய்கிறார். பலன் மட்டும் அதே பூஜ்யமே.

தன் மனதைத் திறந்த நிம்மதியில் அவன் உறங்கியிருக்க, அவன் உறங்கிய பிறகும், அவனை விட்டு விலகிச் செல்லாமல் அவனை மடி தாங்கியவாறு அமர்ந்திருந்தார்.

***கல்லூரியில் ஆசிரியை நடத்தும் பாடத்தில் கவனம் பதிக்காமல், புத்தகத்தையே வெறித்துக் கொண்டிருந்த தோழியை கவலையாகப் பார்த்தாள் மைத்ரேயி. சென்னையில் இருந்து வந்தது முதல், சில வேளைகளில் அவள் இப்படி மாறிப் போவதை உணர்ந்தே இருந்தாள்.

அன்று.... ஜிஹெச்சில் இருந்து வெளியேறியவர்கள்.... முதலில் சென்றது ஒரு சிறிய ஜவுளிக் கடைக்குத்தான். அதற்கு முன்பாக, தங்களுக்கு அழைத்துக் கொண்டிருந்த பேராசிரியைக்கு அழைத்தவர்கள், தாங்கள் ஸ்டேஷனுக்கு அருகில் இருப்பதாகவும், அங்கே இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவதாகவும் உரைத்துவிட்டு வைத்துவிட்டாள்.

அனன்யாவின் உடை முழுவதுமே ரத்தத்தில் சற்று தோய்ந்து இருந்தது. மைத்ரேயியின் உடையிலும் ரத்தத் துளிகள் இருந்தது. மருத்தவமனைக்கு வெளியே இருந்த பலர், தங்களை ஒரு மாதிரியாகப் பார்ப்பதை அவர்கள் உணர்ந்ததால்.... முதல் வேலையாக அந்த ஜவுளிக் கடைக்குள் புகுந்து, ஆளுக்கொரு உடை வாங்கி, அங்கிருந்த சிறிய உடை மாற்றும் அறையில் மாற்றிக் கொண்டார்கள்.

அவ்வளவிலும் அனன்யா சற்று ஈடுபாடு இல்லாமலே இருந்தாள். ஒரு மாதிரி பிரம்மை பிடித்த நிலை. "இதுதான் நீங்க வர நேரமா? உங்களால் எல்லாரும் நிக்க வேண்டியதா போச்சு..." நேரமாவதால் அவர் கடிய,

"ட்ராபிக் மேம்..." ஆசிரியை கேட்ட கேள்விக்கு கூட மைத்ரேயிதான் பதில் உரைத்தாள். அனன்யாவை சந்தேகமாக பார்த்த அவரிடம், "அவளுக்கு தலை வலிக்குதாம் மேம்..." ஒரு மாதிரி சம்மாளித்தாள்.

அவர்களை மேலும் சோதிக்காமல்.... ரயில் கிளம்ப விளக்கு எரியவே.... அனைவரும் அவசரமாக தங்கள் பெட்டிக்கு ஓடினார்கள். நல்ல வேளையாக மைத்ரேயிக்கும், அனன்யாவுக்கும் ஒரே இடமாகப் போய்விட, அவளை அமர்த்தியவள், "ஏய்.... மூஞ்சிய கொஞ்சம் சிரிச்சாப்புல தான் வச்சுக்கயேன். முடியலடி.... அந்த மேம் வேற குறுகுறுன்னு இங்கனயே பாக்குது..." அவள் காதுக்குள் கடிந்து கொண்டாள்.

அவளோ.... அதைக் கண்டுகொள்ளாமல்.... "மையூ.... அந்த ஆள் பொளச்சிருப்பான் தானே. எனக்கென்னவோ பயம்மா இருக்குடி.... என்ன ஏதுன்னு கேட்டுட்டே வந்திருக்கலாம்..." கவலையாக உரைத்தாள்.

"ஆமா.... அப்படியே அவனுக்கு ஆப்பரேஷன் முடியிற வரைக்கும் இருந்து பாத்துட்டும் வந்திருக்கலாம்.... அந்த போலீஸ் கிட்டே வீட்டு விலாசம் முதக்கொண்டு எல்லாத்தையும் கொடுத்து.... அப்படியே கையோட கூட்டிட்டு வந்து.... நம்ம மேம்கிட்டே இன்ட்ரடியூஸ் கூட பண்ணியிருக்கலாம் இல்ல..." கடித்த பற்களுக்கிடையில் பொரிய, அவள் பேசுவதில் இருந்த நியாயம் புரிய அமைதியானாள்.

"ஏற்கனவே அந்த மேம் சான்ஸ் கிடைச்சால் கடிச்சு குதறுவேன்னு முறைக்குது. இதில் இவ வேற.... இந்த லட்சணத்தில், அந்த ரக்சினி கொரங்கு வேற.... ஏய் புது ட்ரெஸ் நல்லா இருக்குடின்னு கடுப்பை வேற கிளப்பறா.

"நானே போயும் போயும் இந்த கலரா நமக்கு வாய்க்கணும்னு வயித்தெரிச்சலில் இருக்கேன்.... அவ எரியிற நெருப்பில் பெட்ரோல ஊத்துறா. நாலு பக்கமும் பத்திகிட்டு இருக்கேன். இன்னும் ஒரு வார்த்த பேசுன.... பாஞ்சு உன்னை கடிச்சு குதறிருவேன் பேசாம இரு..." அவளும் பாவம் எவ்வளவுதான் தாங்குவாள்.

அனன்யா அதன் பிறகு எதுவும் பேசவே இல்லை. வரும் அவசரத்தில் உணவு வாங்கவேண்டும் என்பதே இருவருக்கும் மறந்திருக்க, அனன்யா உணவை மறுத்து மேல் பெர்த்தில் படுத்துவிட, தன் தோழி உண்ணாமல், தான் மட்டும் எதையும் வாங்கப் பிடிக்காதவளாக, பிஸ்க்கட்டும் தண்ணீரும் குடித்து தன் உணவை முடித்தவள், படுத்துக் கொண்டாள்.

ஆனால்.... அதன் பிறகு நடந்தவை எதுவும் மைத்ரேயிக்குத் தெரியாது. தன் வீட்டுக்கு வந்த உடனேயே.... சென்னைப் பயணத்தைப் பற்றி கேள்விகேட்ட பெற்றோருக்கு கூட பதில் உரைக்காமல், தன் அறைக்குச் சென்று கதவடைத்தவள், முதல் வேலையாக தன் அலைபேசியில் இருந்து சென்னை ஜிஹெச்சுக்கு அழைத்தாள்.

சோம்பலாக ஒலித்த செவிலியின் ஹலோவைக் கண்டுகொள்ளாமல், "ஹல்லோ.... நேத்து ஒரு ஆக்சிடண்ட் கேஸ் வந்ததே.... அவர் எப்படி இருக்கிறார்...?" படபடத்தாள்.

"அட.... யாரும்மா நீ...? இங்கே என்ன ஒரு கேசா வருது? பேரைச் சொல்லும்மா" தூக்கம் கலைந்த எரிச்சலில் எரிந்து விழுந்தாள்.

"பேர்..." திணறியவள்.... "ஹாங்.... அவருக்கு தலையில் அடி பட்டிருந்தது. அவர் தலையில் கூட மஞ்சக்கலர் ஷால் சுத்தி...." அவள் எப்படியாவது அவனைப் பற்றி அறியும் வேகத்தில் உரைத்துக்கொண்டே செல்ல,

"கொஞ்சம் நிப்பாட்டு.... பேரைக் கேட்டால்.... தலையில் அடி, ஷால்.... கதை சொல்லிக்கிட்டு இருக்க. ஆமா.., நீ ஆம்பளையைக் கேக்கியா இல்ல பொண்ணையா? காலங்காத்தாலே.... வைம்மா போனை..." தொலைபேசியை வைத்தே விட்டாள்.

அனன்யா தவித்துப் போனாள். தொலைபேசி வாயிலாகவாவது அவனது நிலையைப் பற்றி அறிந்துகொள்ளலாம் என்ற அவளது நினைப்பும் அத்தோடு

முடிந்து போனது. இதற்குமேல் எப்படி அவனைப்பற்றி விசாரிக்க என்று அவளுக்குத் தெரியவில்லை.

அப்பொழுது இருந்த நிலையில், அவன் பெயரைக் கேட்கவேண்டும், அறிந்துகொள்ளவேண்டும் என்ற நினைப்பே இல்லாமல் போன தன்னை நொந்துகொண்டாள்.

அதன் பிறகு தன்னை சமன்படுத்திகொண்டு பெற்றோரிடமும், தம்பியிடமும் சகஜமாக பேச முயன்றாள். தொடர்ந்த நாட்களில்.., சில நாள் இரவில்.... கனவில்.... ரத்தம் தோய்ந்த முகத்தோடு.... "என்னை பாதியிலேயே விட்டுவிட்டு போயிட்டியே..." என அவன் கேட்க, விதிர்த்துதான் போனாள்.

‘ஒரு வேளை அவன் செத்துட்டானோ....?’ அந்த நினைப்பே அவளை அலைக்கழிக்க, மீண்டும் சில நாட்கள் சென்னை மருத்துவமனைக்கு அழைத்து, அவனைப் பற்றி விசாரித்து, இப்பொழுது இவள் குரலைக் கேட்டாலே தொலைபேசி அறைந்து சாத்தும் அளவுக்கு வந்து விட்டிருந்தது.

தோழி இன்னுமே தன் நிலையில் மாறாமல் இருக்க, மேடம் இரண்டு மூன்று முறை அவளை கவனித்ததைப் பார்த்த மைத்ரேயி.... "அனு.., மேம் பாக்குறாங்க.... கொஞ்சம் கவனி..." அவளை இடித்து நடப்புக்குத் திருப்ப, அவளோ.... இருக்கையில் இருந்து எழுந்தவள், "சாரி மேம்...." உரைத்தவள் அறையில் இருந்து வெளியேறியிருந்தாள்.

அவளைத் தனியாக விட மனமின்றி.... தானும் எழுந்து ஓடினாள் மைத்ரேயி. ஒருவருக்கொருவர் யாரென்றே தெரியாமல் இருக்கும் இவர்கள் நிலை இனி என்னவாகும்?

4

அனன்யா நேராகச் சென்ற இடம் கல்லூரி கேண்டீன். அது பாட வேளையாகையால்.... கூட்டம் சற்று குறைவாக இருக்க, ஒரு காலியான இருக்கையைத் தேடிப் பிடித்து அமர்ந்தாள்.

அவள் அமரவே.... அவளை முறைத்தவாறு தானும் அமர்ந்தவள், பிறகு எழுந்து சென்று அவளுக்கு டீயும், தனக்கு குளிர்பானமும் வாங்கிகொண்டு வந்து அமர்ந்தாள். வெயில் தாக்கும் வேளையில் கூட, தோழி குளிர்பானம் அருந்த மாட்டாள். அனன்யாவுக்கு வீசிங் இருப்பதாலேயே டீயை வாங்கி வந்தாள்.

"அனு.... உன் மனசுக்குள்ளே நீ என்னதாண்டி நினைச்சுட்டு இருக்க? ஒரு மாசம் ஆகப் போகுது. இன்னுமே நீ சரியாகலன்னா இதுக்கு என்ன அர்த்தம்?" முறைப்பாக அவளை ஏறிட்டாள்.

"ம்ச் போடி.... உனக்கெல்லாம் சொன்னால் புரியாது. அவனுக்கு என்ன ஆச்சுன்னு..." தோழியின் கண்களில் உண்மையாகவே சோகத்தைப் பார்க்க வார்த்தையை அப்படியே நிறுத்திவிட்டாள்.

"சத்தியமா முடியலடி. ஒரு விஷயத்தை நல்லா புரிஞ்சுக்க அனு. நம்மளால் முடிந்ததை நாம செஞ்சுட்டோம். அதுக்குப் பிறகு அவன் பிழைக்கிறதோ.... சாகுறதோ..... ஆண்டவன் கையில் இருக்கு. அப்படி இருக்கும்போது.... தேவையில்லாமல் நீ உன் மனசைப் போட்டு குழப்பிக்கிற.

"ஆண்டவா.... அவன் உயிரோட இருந்தால் அவனை நல்லவிதமா பாத்துக்க, அப்படியே உன்கிட்டே வந்திருந்தால்.... அவங்க வீட்டுக்கு ஆறுதல் கொடுன்னு வேண்டிக்கிட்டு, உன் வேலையைப் பார். ஆனா.... என்னைப் பொறுத்த வரைக்கும், அவன் கண்டிப்பா பொழைச்சு

இருப்பான்னுதான் தோணுது...." தன் ஜூலை உறிஞ்சியவாறே உரைத்தாள்.

அவ்வளவு நேரமாக அவள் சொன்னதை ஒருவித புருவச் சுழிப்பில் கேட்டவள், இறுதியாக அவள் சொன்னதைக் கேட்டு, முகம் பிரகாசமாக அவளை ஏறிட்டாள்.

"ஏய்.... நீ நெசமாத்தான் சொல்றியா? எப்படி...?" இப்பொழுது தன் முன்னால் இருந்த கப்பை எடுத்துக் கொண்டாள்.

தோழியின் செய்கையைப் பார்த்த மைத்ரேயி.... 'ச்சே.... இவ இப்படி ஒரு நம்பிக்கையான வார்த்தைக்காகவா காத்திருந்தாள்? இது தெரியாமல் இத்தனை நாள் இருந்து விட்டேனே.... நானெல்லாம் என்ன ப்ரண்ட்...', தன்னையே கடித்து கொண்டவள்,

"நீயே யோசிச்சு பார் அனு. நிறைய ப்ளட் வேஸ்ட் ஆனால்தான் ரொம்ப சீக்கிரம் செத்துப் போய்டுவாங்க. அதே மாதிரி.... அந்த ஆள் அப்படி ஒண்ணும் நினைவும் இழக்கலை.... கடைசியாத்தான் மயங்கினார். அதே போல், நாம கரெக்ட்டா ஹாஸ்பிடல் வேற போய்ட்டோம்.... சோ.., நான் அடிச்சு சொல்றேன்.... அந்த ஆள் கண்டிப்பா பொளைச்சிருப்பான்.

"நீ வேண்ணா பார்.... என்னைக்காவது ஒரு நாள் அந்த ஆளை நீ சந்திக்கத்தான் போற.... அது நடக்கத்தான் போகுது..." அவள் அடித்துச் சொல்ல, அத்தனை நாள் இருந்த மனக் கலக்கம் நீங்கி, நிம்மதியாக உணர்ந்தாள்.

அதே நேரம்.... "அவ எந்த ஆளை சந்திக்கப் போறா...? நீ யாரைச் சொல்ற...?" அந்த கேள்வியிலும், குரலிலும் முகம் கூம்ப.... அஷ்டகோணலாக, முகத்தை திருப்பிய மைத்ரேயி.... "ஏய்.... நான் கிளம்பறேண்டி.... நீ இருந்து பேசிட்டு வா..." இருக்கையில் இருந்து எழுந்தவள், அவள் பதிலை எதிர் பார்க்காமல் எழுந்து நடந்தே விட்டாள்.

தோழி செல்வதை தடுக்க முடியாததை ஒரு கையாலாகாத நிலையில் வெறித்தவள், தன் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்த வேந்தனை, சற்று கோபமாகவே ஏறிட்டாள்.

அவள் கோபத்தை கண்டுகொள்ளாமல், "நான் கேட்டதுக்கு பதில் சொல்லாமல் இப்படி ஓடுறா? கொஞ்சமாவது மெனஸ் தெரியுதா பார்...? இவல்லாம் உனக்கு ஒரு ப்ரண்ட், முதல்ல இவ ப்ரண்ஷிப்பை கட் பண்ணு..." எரிச்சலாக மொழிந்தான்.

‘நீ முதலில் மேனசாக நடந்து கொண்டாயா....?’, இதழ்வரை வந்துவிட்ட வார்த்தைகளை, கையில் இருந்த டீயோடு சேர்த்து விழுங்கினாள்.

"நான் கொஞ்சம் வெளியே போகலாம்னு கூப்ட்டா.... என்னவோ மொத்த பாடத்தையும் இன்னைக்கே படிக்கணும்னு பில்ட்டப் கொடுப்ப.... இன்னைக்கு கிளாசையே கட்டடிச்சுட்டு வந்து உக்காந்து கதை பேசிட்டு இருக்கீங்க. அதுவும் எவனையோ பத்தி.

"அதைவிட.... ஜூஸ் குடிக்க மாட்டேன்னு பில்ட்டப் கொடுப்ப இதென்ன? என்ன நடக்குது இங்கே...?" இப்பொழுது அவன் குரலில் கோபம் சேர்ந்து ஒலித்தது.

"அது மையூ குடித்த ஜூஸ்..." வெடுக்கென உரைத்தவள், முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அவனோ.... "எவனையோ சந்திக்கிரதைப் பத்தி சொன்னாளே.... அது.... நீ காப்பாத்திட்டு வந்தியே அவனையா...?" அவன் குரலில் நக்கலும், கோபமும் கலந்து வெளிப்பட்டது.

‘ச்சே.... இவன் புத்தி தெரிந்தும், இவன்கிட்டே போய் சொன்னேனே...’, ஆயிரம் முறையாக தன்னையே நொந்துகொண்டாள்.

"அப்போ நீ இன்னும் அவனை மறக்கலை..." அவன் ஒரு மாதிரி குரலில் உரைக்க,

"ஜஸ்ட் எனஃப் வேந்தன்.... இப்படி அசிங்கமா பேச உங்க வாய் கூசல...? நான் காப்பாத்திய அந்த ஆள் நல்லா இருக்கானா இல்லையான்னு தெரிஞ்சுக்க, ஜஸ்ட் ஒரு ஆர்வம்.... அதைப்போய்..." இப்பொழுது அவள் பொங்க, சட்டென தணிந்து போனான்.

"ஹேய்.... இப்போ எதுக்கும்மா இவ்வளவு கோபம்...? எதுக்கு தேவையில்லாததைப் பற்றி எல்லாம் யோசிச்சு உன்னை கஷ்டப்படுத்திக்கறன்னு ஒரு அக்கறை தான்.... வேற எதுவும் இல்லை. ஓகே ரிலாக்ஸ்.... நான் பேசுனதுக்கு சாரி.... ஓக்கேயா.... இனிமேல் அதைப் பத்தியே பேசலை....

"ஏற்கனவே கிளாசை கட் அடிச்சுட்ட.... இன்னைக்காவது ஒரு மூவி போகலாமா? ஒரு வருஷமா காதலிக்கிறோம்..... இந்த என்னோட சின்ன ஆசையையாவது நிறைவேற்றலாமே..." அவள் கையைப் பற்ற, நாசூக்காக அதைத் தவிர்த்தாள்.

அவளது இந்த செய்கையில்.... அவனது அடங்கியிருந்த கோபம், அல்லது அவன் அடக்கிய கோபம் கிளர்ந்து வெளியேறியது.

"உன் மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்க. நீ என்னை லவ் பண்ற தானே. சும்மா கையைத் தொட்டால் என்னவாம்? அப்படியே கரைஞ்சுடுவியா...? இல்ல அவ்வளவு பலகீனமானவளா நீ...?" நெருப்பென வார்த்தைகள் வந்து விழுந்தன.

அதன் வெம்மை தாளாமல் துடித்துப் போனாள் அனன்யா. "வேந்தன்.., வார்த்தையை நிதானமா பேசுங்க...." அடிக்குரலில் வீறிட்டாள்.

"நிதானமா பேசலன்னா என்ன செய்வ? என்னை விட்டுட்டு போய்டுவியா? அதானே என்னை எப்போ கழட்டி

விடலாம்னு பாத்துட்டு இருக்குறவதானே நீ.... எனக்குத் தெரியாதுன்னு நினைக்கறியா? உன் கண்ணில் காதல் இல்லடி.... ஆனா நான் உன்மேல் உயிரையே வைத்திருக்கேன்.

"அப்படி மட்டும் ஏதாவது நடந்தது...? லெட்டர் எழுதி வச்சுட்டு மருந்தை வாங்கிக் குடிச்சுடுவேன்.... நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது அனு..." கண் கலங்கிவிட்டான்.

அவன் கோபத்துக்கு கூட பதிலடி கொடுக்க முடியும் அவளால்.... அவனது இந்த கண்ணீருக்கு மட்டும் பதில் கொடுக்கவே முடிவதில்லை. சட்டென இறங்கிப் போகவேண்டி இருந்தது.

மரணம் என்னும் விஷயம், அவள் அண்ணன் சாவுக்குப் பிறகு அவளை மிகுந்த பலவீனப்படுத்திவிட்டது என்றே சொல்லலாம். அவளது பலகீனத்தை அவன் பயன்படுத்திக் கொண்டிருந்தான். அவளது பலகீனமான தருணத்தில் தன் காதலைச் சொல்லி, அவள் இல்லாமல் தான் இல்லை என்ற பேச்சில்.... ஏற்கனவே குழப்பத்தில் இருந்தவளை வீழ்த்தி விட்டான்.

காதலைச் சொல்லும் தருணம் அதுவல்ல என்பதை அவனும் உணரவில்லை. வாழ்க்கையின் முடிவெடுக்கும் தருணம் அதுவல்ல என்பதை அவள் சிந்திக்கவும் இல்லை.

இதை தெளிவான சிந்தையில் இருந்த மைத்ரேயி உணர்ந்ததாலேயே, அதை தோழிக்கு புரிய வைக்க முயல, தன் காதலுக்கு முதல் எதிரியாக அவளை நினைத்தான் வேந்தன்.

மைத்ரேயி பேசினாலே எங்கே அவள் மனதை தெளிய வைத்துவிடுவாளோ என அஞ்சியே.... அவர்கள் தனியாக பேசும் சந்தர்ப்பத்தைப் பார்த்தால், உடனடியாக அதை கலைத்து விடுவான்.

எனவேதான்.... அவனைப் பார்த்தாலே மைத்ரேயிக்கு பற்றிக்கொண்டு வரும். அதிலும்.... அளவான உயரத்தில், மஞ்சள் வர்ணத்தில், செப்புச் சிலையாக இருக்கும் தோழி, பாஸ்மார்க் மட்டுமே வாங்கித் தேறும் வேந்தனை விரும்பியதைக் கூட ஓரளவு ஏற்றுக் கொண்டாலும், கொஞ்சம் கூட தோழியைப் பற்றி எண்ணாமல்.... சுயநலத்தின் மறு உருவாக இருக்கும் அவனை தோழி இனம் காணாமல்.... குழியில் விழுந்துவிட்டாளே எனதான் மிகவும் வருந்தினாள்.

எத்தனையோ முறை அவளிடம் மறைமுகமாகவும், நேரடியாகவும் வேந்தனைப் பற்றி உரைத்தாலும்.... 'சாவு' என்ற ஒரு விஷயத்தை அவன் கையாளும் வேளையில், நிஜம் அனைத்தும் நிழலாகப் போகும் விந்தையை தடுக்க முடியாமல் சோர்ந்தாள்.

காதல் இரக்கத்தில் வருவதில்லை என எத்தனையோ முறை சொன்ன பிறகும், 'ப்ளீஸ் என்னை குழப்பாதே.... என்னால் முடியாது...', என அவள் மன்றாடும் வேளையில், கடவுளை துணைக்கு அழைப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

"ம்ச்.... இப்போ எதுக்கு சாவு அது இதுன்னு பேசறீங்க? உங்களை நம்பித்தான் உங்க ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க.... அது ஞாபகம் இருக்கா?" அவனை கடிந்துகொண்டாள்.

எப்பொழுதும்போல் தன் பேச்சு வேலை செய்த சந்தோஷத்தில், 'அப்படி வாடி வழிக்கு.... உன்னை அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுத்துடுவேனா?' எண்ணியவன் மறந்தும் தன் மனதை அவளிடம் வெளிக்காட்டவில்லை.

"எனக்கு தங்கச்சிங்க இருக்காங்க.... அவங்களை நான் நல்லபடியா பாத்துக்கணும்னு என்னைவிட நீ இவ்வளவு

அக்கறையா நினைக்க இருக்கும்போது எனக்கென்ன கவலை அனு...." குழைந்தவன்,

"அதே போல்.... நானும் உங்க அப்பாவுக்கு நல்ல மகனா இருப்பேன் அனு.., என்னை நம்பு..." அவன் தன் பணத்தின்மேல் வைக்கும் குறையை அறியாதவளாக, அவள் குளிர்ந்து போக, மேலும் அவளிடம் பேசி மந்தரித்துவிட்டே அங்கிருந்து எழுந்து சென்றான்.

அவன் செல்லவே.... ஒரு பெருமூச்சை வெளியேற்றியவள், தன் தோழி மைத்ரேயியைத் தேடிச் சென்றாள். அவள் எதிர்பார்த்தது போலவே, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, ஹாலில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

"மையூ.... லஞ்சை முடிச்சுட்டு.... மதியம் கிளாஸ்க்கு போய்டலாம்.... வா.... இன்னைக்கு என்ன லஞ்ச் எடுத்துட்டு வந்த..." சாதாரணமாக உரையாட, தோழி அவள் காதலனைப் பற்றிய பேச்சை தவிர்ப்பதை உணர்ந்தவள், தன் தோழியின் எதிர்காலத்தை எண்ணி கவலைப்படுவதைத் தவிர வேறு எதுவும் அவளால் செய்ய முடியவில்லை.

****ஒவ்வொரு நாள் விடியலும் அதன் போக்கில் கடக்க..... நகுலன் இப்பொழுது நடக்கத் துவங்கியிருந்தான். இடக்கரத்தை மடித்த வாக்கிலேயே மூன்று மாதம் கட்டி வைத்திருந்ததால்.... அதை நீட்ட, மடக்க, பிசியோதெரபி கொடுக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

இப்பொழுது அவனால் முக்கால் வாசி அவன் கரத்தை நீட்ட முடிந்தது. இன்னும் கொஞ்சநாள் போனால்.... அவன் கரத்தை சாதாரணமாக உபயோகிக்கும் அளவுக்கு கொண்டுவந்துவிடலாம் என மருத்துவர் உரைத்திருக்க, தலையில் கூட முடி முழுதாக வளர்ந்து விட்டிருந்தது.

அவன் உடல்நிலையும் தேறிவிட்டாலும், அலுவலகத்துக்கு மட்டும் அவ்வளவு சீக்கிரம் அவனை வர விடவில்லை நவீன்.

நவீனும் நகுலும் கூட்டாக சேர்ந்து.... திரீ எம் ப்ராடெக்ட்களை சென்னை, கோவை, பெங்களூர்.... சேலம்.... என தமிழ்நாடு, ஆந்திரா மாநிலத்துக்கு சப்ளை செய்யும் நிறுவனத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அவனது தந்தை அரசுவோ.... அவற்றை தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருந்தார். மகன் படிப்பை முடித்தவுடன் தன் தொழிற்சாலையை ஏற்று நடத்துவான் என அவர் எண்ணியிருக்க, தன் பொருட்களை சப்ளை செய்யும் நிறுவனத்தை, தன் உதவி இல்லாமல், சுயமாக லோன் வாங்கி ஆரம்பித்ததை அவரால் ஏற்க முடியவில்லை.

அதையே அவனிடம் வெளிப்படுத்த, "அப்பா.... நம்ம கம்பெனியை நீங்க ரொம்பவே நல்லா நடத்திட்டு வரீங்க. நான் இப்போ அங்கே வந்து புதுசா கத்துக்கவோ.... செய்யவோ எதுவுமே இல்லை. என் வயசுக்கு எனக்கு கொஞ்சம் சவாலான வேலை வேணும்.

"சும்மா அப்பா காசில் உக்காந்து சாப்பிட எனக்கு மனசில்லை. காசோட அருமை எனக்குப் புரியணும். இப்போ நான் உங்ககிட்டே காசு வாங்காமல், லோன் போட்டு கம்பெனி ஆரம்பிக்கக் காரணமே.... அதில் வரும் நஷ்டமோ லாபமோ.... என்னைச் சார்ந்து இருக்கணும்.

"நஷ்டம் வந்தால்.... அதில் இருந்து மீள எனக்குத் தெரியணும். ஒரு தைரியமும், நம்பிக்கையும்.... கூடவே ஒரு பயமும் இருக்கணும். இப்போ நான் உங்ககிட்டே காசு வாங்கினால்.... நஷ்டம் ஆனால் கூட எனக்கு அது வலிக்காது. ஆனா.... இப்போ அப்படி கிடையாதே...

"வாழ்க்கையை நானும் மோதிப் பாக்கறேனே. அப்போதான்.... நீங்க பிரம்மாண்டமா வளர்த்து வைத்திருக்கும் தொழிலின் அருமை எனக்குப் புரியும். உங்க உழைப்பு எனக்குத் தெரியும்.... கொஞ்ச நாள் நான் இதை பாத்துக்கறேன்.

"பிறகு.... மொத்தமா நவீன் கிட்டே கொடுத்துட்டு.... நம்ம கம்பெனி பொறுப்பை எடுத்துக்கறேன். இப்போ கூட.... உங்களால் ஒரு விஷயம் முடியலன்னு நீங்க பீல் பண்ணால்.... அதை செய்ய நான் அங்கே இருப்பேன்..." அவர் கையைப் பிடித்து அவன் உரைக்க, நிச்சயம் அந்த நொடி, அவனை மகனாக அடைய பெருமிதம் கொண்டார்.

தந்தையின் சொத்தை அனுபவிக்க வேண்டும் என எண்ணாமல்.... அவர் உழைப்பின் அருமை தனக்குத் தெரியவேண்டும் என எண்ணும் மகன் யாருக்குக் கிடைப்பான்?

அப்படித் துவங்கிய அவன் கம்பெனிக்கு, அவனை நவீன் வர விடாததன் காரணமே.., அவர்கள் வேலை கொஞ்சம் டென்ஷனான வேலைதான். குறித்த நேரத்தில் சரக்கை எடுப்பது, அதை உரிய நேரத்தில் டெலிவர் செய்வது.

அதற்குத் தேவையான வண்டி அரேஞ் செய்வது.... அது குறித்த நேரத்தில் ரீச் ஆகிறதா எனப் பார்ப்பது.... வண்டி பழுதானால்.... கஸ்ட்டமருக்கு பதில் சொல்வது.... அவர்களை சம்மாளிப்பது என.... கொஞ்சம் மூளை வேலை அதிகமிருக்கும்.

கொஞ்ச நாளைக்கு அவனுக்கு அந்த கஷ்டம் வேண்டாம் என அவன் நினைக்க, நகுலனோ.... தனக்கு கிடைத்த அந்த நேரத்தை... ஒவ்வொரு கல்லூரி வாசலிலும் கழிக்கத் துவங்கினான்.

ஆறு மாதம் முடிந்து.... மேலும் நான்கு மாதங்கள் கடந்திருக்க, சென்னையில் இருந்த அனைத்து இன்ஜினியரின் கல்லூரி, ஆர்ட்ஸ் கல்லூரி என ஒன்று விடாமல் அலசத் துவங்கியிருந்தான்.

அவள் வெளியூராக இருப்பாளோ என்ற சந்தேகம் துளி கூட அவனுக்கு இருக்கவில்லை. நாட்கள் வருடத்தை கடக்க.... அவன் தேடலை உணர்ந்த பார்வதிக்கு மனதில் கவலை தொற்றிக் கொண்டது.

அவன் வேலையையும் கவனித்துக் கொண்டு, காலை மாலை என ஒவ்வொரு கல்லூரியாக அவன் சுற்ற, அது உணர்ந்தும், அவனை கண்டிக்க அவர் முயலவில்லை.

சாதாரண தாயாக இருந்தால்.... இது ஒத்து வராது.... வேண்டாம் என கண்டித்திருப்பார். உடனடியாக அவனுக்கு வரன் தேடியிருப்பார். இவரோ வித்தியாசமானவராயிற்றே.

மகன் மனம்போல் அனைத்தையும் நடத்திக் கொடுப்பவர். அவனது தேடல் ஒவ்வொரு நாளும் தோல்வியில் முடியும்பொழுதும், அவனை விட, அவர்தான் மிகுந்த சோர்வுற்றார்.

‘தன் மகனது வாழ்நாள் முழுவதும், இப்படி தேடலிலேயே கழிந்து விடுமா?’ அவரை கவலை தொற்றிக் கொண்டது.

இருபத்தேழு வயது முடிந்து, இருபத்தெட்டு வயது அவனுக்குத் துவங்கி விட்டது. வருணாவிற்கும் இருபத்து மூன்று வயது ஆகிவிட்டது. அவளைவிட ஐந்துவயது பெரியவன் அவன்....

வீட்டில் பெண்ணை வைத்துகொண்டு அவனுக்கு திருமணம் செய்வது சரியில்லை என்றாலும்.... எங்கே மகன் தனி மரமாக நின்றுவிடுவானோ என்ற கவலை அவரை பிடித்துக் கொண்டது.

அவனிடம் இதைச் சொல்லி.... அவனை சங்கடப்படுத்தவும் அவர் முயலவில்லை. எதற்கும் ஒரு முறை நவீனிடம் பேசிப் பார்க்கலாம் என நினைத்தவர், அவனை அழைத்தார்.

என்றைக்கும் தன்னை அலைபேசியில் அழைத்து பேசியிராதவர், அன்று அழைத்து, வீட்டுக்கு வா.., எனச் சொல்லும்பொழுதே அவன் நெருடலாக உணர்ந்தான். அதே நேரம்.... நண்பனின் விஷயமாகத்தான் இருக்கும் என்பதிலும் அவனுக்கு சந்தேகம் இல்லை.

ஏற்கனவே நண்பனிடம் ஆயிரம் முறை பேசியும் பலன் இல்லாமல் போன விஷயமாயிற்றே. ‘அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது...’, யோசனையோடு நகுல் வீட்டுக்கு வந்த அவனை.... முகம் முழுக்க வெள்ளை கிரீம் பூசிய முகத்தோடு எதிர்கொண்டாள் வருணா.

அவளைப் பார்த்தவுடன்.... சிறு வயது நினைவு தலை தூக்க.... "அம்மா பேய்..." அவன் போலியாக அலற,

"போடா கருவாயா..." அவளும் அதே துடுக்குத்தனத்தில் பதில் கொடுத்துவிட்டாள்.

அவள் பேச்சில் சட்டென அவன் முகம் கூம்பிப் போக, தன்னை மீறி தான் உதிர்த்த வார்த்தையில் தவித்துப் போனாள் வருணா.

அவனிடம் மன்னிப்பு வேண்ட அவள் முயல, "வாப்பா.... ஏன் அங்கேயே நின்னுட்ட.... உள்ளே வா..." பார்வதியின் குரலில், சட்டென தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

கதவைச் சாத்திவிட்டு, அதில் சாய்ந்து நின்றவளுக்கு.... மனம் முழுவதும் ஒரு வித வெறுமை. ‘ச்சே.... நான் ஏன் இப்படியே நடந்து கொள்கிறேன்? ஏற்கனவே மூன்று வருடங்களுக்கு முன்னால்.... இதே வார்த்தையை சொன்னதற்காகத்தான் அவன் தன்னிடம் பேசாமலே இருக்கிறான்.

‘அந்த பிரச்சனையே இன்னும் முடியாத பொழுது.... இப்பொழுது மீண்டும் அதையே சொல்லி.... நான் ஏன் இப்படி நடந்துக்கறேன். கண்டிப்பா அவரை காயப்படுத்த வேண்டும் என சொல்லும் வார்த்தை அல்ல அது’. தான் கேலியாகச் சொல்லும் விஷயம், அவனை காயப்படுத்துவதை தடுக்க முடியாமல் திணறினாள்.

அன்று ஹாஸ்பிட்டலில் அவளை நேருக்கு நேராக பார்த்த பிறகுதான், அவள் முகம் பார்க்கவே அவன் துவங்கினான்.

அந்த நிலையைக் கூட முற்றாக தான் அழித்து விட்டது புரிந்தது.

சின்ன வயதில் நவீன் மிகவும் கருப்பாக இருப்பான். அதை வைத்து அவனை கேலி செய்வாள். அது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்காது. அதென்னவோ அவனை வெறுப்பேற்றிப் பார்ப்பதில் அவளுக்கு அவ்வளவு ஒரு ஆனந்தம்.

அவனுக்கு, தான் 'கருவாயா' என அழைப்பது அவன் மனதை காயப்படுத்துகிறது என்பதை அறியவே பல வருடங்கள் தேவைப்பட்டது. அவள் அவனை கருவாயா என அழைக்கையில், அவனும் பதிலுக்கு 'போடி குந்தாணி.... குள்ள கத்தரிக்கா...', என அவளை பதிலுக்கு அவனும் பேசுவான்.

முதல் முறையாக.... அவள் கல்லூரி முதல் வருடத்தில் அடியெடுத்து வைக்க, அவனும் நகுலனும் தங்கள் தொழிலில் சற்று கால் ஊன்றிய நேரம்.... ஷாப்பிங் போயிருந்தவள், தன் தோழிகளை அழைத்துக் கொண்டு, தன் அண்ணனின் கம்பெனியை காட்டச் சென்றிருந்தாள்.

அங்கே எம்டி அறையில் இவன் மட்டும் இருக்க.... "ஹேய் கருவாயா.... என்ன நீ மட்டும் இருக்க, அண்ணா எங்கே...?" அவள் கேட்ட மறு நிமிடம், அவள் தோழிகள் கொல்லென சிரித்திருக்க, அவன் முகம் கூம்ப, தாடை இறுகிய பிறகுதான், தான் செய்த தவறே அவளுக்குப் புரிந்தது.

சட்டென இருக்கையை விட்டு எழுந்தவன், விருட்டென வெளியேற, அதன் பிறகு, மறந்தும் அவள் எதிரில் அவன் வந்ததில்லை. அவன் தன்னை தவிர்ப்பதும், பேச மறுப்பதையும், நீண்ட நாட்களுக்குப் பிறகு உணர்ந்த பிறகுதான், தான் செய்துவைத்த வேலையின் வீரியமே அவளுக்குத் தெரிந்தது.

அதன் பிறகு எத்தனையோ முறை அவனிடம் மன்னிப்பு வேண்ட முயன்றிருக்கிறாள். ஆனால்.... அந்த

சந்தர்ப்பத்தை வழங்க அவன் தயாராக இருக்கவில்லை.

ஒரு முறை செய்த தவறையே திருத்த முடியாமல் இருக்க.... இப்பொழுது மீண்டும்.... இதயம் கசக்கிப் பிழியும் உணர்வு. இது எதனால் என ஆராய்ந்தவளுக்கு, நீண்ட நாட்களாகவே அவள் மனதை அரித்த விஷயத்துக்கு தீர்வு கிடைத்த நிம்மதி.

ஆனால்.... அறிந்த விஷயத்தை வைத்து அவளால் சந்தோஷப்படத்தான் முடியவில்லை. அறியாத பருவத்தில் செய்த செயலுக்காக, மூன்று வருடங்களாக பேசாமல் இருந்தவன், இப்பொழுது என்ன செய்வான்...? தன்னை ஏற்பானா என்பதை நினைக்கவே முடியவில்லை.

கதவின் அருகிலேயே மடிந்து அமர்ந்தவள், குலுங்கி அழத் துவங்கினாள். அவள் கண்ணீரில்.... முகத்தில் இருந்த சாயம் மட்டுமல்ல, மனதுக்குள் இருந்த அழுக்குகள் கூட கரையும் உணர்வு. ஆனால்.... அதை உணர வேண்டியவன் உணர்வானா?

5

அறையில் எவ்வளவு நேரம் அழுதாளோ அவளுக்குத் தெரியாது. சட்டென கலைந்தவள், ‘அவன் சென்றிருப்பானோ...?’, நினைவோடு எழுந்தவள், வேகமாக முகம் கழுவி, ஹாலுக்கு விரைந்தாள்.

அவள் வருவது ஓர விழியில் அவன் பார்வையில் விழ, அழுத்தமாகவே அமர்ந்து கொண்டான்.

"என்னப்பா.... நான் சொன்னது புரியுதா? கொஞ்சம் அவன்கிட்டே பேசு.... அவன் இப்படி இருப்பதை என்னால் பார்க்க முடியலை. நவீன்..." பார்வதி அவன் பெயரைச் சொல்லி அழைத்த பிறகுதான்.... தன் கவனம் சிதறியதையே அவன் உணர்ந்தான்.

‘ச்சே.... இவமேல் கோபமா இருக்கும்பொழுது கூட, என் கவனம் இப்படி சிதறுதே...’ மனதுக்குள் எண்ணியவன்,

"கண்டிப்பாம்மா.... அவன்கிட்டே பேசிட்டு சொல்றேன்..." தன் நினைவை ஒதுக்கியவன், அவருக்கு பதில் உரைத்தான்.

"சந்தோஷம்ப்பா.... சரி இரு.... வீட்டுக்கு வந்த உனக்கு ஒரு கப் காபி கூட கொடுக்கலை, இன்னைக்கு சமையல்காரம்மா லீவ் அதான் உனக்கு இன்னும் காபி வரலை. இரு நானே எடுத்துட்டு வரேன்..." அவர் எழுந்து சென்றார்.

அதுவரைக்கும், அங்கே இருந்த புக் ஷெல்புக்குள் தலையை நுழைத்திருந்தவள், தாய் எழுந்து செல்லவே, வேகமாக அவன் பக்கம் திரும்பியவள், திணறிப் போனாள். அவ்வளவு நேரம் இருந்த தைரியம் மொத்தமும் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டது.

அவனோ.... அப்படி ஒருத்தி எங்கே இருப்பதையே கண்டுகொள்ளாமல், டீபாவின்மேல் கிடந்த பேப்பரை கையில் வைத்துகொண்டு அதிலேயே மூழ்கிப் போனதுபோல் பாவனை காட்டினான்.

அப்படியே அந்த பேப்பரைப் பிடுங்கி அவன் தலையில் எறியும் வேகம் இருந்தாலும், தன்னை அடக்கியவள், "ம்கும்..." அவள் தொண்டையைச் செரும, அதற்கும் அவன் அசையவே இல்லை.

தன் தயக்கத்தை விடுத்தவள், மெதுவாக அவனை நெருங்க முயல, அதை உணர்ந்தவன், "அம்மா.., நான் இன்னொரு நாள் வந்து காபி குடிச்சுக்கறேன்.... ஒரு அவசர வேலை.... கிளம்பறேம்மா..." குரல் கொடுத்துவிட்டு விருட்டென அங்கிருந்து வெளியேறிவிட்டான்.

முகத்தில் அடிவாங்கிய உணர்வில் விக்கித்து நின்றாள் வருணா. அவன் பின்னால் செல் என மனம் உந்த, அதைச் செய்ய முடியாமல் கால்கள் வேரோடிப் போன உணர்வு.

அதே நேரம்.... 'இவ்வளவு நேரம் நல்லாத்தானே இருந்தான்.... இப்போ மட்டும் என்ன ஆச்சு...?" புலம்பலோடு வந்த பார்வதியின் குரலில் கலைந்தவள், தாய் தன்னிடம் எதையும் கேட்கும் முன்னர் தன் அறைக்கு விரைந்தாள்.

படிக்க வேண்டிய பாடங்கள் கண்முன் விரிய, தன் மன உணர்வுகளை சற்று ஒதுக்கிவிட்டு படிப்பில் கவனம் செலுத்த முயன்றாள். ஆம்.... அவளால் முயல மட்டுமே முடிந்தது.... மனமோ அவள் நிற்கச் சொன்ன இடத்தில் நிற்கவில்லை.

மாறாக.... நவீனையே சுற்றி வந்தது. 'அவனிடம் பேசியே ஆக வேண்டும்.... மன்னிப்பை வேண்டியே தீர வேண்டும்...', முடிவெடுத்த பிறகுதான், அவளால் சற்று நிம்மதியாக உணரவே முடிந்தது.

இங்கே.... நவீனும் மனதுக்குள் புழுங்கிப் போனான். அவன் கல்லூரியில் அடியெடுத்து வைத்த பொழுதே.... வருணாவின் மேல் விருப்பம் கொண்டுவிட்டான். எத்தனையோ முறை அதை அவளிடம் சொல்ல முயல, ஒவ்வொரு வேளையும்.... அவள் தன் மனதை காயப்படுத்துவதை வேதனையாய் உணர்ந்தான்.

அதிலும்.... தன் நிறத்தைப் பற்றிய அவளது பேச்சு.... எப்பொழுதும் அவனை அதிகமாகவே காயப்படுத்தும். அறியாத வயதில் அதை அவள் செய்தபொழுது சாதாரணமாக எடுக்க முடிந்த அவனால்..... முதல் முறையாக, தன் தோழிகளுக்கு முன்னால் அதைச் செய்தபொழுது உள்ளுக்குள் சற்று ஒடுங்கித்தான் போனான்.

தன் காதல் நிறைவேறவே போவதில்லை என்ற பயம் கொண்டது அப்பொழுதுதான். அதன் பிறகே.... வீணாக தன் மனதுக்குள் ஆசையை வளர்த்துகொள்ளக் கூடாது என எண்ணியவன், சாதாரணமாக அவளிடம் உரையாடுவது கூட, தன் காதலை முளைவிட்டு வளரச்செய்யும் என அஞ்சியவனாக அவள் முகம் பார்ப்பதையே தவிர்த்தான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, நகுலின் விபத்தின்பொழுது அவளிடம் பேச, அவள் குரலில் இருந்த பரிதவிப்பில் அவன் மனம் நனைந்தது மட்டும் அப்பட்டமான உண்மை.

மருத்துவமனையின் சூழலும், சூடுகண்ட பூனையின் நினைவுமாக, அவளிடம் பேசுவதை தவிர்த்திருக்க, அவளிடம் வெளிப்பட்ட தவிப்பும், தன்னிடம் அவள் பேச எடுத்துக்கொண்ட முயற்சியும் அவன் பூட்டி வைத்திருந்த மனதின் கதவை திறக்க வைத்திருக்க, வீட்டில் சந்தித்த வேளையில்.... அவள் தன்னை அழைத்த விதத்தை ஏற்கவே முடியவில்லை.

ஒரு மனமோ.... தான் வீட்டில் இருந்து கிளம்பிய வேளையில், அதிர்ந்து நின்ற அவள் தோற்றத்தை

அவனுக்கு நினைவூட்ட, அதே நேரம், ஒவ்வொரு முறையும் எதிர்பார்த்து ஏமாந்த வலி அவனை அலைக்கழிக்க, பிடிவாதமாக அதை ஒதுக்கித் தள்ளினான்.

அலுவலகத்துக்குள் அவன் நுழைய, அவனை வரவேற்றது நகுலின் சோர்ந்து போன முகமே. அவனைப் பார்த்தவுடன், முற்றாக தன் நினைவை ஒதுக்கியவன், நண்பனின் தோள் தொட்டான்.

"என்னடா.... இன்னுமா நீ அதையே நினைச்சுட்டு இருக்க. கொஞ்சமாவது எதார்த்தத்தை புரிஞ்சுக்க முயற்சி பண்ணு நகுல்..." அவனை உலுக்கியவன், அவன் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து, டேபிள்மேல் இருந்த தண்ணீரை எடுத்து வாயில் சரித்துக் கொண்டான்.

"ம்ச்.... என்னைபத்தி நல்லா தெரிந்த நீயே இப்படிச் சொன்னால்.... சரி என்னைப்பற்றி விடு.... நீ எங்கே போயிட்டு வர..." கவலையாக உரைத்தவன், அவனிடம் கேட்டான்.

"உன்னைப் பத்தி விடுறதா? இப்போ பிரச்சனையே உன்னைப் பற்றி தான். நீ உன் மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்க? நானும், நீ இன்னைக்கு சரியாயிடுவ.... நாளைக்கு சரியாயிடுவன்னு பார்த்தால்.... நீ எதார்த்தத்தை ஏத்துக்குற மாதிரியே தெரியலை.

"உனக்கு வயசு ஏறுதா இல்லை இறங்குதா? அம்மாவும் உன்மேல் இருக்கும் பாசத்தில் இவ்வளவு நாள் விட்டுக் கொடுத்துட்டாங்க. ஆனா இப்போ.... எங்கே நீ இப்படியே இருந்துடுவியோன்னு அவங்க கவலைப் பட ஆரம்பிச்சுட்டாங்க.

"அவங்க கவலையிலும் நியாயம் இருக்கத்தானே செய்யுது. இப்போ அவங்களுக்கு புதுக் கவலை வேற.... மகளுக்கு மாப்பிள்ளை பாத்து கட்டி வச்சுட்டா.... எங்கே நீ பிடிவாதமா இப்படியே இருந்துடுவியோன்னு தவிக்கிறாங்க.

"உனக்கு பாக்கலாம்ன்னா.... நீ இப்படி இருக்க. உன்கிட்டே கேக்கவும் முடியாமல், எங்கே கேட்டால்.... எல்லா அம்மாவும் செய்யிற மாதிரி, பிளாக்மெயில் மாதிரி ஆயிடுமோன்னு கவலைப்படுறாங்க. உலகத்தில் இப்படி ஒரு அம்மாவை நான் பாத்ததே இல்லடா.

"அந்த அம்மாவுக்கு நீ செய்யிற நன்றி இதுவா? உன் குடும்பத்தை விட, எவளோ ஒருத்தி உனக்கு உசத்தியா போயிட்டாளா?" கோபமாக இரைந்தான். நவீனுக்கும் இப்படிப் பேசுவது மிகுந்த வருத்தமாகத்தான் இருந்தது.

அதுவும் ஒற்றை ஆளாகப் போராடி.... நண்பனை மரணத்தின் பிடியில் இருந்து மீட்டிருக்கிறாள் என்பதில் அவள்மேல் அவனுக்கும் மிகப்பெரும் நன்றி உணர்ச்சி பெருகியதுதான். அதற்காக..... நண்பன் எதிர்காலத்தையே கேள்விகுறி ஆக்குவதில் அவனுக்கு உடன்பாடு இல்லை.

"ஆமா.... அவ எனக்கு உசத்தி தான். என் குடும்பம் எனக்கு உயிர்ன்னா.... இப்போ இந்த உசுரைக் காப்பாத்திக் கொடுத்ததே அவடா. அப்படியிருக்கும்போது.... என்னால் எப்படி முடியும்?" வேதனையாக உரைத்தான். நகுலுக்கும் நண்பனைப் பற்றி தெரியாதா என்ன.... எனவே அவனிடம் கோபப்பட முடியவில்லை.

"டேய் நகுல்.... கொஞ்சம் நல்லா யோசிச்சுப் பார்.... அவ உனக்குதான்னு கடவுள் எழுதியிருந்தால் அவளை உன் கண் முன்னாடி நிருத்தியிருப்பாரே. நீயும் இத்தனை மாசமா.... கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகுது.... நீயும் அவளை தேடாத இடமில்லை.

"அவ இன்னும் உன் கண்ணுக்கு கிடைக்கலன்னா.... கண்டிப்பா இந்த உண்மையை நீ ஏத்துக்கத்தான் வேணும். உன் தங்கையை கொஞ்சம் யோசிச்சு பார்.... இப்போ அவளுக்கு மாப்பிள்ளை பார்த்தால் கூட.... நூறில் ஒன்றா.... அவளுக்கு பாக்குற மாப்பிள்ளைக்கே ஒரு தங்கை இருந்து,

பொண்ணெடுத்து பொண் கொடுக்குற மாதிரி இருந்தால்...? அப்போ என்ன செய்வ...?

"இல்ல.... முகம் தெரியாத அவளை தேடிகிட்டு இருக்கேன்னு சொன்னால், உன்னை பயித்தியக்காரன்னு சொல்ல மாட்டாங்க...? கொஞ்சம் யோசிடா..." நண்பனை இப்படியே விட முடியாதே என்ற அக்கறையில் பேசினான்.

நகுலின் தங்கையின் திருமணத்தைப் பற்றி சாதாரணம்போல் அவனிடம் பேசினாலும், மனதுக்குள் ஒளித்து வைத்திருப்பவளது திருமணத்தைப் பற்றி பேசுவது அவனுக்கு ஒன்றும் அவ்வளவு சாதாரணமாக இருக்கவில்லை.

அவன் முகத்தில் அந்த நேரம் விரவிய வருத்தத்தின் சாயலை நகுல் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்திருந்தால் கூட நன்கு உணர்ந்திருப்பான். ஆனால் அவன்தான் தன் நினைவிலேயே மூழ்கி இருந்தானே.... அதுவே நவீனுக்கும் வசதியாகப் போயிற்று.

அவன் பேச்சுப்படியே நடக்கும் என்பது இல்லையென்றாலும்.... தன் தங்கையின் திருமணத்தில்.... இத்தனை வயது மூத்தவனான தன்னைப் பற்றிய பேச்சு பெரிதாக கிளம்பும் என்பதில் அவனுக்கு மாற்று கருத்து எதுவும் இருக்கவில்லை.

தன்னைப் பெற்றவர்களுக்கு, தன்னால் ஒரு தலை குனிவையோ.... மற்றவர்கள் முன்னால் பதில் சொல்லும் இடத்திலேயோ நிறுத்துவதை அவன் விரும்பவில்லை. அதே நேரம்.... தன் தேடலையும், ஆசையையும் ஒதுக்கித் தள்ளவும் முடியாமல் திணறிப் போனான்.

சட்டென ஒரு யோசனை பளிச்சிட.... "நவீன்.... பேசாமல் நீயே என் தங்கையை கல்யாணம் பண்ணிக்கிட்டால் என்ன? நிச்சயம் உங்க அப்பா இதுக்கு தடை சொல்லவே மாட்டாங்க. ப்ளீஸ்டா மச்சான்..." அவன் கையை பற்றிக் கொண்டான்.

நகுல் கேட்ட அந்த நிமிடம்.... சந்தோஷத்தில் தன் இதயம் துடித்த துடிப்பை எங்கே நகுல் கண்டுகொள்வானோ என்ற பயத்தில், கையில் இருந்து நழுவி விழுந்த பேனாவை எடுக்கும் சாக்கில் குனிந்து கொண்டவன், அந்த நொடி மகிழ்ச்சியை ஆழ்ந்து அனுபவித்தான்.

அது சில வினாடிகள் மட்டுமே. அடுத்த நிமிடமே.... வருணாவின் பேச்சுக்கள் நினைவிற்கு வர, முகம் இறுக நிமிர்ந்தவன், "என்னடா பேசுற? வேண்டாம்.... இது சரி வராது..." நண்பனின் குரல் வழக்கமே இல்லா வழக்கமாக இறுகிப் போய், அவசரமாக ஒலிக்க, அப்பொழுதுதான் அவனை கூர்ந்து பார்த்தான்.

நவீனும் உடனடியாக தன் யோசனைக்கு ஒத்துகொள்வான் என அவன் எண்ணவில்லைதான். ஆனால்..... அவன் அதை உரைத்த வேகம்.... நகுலின் புருவத்தை உயரச் செய்தது.

‘ஏன் இப்படி...? அதுவும் அவளை பிடிக்காத முக பாவனை அவன் முகத்தில் இல்லை. அதே நேரம்.... எதுக்கு இப்படி வெதும்பின மாதிரி இருக்கான்...? நான் என் யோசனையிலேயே மூழ்கி இவனை கவனிக்க மறந்துட்டேனா? ஒரு அண்ணனா தப்பு பண்ணிட்டனோ...?’, முதல் முறையாக சிந்தித்தான்.

நவீனோ.., அவனை ஏறிட்டு பார்க்காமல், கையில் இருந்த பேனாவிலேயே கவனமாக இருந்தான். அவன் செய்கை வித்தியாசமாக இருக்க.... "நவீன்.... என்னைப் பார்.... நீ இப்போ சொன்னதை, அப்படியே என் முகத்தைப் பார்த்து சொல்லு..." அவன் கையில் இருந்த பேனாவை பிடுங்கி மேஜை மேல் போட்டவன்.... அழுத்தமாக அவனிடம் வினவினான்.

நகுலின் முகத்தைப் பார்க்க சற்று தயங்கினாலும்.... "நான் உண்மையைத்தான் சொல்றேன் நகுல். நாம ஆயிரம் விஷயம் ஆசைப்படலாம்.... ஆனா.... கடவுள் என்ன

நினைக்கிறார் என்பதுதானே முக்கியம்..." வலி கலந்து உரைத்தான்.

"நாம பேசுற விஷயத்துக்குள கடவுள் எங்கே இருந்துடா வந்தார்?" அதிர்ச்சியாக கேட்க,

"கடவுள் வரவில்லை என்றாலும்.... உன் தங்கை இருக்கிறாள் என்பது உண்மை தானே.... வேண்டாம் நகுல்.... இந்த விஷயத்தைபத்தி நீ பேசி.... அதை அவள் மறுத்து.... ப்ளீஸ் நகுல்.... என்னால்..." தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மீறி, அவன் கண்கள் கலங்கியே விட்டது.

"டேய்.... என்னடா இது.... சின்னப்பிள்ளை மாதிரி.... உன் மனசுக்குள்ளே வருணா இருக்காளா...? உண்மையைச் சொல்லுடா..." இருக்கையில் இருந்து எழுந்து நண்பனை தோளோடு அணைத்து உலுக்கினான்.

"ப்ளீஸ் நகுல்.... இதை இத்தோட விட்டுடு.... ஒவ்வொருத்தருக்கும் தனிப்பட்ட ஆசை, விருப்பம் ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் புரிஞ்சுக்காமல் ஆசையை வளத்துக்கறது நாம செய்யிற தப்பு, முட்டாள்த்தனம்.

"ஒரு கட்டத்தில் நமக்கு அது புரிய வரப்போ.... வலித்தாலும் பரவாயில்லன்னு ஒதுங்கிப் போய்டணும்.... அதை விட்டு.... வலிய போனால், வலியும் அவமானமும்தான் மிஞ்சும். நீயும் உன் மனசை மாத்திக்கிற வழியைப் பார்..." உறுதியாக உரைத்தவன், இருக்கையில் இருந்து விருட்டென எழுந்து சென்றான்.

அவன் அவ்வாறு செய்யவே..... 'நிச்சயம் அவன் மனதுக்குள் எதுவோ இருக்கு. இவன் வருணாவை விரும்புவதை அவகிட்டே சொல்லிட்டானா? வருணா ஏதாவது விளையாட்டுத்தனமா செய்து அவனை காயப்படுத்திட்டாளா?', யோசிக்க யோசிக்க, அவனுக்கு தலையை வலிப்பது போலிருந்தது.

மருத்துவர் வேறு.... அவனை அதிகம் யோசிக்கக்கூடாது என சொல்லியிருந்ததால், அதை விடுத்தவன், இதைப்பற்றி நிச்சயம் வீட்டில் பேசியே ஆகவேண்டும் என முடிவெடுத்தான். அதற்கு முன்னர்.... வருணாவிடம் பேச விரும்பினான்.

அவளுக்கு கல்லூரி இறுதி வருட செமஸ்டர் நடப்பதால்.... அது முடிந்தவுடன் பேசுவது என முடிவெடுத்தவன், அது வரைக்கும் அந்த விஷயத்தை ஆறப் போட முடிவெடுத்தான்.

****தன்னை கேன்டீனுக்கு வரச் சொன்ன வேந்தன்.... எதற்காக அழைத்திருப்பான் என்ற எண்ணத்திலும், அது ஏற்படுத்திய படபடப்பிலும், கை விரலின் நகங்களை கடித்து துப்பியவாறு அமர்ந்திருந்தாள் அனன்யா.

"ஹேய் அனு.... ஐ'ம் சோ ஹேப்பி..." திடுமென ஒலித்த வேந்தனின் குரலும், அதைத் தொடர்ந்து, இருக்கையின் பின்புறமிருந்து, அவள் கழுத்தை கட்டிக்கொண்ட அவன் செய்கையும் மிகப்பெரும் அதிர்வை ஏற்படுத்த, திடுக்கிட்டு, இருக்கையிலிருந்து எழுந்தே விட்டாள்.

"ஹையோ வேந்தன்.... என்ன பண்றீங்க...?" அவன் கரத்தை விலக்கியவள், அவன் பக்கம் திரும்பி, முறைத்தாள்.

"எத்தனை முறை சொல்லியிருக்கேன்.... இப்படி தொட்டு பேசாதீங்கன்னு.... கேக்கவே மாட்டீங்களா...? சரி சொல்லுங்க.... எதுக்கு என்னை வரச் சொன்னீங்க? உங்களால் காலேஜ் பஸ் வேற போய்டுச்சு.... ஏற்கனவே நான் தனியா போணுமேன்னு கவலையில் இருக்கேன்.... இதில் நீங்க வேற..." அவளை சீக்கிரமே வரச் சொல்லிவிட்டு, ஒருமணிநேரத்துக்கு மேலாக அவளை காக்க வைத்துவிட்டு வந்த அவன்மேல் அவளுக்கு கோபம் பொங்கியது.

"அனு, நான் எவ்வளவு பேசிய ஹேப்பி நியூஸ் சொல்லலாம்னு வந்தால், என் மூடையே ஸ்பாயில்

பண்றியே. இப்போ என்ன.... உனக்கு லேட் ஆனால் உன்னை நான் டிராப் பண்ணிட்டு போறேன். அதுக்கு ஏன் இவ்வளவு கோபம்...." அவளைத் தொட்டதற்காக அவள் சாடியதைப் பார்த்து, உள்ளுக்குள் எரிந்தாலும், அதை கண்டுகொள்ளாமல் சாதாரணமாக உரையாடியவன், அவள் இருக்கைக்கு பக்கத்தில் அமர்ந்தான்.

"ஹேப்பி நியூஸா...? என்ன...?" அவளும் தனக்குள் தொற்றிகொண்ட ஆர்வத்தோடு வினவினாள்.

"ஐயாவுக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைத்திருக்கு. மாசம் இருபத்தஞ்சாயிரம் சம்பளம்.... அதுக்குபிறகு என் திறமையைப் பார்த்துட்டு, ஒரே வருஷத்தில் ப்ரோமோஷனோடு.... இங்கிரிமெண்டும் உண்டு. நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன்னு தெரியுமா...? இந்த சந்தோஷமான விஷயத்தை உன்கிட்டே சொல்ல வந்தால்..." அவன் போலியாக கோபம் கொண்டு முகத்தை திருப்பிக் கொண்டான்.

"வேந்தன்.... நிஜமாவா சொல்றீங்க? வேலை கிடைச்சுடுச்சா? எங்கே? என்ன கம்பெனி.... கங்கிராட்ஸ்..." அவன் கரத்தைப் பற்றி குலுக்கினாள்.

அவள் கேள்விகளுக்கான பதிலை உரைத்தவன், "டெல்லிக்குப் போகணும், அதுதான்.... உன்னைப் பார்க்காமல் எப்படி இருப்பேன்னுதான் தெரியலை. என்னை மறந்துட மாட்டியே..." அவள் கரத்தை பற்றிக் கொண்டான்.

அவளுக்குமே அவன் டெல்லி போகிறேன் எனச் சொன்னது வருத்தத்தை அளிக்க, அமைதியாக அமர்ந்துகொண்டாள். அதே நேரம்.... படிப்பு முடிந்தவுடன் அவளுக்கு வரன் பார்க்கவேண்டும் எனச் சொன்ன தந்தையின் பேச்சு நினைவிற்கு வர, மனதுக்குள் இனம் புரியாத பயம் சூழ்ந்தது.

"ஏன் வேந்தன்.... நம்ம கல்யாணம்...?" அவள் தயக்கமாக வினவ, "ம்ச்.... என்ன பேசற அனு...? நமக்கென்ன வயசா ஆயிடுச்சு? எனக்கு இப்போதான் வேலை கிடைத்திருக்கு.... அட்லீஸ்ட் என் ஒரு தங்கைக்காவது கல்யாணம் முடிக்காமல், இதைப்பற்றி நான் வீட்டில் பேசவே முடியாது" அவன் உரைக்க, அவன் சூழ்நிலை அவளுக்கும் புரிய அமைதியானாள்.

"ஏன்.... உனக்கு வீட்டில் வரன் பார்க்கிறார்களோ? எனக்காக அட்லீஸ்ட் ஒரு ரெண்டே வருடம் உன்னால் காத்திருக்க முடியாதா? இல்லன்னா.... உனக்குமே.... என்னை விட்டு வேறு திருமணம் செய்யும் ஐடியா இருக்கா? எதுவாக இருந்தாலும் சொல்லிவிடு..." ஒரு மாதிரி குரலில் அவன் உரைக்க, அனன்யாவுக்கு கோபம் கிளர்ந்தது.

"என்னால் ஏமாற்றத்தை எல்லாம் தாங்கிக்கொள்ள முடியாது அனு. நீ இல்லன்னா.... நான்.... நான் ஒண்ணுமே இல்லாமல் போய்டுவேன்..." அவள் கோபத்தை காட்டப் போகையில் அவனது இந்த பேச்சு, வழக்கம்போல் அவளை தேக்கியது.

ஆனாலும்.... இரண்டு வருடம் என்பது அவளைப் பொறுத்தவரைக்கும் சிறு விஷயமாக இருந்தாலும், அண்ணனது மரணத்துக்குப் பிறகு, அவளுக்காக மட்டுமே வாழும் பெற்றவர்களை நினைக்கையில் மலைப்பான விஷயமாகவே இருந்தது.

அதை இவனுக்கு யார் சொல்லி புரிய வைப்பது? சொன்னாலும், அதற்கும் ஆயிரம் பேசுவான்.... அலுப்பாக எண்ணியவள், "நீங்க உங்க கடமையை முதல்ல முடிச்சுட்டு வாங்க வேந்தன். நான் வீட்டில் பேசுறேன்" அவனுக்கு நம்பிக்கை அளித்தாள்.

"தேங்க்ஸ் அனு.... எனக்குத் தெரியும், நீ என்னை புரிஞ்சுப்பன்னு.... இனிமேல் எப்போ மீட் பண்ணுவோம்னு

தெரியலை.... சோ.... ஏதாவது காம்ப்ளிமென்ட்..." அவள் இதழ்களைப் பார்த்தவாறு அவன் வினவ,

"எல்லா காம்ப்ளிமெண்டும் கல்யாணத்துக்குப் பிறகுதான். முதல்ல அதுக்கு வழியைப் பாருங்க.... நான் இப்படியே ஏதாவது ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குக் கிளம்பறேன். உங்க ப்ரண்ட்ஸ் வராங்க.... நீங்க போங்க..." அங்கே வந்த அவனது நண்பர்களுக்கு மனதுக்குள் நன்றி சொன்னவளாக தன் வீடு நோக்கி சென்றாள்.

ஆட்டோவில் அவள் பயணிக்க, மனமோ.... வேந்தன் அவனைப் பற்றி மட்டுமே சிந்திப்பதையும், தன் பக்கம் இருக்கும் நியாயத்தை ஒரு முறை கூட சிந்திக்க மறுப்பதையும் எண்ணி வேதனை அடைந்தாள்.

அவன் கடமை எவ்வளவு முக்கியம் என இப்பொழுது பேசுபவன்.... அன்று எப்படி தன்னிடம் காதலைச் சொன்னான்...? சிந்தையை அத்தோடு நிறுத்திக் கொண்டாள். முதல் முறையாக, தன் காதல் என்னவாகும் என்ற பயம் தோன்றி அவளை அலைக்கழித்தது.

6

வருணாவுக்கு செமஸ்டர் முடிந்து, உல்லாசப்பயணமாக தன் தோழிகளோடு ஒரு வாரம் ஊட்டிக்கு, தங்கள் எஸ்டேட்டில் தங்கிவிட்டு வந்து விட்டாள்.

அவளிடம் பேச சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் நகுலன். அந்த சந்தர்ப்பமும் அன்று மாலையே அவனுக்கு கிடைத்தது. அதையும் அவனே ஏற்படுத்தினான்.

மாலையில் சற்று சீக்கிரமாக வீட்டுக்கு வந்தவன், தன் அலைபேசியில் உரையாட, அதை எதேச்சையாகக் கேட்ட வருணா அதிர்ச்சி அடைந்தாள். அதாவது.... அவள் மனதுக்குள், அவளை அறியாமலேயே குடியமர்ந்த நவீன் பெண் பார்க்கப் போயிருப்பதை அறிந்தால் அவள் சந்தோஷமா அடைவாள்?

தங்கையின் அதிர்வை ஓர விழியில் கவனித்தவாறே.... "ஏண்டா மச்சான், பொண்ணு செமையா இருக்குன்னு சொல்லிட்டு, இப்போ அந்த பொண்ணை புடிக்கலன்னு அப்பாகிட்டே சொல்லிட்டியாமே.... ரொம்ப வருத்தப் பட்டாங்க..." அவன் அடுத்து பேசிய எதுவுமே அவள் காதில் விழவில்லை.

நவீன் பெண் பார்க்கப் போயிருந்தான் என்ற விஷயமே ஒருவித அதிர்வைக் கொடுக்க, "ஏண்டா நவீன்.... அன்னைக்கு நான் கேட்ட விஷயத்தை கொஞ்சமாவது மறு பரிசீலனை செய்தாயா? உன் பக்கம் ஓகே என்றால்.... நான் என் வீட்டில் பேச வசதியா இருக்கும். வருணாவுக்கும் வயசாகுதே...." நகுலின் இந்த வார்த்தைகள்.... வருணாவை நின்ற இடத்திலேயே வேரூன்ற செய்தது.

‘அண்ணனின் கேள்விக்கு நவீன் என்ன பதில் சொல்வான்?’ ஒருவித எதிர்பார்ப்போடு அவள்

காத்திருக்க....

"ம்ச்.... இதென்னடா பதில்? அவளை பிடிக்கவில்லை என்று சொன்னாலாவது பரவாயில்லை.... ஒத்துவராது எனச் சொல்வது என்ன பதில்...? ஜஸ்ட்.... அவகிட்டே ஒரு வார்த்தை பேசிப் பாரேன்..." நகுல் நண்பனிடம் கெஞ்ச.... வருணாவின் கால் தள்ளாடியது.

அதையும் பாராததுபோல் பார்த்தவன், 'அப்போ.. ரெண்டுபேருக்கு நடுவில் ஏதோ ஒண்ணு இருக்கு...' தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

மனதின் நினைப்பை அப்படியே ஒதுக்கியவன்.... "வருணாவை பிடிக்கவில்லை என்று நேரடியா சொல் பார்ப்போம்...?" நகுலின் கேள்விக்கு, நவீன் என்ன பதில் சொல்வான்...? வருணாவின் இதயம் தாறுமாறாக துடிக்க.., மனமோ...

'அப்படியென்றால்..... நவீன் என்னை தவிர்க்க நினைக்கிறானா? என்னை திருமணம் செய்துகொள்ள அண்ணன் கேட்டும் மறுத்துவிட்டானா? ஏன்? அப்போ... அவனுக்கு என்னைப் பிடிக்காதா? நிஜமாகவா?' அவளால் அந்த நினைவை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

சட்டென தன் கன்னம் நனையும் உணர்வில், அவள் கரம் தானாக உயர்ந்து அதை துடைத்த பிறகுதான்.... தான் அழுவதையே உணர்ந்தாள். அதே நேரம்.... நகுல் தன் பேச்சை முடித்துக்கொண்டு திரும்புவதுபோல் இருக்க, வேகமாக அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

கண்கலங்கச் செல்லும் தன் தங்கையைப் பார்த்த நகுல், ஒரு பெருமூச்சோடு தன் அலைபேசியை பார்வையிட்டவன்.... அழைக்கப்படாத அந்த பேச்சு.... தன் தங்கையையும், நவீனையும் ஒரு முடிவிற்கு வர வைத்தால் நன்றாக இருக்கும் என எண்ணிக் கொண்டான்.

‘இருவருக்குள்ளும் அப்படி என்னதான் நடந்திருக்கும்? இவளது அழுகையும், அவனது இறுக்கமும்.... ஒரு முடிவிற்கு வர விடாமல் தவிக்க வைக்குதே. இதனாலேயே வீட்டிலும் பேச முடியலை...’ சிந்தையின் காரணத்தால் தலை வலிப்பதுபோல் இருக்க, தன் தாயைத் தேடிச் சென்றான்.

வருணாவோ அறைக்குள் அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்தாள். இதுவரை நவீன் தன்னிடமோ.... தான் அவனிடமோ ஒருவர் மீது ஒருவர் விருப்பம் என வாய் வார்த்தையாலோ, கண் ஜாடையாலோ தெரிவித்ததில்லை என்றாலும், ஒருவர் மீது மற்றவருக்கு ஒரு நாட்டம் இருப்பதாகவே அவள் எண்ணினாள்.

அவனது கோபமும், விலகலும்.... பார்வையும் இதுவரை அவளுக்கு அதைத்தான் உணர்த்தியிருக்கிறது. அப்படி இருக்கையில் தன் அண்ணனின் கேள்விக்கு, அவன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டியவன், தவிர்ப்பதன் காரணம்...? ஒரு வேளை என் உள்ளுணர்வு சொல்வது அனைத்தும் பொய்யா? அவளால் தாங்கவே முடியவில்லை.

இதற்கு ஒரு தீர்வை கண்டே ஆக வேண்டும்.... அவனிடம் பேசியே ஆகவேண்டும் என முடிவெடுத்த பிறகுதான் அவளால் கொஞ்சமாவது இயல்பாக முடிந்தது.

ஆனாலும்.... இரவு உணவை மருந்தைபோல் விழுங்கும் நிலையையோ, சாப்பாட்டு மேஜையில் வருந்தி.... வார்த்தைகளுக்குப் பஞ்சமாகி திணறி திண்டாடும் நிலையையும், தன்னை இயல்பாக காட்டிக்கொள்ள இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதையும் அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

"வருணா.... என்னடி ஒரு மாதிரி இருக்க...? அலைச்சல் ஒத்துக்கலையா? தலை வலிக்குதா?" பார்வதி கேள்வியும் நானே, பதிலும் நானே என அவளுக்கு கை கொடுக்க,

அதையே கெட்டியாக பற்றிக்கொண்டு தன் அறைக்குள் வந்து முடங்கிக் கொண்டாள்.

அவள்மீதே கவனமாக இருந்த நகுலுக்கு தங்கை படும் துன்பம் புரிந்தாலும், இதில் தான் செய்வதற்கு எதுவும் இல்லை என்பதால் அமைதியாகவே அமர்ந்து கொண்டான்.

தங்கையின் நினைவில்.... அவனது மன உணர்வுகள் கூட சற்று பின்னுக்கு தள்ளப்பட்டது மட்டும் உண்மை.

மறுநாள் காலையின் வழக்கமாக தன் அலுவலகம் கிளம்பிச் சென்றவன், தன் வேலையில் மூழ்கியதாக காட்டிக் கொண்டாலும், நவீனின் பார்வை அடிக்கடி தன்னை தொட்டு மீள்வதை உணர்ந்தே இருந்தான்.

அன்று வருணாவைப் பற்றி நண்பனிடம் பேசியவன்தான்.... அதற்குப் பிறகு அந்த பேச்சையே தவிர்த்தான். நூறில் ஒரு பங்காகவேனும் நவீனுக்கு வருணாவின்மேல் விருப்பம் இருந்தால், நிச்சயம் பேசாமல் இருக்க மாட்டான் என எண்ணினான்.

அதேபோல் அவனது நடவடிக்கைகள் இருக்க, மனதுக்குள் சிரித்துக் கொண்டான். அதே நேரம்.... தங்கள் அறையின் ஓரத்தில் இருந்த சிசி டிவியின் திரையில், வருணா அலுவலகத்துக்குள் நுழைவதைப் பார்த்தவன், அவர்கள் தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும் என எண்ணியவனாக,

"நவீன்.... நான் அசோக்கை மீட் பண்ணிட்டு வரேன்.... நீ இங்கே பாத்துக்கோ..." சொல்லிவிட்டு, அவன் பதிலை எதிர்பாராமல் கிளம்பிவிட்டான்.

அலுவலகத்துக்குள் நுழைந்த வருணாவோ.... தன் அண்ணனிடம் என்ன சொல்லி சம்மாளிப்பது என எண்ணியவளாக வந்துகொண்டிருக்க, அவனோ, மற்றொரு வாசல் வழியாக வெளியேறியிருந்தான்.

அறையில் தன் அண்ணன் இருந்தாலும், நவீனிடம் ஒரு நிமிடம் பேசவேண்டும் என தயக்கமின்றி சொல்லிவிடவேண்டும் என்ற உறுதியோடும், நிச்சயம் அவன் தன்னை புரிந்துகொள்வான் என்ற நம்பிக்கையோடும் அவன் அறையை நெருங்கினாள்.

தயக்கமாக அவனது அறையை நெருங்கியவள், ஒற்றை விரலால் கதவைத் தட்டிவிட்டு, கதவைத்திறந்துகொண்டு உள்ளே செல்ல, கண்கள் முதலில் தன் அண்ணனின் இருக்கையைத்தான் நோக்கியது. அங்கே அவன் இல்லாமல், மனதில் ஒரு நிம்மதியும், சிறு குற்றவுணர்வும் ஒருங்கே எழுந்தது.

அங்கே அந்த நேரம் அவளை எதிர்பாராத நவீன், ஒரு நொடி தடுமாறிப் போனான். கண்கள் அவளை ஆர்வமாக நோக்க, சட்டென அதை மறைத்தவனாக, "நகுல்.. இப்போதான் வெளியே போனான். அவன்கிட்டே ஏதாவது சொல்லணுமா...? வேண்ணா கால் பண்ணவா...?" வேகமாக தன் அலைபேசியை எடுத்தான்.

"என் அண்ணாகிட்டே பேச நான் இவ்வளவு தூரம் வர வேண்டிய அவசியமே இல்லை..." மறைமுகமாக உன்னிடம்தான் பேச வந்தேன் என அவள் உரைக்க, அவள் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தில், நம்ப முடியாத ஆச்சரியத்தில் அவளை ஏறிட்டான்.

அவன் பார்வையை தயங்காமல் ஏறிட்டவள், வார்த்தையற்ற மௌனத்தில் அவனையே வெறித்தாள். ஏதோ ஒரு வேகத்தில் கிளம்பி வந்து விட்டவளுக்கு, இப்பொழுது அவனிடம் எதை எப்படிக் கேட்கவென்று அவளுக்குத் தெரியவில்லை.

ஒரு ஆண் மகனாக அவன் செய்யவேண்டியதை, ஒரு பெண்ணாக இருந்து கொண்டு தன்னால் செய்ய முடியாது என்று இப்பொழுது தோன்ற, கண்கள் தானாகவே கலங்கியது.

அவளிடமிருந்து வார்த்தைகள் வருமென்று அவன் காத்திருக்க, அவளது மௌனமான பார்வையும், சட்டென கலங்கிய கண்களும்.... பதைத்துப் போனவனாக இருக்கையிலிருந்து எழுந்தே விட்டான்.

‘ஒரு வேளை.., அவள் அண்ணனிடம் கூட சொல்ல முடியாத விஷயமாக இருக்குமோ...? யார் மீதும்...’, யோசனையை அதற்குமேல் நீட்டிக்க தைரியமற்றவனாக, "வரு...ணா.... ஏய்.... என்ன...? எதுக்கு இப்போ அழற...?" இருக்கையை தள்ளிவிட்டு ஒரே பாய்ச்சலில் அவளை நெருங்கினான்.

அவன் முன்னால் கண் கலங்கிய தன்னையே வெறுத்தவளாக, சட்டென அவனுக்கு தன் முகத்தைக் காட்டாமல், முகம் திருப்பியவளாக அவள் நிற்க, தன் வேகத்தை கட்டுப்படுத்தியவன், அசையாமல் நின்றுவிட்டான்.

ஆனாலும்.... அவள் கண் கலங்குவதை தாங்க முடியாமல், "என்ன.... ஏதாவது பிரச்சனையா...? சொன்னால் தானே தெரியும்..." சற்று தவித்துதான் போனது அவன் குரல்.

அவனுக்கு முதுகு காட்டியவளுக்கு அவன் தன்னை ‘வரு’ என அழைத்து பின்னர் வருணா என நிறுத்தியது அந்த நேரத்திலும் பெரிய ஆறுதலைக் கொடுக்க, இமை கொட்டி தன் கண்ணீருக்கு அணை போட்டாள்.

அவன் தவிப்பு அவளைத் தாக்க.... அப்படியே அவன் நெஞ்சில் சாய்ந்து.... ‘என்னை ஏன் வேண்டாம் எனச் சொன்னாய்...?’ என கேட்டுவிடும் வேகம் எழுந்தாலும், பெண்மைக்கே உரிய தயக்கம் அவளைக் கட்டிப் போட, விருட்டென அவன் பக்கம் திரும்பியவள், அவனை ஆழமாக ஒரு பார்வை பார்த்தாள்.

வந்தது முதல், அவளது செய்கைகளுக்கான காரணம் புரியாமல் தடுமாறியவன், இந்த பார்வைக்கான பொருள் புரிந்தும் புரியாமல், திணறிப் போனான்.

ஆனால்.... அந்த பார்வைக்குள் சிக்கிக்கொள்ள அவன் புலன்கள் அனைத்தும் போராட, "வரு..." இருவருக்கான இடைவெளியை அவன் குறைக்க, "நான் போறேன்...." உரைத்தவள், அடுத்த நொடி அறையிலிருந்து வெளியேறியிருந்தாள்.

போகும் முன்னர் அவள் பார்த்த பார்வை.... சத்தியமாக அவனால் அங்கே நிற்கவே முடியவில்லை. அது மட்டும் அவனது அலுவலகமாக இல்லாமல் இருந்திருந்தால், அவள் பின்னால் ஓடிபோய்.... அதற்கான பதிலை அறியாமல் இருந்திருக்க மாட்டான்.

இப்பொழுது கூட, அவன் புலன்கள் அனைத்தும் அதை செய்யச்சொல்லி அவனைத் தூண்ட, அதற்கான தைரியமற்றவனாக நின்று கொண்டிருந்தான்.

‘ஏன் வந்தாள்...? எதற்காக வந்தாள்...? ஏன் அழுதாள்...? எதற்காக அழுதாள்..? ஏன் சொல்லாமல் சென்றாள்...? அவள் பார்வைக்கான பொருள் என்ன...? என்னை குற்றம் சுமத்தும் பார்வை.... என்னிடம் கேள்வி கேட்ட பார்வை.... நான் என்ன செய்தேன்...? எதற்காக அப்படிப் பார்த்தாள்...?’ மூளைக்குள் படையெடுத்த கேள்விகளுக்கான பதில்கள் அவனிடம் இல்லை.

‘என்னை ஏளனமாக பார்க்கவில்லை.... கோபமாகப் பார்க்கவில்லை.... ஒருவித தவிப்பு.... கேள்வி.... எதையோ சொல்ல முடியாத தயக்கம்...’ என்ன அது...?’

"டேய் நவீன்.... ஏண்டா இப்படி நிக்கற...? என்ன ஆச்சு...?" நகுல் வந்து உலுக்கும் வரைக்கும், அந்த இடத்தை விட்டு அவன் அசையவே இல்லை.

அதற்குப் பிறகுதான்.... சிலமணி நேரங்களாகவே தான் அதே இடத்தில் நிற்பதையே அவன் உணர்ந்தான். இருக்கும் மனநிலையில், இதற்குமேல் வேலை பார்க்கமுடியும் என அவனுக்குத் தோன்றாததால்.... நகுலிடம் சொல்லிவிட்டு உடனடியாக வீட்டுக்கு கிளம்பிவிட்டான்.

செல்லும் அவன் முதுகையே வெறித்த நகுல்.... ‘உன் குழப்பம், ஒரு தெளிவுக்கு வந்தால் நல்லது.... பார்க்கலாம்...’, எண்ணியவனாக தன் வேலையைத் தொடர்ந்தான்.

என்றைக்கும் இல்லாமல்.... அன்று வீட்டுக்கு சீக்கிரம் வந்த நவீனை புருவம் உயர பார்த்தார் நடேசன். வீட்டு வரவேற்பறையில், தன் அப்பா அமர்ந்திருக்கிறார் என்ற எண்ணம் கூட இல்லாமல், அவர் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து, விட்டத்தையே வெறித்தான்.

அவனது இந்த செய்கையும் வித்தியாசமாக இருக்க, மகனை கேள்வியும், ஆராய்ச்சியுமாக பார்த்தார். என்றைக்கும் வீட்டுக்குள் நுழைந்தவுடன், முதல் வேலையாக அவரிடம் வந்து இரண்டொரு வார்த்தையாவது உரையாடாமல் போகாத மகன், தான் அங்கே இருப்பதையே கண்டுகொள்ளாமல் இருப்பதைப் பார்த்து குழம்பிப் போனார்.

தனக்குள் மூழ்கியிருக்கும் மகனை கலைக்க விரும்பாதவராக, கிச்சனுக்குச் சென்று அவனுக்காக சூடாக காபி கலந்தவர், தானும் ஒரு கப்பை எடுத்துகொண்டு அவன் அருகில் சென்று, அவன் தோளைத் தட்டி, "முதல்ல காபி குடி நவீன்.... மீதியை பிறகு யோசிக்கலாம்..." அவன் கையில் கப்பை திணித்தார்.

மீண்டும் தன் உலகத்தில் இருந்து கலைந்தவன், "அப்பா.... நீங்க எப்போ ஆபீஸ் வந்தீங்க...? காபியெல்லாம்..." வேகமாகக் கேட்டவன், நடேசன் அவனை வித்தியாசமாகப் பார்ப்பதையும், மையமாக சிரிப்பதையும் பார்த்த பிறகுதான்.... தான் இருக்கும் இடத்தை பார்த்தவனாக சட்டென சுதாரித்து, அவரிடமிருந்து கப்பை பெற்றுக் கொண்டான்.

அவரிடம் என்ன சொல்வது.... என அவன் தடுமாற, "முதல்ல காபியை குடி. போய் ரெஃப்ரஷ் ஆகிட்டு வா.... நாம

நிதானமா பேசலாம்..." அவனை சோதிக்காமல், ஆதரவாக பேச, மறுக்காமல் காபியை அருந்தத் துவங்கினான்.

அவன் தாயின் மரணத்துக்குப் பிறகு, அவனுக்கு உற்ற தோழனாக இருப்பவர் அவர். அவரிடம் பேசினாலே பல விஷயங்களுக்கு அவனுக்கு தீர்வு கிடைத்துவிடும். ஆனால்.... இப்பொழுது, தனக்கே இன்னதென்று விளக்க முடியாத ஒன்றை அவருக்கு எப்படி புரிய வைக்கப் போகிறோம் என குழம்பிப் போனான்.

காபியை ஒரே மூச்சில் குடித்தவன், அடுத்த நிமிடம் தன் அறைக்குள் தஞ்சம் புகுந்தவன், அவர் டின்னர் சாப்பிட அழைத்த பிறகுதான் கீழே இறங்கி வந்தான்.

உண்டு முடிக்கும்வரை அங்கே அமைதியே நிறைந்திருக்க, உண்டு முடித்து, சிட்டவுட்டில் இருந்த ஊஞ்சலில் அவர் சென்று அமர, தயக்கமாக, தானும் சென்று உடன் அமர்ந்தான்.

சிறிது நேரம் மௌனமே அங்கே ஆட்சி செய்ய, "என்னப்பா.... அப்படி என்ன குழப்பம்...? எதுவா இருந்தாலும் சொல்.... பேசினால் தீராத பிரச்சனையா..?" ஆதரவாக அவன் தோளில் தட்டினார்.

"அப்பா.... இதை எப்படி எடுத்துக்கன்னு எனக்கே தெரியலப்பா.... அதான்..." வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறினான்.

"என்னப்பா.... யாரையாவது லவ் பண்றியா...?" அவர் கேள்வியில் சட்டென அவரை ஏறிட்டவன், மௌனமாக நிலவை வெறித்தான்.

அவன் பார்வையும், அமைதியுமே அதுதான் என அவருக்கு உணர்த்த, "அப்போ.... இத்தனைநாள் பார்த்த பொண்ணுங்களை எல்லாம் பிடிக்காமல் போனதற்கு இதுதான் காரணமா.... சரி அதை விடு.... உனக்கு அதில்

என்ன பிரச்சனை...?" மகன் மனதில் இருப்பதை வெளியே கொண்டுவர முயன்றார்.

"இது காதல்தானா என்று தெரியாததுதான் பிரச்சனைப்பா...".

"என்னடா குழப்பற...?" அவர் புருவம் நெரிக்க, "அப்பா.... உங்களுக்குத்தான் வருணாவைத் தெரியுமே..." அவன் இழுக்க.... "ஆமா தெரியும்.... நம்ம நகுலோட தங்கை. நான் கூட ஹாஸ்பிட்டல்ல வைத்து பார்த்து பேசினேனே.... தங்கமான பொண்ணு. அவளுக்கு என்ன..?" அவருக்கு புரியவே இல்லை.

நவீனோடு சென்றிருந்த வரைக்கும்.... இருவரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டதாக கூட அவருக்கு நினைவில்லை. அப்படி இருக்கையில்.... தன் மகன் அவளைத்தான் விரும்புகிறான் என அவரால் நினைக்கக் கூட முடியவில்லை.

"அதுதான்ப்பா பிரச்சனையே...".

"என்னடா.... நகுலுக்கு தங்கை வருணா.... இதில் உனக்கென்ன பிரச்சனை?".

"இன்னைக்கு ஆபீஸ்க்கு வந்திருந்தா...".

"சரி..."

"வந்தவ.... ஒண்ணுமே பேசாமல் போய்ட்டா...?" அவன் பேசியதில்.... நடேசனுக்கு தலையை பிய்த்துக்கொள்ளலாம் போல் இருந்தது.

"டேய்.... ஓங்கி அறைஞ்ஜேன்னு வை.... மொத்த குழப்பமும் தெளிஞ்சிடும். முதல்ல என்ன நடந்ததுன்னு தெளிவா சொல்லுடா..." சற்று கடுப்பானார்.

அவர் கோபப்பட்ட பிறகுதான்.... தான் விஷயத்தை ஒழுங்காக சொல்லாததை உணர்ந்தவன், பள்ளிப் பருவம் துவங்கி.... இன்று மதியம் நடந்தது வரைக்கும் ஒவ்வொன்றையும் விளக்க, நடேசனின் முகம் பிரகாசமானது.

தந்தையின் முகம் ஒளிர்வதைப் பார்த்தவன், "என்னப்பா.... உங்களுக்கு தெளிவாயிடுச்சா...?" ஆர்வமாக வினவ,

"இதில் உனக்கு என்னடா குழப்பமும், பிரச்சனையும்...?" அவனிடமே அவர் திருப்பிக் கேட்க,

"அட போப்பா.... உங்ககிட்டே போய் சொன்னேன் பாருங்க.... நானே பாத்துக்கறேன்..." கோபமாக எழுந்து செல்ல முயன்றான்.

"டேய்.... அப்போ வருணா ஏன் அங்கே வந்தான்னு உனக்கு தெரிஞ்சுக்க வேண்டாமா...?" அவர் கேள்வி அவனை கட்டிபோட, பட்டென அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டான்.

"சொல்லுப்பா.... சொல்லுப்பா..." அவன் ஆர்வமாக, அவன் ஆர்வத்தைப் பார்த்து மனதுக்குள் சிரித்தவராக, இருவரும் மனதுக்குள் காதலை வைத்துகொண்டு தயங்குவதையும் உணர்ந்தவராக ஒரு முடிவிற்கு வந்தார்.

நவீனைப் பொறுத்தமட்டில், நிச்சயம் வருணாவிடம் அவன் காதலைச் சொல்வான் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கவில்லை. தன் மகனது நிறம் பற்றிய தாழ்வுமனப்பான்மையை நன்கு அறிந்தவராயிற்றே.... இதற்கு தான்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என தீர்மானித்தார்.

அதே நேரம்.... வருணா அவனைத் தேடி வந்துவிட்டு.... எதுவும் சொல்லாததன் காரணமும் அவருக்கு நன்கு புரிந்தது. ஒரு பெண்ணாக, தன் மனதை வெளிப்படுத்த

அவள் எடுத்த முயற்சியே பெரிதாகத் தோன்ற, அவளையும் சங்கடத்துக்குள்ளாக்காமல் முடிவெடுக்க விரும்பினார்.

அவர் தனக்குள் மூழ்க.... "அப்பா.... இப்போ சொல்லப்போறீங்களா இல்லையா?" அவரை உலுக்க,

"ஒரு நல்ல நாள் பாத்து நகுல் வீட்டுக்கு, வருணாவை நாம பொண்ணு பாக்கப் போறோம் அவ்வளவுதான்..." அவர் உரைக்க, 'லூசாப்பா நீ...' என அவரை ஒரு பார்வை பார்த்தான்.

அதைப் புரிந்துகொண்ட அவரும்.... "அட போடா விளங்காதவனே.... நீல்லாம் லவ் பண்ணவே லாயக்கில்லாதவண்டா.... எல்லாம் இந்த அப்பன் பாத்துக்கறேன்.... நீ போய் என் மருமகளோட கனவில் டூயட் பாடு போ..." உற்சாகமாக எழுந்து செல்லும் அவரை குழப்பம் மேலிட வெறித்தான் நவீன்.

7

நடேசன் அதன் பிறகு என்ன செய்தார்.... எப்படிச் செய்தார் என்பது எதுவும் நவீனுக்குப் புரியவில்லை. ஆனால்.... அடுத்து வந்த மூன்றாம் நாளே வருணாவை பெண் பார்க்க வருவதாக பார்வதி – அரசுவிடம் பேசியவர்.... இதோ, அவர்கள் முன்னால் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அவரிடம் உரையாடிய வருணாவின் பெற்றவர்களையும், தன்னிடம் உற்சாகமாக அளவளாவிக் கொண்டிருக்கும் நகுலின் பேச்சையும், நம்பியும் நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தான் நவீன்.

அவனால் இன்னுமே நம்ப முடியவில்லை.... வருணா எதற்காக வந்தாள் என்பதை தன் தந்தை சரியாகத்தான் புரிந்துகொண்டாரா? அவளுக்கு நான் இன்று பார்க்க வருவது தெரியுமா? அவளுக்கு இதில் சம்மதமா? மனம், அவள்மேல் கொண்ட விருப்பத்தையும் மீறி, திடுமென அதிர்ந்து கொண்டிருந்தது.

அவள் தன்னை பார்க்கும்பொழுதெல்லாம்.... கருவாயா என தன் நிறத்தை கேலி செய்பவள்.... எப்படி தன்னை திருமணம் செய்ய சம்மதிப்பாள்? எப்பொழுது வெளியே வந்து, தன்னைப் பிடிக்கவில்லை என்று எல்லோர் முன்னாலும் தன்னை அவமானப்படுத்தி விடுவாளோ என மனதுக்குள் சிறு பயம் கவ்விக் கொண்டது.

"டேய் நகுல்.... வருணாகிட்டே சொல்லிட்டீங்களா? அவளுக்கு சம்மதமா? உனக்கு நல்லா தெரியுமா?" தாங்க முடியாமல், நண்பனது காதை மெதுவாகக் கடித்தான்.

"நவீன்.... இப்போ அவளே வருவா.... அவகிட்டே கேட்டுக்கோ..." மெல்லிய சிரிப்பில் அவன் பதில் கொடுக்க, நவீனுக்குத்தான் முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் உணர்வு.

பெரியவர்களோ எதற்காக இங்கே கூடியிருக்கிறோம் என்பதையே மறந்துவிட்டவர்கள் போல்.... வீட்டு விஷயம், தொழில் விஷயம் என அலசி ஆராய.... எங்கே தன் மனதின் போராட்டம் தாளாமல், இருக்கும் இடத்தைவிட்டு எழுந்து சென்று விடுவோமோ என அஞ்சினான்.

தன் மனதின் போராட்டாம் முகத்தில் தெரியாமல் காப்பது வேறு மரண அவஸ்த்தையாக இருக்க, இதழ்களை இழுத்துப் பிடித்தவாறு நகுலிடம் உரையாடிக் கொண்டிருந்தவனுக்கு கன்னங்கள் இரண்டும் வலியெடுக்கவே ஆரம்பித்துவிட்டது.

நண்பனது அவஸ்த்தை புரிந்தவனாக, ஆனாலும்.... பெரியவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில் குறுக்கே எதையும் சொல்ல முடியாமல், நகுல் தாயின் முகம் பார்க்க, அதே நேரம்.... "பாருங்களேன்.... பேசிட்டே இருந்ததில் வந்த விஷயத்தையே மறந்துட்டேன்.... எங்க வீட்டு மருமகளை கூப்பிடுங்க.... அவகிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டுட்டு தட்டை மாத்திக்கலாம்..." நடேசனின் குரல் நவீனின் மனதில் லிட்டர் கணக்கில் பாலை வார்த்தது என்றால் அது மிகையில்லை.

"இதோ.... இப்போ போய் அழைச்சுட்டு வரேன் அண்ணே..." பார்வதி உள்ளே செல்ல....

தந்தையை நன்றியோடு நோக்கிய நவீன்.... அவர் வார்த்தைகளில் திகைத்துப் போனான். 'ஐயோ.... இந்த அப்பா ஏன் இப்படி அவசர குடுக்கையாவே இருக்கார்...? இப்போ அவ வந்து என்ன சொல்வாளோ...? இவர் என்னன்னா...?' அவன் சிந்தையை தடை செய்தது வருணாவின் வருகை.

பிங்க் வண்ண ஷிபான் புடவை அவள் மேனியை தழுவியிருக்க, தலை நிறைய மல்லிகைப் பூ வைத்து, முழு அலங்காரத்தில் தேவதையென அன்ன நடையிட்டு, தன்

தாயோடு நடந்து வந்த வருணாவை இமைக்க கூட மறந்து வெறித்தான்.

ஏதோ ஒரு விலையுயர்ந்த சுடிதாரில் தனக்கு முன்னால் வருவாள் என அவன் எண்ணியிருக்க.... இப்படி ஒரு அலங்காரத்தில்.... பதுமையென நடந்து வர, முகத்தில் கவிழ்ந்திருந்த சிறு வெட்கமும், ஒரு நாணச் சிவப்பும், இதழில் இருந்த இயற்கையின் வர்ணமும்.... கைவளைகள் குலுங்க, மொத்தமாய் தடம் புரண்டுதான் போனான்.

அவளது சிவந்த மேனிக்கு புடவை போட்டி போட, அவளது நடையும், அது ஏற்படுத்திய தாக்கமும்.... சட்டென அவன் நாடி நரம்புகளில் புது வெள்ளோட்டம். நொடியில் அங்கிருந்த அனைவரும் அவன் பார்வையை விட்டு மறைய, அந்த உலகத்தில் அவளோடு அவன் மட்டும் தனித்திருக்கும் ஒரு உணர்வு.

முதலிரவு அறைக்குள் தன் புது மனைவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு மணாளனின் வேட்கையும் வெப்பமும் சட்டென அவனைச் சூழ, சுற்றிலும் இருப்பவர்கள் தன்னை நோக்குகிறார்கள் என்ற பிரக்ஜையே இன்றி அவன் பார்வை அவளை மொய்த்தது.

வருணாவின் கண்களும் அவனைத்தான் நோக்கிக் கொண்டிருந்தது. அவன் கண்களில் தெரிந்த ஆர்வம், வேட்கை, விருப்பம்.... அவள் மனதுக்குள் உறுத்திக் கொண்டிருந்த கவலையை விலக்க வைக்க, 'ஆண்டவா.... எல்லார் முன்னாடியும் எப்படிப் பாக்கறான் பார்...' இந்த நினைவே அவளை மேலும் சிவக்கச் செய்தது.

பெரியவர்களின் இருப்பு அவள் பார்வையை, அவன்மேலிருந்து விலக்கிக் கொள்ள வைக்க, துளைக்கும் அவன் பார்வை அவளை ஆனந்தமாய் துவளச் செய்தது மட்டும் உண்மை.

"இங்கே உக்காரும்மா..." தாய் அவளை அந்த ஒற்றை சோபாவில் அமரச் செய்ய, பதுமைபோல்

அமர்ந்துகொண்டாள்.

"டேய் மச்சான்.... ஜொள்ளு ஊத்துதுடா.... வாயை மூடு..." நகுல் நண்பனின் காலை இடிக்க, சட்டென தன் மாய உலகில் இருந்து விடுபட்டவன், வேகமாக இமை கொட்டி, சுற்றிலும் நோக்கினான்.

பெரியவர்கள் அவன் செய்கையை பாராததுபோல் பார்த்து தங்களுக்குள் உரையாடி திரும்பிக் கொள்ள, "ஏன் சார்.... கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ, எதுவோ சரி வராதுன்னு சொன்னாங்க.... அந்த நல்லவரு யாருன்னு உங்களுக்குத் தெரியுமா சார்..." நகுல் அவனைச் சீண்ட,

நவீனின் பார்வையோ 'என்னை விட்டுவிடேன்' என அவனிடம் கெஞ்சியது.

'பிளைச்சுப்போ...' நகுலும் பார்வையால் அவனுக்கு உணர்த்த, தனக்கு நேர் எதிர் சோபாவில் அமர்ந்த வருணாவை இப்பொழுது சற்று தயக்கமாக ஏறிட்டான்.

வருணாவும், நகுல் நண்பனிடம் கேட்ட அதே விஷயத்தை பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அன்று அவனை பார்த்துவிட்டு திரும்பியவள் கலக்கத்தோடே அமர்ந்திருக்க, மனமோ.... 'அவனுக்கு நிஜமாவே புரியவே இல்லையா.... இல்ல புரியாத மாதிரி நடிக்கிறானா?' தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்.

தனக்கு என்று வரன் பார்க்கத் துவங்கிவிட்டார்கள் எனத் தெரிந்ததோ.... அன்று முதல், அவன் முகம்தான் அவள் மனதுக்குள் மின்னி மறைந்து கொண்டிருக்கிறது. நிச்சயம் அவனைத் தவிர யாரையும் அவளால் தன் கணவனாக எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

இதை எப்படி.., யாரிடம் சொல்லவென்று தெரியாமல் அவள் குழம்பிக் கொண்டிருக்க, அவள் அருகில் யாரோ அமரும் உணர்வில் தன் நினைவை கலைக்க, தன் அண்ணனை அந்த நேரம் அங்கே எதிர்பாராமல் திகைத்தாள்.

"அண்ணே..." ஒரு வேளை தான் அவன் அலுவலகம் சென்றதையும், பேசியதையும் நவீன் அவனிடம் உரைத்துவிட்டானோ என அவள் தடுமாறி, அவன் முகம் பார்க்கத் தயங்கினாள்.

"வருணா.... அண்ணாகிட்டே ஏதாவது சொல்லணுமா?" அவன் எடுத்துக் கொடுக்க, அவனிடம் தன் மனதை திறக்க முடியாமல் மௌனம் காத்தாள். ஒரு வேளை நவீன் பிடிவாதமாக தன்னை மறுத்துவிட்டால்.... தன் மனதுக்குள் முளைவிட்ட காதல் தன்னோடு போகட்டும் என விரும்பியதே அதற்குக் காரணம்.

தங்கை தன்னிடம் எதையும் சொல்லப்போவதில்லை என்பதை உணர்ந்தவன், "அண்ணா உன்கிட்டே ஒரு விஷயம் கேக்கணும்னு நினைத்தேன்..." அவன் நிறுத்த, என்னவென்று அவன் முகம் பார்த்தாள்.

"நவீனை உனக்கு பாக்கலாம்னு நினைக்கறேன்.... உனக்கு சம்மதமா?" அவன் நேரடியாக விஷயத்துக்கு வர, அவன் இதைத்தான் கேட்கப் போகிறான் என்பதை உணராதவள், திகைத்து.... பின் கண் கலங்க அவன் தோள் சாய்ந்தாள்.

அவள் கண்ணீரே அவள் மனதை உரைக்க, அதை மறைத்தவன், "என்னம்மா பிடிக்கலையா...?" வேண்டுமென்றே அவளைச் சீண்ட.., "போண்ணா..." செல்லமாக அவனை குத்தினாள்.

"சரி.... சரி.... ரெண்டுபேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிருக்கு.... பிறகு ஏன் நவீன் தயங்கறான்.... உனக்கு ஏதாவது தெரியுமா?" பிரச்சனையின் காரணத்தை அவளிடமே அறிய முயன்றான்.

"அது..." சற்று தயங்கியவள், நவீனை ‘கருவாயன்’ என கேலி செய்ததை அவள் உரைக்க.... "என்னம்மா.... என் தங்கச்சி இப்படி பேச மாட்டாளே..." அவன் வியந்தான்.

"முதல்ல விளையாட்டா செய்தது.... பிறகு அதுவே.... ஆனா அவர் இதை தப்பா புரிஞ்சுகிட்டு என் முகம் பார்த்து பேசவே மாட்டேங்குறார்..." கவலையானாள்.

"ஹம்.... சும்மாவே அவனுக்கு கொஞ்சம் காம்ப்ளெக்ஸ்.... இதில் நீ வேற இப்படி சொல்ல.... அதுவே அவன் மனசை உன்கிட்டே திறக்க விடாமல் செய்துடுச்சு போல.... சரி விடு.... அதான் நீ சொல்லிட்ட இல்ல.., மிச்சத்தை நான் பாத்துக்கறேன்..." அவளுக்கு தைரியம் கொடுக்க, அவனுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்காமல் நடேசனே அனைத்தையும் பார்த்துக் கொள்ள, நிம்மதியாக மூச்சு விட்டான்.

ஆனாலும்.... வருணாவிற்கு நவீன் தன் மனதை புரிந்துகொள்ளாததை எண்ணி அவன்மேல் சிறு கோபம் இருக்கவே செய்தது. அத்தோடு.... மனதுக்கு பிடித்த பெண்ணிடம் தன் காதலை சொல்லக் கூட தைரியம் காட்டாத அவன் செய்கை அதை கூட்டவே செய்தது.

"என்னம்மா மருமகளே.... என் பையனை பிடிச்சிருக்கா...? என்ன.... நிறம்தான் கொஞ்சம் மட்டு..." நடேசன் திடுமென அவளிடம் கேட்க, தன் சிந்தையை கலைத்தவள், அவரை ஏறிட்டாள்.

‘இப்போ உங்ககிட்டே இதை கேக்கச்சொல்லி யாராவது கேட்டாங்களா...?’ செல்லக் கோபத்தில் நவீன் அவரை முறைத்தான்.

அவர் கேள்வியில் திகைத்து, தன் எதிரில், இளம் வான்நீல வர்ண முழுக்கை சட்டையும், அடர் நீல பேன்ட்டிலும் ஆண்மையின் கம்பீரத்தோடு.... அமர்ந்திருந்த அவனை நோக்கியவளுக்கு.... இப்பொழுது அவனது நிறம் பெரிதாகத் தெரியவே இல்லை.

"நிறத்தில் என்ன சம்பந்தி இருக்கு.... குணம் தானே முக்கியம்..." அரசு குரல் கொடுக்க,

"நவீனைப் பத்தி நீங்க சொல்லவே வேண்டாம். அவனும் இந்த வீட்டு பிள்ளை மாதிரிதான். எங்களுக்கே நகுல் சொல்லும் வரைக்கும், நமக்கு ஏன் இது தோணாமல் போச்சுன்னு இருந்தது. அதே நேரம்.... நீங்களும் கேக்கவே ரெட்டிப்பு சந்தோசம்..." பார்வதி இணைந்து கொண்டார்.

"நீங்க சொல்றீங்க.... பொண்ணு சொல்லட்டுமே..." நடேசன் தன் மகன் மனம் புரிந்தவராக கேட்க, அவள் பதில் சொல்ல தாமதித்த அந்த இரு வினாடிக்குள் நவீன் தவித்துப் போனான்.

அவன் தவிப்பை உணர்ந்துகொண்டவளுக்கு, 'இன்னுமா உனக்கு பயம்...?' கோபம் கிளர்ந்தாலும், அவனை அதிக நேரம் காக்க வைக்காமல்,

"புடிச்சிருக்கு..." மென்மையாக என்றாலும், அவர் முகத்துக்கு நேராக பதில் கொடுக்க, அந்த பதிலில் நவீன் கொண்ட நிம்மதிக்கு அளவில்லை.

"பிறகென்ன.... பொண்ணே சொல்லிட்டா.... இப்போ தட்டை மாத்திக்கலாமா சம்பந்தி. நிச்சயத்தை கல்யாணத்துக்கு முந்தினநாள் வச்சுக்கலாம்.... இப்போ உறுதி பண்ணிப்போம்..." நடேசனின் கூற்றுக்கு அங்கே மறுபேச்சு எழவே இல்லை.

தட்டை மாற்றிய பிறகு, "நவீனோட அம்மா இருந்திருந்தால் முறையா செய்ய வேண்டியதுன்னு எல்லாம் செய்திருப்பா.... எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியலை.... அவன் அம்மாவோட ரெண்டு வளையல் மட்டும் இப்போ எடுத்துட்டு வந்திருக்கேன். நீங்க சம்மதித்தால்..." நடேசன் தயங்க,

"அட.... இதுக்கு ஏன் தயங்கறீங்க.... மாப்பிள்ளையே போட்டு விடட்டும்.... நவீன் போடுப்பா..." அரசு உரைக்க, இருவரும் தங்கள் இருக்கையில் இருந்து எழுந்து வந்தார்கள்.

நவீன் தன் இடக்கரத்தை அவள் பக்கம் நீட்ட, அவள் வலக்கரத்தை அவன் கை மீது வைத்தாள். இருவரின் இணைந்திருந்த கரத்தின் நிற வேற்றுமையைப் பார்த்தவன், அவள் முகம் பார்க்க, அவன் எண்ணம் உணர்ந்தவளாக.... 'போடுடா...' என பார்வையால் அவனை அதட்ட, அவள் கரத்தில் வளையல் அணிவித்தவனது கரம் சற்று நடுங்கவே செய்தது.

அதே நேரம்.... உள்ளுக்குள் சில்லென்று எதுவோ தாக்க.... அழுத்தமாக அவள் கரத்தை பற்றி விடுவித்தான். அவன் செய்கை அவளுக்குள் விரவ.... 'பிடிக்காத மாதிரியே எல்லா வேலையும் பாக்குறது...' அவனை செல்லமாக மனதுக்குள் திட்டிக் கொண்டவளுக்குள் கைகளுக்குள் கதகதப்பாய் ஒரு வெப்பம் பாய்ந்து ஓடியது.

"வாங்க சாப்பிடலாம்..." பார்வதி அழைக்க, சிறிதாக அவர்கள் உணவு உண்ண, வருணாவிடம் தனியாக ஒரு வார்த்தையாவது பேசிவிடத் துடித்தான் நவீன்.

அதே நேரம்.... "வருணா.... மாப்பிள்ளைக்கு உன் ரூமைக் காட்டு..." பார்வதி அவனுக்கு துணை நின்றார்.

"ஏண்டா மச்சான்.... அதோ இருக்க அவ ரூம் உனக்கு தெரியவே செய்யாதுல்ல..." கையில் பாயாச கிண்ணத்தோடு நகுல் அவனை வார, நிச்சயம் நவீன் அவனைப் பார்த்த பார்வையில் கொலைவெறி இருந்தது.

அதை உணர்ந்தவனாக.... கண்ணைச் சிமிட்டி நகுல் சிரிக்க, அண்ணனின் கேலியைப் புரிந்த வருணா மெல்லிய சிரிப்போடு முன்னால் நடக்க, அவளைப் பின்தொடர்ந்தான் நவீன்.

"உன்னை வந்து கவனிக்கறேண்டா..." நவீன் கருவ,

"முதல்ல அவளை சம்மாளிடி.... பிறகு என்னை பாத்துக்கலாம்..." அசராமல் பதில் கொடுத்தான்.

இருக்கும் சூழலில் அவனை எதுவும் சொல்ல முடியாமல்.... வேகமாக அவளைப் பின்தொடர்ந்தான்.

இதுவரை எத்தனையோ முறை நகுலின் வீட்டிற்கு அவன் வந்திருக்கிறான்தான். ஆனால்.... வருணாவின் அறைக்குள் அவன் நுழைவது இதுவே முதல் முறை.

நல்ல விஸ்த்தாரமான அறைதான். கட்டில், வார்ட்ரோப்.... மேஜை.... நாற்காலி.... சோபா.... என கச்சிதமாக சுத்தமாக இருந்தது. அறைக்குள் நுழைந்தவளோ.... அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், ஜன்னல் வழியாக தோட்டத்தைப் பார்வையிட, 'நிற்கவா.... போகவா...' என புரியாத அவஸ்தையில் நின்றிருந்தான் அவன்.

"வரு..." ஒரு வழியாக தைரியத்தை திரட்டிக்கொண்டு அவளை அழைக்க, 'என்ன...?' என்ற கேள்வியோடு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனோ.... தன் முதுகின் பின்னால், திறந்திருக்கும் வாசல் கதவை திரும்பிப் பார்த்தவன், மற்றவர்களது பார்வையில் தாங்கள் விழ மாட்டோம் என்பதை உறுதி படுத்தியவனாக.... அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கினான்.

அவனது முன்னேற்பாட்டை பார்த்தவளது இதயம் தடதடத்தது. 'இப்போ எதுக்கு இப்படி பூனை மாதிரி பாத்துட்டு வரான்...' புருவம் சற்று நெரிய அவனை வெறிக்க, அவளை நெருங்கியவன், அவள் முகத்தையே பார்த்தான்.

அவன் பார்வையின் வேகம் தாளாமல் அவள் தரை நோக்க.... "வரு..." ஆழமான குரலில் அவன் அழைக்க, அந்த குரலில் சற்று குழைந்துதான் போனாள்.

ஏதோ ஒரு வித எதிர்பார்ப்பில் அவள் மனம் துடிக்க.... "வரு.... உன் கையை மட்டும் ஒரே ஒரு முறை தொட்டுக்கவா...? ஜஸ்ட்.... கேன் ஐ ஹோல்ட் யுவர்

பிங்கர்ஸ்...? ப்ளீஸ்..." மொத்த எதிர்பார்ப்பையும் கொட்டிக் கேட்டான்.

‘ஆண்டவா.... அப்படியே பச்சைப் புள்ளை மாதிரி கேக்கறானே... என்னை ஏன் இப்படி சோதிக்கற...?’ கடவுளிடம் மன்றாடியவள் அவனை சற்று கோபமாகப் பார்க்க,

"ஏய்.... தப்பால்லாம் எதுவும் இல்லை. நடந்ததையெல்லாம் இன்னுமே என்னால் நம்பவே முடியலை. என்னவோ எல்லாம் கனவு மாதிரி இருக்கு. உனக்கு என்னை பிடிக்கவே...." அவள் கோபம் அதிகரிப்பதைப் பார்த்தவன்,

"இல்ல.... அப்படி நானே நினைச்சுகிட்டேன். ஆனா.... எனக்கு உன்னை..." அவன் பேச்சில்.... ‘அப்படிப் பிடித்தவன்தான் என்னை வேண்டாம்னு சொன்னியா?’ எண்ணியவள் அவனை மேலும் முறைக்க, பேச வந்ததை அப்படியே நிறுத்தி விட்டு, பரிதாபமாக அவளைப் பார்த்தான்.

அவன் பார்வையில், அவன்மேல் அவளுக்கு பரிதாபம் எழுந்தாலும், அதை மறைத்தவளாக.... "இப்போ என்ன.... நடந்தது கனவா நனவான்னு தெரியணும் அவ்வளவு தானே..." அவள் காட்டமாக கேட்க, அவன் தலை வேகமாக ஆடியது.

அடுத்த நிமிடம் அவனை நெருங்கியவள், அவள் என்ன செய்யப் போகிறாள் என அவன் ஆர்வமாக எதிர் பார்க்க, அவன் முழங்கையில் அழுத்தமாகக் கிள்ள.... "ஆ.." அலறியவன், தன் அலறல் வெளியே கேட்டுவிடாமல் இருக்க, அழுத்தமாக தன் கரத்தால் வாயை மூடிக் கொண்டான்.

அவன் அலறிய பிறகுதான்.... தான் அழுத்தமாக கிள்ளிவிட்டோம் என்பதை உணர்ந்தவள், அவனிடம் மன்னிப்பை வேண்ட நினைக்க, "நவீன்..." அறைக்கு வெளியே நகுலின் குரல் சரியாக ஒலிக்க, "வரேண்டா..."

குரல் கொடுத்தவன், "தேங்க்ஸ்..." அவளிடம் உரைத்துவிட்டு வெளியேறினான்.

ஏனோ அவளது அந்த செய்கை கூட அவனுக்கு பிடிக்கவே செய்தது. அவன் வார்த்தைகள் வருணாவை வருடியது மட்டும் உண்மை.

நவீனின் முகத்தைப் பார்த்த நகுல், "என்னடா மச்சான்.... கண்ணில் ஆனந்தக் கண்ணீர் எல்லாம் இருக்கு.... அவ ரூமுக்குள்ளே போய் தூசி தட்டிட்டா இருந்த?" அவன் வார, ஏற்கனவே வலியில் இருந்தவன், அதே பரிசை அவனுக்கும் வழங்க.... "அட கிராதகா.... அவகிட்டே வாங்கிட்டு என்கிட்டே கொடுக்கறியா...? நீ நல்லா வருவடா..." கையை பரபரவென தேய்த்துக் கொண்டான்.

"உனக்கு எப்படிடா தெரியும்...?" அவன் ஆச்சரியமாக...

"அப்போ நிஜமாவே அதுதான் நடந்துதாடா...?" நகுல் கேட்ட பிறகுதான், தான் உளறிவிட்டதே அவனுக்குப் புரிந்தது.

"அப்போ நாங்க கிளம்பறோம் சம்பந்தி.... ஒரு நல்ல நாளை சீக்கிரமே பாருங்க.... கல்யாணத்தை தள்ளிப் போட வேண்டாம்..." நடேசன் விடைபெற,

"நாளைக்கே ஜோசியரை பார்த்து நாள் குறிக்கறோம்..... போயிட்டு வாங்க..." அவருக்கு விடை கொடுத்தார். வருணாவை பார்வதி அழைக்க, நடேசனிடம் இன்முகமாய் விடை கொடுத்தவள், முறைப்பாய் நவீனைப் பார்க்க, ‘இவகிட்டே கிள்ளு வாங்குனதுக்கு நான்தான் முறைக்கணும்.... இவ ஏன் இப்படிப் பாக்கறா...?’ எண்ணியவன் குழப்பகாகவே அவளிடம் விடை பெற்றான்.

நவீன் அவளை திரும்பித் திரும்பி பார்த்தவாறு தயக்கமாகச் செல்ல, "ஏய்.... ஏண்டி அவனை இப்படி படுத்தி வைக்கற...? பாவம் பய.... இன்னும் பத்து நாள் தூங்கவே மாட்டான். உன் கோபத்தை காட்ட வேற நேரமே கிடைக்கலையா...? கொஞ்சம் சிரிச்ச மாதிரிதான்

அவனுக்கு பை சொல்லேன்..." நகுல் அவளை கடிந்து கொண்டான்.

"ஆமா.... அந்த தொடை நடுங்கிக்கு நீ சப்போட்டா.... எல்லாம் நான் பாத்துக்கறேன்.... நீ உன் வேலையை மட்டும் பார்... அவனுக்கு இன்னும் இருக்கு..." கருவிகொண்டு அவள் அறைக்குச் செல்ல,

"நண்பா.... அந்த ஆண்டவனால் கூட உன்னை காப்பாத்த முடியாதுடா..." வாய் விட்டே புலம்பிச் சென்றான்.

8

மூர்த்தி தன் இருக்கையில் கோபமாக அமர்ந்திருக்க, முத்து லட்சுமியோ கையைப் பிசைந்தவாறு செய்வதறியாமல் மகளை முறைக்க, அனன்யாவோ கெஞ்சும் பார்வையோடு அவர்கள் முன்னால் நின்றிருந்தாள்.

"அம்மா.... ப்ளீஸ்ம்மா.... நீங்களாவது சொல்லுங்க..." சின்னக் குரலில் தாயிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"என்னடி சொல்றது.... அதான் வேணாம்னு அப்பா சொல்றாங்களே.... கொஞ்சம் அவர் பேச்சைக் கேளு..." மகளிடம் கடிந்து கொண்டார்.

இதுவரை மகளுக்காக தன்னிடம் எத்தனையோ விஷயங்களுக்கு அவள் அறியாமலே ஆதரவு கொடுத்த கணவனின் மௌனம் அவரை இவ்வாறு பேச வைத்தது.

மூர்த்தி வீட்டில் பேசுவது என்பது அளவாகத்தான் இருக்கும். ஆனால்.... அனைவருக்கும் என்ன தேவை என்றும், எப்பொழுது தேவை என்றும் அவரைத் தவிர யாருக்கும் சரியாகத் தெரியாது என்றே சொல்லலாம்.

மகனிடமோ மகளிடமோ பாசத்தை கொட்டியிராதவர்தான். அவர்களை மடியமர்த்தி, கதை சொல்லி என எதையும் செய்யாதவர் தான். அப்படி இருந்தாலும்.... மகன் கல்லூரி படிப்புக்கு வெளியூர் செல்லவேண்டும் என எண்ணியிருக்க, அவன் எண்ணம் புரிந்தவராக சென்னைக்கு அனுப்பி படிக்க வைத்தவர்.

தான் மகளை கலைக் கல்லூரிக்கு அனுப்ப எண்ணியிருக்க, மகளுக்கு இஞ்சினியரிங் படிக்க விருப்பமிருப்பதை உணர்ந்து அவராகவே அவளுக்கு கல்லூரிக்கு ஃபாம் வாங்கி வந்து அவரை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியவர்.

அவள் தோழியோடு வெளியே செல்லவேண்டும் என தாயிடம் உரைத்தால், தன் சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுத்து மனைவியின் கண்முன்னால் வைத்துவிட்டு, அவளை போகச்சொல் என அனுமதியளிக்கும் கணவர்.... முதல் முறையாக மறுப்பதை அவரும் உணர்ந்ததாலேயே பிடிவாதமாக மறுத்தார்.

"நீங்களே இப்படிச் சொன்னால் எப்படிம்மா.... நீங்கதானே சொன்னீங்க.... வேலைக்குபோய் நல்லா சம்பாதிச்சு சுயமா நிக்கணும்னு.... இப்போ...".

"அது எந்த நிலைமையில் சொன்னது.... இப்போ நம்ம வீட்டு நிலைமை அப்படியா இருக்கு...?" அவர் கண் கலங்க, "அம்மா..." ஓடி வந்து தாயை தாங்கிக் கொண்டாள்.

"ப்ளீஸ்ம்மா.... அழாதீங்க. அப்போ.... அண்ணாவோடவே என்னோட வாழ்க்கையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துட்டீங்களா? அவன் விதி முடிஞ்சது, போய் சேர்ந்துட்டான்.... அதுக்காக.... என்னோட கனவையும், ஆசையையும் குழி தோண்டி புதைப்பது எந்த விதத்தில் நியாயம்...?" அவள் கேட்க, இருக்கையில் இருந்த மூர்த்தி அவளை ஏறிட்டு, ஒரு பார்வை பார்த்துவிட்டு அழுத்தமாக அமர்ந்து கொண்டார்.

அவளுக்கு அப்படி பேசுவது கடினமாகத்தான் இருந்தது. ஆனால்.... இன்னும் ஒரு வருடத்தையோ.... இரண்டு வருடத்தையோ.... வேலையை காரணம் காட்டி, தன் திருமணத்தை தவிர்ப்பது அவளுக்கு மிகவும் முக்கியமான விஷயமாக இருந்தது. அதுவே அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

"என்னடி.... இப்படிப் பேசுற...?" தன் கலக்கத்தை நிறுத்திவிட்டு அவர் அதிர்ந்து கேட்டார்.

"பின்ன என்னம்மா.... நானும் ஒரு மாசமா உங்ககிட்டே கெஞ்சிட்டு இருக்கேன். நீங்களும் அப்பாவும் இறங்கி வராமல் இருந்தால் நானும் என்னதான் செய்ய...?".

"அன்னம்.... இப்போ எங்களுக்கு இருக்கது நீ ஒருத்திதான். உன்னை பக்கத்திலேயே வச்சுக்கணும்னு நாங்க நினைக்கிறது தப்பா? நீயும் எங்களை விட்டு போய்ட்டா.... புருஞ்சுக்கடி..." இரண்டு வருடங்களுக்கு முன்னர் வரைக்கும் மகளை வேலைக்கு அனுப்பி தைரியமானவளாக, தன் சொந்தக் காலில் நிற்பவளாக மாற்றவே அவரும் விரும்பினார்.

என்று, அவர்களது மகன் சாலை விபத்தில் அகால மரணமடைந்தானோ, அன்றே அவர் மனநிலை முற்றாக மாறிப் போனது. தனக்கு இருக்கும் ஒரே மகளையாவது தன்னோடு இருத்திக்கொள்ள வேண்டும் என்பதும், குறைந்த பட்சம்.... அவளுக்கு திருமணம் கை கூடும் வரைக்காவது, அவளை தன்னோடு வைத்துகொள்ள விரும்பினார்.

அவளுக்கு படிப்பு முடிந்த கையோடு, அவளது தந்தை வரன் பார்க்கத் துவங்க, குறைந்தது ஒரு வருடமாவது அந்த பேச்சே வேண்டாம் என அவள் பிடிவாதமாக உரைக்க, அவளது பேச்சுக்கு மூர்த்தி மதிப்பளித்தார். அப்பொழுதே அவருக்கு சிறு சந்தேகம் முளை விடவே செய்தது.

ஆனால்.... அடுத்த வாரமே.... சென்னைக்கு வேலைக்குச் செல்லவேண்டும் என அவள் பிடிவாதம் பிடிக்க, அதைத்தான் அவரால் ஏற்றுகொள்ளவே முடியவில்லை. முதல் முறையாக தங்களை எதிர்த்து பேசும் மகளை, அதுவும் முயன்று அதைச் செய்யும் அவளை மனதுக்குள் எடை போட்டவராக அமர்ந்திருந்தார்.

சிறியதாக என்றாலும் ப்ளம்பிங்.... வயரிங் பொருட்கள் அடங்கிய கடையை மொத்த வியாபாரமாக செய்பவராயிடே.... எப்பொழுதும் தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களை எடைபோட்டு பழகியவர், மகள் விஷயத்தில் சும்மா இருப்பாரா என்ன?

முதலாவது.... அவள் சென்னைக்குச் செல்வது அவருக்குப் பிடிக்கவில்லை. இரண்டாவது.... சட்டென துவங்கியிருக்கும் அவளது இந்த மாறுதலும், பிடிவாதமும்.... சென்னைக்கு சென்றே ஆகவேண்டும் என்ற அவளது நிலைப்பாடும்.... திருமணத்தை அவள் மறுக்கும் விதமும், அவ்வளவு சாதாரணமாக அவரால் எடுத்துகொள்ள முடியவில்லை.

தன் சந்தேகத்தை மனைவியிடம் சொல்லி, அவரை கவலைப்படுத்த விரும்பாதவராக, தனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

"அம்மா.... இப்போ எனக்கு சென்னையில் மாப்பிள்ளை பார்த்தால் கட்டிகொடுக்க மாட்டீங்களா? அப்படி நினைச்சுகோங்க.... ஒரு ரெண்டே வருஷம்..." மீண்டும் கெஞ்சலை கையில் எடுத்தாள்.

முத்துலட்சுமி அலுப்பாக அவளைப் பார்க்க, மூர்த்தியோ.... "முத்து.... உன் பொண்ணு, மாப்பிள்ளை பார்த்து வச்சுட்டாளோன்னு கேளு..." முதல் முறையாக வாய் திறக்க, உடலில் சர்வமும் ஒடுங்க, ஸ்தம்பித்துப் போனாள்.

மகளது முகத்தில் தெரிந்த அப்பட்டமான அதிர்ச்சியை கண்டுகொண்டவர், தன் எண்ணம் சரிதான் என்பதை உறுதிபடுத்திக் கொண்டார். அவர் ஒன்றும் காதலுக்கு எதிரி கிடையாது.... அவருக்கு முதலில் தோன்றிய விஷயமே.... தான் காதலிப்பவன் சரியான நிலையில் இருந்திருந்தால், நிச்சயம் மகள் அதை மனைவியிடம் வெளிப்படுத்தியிருப்பாள்.

அவள் அப்படிச் செய்யாமல்.... இங்கிருந்து தப்பித்துச் செல்ல முயல்கிறாள் என்றால்.... நிச்சயம் அதில் ஏதோ வில்லங்கம் இருக்கிறது. எண்ணியவர்.... கூர்மையாக அவளை ஏறிட்டார். மனைவியின் பக்கம் அவர் திரும்பவே இல்லை.

"என்னங்க நீங்க.... அவ நம்ம பொண்ணுங்க..." முத்துலட்சுமி சப்போட்டுக்கு வர, தந்தை எழுப்பிய

வினாவால்.... அனன்யா, நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்ள பேச்சற்று நின்றாள்.

"நீ பேசுற.... உன் பொண்ணு எப்படி நிக்கறா பார்..." அவர் வெடிக்க,

"பின்ன.... நீங்க இப்படி கேப்பீங்கன்னு அவ கனா கண்டாளா என்ன? என்னாலேயே நீங்க கேட்டதை தாங்கிக்க முடியலை.... அவ சின்னப் பொண்ணுங்க.... உங்களுக்கு அனுப்ப விருப்பமில்லாட்டி அதைச் சொல்லிட்டு போங்க.... அதை விட்டுபோட்டு...

"ஏய்.... நீ ஏண்டி இப்படி மரமாட்டம் நிக்கற.... அப்படி இல்லன்னு வாயைத் தொறந்துதான் சொல்லேன்..." மகளை இடித்தார்.

தந்தையிடம் பொய் சொல்ல தைரியமற்றவளாய்.... "நான் உங்க பொண்ணுப்பா..." கண்கள் கலங்க, உரைத்தாள்.

அவளை அழுத்தமாக ஏறிட்டவர்.... "உன்னை நம்பறேன்.... சென்னைக்கு என்னைக்குப் போகணும்...?" தன் சம்மதத்தை மறைமுகமாக வழங்க, அவர் அனுமதித்த சந்தோஷத்தை கூட அனுபவிக்க முடியாமல் மறுகிப் போனாள்.

"இன்னும் ஒரு வாரம் இருக்குப்பா..." தன்னை மீட்டுக் கொண்டவளாக பதில் கொடுக்க,

"நீ அந்த வேலைக்குப் போக வேண்டாம்.... என் நண்பனோட மகன்.... சென்னையில் புதுசா நகைக்கடை துவங்கி இருக்கான். அங்கே ஸ்டாக்ஸ் மேனேஜ் பண்ண பொறுப்பான ஆள் வேணும்னு கேட்டான். நீ அங்கே போ. அவங்களே உனக்கு தங்கறதுக்கும் ஏற்பாடு பண்ணுவாங்க. என்ன.... சரிதானே..." அவர் கேட்க, இதற்கு மறுத்துப் பேச முடியாமல் அமைதியானாள்.

அவள் மறுத்து பேசாமல்.... தன் கூற்றுக்கு ஒத்துகொள்ள, ‘அப்போ.... இவ வேலைக்காக போக நினைக்கலை...’ தன் எண்ணம் உறுதியானவராக, "திங்க்ஸ் எல்லாம் எடுத்துக்கோ.... நானே உன்னை அங்கே சேர்த்துட்டு வரேன்..." பேச்சு முடிந்தது என கிளம்பிவிட்டார்.

அனன்யா உறைந்துபோய் தன் அறைக்குச் செல்ல, கணவனின் பின்னால் ஓடிய லட்சுமி.... "என்னங்க.... அவ படிச்ச படிப்புக்கும், நீங்க சொல்ற வேலைக்கும், எப்படிங்க சரியாவும்..." அவரை தடுத்தார்.

"உன் பொண்ணே எதுவும் சொல்லலை.... உனக்கென்ன..." கடைக்கு விரைந்தார் மூர்த்தி. கணவனின் செய்கைக்கான காரணம் புரியாமல், தன் வேலையைப் பார்க்கப் போனார்.

அறைக்குள் நுழைந்தவளோ.... குமுறி அழுதாள். தந்தையின் நம்பிக்கையை காப்பாற்ற முடியாமல் போனால்.... அந்த நினைவே அவளை கொன்று கூறு போட்டது.

எல்லாம் இந்த பாழாய் போன காதலால்.... வேந்தனால் வந்தது. முதல் வேலையாக அவனுக்கு அழைத்து அவள் குமுற, "ம்ச்.., இப்போ எதுக்கு அழற.... அதான் வேலைக்கு போக பெர்மிஷன் கிடைச்சுடுச்சு இல்ல. அதை நினைத்து சந்தோஷப்படு.... எனக்கு வேலை இருக்கு அப்புறமா கூப்பிடுறேன்" அவன் அழைப்பை வைத்துவிட, அவளுக்கு ச்சே என இருந்தது.

‘என்ன மனிதன் இவன்.... இப்பொழுது கூட அவன் பக்கம் மட்டுமே யோசித்து வைத்துவிட்டானே.... என் மனதைப் பற்றி அவனுக்கு கவலையே இல்லையா...?’, அவளால் புலம்பத்தான் முடிந்தது.

ஒரு வழியாக தன்னை தேற்றிக் கொண்டவள், தந்தையோடு சென்னைக்கு பயணமானாள். அதற்கு முன்னர், தன் தோழி மைத்ரேயியைப் பார்த்தவள், விஷயத்தைச் சொல்ல.... அவள் மிகுந்த

சந்தோஷப்பட்டாள். அதே நேரம்.... வேந்தனிடமிருந்து தன் தோழி தப்பிவிடுவாள் என்ற எண்ணம் எழ உற்சாகமாகவே அவளுக்கு விடை கொடுத்தாள்.

அதே நேரம்.... மூர்த்தி தன்னை துளைக்கும் பார்வை பார்த்ததை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

****அழகாக அலங்கரிக்கப்பட்ட அறையில், தன் காதல் மனைவி, வருணாவின் வரவுக்காக நவீன் காத்திருக்க, கடிகார முள் நகரவே இல்லையா என்ற தவிப்பில், நொடிக்கொருமுறை அதையே வெறித்தான்.

முழுதாக அவன் பொறுமையை சோதித்த பிறகு, அறைக்கதவு திறக்கும் ஓசை கேட்க, படுக்கையை விட்டு எழுந்தே விட்டான். அவனுக்கு இருந்த படபடப்பும், தயக்கமும் வருணாவுக்கு இல்லை என்பதுபோல் இருந்தது அவளது செய்கை.

கதவை அடைத்து தாழ் போட்டவள், அங்கிருந்த டீபாயின்மேல் தன் கையில் இருந்த பால் டம்ப்ளரை வைத்துவிட்டு, அவன் பக்கம் திரும்பினாள்.

நிச்சயம் அவளிடமிருந்து இப்படி ஒரு செய்கையை எதிர்பார்த்திராதவன், இமைக்காமல் அவளையே வெறித்தான்.

"பால் குடிக்கறீங்களா...?" அவள் கேட்க, "இல்ல.... பசி இல்லை..." அவன் திணறித்தான் போனான்.

"ஓ.... அப்போ சரி.... வேற...?" அவனிடம் கேட்க, ‘இதற்கு என்ன சொல்ல?’ அவளை பரிதாபமாக வெறித்தான்.

கடந்த பதினைந்து நாட்களாக அவள் இப்படித்தான் நடந்து கொள்கிறாள் என்பதை எண்ணிப் பார்த்தவனுக்கு, அவளை எப்படி கையாள எனத் தெரியாமல் திண்டாடிப் போனான்.

அதற்காக அவனிடம் பேசாமலோ.... அவனை தவிர்க்கவோ செய்தாள் எனச் சொல்ல முடியாது. அவனிடம் உரையாடினாள் தான்.... அவன் அழைத்தால் அவனோடு வெளியே சென்றாள் தான்.... ஆனாலும்.... எதுவோ குறைவதுபோன்ற உணர்வு.

அவளுக்கோ.... தன்னை வேண்டாம் என சொல்லிவிட்டானே என்ற கோபம்.... அது எதனால் என்பதை அவனது தந்தை அவளிடம் விளக்கி விட்டாலும், மனதுக்குள் இருக்கும் தன்னை, வேண்டாம் என அவனால் மறுக்க முடிந்ததே.... என்ற ஆற்றாமை அதிகம் இருந்தது.

கோபம் குறைந்தாலும், அந்த ஆற்றாமையை அடக்கும் வழிதான் அவளுக்கு தெரியவே இல்லை. கடந்த பதினைந்து நாளாக, அவன் தன் கோபத்தையும் பொருட்படுத்தாமல், தன்னையே சுற்றி வருவதும், தன்னை, அவன் வாழ்க்கைத் துணையாக அடையப் போகிறோம் என்ற நினைவில்,

உரிமையாக, உணர்வாக தன்னைத் தாங்குவதும்.... அவன்மேல் சிறிதாக அவள் காட்டும் அக்கறை கூட, அவனை முழுதாக அசைத்துப் பார்ப்பதையும் உணர்ந்தவளுக்கு, அவன்மேல் இருந்த கோபம் போன இடமே தெரியவில்லை.

ஆனால்.... தான் அவன்மேல் கோபமாக ஏன் இருந்தோம் என்பதை அவனுக்கு தெரிவிக்கும் வேகம், அதைச் சொல்லாமல், அவனை சற்று தவிக்க விட்டால் எப்படி இருக்கும் என்ற அவளது சிந்தனை, அதுவே இப்படி அவனிடம் விளையாடிப் பார்க்கத் தூண்டியது.

"ஒண்ணுமே சொல்றதுக்கு இல்லையா...? அப்போ நான் படுத்துக்கவா...?" அவள் கேட்க, திருதிருத்தான்.

முதலிரவு அறைக்குள் எந்த ஆண்மகனும் கேட்க விரும்பாத கேள்வி இதுவாகத்தான் இருக்கும் என்பதை அந்த நேரம் உணர்ந்து கொண்டான்.

அவன் அமைதியாகவே இருக்க.... "கேட்டேனே..." அவள்தான் மீண்டும் அங்கே நிலவிய மௌனத்தை கலைத்தாள்.

"என்மேலே கோபமா இருக்கியா வரு...?" மென்மையாக, வார்த்தைக்கே வலிக்குமோ என்பதுபோல் அவன் வினவ,

"ரொம்ப சீக்கிரம் கண்டு புடிச்சுட்டீங்க போல..." நக்கலாக மொழிந்தாள்.

"என்னைப் பிடிக்கலையா...?" கண்களில் சற்று கலவரம் மூள கேட்டான்.

"ம்.... இன்னும் பத்து வருஷம் கழிச்சு கேக்குறது தானே.... உங்கள..." அவனை அடிக்க ஏதாவது கிடைக்குமா எனத் தேடியவள்.... தேடியது எதுவும் அகப்படாமல் போக, அங்கிருந்த தலையணையை எடுத்து அவன் மீது வீசினாள்.

அதை கேட்ச் பிடித்தவன்.... 'அவள் நிஜமாகவே கோபமாக இருக்கிறாளா, இல்லையா எனத் தெரியாமல் குழம்பித்தான் போனான்.

"மொத ராத்திரி அன்னைக்கு புருஷனையே அடிக்கற..." கொஞ்சம் தைரியத்தை வர வைத்துகொண்டு வினவ,

"ஓ.... அப்போ என்ன செய்யணுமாம்...? கொஞ்சணுமோ..." அவனிடமே விளக்கம் கேட்க, அவனுக்கு தலை சுற்றிப் போனது.

'ஆமாம்...' என தலையசைக்கத் துவங்கியவன், அவள் கண்களில் கோபத்தைக் காணவே, அந்த நினைப்பையே கை விட்டான்.

"இப்போ நான் என்னதான் செய்யட்டும்...?" அவளிடம் சமாதானமாகப் போக முயன்றான்.

"என்னைக் கேட்டா...?" அதற்கும் அவள் இடக்காக பதில் கொடுக்க, தலை சுற்றத் துவங்கியது அவனுக்கு. இவ்வளவு நடந்த பிறகும்.... அவள்மேல் கோபம் மட்டும் அவனுக்கு வரவே இல்லை.

அதை அவளும் உணர்ந்து கொண்டாள். "என்னைப் பிடிக்காமத்தான் கட்டிகிட்டியா...?" ஒரு வேளை அப்படியும் இருக்குமோ என அவன் சிந்திக்க....

"ஆமா.... பிடிக்காமத்தான் பதினைஞ்சு நாளா உங்க பின்னாடி நாய்க்குட்டி மாதிரி சுத்திட்டு.... காலையில் நீங்க கட்டுன தாலியையும் வாங்கிட்டு.... எப்போடா சாக்கு கிடைக்கும்னு உரசுன உங்களை தாங்கிகிட்டு.... இப்போ இந்த ரூமுக்குள்ளே வந்து நிக்கறேனா...?" அவனிடமே அவள் திருப்பிக் கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் விழித்தான்.

இப்பொழுது அவனுக்கு தாகமெடுப்பதுபோல் இருக்க, அவள் அங்கே வைத்திருந்த கப்பை ஒரு பார்வை பார்த்தான்.

"எடுத்து குடிங்க.... தொண்டை வரண்டு போயிருக்கும்..." கடுப்பானாள்.

அவள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என எண்ணியவன், அதை ஒரே மூச்சில் குடித்து முடிக்க, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

அதைப் பார்த்தவன்.... "பால் நீ குடிக்க எடுத்துட்டு வந்தியா...?" அதி முக்கியமான சந்தேகத்தைக் கேட்க, அடுத்த தலையணை அவனை நோக்கி பாய்ந்து வந்தது.

அதன் தாக்குதலில் இருந்து விலகிக் கொண்டவன், "வரு.... நீ என்னமோ எதிர் பாக்குற.... அதை நான் செய்யலன்னு கோபப்படுற.... சத்தியமா அது என்னன்னு எனக்குத் தெரியலை. ப்ளீஸ் நீயே சொல்லிடு..." அவளிடம் கெஞ்சியே விட்டான்.

"சொல்லிட்டா மட்டும்.... என்னை கோபப்பட வைக்காதீங்க.... பேசாமல் குப்பற படுத்து தூங்குங்க..." சொன்னவள், படுக்கையின் ஓரம் சென்று அவனுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டாள்.

அவள் செய்கையை நம்ப முடியாமல் பார்த்தவனுக்கு, அவள் அறைக்குள் வருவதற்கு முன்பு, உடல் முழுவதும் புசுபுசுவென்று கிளம்பிய அனைத்து உணர்வுகளும் வடிந்து விட்டதைப் போன்ற உணர்வு.

ஆனாலும்.... தன் படுக்கையில் இருந்த மலர்களின் வாசமும், மல்லிகையின் மணமும்.... தன் மனதுக்கு இனியவளின் உடனிருப்பும் அவனை சற்று தவிக்க வைக்க, அதே நேரம்.... அவள் புடவை நகையோடு படுத்திருப்பதைப் பார்த்தவன்,

"வரு.... புடவை நகையாவது மாத்திட்டு படு..." அவள் அருகில் வந்து அமர்ந்து உரைக்க.... அவன் உரைப்பதில் இருக்கும் நியாயம் புரிய, நகையை மட்டும் கழட்டியவள், புடவையோடு படுத்துக் கொண்டாள்.

தானும் அவள் அருகில் இடைவெளி விட்டு படுத்தவன், அவள் முதுகுகைப் பார்க்க திரும்பிப் படுத்துக் கொண்டான். சற்று நேரம் அமைதியில் கழிய, 'தூங்கிட்டானோ...?' அவள் எண்ணமிட,

"வரு.... புடவையில் தூங்க கஷ்டமா இருக்குமே..." மெதுவாக குரல் கொடுக்க, பட்டென அவன் பக்கம் திரும்பியவள், 'கேக்குறான் பாரு கேள்வியை' எண்ணமிட்டவள் அவனைப் பார்க்க, அவள் பார்வைக்கான பொருள் நிச்சயம் அவனுக்குப் புரியவே இல்லை.

"என்ன...?" அவளிடமே கேட்க, "அக்கறை..." அவள் ஒரு மாதிரி இழுக்க, அவள் பேச்சை கண்டுகொள்ளாமல் அவள் முகத்தையே வெறித்தான்.

அவன் பார்வையின் வேகம் தாளாமல், வேகமாக திரும்பி படுத்துக் கொண்டவளுக்கு, இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவ, கட்டில் அசைவதை வைத்து, அவன் தன்னை நெருங்குவதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. தன் படபடப்பை மறைத்து, மூச்சடக்கி அவள் காத்திருக்க, அதன் பிறகு எந்த அசைவும் இருக்கவில்லை.

கடிகார முள்ளின் ஓசை மட்டுமே அறையை நிறைக்க, ஏசியின் ரீங்காரமும் உடன் இணைந்து கொண்டது.

நவீனுக்கோ இமைகளை மூடக் கூட முடியவில்லை. கைக்கெட்டும் தூரத்தில் சொர்க்கத்தை வைத்துகொண்டு தள்ளியிருப்பது அவஸ்த்தையாக இருக்க, அவன் வலக்கரமோ.... அவளை தொட்டுவிடும் தூரத்தில் தவிக்க, கையை நீட்டுவதும் மடக்குவதுமாக தனக்குள் போராடிக் கொண்டிருந்தான்.

அவளோ.... ‘ஏன் இப்படி...?’ என தவிக்க, ‘என்னதான் செய்கிறான் பார்ப்போம்’ என்ற எண்ணத்தில் அசையாமல் படுத்திருந்தாள்.

இப்படியான கண்ணாமூச்சியில் சற்று நேரம் கடக்க, ஒரு முடிவிற்கு வந்தவன், அவள் இடைக்குமேல் இருந்த வலக்கரத்தில் தன் கரத்தை போட்டவன், அவள் முதுகோடு ஒட்டிக் கொண்டான்.

ஏசியின் குளுமையையும் மீறிய ஒரு அனல் அவளைத் தாக்க, அவள் பின்னங்கழுத்தில் கன்னம் உரசி, அவள் காது மடலில் இதழ் தீண்டியவன், "வரு.... ஆறு வருஷமா தவிக்கறேன்.... சத்தியமா முடியலை..." அவள் விரல் கோர்த்து நெரித்தவன், அவள் கன்னத்தில் தன் முதல் முத்திரையைப் பதிக்க, அது ஏற்படுத்திய தாக்கத்தில் அவள் தேகத்தில் மெல்லிய நடுக்கம்.

ஆனால்.... அதையும் மீறி, மெல்லிய கோபம் எட்டிப் பார்க்க, "ஆமா.... அப்படித்தவிக்கிறவர்தான்.... இது ஒத்துவராதுன்னு சொன்னீங்களோ..." தன் கோபத்தை கொட்டினாள்.

அவள் கோபத்துக்கான காரணம் புரியவர, அவளை பட்டென தன் பக்கம் திருப்பியவன், "ஏய்.... நீதானே என்னை விடாமல் கேலி பண்ணுவ.... பிறகு எப்படி உனக்கு என்னைப் பிடிக்கும்னு நான் நினைக்கிறதாம்? அதான்.... எங்கே உன் அண்ணன் கேட்டு, நீ என்னை மறுத்துடுவியோன்னு பயத்திலேதான் அப்படிச் சொன்னேன்..." அவன் தன் மனதில் இருந்ததை உரைக்க, அதைப் புரிந்தவள் அமைதியானாள்.

ஆனாலும்.... அவன் எப்படி தன்னை வேண்டாம் எனச் சொல்லலாம் என்ற கோபம் தலை தூக்க, "அதுக்கு.... என்னை வேண்டாம்னு சொல்லுவியாடா, கருவாயா.... கருவாயா.... இப்போ என்னடா செய்வ...?" அவனை சரமாரியாக அடித்து, அவன் முடியைப் பிடித்து ஆட்டினாள்.

"வரு.... அதுக்குன்னு என்னை இப்படியா தவிக்க விடுவ.... இப்போ என்னை என்ன வேண்ணா சொல்லிக்கோ.... எனக்கு கவலையே இல்லை. இந்த கருவாயனைத்தானே ஆசைப்பட்டு கட்டிகிட்ட.... எனக்கு அது போதும்..." அவள் செய்கையால் தனக்கு வலித்தாலும் அதை சுகமாய் தாங்கிக் கொண்டான்.

"சொல்லுவடா.... ஏன் சொல்ல மாட்ட.... அதான் என்னை ரெண்டு நாள்ல அப்படியே தவிக்க விட்டு.... நானே உன்னைத் தேடி வர மாதிரி பண்ணிட்டல்ல.... உனக்கு இன்னைக்கு ஒண்ணும் கிடையாது. நீயும் ரெண்டு நாள் பட்டால்தான் உனக்கு புத்தி வரும்...

"போ.... போ.... போய் தள்ளிப்படு..." அவனை தன்னிடமிருந்து தள்ளி விட்டாள்.

"என்னது.... ரெண்டு நாளா.... ரெண்டு மணி நேரமில்லை.... இனிமேல் ரெண்டு நிமிஷம் கூட என்னால் காத்திருக்க முடியாது. உள்ளே வந்தது முதல் மனுஷனை தலையால் தண்ணி குடிக்க வைக்கிற.... உனக்கு அதுக்கெல்லாம் சரியான தண்டனை கொடுக்காமல் விட மாட்டேன்..." அவள் கரத்தை உடும்பாய் பற்றிக் கொண்டான்.

"டேய் வேணாம்.... சொன்னாக் கேளு..." அவனைத் தடுக்க,

"புருஷனையே டேய்ன்னு சொல்லுற இந்த வாயை..." அவள் இதழ்களில் தன் முரட்டு இதழை வைத்து அவன் பூட்ட, ஒரு பேரலைக்குள் தான் சிக்கிக்கொள்ளும் உணர்வு.

அவள்மேல் அழுத்தமாக அவன் படர.... தேகங்களுக்குள் தீமூண்ட உணர்வில் தகித்துப் போனாள். அவள் இதழ்களுக்குள் மூழ்கி, அவள் கன்னம் தீண்டி.... அவள் கழுத்தடியில் அவன் முகம் புதைக்க, மொத்தமாய் நிலை குலைந்து போனாள்.

அவன் சிகைக்குள் கரம் கோர்த்து, தனக்குள் அவனை புதைக்க முயல, அவன் கரங்கள் அவள் மேனியில் தன் உரிமையை நிலைநாட்டத் துவங்கியது.

அவன் கரங்களை தடுக்க முயன்று அவள் போராட.... அந்த பிடிவாதக்காரன் முன்னால் அவள் தோற்றுத்தான் போகவேண்டி இருந்தது.

"ஏய்.., என்னமோ இவ்வளவு நேரம் பேசின..." அவள்மேல் தனக்கிருந்த தடைகளைக் கடந்த களிப்பில் அவள் காதில் அவன் கிசுகிசுக்க,

"டேய்.... பேசாதடா..." மீண்டும் அவள் இதழ்களுக்குள் அவன் தொலைய, அவனது நெருக்கத்தில் சற்று துவண்டுதான் போனாள்.

"ம்ஹூம்.... முடியலை.... நவீ..." கெஞ்சலாக.... காதலாக.... குழைவாக அவள் பேச்சு அவனைத் தூண்ட, முழு மூச்சாய்

அவளோடு கலந்தான். சோர்ந்து போனவளை தன் முத்தத்தால் தெளிய வைத்தவன், அவளை தன்மேல் சாய்த்துக் கொண்டான்.

"முரடா.... இப்படியா பண்ணுவீங்க...?" செல்லமாய் அவனை அடிக்க, "இதுக்கே இப்படின்னா.... இன்னும்..." அவள் காதுக்குள் அந்தரங்கமாய் அவன் உதிர்த்த வார்த்தைகளை கேட்டவளோ....

"நீங்க ரொம்ப மோசம்..." அவன் நெஞ்சுக்குள் தன் முகத்தை புதைத்துக் கொள்ள, அந்த முரடனோ அந்த இரவை முடிவில்லா இரவாக்கும் வேலையைத் துவங்க, சிணுங்கலாக என்றாலும் அவனுக்குத் துணையிருப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

விடியலின் துவக்கத்தில் அவளுக்கு அவன் ஓய்வளிக்க.... அந்த இரவின் துவக்கம் முதல் தன் பேச்சுக்களையும், அடிகளையும், கோபத்தையும் பெற்றுக்கொண்டு, தன்மேல் பாசத்தை மட்டும் பொழிந்த அவன்மேல் காதல் இன்னும் பலமடங்கு அவளுக்கு கூடியது மட்டும் உண்மை.

தன் நிறத்தை ஒரு பொருட்டாக கருதாமல், வெகு இயல்பாய் தன்னை ஏற்றுக்கொண்டு, தன்னையே முழுதாக தனக்கு அர்ப்பணித்த அவனுக்கும் அவளை இன்றுபோல் என்றும் தாங்கவேண்டும் என்ற வேகம் பிறந்தது.

9

ஆயிற்று.... சென்னையின் வாழ்க்கைக்கு தன்னை பொருத்திக்கொண்டு, ஆறு மாதங்கள் ஓடியதை அனன்யாவால் இன்னும் நம்பத்தான் முடியவில்லை. முதல்நாள்.... அந்த நகைக்கடைக்குள் நுழைந்தபொழுது, 'இங்கே என்ன செய்யப் போகிறோம்...' என மலைப்பாக உணர்ந்தாள்.

ஆனால்.... அதற்கு அவசியமே இல்லை என்பதுபோல்.... கடையின் முதலாளி, தன் தந்தையின் நண்பனின் மகன்.... கதிரேசன் அவள் செய்ய வேண்டிய வேலையை, முதல் மூன்று நாட்கள் உடனிருந்து சொல்லிக் கொடுக்க, இயல்பிலேயே புத்திசாலியான அனன்யா அவற்றை சரியாக புரிந்து கொண்டாள்.

தங்கம் பற்றிய விஷயம் என்பதால்.... கூடுதல் கவனமோடு அவள் செயல்பட வேண்டி இருந்ததால், தேவையற்ற சிந்தைகள் எதுவும் அவளைத் தீண்டி தொல்லை செய்யவில்லை. ஒரு வேளை.... மூர்த்தியின் திட்டம் இதுவாகத்தான் இருந்ததோ என்னவோ.

கதிரேசனின் மாமனார் தயவால் துவங்கிய கடை என்பதால்.... அவனும் பொறுப்பாக செயல்பட வேண்டி இருந்ததால், இதுவரைக்கும் கச்சிதமாகவே செயல்பட்டாள்.

மூர்த்தி கோவை செல்லும் முன்னர், அவளிடம் சொன்ன விஷயம் ஒன்றே ஒன்றுதான். "செய்யிற வேலைக்கு உண்மையா இருக்கணும். முழு கவனமும் இருந்தால் தான் இதைச் செய்ய முடியும். பாத்து இருந்துக்கோம்மா..." அவளிடம் உரைத்தவர், கிளம்பிவிட்டார்.

தன் கையில் இருந்த அலைபேசி அதிரவே, கடைக்குள் ஒரு ரவுண்ட் மேற்பார்வையிட்டவள், அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்து முகம் மலர்ந்தவளாக, அதை

உயிர்பித்து, காதுக்கு கொடுத்தவாறு தன் அறைக்கு விரைந்தாள்.

"கெவின்.... எப்படிடா இருக்க? நல்லா படிக்கிறியா? சித்தி எப்படி இருக்காங்க...?" உற்சாகமாக குரல் கொடுத்தாள்.

"அக்கா.... இங்கே நாங்க நல்லா இருக்கோம். நீ எப்படிக்கா இருக்க? என்னைய விட்டுட்டு நீ மட்டும் சென்னைக்கு போய்ட்ட பாத்தியா. நான் உன்கூட பேசவே மாட்டேன் போ..." தான் அவளிடம் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம் என்பது தெரியாமல் முறுக்கிக் கொண்டான்.

"அடடா.... என் சின்னத் தம்பிக்கு என்ன கோபமாம். இப்போ என்ன.... உனக்கு சென்னைக்கு வரணும்.... அவ்வளவு தானே. உனக்கு பரீட்சை முடிஞ்சதும் ஒரு வாரம் இங்கே வா.... அக்கா உனக்கு சென்னையை சுத்திக் காட்டுறேன் போதுமா...?" சமாதானப் படுத்தினாள்.

"நிஜமாவாக்கா.... அப்போ அம்மாகிட்டே சொல்றியா...?" அவர் சந்தோஷத்தில் குதிக்க,

"டேய்.... அதுக்கு இன்னும் மூணு மாசம் இருக்குடா. கண்டிப்பா சித்தி கிட்டே பேசுறேன். நீ எப்படி படிக்கிற? முதல்ல அதைச் சொல்லு...".

"நீ சொன்ன மாதிரியே முதல் அஞ்சு ரேங்குகுள்ளே வாங்கிட்டேன். நீ எனக்கு எப்போ பேட் (bat) வாங்கிக் கொடுக்கப்போற...? என்னைய ஏமாத்தணும்னு நினைச்ச.... அவ்வளவுதான்..." அவன் போன் பேசியதன் காரணம் அவளுக்கு புரிந்து போனது.

"நீ எப்போக்கா வர.... உன்னையா பாக்கதுக்கு ஆசையா இருக்குக்கா..." எப்பொழுதும் தன்னை உடன் இருத்திக்கொண்டு, இன்னொரு அன்னையாக இருக்கும் அவளை அவன் ரொம்பவே மிஸ் செய்வது அவன் பேச்சில் அவளால் உணர முடிந்தது.

"அக்கா அடுத்த மாசம் வரேண்டா..." அவளும் ஏக்கமாக உரைத்தாள்.

"அப்போ வரப்போ வாங்கிட்டு வரியா..." அவள் பதில் சொல்லும் முன்னர்,

"டேய்.... போனைக் கொண்டாடா.... எப்போ பார்.... பேட்டு.... பாலுன்னு.... உனக்கு அதை வாங்கிக் கொடுத்தே அவ சம்பளம் புல்லா காலியா போய்டும். குடு இங்கே..." அவனிடமிருந்து அலைபேசி பறிக்கப்பட்டது.

"அக்கா.... நீ சொன்ன.... பாத்துக்கோ..." கெவினின் குரல் தேய்ந்து மறைய, "அம்மாடி.... அன்னம்.... எப்படி இருக்க? சாப்பாடு எல்லாம் ஒத்துக்குதா? தங்குறதுக்கு ஒண்ணும் குறைவில்லையே..." சித்தி பாரிஜாதத்தின் குரல் வாஞ்சையாய் ஒலித்தது.

அதெப்படிதான் போன் பேசும் பொழுதெல்லாம் இதை மறக்காமல் கேக்கறாங்களோ.... சித்தியின் பாசத்தில் நனைந்தவளாக, "நான் நல்லாத்தான் இருக்கேன் சித்தி. நீங்களும் தம்பியும் எப்படி இருக்கீங்க? அவன் நல்லா படிக்கறானா?" அவள் கேட்க,

"அதென்னவோ.... நீ சொல்லிட்டு போன பிறகு நல்லாத்தான் படிக்கறான். என்ன.., சனி ஞாயிறு வந்தா போதும்.... இந்த பயலுகளோட சேர்ந்து மட்டைய தூக்கிட்டு விளையாட போயிடுறான். அது ஒண்ணுதான்..." குறை பட்டார்.

"சின்னப்பையன்தானே சித்தி.... இப்போ விளையாடாமல் எப்போ விளையாடுறது...?".

"அடுத்த வருஷம் பத்தாப்பு போறோம்னு கொஞ்சம் கூட கவலையே இல்லை. இன்னும் சின்னப் பையன்னு நினைப்பு. எனக்கு அவனை நினைச்சுத்தான் கவலையே..." காலம் கடந்து பிறந்த பிள்ளையை நினைத்து முழுதாக சந்தோஷப்பட்டு முடிக்கும் முன்னர், காலம் கணவனை

மாரடைப்பில் கொண்டுபோன வருத்தம் அவர் குரலில் இழையோடியது.

தனக்குப் பின்னர் யார் அவனைப் பார்ப்பார்கள் என்பதும் சேர, அவர் குரல் சோர்ந்து போனது. "அப்படியெல்லாம் அவனை விட்டுடுவோமா? நீங்க கவலைப்படாமல் நிம்மதியா இருங்க சித்தி. அவன் நல்லா வருவான்..." மேலும் அவரிடம் சற்று நேரம் உரையாடிவிட்டு வைத்தாள்.

அவர்களிடம் உரையாடிய பிறகு, அவர்களைக் காணவேண்டும் என்ற ஏக்கம் கிளம்ப, நிச்சயம் அடுத்த மாதம் ஊருக்குச் செல்ல வேண்டும் என முடிவெடுத்தவளாக வேலையைத் தொடர்ந்தாள்.

****வீடே உற்சாக மிகுதியில் திளைத்திருக்க, தன் காதல் மனைவியின் பூரிப்பும், வெட்கமும் பார்த்து வானில் மிதந்துகொண்டிருந்தான் நவீன். சந்தோஷத்தைக் கொண்டாட, அனைவருக்கும் பாயாசம் பரிமாறிக் கொண்டிருந்த பார்வதி, சற்று ஏக்கமாக மகனை ஏறிட்டார்.

மகள் தாயாகபோகும் சந்தோசம் ஒரு பக்கம் இருந்தாலும், மகன் வாழ்க்கை இன்னும் எழுதப்படாமலே இருப்பதை எண்ணி கவலை கொண்டார். அதை மறைத்தவாறே அவர் உலாவ,

அவர் பார்வையை உணர்ந்து எழுந்த குற்ற உணர்ச்சியில் தவித்தவனாக, அமைதியாக அவரிடமிருந்து பாயாச கிண்ணத்தை பெற்றுக் கொண்டவன், "முதல்ல தங்கச்சியை கவனிங்கம்மா..." அவரை அனுப்பினான்.

அவ்வளவு நேரமாக தன் மனைவியிடம் மட்டுமே கவனத்தை பதித்திருந்த நவீன், "டேய் மச்சான்.... கொஞ்சம் வா பேசணும்..." அவனை அழைத்துக்கொண்டு மாடி ஏறினான்.

நண்பன் எதைப்பற்றி கேட்கப் போகிறான் என்பதை அறிந்தவனாக, அவனுடன் சென்றவன், எதையும் காட்டிக்

கொள்ளாமல், பாயாசத்திலேயே கவனமாக இருக்க, "பாயாசம் நல்லா இருக்கா...?" கடுப்புடன் கேட்ட நவீனை ஏறிட்டவன்,

"எங்க அம்மா வச்சதுடா.... நல்லா இல்லாமல் போகுமா...?" அவனிடமே திருப்பிக் கேட்டான்.

"எல்லாம் சரி.... நீ எப்போ சந்தோஷமான விஷயத்தை சொல்லப் போற?" அவன் கேட்க,

"டேய்.... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலடா.... இப்போ சந்தோஷமான விஷயத்தை சொன்னேன்னு வையி.... எங்க அம்மாவே என்னை விளக்குமாத்தைக் கொண்டு அடிப்பாங்க..." அவன் கேள்வியை கண்டுகொள்ளாதவனாக உரைக்க,

"ஜோக்கு.... கொஞ்ச நேரம் கழிச்சு சிரிக்கறேன். இப்போ நான் கேட்டதுக்கு பதில் சொல்லு..." சற்று கோபமாகவே கேட்டான்.

அவன் கேள்விக்கு சட்டென பதில் சொல்ல முடியாதவனாக அவன் அமைதியாக, "டேய் நகுல்.... ஊர் உலகத்தில் இப்படி ஒரு அம்மாவை நான் பாத்ததே இல்லடா. யாருன்னே தெரியாத ஒரு பொண்ணை, மகன் தேடுறான்னு தெரிஞ்சும்.... கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா.... அவங்க அமைதியா இருக்காங்கன்னா.... அவங்க அமைதிக்கு நீ கொடுக்கும் மதிப்பு இது தானா?" ஆழமான குரலில் அவன் கேட்க, கண்களை இறுக மூடி மௌனித்தான்.

"நவீன்.... நீ சொல்றது எனக்கு மட்டும் புரியலன்னா நினைக்கிற?" அமைதியாக அவன் கேட்க,

"புரிஞ்சவன்தான் பேசாமல் இருக்கறியா...?".

"நான் கண்ணை மூடினால், என்னைக்கு அவளோட உருவம் என் மனக்கண் முன்னாடி வராமல் போகுதோ....

அன்னைக்கு நான் நல்ல முடிவா சொல்றேன்..." பிடி கொடுக்காமல் நழுவினான்.

"அப்படி ஒரு நாள் வரும்னு நினைக்கறியா...?" நண்பனின் மனம் புரிந்தவனாக அவன் கேட்க, அதே மௌனத்தை பற்றிக் கொண்டவன்,

"தெரியலடா.... ஆனா.... சரி விடு.... கோவையில் அந்த தேவாரம் ஏதோ பிரச்சனை பண்றான்னு சொன்னியே அது என்ன ஆச்சு? இங்கே இருந்தே பிரச்சனையை தீர்க்க முடியவில்லை என்றால்.... அவனைப் போய் பார்த்து பேச வேண்டியதுதான். என்ன சொல்ற...?" நண்பனிடம் இதற்குமேல் அவன் சொந்த விஷயத்தைப் பற்றி பேச முடியாது என உணர்ந்தவனாக,

"அவன் சரிப்பட்டு வர மாட்டாண்டா. நம்மகிட்டேயே வேலையைக் கத்துகிட்டு, நமக்கெதிராவே வேலையைக் காட்டப் பாக்குறான். அவனைப் போய் தட்டி வச்சால்தான் சரியாவான்..." தானும் அவனோடு இணைந்து கொண்டான்.

"அப்போ சரி.... அதுக்கான வேலையைப் பார்ப்போம். எல்லாம் நல்லபடியா நடக்கும்..." அடுத்த வாரமே அங்கே செல்ல தேவையான ஏற்பாடுகளைச் செய்ய, இருவரும் கிளம்பி விட்டார்கள்.

*** "அனு.... ஏண்டி இப்படிப் பண்ற.... ஊருக்கு வந்ததும் வராததுமா உனக்கு இப்போ கடைக்கு போயே ஆகணுமா? வீட்டுக்கு போய் குளிச்சு சாப்ட்டு, ரெஸ்ட் எடுத்துட்டு போனால் ஆகாதா...?" தோழியிடம் கத்திக் கொண்டிருந்தாள் மைத்ரேயி.

"மையூ.... ப்ளீஸ்டி.... கோச்சுக்காத. கெவின்க்கு பேட் வாங்கிட்டு வரேன்னு சொல்லிட்டேன். இப்போ வாங்காமல் போனால்.... ஏம்மாந்து போய்டுவாண்டி. ஒரு அரைமணி நேரம் ஆகுமா...? ப்ளீஸ்டி..." கெஞ்சினாள்.

"ஆன்னா.... ஊன்னா.... உடனே கெஞ்சத் தொடங்கிடுவியே. சரி.., போகலாம்.... வேற வழி. வந்ததுதான் வந்த.... கொஞ்சம் சீக்கிரம் வரக் கூடாது. இப்படி ட்ராபிக் சேருறப்போ வரியே. இவன் இந்த ட்ராபிக்கில் தவழ்ந்து போறதுக்குள்ளே அடுத்த நாளே விடிஞ்சுடும்..." கோவை பஸ் நிலையம் இறங்கி, தங்கள் வீட்டுக்குச் சுற்றிச் செல்லும் பேருந்தில் ஏறி இருந்த தோழிகள் இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

"நானும் சீக்கிரம் வரணும்னுதான் நினைத்தேன்.... கடையின் ஸ்டாக் வெரிபை பண்ணிட்டு, கதிரேசன் சார்ட்ட பொறுப்பை ஒப்படைக்க லேட் ஆயிடுச்சு. அவரே தன்னோட கார்ல என்னை கோயம்பேட்டில் டிராப் பண்ணிட்டு, பஸ் ஏத்தி விட்டுட்டுதான் போனார்..." அவள் விவரிக்க, பஸ்க்கு வெளியே தலையை நீட்டி, பச்சை விளக்கு எப்பொழுது எரியும் என எட்டிப் பார்த்தாள் மைத்ரேயி.

ஜன்னல் பக்கம் இருந்த தன்னைத் தாண்டி எட்டிப் பார்த்த அவளை, கையால் உள்ளே தள்ளியவாறே.... "சிக்னல் போட்டா அவனே வண்டியை எடுக்கப் போறான்.... நீ ஏண்டி..." அவளை கடிந்துகொள்ள, அலுப்பாக உச்சு கொட்டியவாறே இருக்கையில் அமர்ந்தாள்.

அதே நேரம்.... அவர்களுக்கு எதிர் திசையில் வண்டியில் சென்றுகொண்டிருந்த நகுல், நவீனிடம் எதையோ பேசியவாறு திரும்பிப் பார்க்க, அவ்வளவு நேரமாக சிக்னலுக்காக நின்ற அவளது பேருந்து நகர, வினாடி நேரத்தில் தன்னைக் கடந்த அந்த பேருந்தில் இருந்து மின்னி மறைந்த அந்த முகம்.... தேகம் மொத்தமும் பரபரப்பாக,

"டிரைவர்.... காரை நிப்பாட்டு..." கிட்டத்தட்ட கத்தியவன், அவன் ஓரம்கட்டி நிறுத்தும் முன்னர், 'கார்'க் கதவைத் திறந்துவிட்டு, குதித்தே விட்டான்.

ஓடும் காரில் இருந்து இப்படி ஒருவன் குதிப்பான் என்பதை எதிர்பாராத ஆட்டோ டிரைவர், அவன்மீது மோதிவிடாமல் இருக்க ஆட்டோவை சடன் பிரேக் போட்டு நிறுத்த, ஆட்டோவின் பின்னால் வந்த டிம்போ அவன் ஆட்டோவில் மோதியே விட்டது.

அவன் செய்கையில் திகைத்த நவீன், "நகுல்..." கத்தியவாறே எதிர்பக்கம் இருந்து இறங்கி ஓட, ஆட்டோக்காரன் நகுலை கெட்ட வார்த்தையால் சரமாரியாகத் திட்ட, அதையோ.... அடுத்ததாக சென்று கொண்டிருந்த பைக்கின் மீது மோதப்போய்.., இறுதியில் சுதாரித்துக் கொண்டு, விலகி ஓடிக் கொண்டிருந்தான் நகுல்.

"டேய்..." நவீனால் அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் தேங்க, அதே நேரம்.... ஆட்டோக்காரனுக்கும், டிம்போக்காரனுக்கும் பெரிய சண்டையே அங்கே மூளத் துவங்கியது.

நகுலோ.... தன் கண் பார்வையில் இருந்து அந்த பேருந்து தப்பிவிடக் கூடாது என்ற எண்ணத்தில், எதைப் பற்றியும் கவலைப்படாமல், டிவைடரைக் கூட ஒரே தாண்டாகத் தாண்டியவன்.... பேருந்தை நோக்கி ஓட்டம் பிடித்தான்.

"ஆண்டவா.... இவன் ஏன் இப்படிப் பண்றான்..." நவீன் புலம்பியவாறே, அவன் சென்ற திசையில் தானும் ஓடினான்.

நகுல் வரும் முன்பே அந்த பேருந்து வேகமாகக் கடந்திருக்க, வெறிகொண்டு அதைத் துரத்தினான். தன் வாழ்நாளிலேயே இப்படி ஒரு ஓட்டத்தை அவன் ஓடியிருக்கவே மாட்டான்.

அதே நேரம்.... பேருந்துக்குள் இருந்த அனன்யா.... அந்த பேருந்தில் இருந்த நடத்துனரிடம்.... "அண்ணா.... அந்த ஏகேஎன் ஸ்டோர்ஸ் முன்னாடி கொஞ்சம் வண்டியை நிப்பாட்டுறீங்களா...? நாங்க இறங்கிக்கறோம்..."

அவளுக்குத் தெரிந்தவர் என்பதால், அவரும் அவளை அங்கே இறக்கினார்.

நகுல் பேருந்தை அடையாளம் வைத்து ஓடிக் கொண்டிருந்ததால், வண்டி ஒரு நொடி நின்றதையோ, அதில் இருந்து இறங்கிய இரு பெண்களும், அந்த ஸ்டோருக்குள் நுழைந்ததையோ பார்க்கவே இல்லை. வெறிகொண்டு ஓடி ஒரு வழியாக அதைப் பிடித்தே விட்டான்.

ஓடும் பேருந்தில் ஏறிய அவனைப் பார்த்த நடத்துனர், "ஏம்ப்பா.... இப்படி ஊடுர பஸ்ஸில் ஏறுறியே.... ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆனா யார் பதில் சொல்றது? இந்தக்கால பிள்ளைங்களுக்கு உசுரோட மதிப்பு தெரியவே மாட்டேங்குது. சரி எங்கே போகணும்...?" டிக்கெட்டை ஆராய்ந்தவாறே அவனிடம் கேட்டார்.

அவனோ.... தனக்கு பெருமூச்சு வாங்குவதைக் கூட பொருட்படுத்தாமல், வேகமாக முன்னேறியவன், தான் அவளை பார்த்த இடத்துக்கு முன்னேறிச் சென்று பார்க்க, அங்கே வேறு பெண் இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டான்.

ஒரு பக்கம் ஏமாற்றம் மனதைக் கவ்வ.... தன் கண்கள் பொய் சொல்லாது என எண்ணியவன்.... "ஏ..ங்...க.... இங்..கே வே..ற ஒரு.. பொண்ணு.. இருந்தாங்களே..? அவ..ங்க எங்...கே...?" தன்னை நிதானப்படுத்திகொள்ள முடியாதவனாக, மூச்சு வாங்க கேட்டான்.

அவன் இவ்வாறு கேட்கவே.... சட்டென அந்த பேருந்தில் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது. "என்னப்பா.... ஓடுற பஸ்ஸில் ஏறினது போதாதுன்னு.., வம்பை வளக்கறியா...?" நடத்துனர் எகிறினார்.

"இல்ல சார்.... எனக்கு அவங்களைத் தெரியும்..."

"தெரியும்னா.... அவ வீட்டில் போய் பார்..." கத்தினார்.

"அவங்க வீட்டு அட்ரஸ் தெரியுமா...?" அவன் ஆர்வமாக கேட்க,

"டேய்.... உனக்கு எம்புட்டு தைரியம் இருந்தால்.... பொம்பளைபுள்ள விலாசத்தை என்கிட்டேயே கேப்ப.... உடம்பு எப்படி இருக்கு..." அவர் ஒரு பக்கம் எகிற,

"இதுக்குன்னே பத்து பேர் திரியறாங்க..."

"இவனுங்களை எல்லாம் சும்மா விடக் கூடாது..."

"போலீசில் பிடிச்சுக் கொடுக்கணும்..." ஆளாளுக்கு பேச அவனோ, எதையும் கண்டு கொள்ளாமல்,

"ஏங்க.... நீங்களாவது சொல்லுங்களேன்.... அவங்க எங்கே இறங்கினாங்க...?" அந்த இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணிடம் கேட்க, அவள் விழி விரித்தாள்.

"ஏலேய்.... இம்புட்டுபேர் கேக்கறோம்.... உனக்கு அம்புட்டு திமிராலே..." ஒருவர் குரல் கொடுக்க,

"இவனை அடிச்சு கீழே தள்ளுங்கலே..." இளவட்டம் துள்ள,

"ஏங்க.... நான் கேட்டுட்டே இருக்கேன்.... ஏதாவது சொல்லுங்க..." அவனோ தன் பிடியிலேயே இருந்தான்.

அதென்னவோ இவ்வளவு நேரமாக அவனது மரியாதையான தோற்றம் அவனை காத்துக் கொண்டிருக்க, பெரியவர்கள் ஆத்திரமாக பேச, இளந்தாரிப் பயல்களோ.... "இவன்கிட்டே எல்லாம் வாயாலே பேசக் கூடாது..." முதலாமவன் அவன் சட்டையைப் பிடிக்க, சரியாக அதே நேரம் பேருந்துக்குள் நுழைந்தான் நவீன்.

"நகுல்...". சூழ்நிலையை நொடியில் புரிந்தவன், ஒரே தள்ளில் அனைவரையும் தள்ளிவிட்டு உள்ளே புகுந்தான்.

நடந்த குழப்பத்தில் பேருந்து நின்றுவிட்டிருந்தது. அதுவே நவீனுக்கு வசதியாகப் போயிற்று.

நகுலின் சட்டையைப் பிடித்திருந்தவனது கையை ஒரே இடியில் விலக்கியவன், "விடுங்கையா அவனை.... நகுல்.... என்னடா...?" நண்பன் ஓடி வந்ததன் காரணம் அவனுக்கும் தெரியாதே.

அந்த கூட்டத்தில் நவீனைப் பார்த்தவன், தனக்கு ஆதரவு வந்துவிட்டது என்ற எண்ணத்தில், "நவீன்.... நான் பாத்தேண்டா.... இங்கதான்.... இந்த சீட்டில்தான் இருந்தாடா. கேட்டா யாரும் சொல்ல மாட்டேங்குறாங்க. நீயாவது கேட்டுச் சொல்லுடா..." தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மீறி கலங்கியே விட்டான்.

"பாத்தியாப்பா.... என்ன கேக்கறான் பார்..." நடத்துனர் கோபம் குறையாமல் நின்றிருந்தார்.

"நகுல்..." நண்பனை உலுக்க,

"நிஜமாத்தாண்டா சொல்றேன். நான் பாத்தேன். என் கண்ணு பொய் சொல்லாது. இதோ.., இங்கேதான்..." நிலைமையின் தீவிரம் புரியாமல் தான் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

இத்தனைபேர் முன்னால் நண்பன் அவமானப்படுவது பொறுக்காமல், அதே நேரம் அவர்கள் முன்னால் அவனை கடிந்துகொள்ளவும் முடியாமல் திணறியவாறு அவன் நிற்க,

"தம்பி.... இங்கே யாரும் இல்ல.... முதல்ல பஸ்ஸை விட்டு கீழே இறங்குங்க, இல்ல.... நாங்க இறக்க வேண்டி இருக்கும்..." நடத்துனர் உரைக்க,

"இவர் பொய் சொல்றார் நவீன். உண்மை தெரியாமல் நான் இறங்க மாட்டேன்..." நகுல் தீர்மானமாக உரைக்க,

நிலைமை கைமீறிச் செல்வதை உணர்ந்த நவீன், "நகுல்.... நான் சொல்றேன்.... முதல்ல பஸ்ஸை விட்டு இறங்கு.... பிறகு பேசிக்கலாம்..." குரலை கடினமாக்கி, அவனுக்கு மட்டும் கேட்கும் விதத்தில் உறுமினான்.

"இல்லடா..." அவன் உரைக்க, அவன் மறுப்பை கண்டுகொள்ளாமல், கையைப் பிடித்து இழுத்தவாறு இறங்க முயன்றான்.

அவனோ.... "நவீன்.... ஒரே ஒருக்காடா.... எனக்காக.... கேட்டுப் பாருடா மச்சான்..." கெஞ்சினான். நண்பனின் கெஞ்சலும் கதறலும் அவனை உலுக்கினாலும், தான் இளகினால்.... அவனை நார்நாராக்கிவிடுவார்கள் என்பதை புரிந்தவனாக, மனதை கல்லாக்கிக்கொண்டு அவனை இழுத்துக்கொண்டு நடந்தான்.

அதே நேரம்.... தான் வாங்க வேண்டியதை வாங்கிய அனன்யா, வெளியே வந்து பார்க்க, தாங்கள் வந்த பேருந்து சற்று தூரத்தில் நிற்பதைப் பார்த்தவள், "ஏய் மையூ.... பஸ் நிக்கிதுடி.... நமக்கு இன்னைக்கு லக்குதான் ஓடி வா..." உற்சாகமாக கூவியவாறு பேருந்தை நோக்கி ஓடினாள்.

நகுலை கூட்டத்தை விட்டு விலக்கி, கை பிடித்து இழுத்து வந்தவன், முன் படிக்கட்டு வழியாக கீழே இறங்க, அதே நேரம்.... பின் படிக்கட்டு வழியாக உள்ளே ஏறினாள் அனன்யா.

10

ஹோட்டல் அறைக்கு வந்த பிறகும் பித்து பிடித்ததுபோல் அமர்ந்திருந்த நண்பனை காணச் சகிக்கவில்லை நவீனுக்கு. எத்தனையோ விதத்தில் அவனை கலைக்க முயன்றாலும், எதையும் கண்டுகொள்ளாமல், இறுகிபோய் அமர்ந்திருந்த அவனை என்ன சொல்லி கலைக்கவென்றே அவனுக்கு புரியவில்லை.

அவனை இப்படியே விட முடியாதே எனத் தோன்ற, "நகுல்.... டேய்..." அவன் தோளைத் தொட்டு உலுக்க, தன் தோளில் இருந்த அவன் கைமேல் தன் கரத்தை அழுந்த வைத்துக் கொண்டான்.

"நவீன்.... நிஜமாவே நான் அவளைத்தான் பாத்தேண்டா. எனக்கு அவ முகம் நல்லா ஞாபகம் இருக்கு. நீ என்னை நம்பலையா...?" கவலையாகக் கேட்டான்.

"ம்ச்.... இப்போ நான் உன்னை நம்பறேன், நம்பலை என்பது இங்கே பிரச்சனை இல்லை. ஏண்டா இப்படி இருக்க? அதுவும்.., ஓடுற காரில் இருந்து குதிச்சு.... ஓட்டமா ஓடி.... அத்தனை பேர் முன்னாடி.... உனக்கு ஏதாவது ஆகி இருந்தால்...?

"அப்படி ஓடினியே.... உடம்பை இப்படி ஸ்ட்ரெயின் பண்ணி.... எதையாவது இழுத்து விட்டுகிட்டால்...? உங்க அம்மாவுக்கு யார்டா பதில் சொல்றது?" காலையில் இருந்த பதட்டத்தின் சாயல், அவன் குரலில் வெளிப்பட்டது.

"எப்படி இருந்த நீ.... உன்னை இப்படி பாக்க எனக்கு ரொம்ப சங்கடமா, தவிப்பா இருக்குடா...." அவனுக்கு ஆறவே இல்லை. வார்த்தைகளை முடிக்காமல் மௌனமானான்.

நவீன், ஒரு நிமிடத்தில் மொத்தமாய் பதறிப் போயிருந்தான். நகுல், தன் தேடலை துரத்த.... நண்பனது

செய்கைக்கான காரணம் புரியாமல், அவனுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்ற பதைப்பில் பின்தொடர்ந்தவனாயிற்றே.

அதிலும்.... அந்த பஸ்சுக்குள்.... அத்தனைபேர் மத்தியில், தன் நிலையையும், சூழலையும் மறந்து, ஒற்றை ஆளாக கெஞ்சிக் கொண்டிருந்ததை பார்த்தவனுக்கு, உடலும் மனமும் பதறிப் போனது மட்டும் உண்மை.

அந்த சூழலில் தன் பட்டத்தைக் கூட வெளிப்படுத்த முடியாமல், நண்பனைக் காத்து அழைத்துவரும் வரைக்கும், அவன் உயிர் அவனிடம் இல்லை.

நண்பனது பதட்டம் புரிந்தவனாக, "சாரிடா.... உன்னையும் கஷ்டப்படுத்திட்டேன் இல்ல..." அவன் மன்னிப்பை வேண்ட,

"இப்போ எதுக்கு மன்னிப்பெல்லாம்...? முதல்ல நீ குளிச்சுட்டு கிளம்பு. அவனைபோய் பாத்துட்டு வந்துடலாம்..." அவனை நடப்புக்குத் திருப்பினான்.

"ப்ளீஸ்டா.... என்னால் இன்னைக்கு அதைச் செய்ய முடியும்னு தோணலை...." உரைத்தவன், "ஒருவேளை அவ ஊர் இதுதானோ? இது தெரியாமல் நான் அவளை சென்னையில் தேடிட்டு இருக்கறேனோ?" திடுமென அவனிடமே கேட்டான்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றிய நவீன், அவன் எதிரில் மண்டியிட்டு அமர்ந்தான். நகுலின் கையை பற்றிக் கொண்டவன், "வேண்டாம் நகுல்.... இதை இத்தோட விட்டுடு. என்னால் உன்னை இப்படி பாக்க முடியலடா. இத்தனை மாசம் அவளைத் தேடின.., நானும் கண்டுக்காமல் இருந்தேன். ஆனா இன்னைக்கு.... என் உயிரே பதறிப் போச்சுடா.

"இன்னைக்கு மட்டும் அத்தை இருந்திருந்தால்.... உசுரையே விட்டுட்டு இருப்பாங்க...." கவலையில் முக்குழித்து அவன் பேச, அமைதியாய் தலை கவிழ்ந்தான்.

"ஒண்ணு மட்டும் சொல்றேன்.... இந்த ஜென்மத்தில் அவ உனக்கு கிடைக்கணும்னா, நீ தேடாமலே அவ உன் கண்ணு முன்னாடி வந்து நிப்பா. அப்படி இல்லாமல் போனால்..." அவன் பேச்சை, நகுலின் கையளுத்தல் நிறுத்த, அவனை ஏறிட்டான்.

"புரிஞ்சுக்கோ நகுல்.... நீ, நீயா இல்லை. அம்மா உன்னை நினைச்சே ஓஞ்சு போய்ட்டாங்க. அப்பா தினம் தினம் கவலைப்படுறார். வருணா.... நீ இப்படியே இருந்துடுவியோன்னு தவிக்கிறா. உன்னைச் சுற்றி இத்தனைபேர் இருக்கோம்.... ஆனா நீ.... போடா..." அவனிடமிருந்து எழுந்து செல்ல முயன்றான்.

சட்டென அவன் கரத்தைப் பிடித்து அழுத்தி நிறுத்தியவன், "சாரிடா மச்சான். இத்தனை நாள்.., என்னைப் பற்றி மட்டுமே யோசிச்சு, சுயநலமா இருந்துட்டேன் இல்ல. இனிமேல் அவளைத் தேட மாட்டேண்டா. அந்த ஆண்டவன் என்ன நினைக்கிறான்னு பாத்துடுவோம்.

"ஏற்கனவே சொன்ன மாதிரி.... நான் கேட்ட டைமில் ஏழு மாசம் ஓடிடுச்சு, இன்னும் ஒரு அஞ்சு மாசம்.... வெயிட் பண்றேன். அதுக்குப் பிறகு.... அம்மா விருப்பப்படி நடக்கட்டும்...." விட்டுப்போன மனநிலையில் அவன் பேச, இப்போதைக்கு இது போதும் என எண்ணியவன்,

"இது போதும் மச்சான்.... ஆண்டவன் இருக்காண்டா. நீ அவன்மேல் பாரத்தைப் போடு..." எழுந்து சென்றுவிட்டான்.

நவீனிடம் சொல்லிவிட்டாலும்.... மனதுக்குள் ரணமாய் அழுத்தும் வலியை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஆழமாக மூச்செடுத்து தன்னை ஆசுவாசப்படுத்தியவன், 'முருகா.., எனக்கு அவ வேணும். அவளை என் கண்ணில் காட்டிடு...' தன் இஷ்ட தெய்வத்திடம் மனு போட்டவன், இனிமேல் விதி விட்ட வழி என வேலையில் கவனம் செலுத்தினான்.

தேவாரத்தைப் பார்த்து.... அவன் பிரச்சனையை சட்டென முடிவிற்கு கொண்டு வந்தவன், அன்று விடியக்காலை விமானத்திலேயே கோவையை விட்டு கிளம்பிவிட்டான். இதற்குமேல் தன்னைச் சார்ந்தவர்களை தொல்லை செய்ய முடியாது என முடிவெடுத்தான்.

வீட்டுக்கு வந்தவன் முதல் வேலையாக, தாயின் மடி சாய..... நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னைத் தேடிய மகனை, கண்ணீரோடு அரவணைத்துக் கொண்டார்.

"சாரிம்மா.... உங்களை ரொம்ப கஷ்டபடுத்திட்டனா...?" இமை மூடி அவன் வினவ, அவன் சிகையை பாசமாய் வருடியவர்,

"என் புள்ள ஆசைப்பட்டது கிடைக்கலையேன்னுதான் இந்த அம்மாவுக்கு வருத்தம் கண்ணா..." இப்படிச் சொன்ன அன்னையை பாசம் பொங்க ஏறிட்டான்.

"எனக்கு எது கிடைக்கணுமோ.... அது நான் கேக்காமலே எனக்கு கிடைச்சிருக்கு. இனிமேல் உங்க ஆசைப்படி நடந்துக்கறேம்மா...." உளமார உரைத்தான்.

தன் மகன் அவ்வளவு சீக்கிரம் மனதை மாற்றிக் கொள்வான் என அவர் நம்பவில்லை என்றாலும். தான் ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைத்தால்.., நிச்சயம் அவளுக்கு துரோகம் செய்ய மாட்டான் என்பது புரிய, அவன் தன்னை சமாதானம் செய்துகொள்ள நேரம் கொடுக்க விரும்பினார்.

"சரிப்பா.... அதான் அம்மாகிட்டே சொல்லிட்டல்ல.... இனிமேல் நான் பாத்துக்கறேன்...." வாஞ்சையாய் உரைக்க,

"சரிம்மா.... நான் போய் குளிச்சுட்டு வரேன். நீங்க டிபன் எடுத்து வைங்க..." தன்னை உற்சாகமாக காட்டிக்கொண்டு அறைக்கு விரைந்தான்.

அறைக்குச் சென்றவனோ.... தன் வார்ட்ரோப்பில்.... தன் துணிகளுக்கு அடியில் இருந்த அந்த மஞ்சள் வர்ண ஷாலை எடுத்தவன், ஏக்கமாய் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, இமை மூடி, வார்ட்ரோப்பின் கதவின் மீதே சாய்ந்து கொண்டான்.

இமைகளுக்குள்.... கலங்கலாக.... தவிப்பாக.... அவள் முகம்.... காதுக்குள்.... கதறலாக அவள் குரல்.... என்னவோ நேற்றுதான் பார்த்ததுபோல்.... எச்சில் விழுங்கி தன்னை சமானப்படுத்த,

"நகுல்.... காபி குடிப்பா..." தாயின் குரல் அருகில் கேட்க, சட்டென இமை திறந்தவன்,

"அம்மா..." ஷாலை இடக்கையில் பிடித்தவன், வலக்கையில் காபியை பெற்றுக் கொண்டான்.

"அம்மா.... இது இனிமேல் என்கிட்டே இருக்க வேண்டாம்..." அவர் கையில் கொடுக்க முயன்றான்.

அதை வாங்காமல்.... "உனக்குன்னு ஒருத்தி வர வரைக்கும், இது உன்கிட்டே இருக்கட்டும்...." அவன் கன்னம் தடவி விட்டு வெளியேறியவரின் கண்கள் கலங்கி இருந்தது.

நடந்தவை அனைத்தையும் நவீன் மூலம் அறிந்த வருணா.... அப்பொழுதே தன் அண்ணனைத் தேடி வந்துவிட்டாள். தன் காதலை, தான் சொல்லாமலே நிறைவேற்றிய தன் அண்ணனின் காதல், கனவாகிப் போனதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

அடுத்த அரைமணி நேரத்தில் தன் அண்ணனின் அறைக்குள் இருக்க, உடை மாற்றி வந்தவனது நெஞ்சில் விழுந்து கதறிவிட்டாள்.

"அண்ணா..." அவள் தேம்ப, அவள் முதுகின் பின்னால் நின்ற நண்பனை முறைத்தான்.

"ஏய் வருணா.... சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்தில் இப்படி கண் கலங்கிட்டு.... இங்கே பார்.... அண்ணா என்ன லவ் பெயிலியர்லையா இருக்கேன். ஏதோ ஒரு தடுமாற்றம்.... விடு.... கூடிய சீக்கிரம் உனக்கு ஒரு அண்ணி இங்கே வரத்தான் போறா. நீ அழாதே..." அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"இருந்தாலும்.... நீ ஆசைப்பட்டது.... எனக்கு அனுவைப் பாக்கணும்ணா.... எனக்கு அவங்கதான் அண்ணியா வேணும்..." அழுகையைத் தொடர்ந்தாள்.

‘இவ ஏன் இப்போ குட்டையை குழப்பறா...?’ நவீன் கோபம் கொண்டான்.

"வரு.... உங்க அண்ணனே இப்போதான் தெளிவாகி இருக்கான். நீ ஏன் அவனைக் குழப்பற...?" மனைவியிடம் கோபத்தைக் கூட குழைவாக வெளிப்படுத்தும் நண்பனை சிரிப்பாய் ஏறிட்டான்.

"சொல்லுவீங்களே.... ஏன் சொல்ல மாட்டீங்க...? நீங்க மட்டும் லவ்வரோட குடும்பம் நடத்துவீங்க.... எங்க அண்ணா மட்டும் எவளோ ஒருத்தியை கட்டிக்கணுமா...?" அவனிடம் சண்டைக்குப் போனான்.

"வரு.... நான் எப்போ அப்படிச் சொன்னேன்..." அவன் பதற,

"நான் யாரைக் கட்டிகிட்டாலும் அவளும் உனக்கு அண்ணி தானேடா. ஏன் வரவளை அண்ணின்னு கூப்பிட மாட்டியா...?" அவளைச் சீண்டினான்.

"எனக்கு என் அண்ணா ஆசைப்பட்டதுதான் கிடைக்கணும்..." அவள் பிடிவாதமாக உரைக்க, தன் முகம் மாறாமல் காக்க மிகுந்த சிரமப்பட்டான்.

அதைப் புரிந்த நவீன்.... "வரு.... உங்க அண்ணாவை உடனே பாக்கணும்னு சொன்னது இதுக்குத்தானா? முதல்ல நீ வா. டேய் மச்சான்.... நீ இவ பேசினதில் குழப்பிக்காதே. வாங்க

சாப்பிடப் போகலாம். அத்த இடியாப்பம் செய்திருக்காங்களாம்..." அனைவரையும் கிளப்பிவிட்டான்.

"நீங்க திங்கிறதிலேயே இருங்க. எங்க அண்ணாவைப் பத்தி கொஞ்சமாவது கவலை இருக்கா? ரெண்டுநாள் நீங்க பட்டினிதான் போங்க" அவள் எதைச் சொல்கிறாள் என்பது புரிய, கலவரமானான்.

"வரு.... வரு.... எனக்கு மட்டும் அந்த நினைப்பு இல்லன்னா நினைக்கற?" இன்னும் என்னென்னவோ சொல்லி அவளைக் கெஞ்சியவாறு, கொஞ்சியவாறு அவள் பின்னால் செல்ல, அவர்களது அன்னியோன்னியத்தை பார்த்தவாறே கீழே இறங்கினான் நகுல்.

நாட்கள் அதன் போக்கில் கடக்க, தன்னை முயன்று வேலையில் திணித்துக் கொண்டான் நகுல். தன் கம்பெனி விஷயம் மட்டுமல்லாமல், தன் தந்தையின் கம்பெனியையும் கவனிக்கத் துவங்கினான்.

வேலை மட்டுமே தன்னை இயல்பாக, தன் நினைவுகளில் மூழ்காமல் காப்பதுபோல் உணர்ந்தான். பகல் வேளைகள் தொல்லையின்றி கடக்க, இரவு பொழுதை கடப்பதுக்குள் திணறித்தான் போனான்.

அனுவை மறக்க வேண்டும் என எண்ண எண்ணத்தான்.., அவள் நினைவு ஆக்டோபஸ்போல் அவனை ஆக்கிரமிக்கத் துவங்கியது. காற்றுப் பந்தை தண்ணிக்குள் அமிழ்த்த, அமிழ்த்த, அது தண்ணீருக்கு வெளியே வரத் துடிப்பதுபோல்.... அனுவின் நினைவும் அவன் மனதில் அமிழ்ந்து போகாமல் சண்டித்தனம் செய்தது.

சில இரவுகள்.... அவள் ஷாலை தன் கைகளுக்குள் சுற்றிக் கொண்டால் தான், அவனால் உறங்கவே முடிந்தது. இந்த நிலையில்.... எப்படி வேறு ஒரு பெண்ணோடு குடும்பம் நடத்தப் போகிறோம் என்பதை எண்ணினாலே அவனுக்கு மலைப்பாக இருந்தது.

தான் அனுமதி வழங்கிய பிறகும், தனக்கு பெண் பார்க்கத் துவங்குவதை தள்ளிபோடும் தாயை எண்ணுகையில், மனதுக்குள் ஒரு நிம்மதி பரவியது மட்டும் உண்மை. அதேபோல்.... நிச்சயம் அவளைத் தான் காண்போம் என்ற எண்ணம் மட்டும் நாளுக்கு நாள் வலுப்பதை, எப்படி எடுத்துகொள்ள என்று அவனுக்குப் புரியவே இல்லை.

இந்த நிலையில்தான்.... பெற்றவர்களின் திருமணநாள் வருவது அவன் நினைவிற்கு வர, அவர்களுக்கு ஏதாவது பரிசளிக்க விரும்பினான்.

அதை நவீனிடம் உரைக்க.... "நகுல்.... நம்ம கதிரேசன் இருக்கானே.... அவன் புதுசா நகைக்கடை ஆரம்பிச்சு இருக்காண்டா. அங்கே போனால்.... கண்டிப்பா நல்லதா பார்த்து வாங்கலாம். வேண்ணா அங்கே போய்ப்பாரேன்".

"அம்மாகிட்டே இல்லாத நகையா...? ஏதாவது புடவை எடுத்தால்...?".

"ஏன்.... உங்க அம்மாகிட்டே புடவையே இல்லையா...?" நவீன் கேட்க, சட்டென அவனை முறைத்தான்.

"சரி விடு..." உடனே ஜகா வாங்கியவன்,

"ஏன் சொன்னேன்னா.... உனக்கு ஆக்சிடன்ட் ஆனப்போதான் அவனுக்கு கல்யாணமாச்சு. அங்கே போனால்.., அப்படியே அவனை விஷ் பண்ண மாதிரியும் இருக்குமேன்னு சொல்ல வந்தேன்...".

"இதை நீ முதல்லையே சொல்லியிருக்கணும். அதை விட்டுட்டு.... நீ சொல்றதும் நல்ல ஐடியா தான்.... அங்கேயே போகலாம்..." உரைத்தவன், முதல் வேலையாக அவனுக்கு அழைத்தான்.

"கதிர்.... என்னடா புது மாப்பிளை... எப்படி இருக்க? லைப் எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு...?".

"நகுல்.... நீ எப்படி இருக்க? சாரிடா.... நானே உன்னை வந்து பாக்கணும்னு நினைத்தேன்.... நீயே கால் பண்ணிட்ட...".

"இதுக்கெல்லாம் எதுக்குடா சாரி. சரி சொல்லு.... நீ இப்போ எங்கே இருக்க? நான் கடைக்கு வரலாம்னு இருக்கேன்.... அதான் கால் பண்ணேன்".

"நான் லஞ்ச்சுக்கு வீட்டுக்கு வந்தேன்டா. இன்னும் ஹால்ப்அன் ஹவர்ல கிளம்பிடுவேன். நீ வா.... பேசிக்கலாம்..." அழைப்பை துண்டித்தான்.

அடுத்த ஒரு மணி நேரம் கழித்து அவன் முன்னால் நகுல் இருந்தான். நவீனுக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கவே அவன் வரவில்லை. முதல்கட்ட நலம் விசாரிப்புகள் முடிய, தன் மேஜைமேல் இருந்த தொலைபேசியில் ஒற்றை எண்ணை அழுத்திவிட்டு, "ஒரு கூல்டிரிங் கொண்டு வாங்க..." உரைத்துவிட்டு வைத்தான்.

அடுத்த நிமிடம்.... கதவைத் தட்டிவிட்டு, ட்ரேயில் ஒரு குளிர்பான டின்னோடு அவன் அறைக்குள் அனன்யா நுழைய, "எடுத்துக்கடா..." கதிர் உரைக்க, "தேங்க்ஸ்..." சொல்லிவிட்டு எதேச்சையாக அவள் முகம் பார்த்தவன், இனிமையாக அதிர்ந்தே போனான்.

"வெல்கம்..." உரைத்தவள், திரும்பிச் சென்றுவிட, அவள் முதுகை வெறித்தவன், தன் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டான்.

நண்பனது செய்கையை வியப்பாய் பார்த்தவன்.... என்னவென்று கேட்கும் முன்பே.... "கதிர்.... அவ...ங்க.... அனு தானே..." சந்தோஷத்தில் அவன் குரல் கூட தடுமாறியது.

"அனு..." இழுத்தவன்.... "அவ அனன்யாடா.... எனக்கு தங்கை மாதிரி. அதாவது எங்க அப்பாவோட ப்ரண்ட்டோட பொண்ணு.... உனக்கு அவளைத் தெரியுமா? ஆனா.... அவ..." அவள் கண்டுகொள்ளாமல் போகிறாளே என அவன்

கேட்க, அவன் சொல்ல வந்ததை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

வேகமாக தன் அலைபேசியை எடுத்தவன், தன் தாயை அழைத்தான். இப்பொழுது சாப்பிட்டுவிட்டுப் போனவன், அழைக்கவே.... 'என்ன' என்ற யோசனையோடு அவர் அழைப்பை ஏற்க,

"அம்மா.... நான் அனுவைப் பாத்துட்டேன்.... அனு.... அவ.... இங்கேதான் இருக்காம்மா. நீங்க உடனே வாங்க..." கிட்டத்தட்ட கூவினான்.

"நகுல்.... நிஜமாவா...? எங்கே...? உன் ஆபீஸ்லயா...? ஆண்டவா..." ஓடிபோய் பூஜையறையில் தெய்வத்திடம் அவர் நன்றி உரைப்பதை, அவனால் இங்கே இருந்தே உணர்ந்துகொள்ள முடிந்தது.

"இல்லம்மா.... என் ப்ரண்ட் கதிரோட நகைக் கடையில்தான் அவ வேலை பாக்குறா. இப்போ நான் அங்கேதான் இருக்கேன்..." அவன் குரல் சற்று நடுங்க வேறு செய்தது.

"இதோ.... இன்னும் பத்து நிமிஷத்தில் அங்கே இருப்பேன்...." டிரைவரை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். அடுத்ததாக.... நவீன், வருணா என ஒவ்வொருவருக்கும் அழைத்து விஷயத்தை உரைத்த பிறகே.... அங்கே கதிர் என்ற ஒருவன் இருக்கும் நினைவே அவனுக்கு வந்தது.

"கதிர்.... இப்போவே எனக்கு அவளோட புல் டீட்டெயில் வேணும். சொல்லு..." அவன் படபடக்க, இதுவரை அவன் செய்கையை வேடிக்கை பார்த்தவன்,

"இங்கே என்னடா நடக்குது...?" விழித்தான்.

அவனைப் பொறுத்த வரைக்கும் நகுல் மிகவும் நல்லவன். கல்லூரியில், அவர்கள் அனைவரும் பெண்களை சைட் அடித்தால் கூட, அமைதியாக இருக்கும் அவன், இன்று ஒரு

பெண்ணைப் பார்த்து அதிர்ந்ததே ஒரு வியப்பென்றால்.... அதை பெற்றவர்களுக்கும் உரைத்தது ஆச்சரியத்தை அளித்தது.

"ம்ச்.... அதையெல்லாம் அப்புறமா சொல்றேன். முதல்ல அவளைப் பத்தி சொல்லு..." அவன் அதிலேயே நின்றான்.

"இப்போ என்ன.... உனக்கு அவளைப் பற்றி தெரியணும்.... அவ்வளவு தானே. அவ பேர் அனன்யா. அப்பா மூர்த்தி கோவையில் சின்ன ஹோல் சேல் கடை வைத்திருக்கிறார். அம்மா முத்துலட்சுமி வீட்டுத் தலைவி, ஒரு அண்ணா.... அவன் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி விபத்தில் தவறிட்டான்.

"இப்போ அவ வீட்டுக்கு ஒரே பொண்ணு. நடுத்தரவர்க்கத்துக்கு கொஞ்சம் மேலான குடும்பம். அவ பேச்சில் அடிக்கடி ஒரு தம்பி பேர் அடிபடும்.... அவன் அவளோட சித்தப்பா பையன். அவரும் இப்போ இல்லை. சித்தியும் இவங்க வீட்டு பக்கத்தில் தான் இருக்காங்க. இது போதுமா...?

"சரி இப்போ சொல்லு.... உனக்கு எப்படி அனன்யாவைத் தெரியும்? அதுவும் அவ சென்னைக்கு வந்து முழுசா ஒரு வருஷம் கூட ஆகலை. அதிலேயும்.... என் கடையை விட்டு, பின்னாடி இருக்க வீட்டை விட்டு அவ எங்கேயும் போய் நான் பாத்தது கூட கிடையாது..." அவன் கேட்க, அவனுக்கு பதில் சொல்லத் துவங்குகையில் அவனது அலைபேசி ஒலி எழுப்பியது.

"நகுல்.... அம்மா கடைக்குள்ளே தாண்டா இருக்கேன். அனு எங்கே இருக்கான்னு சொல்லு..." அவனை விட, அவர் குரலில் ஆர்வம் தொனித்தது.

"அம்மா.... நீங்க இருங்க நான் வரேன்..." உரைத்தவன், "டேய் மச்சான்.... இன்னொரு கூல்டிரிங் சொல்லு.... அப்படியே.... என்ன செய்வியோ தெரியாது. எனக்கு அவ

இங்கேயே இருக்கணும்..." நண்பனிடம் கட்டளையிட்டுவிட்டு, வெளியே ஓடினான்.

"அடப்பாவி.... கடை முதலாளியை இப்படி புரோக்கர் ஆக்கிட்டு போறானே" புலம்பினாலும், அவன் சொன்னதைச் செய்ய என்ன வழி என யோசித்தான்.

"அம்மா..." அவன் அழைக்க.... "அனு எங்கேடா.... காட்டு..." பார்வதி, குழந்தைபோல் குதிக்காதது ஒன்றுதான் குறை. பிறகு.... மகன் ஆசைப்பட்ட பெண்ணை பார்த்துவிட்டான் என்றால் சும்மாவா. அவனது மிகப்பெரும் ஆசை நிறைவேறப்போகும் சந்தோசம்.... அவர் முகத்தில் மிளிர்ந்தது.

"ஐயோ அம்மா.... இங்கேயேவா.... முதல்ல உள்ளே வாங்க...?" அவரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

இருக்கையில் அமர்ந்தவர், வாசலையே ஆர்வமாகப் பார்க்க, "அம்மா.... ஆர்வத்தில் எதையாவது செய்து வச்சுடாதீங்க..." தாயின் பரபரப்பு உணர்ந்து அவன் அறிவுறுத்த,

"அட போடா.., எல்லாம் நான் பாத்துக்கறேன்..." உரைத்தவர், வாசலை விட்டு முகம் திருப்பவில்லை.

அனன்யா அறைக்குள் நுழைய, தன் மகனது மனதுக்குப் பிடித்தவள் என்ற நினைவை விட, என் மகனது உயிரைக் காப்பாற்றியவள் என்ற எண்ணம் மேலோங்க, அவர் கண்கள் மெல்லியதாகக் கலங்கி, அவளை பார்வையில் இருந்து மறைத்தது.

வேகமாக புடவை முந்தானையால் அதை துடைத்தெறிந்தவர், அவளை ஆர்வமாக நோக்கினார். அழகான சில்க் சாரியில்.... மெல்லிய ஒப்பனையில், பின்னிய கூந்தலோடு, மெல்லிய இடையில், அழகின் மறு உருவாக, நடந்து வந்தவளை, பாசம் பொங்க நோக்கினார்.

அனன்யாவோ.... கடமையே கண்ணாக.... ஜூஸ் டின் கீழே விழுந்துவிடாமல் இருக்க, மென்மையாக நடந்து வந்தவள், அவர் எதிரில் அதை வைத்தாள்.

அவள் திரும்பிச் செல்ல முயல, "கதிர்.... நல்ல வைர செட் ஒண்ணை பாக்கணுமே..." அவனிடம் படபடக்க,

"இதோ.... இப்போ எடுத்துட்டு வரச் சொல்றேம்மா..." அவரிடம் உரைத்தவன்,

"அனன்யா.... புது வரவு டயமன்ட் ஜீவல் எல்லாம் கொஞ்சம் எடுத்துட்டு வாங்க..." அவளிடம் உரைக்க, அவள் புருவம் உயர்த்தி நோக்கவே, அவள் பார்வையின் கேள்விக்கான காரணம் புரிந்தவனாக இருக்கையில் இருந்து எழுந்து சென்றான்.

"அனன்யா.... அவங்க எனக்கு அம்மா மாதிரி.... சோ..." அவளிடம் இப்படியான வேலைகளை அவன் உரைத்ததே இல்லை என்பதால்.... சின்னக் குரலில் அவர்களது முக்கியத்துவத்தை அறிவுறுத்த, புரிந்து கொண்டவளாக விலகிச் சென்றாள்.

இது வரைக்கும் கூட, தாயின் பார்வை அவளை விட்டு அகலவே இல்லை. அவள் சென்றுவிடவே.... "அப்படியே மகாலஷ்மி மாதிரி இருக்காடா. உனக்கு பொருத்தமா இருக்கா. இப்படி என் வாயை கட்டிப் போடுறியே கண்ணா..." அவளிடம் பேச முடியாததால் குறை பட்டார்.

அடுத்த அழைப்பாக, வருணா, நவீன் வர, அரசுவைத் தவிர மொத்த குடும்பமும் அங்கே ஆஜரானது. மூன்று பெண்களோடு.... ஆளுக்கு இரண்டு நகை செட்டோடு அவர்களை அனன்யா நெருங்க, "அண்ணா.... அண்ணி சூப்பர்..." நகுலிடம் சின்னக் குரலில் வருணா உரைத்தாலும், எங்கே அவளுக்கு கேட்டுவிடுமோ என அவன் கொஞ்சம் பதறித்தான் போனான்.

"வருணா..." அவன் கெஞ்சும் குரலில் அழைக்க, அனன்யா தாங்கள் கொண்டுவந்த நகைகளைப் பற்றி அவர்களுக்கு விளக்கத் துவங்கினாள். இதுவரை இப்படியான வேலையை அவள் செய்ததில்லை என்பதால், சற்று தடுமாறினாலும்.... ஒவ்வொரு நகையைப் பற்றிய விவரமும் அவளுக்கு அத்துப்படி என்பதால் சம்மாளித்தாள்.

ஆனால்.... வந்தவர்கள் அனைவரும் நகையை ஆர்வமாகப் பார்ப்பதை விட, தன்னை அதிகம் பார்க்கிறார்களோ என்ற நினைப்பு அவளுக்கு எழாமல் இல்லை.

ஒரு வேளை.., தான் இப்படியான வேலையை செய்ததில்லை என்பதால், அவர்கள் பார்வை தனக்கு வித்தியாசமாகத் தெரிகிறதோ என தன்னையே தேற்றிக் கொண்டாள். அதே நேரம்.... அவள் யாரின் முகத்தையும் கூர்ந்து பார்க்கவும் இல்லை, பார்க்காமல் இருக்கவும் இல்லை.

இது கடையோடு முடிந்து போகும் உறவு என்ற நிலையில் அவள் இருக்க, அது ஒரு பெண்பார்க்கும் படலம் என்பதை அவள் அறியவே இல்லை.

11

அனன்யா நகைகளைப் பற்றி விவரிக்கத் துவங்கவே, நகுல், வேகமாக வெளியே எழுந்து சென்றுவிட்டான். எங்கே தன் பார்வை, தன் உணர்வுகளை அவளுக்கு எதையாவது வெளிப்படுத்திவிடுமோ என அஞ்சியவனாக அங்கிருந்து நகர்ந்தான்.

நகுல் செல்லவே, அவன் பின்னால் நவீனும் வெளியேறி, பார்க்கிங் பகுதிக்குள் நுழைந்த அவனைத் தேடிச் சென்றான்.

நகுலோ.... தன் பின்னங்கழுத்தை அழுந்த கோதிக் கொண்டவன், தவிப்பாய் நடை பயின்றான்.

அவனது செய்கையை வித்தியாசமாக நோக்கியவன், "என்னடா.... எழுந்து வந்துட்ட...?" அவன் தோள் அழுத்த, கண்கள் உணர்ச்சி வேகத்தில் லேசாக கலங்கியிருக்க, அவனை ஏறிட்டான்.

"எதுக்குடா இப்போ கண் கலங்குற...? இவ்வளவு நாள் தேடியவளைத்தான் கண்டு புடிச்சிட்டியே.... பிறகு ஏன்...? அவளைப் பாக்குறதை விட்டுட்டு, இங்கே வந்து என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?".

"அது.... என்னன்னு சொல்லத் தெரியலடா. என்னவோ.... அவளை அப்படியே கட்டிக்கணும்னு, கை ரெண்டும் பரபரக்குது. நீ காப்பாத்திக் கொடுத்த உயிர்ன்னு.... அவகிட்டே சொல்லணும் போல ஒரு வேகம். எங்கே... அங்கேயே இருந்தால், என்னை மீறி எதையாவது செய்திடுவேனோன்னு எழுந்து வந்துட்டேன்..." திக்கித் திணறி, தன் சந்தோஷத்தையும், தேடலையும், உணர்வுகளையும் கட்டுக்குள் கொண்டு வரப் போராடினான்.

இவ்வளவு நாள் நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்த எதுவோ விலகிச் சென்றதுபோல்.... தானே லேசாகி விட்டதுபோல்.... அப்படியே மிதக்கும் ஒரு உணர்வு.

அதே நேரம்.... வாய்விட்டு கத்த வேண்டும்போல்.... உலகையே வேண்டுவிட்ட உணர்வில், களிக்க வேண்டும்போல்.... அவனுக்கு தன் மனநிலையை கணிக்கவே முடியவில்லை.

"ம்ச்.... ப்ரீயா விடு மச்சான். அதான் அவளை கண்டு புடிச்சுட்டியே. இனிமேல் எல்லாத்தையும் அம்மா பாத்துப்பாங்க. நீ வேண்ணா அவகிட்டே ரெண்டு வார்த்தை பேசுடா..." அவன் மனம் புரிந்தவனாக உரைத்தான்.

"இல்லடா.... இப்போ பேசினால்.... என்னால் என்னை கண்ட்ரோல் பண்ணிக்க முடியும்னு தோணலை..... அதான் அவ என் கண்ணில் பட்டுட்டாளே, இனிமேல் அவளை மிஸ் பண்ண மாட்டேன். சரி விடு, அதென்னவோ அவளைப் பாத்துட்டேன் என்ற சந்தோஷத்தில் என்னையே என்னால் கட்டுப்படுத்திக்க முடியலை.

"இப்போ எல்லாம் ஓகே. முதல்ல வா.... உள்ளே என்ன நிலைமைன்னு பார்ப்போம். அம்மாவும், வருணாவும் ஏதாவது ஏடாகூடமா பண்ணிடப் போறாங்க..." அவர்கள் அப்படியெல்லாம் செய்ய மாட்டார்கள் என்றாலும், தன்னைவிட அவளைப் பார்க்க ஆவலாக இருந்தவர்களாயிற்றே.

"சரி வா..." நவீனும் உடன் நடக்க, நகுலின் அலைபேசி 'வாட்ஸ்ஆப்' மெஸ்சேஜ் வந்த ஒலியை எழுப்ப, தன் அலைபேசியை பார்வையிட்டவன், வருணாவிடமிருந்து வந்திருக்கும் இம்மேஜை ஒருவித ஆர்வத்தோடு டவுன்லோட் செய்தான்.

அவன் எண்ணியது போலவே.... அனன்யாவின் பல்வேறு புகைப்படங்கள் அணிவகுத்து இருந்தது. ஒரு பக்கம் சந்தோஷமும், மறு பக்கம் 'என்ன வேலை பாக்குறா பார்.

அவ பாத்துட்டா.... ஆண்டவா...’ சற்று படபடப்பாக எண்ணியவன், வேகமாக ஓடினான்.

அவன் உள்ளே நுழையும் வேளையில், அனன்யா நகைகளை எடுத்துகொண்டு வெளியேற, இருவரும் ஒருவர் மீது ஒருவர் மோதப் பார்த்து, இறுதி நொடியில் இருவரும் சுதாரித்து நின்றார்கள்.

"சாரி..." இருவரும் ஒரே நேரம் உரைத்தவர்கள், ஒரு நொடி பார்வைகள் இரண்டும் உரசிக்கொள்ள, அவள் விலகிச் சென்றுவிட, அவள் விழியில் விழுந்தவனோ, தெளிய முடியாமல் மூழ்கிக் கொண்டிருந்தான்.

இத்தனை நாள்.... அவளை எண்ணும்பொழுதெல்லாம்.... அவளது தவிப்பான பார்வையும், கலக்கமான விழிகளுமே அவன் நினைவிற்கு வரும். முதல் முறையாக.... அவளது அமைதியான விழிகளை நோக்கியவனுக்கு, அவள் கன்னம் தாங்கி, அந்த விழிகளை விழுங்கும் வேட்கை பிறந்தது.

"நகுல்..." கதிரின் குரல் அவனை நடப்புக்கு இழுக்க, அதற்குள் அவனிடமிருந்து அனன்யாவின் விலாசம் துவங்கி, மொத்த ஹிஸ்ட்டரியையும் நகுலின் தாய் வாங்கி விட்டிருந்தார்.

கதிரால் நடப்பவை எதையும் நம்ப முடியவில்லை. அவனுக்கு நகுலின் உயரம் என்னவென்றும் தெரியும், அனன்யாவின் நிலையும் தெரியுமாகையால், "ஆண்ட்டி.... அனன்யா வீடு..." அவன் எதையோ துவங்க,

"அவதான் என் வீட்டு மருமக.... அதை நான் எப்போவோ முடிவு பண்ணிட்டேன். இப்போ அவ கொண்டு வந்துதான் என் வீடு நிறையப் போகுதா? எல்லாம் என் மகனே அவளுக்கு கொட்டிக் கொடுப்பான்..." மகனது கையை அழுத்தி உரைத்தவர், சந்தோஷமாக கிளம்பி விட்டார்.

வீட்டுக்கு வந்தவர் முதல் வேலையாக மகனுக்குப் பிடித்த பாயாசம் வைத்துக் கொடுத்தவர், தன் கணவனை அழைத்து விஷயத்தை உரைக்க, உடனே வீட்டுக்கு வந்தவர், "வீட்டுக்குப் பெரிய மனுஷன்.... என்கிட்டே ஒரு வார்த்தை கேக்கணும்னு தோணலையா...? பிறகு.... இந்த வீட்டுத் தலைவன்னு நான் ஒருத்தன் எதுக்கு இருக்கேன்?" அவர் குரல் உயர்த்தவே, ஒரு நிமிடம் அந்த இடத்தில் எந்த பேச்சும் இருக்கவில்லை.

தன் கணவனிடம் இப்படி ஒரு பேச்சை எதிர்பாராத பார்வதி திகைக்க, "என்னங்க.... நகுலோட உசுரை காப்பாத்திக் கொடுத்தவங்க. அதைவிட, அவன் மனசுக்குள்ளே குடியிருக்க அவளை விட்டு, நம்மளால் வேற பொண்ணை பாக்க முடியுமா? இத்தனை நாள் கழிச்சு என் பிள்ளை முகத்தில் சிரிப்பை பாக்கேன். உங்களுக்கு அது பொறுக்கலையா?" விட்டால் அழுதே விடுவார் போல் இருந்தார்.

"அப்பா.... எனக்கு அண்ணி அவங்கதான். இப்போ உங்களுக்கு பணம் தான் பிரச்சனைன்னா.... என் புருஷன் அவங்களுக்கு அண்ணன் ஸ்தானத்தில் இருந்து எல்லாம் செஞ்சுட்டு போறார். நீங்க இதில் தலையிடாதீங்க ஆமா..." தந்தையிடம் அவளுக்கு இருந்த சலுகை, அவளை இவ்வாறு உரைக்க வைத்தது.

"அப்போ.... நான் என் மருமகளை பார்க்க வேண்டாமா? நீங்க மட்டும் பார்த்தால் ஆச்சா?" அவர் கேட்ட பிறகுதான், அவர் கோபத்துக்கான காரணமே புரிய, அனைவரும் நிம்மதியாக மூச்சு விட்டனர்.

"அப்பா..." நகுல் அவரை தாவி அணைத்துக் கொள்ள, "உன் சந்தோஷத்தை விட, எனக்கு வேற என்னடா வேணும்..." அவனை தட்டிக் கொடுத்தார்.

"என்னங்க.... நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. அடுத்த வாரம் நாம அவங்க வீட்டில் இருக்கணும். அதுக்கு

ஏற்பாடு பண்ணுங்க".

"அட.... என்னவோ எல்லாத்தையும் என்கிட்டே கேட்டுட்டு செய்யிற மாதிரி, இதையும் நீயே பாக்க வேண்டியது தானே..." அரசு அவரைச் சீண்ட,

"எல்லாத்தையும் நானே பாக்குறதுன்னா.... பிறகு வீட்டுக்கு பெரிய மனுஷன்னு நீங்க எதுக்கு இருக்கீங்களாம்?" அவர் சொன்னதையே திருப்பிப் போட, அனைவரும் சிரித்து விட்டார்கள்.

"அது சரி.... திடுதிப்புன்னு அவங்க முன்னாடி போய் நிக்க முடியுமா? பொண்ணை பெத்தவங்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டாம்? பாக்கறேன்" தாடையை தடவிக் கொண்டார்.

அடுத்த நாளே பிரபல தரகரைப் பிடித்து, கோவையில்.... அவருக்குத் தெரிந்த அடுத்தவனைப் பிடித்து, நகுலின் ஜாதகம், அனன்யாவின் வீட்டில் சேர்க்க வழி செய்துவிட்டார்.

ஜாதகம் பொருந்த வேண்டுமே என்ற கவலை நகுலை தொற்றிக்கொள்ள, இருவரின் ஜாதகத்திலும் பத்து பொருத்தமும் அம்சமாக பொருந்தியிருக்கிறது என தகவல் வந்த பிறகுதான் அவனால் நிம்மதியாக மூச்சுவிடவே முடிந்தது.

மூர்த்தியின் வீட்டில்.... தரகர், நகுலின் வீடு பெரிய இடம் என சொன்னதைக் கேட்டு, அரை மனதாகத்தான் ஜாதகப் பொருத்தம் பார்க்கச் சென்றார். ஆனால்.... பத்து பொருத்தம் என்பதை அவர் சற்றும் எதிர் பார்க்கவே இல்லை.

மூர்த்தியின் வீடும் வசதியில் குறைந்தது என சொல்லிவிட முடியாது. சற்று மேல்தட்டு வர்க்கம் தான். ஆனால்.... நகுலின் வீட்டை ஒப்பிடுகையில் அவர் சற்று கீழ் தான்.

இனிமேல் மகளுக்கு தான் எந்த இடம் பார்த்தாலும், அது தன் மனதுக்கே ஒத்து வராது என்பது அவருக்குப் புரிந்தாலும், இது சரிப்பட்டு வருமா என சிந்தித்தவர், தரகரிடமும் அதையே உரைக்க, அதுவும் நகுலின் வீட்டை எட்ட, "தரகரே.... முதல்ல நாங்க அவங்களை பாக்க ஏற்பாடு பண்ணுங்க. பொண்ணைக் கூட காட்ட வேண்டாம். பேசிப் பார்ப்போம்.... மத்ததெல்லாம் பிறகு பேசிக்கலாம்னு சொல்லுங்க..." இப்படிச் சொன்ன தரகரை ஆச்சரியம் குறையாமல் ஏறிட்டனர்.

"என்னய்யா சொல்றீர்...?" மூர்த்தி ஆச்சரியமாக வினவ,

"அட.... அவங்க சொன்னதைத்தான் சொல்றேன். பேசித்தான் பாருங்களேன்.... பொண்ணைக் கூட காட்ட வேண்டாம்னு சொல்றாக, பிறகென்ன?" அவன் கேள்வியில் இருந்த நியாயம் புரிய, பேசித்தான் பார்ப்போமே என முடிவெடுத்தவராக வரச் சொன்னார்.

அதிலும்.... தான் விசாரித்தவரை, கதிரேசன், நகுலைப் பற்றி நல்ல விதமாகச் சொல்லியிருக்க, பார்ப்போம் என முடிவெடுத்தார். கதிரும், நகுல் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களிடம் வேறு எதையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

சற்று பதட்டமாகத்தான் அந்த விடியல் இருந்தது. தன்னைப் பார்த்து அவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே என நகுல் கவலைப்பட, வருபவர்கள் என்ன பேசப் போகிறார்களோ.... என கவலை கொண்டார் மூர்த்தி.

விமானப் பயணத்தை தவிர்த்து, தங்கள் காரில் கோவை வந்தவர்கள், ஹோட்டலில் தங்கி, இளைப்பாறிவிட்டு, மாலையில் மூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

பென்ஸ்காரைப் பார்த்தே மூர்த்தி தடுமாற, வந்தவர்களோ, எந்தவித பந்தாவும் இல்லாமல் சிரித்த முகமாக இறங்கவே, தன்னை சம்மாளித்தவராக அவர்களை வரவேற்றார்.

வருணாவின் உடல்நிலை கருதி அவள் வந்திருக்கவில்லை. மூர்த்தியின் வீடு, ஒரு மேல்தட்டு குடும்பத்துக்கே உரிய பெரிய வீடுதான். அவர்கள் வீட்டை ஒப்பிடும்பொழுது சற்று சிறியதே. அங்கே இருந்த சோபாவில் அவர்கள் மூவரும் அமர்ந்து கொள்ள, நகுலைப் பார்த்த, அனன்யாவின் பெற்றோர், திருப்தியாக பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

அங்கே ஒரு சங்கடமான அமைதி நிலவ, "முத்து..." மூர்த்தி மனைவியை அழைக்க, அவர் வேகமாக உள்ளே செல்லத் திரும்பினார்.

"இல்ல.... இப்போ எதுவும் வேண்டாம். நாம பேசி முடித்த பிறகு..." பார்வதி இழுக்க,

"கொஞ்சம் தண்ணி மட்டும் குடிங்க..." மூர்த்தி உரைக்க, மறுக்காமல் குடித்தார்கள்.

மீண்டும் அதே அமைதி அங்கே சூழ, தொண்டையைச் செருமிய பார்வதி, "அண்ணே.... இதோ இருக்கானே.... இவன் எனக்கு ஒத்தை புள்ளை. இவனுக்கு ஒரு ஒண்ணரை வருஷத்துக்கு முன்னாடி, பெரிய ஆக்சிடண்ட்..." துவங்கியவர் அனைத்தையும் விவரிக்க, அவர் சொன்னதை நம்ப முடியாத திகைப்பில் கேட்டுக் கொண்டிருந்தனர் மற்றவர்கள்.

தங்கள் மகள் தங்களிடம் இதைச் சொல்லவில்லையே என்ற எண்ணம் எழுந்தாலும், அவள் செய்கைக்காக அவர்களுக்கு கோபம் வரவில்லை. மாறாக.... அவர்களது மகனது எண்ணம் எழுந்து அவர்கள் கண்களை கலங்க வைக்க, தங்கள் மகளது செய்கைக்கான விளக்கத்தை அவர்கள் உரைக்க, அங்கே மேலும் அழுத்தமான ஒரு அமைதி நிலவியது.

"என் மகனை எனக்கு காப்பாத்திக் கொடுத்த உங்க பொண்ணையே.... என் வீட்டு மருமகளா ஆக்கிக்கணும்னுதான்.... உங்களைத் தேடி வந்திருக்கோம்.

போன வராம் எதேச்சையா கதிரோட கடையில் அவளைப் பார்த்தோம். அதான்.... முறைப்படி உங்ககிட்டே பேசலாம்னு வந்திருக்கோம். இனிமேல் நீங்கதான் சொல்லணும்..." அவர் நிறுத்தி, அவர்கள் முகம் பார்த்தார்.

அவர்களது வருகைக்கு பின்னால்.... இப்படி ஒரு காரணம் இருக்கக் கூடும் என எண்ணியிராதவர்கள், அவர்கள் உயரம் புரிய, "நீங்க சொல்ல வரது எங்களுக்குப் புரியுது. அதுல பாருங்க.... நாங்க.... உங்க வசதிக்கு.... பொன்னை வைக்கும் இடத்தில், பூவைன்னு இல்லை.... ஆனாலும்..." தயங்கியவாறே இழுக்க,

"அட.... நம்ம குழந்தைங்க சந்தோஷம்தான் நமக்கு முக்கியம். நீங்க அதை விடுங்க..." அரசு உரைக்க, சந்தோஷமாக தன் சம்மதத்தை அளித்தார் மூர்த்தி.

"ரொம்ப சந்தோசம் சம்பந்தி. உங்க சம்மதம் மட்டும் எங்களுக்குப் போதும்..." அரசு உரைக்க, நகுலின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த முத்துலட்சுமிக்கு, அவ்வளவு நேரம் சிறு பதட்டத்தில் இருந்த அவனது முகம், சட்டென ஒளிர்ந்த பிறகுதான் நிம்மதியாக இருந்தது.

என்னதான் பெரிய இடம் என்றாலும்.... அவனுக்கு அந்த திருமணத்தில் விருப்பம் இருக்க வேண்டுமே என அவர் மனம் அடித்துக் கொண்டது அவருக்கு மட்டுமே தெரியும். அதிலும்.... சற்று பதட்டத்தோடு அவன் அமர்ந்திருக்கவே, அவனுக்கு விருப்பம் இல்லாமல் இருக்குமோ என ஒரு நொடி சிந்தித்து விட்டார்.

"சம்பந்தி.... ஒரு நல்ல நாள் பாருங்க.... நாம முறைப்படி தட்டை மாத்திக்கலாம். அப்படியே மாப்பிள்ளையும் பொண்ணும் சந்திச்சுக்கட்டும், மிச்சத்தை அப்புறமா பேசிக்கலாம்..." அரசு உரைக்க, அனைவரும் சந்தோஷமாகவே தலை ஆட்டினார்கள்.

"முதல்ல வர்ற நல்ல நாளையே பாருங்க..." பார்வதி வேகமாக உரைக்க, நகுல் மெல்லியதாக புன்னகைத்துக்

கொண்டான்.

"அதுக்கென்ன சம்பந்தியம்மா.... சீக்கிரமே பாக்கறோம்..." முத்துலட்சுமி அவருக்கு பதில் கொடுத்தார்.

அவர்கள் வீட்டில் காபி அருந்திவிட்டு அவர்கள் விடை பெற்றார்கள்.

**** உடனே கிளம்பிவா என தந்தை சொன்னதன் காரணம் புரியாமல், யாருக்கு எதுவும் பிரச்சனையா.... அம்மாவுக்கு உடம்பு சரியில்லையோ என எண்ணியவாறு அவள் கிளம்பி வந்திருக்க, வீட்டில் இருந்த சொந்தங்களைப் பார்த்து சற்று குழம்பித்தான் போனாள்.

தன் அறையில் பேகை வைத்தவள்.... "என்னம்மா விசேஷம்.... எல்லாரும் வந்திருக்காங்க..." அவள் புரியாமல் கேட்க, மனமோ ஏனென்றே அறியாமல், திடும் திடுமென அதிர்ந்தது.

"நாளைக்கு உனக்கு பூ வைக்க வராங்க. அதான்..." சாதாரணமாக சொல்லிச் செல்லும் தாயை உள்ளம் அதிர பார்த்திருந்தாள்.

"என்னம்மா திடீர்ன்னு.... என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லாமல்..." அவர் பின்னால் செல்ல,

அவளைப் பார்த்த தந்தை, "வாம்மா.... எப்போ வந்த...? போய் ரெஸ்ட் எடு..." அவர் உரைக்க, அதற்குமேல் சொந்தங்களின் முன்னால் அவளால் எதையும் பேச முடியவில்லை.

முதல் வேலையாக தன் அறைக்கு வந்தவள், தன் அலைபேசியில் இருந்து வேந்தனைத் தொடர்பு கொள்ள, இணைப்பு கிடைக்கும் முன்பே, தன் அறையின் குளியலறையில் இருந்து வெளியே வந்த சித்தியைப் பார்த்து, பட்டென அலைபேசியை அணைத்து வைத்தாள்.

"வாம்மா புதுப் பொண்ணு.... எம் பொண்ணுக்கு கல்யாணக்களை வந்துடுச்சு..." அவளை நெட்டி முறிக்க, கலங்கும் தன் கண்களை மறைக்க மிகுந்த சிரமப் பட்டாள்.

அதன் பிறகு தனிமை என்பதே அவளுக்கு கிடைக்காமல் போனது. அத்தை மகள்கள், ஒன்று விட்ட தங்கைகள், தோழிகள் என அனைவரும் அவளைச் சுற்றி இருக்க, அலைபேசியை கண்களால் தீண்டக் கூட அவளால் முடியாமல் போனது.

இரவில்.... அனைவரும் உறங்கிய பிறகு, தன் அலைபேசியோடு குளியலறைக்குள் புகுந்தவள், வேந்தனுக்கு அழைக்க, உறக்கக் கலக்கத்தில் அவன் உரைத்த ஹல்லோ.... அவளுக்கு நாராசமாக காதில் ஒலித்தது.

‘நான் இங்கே முள்ளுமேல் நிக்கிற அவஸ்தையில் இருக்கேன். இவன் தூங்கிட்டு இருக்கான்...’ அவனுக்கு விஷயம் தெரியாது என்பது புரிந்தாலும், ஏற்றுகொள்ள முடியாமல் கோபம் கொண்டாள்.

"ஏய் அனு.... நீதானா...? என்னால் நம்பவே முடியலை. நானே போன் பண்ணா கூட, ஒன்பது மணிக்கு மேலே கால் பண்ணாதீங்கன்னு குதிப்ப, இன்னைக்கு என்ன...? அம்மணிக்கு தூக்கம் வரலையோ...?" ஒரு மாதிரி குரலில் அவன் வினவ, அவளுக்கு அப்படியே கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"எனக்கு நாளைக்கு பூ வைக்க வராங்க..." எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அவள் உரைக்க, அவனுக்கு தூக்கம் சுத்தமாக கலைந்து போனது.

"என்ன சொன்ன...? பூ வைக்க வராங்களா? ஓஹோ.... அப்போ பொண்ணு பாத்து.., பேசி.... முடிவு பண்ண பிறகு.... பூ வைக்க வராங்கன்னு எனக்கு தகவல் சொல்லத்தான் போன் பண்ணியா? மாப்பிள்ளை நல்ல வசதியோ.... அதான் உடனே சம்மதம் சொல்லிட்ட போல.... எனக்குத்

தெரியும்.... நீ கடைசியா இப்படித்தான் எதையாவது செய்வன்னு எனக்கு நல்லாவே தெரியும்..." அவன், அவன்பாட்டுக்கு கத்திக் கொண்டிருக்க,

கேட்டுக் கொண்டிருந்த அனன்யாவுக்கு ஹோ... என இருந்தது. 'இவன் திருந்தவே போறதில்லையா...?' அவள் நினைக்க,

"அன்னம்.... அம்மாடி..." தாயின் குரல் வெளியே கேட்க, அலைபேசியை பட்டென அணைத்தவள், அதை சுவிட்ச்ஆப் செய்து போட்டாள். அவன் குணத்துக்கு, அவன் மீண்டும் மீண்டும் தன்னை அழைத்தால், இருப்பவர்களுக்கு பதில் சொல்ல முடியாது என்பதாலும், தன் தந்தைக்கு ஒரு அவப்பெயரை தேடித்தர முடியாது என்பதாலுமே அவ்வாறு செய்தாள்.

"அம்மா.... இதோ வரேம்மா..." குரல் கொடுத்தவள், முகத்தை நன்றாக கழுவி விட்டு வெளியே வந்தாள். வீசிங்க்கு அறிகுறியாக சற்று மூச்சு வாங்கியது.

"இந்நேரத்துக்கு என்னடி...? ஏய்.... மூச்சு வாங்குற? ஜூஸ் எதுவும் குடிச்சியா?" அவர் வினவ, "வயிறு சரியில்லம்மா..." அவள் தாயிடம் உரைத்ததை மூர்த்தியும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். ஆனால், எதுவும் சொல்லவில்லை. மகளது குரலில் இருந்த வித்தியாசம்.... அவருக்கு நன்றாகவே புரிந்தது. உறக்கம் அவரைவிட்டு தூரச் சென்றிருந்தது.

மகளை படுக்க வைத்த முத்துலட்சுமி, அவளுக்கு மருந்தை கொடுத்துவிட்டு, நெஞ்சில் தைலத்தை தேய்த்தவர், மகளின் அருகிலேயே படுத்துக் கொண்டார். தாயின் அக்கறையில் அவளுக்கு கண்கள் கலங்கியது.

அனன்யாவுக்கு வீசிங் வந்துவிட்டால்.... முத்துலட்சுமி அவளை கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்வார். அவரது கவனிப்பு எப்பொழுதும் அவளுக்கு மிகவும்

பிடிக்கும். தாயின் மீது கை போட்டவள், அப்படியே உறங்கிப் போனாள்.

மூர்த்திக்கு தான் செய்வது சரியா.... தவறா என அவருக்குத் தெரியவில்லை. ஆனால்.... மகளது தெரிவு சரியாக இருந்திருந்தால், அதை வீட்டில் வெளிப்படுத்த அவள் தயங்க மாட்டாள் என்பது மட்டுமே அவர் அறிந்த உண்மை.

மகள் எப்பொழுது அதைச் செய்யவில்லையோ.... அதிலும்.... இவ்வளவு நாட்கள் ஆனா பிறகும் நிலைமை மாறவில்லை என்றால், நிச்சயம் நான் எடுத்த முடிவு சரிதான் என அவர் எண்ணினார்.

ஆனாலும்.... எங்கே தனக்கு ஒரு தலை குனிவை மகள் ஏற்படுத்தி விடுவாளோ என, ஒரு சாதாரண தந்தையாக அவர் கவலை கொண்டது மட்டும் உண்மை. நகுலைத் திருமணம் செய்து கொண்டால், அவளது வாழ்க்கை நன்றாக இருக்கும் என்பது திண்ணம்.

‘உங்க மகளை நான் மனசார விரும்புகிறேன். அவளை நன்றாக பார்த்துக் கொள்வேன்...’ என தன்னிடமே நேர்மையாக உரைத்த அவன் கண்களில் இருந்த காதல்.... அவரை முழுதாக அவனை நம்பத் தூண்டியது.

நிச்சயம் அவன் தன் காதலை மகளுக்கு உணர்த்திவிடுவான் என உறுதியாக அவர் நம்பிய அதே வேளை.... தன் மகளும், கழுத்தில் தாலி என்ற ஒன்று ஏறி விட்டால்.... நிச்சயம் அதற்கு துரோகம் செய்ய மாட்டாள் என ஆணித்தனமாக நம்பினார்.

ஆனால்.... அவர் அறியாத ஒன்று உண்டு.... அது.., காதல் எதையும் செய்யத் தூண்டும் என்பதைத்தான் அவர் மறந்து போனார். இல்லையென்றால்.... தன் வளர்ப்பின்மேல் அவர் கொண்ட நம்பிக்கை, அவரை அவ்வாறு எண்ணத் தூண்டவில்லையோ என்பது, அந்த கடவுள் மட்டுமே அறிந்த உண்மை.

அனன்யாவுக்கோ.... தான் இப்பொழுது என்ன செய்வது எனத் தெரியாத குழப்பம். ஓடிபோய் தன் தாயிடம் சொல்லி விடுவோமா? தந்தையின் காலில் விழுந்து விடுவோமா? பலவாறாக சிந்தித்தவளுக்கு, தனக்கு துணை நிற்கவேண்டிய வேந்தன்.... சுயநலமாக இருப்பதை எண்ணி கண்கள் கலங்கியது.

இப்பொழுது கூட, தான் சொன்னதற்கு.... அடுத்து என்ன என்பதை சிந்திக்காமல், தன்மேல் குற்றம் சுமத்துவதை ஒன்றே குறிக்கோள் என இருக்கும் அவன் செய்கையை எண்ணி துவண்டு போனாள்.

'இப்படி ஒரு காதல் அவசியமா...?' அவள் மனம் விழித்துக்கொண்டு கேள்வி கேட்க, 'ச்சீ.... இதென்ன நினைப்பு...' உடனே அதை விரட்டினாள்.

இவ்வளவு நேரம் கலங்கியிருந்த அவள் மனம், அவனிடம் பேசிய பிறகு, மரத்துப்போனது போல் இருந்தது. அதே நேரம்.... காதலுக்கு தான் துரோகம் செய்கிறோமோ...? அவன் சொல்வதுபோல்.... எப்பொழுது அவனிடமிருந்து கழண்டுகொள்வோம் என நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறோமோ? அவ்வளவு கேவலமானவளா நான்?

ஒருவனுக்கு நம்பிக்கை கொடுத்துவிட்டு.... மற்றவனை திருமணம் செய்துகொள்ள நான் தயாராகிறேனே.... விடிய விடிய தன்னையே கேட்டு குழப்பிக் கொண்டவள், இறுதியாக தூங்கிப் போனாள்.

அடுத்தநாள் விடியல்.... அவளைத் தீண்ட.... பதுமைபோல் மற்றவர்கள் கையில் தன்னை ஒப்படைத்துகொண்டு அமைதியானாள்.

12

சலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்க, அவளது இதயம் ரேஸ் குதிரையாக குதிக்கத் துவங்கியது. சரியாக அந்த வேளையில் மைத்ரேயி அவள் அறைக்குள் நுழைய, தோழியைப் பார்த்தவுடன் கண்கள் தானாகவே கலங்கியது.

மாப்பிள்ளை வீட்டினர் வந்துவிட்டார்கள் எனச் சொன்னவுடன், அவனைக் காணும் ஆவலில், இவ்வளவு நேரம் அவளைச் சுற்றியிருந்த பெண்கள் கூட்டம் விலகிச் சென்றிருக்க, தோழியின் கரத்தை பற்றிக் கொண்டவள், கலங்கியே விட்டாள்.

"அனு.... இப்போ எதுக்குடி அழற...?" அவளை தாங்கிக் கொள்ள, 'உனக்குத் தெரியாதா?' என்ற கேள்வியோடு அவளை ஏறிட்டாள்.

"அனு.... நடக்குறது எல்லாம் நன்மைக்கேன்னு நினைச்சுக்கோ. நான் ஏற்கனவே உன்கிட்டே சொன்னதுதான்.... அவன் உனக்கு ஏத்த ஆள் கிடையாது. தேவையில்லாமல் மனசைப் போட்டு குழப்பிக்காமல், சந்தோஷமா இருக்கும் வழியைப் பார்..." கண்டிக்கும் குரலில் உரைத்தாள்.

அவள் இப்படித்தான் சொல்வாள் என்பதை எதிர்பார்த்திருந்தவள், தன் நினைப்பை அவள் பொய்யாக்காமல் அதையே உரைக்க, "அதேப்படிடி.... மனசுக்குள் ஒருத்தனை வச்சுட்டு.... இப்போ வேற ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டினால்.... அது.... என்னை கட்டிக்கப்போறவருக்கு நான் செய்யும் துரோகம் இல்லையா...?" அனன்யா வினவ,

இந்த நேரத்தில் கூட, தன் காதலைப் பற்றி கவலைப் படாமல், முகம் தெரியாத, வருங்கால கணவனைப் பற்றி

கவலைப்படுகிறோம் என்பதை அறியாமலே உரைக்கும் தோழியை அமைதியாகவே ஏறிட்டாள்.

மைத்ரேயிக்கு நன்றாகத் தெரியும்.... வேந்தன் குழம்பிய குட்டையில் மீன் பிடித்துவிட்டான் என்று. தான் கொடுத்த நம்பிக்கைக்காக மட்டுமே தோழி கலங்குகிறாள் என்பதும், மற்றபடி.... வேந்தன்மேல் அவளுக்கு கரைக்காணாத காதல் எல்லாம் கிடையாது என்பதும் அவளுக்கு நன்றாகவே தெரியும்.

அதை இப்பொழுது சொல்லி அவளைக் குழப்புவதை விட, தன் மனதைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் அவளே ஒரு தெளிவான முடிவிற்கு வர வேண்டும் என எண்ணியவளாக, "இப்படியெல்லாம் உன்னை யார் யோசிக்கச் சொன்னா? வேந்தன் உண்மையாகவே உன்னைக் காதலித்தால், அவன் காதல் நிறைவேற அவன்தான் போராடணும்.

"அதை விட்டுட்டு.... அவனுக்காக நீயும் ரெண்டு வருஷம் காத்திருந்தாச்சு. இனிமேல்.... இதில் நீ செய்ய எதுவுமே இல்லை. எப்படியும் கல்யாண தேதி குறிக்க நாள் ஆகலாம். பார்ப்போம்.... அவன் என்னதான் செய்யிறான்னு. நீ இப்போ உன் அப்பா அம்மாவைப் பற்றி மட்டும் யோசி..." தன்னால் முடிந்த அளவு அவள் மனதை தெளிய வைக்க முயன்றாள்.

தோழி சொல்வதில் இருக்கும் நியாயம் புரிய, அமைதியானவளுக்கு, தன்னை கட்டிக் கொள்ளப் போகும் கணவனிடம் சொல்லி, திருமணத்தை நிறுத்தும் யோசனை மட்டும் வரவே இல்லை. அது ஏனென்று அவள் சிந்திக்கவில்லையா.... அல்லது சிந்திக்க விரும்பவில்லையா என்பதை யார் அறிவார்?

வெளியே வந்தவர்களை வரவேற்று..... குளிர்பானம் பரிமாறப்பட, அதைப் பருகிய பார்வதி, உடனே அனுவைக் காணும் ஆவலில், "மருமக எங்கே இருக்கா...?" தன் அருகில்

வந்த முத்துலட்சுமியிடம் கேட்க, அவரோ, "வாங்க..." கையோடு அவரை அழைத்துச் சென்றார்.

அவர் பின்னாலேயே வருணாவும் எழுந்து செல்ல, நகுலின் பார்வை தன்னவளைக் காண ஆவலோடு எதிர்பார்த்தது. அதை உணர்ந்த வருணா, எழுந்து செல்லும் முன்னர், தன் அண்ணனை திரும்பிப் பார்த்தவள், 'வரியா...?' பார்வையால் அழைக்க, 'போடி...' அவனும் செல்லமாய் பார்வையால் மிரட்ட, சின்னச் சிரிப்போடு விலகிச் சென்றாள்.

அறைக்குள் நுழைந்த பார்வதி.... அனன்யாவின் அருகில் செல்ல, அவர் வரவே அறைக்குள் எழுந்த சலசலப்பில் வாயிலை நோக்கியவள், தன்னை நெருங்கியவரைப் பார்த்து சற்று திகைத்துப் போனாள்.

'இவங்க...' யோசனையோடு இருக்கையில் இருந்து எழ, "அம்மாடி.... அப்படியே மகாலஷ்மி மாதிரி இருக்க..." அவளை நெட்டி முறித்தவர், அவள் கன்னம் தாங்கி, அவள் நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்தார்.

அவர் கண்களில் தெரிந்த நேசம்.... அவரது முத்தம் அவளை திகைக்கச் செய்ய, அதை அவள் விழிகளும் பிரதிபலித்தது. அன்று கடையில் தனக்கு ஏற்பட்ட சந்தேகம் உண்மைதான் என்பதை உணர்ந்து கொண்டவள்.... 'அப்படின்னா.... இவங்க புள்ளை...' சட்டென, அன்று கதவைத் திறக்கையில், ஒரு நொடி அவனைப் பார்த்தது நினைவிற்கு வர, அவன் முகம் தெளிவாக அவள் மனத் திரையில் விரிந்தது.

வருணாவோ.... "அண்ணி.... ரொம்ப அழகா இருக்கீங்க.... எங்க அண்ணா இன்னைக்கு பிளாட்டுதான்..." அவள் கைகளை பற்றிக் கொண்டாள்.

வருபவர்கள் ரொம்ப பெரிய இடமாம் என சுற்றி இருந்தவர்கள் பேசியதை அவளும் கேட்கவே செய்தாள். எனவே.... அவர்கள் எப்படி இருப்பார்களோ.., என

சிந்தித்திருக்க, தன் வருங்கால மாமியார், நாத்தனார் இருவரின் அன்பு அவளை திக்குமுக்காடச் செய்தது.

அதைவிட.... என்னவோ நெடுநாள் பழகியது போன்ற அவர்களது நடத்தை, பேச்சு.... தான் எப்படி உணர்கிறோம் என்றே அவளுக்குப் புரியவில்லை. 'இவங்களுக்கு என்னை முன்னாடியே தெரியுமா? இருக்காதே.... அன்றைக்கு தானே முதல் முறையாக அவர்களைப் பார்த்தேன்...' மனமோ அதன் போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தது.

வருணாவின் பேச்சில் சற்று அவள் நெளிய.... "ஏய்.... சும்மா இருடி.... பார் அவ பயப்படுறா..." பார்வதி மகளை அடக்க, "போங்கம்மா.... என்னடா இந்த அத்தை இப்படி பாசத்தில் பொங்குதேன்னுதான் அவங்க பயப்படுறாங்க. அப்படித்தானே அண்ணி..." அனன்யாவிடம் வருணா கேட்க, அவள் விழித்தாள்.

மகளை செல்லமாய் அடித்தவர், "வாயாடி.... முதல்ல வெளியே போய் உக்கார்...." அவளை அனுப்ப முயல, அவள் வயிற்றைப் பார்த்த அனன்யா.., சற்று தயங்கியவாறே.... "எத்தனாவது மாசம்..." எங்கே வார்த்தைக்கு வலிக்குமோ என மென்மையாக வினவினாள்.

"அஞ்சாவது மாசம் அண்ணி..." தாய்மைக்கே உரிய பூரிப்பும், வெட்கமும் அவள் முகத்தில் வழிய, தன் கையை பற்றியிருந்த அவள் கரத்தின்மேல் தன் கரத்தை வைத்தாள்.

"சரி சரி.... வாங்க போகலாம்..." வெளியே காத்திருக்கும் மற்றவர்கள் நினைவிற்கு வர, மகளிடம் உரைத்தவர், "டென்ஷனே படாதேம்மா. ரிலாக்ஸா இரு..." அனன்யாவிடம் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்.

"வரேண்ணி..." வருணாவும் வெளியேற, திகைப்பு மாறாமல் நின்றிருந்தாள் அனன்யா.

"அனு.... இவங்களை ஏற்கனவே உனக்குத் தெரியுமா?" மைத்ரேயி கேட்க,

"ம்.... நகைக்கடைக்கு ஒரு நாள் வந்தாங்க.... அப்போ பாத்திருக்கேன்" அவள் உரைக்க, "அப்போ உன்னை பாத்த உடனே அவங்களுக்கு புடிச்சிடுச்சு போல, பொண்ணு கேட்டே வந்துட்டாங்க.... பாக்கவும், பழகவும் நல்ல ஆட்களாத்தான் தெரியறாங்க. நீ ரொம்ப லக்கிடி..." உள்ளார்ந்து உரைத்தாள்.

சம்மதமாக தலை அசைத்தவளுக்கு, மனதுக்குள் ஒரு பெரிய நிம்மதி. அதன் பிறகு, அவளுக்கு சிந்திக்கவே நேரம் இருக்கவில்லை. அவளை அழைத்து, கையில் காபி டிரேயை கொடுக்க, வந்திருப்பவர்களைப் பார்த்து, அவள் கரம் நடுங்கவே செய்தது.

"அம்மாடி.... நீ நகுலுக்கு மட்டும் கொடு..." பார்வதி உரைக்க, அந்த கூட்டத்தில் அவன் எங்கே என்று எப்படித் தேட.... நிமிர்ந்து பார்க்கவே அவளுக்கு தயக்கமாக இருந்தது. அவள் அப்படியே ஒரு நொடி நின்றுவிட, தானாகவே இருக்கையில் இருந்து எழுந்தவன், அவள் கையில் இருந்த ட்ரேயில் இருந்து ஒரு கப்பை எடுத்துக் கொண்டான்.

அவன் செய்கை, அவளுக்கு ஒரு பெரிய நிம்மதியைக் கொடுக்க, "அடியாத்தி.... மாப்பிள்ளைக்கு அக்கறையைப் பாத்தீங்களா?" கூட்டத்தில் ஒரு கிழவி குரல் கொடுக்க, அங்கே ஒரு சிரிப்பலை எழுந்து அடங்கியது. அனன்யாவுக்கு முகம் சிவந்து போனது.

நகுல் அந்த பேச்சைப் பற்றியெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கூட்டத்தில் அவளை பார்ப்பதை கூட தவிர்த்து விட்டு, நவீனிடம் பேசியவாறு அமர்ந்து கொண்டான்.

அவளிடமிருந்து உறவுப் பெண்ணொருத்தி டிரேயை வாங்கிக் கொள்ள, "அம்மாடி.... நீ இப்படி உக்கார்..." பார்வதி அவளை தன்னோடு அமர வைத்துக் கொண்டார்.

"அண்ணா.... அண்ணியைப் பார்.... என்னவோ பொண்ணு மாதிரி நீ வெக்கப்படுற..." அவன் காதில் கிசுகிசுக்க, அவளுக்கு மெல்லிய சிரிப்பை உதிர்த்தவன், காபியை அருந்தினான்.

பார்வதி அனன்யாவிடம் பேச, அவருக்கு பதில் கொடுத்தவள், தன்னை மீறி பார்வை நகுல் பக்கம் பாய, வெகு இயல்பாக இருந்த அவன் செய்கை, அவளைக் கவர்வதாய்....

அதன் பிறகு, இருவரையும் எதிர் எதிரில் நிற்க வைத்து, பெரியவர்கள் தட்டை மாற்ற, இருவரது பார்வையும் ஒரு நொடி சந்தித்து மீண்டது.

வரும் முதல் முகூர்த்தத்திலேயே நாள் குறிக்கப்பட, அவள் மனம் அடித்துக் கொண்டது. அவள் முக மாற்றத்தை கவனித்த நகுலுக்கு, முதல் முறையாக சிறு கலக்கம்.

உணவு உண்ட பிறகு.... சொந்தங்கள் சற்று கலைந்திருக்க, அவன் தன் தாயை ஏறிட, அவன் மனம் புரிந்தவராய்.... "சம்பந்தி.... சின்னவங்க ரெண்டு பேரும் ஒரு வார்த்தை பேசிக்கட்டுமே..." பார்வதி மூர்த்தியிடம் வினவ,

"முத்து.... மாப்பிள்ளையை மாடிக்கு அழைச்சுட்டு போகச் சொல்..." அவர் அனுமதி வழங்க, அவள் வரும் முன்னர், மாடிக்குச் செல்லும் வழியைக் கேட்டுவிட்டு, அவன் சென்று காத்திருந்தான்.

மொட்டை மாடியில் துணி காயப்போடுவதற்காக ஷீட் போடப்பட்டிருக்க, அங்கே சிறு சிமென்ட் பெஞ்ச் இருக்க, அதில் அமர்ந்து கொண்டான்.

விழிகளோ, மாடிப்படியை எதிர்நோக்கியிருக்க, செவிகளோ, அவள் கொலுசின் ஓசையில் லயித்திருந்தது. தயக்கமாக மாடி ஏறியவள், அவன் எங்கே என்று நோக்க, "வாங்க..." அழைத்தவன், அந்த சிமென்ட் பெஞ்சில் அவள் அமர இடம் விட்டு நகர்ந்து அமர்ந்தான்.

கால்கள் பின்னிக்கொள்ள, இதயம் அதிர, கைகளை கோர்த்துக் கொண்டவள், அடிமேல் அடி வைத்து அவனை நெருங்கினாள். முகம் வியர்வையில் முத்து முத்தாக வேர்க்க, மூச்சடைக்கும் உணர்வு.

அவன் பார்வையோ.... அவளை மயிலிறகாய் வருடியது. "அன்னம்..." அவன் அவளை அழைக்க, வேகமாய் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

"நீங்க நடந்து வரதைப் பார்த்தால்.... அப்படித்தான் இருந்தது..." அவன் உரைக்க, அவள் இமைகள் படபடவென அடித்துக் கொண்டது.

"உக்காருங்க..." அவன் உரைக்கவே, அமர்ந்தவள், அவனைப் பார்ப்பதை தவிர்க்க, "உங்களுக்கு என்னை பிடிச்சிருக்கா...?" அவனது கேள்வி, அவளை ஏறிட வைத்தது.

அவன் பார்வையில் தெரிந்த சொந்தம்.... காந்தமாய் கவர்வதை விட, உரிமையாய்.., பாசமாய்.... என்னவோ ஏழேழு ஜென்மமாய் பழகியது போன்று, சொந்தமாய் அவளைத் தழுவிய அவன் பார்வையில், விழிகளை அவளால் திருப்பிக் கொள்ளவே முடியவில்லை.

ஒரு வேளை காதல் பார்வையையோ.... ஆழமான பார்வையையோ அவன் செலுத்தியிருந்தால் முகத்தை திருப்பியிருப்பாளோ என்னவோ. ஆனால்.... அவனது இந்த பார்வையில், அவளால் கட்டுப்படவே முடிந்தது.

"கேட்டேனே..." அவளுக்கு நினைவூட்ட, "எ..ன்..ன...?" தடுமாறிப் போனாள்.

"அதான்.... என்னைப் பிடிச்சிருக்கா?" அவன் மீண்டும் அதே கேள்வியைக் கேட்க, அவனை அப்பொழுதுதான் தெளிவாகப் பார்த்தாள்.

ஆறடி உயரம், மற்றவரை துன்புறுத்தாத கண்ணியமான, நேர்மையான பார்வை, கூர் நாசி, கச்சிதமான மீசை, கிளீன் ஷேவ் செய்து, அலையலையான கேசத்தில் முழு ஆண்மகனாய் இருந்தான். அடர் கிரே கலர் முழுக்கை சட்டையும், பழுப்பு நிற பேண்ட்டும்.... காலில் ஷூ அணிந்ததற்கு அடையாளமாக இருந்த வெண்ணிற சாக்ஸில் அவன் இருக்க, ஒரு குறை சொல்ல முடியாது.

அவள் தன்னை அளவிடுவதை உணர்ந்த பிறகும், அமைதியாகவே அமர்ந்திருந்தான். அவள் முகத்தை விட்டு, பார்வையை அகற்றாமல், சிறிய நெற்றி, அதில் இருந்த பொட்டு, மீன் விழி, அளவான நாசி, சின்ன இதழ்கள்.... ஒவ்வொன்றாய் தன் மனதுக்குள் பதிய வைத்துக் கொண்டிருந்தான்.

அதே நேரம்.... "அண்ணா..." வருணாவின் குரல் கீழிருந்து ஒலிக்க,

"அண்ணி கூப்பிடுறாங்க..." சட்டென அவனிடமிருந்து பார்வையை மீட்டவளாக, அவன் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான் என்ற சங்கோஜத்தோடு உரைத்தவள், இருக்கையில் இருந்து எழுந்துவிட்டாள்.

"அன்னம்.... நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லிடேன்..." அவன் குரல் அவள் காலை கட்டிபோட, அதில் தொனித்த பாவனை, அவளை அவன் முகத்தை ஏறிடச் செய்தது. அவனது அன்னம் என்ற அழைப்பு, அவளுக்குள் என்னவோ செய்தது.

அனைவரும் அவளை அனு என்றே அழைப்பார்கள். அவளது தாய் மட்டுமே அவளை அன்னம் என்று அழைப்பார். அதே அழைப்பை அவனும் அழைக்க, தன் தாயிடம் உணரும் ஒரு சொந்தம்.... பல உணர்வுகளை அவளுக்குள் விதைத்தது.

"என்னை உனக்கு புடிக்குமாம்மா...?" என ஒரு குழந்தை தன் தாயின் முகத்தைப் பார்த்து கேட்கும் பாவனையை

ஒத்திருந்தது, அவன் குரலும், முகமும்.

அமைதியாக அவள் தலை அசைக்க, சட்டென முகம் முழுவதும் பிரகாசமாக, "தேங்க்ஸ்..." உரைத்தவன், "வாங்க போகலாம்..." அவளோடு சேர்ந்து நடந்தான்.

இப்படியே அவளோடு வாழ்க்கை முழுவதற்கும் நடக்க வேண்டும்போல் இருந்தது. சட்டென நினைவிற்கு வந்தவனாக.... "உங்க போன் நம்பர்...?" அவன் இழுக்க, அவள் இதழ்கள் தாமாகவே தன் அலைபேசி எண்ணை அவனிடம் உரைத்து விட்டது.

நடந்து முடிந்தவற்றை அவளால் நம்பவே முடியவில்லை. நானா அவரிடம் சம்மதத்தை உரைத்தேன்? என் அலைபேசி எண்ணை நானா அவரிடம் கொடுத்தேன்? எப்படி என்னால் முடிந்தது? ஆயிரம் முறையாக தன்னிடம் கேட்டுக் கொண்டாள்.

அடுத்து வந்த பதினைந்து நாட்களும்.... இதையேத்தான் யோசித்தாள். ஆனால் விடைதான் கிடைக்கவே இல்லை. இரவின் உறக்கத்தில், மயிலிறகாய் வருடிய அவன் பார்வை கனவில் வர, திடுக்கிட்டு விழித்த நிகழ்வுகள் கூட நடந்து விட்டது.

வேந்தனை நினைக்கையில்.... அனைத்தும் சுருட்டிக்கொண்டு போனாலும், இதில் தான் என்ன செய்ய என்பது மட்டும் அவளுக்கு புரியவே இல்லை. அணைத்து வைத்த அலைபேசியை இன்னுமே அவள் உயிர்பிக்கவில்லை. வேந்தன் அழைப்பானே என ஒரு பக்கம் இருந்தால்...

எங்கே நகுல் அழைத்து விடுவானோ என்று பதட்டமாக இருந்ததாலேயே அதை உயிர்பிக்கும் தைரியம் இருக்கவில்லை.

அவளது பதட்டம், பயத்திலேயே.... திருமண நாளும் வந்து விட்டது. திருமணம் கோவையில் நடக்க, வரவேற்பு ஒரு

வாரம் கழித்து சென்னையில் நடப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்து, நலுங்கு வைக்க அவளை அழைக்க, 'ஏன் அலைபேசியை அணைத்து வைத்திருந்தாய்...?' என கேட்பானோ என பயந்து போனாள்.

அரக்கு வர்ண பட்டுடுத்தி.... அழகு தேவதையாய் வந்த அனன்யாவிடமிருந்து பார்வையை திருப்ப முடியாமல் சற்று தடுமாறித்தான் போனான்.

அதே நேரம்.... நகுலும் சற்று பதட்டத்தில் தான் இருந்தான். 'ஏன் எனக்கு அழைக்கவில்லை...?' என அவள் கேட்டால்.... என்ன சொல்லி சம்மாளிப்பது என்று கவலை கொண்டான்.

அனைவரிடமும் தான் விபத்தில் சிக்கியபொழுது அவள்தான் உதவி செய்தாள் என்பதை சொல்லக் கூடாது என கட்டளை இட்டிருக்க, தான் அவளிடம் பேசினால், எங்கே அதை உளறிவிடுவோமோ என்பதாலேயே அவன் அவளுக்கு அழைத்திருக்கவில்லை.

முதலிரவில்.... தங்களுக்கான தனிமையில்.... உரிமையாய் அவள் மடி சாய்ந்து அதை உரைக்க வேண்டுமென அவன் மனம் போராடிக் கொண்டிருந்தது.

ஒவ்வொருவராக வந்து நலுங்கு வைக்க, அதன் பிறகு அவர்களது சிந்தையில் மூழ்க அவர்களுக்கு நேரமே இருக்கவில்லை. அதென்னவோ.... எந்த நேரமும் வேந்தன் வந்து, திருமணத்தை நிறுத்தி விடுவானோ என்ற பயம் மட்டும் அவளுக்கு சிறிதும் இருக்கவில்லை.

அவனது கோழைத்தனம் அவள் அறிந்தது தானே. ஆனாலும்.... மனதுக்குள் ஒரு நெருடல். தான் இல்லையென்றால் உயிரை விட்டுவிடுவேன் என உரைப்பவனாயிற்றே.... ஏதாவது கிறுக்குத்தனமாக செய்து கொள்வானோ என்றே அவள் மனம் அடித்துக் கொண்டது.

நிச்சயம் தன் திருமண நாள் அவனுக்குத் தெரிந்திருக்கும் என்பதில் அவளுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. இங்கே வந்திருப்பானா? ஒரு பக்கம் சிந்தை ஓடினாலும்.... ஒருவித மோன நிலை அவளை ஆட்கொண்டது மட்டும் உண்மை.

நடக்கும் சம்ப்ரதாயத்தில் ஏனோ தானோ என்று அவளால் இருக்க முடியவில்லை. அனைத்தையும் உணர்ந்து, முழு மனதோடே ஈடு பட்டாள்.

ஒரு வழியாக அனைத்தும் முடிந்து.... இருவரும் ஒன்றாக சாப்பிட அமர, அவள் இலையில் வைக்கப்பட்ட இனிப்பை அவள் பாதி கடித்துவிட்டு வைத்திருக்க, மற்றவர் அறியாதவாறு அதை நகுல் எடுத்து உண்ண, அவனது முதல் உரிமையான செய்கையில் உறைந்துதான் போனாள்.

அதன் பிறகு உணவு ஒரு கவளம் கூட உள்ளே செல்ல மறுக்க, அவஸ்த்தையாக நெளிந்தாள். அதை உணர்ந்தவன்.... "சாரி.... டிஸ்டப் பண்ணிட்டேனா...?" அவளிடம் சின்னக் குரலில் கேட்க, அவன் குரலில் இருந்த வருத்தம் அவளை தாக்கியது.

"ஐயோ.... அப்படில்லாம் இல்லை..." வேகமாக மறுத்தாள்.

"சாப்பிடு..." இமை மூடி, மென்மையாய் அவன் உரைக்க, ‘இவனுக்கு கோபப்படவே தெரியாதா?’ அவனைப் பற்றி எண்ணிக் கொண்டாள். உணவை அமைதியாக உண்டவள், அவனது குட் நைட்டை பெற்றுக் கொண்டு, நிம்மதியாக தன் அறைக்கு விரைந்தாள்.

அந்த நிம்மதி, அடுத்த பத்தே நிமிடங்களில் ஒரு சிறுமி கொண்டுவந்த துண்டு காகிதத்தால் தொலைந்தே போனது. "மொட்டை மாடிக்கு வரவும் – வேந்தன்..." இந்த வரிகள் அவள் மனநிலையை அடியோடு மாற்றிப் போட்டது.

முதலில் உறங்கிவிட்டதாக பாவ்லா காட்டியவள், அனைவரும் உறங்கிய பிறகு.... பூனைபோல் எழுந்து மொட்டை மாடியை அடைந்தாள். எப்பொழுது இருந்தாலும் இதை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

‘என்ன சொல்லப் போகிறானோ...?’ படபடப்பாய் உணர்ந்தாள்.

அவள் வரவுக்காகவே காத்திருந்தவன் போல்.... "வாங்க புதுப்பொண்ணே.... ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போல? இப்படியே இவனை கழட்டி விட்டுடலாம்னு பாத்தியோ. முடியாது.... அது மட்டும் உன்னால் முடியவே முடியாது..." கையில் இருந்த விஷ பாட்டிலை அவள் முன்னால் வைத்தவன் வன்மமாய் உரைத்தான்.

அதைப் பார்த்தவளுக்கு.... சர்வமும் ஒடுங்கிப் போயிற்று. "வேந்தன்.... நான் ஒண்ணும் உங்களை கழட்டி விடலை..." தைரியத்தை திரட்டிக்கொண்டு உரைத்தாள்.

அவளது நடுக்கத்தைப் பார்த்தவனுக்கு திமிரெடுக்க.... "அப்போ.... இப்போ நீ செய்யிறதுக்கு என்ன அர்த்தம்? என்னால் உன்னை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது. நீ எனக்குத்தான் சொந்தம்" அவன் கத்த,

"சரி.... இப்போவே வாங்க. எங்க அப்பாகிட்டே போய் பேசலாம். காலையில் நீங்க என் கழுத்தில் தாலியைக் கட்டுங்க..." அவள் அழைக்க,

"எனக்கு ரெண்டு தங்கச்சி இருக்காங்க. ஒருத்திக்கு இப்போதான் ஒரு வரன் கூடிவர நிலையில் இருக்கு. என்னால் உன்னை இப்போ கல்யாணம் செய்துக்க முடியாது..." அச்சாணியமாக மறுத்தான்.

"இப்படி முடியாது.... முடியாதுன்னு சொல்லிட்டு இருந்தால்? நான் என்னதான் செய்யட்டும்...?" அவனிடமே கேட்டாள்.

அவன் கையில் இருக்கும் விஷம்.... அவளை கோபமாக எதையும் செய்ய விடாமல் தடுத்தது.

"இப்போ கேட்டியே.... இது நியாயம். நீ என்ன பண்ற.... நல்ல பொண்ணா போய் அவன்கிட்டே தாலியை வாங்கிக்கற. ஆனா..." அவன் நிறுத்த, இவன் என்ன சொல்கிறான்? புரியாமல் நின்றிருந்தாள்.

"முதல் ராத்திரி அன்னைக்கு.... அவன்கிட்டே என்னைப் பத்தி சொல்லிடுற. என்ன புரிஞ்சதா...?" அவன் கேட்க, இன்னுமே புரியாமல் நின்றிருந்தாள்.

"என் காதலியாவே நீ இருக்கற. சரியா ஒரு வருஷம் கழிச்சு.... அவனை விட்டுட்டு என்னோட வந்துடுற. இடையில் ஏதாவது குழப்பம் பண்ணலாம்னு நினைச்ச.... இதைக் குடிச்சுட்டு.... போலீசுக்கு ஒரு லெட்டர் எழுதி வச்சுட்டு, போய்டுவேன்.

"பிறகு.... நீதான் அசிங்கப் படணும். இது தேவையான்னு யோசிச்சுக்கோ. நான் இப்போ கிளம்பறேன். இது என்னோடவேதான் இருக்கும்..." பாட்டிலை அவள் முன்னால் ஆட்டிக் காட்டியவன், அவள் பதிலை எதிர் பாராமல் கிளம்பிப் போயே விட்டான்.

அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல்.... உறைந்துபோய் நின்றிருந்தாள் அனன்யா.

13

இரவில் சுத்தமாக உறங்காததால் திகு திகுவென எரிந்த கண்களையும், விண் விண்ணென தெறித்த தலை வலியையும் தாங்கிக்கொண்டு, அசையாமல் அமர்ந்திருந்தாள் அனன்யா.

அழகு நிலையத்திலிருந்து வந்த பெண், அவளை அலங்கரித்துக் கொண்டிருக்க, அவள் என்ன செய்கிறாள் என்பது கூட தெரியாமல், உணராமல் அவள் கைகளில் தன்னைக் கொடுத்துவிட்டு, பதுமைபோல் அமர்ந்திருந்தாள்.

படுக்கையில் அமர்ந்தவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்த மைத்ரேயிக்கு, அவள் அமைதிக்கான காரணம் புரிந்தாலும், கடந்த பதினைந்து நாட்களில் அவள் முகத்தில் பார்த்திராத கவலைக்கும், நிராசைக்கும் வெறுமைக்குமான காரணம் புரியாமல் குழம்பிப் போனாள்.

அழகு நிலைய பெண்ணுக்குமுன் எதையும் கேட்க முடியாமல், ‘ஒரு வேளை வேந்தன் எதையும் குழப்பி விட்டானா? இருக்காதே.... அவளது அலைபேசி இன்னுமே செயல்பாட்டுக்கு வரவில்லையே...’ குழப்பம் தெளியாமல் அவளையே வெறித்தாள்.

அனன்யாவுக்கோ.... இரவில் வேந்தன் வந்து சென்ற பிறகு, தான் எப்படி அறைக்கு வந்தோம் என்பதே புரியாத நிலை. அவன் வீசிச் சென்ற வார்த்தைகளும், மிரட்டிய தோரணையும், கையில் காட்டி மிரட்டிய விஷ பாட்டிலுமே பார்வையில் உலாவியது.

அவன் சொல்வதுபோல் தாலி கட்டிய அவனை ஏமாற்றுவது சரியா? திருமணத்துக்கு முன்னர் என்றால் சரி.... அதன் பிறகு.... தன் கழுத்தில் தாலி கட்டும் பாவத்துக்காக, அவன் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்குவது எந்த விதத்தில் நியாயம்?

வேந்தன் சொல்வதுபோல்.... ஒரு வருடம் கழித்து நகுலை விட்டு சாதாரணமாக தன்னால் சென்றுவிட முடியுமா? பெற்றவரிடமே அவனைப் பற்றி சொல்ல முடியாத நிலை.... இதில்.... நகுலிடம்.... அவனை நினைத்தாலே, அவன் மென்மையான பார்வைதான் அவள் கண் முன் நிழலாடியது.

அந்த கண்களில் வலியை தன்னால் காண முடியுமா? அவன் தாய்.... தங்கை வருணா.... அவனது தந்தை அரசு கூட.... அவளை ஆதூரமாக பார்த்த விதம்.... ஏனோ அவர்களை தவிர்ப்பதை அவளால் நினைத்துப் பார்க்கக் கூட கலக்கமாக இருந்தது.

"மேடம்.... கொஞ்சம் எழுந்தீங்கன்னா புடவை மாத்திடலாம்..." தான் அலங்காரத்தை முடித்துவிட்டேன் என உரைத்த பிறகும்.... அவள் அசையாமல் இருக்கவே, அவள் தோளை உலுக்கினாள்.

"எ..ன்ன...?" திடுக்கிட்டு நிமிர்ந்தவள் வினவ, "ம்.... உன் டிரீமை நிறுத்திட்டு, இந்த உலகத்துக்கு வான்னு சொன்னாங்க..." மைத்ரேயி குரல் கொடுக்க, "ஏய்.... நீ எப்போடி வந்த...?" அவளை அப்பொழுதுதான் கவனித்தவளாக கேட்டாள்.

"கிழிஞ்சுது போ.... உனக்கு பெயிண்ட் அடிக்க தொடங்க முன்னாடியே இங்கேதான் இருக்கேன்.... முதல்ல புடவையை கட்டு..." கேலியாக உரைக்க முயன்றாலும், மைத்ரேயி குரலில் சிறு கோபம் எட்டிப் பார்க்கவே செய்தது.

அவள் கோபம் புரிய அமைதியானவள், அதன் பிறகு புடவை மாற்றி, அழகு நிலையைப் பெண் வெளியே செல்லும் வரைக்கும் இருவரும் எதையும் பேசிக்கொள்ளவில்லை.

அவள் செல்லவே.... "இப்போ உனக்கு என்னதான் பிரச்சனை அனு? எல்லாம் சரியா போயிட்டு இருக்குன்னு நான் நினைத்தால்...?" முறைத்தாள்.

இதழ் கடித்து தன் அழுகையை நிறுத்தியவள், "எதுவுமே சரியா போகலடி. கழுத்தில் சிக்குன காத்தாடிக் கயிறாட்டம் வேந்தன் குறுக்கே நிக்கறான்" அவளிடம் உரைக்கக் கூடாது என நினைத்தாலும் அவளால் முடியவில்லை.

"என்னடி சொல்ற...?" அவளால் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

அனன்யா ஒரு அழுகைக்குத் தயாராக.... "அனு.... தயவு செய்து அழுது எதையும் கெடுத்துடாதே. ஏற்கனவே உன் கண்ணு நீ தூங்கலைன்னு காமிச்சு கொடுக்குது.... அதுக்காவது எதையாவது சொல்லி சம்மாளிக்கலாம். இப்போ நீ அழுதால்.... யாருக்கும் எந்த விளக்கமும் கொடுக்க முடியாது..." வேகமாக அவளை அடக்கினாள்.

அதே நேரம் கதவு தட்டப்பட.... "மூஞ்சிய சிரிச்ச மாதிரி வச்சுக்கடி..." பதைப்பாய் உரைத்தவாறு கதவைத் திறந்தாள்.

எங்கே நகுலின் தாயாக இருக்குமோ என அவள் தவிக்க, உள்ளே வந்தவர் பாரிஜாதம். "அம்மாடி.... என் பொண்ணை அலங்காரத்தில் பாக்கணும்னு ஆசையா வந்தேன். என் கண்ணே பட்டுடும் போல..." அவளை நெட்டி முறித்தவர்,

"எங்கண்ணு கண்ணெல்லாம் கலங்குனாப்புல இருக்கு...? அண்ணா ஞாபகமா?" அவரே விடையையும் சேர்த்து உரைக்க, தலையை வேகமாக உருட்டி தன்னை சம்மாளித்தாள்.

"சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்தில் ஏன் அதையெல்லாம் நினைக்கிற? அவன் எங்கே இருந்தாலும் உன்னை ஆசீர்வதிப்பான். நீ உக்கார்.... உனக்கு பால் எடுத்துட்டு வரேன்..." அவர் வெளியேற, அதன் பிறகு தோழிகள் பேச தனிமை என்பது கிடைக்கவே இல்லை.

ஹோமகுண்டத்துக்கு முன்னால் அமர்ந்து, ஐயர் சொல்லும் மந்திரங்களை ஸ்ரத்தையாக சொல்லிக் கொண்டிருந்த

நகுல் மனதுக்குள், தன் காதல் கைகூடப்போகும் தருணத்தை எண்ணி மிதந்து கொண்டிருந்தான்.

இரண்டு வருடங்களாக தான் கண்ட கனவு நிஜமாகப் போகும் தருணம்.... எப்பொழுது தன்னவள் வருவாள்.... அவளைக் காண்போம் என தவித்துப் போனான்.

அவளைக் காணும் வரைக்கும் இல்லாத சில உணர்வுகள், அவளை அடையப் போகிறோம் என்னும்பொழுது அவனை சோதிக்கவே செய்தது. இந்த பதினைந்து நாட்களாக.... அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசியிராதது வேறு, அவனை பாடாய் படுத்தியது.

நேற்றைய இரவை அவன் ஆயிரம் கனவுகளோடு கழித்திருந்தான். அவளுடனான தனிமை எப்பொழுது கிடைக்கும் என இப்பொழுதே தவித்துப் போனான்.

ஒரு வழியாக அவனை சோதித்த பிறகே.... "பொண்ணை அழைச்சுட்டு வாங்கோ..." ஐயரின் குரல், தேவாமிர்தமாக அவன் காதை நிறைத்தது.

தோழிகள் சூழ, அடிமேல் அடி வைத்து வந்த அனன்யாவை, கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் இமைக்காமல் ஏறிட்டான். அவன் பார்வையை உணர்ந்த நவீன்.... அவன் மாலையைச் சரி செய்வதுபோல் குனிந்து, "மாப்ள, நாங்கல்லாம் இங்கேதான் இருக்கோம்..." அவனுக்கு நினைவூட்ட, அதன் பிறகே தன் பார்வையை திருப்பினான்.

கூரைப்புடவை சரசரக்க, தன் அருகில் அமர்ந்தவளை ஓர விழியில் அவன் அளவிட, மறந்தும் அவன் பக்கம் அவள் திரும்பவே இல்லை. மைத்ரேயியும் நிலை இல்லாமல் தவித்துப் போனாள். தோழி உணர்ச்சி வேகத்தில் எதையும் செய்துவிடக் கூடாதே என்பது அவளது பெரும் கவலையாக இருந்தது.

அவன் அருகில் அமர்ந்திருந்த அனன்யாவுக்கோ, மனதுக்குள் புயல் சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது.

தான் செய்வது சரியா? கேள்வி அவளை துளைத்து எடுத்தது. அவள் முகத்தில் என்ன கண்டானோ.... மாலை மறைவில், அவள் இடக்கரத்தை லேசாக நகுல் அழுத்த, சட்டென நிமிர்ந்தவள், அவன் முகம் பார்த்தாள்.

அவன் கண்கள் அவளை மெல்லிய சிரிப்போடு ஏறிட, 'நான் இருக்கிறேன்..' என்ற நம்பிக்கையையும் சேர்த்தே அளித்தது.

அவன் பார்வை அவள் மனக் குழப்பங்களை அகற்ற, அவன் தொடுகை நம்பிக்கை அளிக்க, அதன் பிறகு தேவையற்ற எண்ணங்களை மனதில் இருந்து ஒதுக்கினாள்.

"மாங்கல்ய தானம் பண்ணுங்கோ..." ஐயர் திருமாங்கல்யத்தை நகுலின் கைகளில் கொடுக்க, அவன் மனமோ.... 'ஆண்டவா என் வாழ்வில் இந்த சந்தோஷத்தை நிலைக்கச்செய்...', அவன் எண்ண.... அவள் மனமோ, 'இந்த தாலிக்கு என்னை உண்மையாக இருக்கச் செய்...' தன்னை மீறி அவளை எண்ணச் செய்தது.

அவள் கழுத்தில் தாலி ஏறிய பிறகுதான்.... அவளது தந்தை மூர்த்தியும், மைத்ரேயியும் நிம்மதியாக மூச்சு விட்டார்கள். தன் தோழி நிச்சயம் கணவனுக்கு துரோகம் செய்ய மாட்டாள் என மைத்ரேயி திடனாக நம்பினாள்.

தன் நெஞ்சில் விழுந்த தாலியும், வகிட்டில், அவன் வைத்த குங்குமமும், இவன் மனைவி நான்.... அவளுக்குள் விதையை விதைக்க, அதன் பிறகு நடந்த சடங்கு, சம்ப்ரதாயங்கள் என அனைத்திலும் ஈடுபாட்டோடு கலந்து கொண்டாள்.

திருமண விளையாட்டுக்களுக்கு முன்னர், அவர்களை உடை மாற்றி வரச் சொல்ல, வந்த பிறகு மாலை மாற்றியவர்கள், திருமண விளையாட்டுக்களில் தங்களையே மறந்தார்கள். அனைத்திலும் அனன்யாவே வெற்றிபெற, "இப்போவே விட்டுக் கொடுக்க ஆரம்பிச்சிட்டார் மாப்பிள்ளை..." கூட்டத்தில் ஒருவர் குரல்

கொடுக்க, அந்த வார்த்தைகளைக் கேட்ட அனன்யா வேகமாக அவன் முகம் பார்த்தாள்.

அவனோ.... மாறாத புன்னகையால் அவளை ஏறிட்டான். அவன் புன்னகை அவளையும் தொற்றிக்கொள்ள, மென்மையாக புன்னகைத்தவள், புகைப்படக்காரரின் சொல்ப்படி அவனோடு இணைந்து போஸ் கொடுப்பதில் கவனமானாள்.

தங்கள் வழக்கப்படி முதலிரவு மணமகள் வீட்டில்தான் நடக்க வேண்டும் என முத்துலட்சுமி தயங்கியவாறு உரைக்க, அதற்கு பார்வதி வீட்டில் எந்த மறுப்பும் உரைக்கவில்லை. அதேபோல்.... மூன்றாம் நாள் தான், மணமக்கள் சென்னை செல்வார்கள் என உரைக்க, அதையும் ஏற்றுக் கொண்டது பெருத்த நிம்மதியை கொடுத்தது.

அந்த பேச்சு அனன்யாவை விதிர்க்கச் செய்ய, நகுலோ.... எப்பொழுது அந்த தருணம் வருமென ஏங்கினான். திருமண வரவேற்பு சென்னையில் என்பதால், அதற்கான வேலைகளை தாங்கள் பார்க்க வேண்டும் என்று அவன் வீட்டினர் அன்று மாலையே சென்னைக்கு கிளம்பி விட்டார்கள்.

அனன்யாவின் வீட்டில் அவளது அறையில், அவள் வரவுக்காக காத்துக் கொண்டிருந்தான். உடல் முழுவதும் சூடாகிப் போன உணர்வு. இரண்டு வருடங்களாக அவளை அடைய காத்திருந்ததாலோ என்னவோ.... இதற்குமேல் காத்திருக்க முடியாது என அவன் மனம் சண்டித்தனம் செய்தது.

அனன்யாவுக்கோ.... தன் அறைக்குச் செல்லவே கால்கள் ஒத்துழைக்கவில்லை. தோழி மைத்ரேயியின் கரத்தை ஒருவித அழுத்தத்தில் பற்றிக்கொள்ள, பெரியவர்கள் அனைவரும் சுற்றி இருக்கையில், அவளால் எதையும் பேசவே முடியவில்லை.

"அனு.... இனிமேல் இதுதான் உன் வாழ்க்கை. இதுக்குமேல் நான் உனக்கு எதையும் சொல்லப் போவதில்லை...." அவள் காதில் மெதுவாக உரைத்தவள், அவள் தாய் வைத்துவிட்டுப் போயிருந்த பால் டம்ப்ளரை அவள் கையில் கொடுத்துவிட்டு, அவளை அவள் அறைக்கு அழைத்துச் சென்று விட்டு வந்தாள்.

அவள் மனமும் திடுமென அடித்துக் கொண்டதுதான். ஆனால்.... இதில் தான் செய்ய எதுவுமில்லை என்பதை உணர்ந்தவளாக, தன் வீடு நோக்கிச் சென்றாள்.

தன் அறைக்குள் கால் வைத்த அனன்யா.... வாசல் அருகிலேயே தேங்கி நிற்க, படுக்கையில் அமர்ந்திருந்த நகுல் எழுந்து வந்து கதவைச் சாற்றிவிட்டு, அவள் கை பிடித்து அழைத்து வந்து படுக்கையில் அமர வைத்துவிட்டு, அவள் கையிலிருந்த பாலை வாங்கி, பாதி அருந்தியவன், மிச்சத்தை அவளிடம் கொடுக்க, மறுக்காமல் அவள் அருந்த, காலி டம்ப்ளரை வாங்கி, கட்டிலின் அடியில் வைத்தான்.

அவள் அருகில் சற்று நெருங்கி அமர, அவளுக்கு தேகம் மொத்தமும் நடுங்கியது. மூச்சுக்கு திணறும் உணர்வு. எங்கே வீசிங் தன் வேலையை முழு மூச்சோடு காட்டி விடுமோ என அஞ்சினாள். ஏதாவது இக்கட்டான சூழல் என்றால், அவளுக்கு மூச்சு திணறும். அப்பொழுது 'பஃப்' எடுத்துக் கொண்டால் தான் சரியாகும்.

அதை எடுத்து வர முடியாமல் அவளது தாய் தடுத்து விட்டார். நல்ல நேரத்தில் அது வேண்டாம் எனவும், நிலைமையை இயல்பாக கையாளச் சொன்னதோடு.... அங்கே இருப்பவன் அவள் கணவன் என்பதையும், அவள் குழந்தை கிடையாது எனவும் அறிவுறுத்திச் சொல்லியிருக்க, அமைதியாக அதை ஏற்றுக் கொண்டாள்.

அவளை நெருங்கி அமர்ந்தவன், அவள் இடக்கரத்தை மென்மையாக பற்ற, அவள் கரம் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது. அவள் கை அப்படியே சில்லிட்டுப்

போயிருந்தது. அவன் கரமோ.... அவளுக்கு கதகதப்பாக இருந்தது. அந்த கதகதப்பு, அவள் தேகத்தில் கடக்கும் உணர்வு.

"அன்னம்.... ரிலாக்ஸ்.... உனக்குப் பிடிக்காதது எதுவும் இங்கே நடக்காது ஓகே..." அவன் அவளுக்கு நம்பிக்கை அளிக்க, அவளுக்கு தைரியம்தான் வரவில்லை.

தன் உணர்வுகளை சற்று ஒதுக்கி வைத்தவன், அவளை முதலில் இயல்பாக்க முடிவெடுத்தான். "உன்னைப்பற்றி சொல்லேன்.... உன் காலேஜ்.... ப்ரண்ட்ஸ்.... பிடித்தது.... பிடிக்காதது..." அவள் கரத்தை விடாமல் அவன் வினவ, கைகளை உருவிக்கொள்ள தேகம் பரபரத்தாலும் அமைதியாக இருந்தாள்.

சற்று நேரம் அமைதியாக இருந்தவள், சொல்லாமல் போனால் அவன் விடப்போவதில்லை என்பதை உணர்ந்தவளாக, சின்னக் குரலில் தன்னைப் பற்றி விவரித்தாள்.

அவள் சற்று இயல்பானதை உணர்ந்த நகுல்..... மென்மையாக தான் பற்றியிருந்த புறங்கையில் இதழ் பதிக்க, விதிர்த்துப் போனாள். வெடுக்கென கையை பிடுங்கிக்கொள்ள எண்ணியவள், அவன் இதழின் வெம்மையும், மீசையின் குறுகுறுப்பும்.... அவளை ஸ்தம்பிக்கச் செய்ய, அவளால் அதைச் செய்ய முடியவில்லை.

‘இவன் உன் கணவன்.... நீ அவன் மனைவி. அவன் உரிமையை அவன் எடுத்துக் கொள்கிறான்...’ அவள் மனம் அவளுக்கு பாடம் எடுக்க, மற்றொரு மனமோ.... வேந்தன் சொன்னதை நினைவூட்டியது.

அவ்வளவு நேரம் வராத வேந்தனின் நினைவு அப்பொழுது எழ, தான், தவறு செய்யும் உணர்வு.

அவனுக்கோ.... இளமை முதல் அடக்கி வைத்திருந்த உணர்வுகள் அனைத்தும் கிளர்ந்து எழ, தான் பேச வந்த அனைத்தும் மறந்தே போனது. அவள் கரத்தை உருவிக் கொள்ளாதது தைரியம் அளிக்க, இன்னும் அவளை நெருங்கியவன், அவள் கரத்தை விட்டுவிட்டு, அவள் கன்னம் தாங்கி.... அழுத்தமாக அவள் கன்னத்தில் இதழ் பதித்தான்.

என்னவோ பிரிட்ஜ்ஜுக்குள் இருந்து எடுத்த பாலாடைக் கட்டியில் இதழ் பதித்த உணர்வு. ஒற்றை முத்தத்தோடு விலக எண்ணியவனுக்கு, அந்த இதழ்களின் வழவழப்பும், சில்லிப்பும்.... தன் வெம்மைக்கு மருந்தாக இருக்க, அடுத்த கன்னத்திலும் தன் இதழைப் பதித்தான்.

அவளுக்கோ.... அவன் இதழ்களின் வெம்மை தேகம் முழுதும் பரவ, தேகம் சூடாவதற்குப் பதிலாக, மேலும் சில்லிட்டுப் போனது.

‘தாலி கட்டினாலும் நீ என் காதலியாவே இருக்குற.... இல்ல...’ வேந்தனின் குரல் காதுக்குள் அறைய, உரிமையுள்ளவனின் செய்கையை தடுக்கவும் முடியாமல், மனதுக்கு எதிராக போராடவும் முடியாமல் அவள் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

இமை மூடி, தன் செய்கையில் லயித்திருந்தவனது இதழ்கள் உப்பு சுவையை உணர, வேகமாக அவளை விட்டு தன் இதழ்களை விலக்கிக் கொண்டு அவள் முகம் பார்த்தான்.

மூடிய அவள் விழிகளில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக, இதழ் கடித்து அவள் அழுகையை அடக்கப் போராடுவது புரிய, தன் செய்கை அவளுக்குப் பிடிக்கவில்லையோ.... தவித்துப் போனான்.

அவளோ.... அவன் விலகியது புரிந்தாலும், இமை திறக்காமல், தன் கன்னம் தாங்கிய அவன் கரத்தையும் உணர்ந்தவளாக, "நான் ஒருத்தருக்கு நம்பிக்கை

கொடுத்துட்டேன்.... என்னால்..." மேலே சொல்ல முடியாமல் அவள் தேம்ப, குழப்பமாக அவளை ஏறிட்டான்.

"என்ன...? நம்பிக்கை.... எனக்குப் புரியலை..." 'எதுவாக இருந்தாலும் சொல்' என்ற பாவனையில், ஆதரவாக, அணைப்பாக ஒலித்த அவன் குரல்.... அவளை அடுத்த வார்த்தை பேச அனுமதிக்கவில்லை.

தன் கன்னம் தாங்கிய அவன் கரத்தின்மேல் தன்னை மீறி, தன் கரத்தை பதித்தவள், வார்த்தைகள் வெளியிட முடியாமல், இதை எப்படிச் சொல்ல என்ற தயக்கமும், நடுக்கமும் சேர, அவனது இந்த அனுசரணையை இழக்க முடியுமா என ஒரு மனம் போராட.... அதை உணர்ந்தவளோ.... வெடித்து அழுதாள்.

அவள் அழுகையை தாங்க முடியாமல், நகுல்தான் துடித்துப் போனான்.

"ஓகே.... ஓகே.... சொல்ல முடியவில்லை என்றால் பரவாயில்லை, நாம நிதானமா பேசிக்கலாம். விடு.... அழாதே..." அவள் கண்ணீரை பெருவிரலால் துடைத்தவன், என்னவோ ஏதோ என கலங்கினாலும், அவளுக்கு தைரியத்தை அளிக்க முயன்றான்.

அவனது அந்த அனுசரணையே அவளைக் கொல்ல, அவனது இந்த நேசத்துக்கு மனத்தால் கூட துரோகம் செய்ய முடியாது என எண்ணியவள், மூச்சு திணற, திணற.... தன்னை முயன்று தெளிந்தவள், தன் நிலையை அவனுக்கு காட்டாமல், தலையை குனிந்து கொண்டு, மறுப்பாக தலை அசைத்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு.... அவள் வாயில் இருந்து உதிர்த்த அடுத்த வார்த்தைகள் அனைத்தும் பொக்ரேயின் அணுகுண்டாக அவனைத் தாக்க, தீச்சுட்டாற்போல் அவள் கன்னத்தில் இருந்து கையை விலக்கியவன், அதிர்ந்து போய் எழுந்து விட்டான்.

"என்னை ஒருத்தன் காதலிக்கிறான்..." மூன்றே வார்த்தைகள்.... தன் வாழ்க்கையை நிர்மூலமாக்கியதாக உணர்ந்தான்.

இப்படி ஒரு அதிர்சிகரமான விஷயம் அவன் வாழ்வில் நடந்ததே இல்லை எனச் சொல்லும் அளவுக்கு, மொத்தமாக செயலற்று நின்றிருந்தான்.

அசைய மறுத்த தன் நாவை அசைத்து.., "என்ன...? என்ன சொன்ன...?" தான் கேட்டது சரியா தவறா என்று அவனுக்குப் புரியாததால்.... அதிர்ச்சியில் துடித்துப் போனான்.

அவளோ.... "ஆமா.... அவன் பெயர் வேந்தன்..." கால்களை கட்டிக்கொண்டு, மடியில் முகம் புதைத்து அவள் குமுறி அழ, அவளை விட்டு தூரமாய் போய் நின்று கொண்டான்.

அவனுக்கு அதிர்ச்சி என்று சொல்வதை விட, பேரதிர்ச்சி என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். தான் மனதுக்குள் நேசித்த தன் காதலி, தன் இப்போதைய மனைவி, மற்றொருவனின் காதலி என்பதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

தான் அவளை உருகி உருகி காதலித்த வேளைகளில், அவள் மற்றொருவனை காதலித்துக் கொண்டு இருந்திருக்கிறாள் என்பதை அவனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

தன் கனவு கைகூடி விட்டது. அவள் தனக்குக் கிடைத்து விட்டாள். என் மனைவியாகி விட்டாள் என தான் எண்ணினால்.... இது நிஜமான கனவு என்பதை தாங்க முடியாமல் துவண்டு போனான்.

அவள் மனம் புரியாமல், தெரியாமல், உணர முயலாமல் தவறு செய்து விட்டேனா? துடித்துப் போனான். இவள் என் பார்வையில் விழாமலே போயிருக்கலாமே.... தேடலோடு

என் வாழ்வை முடித்திருப்பேனே.... மனம் சுக்குநூறாக உடைந்து போனது.

சுற்றிலும் இருக்கும் காற்றை உணரத்தான் முடியும்.... அதை பார்க்க முடியாது என்பதுபோல்.... நிஜமாகி விட்டது என தான் கருதிய காதல்.... கனவாக மட்டுமே மாறிப்போன அகோரம்.... இப்படியே இதயம் வெடித்து விடுமோ.... அவனால் அந்த ரணத்தை தாங்க முடியவில்லை.

அறையின் மூலையில் இருந்த டேபிள்மேல் இருந்த ஜக்கில் இருந்த தண்ணீரை கைகள் நடுங்க எடுத்தவன், ஒரே மூச்சில் வாயில் சரித்துக் கொண்டான். நீர் அருந்தினால் தாகம் அடங்கும்.... மனதின் தாக்கம் அடங்குமா?

கைகள் நிலை தடுமாற, கையில் இருந்த எவர் சில்வர் ஜக்.., கீழே நழுவ, அது எழுப்பிய ஓசையில், திடுக்கிட்டு நிமிர்ந்த அனன்யா.... அப்பொழுதுதான் அவன் முகம் நோக்கினாள்.

"என்னங்க..." படுக்கையில் இருந்து ஒரே தாவலில் இறங்கியவள், அவனை நோக்கி ஓடினாள்.

நொடியில் தன்னை சுதாரித்தவன்.... "இல்ல.... கை நழுவிடுச்சு.... அவ்வளவு தான்..." தன் கசங்கிய முகத்தை அவளுக்குக் காட்டாமல், அவளுக்கு முதுகைக் காட்டி மறைத்தவன், இரு பொருள்பட உரைத்தான்.

இதயம் பிளக்கும் வலி இப்படித்தான் இருக்குமா...? காதலித்தால் இவ்வளவு வலிக்குமா...? இந்த வினா எழுந்த அந்த நிமிடம், 'அப்படின்னா.... என் அன்னத்துக்கும் இப்படித்தான் வலிக்கிறதா? அவள் காதலனைப் பிரிந்து இப்படித்தான் துடிக்கிறாளா?' தன்னையே கேட்டவன்,

'இல்லை.... அவள் இந்த வலியை அனுபவிக்கக் கூடாது. அவளை இந்த வலியை அனுபவிக்க விட மாட்டேன். அவளுக்கு அவள் காதலனுடன்தான் இருபது நிம்மதி என்றால்.... என்னைக் கொன்றாவது அவளுக்கு அந்த

நிம்மதியைக் கொடுப்பேன்...' இதை எண்ணிய பிறகுதான் அவனால் சற்று தெளிய முடிந்தது.

அவள் அறியா வண்ணம்.... ஆழமாக மூச்செடுத்து தன்னை மீட்டுக் கொண்டவன், அவள் பக்கம் திடனாகவே திரும்பினான். வருந்தி அழைத்த புன்னகையோடு அவளை ஏறிட, அந்த புன்னகை அவன் கண்களை எட்டாததை கவலையோடு நோக்கினாள்.

'எல்லாம் என்னால்தானே...', வேதனையாக அவள் நினைக்க, அவன் கண்களில் தெரிந்த வெறுமையும், உணர்வுகள் தொலைந்த அவன் முகமும், அவள் மனதைப் பிசைந்தது.

மயிலிறகாய் தன்னை வருடும் அவன் பார்வை எங்கே? தன்னைப் பார்த்தவுடன் மத்தாப்பூவாய் மலரும் அவன் புன்னகை எங்கே? உரிமையாய்.... உணர்வாய் தன்னைத் தாலாட்டும் அந்த தீண்டல் கண்கள் எங்கே? துடி துடித்தாள்.

அவளால் அவனது இந்த பார்வையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் நெஞ்சில் விழுந்து.... 'எனக்கு என்ன செய்யன்னு தெரியலையே...' என கதற வேண்டும்போல் இருந்தது.

அவனுக்குள் அடைக்கலாமானால் அவன் உயிர்த்து விடுவானா? அவன் கண்களில் அந்த ஒளி வந்து விடுமா? அவனைப் பற்றியே சிந்தித்தவளுக்கு, அந்த நேரம்.... வேந்தனோ.... அவன் பேச்சுக்களோ, அவன் நினைவோ சுத்தமாக இருக்கவில்லை.

அவள் நினைவில் நின்றவன் எல்லாம்.... தன் ஒற்றை வார்த்தையில் அரை உயிராகிப் போன நகுல் மட்டுமே. இதுதான் உண்மைக் காதல் என்பதை அவள் அறிந்து கொள்வாளா?

14

முதலிரவு அறைக்கே உரிய களை, அந்த அறையை நிறைத்திருந்தாலும், ஒரு அசாத்திய அமைதி நிலவி இருந்தது. அவளிடம் கேட்க ஆயிரம் கேள்விகள் இருந்தாலும், ஒன்றைக் கூட கேட்க முடியாமல் திணறி, திண்டாடிப் போனான் நகுல்.

அவளது காதல் வலியை களைந்துவிட விரும்பினாலும், உயிரை ஒடுக்கும் தன் வலியை மறைத்துக்கொண்டு, சட்டென அவளிடம் உரையாடி விடுவது அவனுக்கு ஒன்றும் அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

அவளுக்கோ.... நகுல் தன்னை முயன்று மீட்டுக் கொண்டாலும், அவன் முகத்தில் கவிழ்ந்திருக்கும் வலி அகலாததைக் கண்கொண்டு காண முடியவில்லை.

அவன் கண்களில் வழிந்த வலி.... அதை மறைக்க அவன் போராடிய விதம், ‘ஏன் இப்படி...?’ அவளால் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை.

தன்னை முதல் நாள் கண்டது முதல்.... மொத்த குடும்பமும் தன்மேல் பாசத்தைப் பொழியும் காரணம் என்ன? சில மனிதர்களைப் பார்த்தால்.... நம்மை மீறி அவர்களோடு பழகத் தோன்றும்தான். அது ஒருவரோடு என்றால் பரவாயில்லை, மொத்த குடும்பத்துக்கேவா?

அதிலும்.... நகுலின் பார்வை தன்னை ஆதூரமாக தழுவிச் செல்கையில் படபடப்பாய் உணர்ந்திருக்கிறாள். இப்பொழுதோ.... தன்னை எட்டியிருக்கச் செய்யும் அந்த பார்வையை அவளால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

மூச்சடைக்கும் இந்த உணர்வில் இருந்து விடுபட்டே ஆக வேண்டும்.... எண்ணியவன், "நாம இதைப்பற்றி நாளைக்கு பேசிக்கலாம். காலையிலேயே எழுந்தது டயடா இருக்கு.

நான் படுத்துக்கறேன்..." அவளிடமிருந்து விலகிச் சென்றான்.

சென்ற பிறகுதான்.... எங்கே படுப்பது என்ற மிகப்பெரும் வினா எழுந்தது. அந்த அறைக்குள் இருந்தது ஒரு இரட்டை கட்டிலும், ஒரு டேபிள் சேர் மட்டுமே. அப்படி இருக்கையில்.... கீழே பாய் விரிக்கலாம் என்றாலோ.... அதற்கு கூட பெரிதாக இடம் இருக்கவில்லை.

அது முன்பு கட்டிய வீடாகையால்.... வீடு பழைய அமைப்பில் சற்று சிறியதாக இருந்தது. அதற்காக அவர்கள் வசதியில் குறைந்தவர்கள் எனக் கிடையாது. மகனது காலத்தில் பெரியதாக கட்டிக் கொள்ளலாம் என அவர்கள் நினைக்க, காலம் அவனைக் கொண்டு சென்றிருக்க, வீட்டை பெரிதாக்கும் முயற்சியை அவர்கள் கைவிட்டிருந்தார்கள்.

அவன் தயக்கத்தை உணர்ந்தவள், "நீங்க மேலே படுத்துக்கோங்க. நான் போர்வையை விரிச்சு கீழே படுத்துக்கறேன்..." வேகமாக உரைத்தாள். உரைத்துவிட்டாளே தவிர, ஏற்கனவே சற்று மூச்சுவாங்கத் துவங்கியிருக்க, இதில் ஏசியில், வெறும் போர்வையில் உதவியில் இந்த இரவைக் கழித்தால்.... காலையில் நிச்சயம் தன் மூச்சிரைப்பு அதிகரிக்கும் என்பதை நினைக்கையில் பயப்பந்து தொண்டையில் சுழன்றது.

அவளுக்கு வீசிங் முழுதாகத் துவங்கிவிட்டால், அதை அவ்வளவு சீக்கிரம் கட்டுப்படுத்த முடியாது. அப்படி இருக்கையில்.... திருமணம் முடிந்த மறு நாளே இப்படி என்றால்.... நகுல் வீட்டில் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் எனவும், அவன் என்ன நினைப்பான் என்பதும் பெரும் கவலையை அளித்தது.

அவனை விட்டு நீங்கிச் செல்ல முடிவெடுத்த பிறகு, அவன் என்ன நினைத்தால் அவளுக்கு என்ன என்பதை அவள் அந்த நேரம் சிந்திக்கவே இல்லை.

"இல்ல.... அது சரி வராது. இது உன்னோட ரூம்.... நீயே மேலே படுத்துக்கோ. நான் கீழே படுத்துக்கறேன்...." அவள் பதிலை எதிர் பாராமல் போர்வையையும், தலையணையையும் எடுத்துக் கொண்டான்.

ஆனால்.... அதை அவ்வளவு சுலபமாக கீழே போட்டு படுத்துக்கொள்ள முடியவில்லை. காரணம்.... பாத்ரூமின் கதவு சற்று அருகில் இருக்கவே, அதுவே அவனுக்கு பெரும் தயக்கத்தைக் கொடுத்தது. அவன் வீட்டில் அவன் வெற்று தரையில் கூட படுத்தது கிடையாது. அப்படி இருக்கையில்.... இங்கே இப்படி ஒரு நிலை என்கையில்.... கொஞ்சம் சகித்துக்கொள்ள முடியவில்லைதான்.

அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கம் அவளிடம் அதிகம் இருந்தது. இவ்வளவு நேரமாக ஒருவித உரிமையில் திளைத்திருந்தவன், தான் பேசிய பேச்சால்.... ‘இது உன் அறை..’ எனச் சொன்னது அவளை பலமாகத் தாக்கியது.

சட்டென கண்கள் கலங்க, "ப்ளீஸ்.... இது என்னோட அறைதான். ஆனால்.... நீங்க எனக்காக.... நான் செய்த தப்புக்காக கீழே படுக்குறதா? நான்தான் கீழே படுக்கணும்..." அவன் கையில் இருந்து போர்வையை வாங்க முயல, அவளை விட்டு வேகமாக விலகி நின்றான்.

அவன் விலகல் அவள் முகத்தில் அறைய, அவனை கீழே படுக்க வைக்கவும் மனம் இல்லாமல், "நான் ஒரே ஒரு விஷயம் சொல்லவா.... இது பெரிய கட்டில் தான். எனக்கு படுக்கையில் உருளும் பழக்கமெல்லாம் இல்லை. நான் சுவத்தை ஒட்டி படுத்துக்கறேன்.... நீங்க இந்த ஓரம் படுத்துகோங்க...." அவள் யோசனையைக் கேட்டவன் அசைவே இல்லாமல் நின்றான்.

மனதுக்குள் சுமந்துகொண்டிருக்கும் பெண்.... அதுவும் தன் மனைவி, தன்னோடு ஒரே படுக்கையில் இருக்க, தன்னால்

இயல்பாக இருக்க முடியுமா? என்ற வினா அவன் முன்னால் இருந்து அவனை மிரட்டியது.

அவன் அமைதியைப் பார்த்தவள், "உங்களை கீழே படுக்க வைக்க என்னால் முடியாது. இப்போ நான் சொன்னதுக்கு நீங்க ஒத்துக்கலன்னா.... நானும் கீழே இறங்கி உக்காந்துக்கறேன். யாரும் கட்டிலில் படுக்க வேண்டாம்..." உரைத்தவள், கட்டில் கால் அருகில் கீழே உட்க்கார்ந்தே விட்டாள்.

அவள் அவ்வாறு செய்யவே, அவனால் எதுவும் சொல்ல முடியாமல் போயிற்று. ஏற்கனவே மனதின் தவிப்பு ஒரு புறம், களைப்பு மறு புறம் என அவனைப் படுத்த, "எழுந்து மேலே படு.... எனக்கு தூக்கம் வருது..." அவன் உரைக்க, அவன் மனம் மாறிவிடக் கூடாதே என்ற வேகத்தில், கட்டிலின் உள்ளே சென்று படுத்துக் கொண்டாள்.

அவளுக்கு முதுகு காட்டி படுத்தவன், கட்டிலின் ஓரத்தில் படுத்துக் கொண்டு விழி மூடினான். இப்பொழுது எதையும் சிந்திக்காதே.... காலையில் பார்த்துக் கொள்ளலாம்... தனக்குத் தானே உரைத்தவன், முயன்று உறங்கினான்.

அவனிடம் தான் சொல்ல வந்த விஷயம் பாதியிலேயே தடைபட்டு நிற்கிறதே என்ற எண்ணமே அவளிடம் எழவில்லை. மாறாக.... ஒருவித அமைதியும், அவனது வருத்தமான முகமுமே அவள் கண்களுக்குள் விரிய, அவன் முதுகையே வெறித்திருந்தாள்.

அவன் முதுகையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தவள், விடி விளக்கின் ஒளியில், விரைத்திருந்த அவன் தோள்கள் சற்று தளர்ந்து, அவன் முதுகு ஏறி இறங்கவே, அதைப் பார்த்தவாறே அவளும் உறங்கிப் போனாள்.

ஒரு ஆடவனோடு மிகச் சுலபமாக தன் படுக்கையை பகிர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அவள் உணராமலேயே உறங்கிப் போனாள்.

இரவில் நேரம் கடந்து உறங்கினாலும், முழுதாக உறக்கம் அவளை ஆட்கொள்ளாத காரணத்தால்.... அறைக்கு வெளியே கேட்ட காலடி ஓசைக்கே விழித்து விட்டாள்.

உடனே எழுந்து செல்ல அவள் கால்கள் பரபரத்தாலும், அவளுக்கு அருகில், அவள் பக்கம் திரும்பி, முழு கட்டில் நீளத்துக்கு படுத்துக் கொண்டிருந்த நகுலைத் தாண்டிச் செல்ல முடியாதவளாக, தயங்கியவாறு அவன் முகம் பார்த்தவளாக இருந்தாள்.

முதலில் தவிப்பாய் நோக்கியவளது பார்வை, சற்று நேரத்தில், அவளை மீறி ரசனைக்குச் செல்ல, காற்றில் ஆடிய அவன் முன்னுச்சி முடியையும், ஒரு வளர்ந்த குழந்தைக்கு ஒத்திருந்த அவன் முகமும், மிதமாக ஏறி இறங்கிய அவன் நெஞ்சும்.... டிஷர்ட் பட்டங்களை போடாததால்.... தெரிந்த அவன் நெஞ்சு ரோமங்களும்.... படிப்படியாக அவனை அளந்தாள்.

ஒரு கட்டத்தில் அவன் அவள் புறமாக திரும்பிப் படுத்திருந்தவன், நேராகப் படுக்க, பட்டென விழி மூடியவள், உறங்குவதுபோல் படுத்துக் கொள்ள, இதயமோ படபடவென அடித்துக் கொண்டது.

சற்று நேரம் அமைதியாக இருந்தவள், அவன் மீண்டும் உறக்கத்தைத் தொடர, அதற்குமேல் அங்கே இருக்க முடியாமல், எழுந்து அமர்ந்தவள், அவன்மேல் பட்டுவிடாதவாறு, கீழே இறங்கிச் செல்ல முயன்றாள்.

இப்படியா.... இப்படியா.... என பலவாறு முயன்றவள், இறுதியாக, தன் இடக்கையையும், இடக் காலையும் அவனைத் தாண்டி வைத்தவள், ஒரே தாவலில் அந்தப்பக்கம் போய்விடலாம் என எண்ணும் வேளை, அவன் கண் விழிக்க,

அப்பொழுது அவன் கண் விழிப்பான் என்பதை எதிர் பாராத அனன்யா திகைத்து, தடுமாறி, முழுதாக அவன்மீதே விழுந்தாள். அதி காலையில், இப்படி ஒரு நிகழ்வை

எதிர்பாராத நகுல், தன்னை மீறி அவள் இடையில் கை கோர்த்து அணைக்க, என்ன செய்ய நினைத்தோம் என்பதே ஒரு நொடி அவளுக்கு மறந்து போனது.

தன் செய்கையை தானே நம்பாதவனாக, சற்று திடுக்கிட்டவன், அவள் இறங்கிச் செல்லத்தான் முயன்றிருப்பாள் என்பதை தானாகவே யூகித்து, வலப்பக்கமாக உருண்டு, தானும் எழுந்து, அவளையும் இறக்கி விட்டான்.

அதன் பிறகுதான் தன் உணர்வுக்கு வந்தவள், "இல்ல.... நான்.... இறங்கத்தான்.... அம்மா.... காபி..." உளறிக் கொட்ட, தன் கை உயர்த்தி அவளைத் தடுத்தவன்,

"நான் ஒண்ணும் நினைக்கலை.... நீங்க போங்க..." அவனது மரியாதையான அழைப்பு அவளை விதிர்க்கச் செய்தது.

"ப்ளீஸ் என்னை பேர் சொல்லியே கூப்பிடுங்க. மரியாதையா கூப்ட்டால்.... என்னமோ... உங்களை விட்டு தூரமா போற மாதிரி இருக்கு..." அவள் உரைக்க,

‘தூரமாகத்தானே போக ஆசைப்படுற...?’ கேட்க நினைத்ததை, தனக்குள் புதைத்துக் கொண்டான். தான் அவளை கார்னர் செய்வதுபோல் இருக்கக் கூடாதே என எண்ணிக் கொண்டான்.

"சரி.... வேற எப்படிக் கூப்பிட..." அவளிடமே கேட்டான்.

"அதான் அன்னைக்கு கூப்டீங்களே..." அவன் முகம் பார்க்கத் தயங்க, ‘அன்று போலா இன்றைய நிலை...’ தன் வேதனையை விழுங்கிக் கொண்டவன்,

"சரி அன்னம்..." ஏனோ அந்த அழைப்பில் அவனால் மகிழத்தான் முடியவில்லை.

அவன் அழைப்பில் மகிழ்ந்தவள், அதன் பிறகு வேகமாகக் குளித்துவிட்டு, வெளியே செல்ல, தானும் சென்று குளித்து

முடித்தவன், வெளியே வந்தான். வீட்டில் உறவினர்கள் கூட்டம் சற்று இருக்க, வெளியே அமர்ந்திருப்பது அவனுக்கு தயக்கமாக இருக்கவே, அங்கே இருந்த நாளிதழை எடுத்தவன், அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டான்.

அவனுக்கு காபி கொண்டுவந்து கொடுத்தவள், தாயைத் தேடிச் செல்ல, "நீ போய் மாப்பிள்ளையோட பேசிட்டு இரு. இங்கே எல்லாம் நான் பாத்துக்கறேன்" தாய் உரைக்க, அறைக்குள் செல்வது அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது.

அங்கே அவனுக்கு யாரையும் தெரியாது என எண்ணியவள், அவனைத் தேடிச் சென்று தயக்கமாக, அங்கே இருந்த இருக்கையில் அமர, ஒரு நொடி அவளைப் பார்த்தவன், மீண்டும் பேப்பரில் பார்வையைப் பதித்தான்.

மனமோ.... பேப்பரில் லயிக்காமல், அவளிடமே லயிக்க முற்பட்டது. அவள் காதல் விஷயம் நினைவிற்கு வர, முயன்று தன் பார்வையை அடக்கியவன், மறந்தும் அவளைப் பார்க்கவில்லை.

அவளும் தன் சேலை முந்தானையை, விரலில் சுற்றி விடுவித்துக் கொண்டிருந்தாள். நினைவிற்கு வந்தவளாக, தன் அலைபேசியை உயிர்ப்பித்தாள்.

அவள் உயிர்ப்பித்த மறு நிமிடம் அது ஒலியெழுப்ப, அதில் ஒளிர்ந்த வேந்தனது எண்ணைப் பார்த்து விதிர்த்துப் போனாள். அதென்னவோ நகுல் இருக்கும் வேளையில், அவளால் இயல்பாக அந்த அழைப்பை ஏற்கவும் முடியவில்லை.

அது முழுதாக ஒலி எழுப்பிவிட்டு அடங்க, மீண்டும் அது ஒலிக்கவே, அப்பொழுதுதான் அவளை நிமிர்ந்து பார்த்தவன், அவள் பார்வையில் என்ன கண்டானோ.... "நான் வெளியே இருக்கேன்.... நீ பேசிட்டு வா..." உரைத்தவன், வெளியேறிவிட்டான்.

அவளுக்குத்தான் அவள் எதிர்பார்த்த தனிமை கிடைத்த பிறகும், மகிழ்வோடு அவனிடம் உரையாட முடியவில்லை. அலைபேசியை அப்படியே போட்டுவிட்டு, அறையிலிருந்து வெளியே வந்தாள்.

ஹாலில் அவனைக் காணாமல் போகவே, வெளியே எட்டிப் பார்த்தவள், அவன் அங்கும் இல்லாமல் போக, தாயைத் தேடி வந்தவள், "அம்மா.... அவர் எங்கே...?" தாயிடம் கேட்டாள்.

"புள்ளைக்கு அத்தானை விட்டுட்டு இருக்க முடியல, பாவம் மாப்பிள்ளை இடைவெளி வேணும்னு தப்பிச்சு போய்ட்டார் போல..." அவளது ஒன்றுவிட்ட அத்தை கேலி செய்ய, "போங்கத்த..." அவர் கேலியில் முகம் சிவந்தவளாக, "அம்மா..." தாயை அழைத்தாள்.

"உன் தம்பிதான் கூப்டுகிட்டு இருந்தான். மாடி பக்கம் போன மாதிரி இருந்தது. நீ போய் டிபன் சாப்பிட கூட்டி வா..." தாய் உரைக்க, வேகமாக மாடிப்பக்கம் நகர்ந்தாள்.

அங்கே..... கெவின் நகுலுக்கு பால் போட, அவன் அடிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தான்.

"டேய்.... வந்த உடனே உன் வேலையை ஆரம்பிச்சுட்டியா? அவர் இன்னும் சாப்பிடக் கூட இல்லை..." தம்பியை கடிந்தவள், அவன் கையில் இருந்த பாலை பிடுங்கிக் கொண்டாள்.

"போக்கா.... அத்தான் போரடிச்சுபோய் உக்காந்துட்டு இருந்தாங்க.... அதான் கூட்டி வந்தேன். அவங்களுக்கும் கிரிக்கெட் புடிக்குமாம்..." சிறுவனுக்கே உரிய படபடப்பில் உரைத்தான்.

"போரடிக்குன்னு உன்கிட்டே சொன்னாங்களா? இரு.... சித்திகிட்டே சொல்றேன்.... சரி.... நீ ஸ்கூல் போகலையா...?" நினைவிற்கு வந்தவளாக கேட்டாள்.

"போகலை.... இன்னும் ரெண்டு நாள் எனக்கு லீவ் தான். அம்மாகிட்டே ஏற்கனவே சொல்லிட்டேன். நீ போ..." அவளை முறைத்தவன்,

"அத்தான்.... நீங்க சாப்ட்டு வரீங்களா? நாம பெட் மேச் போடலாம்..." தனக்கே உரிய ஆர்வத்தில் வினவினான். அதென்னவோ.... தனக்கு இணையாக கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டும் நகுலை அவனுக்கு மிகவும் பிடித்தது.

அதைவிட.... இவ்வளவு பெரிய வசதி உள்ளவன், தனக்கு இணையாக பேசுவதும், நடப்பதும், அவன்மேல் ஒருவித பிரமிப்பை ஏற்படுத்தி இருந்தது என்பது மட்டும் உண்மை. அதிலும்.... அவன் வயதுக்கு ஹீரோவாக தந்தையைக் காணும் வயது அவனுக்கு. இவ்வளவு நாள் அப்படி யாரும் அங்கே இல்லாமல் போக, புதிதாக வந்த நகுலின் நடை, உடை, பாவனை, கம்பீரம் அனைத்தும் அவனை ஈர்த்தது.

முதல் முறையாக.... தனக்கு இணையான ஒரு துணையைக் காண்கிறான். அனன்யாவின் அண்ணனைப் பொறுத்தவரை அவன் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவன், எப்பொழுதும் தான் உண்டு, தன் வேலை உண்டு என இருப்பதால்.... பெரிதாக அவன்மேல் ஈடுபாடு இருந்தது கிடையாது.

இப்பொழுது தனக்கு ஒரு கம்பெனி கிடைக்கவே.... அதை இழக்க அவன் தயாராக இருக்கவில்லை.

"நகுல்.... நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்.... நீ என்ன கேக்கற? முதல்ல ஸ்கூல் போயிட்டு வா. சாயங்காலம் நாம எல்லாம் சேர்ந்து கோயிலுக்குப் போகலாம்..." அவள் கண்டிப்பாக உரைக்க, அரை மனதாக கிளம்பிச் சென்றான்.

"நீங்க வாங்க.... அம்மா சாப்பிட கூப்ட்டாங்க..." அவனை அழைத்துக் கொண்டு முன்னால் நடந்தாள்.

காலை உணவுக்கு அவன் அமர, கை நிறைய மீனோடு திரும்பிய மூர்த்தி, "வஞ்சரத்தை குழம்பு வை, மிச்சத்தை

வறுத்துடு..." மனைவியிடம் உரைத்தவர், அவனுக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

முத்துலட்சுமி கறிக்குழம்பு, இட்லி, தோசை, பூரி என வகைகளை அடுக்க, அதைப் பார்த்தவன் சற்று திணறித்தான் போனான்.

"ஐயோ அத்தை.... எதுக்கு இவ்வளவு.... சிம்பிளா இட்லி மட்டுமே போதுமே. நீங்க சிரமப்படாதீங்க..." அவன் உரைக்க, அவருக்கு உருகித்தான் போயிற்று.

"அன்னம்.... மாப்பிளைக்கு எடுத்து வை.... ஏன் மசமசன்னு நிக்கற?" தாய் விரட்ட, அவன் தட்டில் பரிமாறினாள்.

"நீயும் உக்கார்..." மகளையும் அமர வைத்தார்.

"நல்லா சாப்பிடுங்க மாப்பிளை.... கூச்சப்படாதீங்க..." மூர்த்தி உரைக்க, அவர்களது திருப்திக்காக அனைத்திலும் இரண்டை உண்டவன், ஒரு காபியோடு எழுந்துவிட்டான்.

எவ்வளவு நேரம்தான் அறைக்குள் அடைந்து கிடக்க முடியும்? அவனுக்கு போர் அடிக்கத் துவங்கவே.... அந்த நேரம் உள்ளே வந்தவளிடம், "நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரட்டுமா? எங்க ப்ரான்ச் ஒண்ணு இங்கே இருக்கு. அதைப் பார்த்துட்டு ரெண்டுமணி நேரத்தில் வந்துடுறேன்..." அவன் உரைக்கவே, திடுக்கிட்டாள்.

அவன் அங்கே இருப்பதன் காரணமாகவே.... தன் கடைக்குச் செல்லாமல் பெற்றவர் அமர்ந்திருக்க, அவன் செல்கிறேன் எனச் சொன்னால்? நிச்சயம் இந்த ப்ரோகிராம் நேற்றுவரை அவன் அட்டவணையில் இருந்திருக்காது என்பது அவளுக்கு உறுதி.

இப்பொழுது அவன் வெளியே சென்றால்.... தன்னிடம் கேள்வி கேட்கும் தாய்க்கு அவள் என்ன பதில் சொல்வாள்? அவனுக்கு இங்கே போர் அடிக்கிறதாம் என அவளால்

சொல்ல முடியுமா? கேள்வியாய் நோக்கும் தந்தைக்கு என்ன பதிலைக் கொடுப்பாள்?

‘ச்சே.... கெவினை நிப்பாட்டி இருக்கலாம்...’ காலம் கடந்த நினைவு.

அவள் முகத்தில் தயக்கத்தைப் பார்த்தவன், "என்ன...?" அவளைக் கலைத்தான்.

அதே நேரம்.... அவள் அலைபேசி உறுமும் ஓசை கேட்க, அதைக் கையில் எடுத்தவன், அதில் ஒளிர்ந்த எண்ணையும், அவளையும் கேள்வியாய் நோக்கினான்.

"நான் இன்னும் பேசலை.... அதான்..." மென்று முழுங்கினாள்.

"ஓ..." இழுத்தவன், தன் மனதை இரும்பாக்கிவிட்டு, "அவரோட கோரிக்கையை நான் ஏத்துகிட்டேன்னு சொல்லி அவர்கிட்டே பேசிடுங்க. இப்போ அவர்கிட்டே பேச உங்களுக்கு தயக்கம் இருக்காதுன்னு நினைக்கறேன்...." முயன்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறி மூர்த்தியோடு சென்று அமர்ந்து கொண்டான்.

அவன் இவ்வாறு உரைத்துவிட்டு வெளியேறிய பிறகுதான்.... தான் வேந்தனிடம் பேசத் தயங்குவதற்கு அவனாகவே ஒரு காரணத்தை கண்டுபிடித்து விட்டான் என்பதை உணர்ந்தவளுக்கு, அவன் புரிதலில் சந்தோஷப்பட முடியாமல் போனதுதான் விந்தை.

15

மூர்த்தியும் தன்னருகில் இருந்த அவனிடம், அவனது தொழில், தந்தையின் தொழில் என அனைத்தையும் பற்றி உரையாடியவர், "ஒரு எட்டு கடைக்குப் போகலாம் வரீங்களா?" அவனிடம் வினவ, தயக்கமே இல்லாமல் கிளம்பிவிட்டான்.

கடைக்கு அழைத்துச் சென்றவர், அங்கே வேலை செய்த பெரியவரிடம், "என் மாப்பிளை..." பெருமையாய் அறிமுகப்படுத்த, சிறிய அளவில் இருந்த அந்த கடையை சுற்றி வந்தான்.

அதற்குள் கடைக்கு சில கஸ்டமர்கள் வர, அவர்கள் கேட்டதை எடுக்கச்சொல்லி கடைப் பெரியவரைப் பணிக்க, அத்தோடு.... "எங்கே சதீஷை இன்னும் காணோம்? டைம் ஆச்சே..." அவரிடம் கேட்க,

"இன்னைக்கு காலேஜுக்கு அவன் தங்கைக்கு ஃபாம் வாங்கப் போணும்னு வந்து சொல்லிட்டுதான் போனான். இருங்க.... நானே அதைபோய் மேலே இருந்து எடுத்துட்டு வரேன்..." உரைத்தவர், மேலே செல்ல,

"பாத்து எடு முருகா..." வயதின் காரணமாக மூர்த்தி அவரிடம் அவ்வாறு உரைத்தார். முருகன் அங்கே நகுலைப் பார்த்தவர்,

"தம்பி இங்கேதான் இருக்கீங்களா...?" கேட்டவர், ஒரு ஸ்டூலைப் போட்டு அதில் ஏற, அவர் செய்கையைப் பார்த்தவன், "ஐயா.., என்ன எடுக்கணும்னு சொல்லுங்க.... நான் எடுத்துத் தரேன்..." அவரை விலக்கிவிட்டு தானே ஏறினான்.

"ஐயோ தம்பி.... வேண்டாம்..." அவரது மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

"இந்த க்ளாம்பா...?" அவர் தேடியதை எடுத்தவன் கேட்க, ஆமா எனச் சொல்லி அதை பெற்றுக் கொண்டார். அவனது எளிமை அவரைக் கவர்ந்தது.

கீழே வந்தவர்.... கஸ்டமர்கள் செல்லவே.... "மூர்த்தி.... உனக்கு நல்ல மாப்பிள்ளை அமைஞ்சிருக்கான்யா..." மேலே நடந்ததை உரைக்க, மூர்த்தி குளிர்ந்துதான் போனார்.

நகுலும் அங்கே வர.... தன் எதிரில் இருந்த இருக்கையைக் காட்ட, அவன் அமரவே, முருகன் அவர்கள் பேசிக்கொள்ளட்டும் என எண்ணியவராக, கடைக்குள் சென்று மறைந்தார்.

"மாப்ள.... நேத்து ரூமுக்குள் வசதி பத்தலை போல.... அனு சொன்னாப்ல.... மேலே ரூம் எடுக்கணும்னுதான் நினைச்சுட்டு இருந்தேன். கல்யாணம் சீக்கிரமே முடிவாயிட்டதால் என்னால் எதுவும் செய்ய முடியலை. நீங்க அடுத்த முறை வரப்போ இங்கே ரூம் தயாரா இருக்கும்..." அவர் தயங்கியவாறு உரைக்க, நகுல் சங்கடப்பட்டான்.

‘நம்மளோடவே இருந்தா.... இந்த பேச்சு எப்போ நடந்துச்சுன்னு தெரியலையே...’ சிந்தித்தவன், "அப்படியெல்லாம் எதுவும் இல்ல மாமா. அன்னம் தெரியாமல் சொல்லியிருப்பா..." அவன் உரைக்க,

"உங்க பெரிய மனசுக்கு நீங்க இதைச் சொல்லலாம்.... நான் என் கடமையை சரியாச் செய்யணுமே..." இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் அமைதியானான்.

அதன் பிறகு மதிய சாப்பாட்டு நேரம் வரை அங்கே இருந்தவர்கள், "மதிய வெயில் அதிகமா இருக்கு. வாங்க வீட்டுக்குப் போய்டலாம்..." அவனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

மதிய விருந்து முடிய, சொந்தங்கள் அனைவரும் விடைபெற்றுச் சென்றாகள். சாப்பிட்டுவிட்டு உறக்கம்

போடச்சொல்லி இருவரையும் அறைக்கு போகச்சொல்ல, அறைக்குள் நுழைந்தவுடன்,

"உனக்கு ஒரே படுக்கையில் படுப்பது கஷ்டமா இருந்தால் அதை என்கிட்டேயே சொல்லியிருக்கலாமே, அதை விட்டுட்டு.... அறை கன்வீனியன்ட்டா இல்லன்னு அவங்க கிட்டே சொல்லி வச்சிருக்க.... என்னைபத்தி அவங்க என்ன நினைப்பாங்க..." அவளிடம் சற்று கோபமாகவே கேட்டான்.

அவன் கோபத்தைக் கண்டவளது கண்கள் கலங்கிவிட, அதைப் பார்த்தவன் துடித்துப் போனான்.

"ஏய்.... நான் ஜஸ்ட் கேட்டேன் அவ்வளவுதான்.... அதுக்கு ஏன் அழற...? சரி, இனிமேல் நான் கோபமா பேசலை போதுமா? இப்போ நீ அழாதே ப்ளீஸ்..." கிட்டத்தட்ட கெஞ்சினான்.

அவன் கெஞ்சலில் தன் கண்ணீரை நிறுத்தியவள், "நைட் நீங்க கீழே விழுகுறாப்ல கட்டில்லே படுத்திருந்தீங்க. எங்கே நீங்க விழுந்து வைப்பீங்களோன்னு நான் எவ்வளவு நேரமா பயந்துட்டே இருந்தேன் தெரியுமா?" மூக்கை உறிஞ்சி அவள் வினவ, 'இவளது பேச்சை எப்படி எடுத்துக் கொள்வது எனத் தெரியாமல் அவன்தான் குழம்பிப் போனான்.

அவள் பேச்சில் மென்மையாக சிரித்தவன், "சரி விடு.... எப்படியும் இப்போ நீயும் வெளியே போக முடியாது. நானும் போக முடியாது. உன் அவரைப் பத்திச் சொல்லு..." படுக்கையில் விழ முடியாமல், எப்படியும் இதைப்பற்றி பேசியே ஆகவேண்டும் என்பதால் கேட்டான்.

"எவர்...?" வேகமாகக் கேட்டவள், அதன் பிறகுதான், அவன் வேந்தனைப் பற்றி கேட்கிறான் என்பது புரிய, ஒரு நொடி அமைதியாக இருந்தவள், அவன் தன்னிடம் காதல் சொன்னதையும், அதைத் தான் ஏற்றுக் கொண்டதையும், அவன், தான் இல்லையென்றால் இறந்துவிடுவேன் என உரைத்ததையும் சொல்ல, புருவம் நெரிய அதைக் கேட்டிருந்தான்.

‘இதில் இவளோட காதல் எங்கே இருந்து வந்தது...?’ அவனுக்குப் புரியவே இல்லை.

அப்பொழுதுதான் இரவிலும், அவள்.... ‘என்னை ஒருத்தன் காதலிக்கிறான்’, என உரைத்தது உறைக்க.... ‘அப்போ இவ காதலிக்கலையா? இவ தெரிஞ்சு சொல்றாளா? இல்ல தெரியாமலா? இதை எப்படி எடுத்துகொள்ள என்று அவனுக்கு தெரியவில்லை.

அதை மறைத்தவன், "நீ உன் வீட்டில் பேசியிருக்கலாமே. உன் அப்பாவோ, அம்மாவோ அப்படியொன்றும் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் எனத் தோன்றவில்லையே..." தான் அவளை விரும்பியதாகச் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொண்டதை மனதில் வைத்தே வினவினான்.

"அவனுக்கு ரெண்டு தங்கச்சி இருக்காங்க. அவங்களுக்கு முடித்த பிறகுதான் இதைப்பற்றி பேசணும்னு சொல்லிட்டான். என்னால் அதை மீறி எதையும் செய்ய முடியலை...." மேலும் அவள் எதையோ சொல்ல முயல,

"இன்னும் என்ன...?" அவளிடம் கேட்டான்.

"அன்னைக்கு நைட் வந்தவன்.... கையில் விஷ பாட்டிலோட நின்னுட்டு..." அவளால் சொல்ல முடியாமல் கலங்க,

"அன்னைக்குன்னா....?" அவன் புருவம் நெரிக்க,

"கல்யாணத்துக்கு முந்தின நாள் நைட்.... மொட்டை மாடியில்..." இதைச் சொல்லும் வேளையே.... அவள் முகம் வெளிறி, திணற, அவள் படும் அவஸ்தை பொறுக்காமல்,

"எனக்குப் புரியுது.... கண்டிப்பா நான் உன்னை அவனோட சேர்த்து வைக்கறேன். நீ அவன்கிட்டே பேசி, அடுத்து என்ன செய்யப் போறான்னு கேள்.... உன் முடிவு என்னவோ.... நான் அதைச் செய்யறேன். என்னால் உனக்கு எந்த தொல்லையும் இருக்காது...." மனதை கல்லாக்கிக்கொண்டு உரைத்தான்.

அவள் இவ்வளவு நேரம் பேசியதில் அவனுக்குப் புரிந்தது ஒன்றுதான். அனன்யாவுக்கு அவன்மேல் பெரிதாகக் காதல் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அதே நேரம்.... அவனிடம் கொடுத்த வாக்கும், அவனது தற்கொலை என்ற மிரட்டலும் மட்டுமே அவளை கட்டி வைத்திருப்பதை உணர்ந்து கொண்டான்.

ஆனால்.... தான் உணர்ந்துகொண்ட அந்த விஷயம் கூட, அவளுக்கு புரியவில்லை என்பதை நினைத்து வேதனை கொண்டான். அந்த நேரத்தில் கூட, அவளது மனதுக்குள் இன்னும் முழுதாக அவன் நிறையவில்லை என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.

அவள் மனதுக்குள் தான் நுழைய அதிக நேரம் பிடிக்காது என்பதோடு, அவள் மனதின் ஓரத்தில் தான் இடம் பிடித்திருக்கிறோம் என்பதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அவள் மனதில் தான் இடம் பிடிக்க வேண்டுமென்று எதையாவது செய்தால், அது தனக்கெதிராக எந்த விளைவையும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதால்.... அமைதியாக இருக்க முடிவெடுத்தான்.

அதே நேரம்.... அவள் தன்னோடு இருக்கும் வரைக்கும், தன் அன்பை அவள் அறியாமலே உணர்த்த வேண்டுமென்று முடிவெடுத்தான் இப்பொழுது அவனுக்கு முழு நம்பிக்கை இருந்தது.... தன் காதல், கனவு நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும் என்று.

அவன் பேச்சில், அவள் மனதுக்குள் பெரிய நிம்மதி பிறந்திருக்க வேண்டும். ஆனால்.... மனதுக்குள் சட்டென எதுவோ காலியாகும் உணர்வு. அவன் பார்வை இன்னுமே தன்னை தீண்டவில்லை என்பதை உணர்ந்தவளுக்கு எதையோ இழந்த உணர்வு.

அவள் அசையாத பார்வையை அவன்மேல் செலுத்த, அவள் பார்வை தன்னை தொடர்வதை உணர்ந்தாலும், அதை

கண்டுகொள்ளாதவனாக, "எனக்கு கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்.... நான் படுத்துக்கறேன். நீ..." அவளிடம் வினவ,

"நான் இப்படியே உக்காந்துக்கறேன். நீங்க படுங்க..." அவள் உரைக்கவே, மறுக்காமல் படுத்துக் கொண்டான்.

இரவில் நிம்மதியாக வராத உறக்கம், அவனை ஆனந்தமாகவே தழுவிக் கொண்டது. அவன் உறங்கும் வரைக்கும் தலை கவிழ்ந்து இருந்தவள், அவன் உறங்கிவிடவே, நாளை காலையில் தான் சென்னைக்கு கிளம்பவேண்டும் என்பதால்.... தன் பொருட்களை அடுக்கத் துவங்கினாள்.

அன்று மாலையில் குடும்பத்தோடு கோவிலுக்குக் கிளம்ப, அவர்களோடு கெவினும் இணைந்து கொண்டான். அவனோடு உரையாடியவாறு அவன் சற்று முன்னே செல்ல, அவளோ பெற்றவர்களோடு சற்று பின் தங்கினாள்.

மறுநாள் அவள் சென்னைக்குச் செல்லப்போகிறாள் என்பதாலோ என்னவோ, அவனோடு போகச்சொல்லி பெற்றவர்கள் அவளிடம் உரைக்கவில்லை. மகளது தலையை வாஞ்சையாகத் தடவிய மூர்த்தி, "அம்மாடி.... அப்பா உனக்குச் சொல்ல வேண்டியது இல்லை. ஆனாலும் சொல்றேன். நகுல் மாதிரி நல்ல பிள்ளை உனக்கு அமைந்தது அந்த கடவுள் நமக்கு கொடுத்த வரம்.

"எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், அவரோ.... அவரோட வீட்டு ஆட்களோ நம்மகிட்டே ஒரு வேற்றுமை காட்டவில்லை. அவருமே.... எனக்கு இன்னொரு மகனாகத்தான் நடந்துக்கறார். நீயும்.... போற இடத்தில் இந்த அப்பா, அம்மாவோட பெயரை காப்பாத்தணும்.

"அவர் மனம் கோணாமல்.... அவர் மனசறிஞ்சு நடந்துக்கணும். அவரோட கூடப்பொறந்தவளை.... உன்னோட கூடப் பொறந்தவளா பாத்துக்கணும். அந்த புள்ள கூட, உன்னை அண்ணியா பாக்காமல்,

அக்காவாத்தான் பாக்குது. எல்லாரையும் அனுசரிச்சுப் போகணும் சரியா..." அவளிடம் அறிவுறுத்த, சம்மதமாக தலை அசைத்தாள்.

அவளது தந்தைக்கு இவ்வளவு பேசத் தெரியும் என்பதே அவளுக்கு இப்பொழுதுதான் தெரியும். அவர் அதிகம் பேசியதே இப்பொழுதுதான் என்பதை உணர்ந்தவள், நகுலும், அவன் வீட்டு ஆட்களும் எப்படி அவர்களிடம் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவளுக்கு உணர்த்தியது.

"கண்டிப்பா உங்க பெயரை காப்பாத்துவேன்ப்பா..." உரைத்தவளுக்கு, அதை எப்படி செய்யப் போகிறோம் என்பதுதான் தெரியவே இல்லை. அவள் அமைதியாகிவிட,

மூர்த்தி தன் மனைவியிடம் காலையில் கடையில் நடந்தவற்றை உரைக்க, அதைக் கேட்டவளுக்கு, வேந்தன் அந்த இடத்தில் இருந்திருந்தால் நிச்சயம் தன் குடும்பத்தோடும், தன் தம்பியோடும் இவ்வளவு இணக்கமாக இருந்திருக்க மாட்டான் என்றே தோன்றியது.

தன்னை அறியாமலேயே நகுலையும், வேந்தனையும் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரவில் உண்டு முடித்த பிறகு, கெவினோடு அவன் சிறுவனாக மாறி கார்ட்ஸ், கேரம் என விளையாடி, இரவு கடப்பதை உணராமல் இருக்க, முத்துலட்சுமியும் மகளுக்காக பலகாரங்கள் செய்வதில் முனைந்திருந்தார். இடை இடையே.... அவற்றை கெவின் எடுத்து வந்து நகுலுக்கு கொடுக்க, வீட்டு பலகாரத்தின் ருசி அவனுக்கு அமிர்தமாகத்தான் இருந்தது.

அவனது தாய் வடை, பஜ்ஜி என செயவார்தான். ஆனால்.... அதிரசம், முறுக்கு, பணியாரம் என முத்துலட்சுமி செய்ய, "அத்தை.... பலகாரம் ரொம்ப டேஸ்ட்டா இருக்கு..." கிச்சனுக்கே வந்து உரைக்க, அவர் மகிழ்ந்து போனார்.

மகனாக ஒரு மருமகன் கிடைப்பது பெரிய விஷயமாயிற்றே. நள்ளிரவைத் தாண்டி பேச்சும், விளையாட்டும் தொடர, ஒரு வழியாக அதுவும் முடிவிற்கு வந்து, இரவு உறங்கச் செல்ல, அவன் வருவதற்கு சற்று முன்பாக அறைக்கு வந்தவள், படுக்கையில் உறங்கத் துவங்கியிருக்க, அவளைப் பார்த்தவாறே, அவள் அருகில் படுத்தவன், தன் உறக்கத்தை துவங்கினான்.

சென்னையில், தன் வீட்டில் இந்த இதம் கிடைக்குமா என்பது அவனுக்கு மிகப்பெரும் வினாவாக எழுந்து மிரட்டியது. விஸ்தாரமான அவனது அறையை நினைக்கையில், இன்று அந்த விசாலம் கோபத்தை அளித்தது மட்டும் உண்மை.

இங்கே வேறு வழியின்றி தன்னோடு ஒரே படுக்கையில் இருப்பவள், அங்கே என்ன முடிவெடுப்பாள்? சோபாவில் படுத்து விடுவாளோ? இல்லையென்றால் தரையில் படுத்து விடுவாளா? குழப்பம் மட்டுமே மிஞ்சியது.

முயன்று தன்னை உறக்கத்தில் அமிழ்த்தியவன், விடியலின் பொழுதே உறங்கினான். மறுநாள் மதியம் ஒரு மணிக்கு அவர்களுக்கு விமானம் என்பதால்.... மதிய உணவை சற்று சீக்கிரமாக முடித்துவிட்டு விமான நிலையம் சென்றார்கள்.

மதியம் மூன்று முப்பதுக்குப் பிறகுதான் நல்ல நேரம் துவங்குகிறது என்பதால்.... சென்னை விமான நிலையத்தில் ஓய்வறையில் ஒரு மணி நேரத்தை அவர்கள் செலவிட்ட பிறகே, அவன் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

நகுலின் பென்ஸ் காரை எடுத்துகொண்டு டிரைவர் வந்திருக்க, கூடவே தன் காரை எடுத்துகொண்டு வந்திருந்தான் நவீன். அவளது பெற்றவர்கள் நவீனின் காரில் வர, நகுலும் அனன்யாவும் அவனது காரில் வந்தார்கள்.

கார் அவனது பங்களாவுக்குள் நுழைய, அவன் வீட்டைப் பார்த்து பிரமித்தாள் அனன்யா. ஏற்கனவே அவனது வீட்டை மூர்த்தியும் முத்துலட்சுமியும் பார்த்திருக்கிறார்கள் என்பதால், அவர்கள் சாதாரணமாகவே இருந்தார்கள்.

வாசலிலேயே அவர்களை நிற்க வைத்து ஆலம் சுற்றி வர வேற்ற வருணா, "அண்ணா.... எனக்கு பெருசா வேணும்..." அவள் உரைக்க, "பெருசான்னா.... அந்தா இருக்க தூணைத்தான் உங்க அண்ணா கொடுக்கணும்" நவீனின் கேலியில் அனைவரும் சிரித்து விட்டார்கள்.

"உங்கள.... உள்ளே வருவீங்கல்ல.... அப்போ கவனிக்கறேன். அண்ணா.... நீ குடு..." அவள் பிடிவாதமாக நிற்க, ஏற்கனவே அவளுக்காக வாங்கி வைத்திருந்த மோதிரத்தை அவளிடம் கொடுக்க, "சூப்பர்ண்ணா.... தேங்க்ஸ்..." சந்தோஷமாக பெற்றுக் கொண்டாள்.

மணமக்கள் வீட்டுக்குள் வர, "முதல்ல பூஜை ரூமில் விளக்கேற்றும்மா.." பார்வதி சொன்னதைச் செய்தவள், மண்டியிட்டு வணங்கிவிட்டு வெளியே வந்தாள்.

அவனது பெற்றவர்களிடம் அவர்கள் ஆசீர்வாதம் வாங்க, அனன்யாவை தூக்கியவர், அவள் நெற்றியில் முத்தமிட்டார். நகுலுக்கும் அவ்வாறே செய்ய, தாயை மென்மையாக அணைத்துக் கொண்டான். பார்வதியின் கண்கள் ஆனந்தத்தில் கலங்கியது.

இந்த காட்சியைப் பார்த்த அனன்யாவின் பெற்றவர்கள் மகிழ்ந்து போனார்கள். வந்தவர்களுக்கு முதலில் இனிப்பு வழங்க, அவர்களும் அவற்றை உண்டார்கள். சென்னை வெயிலுக்கு இதமாக சில்லென ஜூஸ் கொடுக்க, அதைக் குடிக்க அனன்யா வெகுவாகத் தயங்கினாள்.

ஏற்கனவே லேசாக இருந்த வீசிங் தான் போட்டுக்கொண்ட மருந்தின் உபயத்தால் கட்டுக்குள் இருக்க, இதைக் குடித்தால், இரவில் தான் மூச்சுக்கு சிரமப்படும் அளவுக்கு தன் நிலை மாறக்கூடும் என்பதாலேயே தயங்கினாள்.

அவள் தயக்கத்தைப் பார்த்தவன், மற்றவர் அறியாதவாறு, அவள் கையில் இருந்து ஜூஸை வாங்கியவன், தன் காலி கோப்பையை அவள் கையில் திணித்துவிட்டு, ஒரே மூச்சில் அதைக் குடித்துவிட்டு, தங்கை கொண்டுவந்து வைத்த தண்ணீரை ஒரு கப் அவளுக்கு கொடுக்க, மிகுந்த நன்றியோடு அதைப் பெற்றுக் கொண்டாள்.

அவனது அந்த செய்கை, அவளை மீட்டியது மட்டும் உண்மை. தன்னிடம் எந்த கேள்வியும் கேட்காமல், தன் முகம் பார்த்து நடக்கும் அவனது அணுகுமுறை அவளை வெகுவாய் கவர்ந்தது.

அனன்யாவின் பெற்றவர்களுக்கு அறையைக் காட்டியவர்கள், "கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க..." அவர்கள் செல்லவே, "நகுல்.... அனுவை உன்னோட ரூமுக்கு அழைச்சுட்டு போ..." தாய் உரைக்க, அவளை அழைத்துக் கொண்டு மாடி ஏறினான்.

தன் அறையைத் திறந்தவன், "வா அன்னம்.... இதுதான் நாம வாழப்போகும் இடம்...." உள்ளே செல்ல, அவன் பின்னால் சென்றவள், விழி விரித்தாள்.

இப்படியான அறைகளை அவள் படங்களில் மட்டுமே பார்த்திருக்கிறாள். அறையின் இடப்பக்கம் கிங் சைஸ் பெட் போடப்பட்டிருக்க, படுக்கையின் வலப்பக்கம் முழுவதும் வார்ட்ரோப் அமைக்கப் பட்டிருந்தது.

படுக்கையின் இடப்பக்கம் டிரஸிங் டேபிள் போடப்பட்டிருக்க, ஆளுயர கண்ணாடி அங்கே பதிக்கப் பட்டிருந்தது. அவளது வலப்பக்கம், சோபா செட் போடபட்டிருக்க, நடுவில் டீபா போடப்பட்டிருந்தது. சோபாவின் பின்னால்.... ஒரு சிறிய குளிர்சாதனப்பெட்டி இருப்பதையும் பார்த்தாள்.

சோபாவின் வலப்பக்கம் ப்ரெச் விண்டோவோடு கூடிய பாலக்கனி இருக்க, இடப்பக்கமோ, மூடிய இரு கதவுகள் அவள் பார்வைக்கு கிடைத்தது. ஒரு கதவில் பாதி அளவுக்கு

கண்ணாடி இருக்க, அது குளியலறை என்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

மற்றொரு கதவு என்னவாக இருக்கும்? அவள் சிந்திக்க, அவள் பார்வையை தொடர்ந்து கொண்டிருந்தவன், "அது டிரஸிங் ரூம். உன்னோட சூட்க்கேஸ் அங்கேதான் இருக்கும்...." அவன் குரல் ஒலிக்கவே, தன்னை அவன் கவனிக்கிறான் என்பதையே அப்பொழுதுதான் உணர்ந்தாள்.

"நம்ம ரூம்.... உனக்குப் பிடிச்சிருக்கா?" தன் மனைவிக்கு தன் அறை பிடிக்க வேண்டும் என்ற ஆசை அவன் குரலில் வெளிப்பட்டது.

"ரொம்ப புடிச்சிருக்கு.... ரொம்ப அழகாவும் இருக்கு..." உண்மையாக உரைத்தாள்.

அதற்குமேல் என்ன பேசுவது என்று இருவருக்கும் ஒரு பெரும் தயக்கம் தடை போட்டது. அவனுக்கோ.... அவள் முதல் முதலில் தன் அறைக்குள் வந்தவுடன், என்னவெல்லாம் செய்யவேண்டும்.... சொல்ல வேண்டும் என எண்ணியிருந்தோம்.... ஆனால் இப்பொழுது, கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை மட்டுமே பார்க்க முடிகிறதே.... என்ற எண்ணத்தில் அமைதியாகி விட்டான்.

அவளோ..... 'இப்படி ஒரு அறையில் இருந்துகொண்டு, எப்படி என் அறையில் பொருந்திக் கொண்டார்? ஒரு முகச் சுழிப்பு, ஒரு குறை, ஒரு அலுப்பு.... எதுவும் இல்லையே. எப்படி இவரால் முடிந்தது...?' என்ற நினைப்பில் மூழ்கி இருந்தாள்.

ஒரு வழியாக தன் நினைவுகளை ஒதுக்கியவன், "அன்னம்.... ட்ரெஸ் சேன்ஜ் பண்றதா இருந்தா பண்ணிக்கோ. புடவைதான் கட்டணும்னு எந்த கட்டாயமும் இல்லை. சுடிதார் மாத்திக்கோ.... அம்மா எதுவும் சொல்ல மாட்டாங்க. வருணா கூட சுடி தான் போட்டுப்பா..." அவளை கலைத்தான்.

அனன்யாவுக்கும் சுடிதார் மாற்றிக்கொள்ள ஆசைதான்.... ஆனால்.... தன் தாய் என்ன சொல்வாரோ என்ற எண்ணம்தான் முதலில் எழுந்தது. அதைவிட, தான் நேற்று தன் தாயிடம் சுடிதார் அணியக் கேட்டதையும், தாய் மறுத்ததையும் இவர் கவனித்தாரோ.... என்ற எண்ணம்தான் முதலில் எழுந்தது.

அவள் எண்ணத்தை படித்தவன் போன்று.... "நான் அத்தைகிட்டே சொல்லிக்கறேன். நீ போ..." அவன் உரைக்க,

"இல்ல.... நாளையில் இருந்து சுடிதார் போட்டுக்கறேன். இன்னைக்கு புடவையே கட்டிக்கறேன்..." வந்த முதல் நாள் புடவை அணிவதுதான் சரியாக இருக்கும் என எண்ணினாள்.

"உன் இஷ்டம்..." ஒரு தோள் குலுக்கலோடு விலகி விட்டவன், பால்க்கனியில் இருந்த கூடை நாற்காலியில் சென்று அமர்ந்து கொண்டான்.

அவன் செய்கையை வித்தியாசமாகப் பார்த்தவள், தன் வேலையைப் பார்க்கச் சென்றாள். அவள் குளித்து, உடை மாற்றி, தன் தலைவாரி முடித்த பிறகும் அங்கிருந்து அவன் விலகாமல் இருக்கவே, சற்று தயங்கினாலும் அவனைத் தேடிச் சென்றாள்.

"என்ன இங்கேயே உக்காந்துட்டீங்க? கீழே போகலையா?" அவனிடம் கேட்க, எதுவும் சொல்லாமல் அவளைப் பார்த்தவன், தானும் குளிக்கச் சென்றான். அவன் பார்வைக்கான பொருள் புரியாமல் குழம்பியவள், பால்க்கனியில் இருந்து சுற்றிலும் வேடிக்கை பார்த்தாள்.

அதன் பிறகு தன் பொருட்களை அவன் காட்டிய இடத்தில் அவள் அடுக்க, நேரம் ஐந்தை கடந்த பிறகே, இருவரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

அவனைப் பார்த்த நவீன்.... "என்னடா மச்சான்.... இப்போ உன்னை யார் வரச் சொன்னா? கொஞ்ச நேரம்

தங்கச்சியோட பேசிட்டு இருக்க வேண்டியது தானே..." அவனிடம் சின்னக் குரலில் வினவ, அவன் வினவியது அவளது காதிலும் விழ,

‘அப்படின்னா...?’ அவன் கீழே வராததன் காரணம் புரிய, முகத்தை எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்வது என்றே அவளுக்குத் தெரியவில்லை.

16

மாலை நெருங்கவே, அனைவரும் ஹாலில் குழும,
"வாங்க.... எல்லோரும் தோட்டத்துக்குப் போய்டலாம்...."
அனைவரையும் அழைத்த பார்வதி, வேலைக்கார பெண்மணியின் உதவியோடு, காபி, ஸ்நாக்ஸ் என அனைத்தையும் அங்கே கொண்டு சென்றார்.

தோட்டத்தின் நடுவில் புல்வெளி இருக்க, அதில் போடப்பட்டிருந்த மர இருக்கைகளில் அனைவரும் அமர்ந்து கொண்டார்கள். காபி குடித்து முடித்த பிறகு, பேச்சு நகுல், அனன்யாவின் திருமண வரவேற்பு பற்றி திரும்பியது.

அந்த பேச்சு எழுந்த உடனே, நகுல் அனன்யாவை திரும்பிப் பார்த்தான். அவன் பார்வை தன் பக்கம் திரும்பியதைப் பார்த்த அவள், 'என்ன...?' என்று புருவம் உயர்த்தி வினவ, 'ஒன்றும் இல்லை...' என தலை அசைத்தான்.

அவன் மறுப்பாக தலை அசைத்தாலும், அதில் ஏதோ விஷயம் இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. மேலே அதை சிந்திக்க முடியாமல்,

ஏற்கனவே பத்திரிகை அனைத்தும் அடித்து வந்திருக்க, நவீன் ஓடிபோய் அவற்றில் இரண்டை எடுத்து வந்து கொடுத்தான். அதை வாங்கி மூர்த்தியிடம் கொடுக்க, அந்த பத்திரிக்கையை வாங்கியவர், அதில் பார்வையை செலுத்தினார்.

இருவரும் திருமண கோலத்தில் இருக்கும் புகைப்படம் அதில் அச்சடிக்கப் பட்டிருக்க, இரண்டே நாட்களுக்குள் இப்படி ஒரு பத்திரிக்கையை வடிவமைத்த அவர்களது வேகம் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

"ரொம்ப நல்லா இருக்கு..." அதை மனைவியிடம் கொடுக்க, தானும் அதை வாங்கிப் பார்த்தார்.

அன்று இரவு ட்ரெயினுக்கே அவர்கள் கிளம்பவேண்டும் என உரைக்க, அன்று ஒரு நாள் தங்கிவிட்டு பிறகு சென்றால் போதும் என அரசு உரைக்கவே மறுக்க முடியாமல் அன்று அவர்கள் தங்குவதாக முடிவானது.

இரவு உணவை உண்டுவிட்டு அவர்கள் அறைக்குத் திரும்ப, நகுலின் அறையில் இருந்து வெளியேறிய நவீன்.... "என்ஜாய் மச்சான்..." கண்ணடித்துவிட்டு வெளியேற,

‘ஆண்டவா.... இவன் என்ன செய்து வச்சானோ தெரியலையே...’ எண்ணியவன் உள்ளே நுழைய, அங்கே அவனது கட்டில் மல்லிகைச் சரத்தால் சூழ்ந்திருக்க, படுக்கையோ ரோஜா மலர் இதழ்களால் நிறைந்து, ரூம் ஸ்ப்ரேயின் மணம் மிதமாக அறையை நிறைத்திருந்தது.

உள்ளே நுழைந்தவன் வாசல் அருகிலேயே தேங்கிவிட, அவன் பின்னால் வந்த அனன்யா.... "என்ன இப்படி நின்னுட்டாங்க...?’ அவனைத் தாண்டி வந்தவள், தானும் அந்த அலங்காரத்தைப் பார்த்து திகைத்துபோய் நின்றுவிட்டாள்.

அங்கே அவளது வீட்டில், பெரிதாக அலங்காரங்கள் எதுவும் தேவையில்லை என மூர்த்தி உரைத்ததால், இயல்பாகவே அவள் அறை இருந்தது. இங்கே.... வேகமாக அவன் முகம் பார்க்க, அவன் முகம் இறுகிபோய் இருந்ததைப் பார்த்தவள் கவலையானாள்.

நியாயப்படி பார்த்தால் அவள்தான் கோபமாக இருக்க வேண்டும். ஆனால்., அவன் முகம் இறுகி இருக்க, வேகமாக படுக்கையை நெருங்கியவன்,ஒரே உருவலில் படுக்கை விரிப்பை உதறி மலர்களை அறை முழுவதும் சிதறடித்தான்.

ஏற்கனவே அவள் கீழே படுக்கிறேன் என சொல்லி விடுவாளோ என படபடப்பில் அவன் அறைக்கு வந்திருக்க, இப்படி அலங்காரத்தைப் பார்த்தால் நிச்சயம் அவள் மறுக்கத்தான் செய்வாள் என்பதாலேயே தன் இயலாமையை மறைக்க இவ்வாறு நடந்து கொண்டான்.

அவன் கோபத்தில் திகைத்தவள், தன் நிலை தானே அவனை இவ்வாறு நடக்கத் தூண்டுகிறது என எண்ணியவளாக, வேகமாக அவனை நெருங்கினாள்.

"என்னங்க..." அவனை அழைக்க, அவளது அழைப்பை கண்டுகொள்ளாமல், படுக்கை விரிப்பை பெட்டின்மேல் விசிறியடித்தவன், வேகமாக அங்கிருந்து அகன்று, பால்க்கனியில் சென்று நின்றுகொண்டான்.

கைகளை மார்புக்கு குறுக்காக கட்டியவன், அங்கிருந்து வானத்தை வெறித்தான். ஏற்கனவே திருமண வரவேற்பு தேவையா என அவன் எண்ணியிருக்க, அதை எப்படி மறுக்கவென்பதும், தவிர்க்க என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

அவன் கோபமாகச் சென்றதை அவளால் தாங்கவே முடியவில்லை. அவன் பின்னால் சென்றவள், தாயகமாக அவனை நெருங்கினாள்.

அவன் அருகில் சென்று நின்றவள், "அவங்க, அவங்க திருப்திக்காக செய்யறாங்க. அதை எப்படி நாம தப்புன்னு நினைக்க முடியும்? ஏன் இப்படி கோபப்படுறீங்க...? எல்லாம் என்னால் தானே..." அவள் கலங்கிய குரலில் உரைக்க, அவள் கேள்வியை எந்த விதத்தில் எடுத்துகொள்ள என்று நிச்சயமாக அவனுக்குப் புரியவே இல்லை.

ஒரு பக்கம் வேந்தனுக்கு கொடுத்த வாக்கு எனப் புலம்ப, மறு பக்கம் தன் பக்கமும் யோசிக்கிறாளே..... இதை சந்தோஷமாக ஏற்கவா? தவிர்க்கவா? குழம்பிப் போனான்.

அவள் பக்கம் திரும்பியவன், "இன்னும் நாலு நாளில் ரிசப்ஷன் வச்சிருக்காங்க.... நான் அவங்ககிட்டே என்ன சொல்லட்டும்?" திடுமென கேட்டான்.

‘அதுதான் எல்லாம் முடிவு செய்துவிட்டார்களே.... இப்பொழுது இப்படி கேட்டால்....?’ அவளுக்குப் புரியவே இல்லை.

"இன்னும் ஒரு வருஷத்தில் நீ போய்டுவ. அப்படி இருக்கையில்.... எதற்காக தேவையில்லாமல் இப்படி ஒரு நிகழ்வு? உனக்கும் தேவையில்லாத மன கஷ்டம்..." நிதானமாக அவன் வினவ, இப்படி ஒரு விஷயத்தை இதுவரை சிந்தித்தே இராதவள் விழித்தாள்.

"ஏற்கனவே உங்க ஒருத்தரை கஷ்டப்படுத்துறது போதாதா? இன்னும் மத்தவங்களையும் கஷ்டப்படுத்தணுமா? என்னால் முடியாது. ஏன்.... உங்களை விட்டு நான் போய்ட்டா.... வேற பொண்ணு கிடைக்க இது ஒரு தடையா இருக்கும்னு நீங்க நினைக்கறீங்களா?" படபடவென பொரிந்தாள்.

"ஏய்.... என்னைபத்தி என்ன நினைச்சுட்டு இருக்க? என் வாழ்க்கையில் கல்யாணம் ஒரு முறைதான். என்னைப் பொறுத்த வரைக்கும் அது முடிஞ்சிடுச்சு. இனிமேல் என் வாழ்க்கையில் வேற பொண்ணுக்கு இடம் கிடையாது. புரிஞ்சுதா...?" தன் முழு கோபத்தையும் வெளிப்படுத்தினான்.

அவனது கோபம், ஒரு பக்கம் சந்தோஷத்தையும், மறு பக்கம் கவலையையும் ஒருங்கே அளித்தது. அதை ஒதுக்கியவள், "இந்த ஜென்மத்தில் நான் என்ன வரம் வாங்கி வந்தேன்னே தெரியலை. கொடுத்த வாக்கையும் காப்பாத்த முடியாமல், இந்த தாலிக்கும் உண்மையா இல்லாமல்.... நரகம்..." தன் தாலியை அவன் முன்னால் காட்டியவள்,

"ஆனா.... ஒண்ணு மட்டும் சொல்றேன். நான் இங்கே இருக்கும் வரைக்கும் இதுக்கு மதிப்பு கொடுப்பேன். இதற்குமேல் உங்களுக்கு என்ன செய்யணுமோ செஞ்சுக்கோங்க..." உரைத்தவள், தாலியை ஆடைக்குள் மறைத்துவிட்டு, விருட்டென அறைக்குள் சென்று மறைந்தாள்.

உடை மாற்றி இரவு உடையை அணிந்தவள், அவன் படுக்கையில் ஓரமாக சென்று படுத்துக் கொண்டாள். அது வரைக்கும் கூட அசையாமல் நின்றவன், அவள் பேச்சில் நிம்மதியாக உணர்ந்தான். கொடுத்த வாக்குக்கும், தாலிக்கும் இடையில் அவள் மனம் போராடுவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

என்றாவது ஒரு நாள் அவள் ஒரு பக்கம் நிலைப்பாள்.... அது என் பக்கமாகத்தான் இருக்கும்.... என உறுதியாக எண்ணியவனுக்கு, வேந்தன் எந்த அளவுக்கு அவளுக்கு நிம்மதியை அளிப்பான் என்றுதான் உணர முடியவில்லை.

அதே நேரம் அவளது அலைபேசி ஒலியெழுப்ப, இப்பொழுது அதை செவிமடுத்தவள், "வேந்தன்.... நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்.... ஒன்பது மணிக்குமேல் எனக்கு கால் பண்ணாதே என்று.

"இப்போ நான் தனி மனுஷி கிடையாது.... எனக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு. இங்கே நான் வாழ வந்திருக்கிறேன். இந்த வீட்டு கௌரவம் காப்பது என்னோட கடமை. இப்போ என்ன.... நீ கேட்ட அந்த விஷயம் தானே.... நான் அவர்கிட்டே பேசிட்டேன். அவரும் ஒத்துகிட்டார். இதற்குமேல் உனக்கு ஏதாவது தெரிஞ்சுக்கணும்னா..... காலையில் போன் பண்ணு.

"இன்னொரு முறை நான் சொன்னதையும் மீறி நீ போன் செய்தால்.... நான் என்ன செயவேன்னே எனக்குத் தெரியாது. புரிஞ்சதா..." ஆத்திரமாக, கோபமாக, அவனுக்கு பேச வாய்ப்பே அளிக்காமல் அலைபேசியில் கத்திவிட்டு வைத்துவிட்டாள்.

அவனிடம் தைரியமாக பேசிவிட்டாலும், அவளுக்கு மூச்சு வாங்கியது. அவளது மருந்து அனைத்தும் அவள் பெட்டியில் இருக்கிறதுதான். அதைபோய் போட்டுக்கொள்ள மனமில்லாமல் படுக்கையில் பிடிவாதமாக படுத்துக் கொண்டாள்.

அவள் பேச்சை கேட்டவனுக்கு இப்பொழுது மலையளவு நம்பிக்கை வந்தது. தன்னால் தன் குடும்பத்துக்கு எந்த தலை குனிவும் வந்துவிடக் கூடாது என எண்ணுபவள், நிச்சயம் தன்னைப் பிரிந்து செல்லும் முடிவை எடுக்க மாட்டாள் என்றே நம்பினான்.

தன் சிந்தையை ஒதுக்கிவிட்டு அறைக்குள் வர, அவள் தன் படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்து பெருத்த நிம்மதி.

நகுலின் கண்கள் தன்னை கேள்வியாக நோக்குவதைக் கண்டவள், "என்னடா.... இவ இப்படியும் பேசுறா.... அப்படியும் பேசுறான்னுதானே தானே யோசிக்கறீங்க? ஒரு வருஷம் கழிச்சு நான் போவேன்தான். அதற்காக.... உங்க கௌரவத்தையோ, இந்த குடும்ப கௌரவத்தையோ கெடுக்குற மாதிரி, அவனோட ஓடிப்போக எல்லாம் மாட்டேன். உங்ககிட்டே இருந்து முறையா விவாகரத்து வாங்கிட்டுதான் போவேன்.... புரிஞ்சுதா...?" அதேபோல் மூச்சு வாங்க வினவினாள்.

அவள் பேச்சில் அவன் மனம் அதிர்ந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "நான் அதைபற்றியெல்லாம் எதையும் நினைக்கலை போதுமா. இது உன் வாழ்க்கை.... நீதான் முடிவு எடுக்கணும்..." அவளிடம் உரைக்க, அதே நேரம் அவனது அலைபேசி ஒலியெழுப்பியது.

அதில் ஒளிர்ந்த வருணாவின் எண்ணைப் பார்த்து புருவம் சுருக்கினான். "வருணா.... என்னம்மா...? ஏதாவது பண்ணுதா? ஹாஸ்பிடல் போகணுமா?" படபடத்தான். ஏற்கனவே ஒரு நாள் அவள் இங்கே வந்து தங்கி இருக்கையில், நள்ளிரவில் வயிறு வலி என துடித்தது நினைவிற்கு வரவே அவ்வாறு வினவினான்.

"அண்ணா.., அதெல்லாம் இல்லை. அப்படியே இருந்தாலும் அவர் இங்கேதான் இருக்கார். சோ.... நான் அதுக்கு கூப்பிடலை.... அண்ணிக்கு வெந்நீர் வேணுமான்னு அம்மா

கேட்டாங்க. தண்ணி மாறுவதால் ஒரு ரெண்டுநாள் சுடு தண்ணி குடிக்கச் சொல்லி அவங்க கிட்டே சொன்னாங்களாம்.

"ஆனால் அதைக் கொடுக்க மறந்துட்டாங்களாம். உன்னை கூப்பிட சங்கடப்பட்டுட்டு இங்கே புலம்பிட்டு இருக்காங்க.... அதான் நான் கால் பண்ணேன். கொஞ்சம் கீழே வந்து ப்ளாஸ்க்கை எடுத்துட்டு போறியா?" அவள் வினவ, நிம்மதியாக மூச்சு விட்டவன், தன் தாய், அனன்யாவின் மேல் கொண்ட பாசத்தை எண்ணி உருகிப் போனான்.

அதே நேரம்.... தாய் தன்னையும், அனன்யாவையும் கவனிக்கிறார் என்பதை அறிந்திருந்தால் சுதாரிப்பாக இருந்திருப்பானோ என்னவோ?

"நான் இன்னும் தூங்கலடா.... இங்கே ரூமில் அவளோட திங்க்ஸ்சை அரேஞ் பண்ணிட்டுதான் இருக்கோம். இரு வரேன்..." அவன் உரைக்க,

"அப்போ நீ வர வேண்டாம்.... நான் பொன்னம்மாட்டையே கொடுத்து அனுப்பறேன். குட் நைட்..." அலைபேசியை வைத்துவிட்டாள்.

அவன் பரபரப்பாக வினவவே, படுக்கையில் இருந்த அனன்யா எழுந்து அமர்ந்து, அவனையே பார்த்தாள். அடுத்த நிமிடம் அறைக்கதவு தட்டப்பட, சென்று கதவைத் திறந்தவன், கையில் ஒரு ப்ளாஸ்க், கப்போடு திரும்பி வந்தான்.

படுக்கையை நெருங்கியவன், அவள் பக்கம் இருந்த அலங்கார விளக்கு இருந்த சிறிய ஸ்டூலில் அதை வைத்துவிட்டு, "அம்மா கொடுக்கச் சொன்னாங்களாம்..." உரைத்தவன், அவள் மூச்சிரைப்பை கண்டுகொண்டு, "ஹாட் வாட்டர்..... இப்போ உனக்குத் தேவைன்னு நினைக்கறேன்..." அவளுக்காக தானே அதை ஊற்றிக் கொடுக்க, மறுக்காமல் வாங்கிக் குடித்தாள்.

"சில் வாட்டர் வேணும்னா ப்ரிஜில் இருக்கு.... எடுத்துக்கோ..." அவன் உரைக்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

"சில்லுன்னு எதையும் குடிக்க மாட்டியா...?" அவன் கேட்க, அவனுக்கு எப்படித் தெரியும்? என்ற வினா எழுந்தாலும், "இல்ல..." பதில் கொடுத்தாள்.

"நல்ல விஷயம் தான்.... எங்க அம்மா எத்தனையோ முறை சொல்லிட்டாங்க. ஆனால் என்னால் விட முடியலை..." உரைத்தவன், தன் மடிக்கணினியை எடுத்துக் கொண்டு, சோபா பக்கம் நகர்ந்தான்.

அத்தோடு.... அறையில் இருந்த குழல் விளக்கை நிறுத்தியவன், சோபாவின் அருகில் இருந்த சிறிய விளக்கை எரிய விட்டு, அங்கே அமர்ந்து கொண்டான். அவன் செய்கையைப் பார்த்தாலும், எதையும் வினவவில்லை.

ஏசி குளிர், நிச்சயம் அவளால் தரையில் படுக்க முடியாது என்பதாலேயே, அவன் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். ஆனால்.... அவன் அதைப்பற்றி எதையும் பார்வையால் கூட வெளிப்படுத்தாதது நிம்மதியாகக் கூட இருந்தது.

அத்தோடு.... அவன் கோபம் விட்டு, தன்னிடம் சாதாரணமாக உரையாடியதுவும் சேர, நிம்மதியாகவே விழி மூடினாள். மல்லிகையின் மணம் அவளுக்கு ஒத்துகொள்ளாதுதான்.... அதைச் சொல்ல வழியின்றி, போர்வையை தலை வழியாக மூடிக்கொண்டு படுத்துக் கொண்டாள்.

சற்று நேரம் பொறுத்தவள், அவன் படுக்கும் வழியைக் காணோம் என்பதால்.... படுக்கையில் எழுந்து அமர்ந்தவள், "நான் இங்கே படுத்திருக்கேன்னுதான் நீங்க தூங்கலையா...?" ஒரு வழியாக மனதை இவ்வளவு நேரம் அரித்த விஷயத்தை கேட்டு விட்டாள்.

அவளிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை எதிர் பாராதவன், "இல்லம்மா.... கல்யாண வேலையில் ஆபீஸ் வேலை அப்படியே பெண்டிங் இருக்குது. நம்ம கம்பெனியை நவீன் பாத்துப்பான். அப்பாவோட கம்பெனி விஷயத்தில் நான் பார்க்க வேண்டியது.... அதைத்தான் பாக்கறேன். நீ தூங்கு, நான் கொஞ்ச நேரத்தில் வரேன்..." மென்மையாக உரைக்க, படுத்துக் கொண்டாள்.

அவன் மென்மை மூன்று நாட்களுக்குப் பிறகு அவளைத் தீண்ட, அதில் கரைந்து போனாள். அது ஏன் என்பதை சிந்திக்க மறந்தாள்.

மல்லிகையின் மணம் அவனுக்குத்தான் பெரும் அவஸ்தையாக இருந்தது. முதல்நாள் உணர்ந்த அவள் கன்னத்தின் மென்மையும் சில்லிப்பும், இதழில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும் உணர்வு. இன்றும் அதை உணரச்சொல்லி அவன் உணர்வுகள் பேயாட்டம் போட்டது மட்டும் உண்மை.

இப்பொழுது அவள் அருகில் படுத்தால், தன்னை மீறி அவளைத் தீண்டி விடுவோமோ என்ற அச்சத்தில் தான், அதை மறைக்க வேண்டியே தன் மடிக்கணினியை நாடினான்.

தந்தையின் அலுவலக விஷயத்தை மேலோட்டமாக பார்க்க எண்ணியவன், சற்று நேரத்தில் அதில் மூழ்கிப் போனான். நேரம் பன்னிரண்டை நெருங்கும் வேளை தான், அதில் இருந்து மீண்டவன், மடிக்கணினியை மூடிவிட்டு, அவள் அருகில் சென்று படுத்துக் கொண்டான்.

காலையில் அவன் கண் விழிக்கையில், அருகில் அனன்யா இல்லாததைப் பார்த்தவன், நேரம் பார்க்க, அது ஏழு எனக் காட்டியது. எழுந்தவன் முகம் கழுவி விட்டு வர, அவனுக்காக காபியை கொண்டு வந்தாள்.

"அன்னம்.... இதையெல்லாம் நீ ஏன் செய்யற? நானே கீழே வந்து எடுத்திருப்பேனே.... அம்மா இதையெல்லாம் அலவ்

பண்ணவே மாட்டாங்களே..." கேட்டவன், அவள் கையில் இருந்து கப்பை வாங்கிக் கொண்டான்.

"அத்தைகிட்டே கேட்டு நான்தான் வாங்கிட்டு வந்தேன்..." அவள் உரைக்கவே, புருவம் உயர்த்தியவன், "இனிமேல் வழக்கத்தை மாத்த வேண்டாம்..." இன்னதென்று புரியாத பாவனையில் அவன் உரைக்க, அவளுக்குத்தான் ஒரு மாதிரியாகப் போயிற்று.

அதென்னவோ அவர்கள் வீட்டில் படுக்கையறைக்கே சென்று காலை காபி கொடுக்கும் வழக்கத்தை பார்வதி செய்வது இல்லை. மாலையோ, இரவோ, அவர்கள் கேட்டாலோ.... அவர்கள் களைப்பாக இருப்பதாக அவர் உணர்ந்தாலோ கொடுப்பதோடு சரி.

"ஏன்.... நான் கொண்டு வந்ததால் அப்படிச் சொல்றீங்களா?" அவனிடம் கேட்க,

"சில விஷயங்களை புதிதாக பழகாமல் இருப்பது நல்லதுன்னு நினைக்கறேன் அவ்வளவு தான்..." சாதாரணமாகவே உரைத்தாலும், அதை அவளால் தாங்க முடியவில்லை என்பது மட்டும் உண்மை.

‘அவன் தன்னை தவிர்க்க நினைக்கிறானோ...?’ இந்த எண்ணம் அவளை அலைக்கழித்தது. அவள் கீழே சென்றவள், கிச்சனில் இருந்த பொன்னம்மாவுக்கு உதவ, அதைப் பார்த்த பார்வதி, "அதான் நான் ஹெல்ப் பண்றேனே.... நீ எதுக்கும்மா நிக்கற...? நகுலைப் பாரு போ..." முதுகில் கை வைத்து தள்ளாத குறையாக அவளை அனுப்பினார்.

மேலே சென்றவள், அவன் எங்கே என்று பார்க்க, பால்க்கனியில் செய்தித்தாளில் மூழ்கி இருந்தான். அவனுக்குத் தேவையான டவ்வலை பாத்ரூமில் எடுத்து வைத்தவள், எப்படியும் அவன் அலுவலகம் செல்லப் போவதில்லை என்பதை உணர்ந்து, அவன் வீட்டில்

அணியும் பெர்முடாசும், ஒரு டிஷர்டும் தயாராக எடுத்து வைத்தாள்.

அறைக்குள் சிதறியிருந்த மலர்களை ஒதுக்கியவள், படுக்கை விரிப்பை மாற்ற, அந்த நேரம் அறைக்குள் நுழைந்தவன், "அன்னம்.... இப்போ எதுக்கு அதை மாத்தற? நேத்துதான் புதுசா போட்டிருக்காங்க..." வேகமாக அவளைத் தடுக்க,

ஒரு நொடி தடுமாறியவள், "அது.... அத்த தான் மாத்தச் சொன்னாங்க..." அவன் முகம் பாராமல் தயங்கி உரைக்க, அவள் சொன்னது புரியாமல் விழித்தவன், விஷயம் புரிய வேகமாக அங்கிருந்து விலகிச் சென்றான். அவன் செல்லவே நிம்மதியாக மூச்சு விட்டவள், தன் வேலையைத் தொடர,

"அதான் நான் எதையும் செய்ய வேண்டாம்னு சொன்னேனே..." கையில் இருந்த உடை, டவ்வலோடு அவள் முன்னால் நிற்க,

"உங்களுக்குப் பிடிக்கலன்னா நீங்க தாராளமா வேற போட்டுகோங்க. எனக்கொண்ணும் பரவாயில்லை..." அவனைப்போல் சாதாரணமாக உரைத்தவள், படுக்கை விரிபோடு அங்கிருந்து நகர்ந்தாள்.

காலை உணவுக்குப் பிறகு.... அனன்யாவின் பெற்றவர்கள் ஊருக்குச் செல்லக் கிளம்ப, அதற்கு முன், அரசுவை நெருங்கிய மூர்த்தி, "பொண்ணுக்கு சீர் எதுவும் நீங்க செய்ய வேண்டாம்னு சொல்லிட்டீங்க. ஆனாலும் என்னால் அப்படியே விட முடியாதுங்களே. அத்தோட வரவேற்பு வேற இருக்கு.... அதுக்கு பொண்ணு மாப்பிளைக்கு நான்தான் துணி எல்லாம் எடுக்கணும்.

"எனக்கு அதை எப்படிச் செய்யிறதுன்னு எல்லாம் தெரியலை. ஏதோ என்னால் முடிந்த பணம் கொஞ்சம் இதில் இருக்கு, இதை நீங்க மறுக்காமல் வாங்கிக்கணும்..."

ஆயிரம் ரூபாய் கட்டு, பத்து கட்டை அவர் முன்னால் நீட்டினார்.

எங்கே மறுத்தால் அவர் தன்னை தவறாக எண்ணி விடுவாரோ எனத் தோன்ற, அவர் மனைவியின் முகம் பார்த்தார். "நகுல்.... அதை வாங்கிக்கோ" தாய் உரைக்கவே, மறுக்காமல் வாங்கிக் கொண்டான். மூர்த்தியின் முகம் அதன் பிறகுதான் மலர்ந்தது.

அவர்கள் செல்லவே.... அதை அறைக்குள் வைத்து, அப்படியே அவள் கையில் கொடுத்தவன், "இது உன்னோட பணம்.... உனக்கு தேவைப்படலாம்.... வச்சுக்கோ..." அவள் கையில் கொடுத்துவிட்டு அகன்று விட்டான்.

கையில் இருந்த பணத்தோடு.... உறைந்துபோய் நின்றிருந்தாள் அனன்யா. வேந்தனது குறிக்கோள் பணமாக இருக்குமோ என்ற அவனது சந்தேகமே அவனை இவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டியது. நிச்சயம் அந்த பணத்தைப் பற்றி பெற்றவர்கள் தன்னிடம் ஒரு வார்த்தை கேட்கப் போவதில்லை என்பது அவனுக்கு உறுதி.

அடுத்து வந்த நான்கு நாட்கள் மின்னல் வேகத்தில் கடக்க, வருணாவும், அனன்யாவும் உற்ற தோழிகளாகவே மாறி விட்டார்கள்.

பார்வதியைப் பற்றி சொல்லவும் வேண்டாம்.... அவளுக்கு இன்னொரு தாயாகவே மாறிப் போனார். கடந்த நான்கு நாட்களாக அவர்களை கவனித்த வரை, அவர்கள் அனைவருமே தன்னிடம் எதையோ கேட்க வருவதும், சட்டென அதை மறைத்து வேறு விஷயத்தை பேசுவது போலவும் அவள் உணர்ந்தாள்.

அது ஏனென்று அவளுக்குப் புரியவே இல்லை. நகுலோ.... தன் திருமணம் முடிந்த மறு நாளே.... கிடைத்த தனிமையில் தாய்க்கும் தங்கைக்கும் அழைத்தவன், அனன்யாவுக்கு விபத்து பற்றி பேசினாலே அவளது அண்ணனின் நினைவு

வருகிறது என்பதால், அதைப்பற்றி அவளிடம் எப்பொழுதும் பேசக் கூடாது என கண்டிப்பாக உரைத்திருந்தான்.

எனவேதான்.... சில வேளைகளில் அவர்களுக்கு நகுலின் விபத்து பற்றி உரைக்க முயல்கையில், எங்கே அவளது அண்ணனின் நினைவு வந்து அவள் துன்பப்படுவாளோ என்பதால், நாசூக்காக அதை தவிர்த்து வந்தார்கள்.

அன்று அவர்களது திருமண வரவேற்புக்காக உடை எடுக்கப் போயிருக்க, எதேச்சையாக அங்கே ஏற்பட்டிருந்த விபத்தைக் காண நேர்கையில், அனன்யாவுக்கோ.... இரண்டு வருடங்களுக்கு முன்னர் தான் பார்த்த, காப்பாற்றிய நகுலின் ரத்தம் தோய்ந்த முகம் சட்டென நினைவிற்கு வர, தடுமாறிப் போனாள்.

‘அவன் பிளைத்திருப்பானா?’ அன்றைய நினைவில் அவள் கைகள் சில்லிட்டுப் போக, அருகில் அமர்ந்திருந்த வருணாவின் கரத்தை அவள் பற்றவே.... அவள் கையில் உறைந்துபோகும் அளவு குளிரை உணர்ந்தவள், "அம்மா.... அண்ணியோட கையைப் பாருங்க.... சில்லுன்னு ஆயிடுச்சு.... அண்ணா.... கொஞ்சம் வேகமா போய்டு..." அவள் வீறிட, நிலைமை சற்று நேரத்தில் களேபரமாகத்தான் மாறிப் போனது.

சற்று தூரத்தில் காரை நிறுத்தியவன், அவளை கீழே இறக்கி, குடிக்க தண்ணீர் கொடுத்து, அவள் முகம் கழுவிய பிறகும், அவளால் தன்னை மீட்டுக் கொள்ள முடியாமல் போக,

"அன்.. அன்.. அன்.. னைக்கு.... இப்.. இப்.. இப்... படித்தான்..." அவள் திணற, தாயும் தங்கையும் அவள், தன் அண்ணனின் விபத்தை உரைக்கிறாள் என நினைக்க, நகுலுக்கோ.... அவள் தன்னைப் பற்றி எண்ணுகிறாளோ.... என சிந்திக்கத் தூண்டியது.

அந்த நினைவே சுகமாக இருக்க, உடனடியாக தான் உயிரோடு இருப்பதாகச் சொல்லி, அவள் தவிப்பை

அடக்கிவிடத்தான் அவன் நினைத்தான். ஆனால்.... இருக்கும் சூழலும், தாயும் தங்கையும் அதைத் தேக்க, ‘இன்னுமா நீ அதைச் சொல்லவில்லை...? ஏன்...?’ என அவர்கள் கேட்கப் போகும் கேள்விக்கு விடை இல்லாமல் அமைதியானான்.

"ஒண்ணும் இல்லம்மா.... அதான் ஆம்புலன்ஸ் வந்துடுச்சே.... அவனை காப்பாத்திடுவாங்க. ரிலாக்ஸ்..." அவளைத் தேற்றினான். அவனது ஆறுதல் அந்த நேரம் அவளுக்குத் தேவையாக இருக்க, அவன் தோளில் தன் முகத்தை அழுந்த புதைத்துக் கொண்டாள்.

அனன்யா, ‘அன்.. அன்..’ எனத் திணறியது, மற்றவர்களுக்கு அவளது அண்ணன்.... என நினைக்கத் தூண்டவே, இனிமேல் விபத்து பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாது என அவர்களை முடிவெடுக்க வைத்தது.

17

திருமண வரவேற்பு நாளும் அழகாய் விடிய, வீடு முழுவதும் உறவினர்களால் நிறைந்தது. மாலையில் சரியாக ஐந்து முப்பதுக்கு வரவேற்பு என நிர்ணயம் செய்திருக்க, அதற்கு ஒருமணி நேரத்துக்கு முன்பாகவே அனைவரும் மண்டபத்தை அடைந்தார்கள்.

முழு அலங்காரத்தை முடித்திருந்தாலும், புடவையை மண்டபத்தில் போய் மாற்றிக் கொள்ளலாம் என வருணா உரைத்ததால், மணமகள் அறையில் அனன்யாவுக்கு புடவை மாற்ற, நகுலோ.... மணமகன் அறையில் உடை மாற்றிக் கொண்டிருந்தான்.

அவன் உடை மாற்றி முடித்த அதே நேரம்.... அறைக்கதவு தட்டும் ஓசை கேட்க, "நகுல்.... நம்ம பசங்க எல்லாம் வரத்துவங்கிட்டாங்க போல, இரு நான் பாக்கறேன்..." எழுந்தவன் வாசலைத் திறக்க, அங்கே நின்ற புதியவனை புரியாமல் பார்த்தான்.

நவீன் அமைதியாக நிற்கவே.... "யார்டா...?" நகுல் குரல் கொடுக்க, "வேந்தன்..." ஒரு கரகரப்பான குரல், நவீனை முந்திக்கொண்டு தன்னை அறிமுகப் படுத்தியது.

அந்த நேரம் அவனை எதிர்பாராத நகுல் திகைத்தாலும், தன்னை சம்மாளித்தவன், "வாங்க வேந்தன்.... உள்ளே வாங்க..." வேகமாக அழைத்தான் நகுல்.

'யார்டா இது...?' நவீன் நண்பனிடம் பார்வையால் வினவ, "நவீன்.... இவர் என்னோட ப்ரண்ட்டா..." அவன் கேள்விக்கு பதில் கொடுத்தான்.

உள்ளே வந்த வேந்தனோ.... நேராக படுக்கையில் சென்று அமர்ந்தவன், நகுலை மிதப்பாக ஒரு பார்வை பார்த்தான். அவன் பார்வையும், தோரணையும், அமர்ந்த விதமும்

நவீனுக்கு முதல் பார்வையிலேயே அவனைப் பிடிக்காமல் போக, அதை தன் பார்வையிலும் வெளிப்படுத்தினான்.

கூடவே.... "அதெப்படிடா.... எனக்கே தெரியாத புது ப்ரண்ட்...?" புதியவனை சூடாக பார்த்தவாறே நகுலிடம் வினவினான்.

நகுலுக்கும் அவன் நடந்து கொண்ட விதம் பிடிக்கவில்லைதான். அதைவிட, மாநிறத்தில்.... கொஞ்சம் முரட்டுத் தோற்றத்தில், அணிந்திருக்கும் உடையில் கூட, பெரிதாக ஒற்றுமை இல்லாமல், தெனாவெட்டாக இருக்கும் இவனைப் போயா என் அன்னம் விரும்புகிறாள்?' அவனால் சிந்திக்கவே முடியவில்லை.

'காதலுக்கு கண்ணில்லை என்று சொல்வது இதைத்தான் போல...' எண்ணியவன், அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரின் பார்வை தன்னை அளவிடுவதை உணர்ந்தாலும், அதைப்பற்றி பெரிதாக கவலைப்படாமல், "எனக்கு உங்ககிட்டே கொஞ்சம் தனியா பேசணும்?" நகுலிடம் உரைக்க, நகுல் நவீனை அமர்த்தலாக ஒரு பார்வை பார்த்தான்.

"ஹல்லோ.... யார் நீங்க...? நீங்க என்ன அவன்கிட்டே தனியா பேசுறது? பங்க்ஷன் நடக்குற இடத்தில் ஏதாவது பிரச்சனை பண்ணணும்னு வந்திருக்கீங்களா? எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசிக்கோங்க.., இப்போ..." வார்த்தையை முடிக்காமல் வாசல் பக்கம் பார்வையை செலுத்தி, அவனை போகச் சொன்னான்.

கொஞ்சமாவது சூடு சுரணை இருப்பவனாக இருந்தால், அப்பொழுதே சென்றிருப்பான்.... அவன்தான் தன் காதலி மற்றவனின் மனைவி என்றான பிறகு கூட, அவளை பிடித்து வைத்துகொள்ள நினைப்பவனாயிற்றே, அசையாமல் அப்படியே இருந்தான்.

நகுல் தான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இருக்கவே.... "டேய்.., நான் கேட்டதுக்கு நீ பதிலே சொல்லாமல் இப்படி நின்னால் என்னடா அர்த்தம்? யார்டா இவன்...?" ஒருமைக்குத் தாவினான்.

"அவர் சொல்லலைன்னா என்ன...? நான் சொல்றேன்..." வேந்தன் உரைக்க, அவனை உக்கிரமாக முறைத்தவன், நகுலையும் அதே பார்வையால் பார்த்தான்.

நிலைமை கைமீறிச் செல்வதை உணர்ந்த நகுல், "நவீன்.., ஒரு பத்து நிமிஷம் வெளியே இரு..." இப்படிச் சொன்ன நண்பனை நம்ப முடியாமல் பார்த்தான்.

‘ப்ளீஸ்...’ அவன் கண்கள் கெஞ்ச, வேந்தனது ஏளனமான பார்வையை சகிக்க முடியாமல், கையில் இருந்த சென்ட் பாட்டிலை படுக்கையில் வீசிவிட்டு, அறையையும் பலமாக சாத்திவிட்டு வெளியேறினான்.

வெளியே வந்தவன், மண்டபத்தில் இருந்த இருக்கையில் அமர்ந்துவிட்டு, ‘இவன் யாராக இருக்கும்? இவனைப் பார்த்து ஏன் நகுல் அமைதியா இருக்கிறான்? நகுல் ஏதாவது பிரச்சனையில் மாட்டிக் கொண்டானா?’ சிந்தித்தவன்,

‘அப்படியும் இருக்காதே. இவன் வரும் வரைக்கும் இயல்பாகத்தானே இருந்தான். வந்த பிறகும் கூட, பெயரை வைத்துதான் அவனை அடையாளமே கண்டு கொண்டான்.... வேறு என்ன?’ என்ன யோசித்தும் அவனால் விடை அறியவே முடியவில்லை.

அனன்யாவைப் பற்றிய விஷயமாக இருக்குமோ என அவனால் சந்தேகம் கூட பட முடியவில்லை. ஏனென்றால்.... நகுலோடு வெகு இயல்பாகவே அவள் நடந்து கொண்டதுதான் அதற்கான காரணம்.

வேந்தனோ.... அனன்யாவிடமிருந்து தன் பிடி நெகிழ்கிறதோ என்ற பயத்தில், நகுலை அவன் குடும்ப

கௌரவத்தைக் காட்டி, மிரட்டிச் செல்லும் எண்ணத்தோடு வந்திருந்தான். நகுலும்.... 'இவன் இப்பொழுது ஏன் வந்திருக்கிறான்...?' என எண்ணியவன், அவன் தோரணையே அவனுக்கு விஷயத்தை புரிய வைக்க, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான்.

அறைக்குள் இருந்து நவீன் வெளியேறவே, "சொல்லுங்க.... நான் உங்களுக்கு என்ன செய்யணும்?" சாதாரணமாக கேட்ட நகுல், அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

வேந்தனோ அவனிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை எதிர்பாராமல் சற்று தடுமாறியவன், "நான்தான் வேந்தன்..." ஒரு வேளை அவனுக்குத் தன்னை யாரென்று தெரியவில்லையோ என்றே மீண்டும் உரைத்தான்.

"உங்களை யார்ன்னு தெரிந்ததால் தான் நான் கேள்வியே கேட்டேன்..." அமர்த்தலாகவே பதில் கொடுத்தான்.

"அனு.... எனக்கானவள்.... அவளை நான் யாருக்கும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை" அவன் உரைக்கவே,

"சரி..." நகுல் உடனே ஒத்துகொள்ள, ஒரு நொடி திகைத்தவன்,

"இப்போ.... இந்த நிமிஷம்.... நான் வெளியே போய்.... அனு என் காதலின்னு சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா" மிரட்டினான்.

"செய்ய வேண்டியது தானே. அதைச் செய்யாமல் ஏன் என்கிட்டே வந்து உக்காந்து பேசிட்டு இருக்க...? போ.... போய் தாராளமா செய்...." அசால்ட்டாக உரைத்துவிட்டு அவன் முகம் பார்க்க, வேந்தனது முகம் கருத்துப் போனது.

"நான் சொல்லவா...? நீமட்டும் அப்படிச் செய்தால்.... அன்னமே உன்னை யார்ன்னு கேப்பா. அது உனக்கும் தெரியும். அப்படித்தானே..." நிதானமாக வினவியவன்,

"எனக்கு ஒண்ணு மட்டும்தான் புரியலை.... உன் பக்கம் இவ்வளவு வீக்கா இருக்கும்போதே நீ இங்கே வந்து என்கிட்டே பேசுறன்னா.... ஓ.... நான் என் குடும்ப கௌரவம்.., என் மானம் மரியாதை இதையெல்லாம் காப்பாற்ற வேண்டி, நீ என்ன சொன்னாலும் கேட்டுப்பேன்னு நினைச்சியோ.... இல்லன்னா, என்னை வந்து மிரட்டிட்டு போகலாம்னு வந்தியா...?

"இதிலே பாரு.... இங்கே நீ என்ன நினைச்சுட்டு வந்தியோ எனக்குத் தெரியாது. ஆனா.... இப்போ சொல்றேன் கேட்டுக்கோ.... அன்னம் எனக்கு மட்டும்தான். இதை நீயில்லை.., அந்த கடவுளே நினைத்தால் கூட மாற்ற முடியாது..." நிறுத்தி நிதானமாக உரைக்க, வேந்தனது முகம் கருத்து சிறுத்து போனது.

வேந்தன் தான் எண்ணி வந்ததை செயல்படுத்த முடியாமல், தன் எண்ணத்தை புரிந்தவன் போன்று நகுல் பேச, தன் தோல்வியை ஒத்துகொள்ள முடியாமல் கொந்தளித்தான்.

"என்ன சொன்ன...? அவ உனக்கா.... ஹா...ஹா...ஹா.... அவளோட வீக்னஸ் தெரியாமல் சவால் விடுறியே மாப்ள.... அவ்வளவு சீக்கிரம் அவ உனக்கு கிடைக்க மாட்டா. நீயே பாடிகாட் மாதிரி அவளை கூட்டி வந்து என்கிட்டே பேசத்தான் போற.... அப்போ தெரியும் இந்த வேந்தன் யாருன்னு. இப்போ வரட்டா..." அவனிடம் உரைத்தவன், கதவு தட்டும் ஓசையில் எழுந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியேறினான்.

அவன் செல்லவே.... வெறுப்பாய் இருந்த தன் முகத்தை, உள்ளே வந்த தன் தாய்க்கு காட்டாமல் மறைத்தவன், முகம் திருத்தும் சாக்கில் கண்ணாடிப் பக்கம் திரும்பிக் கொண்டான்.

"நகுல்.... உன்னை அப்போவே அழைச்சுட்டு வரச்சொல்லி அந்த நவீன் கிட்டே சொன்னால்.... அதைச் செய்யாமல் அவன் எங்கே போனான்? சரி நீ மேடைக்கு போ. அனன்யா

அங்கே நிக்கறா.... அவளையும் அழைச்சுட்டு போ..." தாய் உரைக்கவே, வேகமாக தன்னை கண்ணாடியில் சரிபார்த்துவிட்டு கிளம்பிப் போனான்.

அனன்யாவின் அருகில் சென்றவன், அவளது அழகில் ஒரு நொடி மெய் மறந்து போனான். அவளுமே அவன் ஆளுமையில் சற்று திணறியவள், முயன்று தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

மேடையேறிய அவர்களது ஜோடிப் பொருத்தம் பார்த்து, இருவரைப் பெற்றவர்களும், நிறைவாய் புனகைத்தவர்கள், தங்கள் வேலையைப் பார்க்கப் போனார்கள். வரவேற்பு சிறப்பாய் நடக்க, மண மக்களுக்கு அமரவே நேரமின்றி போனது.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கூட்டம் அலைமோத, நகுலின் செல்வாக்கும், பெருமையும் அறிந்து சற்று பிரமித்துதான் போயிருந்தாள். கிடைத்த இடைவெளியில், வருணா அவளுக்கு ஜூஸ் கொடுக்க, அப்பொழுது இருந்த களைப்பிலும், தாகத்திலும் அதை வாங்கி வேகமாக அருந்தினாள்.

அதை அவள் குடித்த வேகம் கண்டு, "அண்ணி.... இன்னொரு டம்பளர் ஜூஸ் கொண்டு வரவா?" அவள் கேட்க,

"இந்த நேரத்தில் நீங்க எதுக்காக இதைச் செய்யறீங்க அண்ணி. பாருங்க.... எப்படி வேர்த்து வழியுதுன்னு. முதல்ல நீங்க போய் ரெஸ்ட் எடுங்க..." கரிசனையாக உரைத்தாள்.

"இந்த அண்ணிங்க தொல்லை தாங்க முடியலடா நகுலா..." நவீன் அவர்களை கேலி செய்ய,

"அண்ணி.... நான் அன்னையில் இருந்து சொல்லிட்டு இருக்கேன்.... என்னை பேர் சொல்லியே கூப்பிடுங்கன்னு.... நீங்கதான் கேக்கவே மாட்டேங்குறீங்க. இப்போ பாருங்க....

நவீன் கிண்டல் பண்றார்..." போலியாக கோபம் கொண்டாள்.

"நானும் அதேதான் சொல்றேன்.... நீங்க மட்டும் கேட்டீங்களா?" அதையே அனு உரைக்க, இருவரும் ஒரே நேரம் சிரித்து விட்டார்கள்.

"ஊர் உலகத்தில் மரியாதை கொடுக்கச் சொல்லி அடிச்சுப்பாங்க பாத்திருக்கேன். இங்கேதான் உல்ட்டாவா நடக்குது...." நவீன் மீண்டும் உரைக்க, அங்கே அடுத்த சிரிப்பலை எழுந்தது.

மீண்டும் ஆட்கள் வரவே, வருணா கீழே இறங்கி சென்றுவிட, ஒரு வழியாக அனைத்தும் முடிவிற்கு வரும் வேளை, நவீனின் கல்லூரி, பள்ளித் தோழர்கள் ஆளுயர கேக்குடன் மேடை ஏறினார்கள். மேடை முழுவதும் ஒரு நொடியில் பரபரப்பாக, இருவரையும் சேர்த்து கேக் வெட்ட வைத்தவர்கள், ஒருவர் மற்றவருக்கு ஊட்டச் சொல்ல, நகுல் பெரிதும் தயங்கினான்.

அவனது செய்கையைப் பார்த்த நண்பர்கள், "என்னடா மச்சான்.... நீ என்னவோ பொண்ணு மாதிரி வெக்கப் படுற, ஊட்டுடா. அப்படியே நச்சுன்னு ஒரு முத்தம் கொடு பாக்கலாம்..." நண்பர்கள் விடவே மாட்டோம் என கையில் ஆளுக்கொரு மொபைல் போனோடு போட்டோ எடுத்தவாறு உரைக்க, அவர்கள் செய்கையில் தடுமாறித்தான் போனான்.

"டேய்.... போங்கடா.... அதெல்லாம் வேண்டாம்..." நகுல் பிடிவாதமாக மறுக்க, நவீனின் மனதுக்குள் முதல் முறையாக சந்தேக விதை விழுந்தது.

அனன்யாவுக்கும் அவர்கள் பேச்சு படபடப்பை அளித்தாலும், கேக்கை அவனுக்கு ஊட்ட, நண்பர்களோ.... "எங்க தங்கச்சியை பாத்து கத்துக்கடா..." அவனை கேலி செய்ய, நவீன், நகுலின் இடக்கரத்தை அழுத்தமாக பற்றினான்.

"ஊட்டுடா மச்சான்.... தேவையில்லாமல் சீன் கிரியேட் பண்ணாதே..." அடிக்குரலில் கடிந்துகொள்ள, அவ்வளவு பேர் முன்னிலையில் தன் மறுப்பு பெரிதாக விமர்சிக்கப்படும் என்பதால், அனன்யாவை தயக்கமாக ஏறிட்டான்.

அவன் கொடுத்த கேக்கை மறுக்காமல் உண்டவள், அவன் இதழ் தன் கன்னத்தில் பட்டும் படாமல் உரசி விலக, முதல் முறையாக அவள் தேகத்தில் ஒரு உணர்வு சட்டென பாய்ந்து சென்றதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

நண்பர்கள் கூட்டம்.., "ஓ..." என ஆரவாரக் குரல் எழுப்ப, பட்டென வெடித்த ஜிகினாப் பேப்பர்களின் மழையும், வெள்ளை ஸ்ப்ரேயின் அபிஷேகமும், நகுலின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

ஒரு வழியாக நண்பர்கள் கூட்டம் கலைய, "சரியான வானர கூட்டம்.... இப்படியா பண்ணுவானுங்க.... பாருங்க.., அண்ணியோட தலை, முகம்.... மொத்தமும் போச்சு..." வருணா தன் கைகுட்டையால், அவற்றை துடைத்து விட்டாள்.

அவளிடமிருந்து கர்ச்சீப்பை வாங்கியவன், "நான் துடைச்சு விடறேன். ரொம்ப நேரமா உக்காந்தே இருக்கற.... நீ ரூமுக்கு போடா..." தானே அவளுக்கு துடைத்து விட்டான்.

அதே நேரம்.... "சாரி.... என் ப்ரண்ட்ஸ் இப்படியெல்லாம் செய்வாங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. சாரி..." அவன் சின்னக் குரலில் உரைத்தாலும், அவன் அருகில் நின்ற நவீனுக்கு அது தெளிவாகவே கேட்டது.

அனன்யாவோ பதில் சொல்லாமல் அவனையே பார்த்திருக்க, அவனோ அவளைப் பாராமல் தன் செய்கையை தொடர்ந்து கொண்டிருந்தான். கூட்டம் குறைந்திருக்கவே, இருக்கையில் அவர்கள் அமர,

நவீனோ.... மேடையில் இருந்து இறங்கியவன், ‘எதுவோ சரியில்லை...’ அவனை பலமாக எண்ணத் தூண்டியது.

அடுத்த இரண்டு நாட்கள் இதே விதத்தில் கடக்க, மூன்றாம் நாள் காலையில், தன்னை வீட்டுக்கு அழைத்த நகுலின் அழைப்பில் குழம்பிபோய் அவன் வீட்டுக்கு வந்தான் நவீன்.

அங்கே அவனது பெற்றவர்களும், அனன்யாவும் இருக்க, "என்னடா மச்சான்.... ஏதோ அவசரம்னு கூப்ட்ட...?" கேட்டவன், அங்கே இருந்த தன் மனைவியைப் பார்க்க, அவளோ.., ‘எனக்குத் தெரியாது...’ என்பதுபோல் உதடு பிதுக்கி காண்பித்தாள்.

"உக்கார்டா..." உரைத்தவன், அவன் கையில் ஒரு ஃபயிலைக் கொடுக்க, அதை வாங்கியவன், அதில் பார்வையைச் செலுத்தினான். முழுதாக அதைப் படித்தவனது விழிகள் விரிய, "இப்போ இதுக்கு என்னடா அவசியம் வந்தது...?" அதிர்ச்சியாக கேட்டான்.

அவர்கள் இருவரும் துவங்கிய கம்பெனியை, நவீனின் பெயருக்கு மாற்றிய ஃபயில் தான் அது.

"நான் என் அப்பாவோட கம்பெனி பொறுப்பை ஏத்துகலாம்னு முடிவு பண்ணியிருக்கேன் நவீன். அதோட.... கம்பெனியில் இன்னொரு யூனிட் துவங்கும் ஐடியாவும் இருக்கு. அது ஹாஸ்பிடல் சம்பந்தப்பட்ட எக்கியூப்மெண்ட்ஸ் தயாரிக்கிறது தான்.

"அதற்காக நிறைய அலைய வேண்டியது.... பொருட்கள் வாங்க வேண்டியது..... ஆட்களை சந்திக்க வேண்டியதுன்னு எக்கச்சக்க வேலை இருக்கு. அதனால்.... என்னால் நம்ம கம்பெனியை சரிவர கவனிக்க முடியாது.

"அதான்.... பெயருக்கு நான் பாட்னரா இருக்குறதை விட, மொத்தமா அதை உன்கிட்டே கொடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன் அவ்வளவு தான்" அவனுக்கு புரிய வைக்க முயன்றான்.

"அதுக்கு நீ எதுக்குடா விலகணும்...? நீ ஸ்லீபிங் பாட்னராகவாவது இருக்கலாமே..." நவீனால் அவன் முடிவை ஏற்க முடியவில்லை.

"எனக்கு உன்மேல் முழு நம்பிக்கை இருக்கு நவீன். கடந்த ஒரு வருஷமா நீதான் கம்பெனியை பாத்துக்கற, அதையே லீகலா நான் உனக்கு கொடுத்திருக்கிறேன் அவ்வளவுதான். இதில் பெரிதாக நான் எதையும் செய்யலை..." அவன் உரைக்கவே, நவீன் நகுலின் பெற்றவர்களைப் பார்க்க, அவர்களுக்கும் விஷயம் இப்பொழுதுதான் தெரியும் என்பதை உணர்ந்து கொண்டான்.

அவர்கள் கம்பெனிக்காக வாங்கிய லோனையே போன மாதம்தான் கட்டி முடித்திருக்கிறார்கள். இனிமேல் வரும் லாபம்தான் அவர்கள் கைக்கு முழுதாக வரும், அப்படி இருக்கையில்.... கஷ்டப்படும்பொழுது உடனிருந்தவன், லாபத்தை சுவைக்காமல் போகிறானே என்பதுதான் அவனது கவலையாக இருந்தது.

"நீ சொல்வதை நான் கேட்கவேண்டும் என்றால்.... நான் சொல்வதை நீ ஏற்கவேண்டும். உனக்கு சம்மதமென்றால் இதை நான் வாங்கிக்கறேன்..." நவீன் உரைக்கவே, நகுல் தாயப் பார்க்க, அவர் விழி மூடி திறக்கவே, சரி என ஒத்துக் கொண்டான்.

நண்பனை ஆரத்தழுவி தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவன், "எல்லாம் சரி.... உன்னோட ப்ளானை என்கிட்டே நீ முன்னாடியே சொல்லவே இல்லையே..." நண்பனை கூர்மையாகப் பார்த்தான்.

‘நானே சட்டென எடுத்த முடிவு தானே இது...’, எண்ணியவன் வெளியே சொல்லவில்லை.

"முன்னாடியே யோசித்ததுதான்.... இன்னும் ரெண்டு வருஷம் போட்டும்னு நினைத்தேன். ஆனா.... திடீர்னு புது யோசனை வரவே, கம்பெனியை அடுத்த கட்டத்துக்கு

கொண்டு போக, இப்போவே இறங்கிடுவோம்னு நினைத்தேன் அவ்வளவு தான்..." அவன் சாதாரணமாக உரைத்தாலும், நவீனால் அதை ஏற்க முடியவில்லை.

சட்டென நினைவிற்கு வந்தவனாக.... "எப்போ சார்ஜ் எடுத்துக்கப் போற?" அவனையே ஆழம் பார்த்தான்.

"நாளைக்கே நல்ல நாள்ன்னா சார்ஜ் எடுத்துக்க வேண்டியது தான்..." அவன் உரைக்கவே, மொத்த குடும்பமும் திகைத்துபோய் அவனைப் பார்த்தது.

"என்னண்ணா சொல்ற..? நாளைக்கே போறியா? என்ன விளையாடுறியா? அண்ணியை கூட்டிட்டு ஹனிமூன் போக ப்ளான் போடுவன்னு பார்த்தால்.., என்னவோ கம்பெனிக்கு போறேன்னு சொல்ற.... என்னால் இதையெல்லாம் ஒத்துக்க முடியாது..." வேகமாக மறுத்தாள்.

"ஹனிமூனுக்கு இப்போ என்னம்மா அவசரம்.... நிதானமா போய்க்கலாம்..." அவன் மறுக்க...

"என்ன அவசரமா? அப்போ வயசானதுக்குப் பிறகு போகப் போறியா? உன் மனசில் நீ என்னதான் நினைச்சுட்டு இருக்க...?".

"நான் என்ன போகவே போறதில்லைன்னா சொன்னேன்? இப்போ வேண்டாம்னுதான் சொல்றேன். கம்பெனி விஷயமா மினிஸ்டரை வேற பாக்க வேண்டி இருக்கு. அதுக்கு அப்பாயின்மென்ட் வாங்கவே பத்து நாள் அலையணும்..." அவன் உரைக்க,

"அந்த வேலையை நான் பாத்துக்கறேன். நீ போயிட்டு வா..." அரசு இடை புகுந்தார்.

"இல்லப்பா.... புது கன்சயின்மென்ட்..." அவன் துவங்க,

"நகுல்.... அதையெல்லாம் உன் அப்பா பாத்துப்பார். நீ ஒரு மாசம் அனன்யாவோட எங்கேயாவது போயிட்டு வா.

அதுக்குப் பிறகு இந்த விஷயத்தைப் பத்தி பேசிக்கலாம்..." பார்வதி உரைக்க, எப்பொழுதுமே அவரிடம் மறுத்துப் பேசி பழகியிராதவன், உடனே ஒத்துகொள்ளத்தான் வேண்டி இருந்தது.

அனன்யாவின் முகம் பார்க்க, அவளோ.... எனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பதுபோல் அவனை பார்த்துக் கொண்டிருந்தாள். 'நான் இவளுக்காக பாத்தால்.... எப்படி நிக்கிறா பார்...' அவனுக்கு கோபமாக வந்தது.

"சரி போறேன். ஆனால்.... வெளி நாட்டுக்கு எல்லாம் போகலை. வேண்ணா நம்ம ஊட்டி பங்களாவுக்கு போயிட்டு, ஒரு பத்துநாள் இருந்துட்டு வரேன். சப்போஸ் இங்கே ஏதாவது அவசியம்னா.... நான் வரதுக்கும் வசதியா இருக்கும்.... இந்த ப்ளான்ட் ஆரம்பிச்சு சக்சஸ் ஆன பிறகு வேண்ணா.... வெளிநாடு போறேன்..." அவன் தீர்மானமாக உரைக்க, அதற்குமேல் அவனை யாரும் கட்டாயப்படுத்தவில்லை.

அவ்வளவு நேரம் இயல்பாக இருந்த அனன்யாவின் முகம், நொடியில் ஒரு கலவரத்துக்குள்ளானதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. சாதாரண இட மாற்றம், தண்ணீர் மாற்றம், மழை என்றாலே அவள் உடல்நிலை சில நேரம் ஒத்துழைக்காது.

இதில்.... ஊட்டி குளிர்.., அதுவும் நவம்பர் மாத குளிரில் தன் உடல்நிலை என்ன ஆகுமோ என்ற கவலை அவளை தொற்றிக் கொண்டது. வீசிங் அதன் உச்ச நிலையை எட்டினால்.... உடனடியாக மருத்துவமனைக்கு போயே ஆகவேண்டிய கட்டாயம் வந்தால்...? தன்னால் என்ன செய்ய முடியும்? கவலை அவளை தொற்றிக் கொண்டது.

அவள் முகத்தையே பாராமல் பார்த்தவன்.... 'அப்படியென்றால் இவளுக்கு என்மேல் நம்பிக்கையே இல்லையா? இவ்வளவு நாள் என்னோடு இயல்பாக

இருப்பதெல்லாம் சும்மாவா?’ அவன் மனம் வேதனை கொண்டது.

ஊட்டி குளிர் அவர்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா? குழப்பத்தை அதிகரிக்குமா?

18

ஊட்டிக்கு காரில் பயணப்பட்டுக் கொண்டிருந்த காரில் அமைதியே நிலைத்து இருந்தாலும், அதற்கு மாறாக அவள் மனமோ ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்தது.

அவனிடம் அமைதியாக அமர்ந்திருப்பதாக காட்டிக் கொண்டாலும், மனதுக்குள் பெரும் பிரளயமே மூண்டு இருந்தது. ஊட்டிக்குப் போகிறோம் என்பதில் துவங்கிய அவளது கலக்கம், நாட்கள் நெருங்க நெருங்க கூடியதே தவிர குறையவில்லை.

தாயிடம் தான் ஊட்டிக்குப் போவதாக உரைத்தபொழுது அவரும் சற்று கலங்கித்தான் போனார். மகளது உடல்நிலை பற்றி அவருக்கு நன்றாகத் தெரியுமே.

"அன்னம்.... மாப்பிள்ளை கிட்டே ஊட்டிக்கு வேண்டாம், வேற இடத்துக்கு போகலாம்னு சொல்லிப் பாரேன். கண்டிப்பா மாப்பிள்ளை ஒத்துப்பார். ஊட்டிக்கு போய் ஏதாவது பிரச்சனை ஆச்சுன்னா.... சம்மாளிக்கிறது ரொம்பவே கஷ்டம்..... முதல்ல மாப்பிள்ளை கிட்டே பேசு..." தன் மகளது தேனிலவுப் பயணம் சுகமாக முடிய வேண்டுமே என்ற கவலை மட்டுமே அவரிடம் இருந்தது.

தான் பேசினால் அவன் நிச்சயம் கேட்டுக் கொள்வான் என்பது அவளுக்குத் தெரியும்தான். ஆனால்.... இதுவோ ஒரு கண் துடைப்புப் பயணம், அப்படி இருக்கையில்.... என்னவோ வேறு இடத்துக்குபோய் தேனிலவு கொண்டாடலாம் என அவனை அழைப்பது அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது.

தாயிடம் உண்மை நிலவரத்தை உரைக்க முடியாமல், "அவங்களுக்கு ஊட்டிக்குதான் போகணுமாம்..." என்று, என்னவோ அவன் அங்கேதான் செல்லவேண்டும் என

கேட்டதுபோல் உரைக்க, அவரால் அதற்குமேல் எதையும் சொல்ல முடியவில்லை.

அவசர தேவைக்கென அவள் வைத்திருந்த 'பப்' விமான பயணத்தின்பொழுது நொறுங்கியிருக்க, புதியதாக ஒன்றை வாங்க அவளுக்கு சரியான சந்தர்ப்பமோ, தனிமையோ கிடைக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

அவனிடம் அதைப்பற்றி உரைக்கலாம் என்றாலோ.... தன் உடல்நிலையைப் பற்றி அவனிடம் விவாதிக்கும் அளவுக்கு தாங்கள் நெருங்க வில்லையென நினைத்து, அதை தவிர்த்து வந்தாள். முத்துலட்சுமிக்கோ.., எங்கே நோயாளிப் பெண்ணை தங்கள் தலையில் கட்டிவிட்டதாக அவர்கள் கருதி விடுவார்களோ என்ற பயம், மகளைப் பற்றிய உடல்நிலையை அவர்களிடம் மறைக்கத் தூண்டியது.

நகுலின் வீட்டினர் தங்களிடமும், அவளிடமும் பழகும் விதத்தை வைத்து, அவர்கள் அப்படி நினைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும், அவர்கள் தேனிலவு பயணத்தை, அவள் உடல்நிலையை காரணம் காட்டி, தாங்கள் மறுப்பதாகக் கருதிவிடக் கூடாதே என்ற எண்ணம் இப்பொழுது அவர் வாயை கட்டி வைத்தது.

அனன்யாவுக்கு ஒரு கட்டத்தில் அவனிடம் உடல்நிலையைப் பற்றி கோடியாவது காட்டிவிடுவோம் என எண்ணுகையில், இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் அவளது கொஞ்ச இளக்கத்தையும் அடியோடு துடைத்துப் போட்டிருந்தது.

அந்த சம்பவம் நினைவிற்கு வர, தன் அருகில் அமர்ந்து காரை ஓட்டிக் கொண்டிருந்த நகுலை ஓர விழியில் நிமிர்ந்து பார்த்தாள். அவனோ.... சாலையிலேயே கவனமாக இருப்பது அவளுக்குப் புரிந்தது.

'இவருக்கு எவ்வளவு கஷ்டத்தை நான் கொடுக்கின்றேன்...' எண்ணியவள் பெருமூச்சை வெளியிட, அவளிடம்

அசைவை உணர்ந்தவன், "உங்க அம்மா வீட்டுக்குப் போகணுமா அன்னம்...?" மென்மையாக வினவினான்.

"இல்ல.... ரிட்டன் வரும்போது வேண்ணா போய்க்கலாம்..." வேகமாக உரைத்தவள், வெளியே வேடிக்கை பார்க்கும் சாக்கில் திரும்பிக் கொண்டாள்.

மனமோ அன்றைய நாளில் சிக்கித் தவித்தது. அவர்களது வரவேற்பு முடிந்த இரண்டாம் நாள் காலையில் வேந்தன் அவளுக்கு அழைக்க, அவன் அழைப்பை ஏற்றவள், என்னவென்று கேட்க, "நம் வாழ்க்கையைப் பற்றி தீர்மானிக்க வேண்டும். உடனே கிளம்பி விஜயா மால் வா.." என அழைக்க ஒரு நிமிடம் குழம்பித்தான் போனாள்.

"என்ன விளையாடுறியா வேந்தன்.... என்னால் அதெல்லாம் முடியாது" அவள் மறுக்கவே,

"அப்படின்னா.., நான் கிளம்பி உன் வீட்டுக்கு வருகிறேன்.... எனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லை..." அவன் இளக்கமே இல்லாமல் உரைக்க, என்ன செய்வது என குழம்பித்தான் போனாள்.

அன்று ஏற்கனவே.., அவர்கள் ஊட்டிக்கு கிளம்புவதால், அவளுக்குத் தேவையான ஸ்வெட்டர், இன்னும் சில பொருட்கள் வாங்கவேண்டும் என அவர்கள் வெளியே செல்ல ப்ளான் போட்டிருக்க, இடையில் வந்த அவனது அழைப்பு அவளுக்கு திகைப்பையே அளித்தது.

முன்பாக இருந்தால் தன் பேச்சைக் கேட்டு உடனே அடங்கிவிடும் வேந்தன்.... இப்பொழுதெல்லாம் தன்னை பேசவே அனுமதிப்பதில்லை என்பதை உணர்ந்தவளுக்கு, தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை.

அவனது பேச்சு ஒருவித மிரட்டும் தொனிக்கு மாறியிருப்பதை கண்டுகொண்டவளுக்கு, அவனுக்கு இப்படி பேச நாம்தானே வாய்ப்பை வழங்குகிறோம் என்ற நினைவே தன்னிரக்கம் கொள்ளச் செய்தது.

அலைபேசியை வைத்துகொண்டு அவள் திகைப்பாய் அமர்ந்திருப்பதைப் பார்த்தவன், "என்ன ஆச்சு அன்னம்...? ஏன் ஒரு மாதிரி இருக்க? வேந்தன் போன் பண்ணானா...?" அவள் இப்படி இருக்க வேறு காரணம் இருக்க முடியாது என்பதை யூகித்தவனாக கேட்டான்.

ஆம் என தலையை அசைத்தவள், "என்னை விஜயா மால் வரச் சொன்னான். அதுவும்...." 'இப்போவே...' என்பதை அவள் தவிர்க்க, அன்று அவன் விட்டுச் சென்ற சவால் நகுலின் நினைவிற்கு வர, முகம் இறுகினாலும்,

"அதுக்கென்ன போய்ட்டா போச்சு. எப்படியும் நாம இப்போ வெளியே கிளம்பிட்டுதான் இருக்கோம். முதல்ல அவனைப் பாத்துட்டு, பிறகு நம்ம வேலையைப் பாத்துக்கலாம்..." அவன் என்னவோ நண்பனை பார்க்கப்போவதுபோல் சாதாரணமாக உரைக்க, அவளுக்குத்தான் ஒரு மாதிரியாக போயிற்று.

விஜயா மாலில் புட் கோட்டில் அவன் இருப்பதாக உரைக்க, அவ்வளவாக கூட்டம் இல்லாத அந்த புட் கோட்டுக்குள் நுழைந்தவள், நகுலை ஒட்டியவாறு நடந்தாள்.

ஒரு காதலனை காணப்போகும் ஆர்வமோ, ஆசையோ, எதிர்பார்ப்போ அவளிடம் இல்லாததைக் கண்ட நகுல், 'இவள் என்ன மனநிலையில் அவனைப் பார்க்க வந்திருக்கா?' அவன்தான் குழம்பிப் போனான்.

வேந்தன் இருந்த இருக்கைக்கு எதிராக இருந்த இருக்கையில் நகுல் அமர, அவனது பக்கத்து இருக்கையில் அமர்ந்தாள் அனன்யா. அவளது இந்த செய்கையில், நகுலின் மனம் சிறகில்லாமல் பறக்க, வேந்தனோ மனதுக்குள் பல்லைக் கடித்தான்.

நகுலின் கண்கள் அவனை பெருமிதத்தோடு ஏறிட, "அனு.... நான் உன்கிட்டே தனியா பேசணும்..." நகுலைப் பார்த்தவாறே அவன் உரைக்க, சட்டென இருக்கையில் இருந்து எழுந்து விட்டான்.

அவன் எழவே, அவன் கையைப் பிடித்து தடுத்தவள், "நீங்க உக்காருங்க. உனக்கு என்ன சொல்லணுமோ.... அதை இவர் முன்னாடியே சொல்..." தெளிவாக உரைத்தாள்.

அவள் செய்கையில் கோபம் கொண்டவன், "அனு.., நான் நம்ம ப்யூச்சர் பத்தி பேசத்தான் உன்னை வரச் சொன்னேன்..." கடித்த பற்களுக்கிடையில் வார்த்தையைத் துப்பினான்.

"நானும் அதை இல்லைன்னு மறுக்கலை வேந்தன். ஆனா.... நான் இப்போ இவரோட மனைவி. அதுவும் இது சென்னை சிட்டி.... இங்கே இவருக்குத் தெரிந்தவங்க ஆயிரம்பேர் இருப்பாங்க. எங்க திருமண வரவேற்புக்கு வந்தவங்க, நான் உன்னோட தனியா உக்காந்து பேசுவதைப் பார்த்தால்....

"நகுலோட மனைவி.., எவனோ ஒருத்தனோட தனியா உக்காந்து பேசிட்டு இருக்கான்னு நினைப்பாங்க. அது எனக்கும் அசிங்கம், அவருக்கும் தலை குனிவு. என்னால் அவருக்கு ஒரு தலைகுனிவு ஏற்படுவதை நான் அனுமதிக்க முடியாது.

"நீ விரும்பியோ விரும்பாமலோ.... என் வாழ்க்கையில் இவர் வந்துட்டார். இப்படி ஏற்படாமல் இருக்க, இதைத் தடுக்க உன்னால் முடிந்திருக்கும். ஆனால்.... நீ அதை செய்யலை. அப்படியிருக்கும்போது.... செய்யாத தப்புக்காக இவருக்கு என்னால் தண்டனை கொடுக்க முடியாது...

"இவர் இருக்கும்பொழுது உன்னால் பேச முடியும் என்றால் சொல்.... இல்லையென்றால்.... நான் இப்படியே கிளம்பறேன்..." அவள் அழுத்தம் திருத்தமாக உரைக்க, வேந்தனுக்கு மனதுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

"இப்போவே இப்படி பேசுறவ.... ஒரு வருஷம் கழித்து என்னிடம் வருவாய் என்பதற்கு என்ன கேரண்டி இருக்கு? அப்படியென்றால், உனக்கு ஒரு பணக்காரன் கிடைத்தவுடன், என்னை கை கழுவப் பார்க்கிறாய்

அப்படித்தானே..." நாகம் தன் விஷத்தை கக்கத் துவங்கியது.

நகுலின் முன்னால்.., அவன் இப்படி பேசுவான் என்பதை அறியாத அனன்யா தடுமாற, வேகமாக நகுலின் முகம் பார்த்தாள். அவனோ.., தன் கோபத்தை அடக்கிக்கொண்டு அமர்ந்திருப்பது அவளுக்குப் புரிந்தது.

"பாத்து பேசு வேந்தன்.... திருமணத்துக்கு முந்தினநாள் இரவு கூட, என் அப்பாவிடம் வந்து பேசு என நான் உன்னை அழைத்தேன். நீதான் உன் தங்கையின் திருமணம், எதிர்காலம் எனச் சொல்லி, என்னை தவிர்த்து விட்டு போனாய்..." கலங்கிய குரலில் உரைத்தாள்.

நகுலின் முன்னால் இதையெல்லாம் பேசவேண்டி இருக்கிறதே என தவித்துதான் போனாள். "என் சூழல் எல்லாம் தெரிந்து தானே என்னை காதலித்தாய். பிறகு என்ன? இப்போ என்ன.... நான் வாழ்க்கையில் செட்டிலாகி விட்டேன்.., என்னை தொல்லை செய்யாதே என சொல்லிவிட்டு போகத்தான் வந்தாயா?

"எனக்குத் தெரியும்.., இது இப்படித்தான் ஆகுமென்று எனக்கு அப்பொழுதே தெரியும். ஆனால்.... என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. நீ போ.... நான் என் முடிவை தேடிக் கொள்கிறேன். நீ மட்டும் நன்றாக வாழ்..." அவன் தனது பிரம்மாஸ்திரத்தை பயன்படுத்த, அவள் நிலை குலைந்து போனாள்.

"ப்ளீஸ் வேந்தன்.., இப்படி பேசாதே. நீ வேண்டாம்.... உன்னை கழட்டிவிட வேண்டுமென்று நான் நினைத்திருந்தால், இப்பொழுது இங்கே வந்திருக்கவே மாட்டேனே. நீ உன் கடமைகளை முடித்துவிட்டு வா. நிச்சயம் உனக்காக நான் காத்திருப்பேன்..." தன்னை மீறி உரைத்தே விட்டாள்.

இப்பொழுது வேந்தன் நகுலை மிதப்பான பார்வை பார்க்க, நகுலோ, கொஞ்சம் கூட அதை கண்டுகொள்ளவே இல்லை.

அதன் பிறகு அவர்கள் என்ன பேசினார்கள், முடிவெடுத்தார்கள் எதையும் அவன் கண்டுகொள்ளவே இல்லை. பேச்சு முடிந்தது என அவர்கள் எழுந்து கொள்ள, வேந்தனை திரும்பியும் பாராமல், அனன்யாவை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான்.

அன்றைய வேந்தனது பேச்சை இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும், நகுலுக்கு சிரிப்பாக வந்தது. அனன்யாவின்மேல் அவன் கொண்ட காதலுக்காக போராடுவதை விட, அவன் கண்களில் ஒளிந்திருந்த கயமையும், அவளை தக்கவைத்தே ஆக வேண்டும் என்ற அவனது போராட்டத்தையும் காண்கையில், இல்லாத ஒன்றுக்காக அவன் போராடுவதாகவே அவனுக்குத் தோன்றியது.

அவன் பேச்சில் தெறிக்கும் மிரட்டலை கண்டுகொண்டவனுக்கு, அப்படியே அவனை நாலு அறை விடவேண்டும் என்ற ஆத்திரம் வந்தது மட்டும் உண்மை. என்றாவது ஒரு நாள், அவனது சுயம் வெளிப்படும்பொழுது, அனன்யா அவனை திரும்பியும் பார்க்க மாட்டாள் என்பது அவனுக்கு உறுதி.

அதை நினைத்தவனுக்கு, மனமோ உல்லாசத்தில் நிறைந்து இருந்தது. அது அவனது காரை செலுத்தும் விதத்திலும் தெரிய, மௌனமாக விழி மூடிக் கொண்டாள். இடையில் எங்கேயோ கார் நிற்கும் ஓசையில் அவள் கண் விழிக்க, தன்னைச் சுற்றிலும் ஒரு மெல்லிய ஷால் பொதிந்திருப்பதைப் பார்த்தாள்.

அதை கையால் தொட்டுப் பார்த்தவள், கேள்வியாய் அவனை நோக்க, "குளிர்ல நீ கொஞ்சம் நடுங்கின மாதிரி இருந்தது. அதான்..." அவளுக்கு பதில் உரைத்தவன், காரை வேகமாக செலுத்தினான்.

ஊட்டியின் எல்லைக்கு நுழையும் முன்பாகவே குளிர் சற்று உடலில் ஊடுருவ, மழையோ விடாமல் பெய்து

கொண்டிருந்தது.

காரை ஓட்டிக் கொண்டிருந்தவன், "நல்ல நேரத்தில் வந்திருக்கோம் போல, மழை இப்படி கொட்டுது. இதில் எங்கே சுத்திப் பாக்குறது...?" சற்று கவலையாக உரைத்தான்.

அவனை திரும்பிப் பார்த்தவள், சற்று மூச்சு இழுத்து விட்டுக் கொண்டிருந்தாள். "நீ இதுக்கு முன்னாடி ஊட்டிக்கு வந்திருக்க தானே?" அவளிடம் கேள்வியாக இழுக்க, ‘இல்லை...’ என்பதுபோல் மறுப்பாக தலை அசைத்தாள்.

"என்ன.... இதோ இருக்க ஊட்டிக்கு உங்க வீட்டில் இருந்து நீ வந்ததில்லையா?" அவன் வினவ, தன் உடல்நிலை ஒத்துழைக்காத காரணத்தால், பெற்றவர்கள் ஊட்டி பக்கமே போக மாட்டார்கள் என்பதை அவனிடம் சொல்லாமல் அமைதியானாள்.

அவன், அவள் பதிலுக்காக அவள் முகம் பார்க்க, "ஊட்டி குளிர்ன்னா எனக்கு கொஞ்சம் பயம்.... அதனால் நான் அங்கே வர மாட்டேன்னு சொல்லிடுவேன். அண்ணா ஸ்கூல் டூர் போவான்..." தயங்கியவாறே உரைத்தாள்.

"ஓ.... குளிர்ன்னா பயம், சில்லுன்னு ஜூஸ் குடிக்க பிடிக்காது.... அப்போ உனக்கு இதெல்லாம் பிடிக்காது. ஓகே... ஆனா... நாங்க எல்லாம் வருஷத்துக்கு ரெண்டு தடவை இங்கே வந்துடுவோம். வருணாவோட மேரேஜுக்கு முன்னாடி கூட அவ, அவளோட ப்ரண்ட்ஸ் கூட இங்கே வந்து ஒரு வாரம் தங்கிட்டு வந்தா.

"அதுக்குப் பிறகு.... நாமதான் இப்போ போறோம். அங்கே நம்ம வீட்டை பாத்துக்க வேலாயுதமும் அவனோட வைஃப் பரிமளமும் இருக்காங்க. நல்ல சமைப்பாங்க.... அதுவும் நான்வெஜ் சமைச்சால் அப்படியே அள்ளிட்டு போகும். குளிருக்கு இதமா பெப்பர் அதிகம் போட்டு சமைப்பாங்களா.... சென்னைக்கு வந்தால் கூட அந்த

டெஸ்ட் நாக்கை விட்டு போக ரொம்ப நாளாகும்..." அவர்களைப் பற்றி சிலாகித்தான்.

அவள் அதற்கும் அமைதியாக வரவே.... "உனக்கு ஊட்டிக்கு வர இஷ்டமில்லையா? நானும் இந்த பேச்சு வந்த அன்னையில் இருந்து பாக்கறேன்.... நீ என்னவோ நெர்வஸா இருக்க மாதிரியே இருக்கு. இந்த ட்ரிப் மத்தவங்களை சமாதானப் படுத்தத்தான் என்பது நான் சொல்லி உனக்குத் தெரிய வேண்டியது இல்லை.

"நானும் இந்த பேச்சு வரக் கூடாதுன்னுதான்.... புதுசா வேலையைத் துவங்கப்போறதா சொல்லி, இதை தவிர்க்கப் பார்த்தேன். ஆனா.... என்னால் முடியலை. ரொம்ப மறுத்தா.... அவங்களுக்கு சந்தேகம் வந்துடக் கூடாதே என்ற கவலை வேற.

"கண்டிப்பா உன் மனசுக்குப் பிடிக்காத எதுவும் அங்கே நடக்காது. என்னை நீ நம்பலாம்..." நீண்ட விளக்கம் கொடுத்தான்.

அவன் விளக்கத்தில் பதறியவள், "நான் என்னை விட, உங்களை அதிகம் நம்பறேன். குளிர், எனக்கு பயம் என்பதால் தான் அமைதியா இருக்கிறேனே தவிர வேற ஒண்ணும் இல்லை".

"ம்.... இப்போ கூட ரொம்ப சில்லுன்னுதான் இருக்கு. சூடா டீ சாப்ட்டா நல்லா இருக்கும்ல்ல. இங்கே பக்கத்தில் ஒரு டீ ஸ்டாலில்.... அந்த தாத்தா ரொம்ப பிரம்மாதமா ஏலக்கா டீ போடுவார். குடிச்சுட்டு போகலாமா?" அவன் வினவ, அவளுக்கும் அப்பொழுது அது அவசியமாக இருக்கவே ஒத்துக் கொண்டாள்.

டீயைக் குடித்தவர்களது பயணம் தொடர, மழையோ வலுவாக பிடித்துக் கொண்டது. "ச்சே.... இந்த மழை ஏன் இப்படி படுத்துது.... நல்ல வேளை கிட்டே வந்துட்டோம்..." அடுத்த அரைமணி நேரத்தில், சுற்றிலும் மரத்தால் வேலி போட்ட வீட்டின் முன்னால் நின்று அவன் ஹாரன் அடிக்க,

ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் குடையோடு ஓடி வந்து கேட்டை திறந்து விட்டார்.

அவன் காரை போர்டிகோவில் நிறுத்த, கேட்டை பூட்டியவர், வேகமாக ஓடி வந்து அவனுக்கு கார் கதவைத் திறந்து விட்டார். "தம்பி.... வாங்க.... நல்லா இருக்கீங்களா?" அவனிடம் கேட்க, அவனும் அதையே அவரிடம் கேட்டான்.

பரிமளம் அனன்யாவின் பக்கம் கதவைத் திறந்தவள், "வாங்கம்மா.... வாங்கையா.... நல்ல வேளை நேரத்தோட வந்துட்டீங்க. மழை பிடிச்சுகிட்டதைப் பாத்து, மனுஷன் புலம்பிட்டே இருந்தார். எனக்கும் கவலையா போச்சு.

"பிரயாணமெல்லாம் சவுகர்யமா இருந்ததா? எதுவும் பிரச்சனை இல்லையே. டிரைவரை காரை ஓட்டி வர சொல்லியிருக்கலாமே.... களைப்பா தெரியறீங்க..." மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருந்தார்.

"அவகளே களைப்பா வந்திருக்காவ.... நீவேற வாசல்ல வச்சே வாயப் புடுங்கற.... முதல்ல சூடா எதையாச்சும் அவகளுக்கு குடிக்கக் கொடு.." மனைவியை விரட்டினார்.

"நான் ஒரு கிறுக்கச்சி.... வந்தவகளை வாசல்ல நிப்பாட்டியே பேசிகிட்டு இருக்கேன் பாருங்க. உள்ளார வாங்க..." அவள் அவர்களை அழைத்துச் செல்ல, வேலாயுதாமோ.... கார் டிக்கியில் இருந்து அவர்களது பெட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தார்.

"ஐயா மாடி ரூமில் ஹீட்டர் வேலை செய்யலை.... நீங்க கீழ ரூம்லயே இருந்துக்கோங்க..." லக்கேஜோடு வந்த வேலாயுதம் உரைக்க, சம்மதமாக தலை அசைத்தவன், அனன்யாவை அழைத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தான்.

ஊட்டி குளிர் உடலைத் துளைத்துகொண்டு அவளுக்குள் இறங்க, ஷாலை, தன்னைச் சுற்றி இறுக போர்த்திக்

கொண்டாள். அறை சற்று வெதுவெதுப்பாக இருந்தாலும், அது அவளுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

"அன்னம்.... கொஞ்சம் ப்ஃரஸ் ஆகிட்டு, ஸ்வெட்டர் போட்டுக்கோ. நீ ரொம்ப நடுங்கற..." அவன் உரைக்கவே, பாத்ரூமுக்குள் சென்றவள், வெந்நீரின் முகம் கழுவி, தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டவள் வெளியே வந்தாள்.

அவளுக்காக வாங்கிய ஸ்வெட்டரை அவளிடம் கொடுக்க, அணிந்திருந்த சுடிதாருக்கு மேலாக அதை அணிந்து கொண்டவளுக்கு, பெருத்த ஆறுதல். அவனும் ப்ஃரெஷ் ஆகி வெளியே வர, அறைக்கு வெளியே பரிமளத்தின் குரல் கேட்டது.

அவன் வெளியே வர, "ஐயா.... சூடா ஆட்டுக்கால் சூப் போட்டிருக்கேன். அதை ரூமுக்கே கொண்டு வரட்டுங்களா.... இல்ல..." அவன் முகம் பார்த்தாள்.

குளிர் தாங்காமல், காலையும் கையையும் கட்டிக்கொண்டு, சுருண்டுபோய் அமர்ந்திருந்த அனன்யாவின் நிலை, அவனுக்கு இரக்கத்தை வரவழைக்க, "நீங்க அதை இங்கேயே கொண்டு வந்துடுங்க..." அவன் உரைத்த மறு நிமிடம், சாப்பாட்டு மேஜைமேல் இருந்த டிரேயை அவனிடம் கொண்டுவந்து கொடுத்தார்.

அதை பெற்றுகொண்டவன், "எதுன்னாலும் நான் கூப்பிடுறேன்..." உரைத்தவன் அறைக்குள் சென்று, "அன்னம்.... முதல்ல சூடா இந்த சூப்பைக் குடி.... குளிருக்கு இதமாவும் இருக்கும், அதே நேரம் குளிரைத் தாங்கும் சக்தியும் கிடைக்கும்..." அவள் கையில் ஒரு கோப்பையைக் கொடுக்க, ஓர் வாய் குடித்தவளுக்கு, அவ்வளவு பெரிய ஆசுவாசம்.

அதே நேரம்.... அவளால் வாயைத் திறந்துதான் மூச்சு விடவே முடிந்தது. நெஞ்சுக்கூடு ஒரு மாதிரி ஏறி இறங்க,

வீசிங் அதன் வேலையை காட்டத் துவங்கிவிட்டதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அவள் சிரமப்படுவதை உணர்ந்துகொண்ட நகுலும், "அன்னம்.., ஆர் யூ ஓகே?" தன் கோப்பையை அங்கிருந்த டேபிள்மேல் வைத்துவிட்டு வந்து அவள் எதிரில் நின்றான்.

"குளிர் ஜாஸ்த்தியா இருக்குல்ல அதான்.... கொஞ்ச நேரத்தில் சரியாயிடும். நான் கொஞ்சம் படுத்துக்கவா?" அவனிடம் வினவ,

"படுக்கணும்னா படுத்துக்கோ. இதுக்கெல்லாமா என்கிட்டே பெர்மிஷன் கேக்குறது...?" அவள் படுத்துக் கொள்ளவே, போர்வையை அவளுக்கு போர்த்தியவன், சற்று நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், அங்கிருந்து விலகிச் சென்றான்.

அவன் விலகிச் சென்ற பிறகுதான் அவளால் இயல்பாக மூச்சு விடவே முடிந்தது. பயணக் களைப்பில் தன்னை மீறி உறங்கியவள், சட்டென விழிப்பு வர, கடிகாரத்தில் நேரம் பார்க்க, அது பத்து முப்பது எனக் காட்ட, பதறிபோய் எழுந்தாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், "ஏய் அன்னம்.... என்ன ஆச்சு...?" துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தவன் அவளிடம் விரைந்தான்.

"சாரி.... ரொம்ப நேரம் தூங்கிட்டேன்..." அவனிடம் மன்னிப்பை வேண்ட,

"இங்கே நாம ரிலாக்ஸ் பண்ணத்தான் வந்திருக்கோம். எந்தவிதமான அவசர வேலையும் இல்லை. சோ.... கூல்... இப்போ கொஞ்சம் பரவாயில்லையா? டின்னர் சாப்பிட போகலாமா? நாம சாப்ட்டு முடித்தால்தான் அவங்களும் சாப்ட்டு தூங்க போக முடியும்..." அவன் சொல்லவே, அவனோடு சென்றாள்.

மேஜைமேல் இருந்த சப்பாத்தியும், சிக்கன் குருமா, வறுவல் அவற்றைப் பார்த்த பிறகுதான் அவளுக்கும் பசிப்பதையே உணர்ந்து கொண்டாள். குளிருக்கு இதமாக, சற்று காரம் தூக்கலாக இருந்த உணவு, அவள் கண்களிலும், நாசியிலும் நீர் வர வைத்தாலும், அதை சுவைத்தே உண்டாள்.

அவள் மூச்சு வாங்குவதைப் பார்த்த பரிமளம், அவ்வளவு நேரம் தூரமாக நின்றவர், "அம்மாடி.... காரம் அதிகமா இருக்கா? மூச்சு வேற வாங்குற தாயி.... குளிர் ஒத்துக்கலையா...?" அவளிடம் பரிவாக வினவ, அவரிடம் மறைக்கத் தோன்றாமல் மெதுவாக தலை அசைத்தாள்.

"நான் நீலகிரித் தைலம் தரேன்.... அதை நல்ல சூடு பறக்க நெஞ்சிலேயும், கை, கால்ல எல்லாம் தடவிக்க.... காலையில் எல்லாம் சரியாப் போய்டும்..." உரைத்தவர், அவர்கள் உண்டு முடிக்கவே, பாத்திரங்களை ஒதுக்கியவர், பின்கட்டுக்குச் சென்று, அவர்களுக்காக ஒதுக்கியிருந்த அவுட்ஹவுசில் இருந்து அந்த தைலத்தை எடுத்து வந்து கொடுத்தார்.

மறுக்காமல் அதை பெற்றுக் கொண்டவள், தன்னிடம் அவசர தேவைக்கென இருந்த மாத்திரையை போட்டுக்கொண்டு படுத்துவிட்டாள். அவள் செய்கைகள் அனைத்தையும் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் விழுங்கியது என்ன மாத்திரை என்ற கேள்வி எழ அதை அப்போதைக்கு ஒதுக்கி வைத்தான்.

நள்ளிரவுக்கு மேல் அவளால் உறங்கவே முடியவில்லை. படுத்திருக்கையில் மூச்சு விடுவது மிகவும் சிரமமாக இருக்க, 'பஃப்' எடுத்தால் தான் இந்த சிரமத்தில் இருந்து விடுபட முடியும் என அவளுக்கு புரிந்து போனது.

படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவள், அவனது தூக்கம் கேட்டுவிடக் கூடாதே என மிகவும் மெதுவாக, தலையணையை சாய்த்துவிட்டு, பின்னுக்கு நகர்ந்து அதில்

சாய்ந்து அமர்ந்து கொண்டாள். வாய்வழியாக வேகமாக மூச்சு விட்டாள்.

ஆன வரைக்கும் தன்னை நிலை நிறுத்தியவள், ஒரு கட்டத்தில் மேலும் கொஞ்சம் திணறல் எடுக்க, இதற்குமேல் யோசிக்க எதுவுமில்லை என எண்ணியவள், தன் அருகில் படுத்திருந்த அவனை எழுப்பித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத்துக்கு தள்ளப்பட்டாள்.

19

அனன்யாவுக்கு அந்த நிலையில் என்ன செய்வது எனவே தெரியவில்லை. உடனடியாக ஏதாவது செய்தே ஆக வேண்டிய கட்டாயம். தன் தாய் இருந்திருந்தால், வேகமாக எதையாவது செய்திருப்பார் என எண்ணிய வேளையே.... தாயைத் தேடும் கன்றாக மனம் மாறிப் போனது.

அவனை எழுப்ப கை நீட்டியவள், 'அவன் எழுந்து மட்டும் என்ன செய்துவிடப் போகிறான்' என்ற எண்ணம் எழவே தன் நினைப்பை மாற்றிக் கொண்டாள்.

அவள் மூச்சுத் திணறலில் அவதிப்படும் வேளைகளில் தன்மேல் கோபம் கொள்ளும் வேந்தனை எண்ணிப் பார்த்தவளுக்கு, ஆண்கள் எல்லாம் இப்படித்தான் இருப்பார்களோ என சிந்தித்ததில் வியப்பேதும் இல்லைதான்.

அத்தோடு.... 'திருமணத்துக்கு முன்னாலேயே இதை சரி பண்ணிடு, மத்தவங்க முன்னாடி இப்படி மூச்சு வாங்கிட்டு இருக்குறது நல்லாவா இருக்கும்...' ஒரு நாள் அவள் மூச்சுக்கு திணறியபொழுது அவன் உரைத்தது, இந்த நேரம் நினைவிற்கு வந்து இம்சித்தது.

அதுவே மேலும் அவள் கரத்தை கட்டிப் போட்டது.

வெளியே மழை பேயாட்டம் போட்டுக் கொண்டிருப்பது, ஜன்னல் வழியாகத் தெறிக்கும் மின்னல் ஒளியில் அவளால் தெரிந்துகொள்ள முடிந்தது. கூடவே இடியின் ஓசையும் சேர்ந்துகொள்ள, அவற்றை கேட்டவாறு அமர்ந்திருந்தாள்.

பயணக் களைப்பில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும், அவளிடம் அசைவை உணர்ந்தவன் கண் விழித்துப் பார்க்க, விடி விளக்கின் ஒளியில், அவள் எழுந்து

அமர்ந்திருப்பதைப் பார்த்தவன், தன் அருகில் இருந்த அலங்கார விளக்கை சட்டென எரியவிட்டான்.

"அன்னம்.... என்ன ஆச்சு...? ரொம்ப குளிருதா என்ன? ரூம் ஹீட்டா தானே இருக்கு..." தானும் எழுந்து அமர்ந்தான்.

அவள் முகத்தை ஏறிட்டவனுக்கு, அப்பொழுதுதான் அந்த வித்தியாசம் தெரிந்தது. அவள் மூச்சு விட சற்று சிரமப்படுவதும், அவள் நெஞ்சுக்கூடு ஏறி இறங்குவதும் அவன் பார்வையில் விழ, கூடவே இரவில் அவள் விழுங்கிய மாத்திரையின் நினைவும் சேர்ந்துகொள்ள,

"அன்னம்.... என்ன பண்ணுது? மறைக்காமல் உண்மையைச் சொல்.... நீ சொன்னால்தான் என்னால் ஏதாவது செய்ய முடியும்..." சற்று படபடத்தான்.

அப்பொழுதும் அவளால் சொல்ல முடியவில்லை. தயக்கம் மேலிட அவனைப் பார்க்க, அவள் அமைதி அவனைக் கொல்ல, "என்கிட்டே சொல்ல உனக்கு இஷ்டமில்லையா? உனக்கு நான் யாரோ தானே..." விரக்தியாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

அவனது வார்த்தைகள் அவளை வதைக்க, "எனக்கு கொஞ்சம் வீசிங் ப்ராப்ளம் இருக்கு..." அவள் குரல் சிறுத்துபோய் ஒலித்தது.

அவள் வார்த்தைகள் அவனைத் தீண்டிய மறு நிமிடம்.... "என்ன...? வீசிங்.... ஓ மை காட்.... இப்போ மூச்சு விட சிரமமா இருக்கா? அதனால் தான் எழுந்து உக்காந்து இருக்கியா...? இதை ஏன் நீ என்கிட்டே முன்னாடியே சொல்லலை...? அப்போ நீ நைட் போட்ட டேப்ளட் அது தானா?" அவன் கேள்விக்கு, அவள் தலை மௌனமாய் அசைந்தது.

"அப்படியும் உனக்கு சிரமமா இருக்குன்னா.... 'இன்ஹெலர்' யூஸ் பண்ணுவியா? அது உன்கிட்டே இருக்கா...? எங்கே இருக்கு...?" படுக்கையில் இருந்து இறங்கியே விட்டான்.

அவனது கேள்விகளே.... இதற்குமுன் வீசிங் ஆட்கள் அவனுக்கு அறிமுகம் என்பதை அவளுக்கு உணர்த்த, மனதுக்குள் பெருத்த நிம்மதி.

"இன்ஹெலர்' யூஸ் பண்ணுவேன். ஆனா.... அது இப்போ என்கிட்டே இல்லை.... அதான்..." தலை கவிழ்ந்தாள்.

"அன்னம்.... உனக்கு இப்படி ஒரு ப்ராப்ளம் இருக்குன்னு சென்னையிலேயே சொல்லியிருந்தாலே.... என் வீட்டில் உள்ளவங்களே இங்கே வர அனுமதித்திருக்க மாட்டார்களே. அப்படி இருக்கும்போது..." தன் பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டான்.

தன் அலைபேசியில் தாய்க்கு அழைக்கலாம் என எண்ணி நேரம் பார்த்தவன், அது நள்ளிரவைக் கடந்து காட்டவே, அந்த நினைப்பை கைவிட்டான்.

அவளுக்கு இப்பொழுது தன் உதவிதான் தேவை என்பதை உணர்ந்தவன், "இரு கொஞ்சம் வெந்நீர் எடுத்துட்டு வரேன். பரிமளம் கொடுத்த தைலம் இருக்குமே.., அதை நெஞ்சில் நல்லா தடவிக்க.... நான் இப்போ வரேன்..." அறையை விட்டு அவசரமாக வெளியேறும் முன்பு கூட, ஹீட்டை இன்னும் கொஞ்சம் அதிகரித்துவிட்டே வெளியேற, அவன் அக்கறையில் நனைந்தாள்.

அவன் பரிமளத்தை எழுப்பப் போவதாகவே அவள் எண்ணினாள். ஆனால்.... அடுத்த பத்து நிமிடத்தில், கையில் வெந்நீரோடு அறைக்குள் வர, டம்ப்ளரில் ஊற்றி அதைக் கொடுக்க, வேகமாக அதை வாங்கிப் பருகினாள்.

அதை ஒரு மிடறு விழுங்கிய பிறகுதான்.... அது வெந்நீர் இல்லை, சுக்கு, மிளகு, கருப்பட்டி தட்டிப் போட்ட ப்ளாக் டீ என்பதை உணர்ந்தாள். அந்த நேரத்துக்கு அந்த நீர் அரு மருந்தாக இருந்தது.

அவளது தாய் போட்டுக் கொடுக்கும் அதே சுவை.... நிதானமாகப் பருகினாள். "பரிமளா.... அவங்களை

எழுப்பலையா?" அவன் தனக்குச் செய்வது ஒருவித சங்கடத்தை அவளுக்கு அளித்தது.

"இல்லம்மா.... அவங்களே பாவம் வயசானவங்க.... இந்த நேரம் அவங்களை எழுப்பினால் அது சரியா வராது..." உரைத்தவன்,

"தைலத்தை தடவிக்கச் சொன்னேனே.... செய்யலையா...?" அவன் கேட்க,

"கொஞ்சமா தடவிகிட்டேன்..." இரண்டு கைகளால் டம்ப்ளரை பற்றியவள், சற்று தினறி, மென்மையாக உரைத்தாள்.

"கொஞ்சமாவா..." கேட்டவன், "அதெல்லாம் வேலைக்கு ஆகாது நெஞ்சில் சூடுபறக்க தேச்சுக்கோ. அப்போதான் மூச்சு விட சுலபமா இருக்கும். சரி.... நான் வெளியே போய் ஏதாவது மெடிக்கல் திறந்திருக்கான்னு பாத்துட்டு வரேன்..." அவன் கிளம்பிச் செல்ல முயன்றான்.

‘தன் காதல் மனைவியாக மட்டுமே அவள் இருந்திருந்தால், அவளை இப்படியா கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன்? அவள் சிரமப்படுகிறாள் என்று தெரிந்த அந்த நொடியே.... அவள் வேதனையை குறைக்கும் விதத்தில் செயல்பட்டிருப்பேனே.... இப்படி என் கரத்தை கட்டி வைத்துவிடாளே...’, அந்த நேரமும் அவன் மனம் வேதனையாக எண்ணிக் கொண்டது.

அவன் வெளியே போகிறேன் எனச் சொல்லவே பதறிவிட்டாள். வெளியே மழையோ பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்க, நேரம் நள்ளிரவைக் கடந்து சென்றுகொண்டிருக்க, இந்த நேரம் அவனை வெளியே அனுப்புவதா?

எண்ணியவள்.... "இப்போ எங்கேயும் போக வேண்டாம். வெளியே மழை கொட்டுது..." அவனைத் தடுத்தாள்.

"என்ன விளையாடுறியா? இப்படியே போனால் என்ன ஆகும்னு உனக்குத் தெரியும் தானே..." அவளை கடிந்துகொண்டான்.

அவன் கேள்வியில் சட்டென அமைதியானாள். அவளுக்குத் தெரியாதா என்ன? இவ்வளவு நேரமாக அதை எண்ணித்தானே கலங்கிக் கொண்டிருந்தாள். ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு, "எனக்கு இப்போ கொஞ்சம் பரவாயில்லை.... காலையில் பாத்துக்கலாம்.." பிடிவாதமாக உரைத்தாள்.

"நான் போட்டுகொடுத்த தண்ணி ஜஸ்ட் ரிலாக்ஸ் வேண்ணா செய்யும். அது எப்படி உன் மூச்சு பிரச்சனையை சரியாக்கும்...?" இதற்கு முன், அவனது கல்லூரித் தோழன் ஒருவனுக்கு, சுற்றுலா சென்றிருந்தபொழுது, அவனது 'இன்ஹெலர்' தண்ணீரில் விழுந்து மிஸ் ஆகியிருக்க, அன்று இரவில் அவன் பட்ட துன்பமும், அந்த இரவில் மருத்துவமனைக்கு அவனைக் கொண்டு சென்ற நினைவும் இப்பொழுது எழ, நிஜமாகவே அதிகமாக பயந்துதான் போனான்.

அவள் அமைதி அவனை மேலும் பதட்டப்படுத்த, "கேக்குறதுக்கு பதில் சொல்லு அன்னம். எப்படி சரியாகும்...?" தன் பதட்டத்தை சற்று மறைத்தவாறு கேட்டான்.

"அது..... என்னால் படுக்கத்தான் முடியாது. படுத்தால்தான் ரொம்ப மூச்சு திணறும். அதே மாதிரி.., பதட்டப்பட்டால்தான் அதிகமாகும். இப்போ நான் ரிலாக்ஸ்டா தான் இருக்கேன்..." விட்டால், அவன் இப்பொழுதே வெளியே சென்றுவிடுவான் எனத் தோன்ற, வேகமாக உரைத்தாள்.

அவள் பேச்சைக் கேட்டவன், நம்ப முடியாத பார்வையை அவள்மேல் செலுத்தினான். அவன் பார்வையைத் தவிர்த்தவள், கையில் இருந்த கப்பிலே கவனமாக இருந்தாலும், அவள் தன்னை இயல்பாக காட்ட

முயல்வதையும், அவள் நெஞ்சுக்கூடு ஏறி இறங்குவதை, அவள் ஸ்வெட்டரையும் மீறி அவன் கண்டுகொண்டான்.

அவள் நெஞ்சை நீவிவிடும் வேட்கை அவனை ஆட்கொள்ள, அதை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

"உன் வாய்தான் இப்படிப் பேசுது. ஆனா..." அவன் வார்த்தையை நிறுத்த, வேகமாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் பார்வை பதிந்த இடத்தைப் பார்த்தவளுக்கு, நெஞ்சு மேலும் படபடக்க, அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்துகொண்டாள்.

நிச்சயம் அவன் பார்வையில் விரசம் இல்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. மாறாக.... பார்வையாலேயே தன் நிலையை அளவிட்டுவிடும் அவன் செய்கை.... தன் உடலே தனக்கு எதிரியாகிப் போனதை வேதனையாக உணர்ந்தாள்.

அவள் திரும்பிக் கொள்ளவே.... "தப்பா நினைத்து நான் பார்க்கலை அன்னம்...." குரல் நைந்து போனது.

"ஐயோ.... நான் அப்படி நினைக்கவே இல்லை.... உங்களோட ஒரே அறையில் ஒரு மாசமா இருக்கிறேன்.... எனக்கு உங்களைப் பற்றி தெரியாதா..." படபடத்தாள்.

அவள் உரைக்கவே.... "தேங்க்ஸ்..." உரைத்தவன், "ஒரு மாசமா நாம ரெண்டுபேரும் சேர்ந்தே இருக்கிறோம். உனக்கு சில்லுன்னு சாப்பிடப் பிடிக்காதுன்னு மட்டும்தான் நினைத்தேனே தவிர.... அதுக்குப் பின்னாடி இப்படி ஒரு காரணம் இருக்கும்னு எனக்குத் தெரியாமல் போயிட்டே.

"உன்னோட காதலை என்கிட்டே சொல்ல முடிந்தது.... ஆனா.... உன் உடல் நிலையை.... என்னை ஒரு நல்ல ப்ரண்டா நினைத்துக் கூட உன்னால் சொல்ல முடியலையா அன்னம்?" தன் இருக்கையை விட்டு எழுந்தவன், ஜன்னல் அருகே சென்று நின்றுகொண்டான். வேதனை அவன் நெஞ்சை அறுத்தது.

அவன் வேதனைப்படுவது பிடிக்காமல்.... "எனக்கு இப்படி ஒரு வியாதி இருக்குன்னு சொல்ல பயமா இருந்தது.... அதான்..." கையில் இருந்த கப்பை கீழே வைத்துவிட்டு, அவன் அருகில் சென்றாள்.

"உனக்கு என்ன எயிட்ஸா.... கேன்சரா.... சொல்ல பயமா இருக்க...?" அவள் தன்னிடம் மறைத்துவிட்டாளே என்ற கோபத்தில், வார்த்தைகள் அவனை மீறி வெளிவர, அவள் திகைத்த முகத்தைப் பார்த்தவன், "சாரிம்மா.... இது ஜஸ்ட் ஒரு சுவாசக் கோளாறு.... இதுக்குப்போய் இப்படி சொல்லிட்டியேன்னு கோபப்பட்டுட்டேன்...." தன்னிலை விளக்கமளித்தான்.

அவன் விளக்கத்தில்.... அவள் கண்கள் கலங்கியே விட்டது. 'இப்படி ஒரு புரிதல் கொண்ட கணவன் கிடைக்க நான் என்ன தவம் செய்தேன்.... ஆனால்.... இதை அனுபவிக்க விடாமல் செய்து விட்டாயே இறைவா...' அவள் கண்கள் இப்பொழுது கண்ணீரை வடித்தது.

அவள் கண்ணீர் அவன் நெஞ்சைச் சுட, "அன்னம்.... அதான் கோபத்தில் பேசிட்டேன்னு சொல்லிட்டேனே. சாரி..." உரைத்தவனுக்கு, அவளை நெஞ்சோடு அணைத்துக்கொள்ள, செல்கள் அனைத்தும் துடிக்க, அவளுக்கோ, அவன் நெஞ்சில் சாய்ந்துகொள்ள சொல்லி, மனம் உந்தியது.

'ஆனால்.... என்ன உரிமையில் அதைச் செய்ய முடியும்...?' அவள் மனம் கேள்வி கேட்க, தன் கையால் நெஞ்சை நீவிக் கொண்டாள்.

"என்னம்மா.... ரொம்ப கஷ்டமா இருக்கா...?" அவள் செய்கையைப் பார்த்து அவன் கேட்க, அவனிடம் மறைக்க மனமின்றி, ஆமென தலை அசைத்தாள்.

"ஐயோ.... இப்படி ஒரு சூழ்நிலையில்.... நான் என்ன செய்யட்டும்? இப்படி கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை

பாக்கத்தான்..." கையை வேகமாக சுவற்றில் குத்திக் கொண்டான்.

பதறிபோய் அவன் கையைப் பிடித்து தடுத்தவள், "இதில் உங்க தப்பு எதுவும் இல்லை. எல்லாம்.... என்னோட தப்புதான்.... நான்தான்.... எல்லாத்துக்கும் காரணம். நான் உங்ககிட்டே சொல்லியிருக்கணும்..." அவன் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

"சரி அதை விடு.... இப்படி வந்து உக்கார்..." அவளை படுக்கையில் சாய்வாக அமர்த்தியவன், தானும் அமர்ந்து கொண்டான்.

"இனிமேலாவது கஷ்டமா இருந்தா சொல்லிடு..." அவன் சொல்ல,

"ம்.... நீங்க படுத்துக்கோங்க..... என்னால் உங்க தூக்கமும் கெட்டுப் போச்சு..." வருத்தபட்டாள். அதே நேரம்.... குளிரோடு சேர்த்து, உடலும் சற்று நடுங்க, வாயைத் திறத்து ஆசுவாசமாக மூச்சுவிட்டுக் கொண்டாள்.

"ஒரு நாள் தூக்கம் கெட்டால் ஒண்ணும் ஆயிடாது..." உரைத்தவனுக்கு, அவளை தன் நெஞ்சில் சாய்த்துகொள்ளும் வேகம் எழுந்தது.

அவள் படும் கஷ்டத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "நாளைக்கு காலையில் சென்னைக்கு கிளம்பிடலாம். எல்லாரும் புரிஞ்சுப்பாங்க..." உரைத்தவனது முகத்தில், ஜன்னல் வழியாக தெறித்த மின்னலின் ஒளி, 'நாளை சென்னை செல்ல முடியுமா?' என்ற யோசனையை விதைக்கவே செய்தது.

அவளுக்கோ.... தான் பற்றியிருக்கும் அவன் கரத்தின் வழியாக பாய்ந்த அவன் கரத்தின் வெம்மை.... அப்படியே இழுத்து கழுத்தில் வைத்துக் கொண்டால்.... அந்த கதகதப்பு தனக்குள் பாயாதா...? அவள் எண்ணம் இப்படி இருக்க,

அவள் தன் கரத்தை பற்றியிருக்க, அது சில்லிட்டுப் போயிருந்த விதம்? அப்படியே அவள் கரத்தை தன் கரங்களுக்குள் பொதிந்துகொள்ளும் வேகத்தை விதைத்தது.

‘மொத்தமாக இப்படித்தான் சில்லிட்டு இருக்கிறாளா?’ சிந்தை தாறுமாறாக, தன் உடல் சூட்டை கூட அவளுக்கு அர்ப்பணித்துவிட அவன் வேட்கை அதிகரித்தது. ‘அவள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று, அவளை இழுத்து கைகளுக்குள் அடக்கிக் கொள்வோமா?’ அவள் கன்னம் தாங்கி.... தன் நெஞ்சுக்குள் புதைக்கும் வெறியை அவனால் அடக்கவே முடியவில்லை.

அதே நேரம்.... கிச்சனில் இருந்து ஏதோ சத்தம் வரவே.... "பரிமளம் வந்துட்டாங்கன்னு நினைக்கறேன்.... நீ இரு நான் பாக்கறேன்..." எழுந்து கிச்சன் சென்றான். எதில் இருந்தோ தப்பிக்கும் வேகம் அவனிடம். அவனது கரத்தின் வெம்மை அறுபட, அவன் விலகல் அனன்யாவை தவிக்க வைத்தது.

அவனை அந்த நேரம் அங்கே எதிர்பாராத பரிமளம், "என்னங்கையா.... இந்த நேரம்...? சூடா டீ குடிகறீங்களா...? இருங்க..." அவனுக்கு டீ தயாரிக்க முனைந்தார்.

"பரிமளம்.... அன்னத்துக்கு இந்த கிளைமேட் ஒத்துக்கலை.... நைட் கொஞ்சம் மூச்சுத் திணறல் வேற.... நாங்க இன்னைக்கு கிளம்பலாம்னு பாக்கறோம்.... வேலாயுதம் எங்கே?".

"என்னது.... புள்ளைக்கு மூச்சு திணறலா? நான் நேத்தே சந்தேகப்பட்டேன். அந்த தைலத்தை போட்டும் குறையலையா? வாங்க பாப்போம்..." அவனுக்கு முன்பாக நடந்தார்.

அவன் மேலே சொல்ல வருவதை அவள் கண்டுகொள்ளவே இல்லை. எனவே தானும் அவர் பின்பாகச் சென்றான்.

அங்கே அறைக்குள் அனன்யாவின் மூச்சுத்திணறல் கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தது. "என்ன தாயி.... இப்படி மூச்சு வாங்குது? முதல் வேலையா அவர்கிட்டே போனைபோட்டு நண்டு வாங்கிட்டு வரச் சொல்லி, சூப் வச்சுத்தரேன்.... அதை குடிச்சீங்கன்னா.... அடுத்த நொடியே சரியாப் போய்டும்..." தன் கணவருக்கு அழைக்கப் போனார்.

கணவனிடம் விஷயத்தை உரைத்தவர், முதலில் டீ போட்டு கொடுத்தார். இருவரும் ஒன்றாக அமர்ந்து குடிக்க, அங்கிருந்த அமைதியை கலைக்கும் தைரியம் அவனுக்கு இல்லை. "மழை இன்னும் விடவே இல்லையே...." மெதுவாகக் கேட்டாள்.

"ம்.... நானும் அதையேதான் யோசிச்சேன்.... வேலாயுதம் வரட்டும்.... கேட்டுட்டு கிளம்பலாம். அப்படியே.... நான் கொஞ்சம் வெளியே போய் மெடிக்கல்ல இருந்து மருந்து வாங்கிட்டு வரேன்..." அவன் கிளம்ப முயல்கையில், வேலாயுதம் வருவது தெரிந்தது.

"தம்பி, எங்கே கிளம்பிட்டீங்க? வெளியே ஒரே மழை, பெரிய நிலச்சரிவுன்னு பேசிக்கறாங்க. ஊருக்குள் வர ரோடு எல்லாம் துண்டாகி கிடக்குதாம். வெளியே இருந்து உள்ளேயோ.... உள்ளே இருந்து வெளியேயோ எந்த வண்டியும் போக முடியாதாம்..." தன் பாட்டுக்கு உரைத்தவர்,

"பரிமளம்.... இந்தா.... நீ கேட்ட நண்டு.... கூடவே மட்டனும், சிக்கனும் இருக்கு..." தன் மனைவியிடம் கையில் இருந்த பையைக் கொடுத்தார்.

"என்ன சொல்றீங்க வேலாயுதம்? அப்போ சென்னைக்கு போக முடியாதா?" அதிர்ச்சியானான்.

"வீட்டை விட்டு வெளியவே போக முடியாதுன்னு சொல்லிட்டு இருக்கேன்.... நீங்க சென்னைக்குப் போறதைப் பத்தி பேசறீங்களே தம்பி. எப்படியும் மூணு, நாலு நாள் ஆகும்.... கொட்டுற மழையில் மீட்பு பணி வேற

தாமதமாத்தான் ஆகும். போய் ரெஸ்ட் எடுங்க...." தன் வேலை முடிந்தது என கிளம்பிவிட்டார்.

‘என்ன செய்வது...?’ என்ற யோசனையோடு அவன் அறைக்கு வர, அவன் அலைபேசி ஒலியெழுப்பி அவனை கலைத்தது.

அதை ஆன் செய்தவன்.... "அம்மா..." அவன் குரல் கொடுக்கும் முன்பாகவே, "நகுல்.... என்னப்பா.... ஊட்டியில் ஒரே மழை, மண் சரிவு.... போக்குவரத்து ஸ்தம்பிப்புன்னு நியூஸ் ஓடிட்டு இருக்கு. நீங்க நல்லபடியா போய் சேர்ந்துட்டீங்க தானே. அங்கே ஒண்ணும் பிரச்சனை இல்லையே. மழையில் எங்கேயும் வெளியே போகாதீங்க. அனுவை பாத்துக்கோ. அவ எங்கே.... அவகிட்டே போனைக் கொடு..." அவனுக்கு பேச வாய்ப்பளிக்காமல் படபடத்தார்.

"அம்மா.... அம்மா.... கொஞ்சம் மூச்சு விடுங்க.... நாங்க நல்லபடியா வந்து சேர்ந்துட்டோம். நிலைமை சரியானதும், நாங்க கோயம்புத்தூர் போயிட்டு, அங்கே இருந்து ப்ளைட்ல வந்துடுறோம் ஓக்கேயா.... இருங்க அவகிட்டே கொடுக்கறேன்..." அலைபேசியை அவளிடம் கொடுக்க முயன்றான்.

அவளோ.... தன்னால் பேச முடியாது என கண்களால் கெஞ்ச, "அம்மா.... அவ தூங்கறா, எழுந்த உடனே பேசச் சொல்லவா...?" அவன் கேட்க, சரி எனச் சொல்லி வைத்துவிட்டார்.

"சாரி..." அவள் மெல்லியதாக முனக,

"இப்போ எதுக்கு சாரி.... விஷயம் தெரிஞ்சா அவங்க கவலைப்படுவாங்க, அதான் சொல்லலை.... உரைத்தவன்.... அவளை கவனிக்க, அவள் இன்னும் அதிகமாக தினறுவது அவனுக்குப் புரிந்தது.

மெடிக்கல் போகலாம் என்றால்.., காலை பத்து மணிக்கு முன்பாக, சற்று அருகில் இருக்கும் கடை திறக்காது என

உரைத்தவர், தூரத்துக் கடைக்கு அவன் இப்பொழுது செல்வது பாதுகாப்பானது இல்லை என உரைக்கவே, அதைக் கேட்காமல் செல்லக் கிளம்பிய அவனைப் போக, அவள் அனுமதிக்கவில்லை.

"அன்னம்.... நேரமாக ஆக.... உன்னோட மூச்சுத்திணறல் அதிகமாயிட்டே இருக்கு...." அவளுக்கு எதுவும் செய்ய முடியாத இயலாமை அவன் குரலில் வெளிப்பட்டது.

ஏனோ அறைக்குள் அமர்ந்து அவள் முகத்தைப் பார்த்துகொண்டு, கைகட்டிகொண்டு இருப்பது வேதனையாக இருக்க, ஹாலில் வந்து அமர்ந்துகொண்டான்.

கிச்சனுக்குள் வேலாயுதமும், பரிமளமும் ஏதோ பேசுவது தெரிந்தாலும், அதை கவனிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. அவன் நினைவு முழுவதும் அனன்யாவே நிறைந்து இருந்தாள். தனக்கு ஒரு விபத்து என்றபொழுது, பதைத்துபோய் ஓடிவந்து, தனக்கு உதவி செய்த அவள் முகம் நினைவில் வந்து இம்சித்தது.

‘இப்பொழுது அனைத்தும் சரியாக நடந்திருந்தால்.... இந்த நேரம் என்னவெல்லாம் செய்திருப்பேன்...?’ இந்த நினைப்பு அதிகரிப்பதை அவனால் தடுக்கவே முடியவில்லை.

"என்ன தம்பி.... இப்படியே இருந்தால் ஆச்சா? கட்டுன பொண்டாட்டிக்கு எதுன்னா.... நாமதான் பாக்கணும். அதான் பரிமளம் கொடுத்த தைலத்தை போட்டு விடுங்க.... சும்மா கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பாத்தா ஆச்சா?

"வாழ்க்கைன்னா இன்பம் மட்டுமில்லை.... துன்பமும் சேர்ந்துதான் இருக்கும். அதிலும் நாம அவங்களுக்கு துணை இருக்கணும். அதுவும் எம்புட்டு ஆசையா வந்திருக்கும், அதுக்கு உடம்பு சரியில்லன்னு சொன்ன உடனே.... இப்படி தள்ளி இருக்கீங்களே.... போங்க தம்பி..." அவர்கள் கவனித்தவரை, அவளுக்கு உடல்நிலை சரியில்லை என்னும்பொழுது, அவளுக்கு அரணாக இருக்க

வேண்டியவன், கையைக் கட்டிக்கொண்டு தொடக்கூட மறுத்தால்.... அவர்களும் வேறு என்ன நினைப்பார்கள்?

எங்கே தன் இன்பத்துக்கு இடையூறு ஏற்பட்டுவிட்டது என அவன் விலகி இருக்கிறானோ என எண்ணிவிட்டார்கள். அவர்களால் நேரடியாகச் சொல்ல முடியாமல், நாசூக்காக உரைத்துவிட்டார்.

‘அடப்பாவிங்களா.... எத்தனைபேர்டா கிளம்பி இருக்கீங்க? என் கையை கட்டி வைத்திருப்பதே அவதான் என்பதை நான் யாரிடம் போய் சொல்ல...?’ வேதனையாக எண்ணிக் கொண்டான். அதே நேரம்.... இதற்குமேல் இங்கே கைகட்டி அமர்ந்திருக்க முடியாது என எண்ணியவன், ‘அவளுக்கு நான் வில்லனாக ஆனாலும் பரவாயில்லை...’, தங்கள் அறைக்கு விரைந்தான்.

அனன்யாவும் அறைக்குள் தவித்துதான் போனாள். ஒருவித தனிமை உணர்வு அவளை ஆட்கொண்டது. நகுல் அவளுக்காக தவிப்பதையும், துடிப்பதையும் கண்டாலும்.... இன்னும் எதுவோ குறைவதுபோல்.... அது என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால்.... மேலும் எதையோ அவனிடம் மனம் எதிர்பார்த்து ஏங்கியது. ஒரு அரவணைப்பும்.... ஆறுதலும் வேண்டும் என்ற ஏக்கம் அவளை வாட்டி வதைத்தது. இப்படி தனக்குள் மருகுவதாலோ என்னவோ.... அவளால் அமைதியாக இருக்கவே முடியவில்லை.

20

அறைக்குள் நுழைந்த நகுலுக்கு, கட்டிலில் மூச்சுக்காக திணறிய அனன்யா பார்வையில் விழ, இதற்குமேல் யோசிக்க எதுவுமில்லை என எண்ணியவன், அறைக்கதவை சாற்றிவிட்டு அவளை நெருங்கினான்.

அவன் நெருங்கி வரவே, நீட்டியிருந்த காலை மடக்கியவள், அவனை கேள்வியாக ஏறிட்டாள். உணர்வுகளைத் தொலைத்த அவன் முகம் நெஞ்சைப் பிசைய, "என்னங்க...?" வார்த்தைகள் தடுமாறியது.

"பரிமளம் கொடுத்த தைலம் எங்கே...?" அவன் கேள்விக்கு, அவள் கைகள் தாமாகவே அதை எடுத்து அவன் கையில் கொடுத்தது.

"ஸ்வெட்டரை கழட்டு...." வெற்றிடமாக ஒலித்த அவன் குரல், அவன் வார்த்தைகளை விட, அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்படி ஒரு குரலை அவனிடம் இதுவரை அவள் கேட்டதில்லை. எனவே, திகைத்துப் போய் அவனை ஏறிட,

அவள் அதிர்ச்சியைக் கண்டவனுக்கு இதயத்தில் வலித்தாலும், "என்மேல் நம்பிக்கை இருக்கு தானே....?" இந்த கேள்விக்கு அவளின் பதிலாக, அவளது கைகள் ஸ்வெட்டரை கழட்டி இருந்தது.

"தள்ளி உக்கார்..." அவள் சற்று நகரவே, அவள் அருகில் அமர்ந்தவனுக்கு, தான் செய்யப்போவதை நினைத்து உடலும், மனமும் நடுங்கினாலும், அவள் இரவு உடையின் ஜிப்பை அவன் பாதியளவு இறக்க, ஒரு நொடி, அவள் மூச்சு நின்றுதான் போனது.

‘நானே தைலம் போட்டுகிட்டேன்....’ மனம் முனகியதை இதழ்கள் உதிர்க்கவில்லை. அதை உதிர்க்கும் தைரியமும் அவளிடம் இருக்கவில்லை.

அவனோ.... தன் உள்ளங்கையில் தைலத்தை ஊற்றியவன், அவள் நெஞ்சின்மேல் தடவ, மூச்சு விடவும் மறந்துபோய் அவனையே வெறித்தாள்.

அவனோ.... கடமையைச் செய்யும் ஒரு போர் வீரனாக, இலக்கு ஒன்றே குறியாக, அழுத்தமாக அவள் நெஞ்சை நீவினான். அதில் நிச்சயம், காமமோ, விரசமோ இருக்கவில்லை. மனதுக்குள் எழும் காதல் உணர்வை அடக்கியவனாக, கடமையே கண்ணாக இருந்தான்.

அவன் செய்கையால் ஏற்பட்ட வெம்மையா.... இல்லையென்றால் அவன் கரத்தின் வெம்மையா.... எதுவென்று அவளால் பிரித்தறிய முடியவில்லை, தேகம் முழுவதும் அனலாகிப் போன ஒரு உணர்வு.

அவன் செய்கையில்.... அவளுக்கு வெறுப்போ, அருவருப்போ, பிடித்தமின்மையோ எதுவும் எழவில்லை.... மாறாக, மனதுக்குள் சில்லென பரவும் அந்த உணர்வு எதனால் என்பது அவளுக்குப் புரியவும் இல்லை.

அவன் கைக்குமேல் தன் கையை பதிக்கச்சொல்லி உள்ளம் கெஞ்ச, அதைச் செய்ய முடியாமல், அவள் கரங்கள் இரண்டும் தன் அருகில் இருந்த தலையணையை அழுந்த பற்றிக் கொண்டன.

பார்வையோ.... அவனை விட்டு அகல மாட்டேன் என சண்டித்தனம் செய்தது. அவனோ.... சூடு பறக்க, அவள் நெஞ்சில் தைலத்தை தடவியவன், இன்னும் சற்று அவளை நெருங்கி, அவள் தோள் பற்றி, தன்மேல் சாய்த்தவன், அவள் கூந்தலை முன்னால் ஒதுக்கிவிட்டு, கழுத்தின் பின்புறம் ஆடையை சற்று இறக்கியவன், முதுகிலும், தைலத்தை தேய்த்தான்.

இதற்குமேல் தாங்க மாட்டேன் என எண்ணியவளாக, தன்னை நெருங்கியிருந்த அவன் தோள் வளைவில் தன் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

‘இவன் எப்பொழுதும் அனலாகத்தான் இருப்பானா...?’ அவன் தேகம் தன்மேல் உரசிய இடங்களில் எல்லாம் பரவும் வெம்மை அவளை இப்படித்தான் நினைக்கத் தூண்டியது.

‘இந்த குளிரிலும் அவனுக்கு வேர்க்கிறதா என்ன?’ அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்தவளின் முகத்தில் உணர்ந்த ஈரத்தின் பளபளப்பு அவளுக்கு அதைத்தான் உணர்த்தியது. இன்னும் அழுத்தமாக அவனுக்குள் புதைய முயன்றவளின் கரமோ, இப்பொழுது அவன் ஸ்வெட்டரை பற்றிக் கொண்டது.

அவனுக்கோ.... மலர்கொத்தை தழுவியிருக்கும் உணர்வு. தன் கழுத்தைச் சுட்ட அவள் மூச்சுக்காற்றின் வெம்மை, அவன் உறுதியை ஆட்டம் காணச் செய்தாலும், இந்த நேரம் தான் செய்யும் சிறு செய்கையும், மிகப்பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என அஞ்சியவனாக, மறந்தும் அவளை தழுவிக்கொள்ள முயலவில்லை.

அவள் முதுகிலும் தைலத்தை தடவி முடித்தவன், அவள் தோள் பற்றி தன்னை விட்டு அவளை அகற்றினான். அவளோ.... தாயின் இடுப்பை விட்டு வர மறுக்கும் குழந்தையின் செய்கையில், அவன் ஸ்வெட்டரை விட மறுக்க, அவள் கையை விலக்கிவிடும் தைரியமற்றவனாக, அமர்ந்திருந்தான்.

‘நீ சம்மதித்தால்.... வாழ்க்கை முழுமைக்கும் உன்னை என் நெஞ்சுக்குள் தாங்க நான் தயாராக இருக்கிறேன் அன்னம்..’ அவன் உள்ளத்தின் கதறல் அவளைத் தீண்ட அவன் அனுமதிக்கவில்லை. தன் கடமையே கண்ணாக, அவள் நைட்டியின் ஜிப்பை மூட, அந்த செய்கையில் கலைந்தவள், சட்டென தன் கரத்தை விலக்கிக் கொண்டாள்.

அவளுக்கோ.... இப்பொழுது மூச்சுத்திணறல் இருக்கிறதா...? இல்லையா...? என்னும் அளவு திகைத்துப் போயிருந்தாள். இப்பொழுது அவன் முகம் பார்க்கவே

அவள் அஞ்ச, அவள் இரு உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் தைலத்தை தேய்க்க, மறுக்கக் கூட தோன்றாமல் ஸ்தம்பித்திருந்தாள்.

"அன்னம்.., ஸ்வெட்டரை போட்டுக்கோ..." அவள் கையில் அதைக் கொடுக்க, பதுமைபோல் அவன் சொன்னதைச் செய்தாள்.

"இப்போ கொஞ்சம் பரவாயில்லையா....?" அவன் கேள்விக்கு என்ன பதில் சொல்ல எனத் தெரியாமல் விழித்தாள். அவன் கைகளுக்குள்ளாக புகுந்துகொள்ள வேண்டும்.., என்ற அவள் எண்ணம் பார்வையில் வழிந்தது.

அவனுக்கும் அதைச் செய்ய ஆசைதான்.... 'அதன் பிறகு...?' இந்த கேள்விக்கு இருவரிடமும் அந்த நேரம் பதில் இருக்கவில்லை.

"பரிமளம், நண்டு சூப் வைக்கிறதா சொன்னாங்க. நான் பாத்துட்டு வரேன்..." அந்த சூழ்நிலையை சம்மாளிக்க, அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அனன்யாவுக்கோ.... தன்னை நினைத்தே வெட்கமாக இருந்தது. 'தன்னைப்பற்றி அவன் என்ன நினைத்திருப்பான்? வேறு ஒருவனை காதலிக்கிறேன்.... ஒரு வருடத்தில் உன்னை விட்டு பிரிந்து சென்றுவிடுவேன்' என சொல்லிவிட்டு, அவனது பணிவிடைகளை மறுக்காமல் ஏற்பது என்றால்?' அவளுக்கு மேலே சிந்திக்கவே முடியவில்லை.

அதே நேரம்.... வேந்தனை தன் கையைக் கூட தொட அனுமதிக்காத தான்.... இன்று எப்படி நகுலை இவ்வளவு தூரம் அனுமதித்தோம் என்பதை ஒரு நொடி சிந்தித்திருந்தால் கூட, நகுலின்மேல் தான் கொண்டிருக்கும், நம்பிக்கையையும், மெல்லிய நேசத்தையும் அவள் இனம் கண்டிருப்பாள்.

அவளோ.... அதைப்பற்றி சிந்திக்காமல், நகுல் என்ன நினைப்பான் என்பதிலேயே சுழன்றதால், அவளால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை. அவள் சிந்தையின் தாக்கம், அவள் உடல்நிலையில் வெளிப்படத் துவங்கியது.

அவள் தனக்குள் உழன்று கொண்டிருக்க, கையில் சூப்போடு வந்தவன், அதை அவள் கையில் கொடுத்துவிட்டு, "நான் மெடிக்கல் வரைக்கும் போயிட்டு வரேன்.... இப்போ போனால் சரியா இருக்கும்..." அவன் உரைக்கவே,

"உங்களுக்கு..." அவள் சூப்பைக் காட்ட, "எனக்கு நண்டு பிடிக்காது.... நீ குடி..." தன் பர்ஸை, கார் கீயை எடுத்துக் கொண்டான்.

"வெளியே மழை கொட்டிட்டு இருக்கே..." தன் குழப்பத்தை ஒதுக்கிவிட்டு கேட்டாள்.

"நான் என்ன நடந்தா போறேன்.... கார்ல தானே.... பாத்துக்கலாம். நீ ரூமை விட்டு வெளியே போகாதே.... நான் வந்துடறேன்..." அங்கிருந்து வெளியேறினான்.

வெளியே மழையின் தாக்கம் குறையாமல் இருக்க, காரை எடுத்துகொண்டு கிளம்பிய நகுலுக்கு அதைச் செலுத்துவது சற்று கடினமாகத்தான் இருந்தது. சாலை வேறு மேடு பள்ளமாக இருக்க, நிதானமாகவே வண்டியைச் செலுத்தினான்.

சற்று அருகில் இருந்த மெடிக்கல் திறக்கப்படாமல் இருக்க, இவ்வளவு தூரம் வந்துவிட்டு, திரும்பிச் செல்வது அவனுக்கு முடியாத செயலாகவே இருந்தது. அதிலும்.., அனன்யா படும் கஷ்டத்தை இன்னும் ஒரு இரவு அவனால் தாங்க முடியாது எனத் தோன்றவே, காரை செலுத்தினான்.

எதிர்பாராத வளைவுகள், திருப்பங்கள் அத்தோடு மழையும் சேர்ந்து கொள்ள, 'வைபர்'ரை முழு வேகத்தில் வைத்தாலும், அவனால் சாலையை துல்லியமாக கணிக்க

முடியவில்லை. நேரமோ கடந்து கொண்டிருக்க, அவன் தேடிச்சென்ற மெடிக்கல் அனைத்தும் மழையின் காரணமாகவோ என்னவோ.... மூடியே இருந்தது.

வழியில் சந்தித்த ஆட்களிடம் விசாரித்து, ஒரு வழியாக அவன் மெடிக்கலை கண்டு பிடிக்கையில் இரண்டுமணி நேரங்கள் கடந்திருந்தது. அந்த கடைக்காரனோ.... மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் மருந்து கொடுக்க மாட்டேன் என மறுக்க, சோர்ந்தே போனான்.

"சார்.... நீங்க கேக்குறது நியாயம்தான்.... வந்த இடத்தில் எமர்ஜென்சிக்கு எனக்கு வேற வழி இல்லை. அங்கே என் மனைவி மூச்சு விட முடியாமல் தவிச்சுட்டு இருக்கா. ப்ளீஸ் கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்க..." தன்மையாகவே கேட்டான்.

"எமர்ஜென்சி, வந்த இடம்.... எல்லாம் சரிதான் சார்.... ஊட்டிக்கு வரவங்க அத்தியாவசிய மருந்து கூடவா எடுக்காம வருவீங்க. அப்படியே காலியானால் கூட, அந்த பாட்டிலை காட்டுங்க, நான் மருந்து தரேன்.... சும்மா எல்லாம் கொடுக்க முடியாது சார்.

"இப்போ நான் பரிதாபப்பட்டு கொடுத்துட்டு, பின்னாடி ஏதாவது பிரச்சனைன்னு வந்தால்.... என் தலைதான் உருளும்.... நீங்க கிளம்புங்க..." நியாயமான கடைக்காரன்.... பிடிவாதமாக மறுத்தான்.

"சார்.... நான் வேண்ணா என் அட்ரஸ்.... போன் நம்பர் எல்லாம் தரேன். இது என்னோட கார்ட்.... இதை வேண்ணா வச்சுகோங்க. மருந்து இல்லாமல் என்னால் வீட்டுக்கு போக முடியாது.... நேத்து நைட் என் வைஃப் ஒரு பொட்டு கூட தூங்கலை.... ப்ளீஸ் புரிஞ்சுகோங்க..." கிட்டத்தட்ட கெஞ்சினான்.

அதற்குமேல் அந்த கடைக்காரனால் மருந்து கொடுக்காமல் இருக்க முடியவில்லை. அவன் கொடுத்த மருந்தை ஆயிரம் நன்றிகள் சொல்லி பெற்றுகொண்டவன் விரைய,

"என்னண்ணே.... சீட்டு இல்லாமல் யாருக்கும் மருந்து கொடுக்க மாட்டீங்க.... இப்போ என்னன்னா கொடுத்துட்டீங்க..." கடையில் இருந்த பையன் கேட்க,

"இவனைப் பார்த்தால் தப்பு காரியத்துக்கு கேக்குற மாதிரி இல்லை.... அதைவிட, அவன் கண்ணில் உண்மையான தவிப்பு தெரிஞ்சுது அதான்..." உரைத்தவன், "அதுக்காக.... நீ யாருக்கும் சீட்டு இல்லாமல் மருந்து கொடுத்துடாதே புரியுதா...?" அவன் கோபம் காட்ட,

"இல்லண்ணே.... நான் அப்படிச் செய்வேனா...?" கேட்டவன், வந்த வாடிக்கையாளரை கவனிக்க விரைந்தான்.

நேரம் அதன் பாட்டுக்கு விரைய, அனன்யாவுக்கோ நேரம் செல்லச் செல்ல அறைக்குள் இருக்கவே முடியவில்லை. கிட்டத்தட்ட நான்கு மணி நேரங்கள் என்றால்.... அவளும் வேறு என்னதான் செய்வாள்?

பரிமளமோ.., "தம்பிகிட்டே வெளியே போகாதீங்கன்னு சொன்ன பிறகும் கேக்கவே இல்லையே. கண்ணே முழிக்க முடியாமல் மழை பெய்தால், ரோட் எது? பள்ளம் எதுன்னு தெரியுமா என்ன?" அவள் புலம்ப,

"இந்தா.... இப்போ வாய மூடப்போறியா இல்லையா? அதெல்லாம் தம்பி பாத்து வந்துடும். நீ வேற கிளறாமல் கிளம்பு.... கிச்சன்ல வேலை எதுவும் இல்லையா...?" மனைவியை கடிந்து கொண்டான்.

ஏற்கனவே அனன்யா வாசலுக்கும்.... கூடத்துக்கும் நடையாய் நடக்கிறாள்.... அவள் முகத்தின் பீதியை விட, அவள் வாங்கும் மூச்சு அவனை கலவரப்படுத்திக் கொண்டிருக்க, பரிமளம் மேலும் அவள் பொறுமையை சோதித்தால்.... அவனும் வேறு என்னதான் செய்வான்?

பரிமளத்தின் வார்த்தைகள் அனன்யாவை மேலும் கலவரப்படுத்த, "ஐயா.... அவர் கிட்ட தானே போறேன்னு சொன்னாங்க.... இப்போ இவ்வளவு நேரமாச்சே.... போன்

போட்டாலும் போக மாட்டேங்குது..." விட்டால் அழுது விடுபவள்போல் இருந்தாள்.

நினைவுகளோ.... ஏதாவது விபரீதமாக ஆகி இருக்குமோ? விபத்தோ...' சிந்திக்கையிலேயே.... தேகம் முழுவதும் உதறியது. அதுவே அவளை மேலும் திணறச் செய்ய...

"மழைக்கு சில நேரம் செல்போன் வேலை செய்யாதும்மா..." உரைத்தவர் அவளைப் பார்க்க, அலைபேசியை நோண்டியவாறு நிற்க முடியாமல் அங்கே இருந்த சோபாவில் அமர்ந்து விட்டாள்.

"அம்மாடி.... கொஞ்சம் பொறுமையா இரும்மா.... தம்பி தூரத்துக் கடைக்கு போயிருக்குமா இருக்கும். நான் வேண்ணா போய் பாக்கவா?" அவர் கேட்க,

"ஐ..யோ வேண்டாம்.... அ...வர் வரட்டும்..." இப்பொழுது அவளுக்கு மூச்சு அதிகமாகத் திணறியது.

அவள் திணறுவதைப் பார்த்தவர்.... "பரிமளா..... இங்கே கொஞ்சம் வேகமா வா..." அவர் குரல் கொடுக்கவே, வேகமாக வந்தாள்.

"என்னங்க..." கேட்டவள்.... அனன்யாவைப் பார்த்து பதறித்தான் போனாள்.

"அம்மாடியோ.... மூச்சு இப்படி வாங்குதே... இப்போ என்ன செய்ய? தம்பி வேற இல்லை..." அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"எ..ன..க்கு ஒண்ணு..மில்லை...." திணறியவள், அவ்வளவு நேரமாக முயற்சித்துக் கொண்டிருந்த அலைபேசி இணைப்பு கிடைக்கவே, "என்..னங்க.... எங்..கே இருக்கீங்க? உங்களுக்கு ஒண்ணும் இல்லையே.... சொல்லுங்க..." முயன்று சற்று சரியாகப் பேச, அதற்குள்ளாக இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

"என்னங்க..." துண்டித்த இணைப்பில் கத்திக் கொண்டிருந்தாள்.

"அம்மாடி.., கொஞ்சம் நிதானமா இரும்மா.... இந்தா பரிமளம்.., கொஞ்சம் சுடுதண்ணி கொண்டா..." வயதானவர் நிலைமையை சம்மாளிக்க முயன்றார்.

அவள் அழைப்பு வந்த நிமிடம்.... நகுலின் கவனம் சற்று சிதற.... கையில் தடுமாறிய அவன் கார்.... சாலையில் இருந்து விலகிச் செல்ல, சட்டென சுதாரித்து அவன் பிரேக்கை அழுத்தினாலும், கார் சேற்றில் சிக்கிக் கொண்டது.

"அன்னம்.... நான் வந்துட்டே இருக்கேன்..." அவன் பதிலை கேட்க அவள் அங்கே இல்லை. அவள் குரலில் இருந்த பரிதவிப்பை கண்டு கொண்டவனுக்கு, அவளது தவிப்பு சரியாய் புரிந்தது. தனக்கு ஏதோ என அவள் பதறுவது புரிய, காரைக் கிளப்ப முயன்றான். அதுவோ சண்டித்தனம் செய்தது.

"ச்சே..." ஸ்டியரிங்கில் ஓங்கி குத்தியவன், ஆன மட்டும் முயன்று பார்த்தான். காரின் டயர் மேலும் சிக்கிக் கொண்டதே தவிர, ஒரு அடி கூட முன்னேறவில்லை.

அதற்குமேல் அங்கே அவனால் தாமதிக்க முடியவில்லை. வழியில் ஏதாவது வாகனம் வருகிறதா எனப் பார்க்க, மழையின் காரணமாக ரோடே வெறிச்சோடி இருந்தது.

அவசரத்தில் குடை கூட எடுத்துவர மறந்த தன் மடத்தனத்தை எண்ணி நொந்துகொண்டான். ஊசியாய் இறங்கிய குளிரையும், கொட்டிய மழையையும் பொருட்படுத்தாமல், காரை லாக் செய்தவன் இறங்கி நடந்தான்.

ஒரு கட்டத்தில் ஓடவே துவங்கி விட்டான். அனன்யாவின் நினைப்பே, அவன் கால்களுக்கு வேகத்தை அளிக்க.... ஓட்டம் கூடியதே தவிர குறையவில்லை.

அனன்யாவுக்கு மூச்சுத்திணறல் உச்சகட்டத்தை அடைந்த நேரம்.... நகுல் வீட்டு வாசலை மிதித்திருந்தான்.

அங்கே இருந்த நிலைமையைப் பார்த்தவன், "அன்னம்..." அழைக்க, அவன் குரலைக் கேட்டவள், இருக்கையில் இருந்து எழுந்து ஓடியவள், அவனைத் தாவி அணைக்க முயன்றாள்.

அவள் என்ன செய்யப்போகிறாள் என்பதை உணர்ந்தவன், தன் ஈரம் பட்டால், அவளுக்கு நல்லதில்லை என உணர்ந்தவனாக, சட்டென அவளைத் தடுத்தவன், "முதல்ல இதை யூஸ் பண்ணு..." அவளிடம் மருந்தைக் கொடுத்தான்.

"நீ...ங்...க.... நனை...ஞ்சு..." அவள் திணற,

"ம்ச்.... ஈரம் தானே.... சரியாப் போய்டும். நீ முதல்ல இன்ஹெயிலர் போட்டுக்கோ..." அவன் குரல் உயர்த்தவே.... நடுங்கும் கரத்தால், அதைப் பற்றியவள், வாயில் வைத்து மருந்தை அழுத்தியவள், வாய் வழியாக அதை சுவாசிக்க, சட்டென அவளிடம் ஒரு மாறுதல்.... அவள் சுவாசம் சீராகத் துவங்கியது.

அதன் பிறகே அவனுக்கு தன் தேகம் முழுவதும் சில்லிட்டு, விரைத்துப் போகும் நிலையில் இருப்பதே உறைத்தது. "தம்பி.... ஊட்டி குளிரில், கொட்டுற மழையில் இப்படி நனைஞ்சு இருக்கீங்க...? முதல்ல போய் ட்ரெஸ் மாத்துங்க..." அவர் உரைக்கவே, அறைக்குள் நுழைந்தவன், ஆடைகளை களைந்துவிட்டு, ஹீட்டரின் உதவியால் சுடு நீரின் அடியில் நின்றான்.

ஆனாலும் அவனது குளிர் அடங்கிய பாடாகத் தெரியவில்லை. விரல் நுனியில் உணர்ச்சியே இல்லாத தன்மை..... வேகமாக மடக்கி நிமிர்த்தவன், விரைவாக குளித்துவிட்டு, அங்கிருந்த டவ்வலை கட்டிக்கொண்டு வெளியேறினான்.

அவன் உடைகளை அனன்யா தயாராக வைத்திருக்க, அணிந்து கொண்டவனுக்கு, குளிர் மட்டும் அடங்கவே இல்லை. வெளியே மழையில் செல்வதால்.... தன்னிடமிருந்த இரண்டு ஸ்வெட்டரையும் அவன் அணிந்து சென்றிருக்க, அனைத்தும் ஈரமாகிப் போனது.

அனன்யா சற்று முன்புதான் தன் ஸ்வெட்டரில் தண்ணீரைக் கொட்டிவிட்டு, அதை களைந்துவிட்டு, மற்றதைப் போட்டிருந்தாள். எனவே அவளிடம் வேறு ஸ்வெட்டரும் இருக்கவில்லை. அந்த குளிருக்கு ஸ்வெட்டர் இல்லாமல் இருப்பது மரண அவஸ்தை என்பது அவளுக்குப் புரிந்தது.

அவன் குளிரில் நடுங்குவதைக் கண்ட அனன்யாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ‘எல்லாம் என்னால் தானே...’ எண்ணியவள், அதை அவனிடம் உரைக்க,

"நீயா காரை சேத்தில் சிக்க வச்ச...? விடு.... கொஞ்ச நேரத்தில் சரியாயிடும்..." உரைத்தாலும், அவன் தாடை வெடவெடவென நடுங்கியது.

பரிமளம் சூடாக சூப் கொண்டு வர, அந்த கப்பை பற்றிகொள்ளக் கூட அவனால் முடியவில்லை. அதை பட்டென வாங்கியவள், அவனுக்குப் புகட்ட, "ஸ்.. ஆ..." சூடான சூப் அவன் நாவை சுட்டுவிட சன்னமாக அலறினான்.

"ஹையோ..... சுட்டுடுச்சா...?" பதறியவள், கப்பை டீபாயின்மேல் வைத்தாள்.

அவனோ.... குளிரைக் குறைக்க, தன் இரு கைகளையும் மடக்கி, கக்கத்தில் அதக்கிக் கொள்ள, அனன்யா அதற்குமேல் எதையும் யோசிக்கவில்லை. அவன் கை பற்றி அழைத்துச் சென்றவள், படுக்கையில் போர்வைக்குள் அவனைத் தள்ளி, தானும் போர்வைக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் செய்கையை மறுக்க அவனுக்கு ஒரு நொடி ஆகாது.... ஆனால்.... தன் செய்கை அவளை காயப்படுத்திவிட்டால்.... எனவே அவன் அமைதியாக, அவனைத் தன் நெஞ்சில் புதைத்தவள், தன் தேகச் சூட்டை அவனுக்கு பரிசளித்தாள்.

"அன்னம்.... உனக்கு கஷ்டமா..." அவன் எதையோ சொல்லத் துவங்கவே,

"காலையில் நீங்க செஞ்ச எதுக்காவது நான் மறுப்பு சொன்னேனா...? நீங்க மட்டும் ஏன்...?" தன் கரத்தால் அவனை மேலும் இறுக்க, இப்பொழுது அவனது கரமும் அவளை இடையோடு சுற்றி வளைத்துக் கொண்டது.

21

சென்னையிலோ.... தன்னை துளைக்கும் பார்வையில் ஏறிட்டுக் கொண்டு இருந்த பார்வதியின் முன்னால், வெடவெடத்துபோய் அமர்ந்திருந்தான் நவீன்.

"சொல்லு நவீன்.... நான் கேட்டதுக்கு இப்படி அமைதியா இருந்தால் என்ன அர்த்தம்? பதில் சொல்..." கோபமாகவே கேட்டார்.

"என்ன கேட்டீங்க...?" தன் நடுக்கத்தை மறைத்துக்கொண்டு தைரியமாகவே கேட்டான்.

"எப்போ இருந்துப்பா உனக்கு காது கேக்காம போச்சு...?" அவர் கேள்வியே, இன்று நீ பதில் சொல்லியே ஆகவேண்டும் என உணர்த்தியது.

"இல்லம்மா.... நானும் நகுலும் தனியா பேசுவது என்ன புதுசா? திடீர்ன்னு கேட்டீங்களே அதான்..." மென்று முழுங்கினான்.

"நீங்க எப்பவும்போல் பேசியிருந்தால் நான் கேட்டிருக்க மாட்டேன் என்பது உனக்கும் தெரியும்..." அவர் வார்த்தையில் காரம் கூடியது.

இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் தடுமாறியவன், அன்று நகுலிடம் பேசியதை அசை போட்டது. அதை எண்ணியவனுக்கு, மனம் கனத்துப் போனது மட்டும் உண்மை.

அன்று நகுலின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பு வந்த வேந்தனைப் பார்த்தவுடன், தன்னை வெளியே போகச்சொன்ன நகுலின் செய்கை ஒரு அதிர்வென்றால்.... மேடையில், நண்பர்கள் அவளை முத்தமிடச் சொன்னபொழுது, பிடிவாதமாக மறுத்த நகுல், பெரிய அதிர்ச்சியையே அவனுக்கு அளித்தான்.

அதற்கு காரணமும் இருந்தது. அனன்யாவை அவன் எவ்வளவோ விரும்பி மணந்து கொண்டான். அப்படி இருக்கையில், திருமணத்துக்கு முன்பு இருந்த உற்சாகம் அவனிடம் குறைந்திருப்பதையும், அனன்யாவை சற்று விலக்கி வைப்பது போலும் அவனுக்குத் தோன்றியது.

நகுலைப் பொறுத்தவரை, தான் ஒன்றை விரும்பிவிட்டால், அதன்மேல் உயிரையே வைப்பான். அப்படியிருக்கையில்.... அனன்யாவின்மேல் அவன் கொண்டிருக்கும் நேசத்தை பொத்தி வைப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

மேடையில் சிறிதாக விழுந்த விதை, அதன் பிறகு அவனை கூர்மையாக கண்காணிக்கையில் அதிகமாகவே தெரிந்தது. மற்றவர்கள் கண்களுக்கு அவர்கள் சாதாரணமாக உரையாடுவதும், சேர்ந்து அமர்ந்து சாப்பிடுவதும், அருகில் அமர்ந்து படம் பார்ப்பதும் வெகு இயல்பாக இருக்க,

அவர்கள் தனிமையைக் கலைக்கவோ, தடுக்கவோ விரும்பாமல் மற்றவர்கள் விலகியிருக்க, நவீனின் பார்வையோ, அவர்களை ஆராய்ச்சியாக நோக்கத் துவங்கியது.

அவர்கள் சாதாரணமாக உரையாடினாலும், காதல் மணம் புரிந்தவனின் கண்கள் பேசும் பாஷையை நகுலின் கண்கள் பேசவில்லை. சாப்பாட்டு மேஜையில், செல்லச் சீண்டலோ, உணவுப் பரிமாற்றமோ நடக்கவில்லை, தொலைக்காட்சியைப் பார்த்தாலும், அவர்களுக்கிடையில் நெருக்கமில்லை.

மணம் புரிந்தவர்களின் தனிமை நேரத்தை கவனிப்பது தவறு என்று அவனுக்கும் தெரியும். ஆனால்.... நண்பனின் வாழ்க்கை என்று வருகையில் அவனால் அதையெல்லாம் பார்த்துகொண்டிருக்க முடியவில்லை.

நவீனின் மனம் அடித்துக் கொண்டது.... 'இங்கே என்ன நடக்கிறது...?' அவனால் தன் சந்தேகத்தை மற்றவரிடம்

பகிர்ந்து கொள்ளவே முடியவில்லை. அவ்வளவு ஏன்.... வருணாவிடம் கூட உரைக்க முடியவில்லை.

அன்று வேறு பெண்ணை திருமணம் செய்யச் சொன்னதுக்கே.... 'நீ மட்டும் காதலியோடு வாழ்வாய்.... என் அண்ணன் மட்டும் காதலை துறக்க வேண்டுமா?' என தன்னிடமே சண்டைக்கு வந்தவள்.

அப்படி இருக்கையில்.... 'இன்று உன் அண்ணன் அவளோடு ஒன்றி வாழவில்லை' என்று சொன்னால் நிச்சயம் தாங்க மாட்டாள் என்றே தோன்றியது. அதிலும்.... அவள் தாய்மையடைந்திருக்கும் இந்த நேரத்தில், அவளுக்கு எந்தவிதமான நெகட்டிவ் விஷயங்களையும் அவளிடம் உரைக்க அவன் தயாராக இருக்கவில்லை.

மூன்று நாட்கள் வரை அவன் அவர்களை கவனிக்க, நகுல் ஒருவித இயந்திரத் தன்மையில் செயல்படுவதும், அவனிடம் உயிர்ப்பு இல்லாததையும் பார்த்தவனது ஆவி துடிக்கவே செய்தது.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் அவளைத் தேடி, இறுதியில் அவளைக் கண்டுகொண்ட சந்தோஷத்திலும் சரி, நிச்சயம் முடிந்த பிறகு, திருமணத்திற்கு காத்திருந்த அந்த நாட்களிலும் சரி.... வாழ்க்கையையே வென்றுவிட்ட உணர்வில் சுற்றித் திரிந்த தன் நண்பன், திருமணத்திற்கு பிறகு மாறியிருக்கிறான் என்றால்.... நிச்சயம் பிரச்சனை அவனிடம் இல்லை என்று நம்பினான்.

ஆனால்.... உன் மனைவியோடு நீ வாழ்கிறாயா?' என்று ஒரு நண்பனாகவே இருந்தாலும் அவனிடம் எப்படி தான் கேட்க முடியும்? அது எவ்வளவு அநாகரீகமான செயல்.... அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அந்த நேரம்தான்.... நகுல் தன் ஹனிமூன் ப்ளானை மறுக்க, நிச்சயம் அவனிடம் பேசியாக வேண்டும் என முடிவெடுத்தான். ஆனால்.... அதற்கான சந்தர்ப்பம்தான் சரியாக அமையாமலே இருந்தது.

அன்று அவர்கள் இருவரும் ஊட்டிக்கு செல்வதற்காக, சில பொருட்கள் வாங்க வேண்டி வெளியே சென்றிருப்பதை வருணா மூலம் அறிந்தவன், நிச்சயம் அவன் ஊட்டிக்கு செல்லும் முன்னர், இன்றே பேசிவிட முடிவெடுத்தான்.

இரவு உணவை முடித்தவுடன், "நகுல்.... நம்ம கம்பெனி விஷயம் பத்தி சில டவுட் உன்கிட்டே கிளியர் பண்ணிக்கணும்.... கார்டனுக்கு வா..." அவனை அழைத்துக்கொண்டு கார்டனுக்குச் சென்றான்.

அங்கே இருந்த ஊஞ்சலில் இருவரும் அமர, "என்ன டவுட் மச்சான்...? நான் ஆக்சிடண்ட் ஆனப்போ கூட நீ கம்பெனியை தனியா நடத்தியவன், இப்போ என்ன புதுசா...?" அவனைப் பார்த்தவாறு அமர்ந்தான்.

நவீனின் பார்வை கூர்மையாக அவனைத் துளைக்க, அவன் பார்வைக்கான பொருள் புரியாமல் அவனை ஏறிட்டான்.

"என்னடா மச்சான்.... என்னமோ இன்னைக்குதான் என்னை புதுசா பாக்குற மாதிரி பாக்கற...?"

"புதுசாத்தாண்டா இருக்கு.... உன் நடவடிக்கைகள்..." அவனை ஆழம் பார்த்தான். நூற்றில் ஒன்றாக.... தான் நினைப்பதுபோல் இல்லாமல், நண்பன் குழப்பமாக தன்னை ஏறிட்டால்.... எதையாவது சொல்லி சம்மாளித்துவிடலாம் என அவன் நினைக்க,

அவன் எண்ணத்தை தகர்த்துவிட்டு, அதிர்ச்சியாக ஒரு நொடி பார்த்த நகுலின் பார்வை, அவனுக்கு அனைத்தையும் விளக்கிவிட்டது. ஒரு நொடிக்குள் தன்னை சுதாரித்துக்கொண்ட நகுல், தன் பார்வையை மாற்றிக் கொண்டாலும், அதை நவீன் தெள்ளத் தெளிவாக உணர்ந்தான்.

"என்னடா உளர்ற....?" தன்னை மீட்டுக் கொண்டவனாக கேட்டான்.

"நான் உளறுறேனா? எங்கே என் கண்ணைப் பார்த்து இந்த வார்த்தையை சொல் பார்ப்போம்?" அவன் தாடையைப் பிடித்து நிமிர்த்தினான்.

அவன் அமைதியை கெட்டியாக பிடித்துக்கொள்ள.... "யார்டா அந்த வேந்தன்?" தன் கேள்வியை மாற்றினான்.

அதற்கும் அவனிடம் அமைதியே தொடர, "இப்போ நீ இதைச் சொல்லவில்லை என்றால்.... நான் அனன்யாவிடம் இதைப்பற்றி கேட்கவேண்டி இருக்கும்...?" அவன் குரலில் இருந்த உறுதியே நிச்சயம் செய்துவிடுவேன் என்று இருக்க, தன் வாயைத் திறந்தான்.

"அவன் யார் என்ற உண்மை தெரிந்தால்.... என் நிம்மதியைபோல் உன் நிம்மதியும் போய்விடும் நவீன்...." அவன் குரல் சட்டென உடைந்து போனது.

"நகுல்..." அவன் தோள் தொட, கண்களில் சிறு நீரின் பளபளப்போடு அவனை ஏறிட்டான்.

"டேய் மச்சான் அழறியா....? நீயா...? ரெண்டு வருஷம் அனன்யாவைத் தேடும்பொழுது கூட நீ இவ்வளவு கலங்கி நான் பார்த்ததில்லையேடா.... என்னடா ஆச்சு...?" பதறினான்.

"அவளைத் தேடும்பொழுதெல்லாம்.... நிச்சயம் ஒருநாள் அவளைக் கண்டு பிடித்துவிடுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனா இப்போ.... எங்கே அவளை தொலைத்துவிடுவேனோ என்று ஒவ்வொரு நிமிஷமும் தவிச்சிட்டு இருக்கேண்டா..." இவ்வளவு நாட்களாக மனதுக்குள் வைத்து திணறிக் கொண்டிருந்ததாலோ என்னவோ, நண்பன் கேட்கவே உடனே உடைந்துவிட்டான்.

"என்னடா சொல்ற? இப்போ அவ உன்னோட மனைவிடா..." அதிர்ச்சியை மறைத்துக்கொண்டு உரைத்தான்.

"தாலி கட்டிட்டா மட்டும் ஒருத்தி நமக்கு மனைவின்னா.... அவ என் மனைவிதான். அதே நேரம்.... ஒரே உயிரா, உயிரும் உணர்வும் கலந்து, காலம் முழுக்க நம்மோடு பயணிக்கும் ஒருத்திதான் மனைவின்னா.... இல்லடா..... அவ என் மனைவி இல்லை..."

"என்னடா குழப்பற...?".

"அவ.... வேந்தனோட காதலிடா...." உரைத்தவன், வானத்தை வெறிக்க.... அவன் உரைத்ததை ஜீரணிக்க முடியாமல் அமர்ந்திருந்தான் நவீன்.

தன்னைத் தெளிந்தவன், "மச்சான்.... நீ சொல்றது...?" அவன் கேட்க, 'ஆம்' என தலை அசைத்தான்.

"உனக்கு எப்படிடா தெரியும்? அப்படின்னு அந்த வேந்தன் சொன்னானா...?" கோபமாக வினவினான்.

"அவன் அப்படிச் சொல்லியிருந்தால் நான் நம்பியிருப்பேன் என நினைக்கிறாயா?" அவனிடமே திருப்பிக் கேட்க, மறுப்பாக தலை அசைத்தான்.

"அனன்யாவே சொன்னாளாடா...? நிஜமாவா...?" அவன் கேட்க, நண்பனின் முகம் வேதனையை பிரதிபலிக்க, நகுலின் மனம் அந்த நேரம் எப்படித் துடித்திருக்கும் என்பதை அறிந்தவனாக அவன் தோளை ஆதரவாகப் பற்றினான்.

சட்டென அவன் தோள் சாய்ந்தவன்.... "அவ எப்போ சொன்னா தெரியுமாடா.... முதல் நாள் ராத்திரியே.... என்னால்.... நிஜமாவே அந்த நிமிஷம் செத்துட்டேண்டா..... அப்படியே என் நெஞ்சை யாரோ வெட்டி வெளியே வீசின மாதிரி.... அந்த விஷயத்தை ஜீரணிக்கவே எனக்கு முடியலடா...." சட்டென உடைந்தவன், இப்பொழுது அழுதே விட்டான்.

"நகுல்..." நண்பனை கை பிடித்து எழுப்பியவன், "இங்கே பார்.... அவ முன்னாடி அவனோட காதலியா இருந்திருக்கலாம். ஆனால்.... அவ இப்போ உன்னோட மனைவிடா. பாக்கியராஜ் ஒரு படத்தில் சொல்லியிருப்பார் தெரியுமா.....

"'என் காதலி உன் மனைவியாக முடியும்.... ஆனால்.... உன் மனைவி, என்னோட காதலி ஆகவே முடியாதுன்னு. அதேதான் நான் இப்போ சொல்றேன்.... நான் வேந்தன்கிட்டே பேசறேன்.... கண்டிப்பா புரிஞ்சுப்பான்" அவன் துன்பப்படுவது தாங்க முடியாமல் உரைத்தான்.

"அவன்கிட்டேயா..." விரக்தியாகச் சிரித்தவன், "எனக்குத் தெரிந்து, அவன் அன்னத்தை விட மாட்டான்..." நகுலின் முகம் இப்பொழுது கோபத்தில் ஜொலித்தது.

"புரியிற மாதிரி சொல்லு நகுல்..." அவன் தோளைப் பிடித்து உலுக்க, அனன்யா தன்னிடம் உரைத்தவற்றை அவனிடம் சொன்னவன், "வேந்தன் அவளை சந்திக்கவே..." அவன் உரைக்கும்பொழுதே,

"சந்திக்க வைக்க முடியாதுன்னு சொல்லுடா..." கர்ஜித்தான்.

"இட்ஸ் டூ லேட் நவீன்..." அவன் உரைக்க, கேள்வியாக அவனை ஏறிட்டான்.

"இன்னைக்கு காலையில் அவனை சந்திச்சிட்டுத்தான் வந்தோம்..." அவன் சொன்ன மறு நிமிடம்,

"முட்டாள்.... முட்டாள்.... உன்னை யாருடா அவனைப் போய் பாக்கச் சொன்னது. அவன் சந்திக்கணும்னு சொன்னப்போவே அவன் கையைக் காலை உடைக்காமல்..." நண்பனின் வாழ்க்கை தன் கண் முன்பே சிதைந்து போவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா என்ன? எனவே கொந்தளித்தான்.

இந்த நேரத்தில் தான்.... தோட்டத்துக்குப் போன மகனையும், மருமகனையும் கொஞ்ச நேரமாகக் காணவில்லையே என அவர்களை அழைக்க வந்த பார்வதி, நவீனின் கோபமான முகத்தையும், நகுலின் கசங்கிய முகத்தையும் பார்த்தவாறு, வாசல் அருகிலேயே நின்றுவிட்டார்.

தான் சற்று நெருங்கிப் போனாலும்.., அவர்கள் கவனம் தன்பக்கம் திரும்பிவிடும் என்பதால்.... அங்கே இருந்தே கவனித்தார்.

அவன் கோபத்தை நிதானமாகப் பார்த்தவன், "கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம் தெரியுமா? அவ என்னை, அவன் முன்னால் விட்டுக் கொடுக்கவே இல்லை மச்சான்...." உரைத்தவன், காலையில் நடந்த விஷயத்தை உரைத்துவிட்டு, கூடவே அன்று நகுலிடம் அலைபேசியில் சாடியதையும், தன்னிடம் கோபம் காட்டியதையும் உரைக்க, நவீனின் முகம் யோசனைக்குப் போனது.

அதன் பிறகே.... நண்பன் அனன்யாவின் காதல் பற்றி உரைத்ததை ரீவைண்ட் செய்தவன்.... அனன்யாவின் மனதுக்குள் வேந்தன் மேல் அப்படி ஒன்றும் காதல் பீறிட்டு எழவில்லை என்பதை உணர்ந்து கொண்டான்.

சட்டென முகம் பிரகாசமாக, "டேய் மச்சான்.... நீ ஒரு அடி முட்டாள்டா.... ஒருத்தன்மேல் பரிதாபப்படுறா.... அதை அவளே புரிஞ்சுக்காமல் செய்யிறா, அப்படி இருக்கும்போது.... முழு உரிமையுள்ள நீ.... அவ மனசுக்குள் காதலைக் கொண்டு வரதை விட்டுட்டு, அவனுக்கு விட்டுக் கொடுக்கபோறேன்னு உளறிட்டு இருக்க..." நண்பன்.... தான் நினைத்ததையே அவனும் உரைக்கவே, கண்கள் பளபளக்க அவனை நோக்கினான்.

"எனக்கும் அது புரியுது.... ஆனால்.... இதை எப்படி சாதிக்க என்றுதான் புரியவில்லை. அவள் இருக்கும் மனநிலையில்,

அவளோடு ஒரு நாள் வாழ்ந்துவிட்டால் சரியாகப் போய்விடும் என நீ நினைப்பது எனக்குப் புரியுது.

"அதுவே.... அவளோட குற்ற உணர்ச்சி அதிகமாகி.... அவனிடமும் போக முடியாமல், என்னோடும் வாழ முடியாமல் அவள் தவிக்கத் துவங்கி விட்டால்... என்னால் அதை தாங்கவே முடியாதுடா..." மறு பக்கத்தை அவன் உரைக்க, அதில் இருக்கும் சிக்கல் இப்பொழுது நவீனுக்கும் கவலையை அளித்தது.

"இப்போ என்னடா செய்ய...?" அவனிடமே கேட்டான்.

"அவ என்னோட நேசத்தை புரிந்துகொள்வது மட்டும் போதாது நவீன். அவளுக்கு என்மேல் காதல் வர வேண்டும். இப்போ நீங்க ஏற்பாடு செய்திருக்கும் இந்த ஹனிமூன் ப்ளானில் ஏதாவது சொதப்பல் நடந்துவிட்டால், என்னாலேயே என்னை மன்னிக்க முடியாது நவீன்..." அவன் குரல் இறுகிப் போயிற்று.

நவீனுக்கு நண்பனின் மனம் தெளிவாகப் புரிந்து போனது. நாலு பேருக்கு மத்தியில், அவளோடு இயல்பாகப் பழக முடியும் அவனால், தனிமையில் அவ்வாறு நடந்துகொள்ள முடியுமா என தவிப்பதும் புரிந்தது. அவள்மேல் காதல் இல்லாமல் இருந்திருந்தால்.... நிச்சயன் நகுல் உறுதியாக இருந்திருப்பான்.

அவள்மேல் மலையளவு நேசத்தை சுமந்துகொண்டு, அவளை அருகில் வைத்துகொண்டு விலகி இருக்க முடியுமா என அஞ்சுவது புரிய, இதற்கு எதையும் செய்ய முடியாதே என கலங்கிப் போனான்.

நண்பர்கள் இருவரின் கோபம், நகுலின் அழுகை, விரக்தி, இறுக்கம்.... என அவன் காட்டும் முகபாவங்களை பார்த்துக் கொண்டிருந்தவருக்கு, அடிவாயிற்றை பிசைந்தது. அலுவலக விஷயமாக இருந்தால் நிச்சயம் இருவரும் அதை வீட்டில் சொல்லியிருப்பார்கள் என்பது அவருக்கு உறுதி.

அப்படிச் செய்யாமல்.... தனிமையில் உரையாடுவது.... அவருக்கு எதுவோ சரியில்லை என்பதை உணர்த்தியது. அடுத்த இரண்டு நாட்கள்.... நகுலை கவனிப்பது என முடிவெடுத்தவர், தவிக்கும் மனதோடு வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

இது எதையும் அறியாத இருவரும் பேச்சைத் தொடர்ந்தார்கள். "இல்லடா மச்சான்.... அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. எனக்கு என் நண்பன்மேல் நம்பிக்கை இருக்கு. நிச்சயம் நீ அனன்யா மனதில் இடம் பிடிப்பாய். அவள் மேல் காதல் என்பதை விடுத்து, ஒரு நல்ல நண்பனா, இருக்க முயற்சி செய், அதுவே உனக்கு வெற்றியை தேடித் தரும்..." அவனுக்கு ஆலோசனை வழங்கினான்.

அதை ஏற்றுக் கொண்டவன், "அந்த வேந்தன் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் அன்னத்தை சுற்றி வரான்டா. அது என்னன்னு முதல்ல கண்டு பிடிக்கணும். அப்படி மட்டும் கண்டு பிடிச்சுட்டோம்.... அவன் சுயரூபம் அவளுக்குத் தெரிய வரும்போது.... அவ நிச்சயம் என்னை விட்டு போக மாட்டா..." உறுதியாக உரைத்தான்.

"இதாண்டா என் மச்சான். இப்போ சொன்ன பாத்தியா.... இதுக்கு என்ன வழின்னு நாம பாக்கலாம். அதுவரைக்கும்.... நீ எதைபற்றியும் குழப்பிக்காமல், தைரியமா ஊட்டி போயிட்டு வா. ஒரு மாற்றம் நிச்சயம் இருக்கும்.... சரி வா.... ரொம்ப நேரமா பேசிட்டு இருந்தால், என்னன்னு உங்க அம்மாவுக்கு டவுட்டே வந்துடும்.... வா..." அவனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

அவன் எண்ணியது போலவே.... பார்வதிக்கு ஏற்கனவே சந்தேகம் வந்துவிட்டதைத்தான் அவர்கள் அறியவில்லை. அடுத்த இரண்டு நாட்களில், நகுலும், அனன்யாவும் ஒன்றுபட்டு வாழவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்த அந்த தாயால் தாங்கிகொள்ளத்தான் முடியவில்லை.

அதற்கு சில காட்சிகளே அவருக்குத் துணையாக இருந்தது. அன்று தன்னை கிச்சனுக்குத் தேடி வந்தவனும், கிச்சனுக்குள் இருந்து வெளியேறிய அனன்யாவும் முட்டிக்கொள்ள, "ஓ.... சாரி.... சாரி..... நான் கவனிக்காமல் வந்துட்டேன்..." நகுல் பதறிபோய் விளக்க, அதைக் கேட்ட பார்வதிக்கு கண்கள் குளம் கட்டியது மட்டும் உண்மை.

இதுவே ஒன்றுபட்டு வாழும் தம்பதிகளாக இருந்திருந்தால்.... இந்த காட்சி இப்படியா முடிந்திருக்கும்? உள்ளம் தவித்தது.

நகுலின் கண்களில் தெரிந்த அலைப்புறுதலும், அவன் கண்களைக் காண மறுக்கும் அனன்யாவும், முன்பு தான் அவனுக்காக செய்த வேலைகளை, இப்பொழுது அனன்யா செய்யாமல், அவனாகவே செய்துகொள்வதை பார்த்தவருக்கு ஆவி துடித்தது மட்டும் உண்மை.

அசந்தர்ப்பமாக.... மகன் உரைத்த புது வேலையும், தேனிலவு செல்லத் தயங்கியதும் கூட நினைவிற்கு வர, என்ன செய்து அவர்கள் பிரச்சனையை தெரிந்துகொள்வது எனத் தெரியாமல்தான்.... நவீனிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மழையை கேள்விப்பட்டு, நகுலுக்கு அழைத்தபொழுது கூட, மகன் தன்னிடம் மிகவும் கவனமாகப் பேசியதாக அவருக்குத் தோன்றியது. அனன்யாவிடம் பேச வேண்டும் என கேட்டபொழுது, சற்று தயங்கி, அவள் உறங்குவதாகச் சொன்னது வேறு, நெஞ்சுக்குள் நெருஞ்சி முள்ளாக தைத்தது.

‘ஒரு வேளை என்னிடம் பேச முடியாது...?’ என அவள் தவிர்த்திருப்பாளோ, கலங்கிய மனம் கண்டதையும் நினைத்து கவலைப் பட்டது.

"என்ன சொல்லி சம்மாளிக்கலாம்னு யோசிக்கிறியா நவீன்...?" எப்பொழுதுமே நவீனையும், நகுலையும்

பிரித்தறியாத காரணத்தால், உரிமையாக அவனிடம் கோபம் காட்டினார்.

தன் நினைவுகளில் இருந்து மீண்டவன், ‘நகுல் விஷயத்தை தான் எப்படி உரைக்க முடியும்? அதிலும் பிரச்சனை எந்த பக்கம் எப்பொழுது முடியும் என தெரியாமல் இருக்கையில், தேவையில்லாமல் இவரையும் வருத்த வேண்டும்...’ என எண்ணியவன்...

வேகமாய் சிந்தித்தா. "ஹையோ அம்மா.... நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் எந்த பிரச்சனையும் இல்லை. அப்படியே இருந்தாலும், அதை நகுல் உங்ககிட்டே சொல்லாமல் யார்கிட்டே சொல்லுவான்? தேவையில்லாமல் மனசைப் போட்டு குழப்பிக்காதீங்க..." வேகமாக உரைத்தான்.

"நீ சொல்வது திருமணத்துக்கு முன்னாடி வரைக்கும் சரி நவீன். திருமணத்துக்குப் பிறகு.." வேதனையாக நிறுத்தியவர்,

"நான் கேட்பதுக்கு உண்மையை மட்டும் சொல்..... அனன்யாவுக்கு என் பிள்ளையை பிடிக்கலையா...?" அவர் குரல் பரிதவிப்போடு வெளிவந்தது.

"அம்மா..." அதிர்வாக அழைத்தவன், தன்னை மீட்டுக் கொண்டு, "அப்படிப் பிடிக்காதவள் எப்படி அவனோட ஹனிமூன் கொண்டாட போவான்னு யோசிக்கவே மாட்டீங்களாம்மா...? அவங்க ரெண்டு பேருக்கும் சின்ன மன வருத்தமாக கூட இருக்கலாமே.

"கணவன் மனைவிக்குள் வராத பிரச்சனையா...? அது நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியணுமா? அவ்வளவு ஏன்.... நம்ம வரு கூட என்கிட்டே கோச்சுகிட்டு இங்கே வந்து ஒரு வாரம் உக்காந்துக்கல.... நான் அவ கால்ல விழுந்து சமாதனப்படுத்தின மாதிரி, அவனும் செஞ்சுட்டு போறான்.

"அதென்ன.... பெத்த புள்ளைன்னு சொன்ன உடனே அவனுக்கு அப்படி சப்போட் பண்ணிட்டு வரீங்க.... நான்ன உடனே.... நல்லா அனுபவின்னு அன்னைக்கு சொன்னீங்க..." அவரை மாற்ற, கேலியை கையில் எடுத்தான்.

‘ஒரு வேளை அப்படியும் இருக்குமோ...?’ சிந்தித்தவர், அதற்கு அவர்கள் இருவரும் ஏன் கோபமாக பேசிகொண்டார்கள் என்பதை கேட்க மறந்து போனார். ஒரு வேளை.., மகனது வாழ்கை நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கவனிக்க மறந்திருப்பாரோ?

அது சரியாக வேலை செய்தது. "படவா.... சந்தடி சாக்கில் என்னை கொடுமைக்கார மாமியார்ன்னு சொல்லிட்ட.... எத்தனை நாளா மனசுக்குள் திட்டிட்டு இருந்த...?" அவர் இப்படி கேட்ட பிறகே, நிம்மதியாக மூச்சு விட்டான்.

"ஐயோ அம்மா.... நான் சும்மா சொன்னேன். உங்களைப்பத்தி எனக்குத் தெரியாதா? வீட்டுக்கு வந்த மருமகனுக்கு ஒருவாய் காப்பி கொடுக்காமல் வந்த உடனேயே விசாரணை கமிஷன் வச்சுட்டு, இப்போ பாருங்க, டயட் ஆயிட்டேன்..." அவன் சொல்லவே,

"சாரிடா.... நகுல் ஞாபகத்தில் வேற எதுவுமே தோணலை.... இரு எடுத்துட்டு வரேன்..." அவர் உள்ளே செல்ல, வாய் வழியாக மூச்சை தாராளமாக வெளியேற்றியவன், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

‘நல்ல வேளை.... வரு இல்லை.... இருந்திருந்தா...? என் கண்ணைப் பாத்தே கண்டு புடிச்சிருப்பா. உடனே மச்சான்கிட்டே பேசணுமே. இன்னொரு முறை இவங்களுக்கு சந்தேகம் வந்தது.... தீந்தோம்...’, தலையை உதறிக் கொண்டான்.

22

வேந்தன்.... தன் அறையின் அகலத்தை குறுக்கும் நெடுக்குமாக கடந்து கொண்டிருந்தான். அவனால் தன் கோபத்தை அடக்கவே முடியவில்லை. கையில் கிடைத்த தங்க முட்டை போடும் வாத்தை, தான் கைநழுவ விட்டு விட்டோமோ...' அந்த சிந்தையே அவனை அலைக்கழித்தது.

"'கூடாது.... இதை அனுமதிக்கவே கூடாது.... அவ எனக்குத்தான்.... அவளோட சொத்தும் எனக்குத்தான்...." கிட்டத்தட்ட தனக்குத் தானே கத்தினான்.

நகுலின் அலட்சிய முகமும், அவளை விட்டுகொடுக்க முடியாது என அவன் சவால் விட்ட தன்மையும்.... மனம் தீயாய் எரிந்தது.

எத்தனை மாத கணக்கு அது. வாழ்க்கையில் ஒரு கொழு கொம்பைப் பார்த்து பற்றிக்கொண்டு, அதை உறிஞ்சி தன் வாழ்க்கையை நடத்திக்கொள்ள வேண்டும் என போட்ட கணக்கு.... பிசகியது எங்கே..?

சட்டென நினைவிற்கு வந்த தங்கைகளின் முகம், அவன் கோபத்துக்கு சற்று அணை போட்டது. வேந்தன் சற்று சுயநலக்காரன் தான்.., ஆனால்.... தன் உடன்பிறந்தவர்களை விட்டுவிட்டு, தன் வாழ்க்கையை பார்த்துகொள்ள வேண்டும் என்ற அளவுக்கு சுயநலக்காரன் இல்லை.

அதுதானே.... அவன் தங்கைகள் தானே.... அனன்யா தன் திருமணத்தைப் பற்றி சொன்ன பொழுதும் சரி, முந்தினநாள் இரவில், என் அப்பாவை வந்து பார்.., இப்பொழுதே திருமணம் செய்து கொள்ளலாம் என அழைத்த பொழுதும் சரி, அவனை அதைச் செய்ய விடாமல் தடுத்தது.

தன் நிலையை எண்ணி, சுவற்றில் கையை குத்திக் கொண்டான். புத்திசாலியான முதல் தங்கை, இஞ்சினியரிங் சீட் தேடிவந்தபோழுது கூட, தன் படிப்புக்காக, சாதாரண டிப்ளமோ படிப்பை தெரிந்தெடுத்ததும், இரண்டாவது தங்கை, சாதாரண தமிழ் மீடியம் பள்ளியில் படிப்பை தொடர்வதும்.... அவனுக்காகத்தானே.

அவன் படித்து, தலை எடுத்துவிட்டால், வீட்டு பாரத்தை தாங்கிக் கொள்வான் என்பதற்காக, தாய் நாலு வீட்டில் பாத்திரம் தேய்ப்பதும் அவனுக்காகத்தானே. அப்படி இருக்கையில்.... இவர்கள் அனைவரையும் விட்டுவிட்டு, தன் வழியை மட்டும் பார்த்துக்கொள்ள அவனால் முடியவில்லை.

அவனும் எட்டாம் வகுப்புவரை படிக்கும்வரை, காலில் அழுக்கு கூட படாமல், நடந்து விளையாடி, சுகபோகமாக வாழ்ந்தவன்தான். எங்கிருந்தோ வந்த தண்ணிலாரி.... அவன் தந்தையின் உயிரை குடித்துச் சென்றிருக்க, அவர்கள் வாழ்க்கை மந்திரக்கயிற்றை சுழட்டியது போல், மாறிப் போனது.

வீட்டின் வருமானம் முழுமையும் அவரையே நம்பியிருக்க, அவனது தாயோ, அவர் நிழலிலேயே வாழ்ந்துவிட்டவருக்கு, படிப்படியாக பிள்ளைகளை வைத்துகொண்டு, வாழ வழியின்றி தவித்துப் போனார். பெற்றவர்கள், உடன் பிறந்தவர்கள் என யாரின் ஆதரவும் இல்லாமல், சாவை நாடியவரை.... வேந்தன்தான் தடுத்து நிறுத்தினான்.

அதன் பிறகு போராட்டம் மட்டுமே வாழ்க்கையாகிப் போனது. மனம் பலவற்றையும் சிந்திக்க.... படிப்பு மட்டுமே தங்களைக் காப்பாற்றும் என உணர்ந்தவன், படிப்பை கெட்டியாக பிடித்துக் கொண்டான்.

எப்படியோ கஷ்டப்பட்டு, கல்லூரியில் வந்துவிட்டவனுக்கு, அங்கிருந்த புது உலகம், தன்னை ஈனமானவனாக

நினைக்கத் தூண்டியது, தன் வறுமையை சபிக்கத் தூண்டியது. அந்த நெருப்பை அவன் நல்ல வழியில் செலுத்தியிருந்தால், வாழ்க்கையில் எங்கேயோ போயிருப்பான்.

ஆனால்.... அடுத்திருக்கும் தங்கைகளை நினைக்கையில், இருவரின் திருமணம், செலவு.... என கண்ணில் விரிய, தான் வாழ்நாள் முழுமைக்கும் சுமைதாங்கியாகவே இருந்துவிட வேண்டுமோ என்ற அச்சத்தை கொடுத்தது.

ஓரளவுக்கு மனசாட்சி இருந்ததாலோ என்னவோ.... தவறான வழியில் பணம் சம்பாதிக்க அவன் முயலவில்லை. எப்படியாவது கடன் சுமையற்ற வாழ்க்கை வேண்டும் என சிந்தித்தவனுக்கு கிடைத்த தீர்வு.... ஏதாவது பணக்கார பெண்ணாகப் பார்த்து காதலித்து, அவள் மூலமாக தன் தங்கைகளின் திருமணத்தை முடித்துவிட்டு, தானும் செட்டில் ஆவதுதான் என்ற முடிவிற்கு வந்தான்.

ஆனால்.... அவன் பெர்சனாலிட்டி அவனுக்கே தெரியும் என்பதால், எந்த பெண்ணிடமும் காதலைச் சொல்லும் தைரியம் இருக்கவில்லை. அந்த நேரம்தான்.... எதேச்சையாக அனன்யாவும், மைத்ரேயியும் பேசுவதைக் கேட்டான்.

"மையூ.... உனக்கு கொஞ்சமாவது மனசாட்சி இருக்காடி.... நேத்து வதனா கிட்டே தியேட்டர் வரேன்னு சொல்லிட்டு போகாமல் இருந்திருக்க, பாவம்.... அவ உனக்காக தியேட்டர் வாசல்ல நாலு மணிநேரம் காத்துட்டு இருந்துட்டு, ஏமாந்துபோய் போயிருக்கா.... ஒரு கமிட்மென்ட் கொடுத்தால் அதை காப்பாத்தணும்னு தெரியாது...?" படபடவென பொரிந்து கொண்டிருந்தாள்.

அப்படியே ஆணி அடித்தாற்போல் நின்றுவிட்டான்.... ஒரு சாதாரண விஷயத்துக்கே இப்படி பேசுபவள்.... வாழ்கை என வந்தால்...' மேலே அவர்கள் பேசியது எதுவும் அவன் காதில் விழவில்லை.

அடுத்த நாள்முதல், அவளைத் தொடர்வதே அவனது வேலையாக இருந்தது. அவ்வப்பொழுது அவள் பார்வையில் விழுந்தவன், அவளைத் தொடர்வதை உணர்த்தினான்.

அவள் கண்டுகொள்ளாமல் விலக, அவனது நல்ல நேரமோ, அவளது கெட்ட நேரமோ என்னவோ.... அடுத்த வாரமே.... அனன்யாவின் அண்ணன் விபத்தில் உயிரிழக்க, கல்லூரிக்கு வந்த அவளை சந்தித்தவன், தன் காதலை அவளிடம் சொல்லி விட்டான்.

அதோடு கூட.... 'அவள் இல்லையென்றால்.... தான் உயிரையே விட்டுவிடுவேன்..' என உரைக்க, ஏற்கனவே ஒரு இழப்பில் இருந்தவள், அதைத் தாங்க முடியாமல்,

"ஹையோ.... அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க?" பதறினாள்.

"அப்போ எனக்கு வாக்கு கொடு.... என்னை கல்யாணம் பண்ணிப்பேன்னு.." தன் கையை அவள்முன் நீட்ட, எதையும் ஆராய முடியாமல், அவன் நீட்டிய கையில் பட்டும் படாமல் தன் கையை பதித்து மீட்டாள்.

அதுவும் மைத்ரேயி உடன் இருக்கும்பொழுதே அதைச் செய்ய.... குழப்பத்தில் இருந்த அனன்யா திகைக்க, மைத்ரேயிதான் பொங்கினாள்.

"ஏய்.... என்ன காரியம்டி பண்ற.... இவன்கிட்டே உண்மை இல்லடி. ஹல்லோ.... யார் நீ...? அவ என்ன மனநிலையில் இருக்கா.... இந்த நேரம் வந்து காதல், வாக்குன்னு அவளை கார்னர் பண்ற.... முதல்ல இங்கே இருந்து போ...?" அவள்தான் கத்தினாள்.

அவளைக் கண்டுகொள்ளாதவன், தான் வந்த காரியம் இவ்வளவு சுலபமாக முடிந்துவிட்டதே என்ற வெற்றிக் களிப்பில், அவளை நக்கலாகப் பார்த்துவிட்டுப் போனான்.

"லூசாடி நீ.... யோசிக்கவே மாட்டியா...? எவன் வந்து கேட்டாலும் உடனே சம்மதம் சொல்லிடுவியா? இப்போ வேற ஒருத்தன் வந்தால்.... அவனுக்கும் வாக்கு கொடுப்பியா...?" தோழி கேட்ட பிறகுதான், தான் என்ன காரியம் செய்து வைத்திருக்கிறோம் என்பதே அவளுக்குப் புரிந்தது.

சாவு என்ற வார்த்தை தன்னை ஆட்டுவிப்பதை உணர்ந்தவளுக்கு, கண்களில் கண்ணீர்.

பரிதாபமாக தோழியை ஏறிட, "சரி விடு.... நாளைக்கு வந்தான்னா.... எச்ச தொட்டு அழிச்சிடுன்னு சொல்லிடலாம். அவனும், அவன் மூஞ்சியும் முழியும்... அவன் சரியே இல்லடி..." அடக்கப்பட்ட கோபம் அவளிடம்.

"அதேப்படிடி முடியும்.... நான் வாக்கு கொடுத்திருக்கேனே..." அவள் உரைக்க,

"ஆமா.... இந்த வெளக்கமாரெல்லாம் என்கிட்டே கேழு.... அவன் கேக்கும்போது உன் புத்தி என்ன புல் மேய போயிருந்துச்சா?" அவளை மொத்தினாள்.

"ஒரு உயிர்டி.... இவனை நம்பியும் ரெண்டு பேர் இருக்கலாம்..." அவனது பெற்றோரை நினைத்து அவள் உரைக்க, அதை மறைவில் இருந்து கேட்ட வேந்தனுக்கு, அடுத்த பிடி கிடைத்த உற்சாகமும், மைத்ரேயியை எண்ணி கோபமும் கனன்றது. அங்கிருந்து அகன்றான்.

"ஆமா.... இவ பெரிய அரிச்சந்திரி.... நீ வாயைத் தொறந்து எதுவுமே சொல்லலை.... இனிமேலும் எதையும் சொல்லித் தொலையாதே. புரியுதா?" அவள் கேட்க, சம்மதமாக தலை அசைத்தாள்.

அவ்வளவு சுலபமாக வாக்கு வாங்கிவிட்டவனுக்கு, என்ன ஆனாலும் அவள் வேறு திருமணம் செய்துகொள்ள மாட்டாள் என்ற மிதப்பில் இருக்க, அதைத் தகர்த்தெறிந்த அவள் செய்கையை ஜீரணிக்க முடியவில்லை.

அதைவிட.... தான் தொட்டாலே எரித்துவிடுவதுபோல் முறைப்பவள், நகுலோடு ஒட்டிக்கொண்டு வந்ததையும், உரசிக்கொண்டு அமர்ந்ததையும் நினைத்தவனுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

அதைவிட.... நகுலின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் அளவு தான் நடந்துகொள்ள மாட்டேன்.., என தன்னை நேருக்கு நேராகப் பார்த்து உரைத்த அவளது வார்த்தைகளை கேட்டவனுக்கு, அந்த இடத்திலேயே தன் காதல்.... (அவன் தன் சுயநலஎண்ணத்தை அப்படித்தான் உருவப்படுத்திக் கொண்டான்) தோற்றுப் போனதை உணர்ந்து கொண்டான்.

ஆனாலும்.... அவ்வளவு சீக்கிரம் தன் தோல்வியை ஒத்துகொள்ளத்தான் அவனுக்கு மனமில்லை. அதையெல்லாம் விட, அவளிடம் தான் பெற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கிறதே. குறைந்தபட்சம் அதையாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அதுவரை, அவளை தன் கைப்பிடியை விட்டு அகற்றிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

தனக்கு அவள் வேண்டும்.... என ஒரு மனம் முரண்டினாலும், இன்னொருவனின் மனைவியை, அதுவும் அவனோடு ஹனிமூனே கொண்டாடப் போயிருக்கும் அவளை எண்ணுகையிலேயே.... அவளை பரந்த மனதோடு ஏற்றுகொள்ள முடியுமா? என எண்ணியவனுக்கு ஒரு பக்கம் அருவருத்துப் போனதும் உண்மை.

ஒருவேளை, அவனுக்குள் ஒளிந்திருக்கும் நல்லவன் அப்படி எண்ணத் தூண்டினானோ?

என்ன ஆனாலும் சரி.... அவளிடமிருந்து சிலபல சலுகைகளை பெற்றுக் கொள்ளாமல் விடுவதில்லை என எண்ணியவன், தன் முதல் தங்கையின் திருமணத்தை சாக்காக வைத்து, தன் முதல் ஆட்டத்தை துவங்க எண்ணினான்.

அதன் முதல் கட்டமாக.... அலைபேசியில் அவளைத் தொடர்பு கொள்ள முடிவெடுத்துவிட்டு, தன் அலுவலக விஷயங்களை கவனிக்கத் துவங்கினான்.

***ஊட்டியில்.... உச்ச குளிரில்.... உறை நிலையில் நடுங்கிக் கொண்டிருந்தது நகுலின் தேகம். உடலின் ஒவ்வொரு அணுவும் ஊசியாக துளைத்துக் கொண்டிருந்தது. கைகள் இரண்டும் மரக்கட்டையாகிபோன உணர்வு.

முகத்தை அவள் மார்புக்கு மத்தியில் அழுத்தமாக புதைத்துக் கொண்டவன், கைகள் இரண்டையும் அவள் முதுகுப்பக்கம், ஸ்வெட்டருக்குள் திணித்துக் கொண்டவன், தேகத்தில் மெல்லியதாக சூடு பரவுவதை உணர்ந்தான்.

அனன்யாவோ.... அவன் நடுக்கத்தைப் போக்க தன்னால் முயன்றமட்டும் போராடிக் கொண்டிருந்தாள். அவன் கால்கள் இரண்டும் ஐஸ்கட்டிபோல் இருப்பதை உணர்ந்தவள், தன் கால்களோடு, அவன் காலைப் பின்னியவள், அவன் கன்னத்தோடு, தன் கன்னத்தை இணைத்தாள்.

அவன் கன்னங்களின் சில்லிப்பை தாண்டிய, அவன் தாடை ரோமங்கள் ஏற்படுத்திய தாக்கம் அவளிடம் அதிகம் இருந்தது. இவ்வளவு நாட்களாக, தனக்குள் இவ்வளவு வெம்மை இருந்ததா என்பதையே நம்ப முடியாதவளாக, அவன் தேகத்தில் ஏற்படும் மாற்றத்தை அளவிட்டுக் கொண்டிருந்தாள்.

நேரம் மணித்துளிகளை கடக்க.... அவ்வளவு நேரமாக.... குளிருக்கு இதமாக அவளை அணைத்துக் கொண்டிருந்தவன், குளிர் குறையும் வேளை.... அவள் தேகத்தின் மென்மையை உணரத் துவங்கியிருந்தான்.

ஒரு போர்வைக்குள்.... நூலளவு கூட இடைவெளி இல்லாமல் அவளோடு இணைந்திருந்த தன்மை.... அவள் ஸ்வெட்டருக்குள் இருக்கும் தன் கைகளை பிரிக்க

மனமில்லாமல்.... இன்னுமாக அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

தன் கன்னத்தோடு இணைந்திருந்த அவள் கன்னங்களின் வழவழப்பு.... அப்படியே தன் இதழை அவள் கன்னத்தில் புதைத்துகொள்ளும் வேகம் எழுந்ததை அவனால் அடக்க முடியவில்லை. இன்னுமே தன் தேகத்தை சூடாக்கும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தவனுக்கு, தேகம் மொத்தமும் தீ பற்றிக்கொண்ட உணர்வு.

அவனுக்கு மட்டும்தான் சூடேறுமா...? அனன்யாவுக்கோ.... தான் எங்கேயோ நழுவிக் கொண்டிருக்கும் உணர்வு. அப்படியே தொலைந்துவிட மாட்டோமா என்ற ஏக்கம். அவள் கைகள் இரண்டில், ஒன்று அவன் பின்னந்தலை முடியை பிய்த்தெறிய முயன்றுகொண்டிருக்க, மற்றொரு கை அவன் முதுகையும் அழுத்திக் கொண்டது.

இன்னும் எதுவோ வேண்டும்.... அவள் தேகம் கெஞ்சத் துவங்கியிருக்க, அவனுக்கோ.... அவளை வென்றுவிடும் வேகம். இவ்வளவு நேரம் அணைவாகப் படுத்திருந்தவன், ஆளுமையாக மாறிப் போனான். சட்டென அவளைச் சரித்து, அவள்மேல் படர்ந்தவன், நொடியில் சுதாரித்தான்.

‘என்ன காரியம் செய்யத் துணிந்தேன் நான்...? என்மேல் கொண்ட நம்பிக்கையில் அவள் செய்த செய்கைக்கு, தான் செய்யும் கைம்மாறு இதுவா?’ எண்ணியவன், அடுத்த நொடி, அவள்மேல் இருந்து எழுந்தவன், கட்டிலை விட்டும் இறங்கியிருந்தான்.

அவன் உணர்வுகள் எவ்வளவு வேகத்தில் ஏறியிருந்ததோ.... அதே வேகத்தில் இறங்கியிருக்க, அனன்யாவுக்குத்தான் தன்னை சுதாரித்துக் கொள்ளவே முடியவில்லை.

‘ஏன் இப்படி...?’ அவனது விலகல் அவளை அப்படித்தான் யோசிக்கத் தூண்டியது. அதே பார்வையால் அவனைப் பார்க்க, அவனோ.... அவளைப் பார்த்தால் தானே, அவள் உணர்வுகள் புரிய....

அவள் முகம் பாராமல்.... "நான் போய் சூடா ஏதாவது குடிச்சுட்டு, வரும்போது உனக்கு சாப்பாடு எடுத்துட்டு வரேன்..." எதில் இருந்தோ தப்பிக்கும் உணர்வில் ஓடிப் போனான்.

அதன் பிறகு.... இருவருக்குள்ளும் மௌனமே ஆட்சி செய்தது. மதியம் உண்ட உணவு, ஏனென்றே தெரியாமல் அவள் நெஞ்சின்மீதே நிற்க, அவளால் அறைக்குள் இருக்கவே முடியவில்லை. அறையை விட்டு வெளியே செல்ல குளிர் அனுமதிக்கவில்லை.

நகுலுக்கோ.... ஸ்வெட்டர் இல்லாததால்.... படுக்கையில் இருந்த கம்பளிக்குள்ளாகவே புகுந்து கொண்டான்.

அறைக்குள்ளாகவே அவள் நடை பயில, "ரெஸ்ட் எடு அன்னம்.... எவ்வளவு நேரம்தான் நடப்ப..." அவன் அக்கறையாகக் கேட்க, படுக்கையில் வந்து அமர்ந்துகொண்டாள்.

மருந்து எடுத்த பிறகு அவளது மூச்சுத்திணறல் சரியாகி இருந்தாலும், அவள் மூச்சு விடுவதில் சற்று சிரமமாகவே உணர்ந்தாள்.

"சென்னை போனால்தான் இந்த வீசிங் சரியாகுமா...? இங்கே இருந்து உடனே போகவும் முடியாத சிச்சுவேஷன்.... சாரி.... இப்படி ஒரு சிக்கலில் வந்து சிக்குவோம்னு நான் எதிர்பார்க்கவே இல்லை..." அவனுக்கு கவலையாகிப் போனது.

அவன் கவலையைக் கண்டவள், "நான் முதலிலேயே உங்ககிட்டே சொல்லாமல் போன தப்புக்கு நீங்க ஏன்...?" கேட்டுக் கொண்டிருந்தவள், பாதியிலேயே வாயை மூடிக்கொண்டு பாத்ரூமை நோக்கி ஓட....

"அன்னம்..." அவள் பின்னால் பாய்ந்தோடியவன்.... அவள் தலையை தாங்கிக் கொண்டான். குடலே வெளியே வரும் அளவுக்கு அவள் வாந்தி எடுக்க....

"என்னம்மா.... ஏன் இப்படி...?" துடித்துப் போனான்.

"சில நேரம்..." வார்த்தையை முடிக்க முடியாமல் அவள் மீண்டும் வாந்தி எடுக்க....

"சரிம்மா.... சீக்கிரம் சரியாயிடும்.... நாம டாக்டரை பார்க்கலாம்..." அவளை தோளோடு தாங்கிக் கொண்டவன், அவள் நெற்றியை அழுத்தி விட்டான்.

அனன்யாவுக்கு கண்கள் இரண்டும் கலங்கிப் போனது. அதென்னவோ.... அவளது தாய்க்கு யாராவது வாந்தி எடுப்பதைப் பார்த்தாலே, அவருக்கும் வாந்தி வந்துவிடும் என்பதால்.... அனன்யாவின் இப்படியான சூழலில் அவளை கொஞ்சநேரம் நெருங்கவே மாட்டார்.

அனன்யாவுக்கு விவரம் தெரியத்துவங்கிய பிறகு, தாயை அவள் அருகில் சேர்ப்பதும் இல்லை. ஆனாலும்.... சில வேளைகளில், தன்னை யாராவது தாங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும் என எண்ணியிருக்கிறாள், ஏங்கியிருக்கிறாள். அது நிறைவேறிப் போனதால் வந்த ஆனந்தக் கண்ணீர் அவள் கன்னம் நனைத்தது.

அவள் கண்ணீரைப் பார்த்தவன்.... "ம்ச்.... இதெல்லாம் ஒண்ணுமே இல்லம்மா... இன்னும் ரெண்டே நாளில் எல்லாம் சரியாப் போய்டும், இதுக்கெல்லாமா அழுவாங்க...?" கேட்டவன்.... தானே அவள் முகம் கழுவி விட்டவன், கோப்பையையும் அவனே சுத்தம் செய்தான்.

அவன் செய்கையில் பதறியவள்.... "ஐயோ.... நீங்க ஏன் இதையெல்லாம் செய்யறீங்க? நான் பாத்துக்கறேன்..." அவனைத் தடுக்க,

"அன்னம்.... நீ தண்ணியவே தொடக் கூடாது.... இதில், நீ கிளீன் பண்ணப் போறியா?" அவளை கடிந்துகொள்ள, அவனை இறுக கட்டிக் கொண்டாள். அந்த அணைப்பில், அவள் இதயம் தடம் மாறி, அவன் காலடியில் விழுந்தது மட்டும் உண்மை.

ஒரு நொடி, அவள் செய்கையில் திகைத்தவன், தானும் அவளை மென்மையாக அணைத்தவன், அவளை கைத்தாங்கலாக அழைத்து வந்து அமர்த்தினான்.

"சூடா ஏதாவது கொண்டு வரவா...?" கேட்டவனது தேகத்தை குளிர் பதம் பார்க்கத் துவங்கி இருந்தது.

"ம்ஹூம்..." மறுத்தவள், "இப்போ என்ன சாப்ட்டாலும் வொமிட் பண்ணிடுவேன். வெறும் வயித்தோட இருந்தால்தான் சரியாகும்..." அவன் கை பிடித்து தடுத்தவள், அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

இதற்காக.... இந்த நொடிக்காகத்தானே அவன் காத்திருந்தான். அவளை தோளோடு சாய்த்துக் கொண்டவன், கட்டிலில் சாய்வாக அமர்ந்து, அவளை தன்மேல் போட்டுக் கொண்டான்.

அவள் நெஞ்சுக்கூடு விம்மி தணிவதை அவனால் நன்கு உணர்ந்துகொள்ள முடிந்தது. அவளது துன்பத்தை வாங்கிக்கொள்ள முடியுமென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அவன் எண்ணம் அவன் அணைப்பில் தெரிந்ததோ என்னவோ.... அவன் நெஞ்சில் இருந்து நிமிர்ந்து அவனைப் பார்க்க,

தான் எண்ணியதை அவளிடம் அப்படியே உரைத்தவன், என்னால் முடியவில்லையே என்ற இயலாமையும் வெளிப்படுத்த, இப்படி ஒரு அன்பை அவன் தன்மேல் கொட்ட தான் என்ன தவம் செய்தோம் என அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

இது மஞ்சள் கயிற்றில் மாயம் என்று மட்டும் அவளால் சிந்திக்க முடியவில்லை, இது அதையும் தாண்டிய வேறு எதுவோ.... கடந்த ஒரு மாதமாக, அவனிடம் தொலைந்து போயிருந்த, அவளை வருடும் பார்வையை, அந்த நேரம்.... அவன் கண்களில் கண்டாள்.

காதல் பார்வை வேறாக இருக்கும், தேகத்தை தேடும் வேட்கை பார்வையும் வேறாக இருக்கும்.... இவற்றை விடுத்து.... அவன் பார்வை தன்னை தாலாட்டுவதை.... ஒரு மாதிரி கொண்டாடுவதை கண்டவளுக்குள், சிலபல பூகம்பத்தின் அதிர்வுகள்.

அவற்றில் சிக்கி.., தொலைந்து கொண்டிருந்தாள் அவள். அப்படியே அவன் கன்னம் தாங்கி.... அவன் பார்வைக்கான பொருளை கேட்க வேண்டும் என்ற ஆவலை அவளால் அடக்கவே முடியவில்லை.

"என்னங்க.... உங்க பார்வை எதையோ சொல்ல வருது.... என்ன அது...?" கேட்டே விட்டாள்.

அவன் பார்வையில் தெறிக்கும் மின்னலின் காரணம் அவளுக்குப் புரியவில்லை. "என்ன...?" தடுமாறினாள்.

அவனுக்கோ.... அவளை அப்படியே கட்டிக்கொண்டு.... 'இது நீ காப்பாற்றி கொடுத்த உயிர்.... அது உனக்கே சொந்தம்...' என கத்தி தீர்க்க வேண்டும் என்ற வேட்கை படர, முயன்று அதை அடக்கினான்.

இது அதைச் சொல்ல சரியான நேரமில்லை. தனக்குள் புலம்பியவன், "ஒண்ணும் இல்லை.... சும்மா..." உரைத்தவன் விழி மூட, மழையில் நனைந்ததின் தாக்கமாக, அவன் தொண்டை கரகரக்கத் துவங்கி இருந்தது.

அதே நேரம்.... தேகம் முழுவதும் ஆயிரம் ஊசிகளைக் கொண்டு துளைக்கும் உணர்வு. கம்பளியை நன்றாக இழுத்து, காதுவரை மூடிக் கொண்டான்.

ஸ்வெட்டர் வாங்கி வருகிறேன் எனச் சென்ற வேலாயுதம்.... கடை பூட்டியிருக்கிறது என திரும்பி வந்திருந்தார். அவரிடமும் புதிதாகவோ, அவனுக்கு கொடுக்கும் அளவுக்கு நல்ல ஸ்வெட்டர் இல்லாததால், அதைப்பற்றி கேட்க கூட இல்லை.

மாலை வரை நேரத்தை நெட்டி தள்ளியிருக்க, இரவு உணவுக்குப் பிறகு, அவனால் தாங்கவே முடியாது என்ற வேதனை. அவசரத்துக்கு இருந்த மாத்திரைகளை உபயோகப்படுத்தினாலும், குளிருக்கு என்ன செய்வது? மழை சற்று நின்றிருக்க.... குளிர் முழு வீச்சில் அதன் வேலையக் காட்டத் துவங்கியது.

இப்பொழுது அனன்யாவுக்கு அவள் வீசிங்கை விட, அவனது நடுக்கம்தான் மிகுந்த கவலையை அளித்தது. தயக்கமாக தன் ஸ்வெட்டரை கழட்டியவள், "என்னங்க.... இதை நீங்க போட்டுகோங்க. உங்களுக்கு குளிரில் ஜன்னியே வந்துடும் போல.... எனக்கு பயம்மா இருக்கு..." நிஜமாகவே அவள் கண்களில் பயம்.

"நக்கல் தானே.... ஆம்பளை எனக்கே குளிர் தாங்கலை.... இதில்.... உனக்கு இந்த கிளைமேட் ஒத்துக்கவே செய்யாது.... நீ எனக்காக பாக்குறியா?" பற்கள் குளிரில் இறுகிக் கொள்ள, கம்பளிக்குள் சுருண்டவன் முனகினான்.

"வேண்ணா..." அவள் சொல்லத் தயங்க, புருவ மத்தியில் முடிச்சிட அவளை ஏறிட்டவன், 'மேலே சொல்' என்பதுபோல் பார்த்தான்.

அவளுக்கோ.., சொல்ல வந்ததை சொல்ல முடியாமல், இதயம் படபடக்க, அவனுக்கு முகம் காட்டாமல் திரும்பிக் கொண்டாள். அவள் செய்கையை புரியாமல் ஏறிட்டவன், 'இவ எதுக்கு இப்போ இப்படி திணறுறா? ஆண்டவா கொல்றாளே.... எனக்கு சக்தி கொடு...' அவன் மனம் புலம்பியது.

"வேண்ணா..." அவள் மேலும் தயங்க, "ஏய்.... விட்டா ஒரே ஸ்வெட்டரை ரெண்டுபேரும் போட்டுக்கலாம்னு சொல்லுவ போல..." அவன் என்னவோ, அவள் தயக்கம் பார்த்து கேலியாகத்தான் உரைத்தான்.

அவளோ.... சட்டென அவன் பக்கம் திரும்பியவள், அவன் முகம் பாராமல், தலையை மேலும் கீழுமாக அசைத்தாள்.

"வாட்..." அதிர்ந்துபோய் கத்தியவன், நிச்சயம் இப்படி ஒரு பதிலை அவளிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை.

அவளோ.... இதற்குமேல் எதுவும் பேசப்போவதில்லை என்ற உறுதியோடு, அவன் அருகில் ஸ்வெட்டரை வைத்துவிட்டு, அழுத்தமாக அமர்ந்து கொண்டாள்.

அந்த நேரம் அவளுக்கு எதைப் பற்றிய நினைவும் இருக்கவில்லை. அவள் கண்ணிலும், கருத்திலும் நிலைத்திருந்தவன் நகுல் மட்டுமே.

அவனோ.... 'முருகா.... நான் இவகிட்டே இருந்து தப்பிக்க வழி கேட்டா.... நீ அவ காலடியில் விழ வழி காட்டுறியே. நான் தாங்கவே மாட்டேன்...' இப்பொழுது அவனுக்கு மூச்சடைக்கும்போல் இருந்தது.

"அன்னம்.... என்ன பிடிவாதம் இது? ஸ்வெட்டரை எடுத்து போட்டுக்கோ. உனக்கு மூச்சு திணறுது பார்..." "நான் சம்மாளித்துக் கொள்வேன்..." "ஹீட்டர் இருக்குல்ல.... பரவாயில்லை..." விதம் விதமாக அவன் பேசிய எதுவும் அவள் காதில் ஏறவே இல்லை.

"நான் சொன்னதைக் கேட்டு.... என்னை நினைத்தால் உங்களுக்கு கேவலமா இருக்கா?" அவள் குரலில் அவ்வளவு நடுக்கம். நிச்சயம் அவள் அழுகிறாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

"ஏய்.... நான் எதுக்கு உன்னை கேவலமா நினைக்கணும்? நீ என் மனைவி. என்கிட்டே என்ன வேண்ணா பேச உனக்கு உரிமை இருக்கு..." முரட்டுத் தனமாக அவள் தோளைப் பற்றி திருப்பினான்.

அவனுக்கு தாங்கவே முடியவில்லை. அவளை தன் உயிராக நினைக்க, அவள் இப்படிப் பேசினால் அவனும் என்னதான் செய்வான். அவளுக்கு தான் யார் என்பதை உணர்த்திவிடும் வேகம்.... கோபம் கண்ணை மறைக்கும் என்பதை அந்த நேரம் அவன் செய்கை உணர்த்தியது.

கோபம் இனிக்குமா? அவனது கோபம் அவ்வளவு இனிப்பாகத்தான் இருந்தது. அவனை விழி விரித்து நோக்க, முரட்டுத்தனம் சற்றும் குறையாமல் அவளை அருகே இழுத்தவன், தன் இதழை அவள் இதழோடு அழுத்த புதைத்துக் கொண்டான்.

‘ஹங்...’ அவள் விழிகள் சாசர்போல் விரிய, அவனோ.... தன் நிலையை அவளுக்கு உணர்த்திவிடும் வேகத்தில் இருந்தான். அவன் கரங்கள் இரண்டும் அவள் கூந்தலை கொத்தாக பற்றிக்கொண்டு, தன்னோடு இறுக்கமாக அவள் இதழைப் பிணைக்க.... அவள் கரமோ.... அவன் டிஷர்ட்டை அழுத்தமாக பற்றிக் கொண்டது.

உலகம் தன் இயக்கத்தையே நிறுத்திவிட்டதாகவே இருவருக்கும் தோன்றியது.

23

சென்னையின் ஓட்டத்தில் கலந்துவிட்டான் நகுல்.
தந்தையின் அலுவலகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவன், த்ரிஎம் ப்ரோடக்ட்டை மேம்படுத்துவதில் முனைந்தான்.

ஊட்டியிலிருந்து வந்து நாட்கள் மாதங்களைக் கடந்துவிட்டது. ஆனாலும்.., அதன் தாக்கத்தில் இருந்து அவனால் வெளியே வரவே முடியவில்லை.

அன்றைய இரவில்.... அந்த அலைபேசி அழைப்பு மட்டும் வராமல் இருந்திருந்தால்? ஒரு பக்கம் தவிப்பாக எண்ணிய அதே மனம், நல்லவேளை வந்ததே என நிம்மதியையும் அளித்தது.

அன்றைய முத்தத்தில் திளைத்திருந்தவனை, அனன்யாவின் அலைபேசி அழைப்புதான் கலைத்து, நடப்புக்கு இழுத்து வந்தது.

தான் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பது உறைக்க, தீ சுட்டாற்போல் அவளை விட்டு விலகியவன், தன் கன்னத்திலே ஓங்கி அடித்துக் கொண்டான். அலைபேசியை எடுக்கப் போனவள், வேகமாய் அவன் கரம் பற்றி தடுத்தாள்.

"இந்த தண்டனையை எனக்கும் கொடுப்பதுதான் சரியா இருக்கும்..." அவள் உரைக்க,

"ரியலி சாரி அன்னம்.... எதையோ சொல்ல வந்து.... கடைசியில்..." அவன் மன்னிப்பை வேண்ட, அவன் இதழை கையால் மூடியவள், "எனக்குப் புரியுது. இங்கே நான்தான் தப்பா இருக்கேன். கொடுத்த வாக்கா.... கட்டிய தாலியான்னு ஊசலாடிட்டு இருக்கிறேன்.

"ஆனால்.... ஒருத்தனுக்கு நம்பிக்கையை கொடுத்துவிட்டு.... இப்போ.... எனக்கே என்னை நினைத்தால் அசிங்கமா இருக்கு. நீங்க ஏன் இவ்வளவு நல்லவரா இருக்கீங்க நகுல்.... ஏன்...?" அவனைப் பிடித்து உலுக்கியவள், முகத்தை மூடிக்கொண்டு அழுது கரைந்தாள்.

அவள் மனம் எதை விரும்புகிறது? எதை நாடுகிறது என்றே அவளுக்குத் தெரியவில்லை. இந்த நொடி கூட.., நகுலை விட்டு விலக முடியாது என அவள் மனம் உரைக்க, அப்படியென்றால் ஒரு வருடம் கழித்து...? அவளால் சிந்திக்கவே முடியவில்லை.

'நான் உன் மனைவியாகவே வாழ்ந்து விடுகிறேனே...' அவளுக்கு கதறித் தீர்க்கவேண்டும்போல் இருந்தது. அப்படிச் சொன்னால்.... அவன் தன்னைப்பற்றி என்ன நினைப்பான்? இந்த கேள்வி அவளை உலுக்கிப் போட்டது.

'அப்படியென்றால் வேந்தன்...?' இந்த கேள்விக்கு.... அவளிடம் பதில் இருக்கவில்லை.

அவனோ.... முதன் முதலாக தன்னவள்.... தன்னை பெயர் சொல்லி அழைத்ததில் சிக்கிக் கொண்டிருந்தது. அந்த அழைப்பு அவனுக்கு உணர்த்தியது ஒன்றுதான்.... அது.... அவள் மனதுக்குள் தான் நுழைந்து விட்டோம் என்பதை.

அதன் பிறகு வந்த நாட்களை ஊட்டியில் எப்படி கழித்தார்கள் என்பதைக் கேட்டால் இருவரிடமும் பதில் இருக்கவில்லை.

நிலைமை சீராகி.... அவர்கள் கோவைக்குச் செல்ல, நகுல் கெவினோடு இணைந்துகொண்டு, கோவை நாட்களை அழகாகவே மாற்றினான். அவனது ஒவ்வொரு செய்கையும், பெற்றவர்களுக்கு இன்னொரு மகனாகவே மாறிய விதமும், அவன்பால் மனதை இழுத்துச் சென்றது.

கணவன் என்பவன்.... முதல் தோழனாகவும், தாங்குவதில் தலைவனாகவும், அரவணைப்பில் தாயாகவும், சேவையில்

செவிலியாகவும் இருப்பான் என்றால்.... நகுல் அது அனைத்துமாகவும் தனக்கு இருப்பதை எண்ணி நெஞ்சில் பெருமிதம் வழிந்தது.

இதையும் தாண்டி.... வேந்தனின் நினைவு மட்டும் நெருஞ்சி முள்ளாக மனதை தைத்தது. அவள் நினைப்பு புரிந்தவனாக.... சரியாக அந்த நேரம் அழைக்க, அலைபேசியை பார்த்தவளுக்கு, எரிச்சல் வந்தாலும், அலைபேசியை எடுத்தாள்.

"சொல்லு வேந்தன்..." அவள் எரிச்சலை மறைத்துக்கொண்டு கேட்க,

"அட.... என் பேர் கூட ஞாபகம் இருக்கு. நான் மறந்து போயிருக்குமோன்னு நினைத்தேன்..."

"ச்சீ.... வாயை மூடு..." வெடித்தாள்.

"என்ன கோபம்...? ஓ..... ஹனிமூன் ட்ரிப்பில் டிஸ்டப் பண்ணிட்டனோ?" விஷமமாக வெளி வந்தது அவன் குரல்.

"இதைக் கேக்கத்தான் போன் பண்ணியா?".

"அது மட்டும் இல்லை.... எனக்கு கொடுத்த வாக்கு ஞாபகம் இருக்கான்னு தெரிஞ்சுக்கலாம்னு கால் பண்ணேன்..."

"இதை இவன் விடவே மாட்டானா?’ அவளுக்கு ஆற்றாமையாக வந்தது.

இவை அனைத்தையும் அவளது ஒற்றை வார்த்தை சரி செய்துவிடும் என்பது அவளுக்குத் தெரியவில்லை. நகுலிடம் தன் எண்ணத்தை பகிர்ந்திருந்தால், அடுத்த நிமிடமே அவள் பிரச்சனை ஒன்றுமில்லாததாக மாறிப் போயிருக்கும்.

ஆனால்.... தன் சிக்கலை தானே தீர்த்துக்கொள்ள வேண்டும் என எண்ணினாள். அதன் விளைவுதான்.....

இந்த தடுமாற்றமும், கஷ்டமும்.

"இப்போ எதுக்கு போன் பண்ண? அதைச் சொல்..." கடுப்பை மறைக்காமல் கேட்டாள்.

"புது தொடப்பம் நல்லா பெருக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன்.... அதை இப்போதான் பாக்கறேன்..." சம்பந்தமே இல்லாமல் அவன் உரைக்க, ஒரு நொடி யோசித்தவள், அதன் அர்த்தம் புரிய, அவளுக்கு அருவருத்துப் போனது.

‘இவன் இப்படிக் கூட பேசுவானா?’ அதிர்ந்து போயிருந்தாள்.

தன்னைத் தெளிந்தவள், "அவரைப்பற்றி பேச உனக்கு எந்த அருகதையும் கிடையாது..." அவள் வெடித்துக் கொண்டிருக்க, அப்பொழுதுதான் அவள் அறைக்குள் நுழைந்தான் நகுல்.

ஒரு நொடி அவளை ஏறிட்டவன், அறையை விட்டு வெளியேறி இருந்தான். அவன் செய்கையைப் பார்த்தவள், அதற்குமேல் பேசாமல் அலைபேசியை அணைத்தவள், அவன் பின்னால் ஓடினாள்.

"என்னங்க...?" அவனிடம் கேட்க,

"இல்ல சென்னைக்கு கிளம்பலாமான்னு கேட்க வந்தேன்..." உரைத்தவன், தாங்கள் பேசுவதை மற்றவர் கேட்க வேண்டாம் எனக் கருதி, அவள் அறைக்குள் மீண்டும் நுழைந்தான்.

அவன் தான் பேசியதை கேட்ட பிறகும், என்னவென்று கேட்காத அவன் தன்மையும், வெறுமையான அவன் பார்வையும் அவளை உலுக்க, "வேந்ததான் பேசினான்..." அவனிடம் அவளாகவே சொல்ல,

"ஓ..." அதற்குமேல் அவனிடம் எந்த பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

"ஏதாவது சொல்லுங்க..." அவன் அமைதியும் விலகலும் அவளைக் கொன்றது.

"நான் இதில் என்ன சொல்ல...? உன் வாழ்க்கை.... நீதான் முடிவெடுக்கணும்" எதுவாக இருந்தாலும் எனக்குச் சம்மதம் என்ற அவன் பேச்சு.... அவள் நெஞ்சை சுட்டது.

‘அப்படியென்றால்.... நான் இருந்தாலும், இல்லையென்றாலும்.... இரண்டும் இவருக்கு ஒன்று தானா? அப்போ.... என்மேல் காட்டும் அக்கறைக்கும், நேசத்துக்கும் என்ன அர்த்தம்? அவரோடு இருக்கும் வரைக்கும் என்னை பார்த்துகொள்வது அவரது கடமை என்று எண்ணுகிறாரோ...? அதற்குமேல் எதுவும் இல்லையா...?’ அழவேண்டும்போல் இருந்தது.

அவனுக்கோ.... அவள் முதலில் தன்னைத் தெளிய வேண்டும் என விரும்பினான். அவள் மனதுக்குள் இருக்கும் நேசத்தை அவள் முதலில் உணரட்டும்.... அவள் தன் நேசத்தை தன்னிடம் வெளிப்படுத்திய மறு நிமிடம், தன் நிலையை அவளுக்கு உணர்த்தலாம் என முடிவெடுத்தான். வாழ்க்கைக்கு எது முக்கியம் என அவள் முடிவெடுக்கட்டும் என, அமைதியானான்.

மகளின் மூலம்.... நகுல் அவளை கவனித்துக் கொண்டதைக் கேட்ட அவளது பெற்றோர்கள் நெகிழ்ந்துதான் போயிருந்தார்கள். தாங்களாக பார்த்திருந்தால் கூட, இப்படி ஒரு மருமகனை கண்டடைந்திருக்க முடியுமா? என்பது அவர்களுக்கு மிகப்பெரிய கேள்வியாகவே இருந்தது.

அவர்கள் அன்பின் மழையில் நனைந்தவன், மழையில் நனைந்ததால் பிடித்திருந்த சளிக்கு இதமாக, அவள் தாய் வைத்துகொடுத்த மிளகு ரசத்தில், சீக்கிரமே நலமடைந்து, சென்னைக்குத் திரும்பினார்கள்.

ஏற்கனவே நவீனின் மூலமாக தாயின் சந்தேகத்தை அறிந்திருந்தவன், வந்த நாள் முதலே புது வேலையை சாக்கிட்டு ஓடிக் கொண்டிருக்கிறான். அதற்கு முக்கிய காரணமே.... தாயுடன் பேசினால், தன்னை அறியாமலே எதையாவது உளறி விடுவோம் என்பதை உணர்ந்தே இருந்தான்.

வேலையை திட்டமிடுவது என்னவோ மிகவும் சுலபமாக இருந்தது. ஆனால்.... அதற்காக இறங்கிய பிறகுதான், அதில் இருக்கும் சில பல நடைமுறை சிக்கல்களையே அவன் உணர்ந்தான்.

அரசியல்வாதிகள் துவங்கி, அதிகாரிகள் வரைக்கும், பணம் மட்டுமே பேச முடிந்தது. அவனது திட்டத்துக்கான அனுமதி வாங்குவதற்குள்ளாகவே சற்று திணறித்தான் போனான். அத்தோடு.... வருணாவின் வளைகாப்பு வேலைகள் வேறு அவனை இழுத்துக் கொள்ள, அந்த வேலையை கவனிப்பதே பெரியவர்களுக்கு போதுமானதாக இருந்தது.

பார்வதி கவனித்தவரை, அனன்யா நகுலோடு ஒற்றுமையாக அனைத்திலும் செயல்பட, தன் குழப்பங்களை சற்று ஒதுக்கி வைத்தவர், மகளை கவனிப்பதில் முனைந்தார்.

ஒரு சுப தினத்தில், வருணாவின் வளைகாப்பு முடிந்து, வீட்டுக்கே அவளை அழைத்து வந்து விட்டார்கள்.

அன்று, தங்கள் பொருட்களை தயாரிக்க, மெஷின்கள் வாங்க வேண்டி இருந்ததால்.... அதைப் பற்றி விசாரிக்கச் சென்றவனுக்கு, அதன் விலை, பெரும் திகைப்பாக இருந்தது. அவர்களிடம் பிறகு தொடர்புகொள்வதாக உரைத்தவன், அலுவலகம் வந்து சேர்ந்தான்.

தன் அறையில் தலையில் கைவைத்துக் கொண்டு அவன் அமர்ந்திருக்க, "நகுல்.... என்னப்பா.... ஏன் ஒரு மாதிரி

இருக்க...?" அவன் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தவர் கேட்டார்.

"அப்பா.... ரொம்ப டென்ஷனா இருக்கு. நேர்மையா ஒரு விஷயத்தை செய்ய நினைத்தால்? இப்படியா...? எங்கே போனாலும் பணம்..." அலுப்பாக உரைத்தான்.

"என்னப்பா செய்ய...? நேர்மைக்கு சில சோதனைகள் வரத்தான் செய்யும். இன்னைக்கு ரொம்ப களைப்பா தெரியற.... நீ வீட்டுக்கு கிளம்பு. மிச்சத்தை பிறகு பாத்துக்கலாம்..." அவர் உரைக்கவே, தலை வேறு வலிப்பதுபோல் இருக்க, வீட்டுக்கு கிளம்பிவிட்டான்.

கடந்த இரு மாதங்களாக.... இரவு பகல் பாராமல் உழைத்த மகன், இன்று வீட்டுக்கு சீக்கிரம் வரவே.... "வாப்பா.... என்ன இன்னைக்கு சீக்கிரம் வந்துட்ட...?" கேட்ட பார்வதி, அவனிடமிருந்து லேப்டாப் பேகை வாங்கிக் கொண்டார்.

ஹாலில் அமர்ந்திருந்த வருணாவின் அருகில் அமர்ந்தவன், "வருணா.... என்ன வாக்கிங் போகலையா? வழக்கமா நீ இந்த நேரம் வீட்டில் இருக்க மாட்டியே..." தன் டையை தளர்த்தியவாறு அவளிடம் கேட்டான்.

வருணாவுக்கு எட்டாம் மாதம் முடிந்து, ஒன்பதாம் மாதம் துவங்கி இருந்தது.

"இன்னைக்கு அவர் கொஞ்சம் வேலை இருக்குன்னு சொன்னார்ண்ணா.... அதான்...".

"ஓ..." காலை நீட்டியவன், டீபாயின்மேல் வைத்துக் கொண்டான்.

"நகுல்.... ரூமுக்கு போகாமல் இங்கேயே உக்காந்துட்ட...?" அவன் பேகை ராக்கில் வைத்தவாறு, அவனிடம் வினவினார் பார்வதி.

"ரொம்ப டயடா இருக்கும்மா. பயங்கரமா தலை வலிக்குது..." அவன் உரைத்த அடுத்த நிமிடம்,

"என்னப்பா சொல்ற.... தலை வலிக்குதா? வா முதல்ல ஹாஸ்பிடல் போகலாம்..." தன் வயதை மறந்து அவனிடம் ஓடி வந்தார்.

"அண்ணா.... ரொம்ப வலிக்குதா? டாக்டர் கொடுத்த மருந்து இருக்கா? எங்கே இருக்கு...?" தன் வயிற்று பிள்ளையை மறந்து வருணாவும் பதறினாள்.

"அம்மா.... பாத்து...." தடுமாறிய தாயை தாங்கியவன், "வருணா.... கூல்..." ஒரே நேரம் இருவரையும் அமைதிபடுத்தினான்.

அவர்களது செய்கையை கேள்வியாகப் பார்த்தவாறே.... படியில் இறங்கி வந்தாள் அனன்யா. ஒரு சாதாரண தலை வலிக்கு ஏன் இவ்வளவு பதட்டம்? அவளுக்குப் புரியவில்லை.

இருந்தாலும்.... அவன் தலைவலி என்று சொன்னதால்.... கிச்சனுக்கு காபி போடப் போனாள். தாங்கள் இங்கே பதற, கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் சென்ற அனன்யாவை பெண்கள் இருவரும் வியப்பாய் பார்த்தார்கள்.

அதை கவனிக்காத நகுல்.... "அம்மா.... உங்களுக்கு வயசு இறங்கிட்டே இருக்குறதா நினைப்பா? இப்போ விழுந்திருந்தால் என்ன ஆகி இருக்கும்? ஏய் லூசு.... பிரசவம் இப்பவோ, அப்பவோன்னு இருக்கு.... இப்படி பதறிட்டு எழுந்தால்.... பிள்ளைக்கு ஏதாவது ஆனால்..." அவர்களை கடிந்து கொண்டவன், இருவரையும் அமர வைத்தான்.

அதே நேரம்.... அனன்யா கையில் காபியோடு வர, "அனு.... அண்ணா தலை வலிக்குதுன்னு சொல்றான்..." வருணா சற்று கோபமாக உரைப்பதாக அவளுக்குத் தோன்றியது.

"அதான் அவங்களுக்கு காபி எடுத்துட்டு வந்தேன் வருணா..." சாதாரணமாக உரைத்தவள், அதை அவனிடம் கொடுத்தாள்.

"அண்ணாவோட தலைவலிக்கு காபியா...? என்ன விளையாடுறியா நீ...?" அவளுடனான நெருக்கம், அவளை உரிமையாக கேள்வி கேட்கத் தூண்டியது.

"ஏன்.... உங்க அண்ணா தலை வலிக்கு காபி குடிக்க மாட்டாங்களா?" புரியாமல் கேட்டாள்.

தாயும் மகளும் சட்டென பார்வையை பரிமாறிக் கொண்டவர்கள், நகுலைப் பார்க்க, அப்பொழுதுதான் தான் அவளிடம் உண்மையை உரைக்கவில்லை என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியாது என்பதை உணர்ந்தவன், கண்டிப்பாக தடுமாறித்தான் போனான்.

நிலைமையை சம்மாளித்தே ஆகவேண்டும் என எண்ணியவன், "பாத்தீங்களா.... நீங்க எல்லாம் இன்னும் என்னை பேஷண்டா பாக்குறீங்க. என் பொண்டாட்டி எவ்வளவு தைரியமா நிலைமையை சம்மாளிக்கிறா பாருங்க. அவளைப் பாத்து கத்துக்கோங்க..." அவர்களிடம் உரைத்தவன்,

"நீ காபி கொடு அன்னம். அவங்க கிடக்காங்க.... உன் காபி குடித்தால் தலைவலி பறந்து போய்டாது..." அவளைப் பார்த்து கண்ணைச் சிமிட்ட, அனன்யாவோ.... படபடவென இமைகள் கொட்டி விழித்தவள், அத்தையும், வருணாவும் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து, கன்னம் சிவந்து போனாள்.

"போங்க..." உரைத்தவள், அங்கிருந்து நழுவ,

"சர்வேசா.... இந்த பொண்ணு வெக்கப் படுத்து பாருங்களேன்..." வருணாவின் கேலிக் குரல் அவளைத் தொடர்ந்தது.

"டேய் அண்ணா.... பக்கத்தில் அம்மாவும் தங்கச்சியும் இருக்கும்போதே இவ்வளவு படம் ஓட்ற.... உனக்கு ரொம்ப தைரியம்டா..." அவன் தோள் தட்ட,

"ஏய்.... சும்மா இருடி.... புள்ளையை கண்ணு வைக்காதே..." பார்வதி கடிந்தார்.

"புள்ள சைட் அடிக்கிறது தப்பில்லையாம்.... நான் சொல்றது தப்பாமாம். எல்லாம் காலக் கொடுமைடா சாமி..." வருணா உரைக்க, நகுலின் பார்வை தன்னவளை தேடிச் சுழன்றது.

"சரிம்மா.... நான் ப்ரெஷ் ஆகிட்டு வரேன்..." அவன் எழுந்துகொள்ள முயல,

"இப்போ தலைவலி எப்படிப்பா இருக்கு?" ஒரு அன்னையின் பரிதவிப்பு அவரிடம்.

"அம்மா.... அனு கையால் காபி குடிச்ச உடனேயே எல்லாம் அவனுக்கு பறந்து போயிருக்கும்..."

"பாருங்க சரியா சொல்லிட்டா.... எல்லாம் போயே போச்சு..." உற்சாக குரலில் உரைத்தவன் எழுந்து போனான்.

அறைக்குள் நுழைந்தவனை எதிர்கொண்டது அனன்யாவின் துளைக்கும் பார்வையே.

‘அடுத்த போராட்டமா?’ எண்ணியவன், அவளைத் தவிர்த்துவிட்டு, குளிக்கச் செல்லத் திரும்பினான்.

"எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்...?" அவளது குரல், அவன் முதுகின் பின்னால் கேட்டது.

"என்ன உண்மை...?" அவள் பக்கம் திரும்பினான்.

"உங்களுக்கு தலையில் ஏதாவது பிரச்சனையா?".

"என்ன.... லூசான்னு கேக்கறியா...?" ஒற்றை புருவம் தூக்கி அவன் வினவ, அவன் குறும்பை அந்த நேரம் ரசித்தாள்.

"அதுதான் எனக்கே தெரியுமே..." வேகமாக உரைத்தவள், சட்டென நாக்கை கடித்துக்கொள்ள, பக்கென சிரித்துவிட்டான்.

அவன் சிரித்த பிறகுதான் அவளுக்கு மூச்சே வந்தது. அவனும்.... அவளை சம்மாளித்துவிட்டோம் என்ற நினைப்பில் குளிக்கச் சென்றுவிட்டான்.

அவன் சென்ற பிறகுதான்.... தன் கேள்விக்கு அவன் பதில் சொல்லாமல் சென்றதே அவளுக்கு உறைத்தது. அதற்குமேல் துருவிக் கேட்க அவளுக்கு முடியாமல், இனிமேல் அவனுக்கு தலைவலி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவோடு வேலையை பார்க்கச் சென்றாள்.

வாங்க வேண்டிய மெஷின்கள் இந்தியாவில் விலை அதிகமாக இருக்க, வெளிநாட்டுக்குச் சென்று அதை வாங்குவது என முடிவெடுத்தான்.

ஆனால்.... அடுத்திருக்கும் தங்கையின் பிரசவம், அவனை அதைச் செய்ய விடாமல் தடுத்தது. அன்று அலுவலகத்தில் இருந்து, வீட்டுக்கு வந்தவனை, மிகவும் பதட்டத்தோடு வரவேற்றது அனன்யாவின் முகம்.

24

அலுவலகத்தில் வேலையை முடித்துவிட்டு, அதீத களைப்போடு வீட்டுக்குள் நுழைந்தவன், பொன்னம்மாவோடு சேர்ந்து, ஹாலில் இருந்த ராக்கை சுத்தம் செய்துகொண்டிருந்த அன்னையைப் பார்த்தவன், "அன்னம் எங்கேம்மா..." கேட்டவாறு, சோபாவில் அமர்ந்து சாக்ஸை கழட்டினான்.

"அனு, ரூம்ல இருக்காப்பா. அவளுக்கு இந்த டஸ்ட் எல்லாம் ஒத்துகாதுன்னு நான்தான் பிடிவாதமா அனுப்பி வச்சேன்.... என்னப்பா ரொம்ப களைப்பா தெரியற.... ரொம்ப வேலையா...?" அவன் அருகில் வந்து அமர்ந்தார்.

அவர் மடியில் படுத்துக் கொண்டவன், "ம்.... புது ப்ளான்ட் வேலை நடந்துட்டு இருக்கே.... அதான்..." இமைகளை மூடிக் கொண்டான்.

"வருணா எங்கேம்மா.... ஆளையே காணோம்?".

"அவ நவீனோட ஹாஸ்பிடல் போயிருக்காப்பா...."

"என்னம்மா.... போன வாரம்தான் போயிருந்தா...? இப்போ மறுபடியும்...? அவளுக்கு உடம்புக்கென்ன...?" பதட்டமானான்.

"நகுல்.... அவளுக்கு உடம்புக்கெல்லாம் எதுவுமில்லை, எட்டு மாசத்துக்குப் பிறகு, வாரம் வரம் போகணும்..." அவனுக்கு புரிய வைத்தார்.

"ஓ..." கேட்டவன் மீண்டும் இமை மூடிக் கொண்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகான அவனது செய்கை அவரை நெகிழ்த்தியது. அவனுக்கோ.... என்று அனன்யாவுக்கு வீசிங் ப்ராபளம் இருக்கிறது என்று தெரிய வந்ததோ.... அன்றுமுதல், சாப்பாட்டு விஷயம் துவங்கி, குடிக்கும் தண்ணீர் முதல், சூழல் வரை, அவளை எதுவும் தொல்லை

செய்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும் தாயை நினைத்து உருகியது.

"இப்போ.... நம்ம வருணாவோட வளைகாப்புக்கு தானேம்மா எல்லாத்தையும் கிளீன் பண்ணீங்க... பிறகு ஏன் மறுபடியும் கலைக்கறீங்க?" விழி மூடியே இருக்க, தாயின் தலை வருடலை ரசித்தவாறு கேட்டான்.

"நீ சொல்றது சரிதான்ப்பா.... அப்போ அடுக்கியபோது சில பொருட்கள் இடம் மாறிடுச்சு, அதைத்தான் சரியா அடுக்கிட்டு இருந்தோம், வேற ஒண்ணும் இல்லை..." பொறுமையாக அவனுக்கு விளக்கினாலும், மனதுக்குள் சிறு நெருடல்.

மகன் தன் மடி சாய்வது அவருக்கு பிடித்திருக்கிறது தான்.... ஆனாலும்.... புதிதாக திருமணமானவன், அதுவும், காதல் மணம் புரிந்தவன், இப்பொழுதும் தன் மடி நாடுவதை அவ்வளவு சுலபமாக ஏற்க முடியவில்லை.

நகுலின் கார் ஓசை கேட்டு அறையில் இருந்து வந்தவள், அவன் தன் தாயின் மடி சாய்ந்திருப்பதைப் பார்த்து, இன்னவென்றே புரியாத ஒரு உணர்வுக்கு ஆட்பட்டாள். அவன் தன்னை தாங்கிய சூழல்கள் அவள் நினைவிற்கு வர, அவனுக்கு தான் எதுவுமே செய்வதில்லையோ.... மனம் சுருங்கிப் போனது.

மகனிடமிருந்து சற்று கலைந்த பார்வதி, மாடிப்படியின் துவக்கத்தில், தயங்கி நின்ற அனுவைப் பார்த்து, அவள் பார்வையில் தெரிந்த சிறு பொறாமையைப் பார்த்து, நிம்மதி கொண்டார். மகனின் மடிசாய்தலில் வேதனையையும், மருமகளின் பொறாமையையும் அவர் ரசிக்கிறார் என்றால், மகன் வாழ்க்கையின்மேல் எவ்வளவு அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும்.

"வாம்மா அனு.... ஏன் அங்கேயே நின்னுட்ட..." அவளைக் கலைத்தார்.

"ஹாங்.., அவங்களுக்கு காபி எடுத்துட்டு வரேன்ம்மா..." அங்கிருந்து அகன்றாள்.

"அன்னம்.... காபி வேண்டாம்.... சூட டீ..." அவன் குரல் தொடர, திரும்பிப் பார்த்தவள், தலை அசைத்துவிட்டு சென்றாள்.

டீ குடித்து முடிப்பதற்குள்ளாகவே, அவள் தன்னிடம் எதையோ சொல்ல தவிப்பதை உணர்ந்து கொண்டவன், "அம்மா.... நான் ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வரேன்..." எழுந்துகொண்டான்.

அறைக்குள் நுழைந்தவன்.... "என்ன அன்னம்...? எதையோ சொல்ல வர.... சொல்லு..." கட்டிலில் அமர்ந்தான்.

தன் விழியின் மொழியிலேயே தன் மன உணர்வுகளைப் படிக்கும் அவனை, விழியெடுக்காமல் பார்த்தாள். வாய்மொழியாக சொன்னால்தான் காதலா? அவனது ஒவ்வொரு வார்த்தையிலும், அக்கறையிலும் வழிவதற்கு பெயர் காதலல்லாமல் வேறென்ன...?' அவன் அன்பில் கரைந்தது அவள் மனம்.

அதை உள்வாங்கி.... தனக்குள் புதைத்துக்கொள்ள முடியாமல், தவிப்பாய் அவனை ஏறிட்டவள், "வேந்தன்..." ஏனோ.... இப்பொழுதெல்லாம் அவன் பெயரை நகுலிடம் உச்சரிப்பதே மரண வலியைக் கொடுத்தது.

"அவனுக்கென்ன...?" ஒட்டாத குரலில் கேட்டான்.

இப்படிக் கேட்பவனிடம் என்ன சொல்ல...?' மனம் தவித்தது.

"போன்..." இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

"விஷயம் என்னன்னு முழுசா சொல்லு அன்னம்.... என்னால் பொறுமையா கேட்க முடியலை..." முதல் முறையாக அவனது எரிச்சலை காண்கிறாள்.

அவள் கண்கள் கலங்கிவிட.... "ம்ச்.... இப்போ என்ன சொல்லிட்டேன்னு அழற...? என்னன்னு கேட்டது குத்தமா..?" தலையை அழுந்த கோதிக் கொண்டான். மனம் முழுக்க தன்மேல் நேசத்தை சுமந்துகொண்டு, தேவையற்ற சுமையாக.... அவனையும் போட்டு குழப்பிகொண்டால் அவனும் என்னதான் செய்வான்?

காதலுக்கும், கருணைக்கும் வித்தியாசம் தெரியாத மடச்சியாகவா ஒருத்தி இருப்பாள்? அவளோடு போராடி அலுத்துதான் போனான். தன்னை விட்டுகொடுக்கவே முடியாது என நினைப்பவள், தன்னை விட்டும் இருக்க முடியாது என தவிப்பவள், ஏன் வேந்தனது சத்தியத்துக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டும்?

அவள் காதல் உறுதியானதாக, வேந்தன் அவள் மனதுக்குள் நீங்கா இடம் பிடித்திருந்தால்? அவனே அவளை தூர விலக்கித் தள்ளியிருப்பான்? அது தனக்கு உயிர் வலியைக் கொடுத்தாலும் செய்திருப்பான்.

வேந்தன் அவள் மூளையில் உறுத்துவதைத் தவிர, அவள் மனதைத் தீண்டியே இருக்கவில்லையே. அதை இவள் ஏன் யோசிக்க மறுக்கிறாள்? அவனுக்கு ஆற்றாமையாக வந்தது.

ஒவ்வொரு நாளும் அவள் தன்னிடமே நிலைத்துவிட மாட்டாளா என்ற எதிர்பார்ப்பில் ஏங்கித் தவிக்கும் மனதை அவன் என்ன சொல்லி சமாதானப்படுத்துவது?

அவள் பதில் பேசாமல் நிற்கவே, "கொஞ்சம் குரல் உசத்திட்டா.... உடனே உறைஞ்சுபோய் நின்னுடு.... அவன் என்ன சொன்னான்?" அவளை தன் அருகில் இழுத்து அமர வைத்துக் கொண்டான்.

"அ..வ..ன்.... தங்..கச்சிக்கு கல்..யாண..மாம்.... நான்.... அண்ணி..." அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, தன் கையை அவளிடமிருந்து உருவிக் கொண்டான்.

அவன் செய்கையில் துடித்துப் போனவள், வேகமாக அவன் இடக்கரத்தை கோர்த்து, அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

கூடவே.... "எனக்குத் தெரியலை.... அவனை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு சுத்தமா புரியலை. அவன் எதைக் காட்டி மிரட்டினால் கூட பரவாயில்லை.... அவன்.... அவனோட உயிரைக் காட்டி மிரட்டும்போது.... ஒரு உயிரை முழுசா பறிகொடுத்த என்னால்.... அதை அவ்வளவு சுலபமா எடுத்துகொள்ள முடியலை..." அவன் கை ஒன்றே ஆதாரம் என்பதுபோல், தன் இரு கரத்தையும் சேர்த்து பற்றிக் கொண்டாள்.

"அதான் அவன் மிரட்டுறான்னு தெளிவா தெரியுதுல.... பிறகென்ன...?" அவன் கேள்விக்கு அவளிடம் பதில் இருக்கவில்லை.

"சரி.... இப்போ நானும்.... நீ என்னைவிட்டு போய்ட்டா தற்கொலை பண்ணிப்பேன்னு சொன்னால்..." வேகமாக தன் கரத்தால் அவன் வாய் மூடியவள், நீர் வழியும் விழிகளோடு அவனை ஏறிட்டவள்,

"நானும் கூட சேர்ந்து செத்துப் போறேன்னு சொல்லுவேன்...." இப்பொழுது அவன் கழுத்தை வளைத்தவள், அவனை இறுக கட்டிக் கொண்டாள்.

அவளைவிட அதிகமாக அவளை இறுக்கியவன், 'கூடவே சேர்ந்து செத்துப் போறேன்னு சொல்றவ.... கூட வாழ்வேன்னு சொல்ல மாட்டேங்குறியே... அப்போ.... என்னோட வாழ முடியாமல் தவிக்கிற அளவுக்கா அவன் சுயநலத்துக்கு மதிப்புக் கொடுக்கிறாய்...?' வேதனையாக எண்ணியது அவன் மனம்.

அதே நேரம்.... தன்னோடு கூடவே சேர்ந்து செத்துப்போகும் அளவுக்கு, தன்மேல் நேசம் வைத்திருப்பதை எண்ணி பூரித்துப் போனான். உயிரின் வலியை உணர்ந்தவள், ஒரு உயிர் போய்விடக் கூடாது என மருகுபவள், தனக்காக தன்

உயிரைத் துறக்க நினைப்பதை எந்த விதத்தில் எடுத்துக் கொள்ள?

தன் தோளில் சாய்ந்து குலுங்கி அழும் அவளை தாங்கிக் கொண்டான்.

சற்று பொறுத்தவன், "என் பொண்டாட்டியை அழவே விடக் கூடாதுன்னு நான் நினைத்தால்.... ஒவ்வொரு நாளும் உன் அழுகையை கையாலாகாமல், கைகட்டி வேடிக்கை பார்க்க வைக்கிறாய் அன்னம். ப்ளீஸ் அழாதே..." அவளை விலக்கும் எண்ணமே அவனுக்கு இருக்கவில்லை.

அவளுக்கும் அந்த நினைப்பு இருந்ததாகத் தெரியவில்லை. சற்று நேரம் கழித்து, தன்னை சுதாரித்து விலகியவள், அவன் முகம் பார்க்கத் தயங்க, "சரி.... நீ மிச்சத்தை சொல்லு..." அவள் தயக்கத்தை கண்டுகொள்ளாமல் வினவினான்.

"அவன் தங்கச்சிக்கு நான்தான் முறை செய்யணும், வர்ற பத்தாம் தேதி கல்யாணம்னு சொல்லிட்டு போனை வச்சுட்டான். எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை.... என்னமோ ரெஸ்ட்லெஸ்ஸா இருக்குற மாதிரி இருக்கு..." தன் தவிப்புக்கான காரணத்தை விளக்கினாள்.

அங்கே சற்று நேரம் அமைதியே நிலைத்திருக்க, "நான் ஏதாவது செய்யணுமா?" அவளிடம் நேரடியாகக் கேட்டான்.

"வேந்தன்..." எங்கே இவன் தலையிட்டு, அவன் நிஜமாகவே உயிரை விட்டுவிடுவானோ.... என்ற பயம் ஏற்பட, அதை நகுலிடம் சொல்ல முடியாமல் தயங்கினாள்.

தன்னைவிட்டு பிரிய முடியாது என்ற பிணைப்பில் கூட, அவனைப் பற்றி அவள் கவலைப்பட, சுள்ளென எழுந்த கோபத்தை அடக்கியவன், "சரி, அப்போ உனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்.... நான் தலையிட மாட்டேன்...." விலகிக் கொண்டான்.

"நீங்களே இப்படிச் சொன்னால்...?"

"நீ என்கிட்டே இருந்து என்னதான் எதிர்பார்க்கிறாய் அன்னம்? நான் ஏதாவது உதவ வேண்டுமா என்றால் வேண்டாம்.... நீயே பார்த்துகொள் என்றால்.... முரண்டுகிறாய். நான் பார்த்துகொள்ளவா என்றால் பதறுகிறாய். இப்போ எனக்கு என்ன செய்யணும்னு தெரியலை...

"உன் வாழ்க்கையில் ஏதோ ஒன்றுக்குத்தான் இடம் உண்டு அன்னம். ஒன்று அவன்.... இல்லையா நான்.... முடிவு உன் கையில் தான்..." இறுக்கமாக உரைத்தவன், விலகிப் போனான்.

அவன் செல்லவே.... திகைத்துபோய் அமர்ந்திருந்தாள். அவன் சொன்ன.... 'ஒன்று அவன்.... இல்லையா நான்....' என்ற வார்த்தைகளே அருவருப்பாக தோன்றியது.

இவன் இல்லையா அவன் என்பது குழு விளையாட்டுக்கு வேண்டுமானால் சரியாக இருக்கும். ஆனால் வாழ்க்கையில்.... 'ச்சீ... என்ன ஒரு ஈனத்தனம்...' என்றே தோன்றியது.

இப்படி ஒரு இழி நிலையிலேயா நான் இருக்கிறேன்? இந்த நிலை என் பெண்மைக்கே கழங்கமல்லவா... வேந்தனை தன் இணையாக எண்ணுகையிலேயே, அருவருப்பாய் ஒரு உணர்வு தேகம் முழுவதும் படர்ந்து, ஆயிரம் புழுக்கள் தன் மேனியில் ஊர்வதுபோல்.... குமட்டிக் கொண்டு வந்தது.

அப்பொழுதுதான் ஒன்றை தெளிவாக உணர்ந்தாள்.... நகுலை விட்டு, வேந்தனிடம் தான் செல்லவே முடியாது என்பதை. கூடவே.... தான் நகுலிடம் காட்டும் நெருக்கம்.... வெகு சாதாரணமாக அவனை அணுகிவிடும் தன்மை....

வேந்தனை தன் விரல் தீண்டக் கூட அனுமதிக்காத தான்.... நகுலோடு... ஒரே படுக்கையில், ஒரு போர்வைக்குள்.... ஒரு ஸ்வெட்டருக்குள்.... இதழோடு இதழ் தீண்டும்

நெருக்கத்தில்.... அவன் கைகளுக்குள் நெகிழும் தன்மையில் இருந்த தருணங்களை நினைத்தவளுக்கு, தன் மனதுக்குள் அவன் இல்லாமல், இது எதுவுமே சாத்தியம் என்பதை உணர்ந்து கொண்டாள்.

இப்பொழுது கூட.... அவன் விலகல் தன்னை இவ்வளவு பாதிக்கிறதே. அவன் பாராமுகம் நெஞ்சை சுடுகிறதே.... அவன் கோபம் தன்னை கலங்க வைக்கிறதே.... அவன் இன்றி தன்னால் இருக்கவே முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள்.

அவன் செத்துபோனால்.... தானும் கூடவே செத்துப் போவேன் என்று உரைத்தேனே.... இது.... இதுதான் காதலா? அவன் மட்டுமே வேண்டும் என மனம் முரண்டுகிறதே.... இதுதான் காதலா...? அவனைத் தவிர வேறு எவராலும் என்னை பார்த்துக்கொள்ள முடியாது என தோன்றுகிறதே.... இதுதான் காதலா?

‘அப்படியென்றால்.... வேந்தனிடம் தோன்றியது...?’ ஒரு மனம் கேள்வி கேட்க,

இப்படியெல்லாம் அவனிடம் தோன்றியதே இல்லையே...’ மற்றொரு மனம் எடுத்து உரைத்ததை, அவளால் நிச்சயம் மறுக்க முடியவில்லை.

அதே நேரம்.... "அம்மா.... உங்களைத் தேடி உங்க ப்ரண்ட் வந்திருக்காங்க. பெரியம்மா வரச் சொன்னாங்க..." வெளியே பொன்னம்மாவின் குரல் கேட்க, "இதோ வரேன்னு சொல்லுங்க..." அவளுக்கு பதில் உரைத்தவள்,

தன் முகத்தை சீர் படுத்திகொண்டு, ஹாலுக்கு விரைந்தாள். ‘யாராக இருக்கும்...?’ யோசனை மனதுக்குள் ஓடியது.

அங்கே அமர்ந்திருந்த மைத்ரேயியைப் பார்த்தவளுக்கு, ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "மையூ.... நீயாடி...?" கேட்டவள், பாய்ந்து வந்து தோழியை கட்டிக் கொண்டாள்.

"நானே தாண்டி.... வேற எவ உனக்கு ப்ரண்டாம்...?" செல்லமாக கடிந்தவள், தானும் அவளை அணைத்து விடுவித்தாள்.

"நம்பவே முடியலடி.... ஒரு போன் கூட பண்ணலை. ரெண்டுநாள் முன்னாடி பேசினப்போ கூட சொல்லவே இல்லையா.... லூசு..." அவளை செல்லமாக அடித்தாள்.

"என்னமா நல்லா இருக்கியா...?" மைத்ரேயியின் அப்பா கேட்ட பிறகுதான், அவரும் அங்கே இருப்பதை கண்டுகொண்டாள்.

"அப்பா.... வாங்கப்பா.... ரொம்ப நல்லா இருக்கேன்.... நீங்க எப்படி இருக்கீங்க? சாரி.... உங்களை கவனிக்கவே இல்லை..." மன்னிப்பாக உரைத்தாள்.

"அதான் உங்க மையூவை தவிர வேற யாரையுமே உன் கண்ணுக்குத் தெரியலையே..." நகுலின் கேலிக் குரலில், அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்ணில் என்ன இருந்தது?

அவனும் விழியெடுக்காமல் அவளையே வெறிக்க, "என்னடி நடக்குது இங்கே...?" மைத்ரேயி கேலியாக அனன்யாவின் காதில் கிசுகிசுக்க, சட்டென தன்னை மீட்டுக் கொண்டவள் அழகாய் வெட்கபட்டாள்.

"ஏய்.... சும்மா இருடி..." அவளை அடக்கியவள்,

"இருங்க.... குடிக்க ஏதாவது எடுத்துட்டு வரேன்..." அவள் உள்ளே செல்ல முயல,

"உனக்காக வெயிட் பண்ணியிருந்தால்.... நாங்க நாளைக்கு காலையில்தான் தண்ணியே குடிக்க வேண்டி இருந்திருக்கும். இப்போ எல்லாம் ஆச்சு..." மைத்ரேயியின் கேலியில், அவள் முதுகில் மீண்டும் ஒரு அடி போட்டாள்.

"அம்மாடி.... என்னடி.... வந்ததில் இருந்து புதுப்பொண்ணுன்னு கூட பார்க்காமல் வெளுத்து வாங்கற? அண்ணா பாவம்..."

"சரியா சொன்னீங்க..." நகுலின் குரல் இடையிட,

"எத்தனை நான் என்கிட்டே அடி வாங்குனீங்களாம்..." தோழியைக் கண்ட ஆனந்தத்தில், அவள் இயல்பான குணம் வெளியே வந்தது.

"ரகசியத்தை எல்லாம் இப்படி பப்ளிக்கா கேக்கக் கூடாதுடி செல்லம். பாவம் அண்ணா எப்படி முழிக்கிறார் பார்..." அங்கே இருந்த அனைவரும் சிரிக்க, தோழியின் தோளிலேயே முகம் புதைத்தாள்.

அதன் பிறகுதான் அவள் சொன்னது நினைவிற்கு வர.... "என்னடி சொன்ன.... புதுப் பொண்ணா...?" விழி விரிக்க, இப்பொழுது வெட்கப்படுவது மைத்ரேயியின் முறை ஆனது.

மைத்ரேயியின் தந்தை.., ஒரு அழைப்பிதழை பார்வதியின் கையில் கொடுத்தவர், "எல்லோரும் குடும்பத்தோட வரணும். உனக்கு உன் தோழி தனியா கொடுப்பாளாம்.... என்கிட்டே சொல்லியே கூட்டி வந்தாள்..." அவர் உரைக்க....

"அப்பா..." மைத்ரேயி அவரை முறைத்தாள்.

"சரிம்மா.., நான் மத்தவங்களுக்கும் கார்ட் கொடுத்துட்டு, உன்னை வந்து கூப்ட்டுக்கறேன்...." அவர்களிடம் விடை பெற்றார்.

"சாப்ட்டு போகலாமே..." பார்வதி தடுக்க,

"இல்ல.... என் நண்பன் வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வரதா சொல்லிட்டேன். நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க..." அவர் கிளம்பினார்.

"அனு.... அவளை ரூம்க்கு கூட்டி போய் பேசும்மா..." பார்வதி உரைக்க, தன் கணவன் முகம் பார்த்தாள்.

அவனோ.... "எனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கு. போயிட்டு வரேன். நீங்க பேசிட்டு இருங்க..." பொதுவாக உரைத்தவன், அனன்யாவிடம் தலையசைப்பில் விடை பெற்றான்.

தோழியை தன் அறைக்கு கூட்டிக்கொண்டு விரைந்தாள். "ஏய்.... உன் வீட்டு ஆட்கள் கிரேட்டி. அதுவும் உன் ஹஸ்பன்ட் பக்க ஜென்டில்மேன்...." மைத்ரேயி உரைக்க, ஆம் என ஆமோதித்தவள், பால்க்கனிக்கு கூட்டிச் சென்று அங்கே அமர்ந்தார்கள்.

தோழிகள் இருவரும் பல கதைகள், கல்லூரி நாட்களை அசைபோட, "அனு, நீ அந்த வேந்தனை கட்டிகிட்டிருந்தா இப்படி ஒரு குடும்பத்தை ரொம்ப மிஸ் பண்ணியிருப்படி. நல்ல வேளை.... அவன்கிட்டே இருந்து தப்பிச்ச..." பேச்சுவாக்கில் உரைத்த பிறகுதான், தான் என்ன பேசினோம் என்பதையே உணர்ந்தாள்.

சட்டென அனன்யாவின் முகம் மாறிவிட, அதைப் பார்த்தவள், "ஏய்.... சாரிடி, உன் பேமிலியை உயர்வா சொல்லுறதா நினைச்சுட்டு எதையோ உளறிட்டேன்..." அவள் கையை பற்றிக் கொண்டாள்.

அப்பொழுதும் அனன்யாவின் முகம் தெளியாமல் இருப்பதைப் பார்த்தவள், "அதான் தெரியாமல் சொல்லிட்டேன்னு சொல்றேனே.... நீ எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா வாழும்போது, நான் இப்படி பேசியிருக்க கூடாதுதான். சாரி.... ஏதாவது பேசுடி..." தன் எந்த பேச்சுக்கும் அவளிடம் அசைவில்லாமல் போக, கெஞ்சினாள்.

"நான் நிம்மதியா இல்லடி.... அந்த வேந்தன் என்னை நிம்மதியா இருக்க விட மாட்டான்..." விரக்தியாக உரைத்தாள்.

"என்னடி சொல்ற? இப்போ அந்த கிறுக்கன் எங்கே இருந்து வந்தான்?".

"நான் கொடுத்த வாக்குதாண்டி என்னை விடாமல் துரத்துது..." முகத்தை மூடிக்கொண்டு அழ,

"லூசு மாதிரி உளறாதே அனு. அவன் முடிஞ்சு போன அத்தியாயம். முதல்ல அதை புரிஞ்சுக்கோ. பெரிய வாக்கு.... நீ வாயைத் தொறந்து ஒத்த வார்த்தை பேசலை, அதைவிட, நீ இருந்த குழப்பத்தில், நீ என்ன செய்யிறன்னு உனக்கே தெரியாது.... புரியுதா?" அவளை கடிந்து கொண்டாள்.

"என்னால் அப்படி நினைக்க முடியலடி.... இப்போ கூட.... உயிரையே விட்டுடுவேன்னு மிரட்டுறான்..." புலம்பினாள்.

"ஆண்டவா.... என்னை ஏன் இப்படி ஒரு மடச்சியோட சேரவிட்டு வேடிக்கை பாக்குற...?" அலுப்பாக உரைத்தவள், "அவன் அப்படி மிரட்டினால்? செத்துப் போன்னு சொல்லு. இப்படி மிரட்டுறவன் எல்லாம் அவ்வளவு சீக்கிரம் உயிரை விட மாட்டான்.... அவனைபோய் நம்புற பாத்தியா...?" கோபமாக உரைத்தவள், ஆற்றாமையாக உரைத்தாள்.

"அவனை விடுடி.... என்னோட சத்தியம்...?"

"ஓ.... அவனுக்கு கொடுத்த சத்தியத்தை பாக்குறியே. கேவலம்.... ஒரு சாதாரண மனுஷனுக்கு கொடுத்த சத்தியம் உனக்கு பெருசுன்னா? முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிலையில், ஆயிரம் உறவுகள் மத்தியில், அம்மி மிதித்து, அருந்ததி பாத்து.... உன் கணவனோடு காலம் முழுக்க உடன் வருவேன்னு நீ செய்து கொடுத்த சத்தியம்.... அதுக்கு என்ன சொல்லப் போற...?" மைத்ரேயி கோபமாக கேட்க, அதிர்ந்து விழித்தாள்.

"அதை கூட விடு.... உன் கழுத்தில் தொங்குதே இந்த தாலி.... இதை கட்டிய உன் கணவனுக்கு நீ உண்மையாக இருக்கிறாயா? அப்படி இல்லாமல்.... நீ நகுலோடு வாழும் இந்த வாழ்க்கைக்கு அர்த்தம் என்னடி...? இதை கழட்டி

வீசிட்டு உன்னால் அவனோடு போக முடியுமா?" கோபம் சற்றும் குறையாமல் கேட்க, தன் மாங்கல்யத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

‘சாதாரணமான ஒரு பேச்சுக்கே கொந்தளிக்கும் தன் தோழி, முழுதாக தன் செய்கையைக் கேட்டால்.... என்ன செய்வாள்...?’ இப்பொழுது தன் பேச்சுக்கள் அனைத்தும், செய்கைகள் அனைத்தும் அசிங்கமாகத் தோன்றியது.

அதைவிட.... தோழி கூறிய விஷயம்.... அக்கினிக்கு முன்னால் கொடுத்த வாக்கா.... அவன் கையில் செய்த சத்தியமா என்கையில், நகுலின் தராசே கீழிறங்கியது. ஆனால்.., இதுவொரு சப்பைக்கட்டு என்று அவளுக்குத் தெரியும்.

தன்னெஞ்சறிய பொய்யற்க அல்லவா.... அவன்மேல் இருக்கும் காதலை ஏற்கனவே உணர்ந்து கொண்டவளுக்கு.... அவன் காதலை விட்டு செல்ல முடியாது என்றே உறுதியாகத் தோன்றியது. காலம் கடந்த நினைவோ என எண்ணியவள், முகத்தை மூடிக்கொண்டு குமுற,

குலுங்கி அழும் தோழியை ஒருவித இயலாமையோடு வெறித்தவள், "நீ.... இங்கே நல்லா இருக்க தானே. அதாவது.... நான் கேக்க வரது புரியுதா?" அவள் தலையை நிமிர்த்தினாள்.

"மையூ..." கேவியவள், அவள் காலடியில் அமர்ந்து, மடியில் கவிழ்ந்து, அழுகையைத் தொடர, அதற்கான காரணம் புரிந்தும் புரியாமல் தவித்துப் போனாள்.

"அனு.... நீ.... நகுல் அண்ணா கிட்டே ஏதாவது உளறிட்டியா...?" அவள் கேட்க, அனுவின் அழுகை கூடிய விதத்திலேயே.... ஏதோ சிக்கலை உருவாக்கிக் கொண்டுவிட்டாள் என்பது புரிய கலங்கிப் போனாள்.

"என்னத்தடி உளறித் தொலைச்ச...? சொல்லிட்டு அழு.... வர்ற ஆத்திரத்துக்கு.., உன்னை அப்படியே நாலு அறை விடணும்னு ஆத்திரமா வருது..." அவளை தன்னிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்து, அவள் முகம் பார்க்க....

"என்னை நல்லா அடிச்சுடு மையூ..." உதடு துடிக்க அவள் உரைக்கையில், அதைச் செய்ய முடியாமல், அவளை அணைக்கத்தான் அவளால் முடிந்தது.

"என்னதாண்டி சொன்ன...? மனசு பதறுதுடி.... இதுக்கு மேலே எதுவும் சிக்கலாக முன்னாடி சொல்லித் தொலைடி..." அவளை உலுக்கியவள், மூங்கில் டீபா மேல் இருந்த தண்ணீர் ஜக்கில் இருந்து தண்ணீரை ஊற்றி அவளுக்குக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் குடித்தவள், சற்று தெளிந்து, 'வேந்தன் நிச்சய தினத்தன்று வந்தது முதல், நேற்று பேசியதுவரை உரைக்க.... கேட்டுகொண்டிருந்த மைத்ரேயி நிஜமாகவே இப்பொழுது அறைந்திருந்தாள்.

கன்னத்தை பற்றியவாறு கண்ணீரோடு அவளை ஏறிட்டாள். தோழி அடித்தது நிச்சயம் வலிக்கவில்லை.

"என்ன காரியம்டி பண்ணி வச்சிருக்க...? உன் புருஷனா இருக்கபோய் உன்னை இன்னும் வீட்டில் வச்சிருக்காங்க. இதுவே வேற எவனாவது இருந்திருந்தால்.... இப்படியே பெட்டியை கட்டிட்டு வீட்டுக்கு போய் சேருன்னு அனுப்பி வச்சிருப்பாங்க.

"இப்படியாடி தத்தியா இருப்ப? காதலுக்கும்.... சுயநலத்துக்கும் இருக்க வித்தியாசம் தெரியாத முட்டாளா நீ. ஆண்டவா.... சரி.... நான் கேக்குறதுக்கு பதில் சொல்லு.... இப்பவும் அண்ணாவை விட்டு போகும் முடிவில்தான் இருக்குறியா...?" கேட்டவள்....

கூடவே.... "ஆமான்னு மட்டும் சொல்லிப்பார்.... உன்னை இப்படியே கொலை பண்ணிடுறேன்..." இப்படி உரைத்த

தோழியைப் பார்த்து, இந்த நேரத்தில் கூட அனன்யாவுக்கு சிரிப்பு வந்தது. அதை மறைக்காமல் மெல்லியதாக புன்னகைக்க...

"லூசுமாதிரி எதுக்குடி சிரிக்கிற...?" கடுப்பானாள்.

"முடிவை என்கிட்டே கேட்டுட்டு.... இந்த பதில்தான் வேணும்னு மிரட்டுறியே அதை நினைச்சுதான் சிரிக்கறேன்...".

"ஐ'ம் சீரியஸ் அனு.... பதில் சொல்..."

"நீ சொன்ன சத்தியத்தை விட, என்னோட காதலை விட்டு கொடுக்க முடியாதுன்னு தோணுதுடி..." முகத்தை துடைத்தவாறு உரைத்த தோழியை வெட்டவா, குத்தவா என முறைத்தாள்.

25

சத்தியத்தை விட, தன் காதல் பெரிது என அனன்யா உரைத்ததைக் கேட்ட மைத்ரேயி சற்று குழம்பித்தான் போனாள். ‘இவ எந்த காதலைச் சொல்கிறாள்?’ புருவம் நெரிய அவளை ஏறிட்டாள்.

ஆனாலும்.... தோழியின் முகத்தில் இருந்த புன்னகை, அவளை சற்று தேக்க.... மைத்ரேயி அவளையே வெறித்தாள்.

"அவர்மேல் இருக்கும் காதலைச் சொன்னேன்..." தோழியின் குழப்பம் பார்த்து, முகம் சிவக்க, நெஞ்சம் படபடக்க, கிள்ளை மொழியில் உரைத்து, மைத்ரேயியின் நெஞ்சில் பாலை வார்த்தாள்.

"ஹப்பா.... இப்போவாவது பல்ப் எரிஞ்சுதே. இனிமேலாவது ஒரு தெளிவோட முடிவெடு. எல்லாத்தையும் நகுல் அண்ணாட்ட பேசு.... மிச்சத்தை அவர் பாத்துப்பார்...".

"நானும் அதையேத்தான் நினைத்தேன்.... இனிமேல் அவர்கிட்டே பொறுப்பை ஒப்படைக்கப் போறேன்..." தெளிவாக உரைத்தாள்.

"அண்ணாகிட்டே பொறுப்பை ஒப்படைக்கிறது இருக்கட்டும்.... நீ எப்போ உன் காதலை அவர்கிட்டே சொல்லப் போற?" அனன்யாவின் மனம் புரிந்தவளாக கேட்டாள்.

அவ்வளவு நேரம் சற்று இயல்பாக இருந்த அனன்யாவின் முகம் கூம்ப, "எந்த முகத்தோட அவர்கிட்டே சொல்லச் சொல்ற மையூ.... ஒரே வருடத்தில் உங்களை விட்டு போய்டுவேன்னு சொல்லிட்டு, இப்போ.... அவர்மேல் காதல்ன்னு சொன்னால் சிரிக்க மாட்டார்....

"அதைவிட, காதலுக்கும், கருணைக்கும் வித்தியாசம் தெரியாமல் அவர்கிட்டே பேசிட்டு, என் காதலை, சட்டுன்னு அவர்கிட்டே வெளிப்படுத்த முடியலை. எங்கே என்னை தவறாக நினைத்துவிடுவாரோ என்ற பயம் ஒரு பக்கம் என்றால்.... ஒரு நிலையில்லாத மனம் இல்லாத என்னை ஏற்பது எப்படின்னு அவர் என்கிட்டே திருப்பி கேள்வி கேட்டுட்டா?

"என்னால் அதை தாங்க முடியாது மையூ. இத்தனைக்கும்.... ஏற்கனவே அவர், நானா, அவனா என முடிவு பண்ணுன்னு சொல்லிட்டார். ஆனாலும், என் மனசை அவர்கிட்டே திறக்கும் தைரியம் என்கிட்டே இல்லை. ஒண்ணு மட்டும் உண்மை, வீட்டை விட்டு போன்னு அவர் சொல்லாமல், நான் போக மாட்டேன்.

"அது மட்டும் உண்மை.... ஆனா.... அப்படி அவர் சொல்லிட்டா..." விசும்பியவள், "நான் தாங்க மாட்டேண்டி.... செத்துப் போய்டுவேன்..." நின்றிருந்த அழுகை வெடித்துக் கிளம்பியது.

"லூசாடி நீ.... அதான் அண்ணாவே, முடிவை உன் கையில் கொடுத்து இருக்காங்களே.... பிறகு என்ன...? நான் எங்கேயும் போக மாட்டேன்னு ஒரு ஸ்டேட்மென்ட் விடு, எல்லாம் சரியாப் போய்டும். இதுக்குபோய் அழுதுகிட்டு, கண்ணைத் துடைடி...." கேலி செய்து அவளை மாற்றினாள்.

சற்று நேரத்தில் தெளிந்தவள், "மையூ.... என் விஷயத்தை பேசியதில், உன்னைபத்தி கேக்கவே மறந்துட்டேன். உன் அவர் என்ன பண்றார்? எங்கே வேலை பாக்கறார்? கூடப்பொறந்தவங்க எத்தனை பேர்? சொல்லு...".

"அம்மா பரதேவதையே.... இப்போவாவது கேக்கணும்னு தோணிச்சே, சந்தோசம். அவர் சாப்ட்வேர் இஞ்சினியர்.... பெங்களூர்ல ஒர்க் பண்றார். கூடப்பொறந்தவங்க ஒரு அண்ணா.... அவருக்கும் மேரேஜ் ஆயிடுச்சு. டீட்டெயில் போதுமா?

"வந்த உடனே ஒரு கப் ஜூசை கண்ணில் காட்டுனதோட சரி, இருக்க எனர்ஜி எல்லாத்தையும் வத்த வச்சுட்ட.... கொஞ்சம் தண்ணியாவது கொடு. குடிச்சுட்டு கிளம்பறேன்..." தன் மணிக்கட்டில் கட்டியிருந்த வாச்சில் பார்வையை பதித்தவாறே உரைத்தாள்.

"ஐயோ.... உன்கிட்டே பேசினதில் நேரம் போனதே தெரியலடி.... எப்படியும் நாளைக்கு காலையில் தானே கிளம்பறீங்க.., பேசாமல் உன் அப்பாவுக்கு போன் பண்ணி, காலையில் பஸ்ஸ்டாண்டுக்கே வந்துடுறேன்னு சொல்லிடு. நைட் புல்லா நாம பேசிட்டே இருக்கலாம்...." நீண்டநாள் காணாத தோழியை கண்டதால், விட மனமில்லாமல் உரைத்தாள்.

"ஏய்.... நைட் பதினோரு மணிக்கு பஸ். முதல்ல அப்பா மட்டும்தான் வரதா இருந்தது. நான் உன்னை பாக்கணும்னு சொன்னதால் தான், என்னையும் அழைச்சுட்டு வந்தாங்க. கண்டிப்பா நான் போயே ஆகணும். அது மட்டும் இல்லை.... இப்போ வெளியே தங்கினால்.... எங்க அம்மா அவ்வளவுதான்.... பேசியே கொன்னுடுவாங்க...." அலறினாள்.

"ஹம்.... நீ சொல்றதும் சரிதான். கல்யாணப்பொண்ணு..... வெளியே தங்க சம்மதிக்க மாட்டாங்கதான்...." ஒத்துக் கொண்டாள்.

அதே நேரம்.... "அனும்மா.... பெரியம்மா சாப்பிட கூப்ட்டாங்க..." பொன்னமாவின் குரல் வெளியே கேட்க, இருவரும் சாப்பாட்டு அறைக்கு விரைந்தார்கள்.

"அம்மா.... அவர் வரலையா...?" அனன்யாவின் விழிகள் சுழன்று கணவனைத் தேடியது.

"வந்துட்டாம்மா.... வருணா கிட்டே பேசிட்டு இருந்தான். மாப்பிள்ளை வேற வந்திருக்கார்.... ஒரே அரட்டையாத்தான் இருக்கும். உன் ப்ரண்டை உட்காரச்சொல் நான் அவங்களை கூப்பிடுறேன்..." மற்றவர்களை அழைக்கச் சென்றார்.

அனைவரும் வரவே.... கூடமே களை கட்டியது. அனன்யாவையும் அமர வைத்த பார்வதி, அனைவருக்கும் பார்த்து பரிமாறினார்.

நவீன், வருணாவுக்கு ஊட்டிவிடாத குறையாக கவனிக்க, தன் தட்டில் இருந்த பாகற்காய் பொரியலைப் பார்த்து, எச்சில் விழுங்கினாள் அனன்யா. அதைப் பார்த்த மைத்ரேயி கேலியாகச் சிரிக்க, அவளை போலியாக முறைத்தாள்.

"அனு.... உனக்கு பாகற்காய் பிடிக்காதுன்னு அவங்களுக்குத் தெரியாதா?" அவள் காதில் கிசுகிசுக்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

"உன் அத்தை, விருந்தாளிக்கு பாகற்காய் கொடுக்கக் கூடாதுன்னு சொல்லி, எனக்கு வைக்காமல் போய்ட்டாங்க.... இல்லன்னா நானாவது எடுத்திருப்பேன்.... இப்போ..." கேட்டவள், பார்வதி வரவே, தன் சாப்பாட்டில் கவனமாக, அனன்யாவின் மறுபக்கம் அமர்ந்திருந்த நகுல், வெகு இயல்பாக, அவளது தட்டில் இருந்த பாகற்காயை மொத்தமாக எடுத்து, வாயில் போட்டுக் கொண்டான்.

அவன் செய்கையைப் பாராமல் பார்த்த பார்வதி அங்கிருந்து விலகிச் சென்றுவிட, மைத்ரேயியும் அவர்கள் பக்கம் திரும்பவில்லை.

நகுல் இப்படித்தான் செய்வான் என்பதை உணர்ந்திருந்த அனன்யா பெருமிதமாக அவனைப் பார்த்தவள், கண்களால் தன் நன்றியை வெளிப்படுத்தினாள்.

நகுலின் பார்வையும், அவள் பார்வையும் ஒரு நொடி கவ்விக் கொள்ள, உலகமே தன் இயக்கத்தை நிறுத்தியதாகத் தோன்றியது.

அதைப் பார்த்த மைத்ரேயி.... "ஏண்டி அனு.... இங்கே நடுவில் ஒரு சின்னபொண்ணு உக்காந்திருக்கேன்னு கொஞ்சம் கூட நினைக்காமல், ரெண்டு ஜோடியும் இப்படி

சீன் போட்டால் என் குட்டி நெஞ்சு தாங்குமாடி.... வேண்டாம்.... நான் தாங்க மாட்டேன்..." அவள் விலாவில் இடிக்க, அதன் பிறகே கலைந்தாள்.

முகம் சிவக்க திரும்பியவள், மைத்ரேயியை முறைக்க முயன்று தோற்றாள். தோழிகள் இருவரும் சிரித்துக் கொள்ள, அதன் பிறகு, அரட்டை கச்சேரியோடு சாப்பாடு தொடர்ந்தது.

கிட்டத்தட்ட இரண்டுமணி நேரமாக அவர்கள் உணவை உண்ண, மைத்ரேயியின் தந்தை அவளை அழைத்துச் செல்ல வந்த பிறகுதான், சாப்பாட்டு மேஜையை விட்டே விலகினார்கள்.

அடுத்த பத்து நிமிடங்களில் மைத்ரேயி கிளம்ப, "நகுல்.., அவங்களை ட்ராப் பண்ணிட்டு வாப்பா..." அரசு குரல் கொடுக்க,

"ஐயோ.... அதெல்லாம் வேண்டாம்.... நாங்க ஆட்டோ புடிச்சு போய்க்கறோம்..." சங்கடமாக உரைத்தார்.

"அட, இதில் என்னங்க இருக்கு.... வீடு தேடி வந்தவங்களை அப்படியே அனுப்ப முடியுமா? சும்மா போயிட்டு வாங்க..." அவர் அழுத்தி உரைக்கவே, மறுக்க முடியாமல் ஒத்துக் கொண்டார்.

"நகுல்.... அனுவையும் அழைச்சுட்டு போ..." பார்வதி உரைக்க, நால்வரும் கிளம்பினார்கள்.

மைத்ரேயியின் தந்தை கோபாலன், நகுலின் அருகில் முன்னால் அமர்ந்துகொள்ள, தோழிகள் இருவரும் பின்னால் அமர்ந்து கொண்டார்கள்.

காரில் ஏறியது முதல் இரு பெண்களும் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே வர, "இந்த பொட்டப் புள்ளைங்களுக்கு எங்கே இருந்துதான் பேசதுக்கு விஷயம் கிடைக்குமோ

என்னவோ.... வாய் மூடாம பேசுதுங்க பாருங்க..." அவர் உரைக்க,

"நீங்க சொல்றது சரிதான்.... அன்னத்துக்கு இவ்வளவு பேசத் தெரியும்னே எனக்கு இன்னைக்குதான் தெரியுது..." கார் கண்ணாடி வழியாக அவளைப் பார்த்தவாறே சொன்னான்.

"ஏன்.... வருணா கூட பேசும்போதும் இதையேத்தான் சொல்லுவீங்க.... அது மறந்து போச்சோ..." சிலிர்த்துக் கொண்டாள்.

"எனக்கென்னவோ அவதான் உன்கிட்டே பேசுற மாதிரி இருக்கும். நீ விதியேன்னு கேட்டுட்டு இருக்க மாதிரி இருக்கும்...".

"ஓ.... அப்படியா..... வீட்டுக்கு வாங்க.... வருணா கிட்டேயே சொல்றேன்..." அவனை மிரட்டினாள்.

"பாத்தீங்களா அங்கிள்.... உண்மையை சொன்னா மிரட்டறாங்க..." அவரை துணைக்கு அழைத்தான்.

"பொண்டாட்டி மிரட்டுனா உடனே அடங்கிப் போய்டணும் தம்பி.... இல்லன்னா சேதாரம் நமக்குத்தான்...." உரைத்தவர், இடி இடியென சிரிக்க,

நகுலின் கண்கள்.... 'அப்படியா...?' என அவளிடம் மௌனமாக கேள்வி கேட்க, 'அப்படித்தான்...' என அவள் கண்களும் மௌனமாக பதில் கொடுத்தது. அதைக் கண்டவனது விழிகள் மின்னலென தெறிக்க, அவளை விழுங்கிக் கொள்ளும் வேட்கை அவன் பார்வையில்....

அதைப் பார்த்தவள்.... விழியை அகற்றிக்கொள்ள, அவன் முகம் சற்று சுருங்கித்தான் போனது.

அதைப் பார்த்து மைத்ரேயி தோழியின்மேல் கோபம் கொண்டாள். "லூசு.." அடிக்குரலில் அவளைக் கண்டிக்க,

தலை கவிழ்ந்தாள் அனன்யா.

‘அய்யய்யோ.... இவ மனசுக்குள்ளே இருக்குறதை சொல்லவே மாட்டா போலவே.... ஆண்டவா...’ மனதுக்குள் புலம்பியவள், ஏதாவது செய்தே ஆகவேண்டும் என முடிவெடுத்தாள்.

பேருந்து நிலையம் வந்து சேர, "அங்கிள்.... என்ன ட்ராவல்ஸ்...?" அவன் கேட்க, தன் டிக்கெட்டை அவனிடம் கொடுத்தார்.

"நீங்க இங்கேயே இருங்க.... நான் பஸ் வந்துடுச்சான்னு பாத்துட்டு வரேன்..." அவன் இறங்கிச் சென்றான்.

ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்தவன், "பஸ் ரெடியா நிக்கிது.... வாங்க..." அவர்களை அழைத்துக்கொண்டு சென்றான்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்த மைத்ரேயி, சட்டென நினைவுக்கு வந்தவளாக, "ஐயோ.... என்னோட ஹேண்ட்பேகை காரிலேயே விட்டுட்டு வந்துட்டேன்.." பேருந்தில் இருந்து இறங்கிச் செல்ல,

"இருங்க நானும் வரேன்.... அன்னம்.... நீ இங்கேயே இரு..." அவள் பின்னால் சென்றான்.

காரை நெருங்கவே.... "என்னவோ சொல்லணும்னு நினைக்கறீங்க, ஆனா.., தயங்கறீங்க.... என்ன.... சொல்லுங்க..." அவன் கேட்கவே, வியப்பாய் அவனை நோக்கினாள். அத்தோடு, ‘உனக்கு எப்படித் தெரியும்...?’ அவள் விழிகள் அவனிடம் கேட்க,

"நீங்க உங்க ஹேண்ட்பேகை, வேணும்னு விட்டுட்டுப் போனதை நான் பார்த்தேன்.... அதான்..." மெல்லியதாக புன்னகைத்தவன், அவள் பையை அவளிடம் எடுத்துக் கொடுத்தான்.

"ஓ.... தேங்க்ஸ்.." ஒரு அசட்டு சிரிப்பை சிரித்தவள், "உங்ககிட்டே முக்கியமா பேசியே ஆகணும்னு நினைத்தேன்.... அதான்..." அவனிடம் விளக்க, 'புரிந்தது...' என்பதாக தலை அசைத்தான்.

"அண்ணா.... அனு.... தெரியாமல் ஏதேதோ உங்ககிட்டே உளறி வச்சிருக்கா. அவளுக்கே இப்போதான் தன்னோட மனசு புரியுது. ஆனாலும்.... அதை உங்ககிட்டே சொல்லத் தயங்குறா.... அவ தன் மனசுக்குள்ளே இருக்குறதை எப்போ சொல்லுவாளோ எனக்குத் தெரியாது.

"ஒரு வேளை.... அதை அவ சொல்லாமலே கூட போகலாம். அதான்.... அதுக்கு முன்னாடி அவ மனசுக்குள்ளே நீங்க இருப்பதை எப்படியாவது சொல்லிடணும்னு தான், உங்ககிட்டே பேச நினைத்தேன். அவ மனசுக்குள் இருக்கும் குழப்பம் தீர, நீங்க ஒரு படி முன்னேறினால் போதும்..." வேகமாக உரைத்தாள். பஸ் கிளம்பிவிடுமோ என்ற வேகம்.... அவளிடம் இருந்தது.

"அது எனக்கே தெரியும்மா.... இப்போ நீயும் சொல்லிட்ட இல்ல.... நான் பாத்துக்கறேன். அந்த வேந்தன்...." அவன் இழுக்க,

"அவனா.... அவன் அவ்வளவு நல்லவன் கிடையாது. ஒரு பக்கா சுயநலவாதி.... பணத்துக்காகத்தான் அவன், அனுகிட்டே பழக முயற்சி செய்தான். அது அவனால் முடிந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

"ஆனால்.... அவ மனசை குழப்பி விட்டுட்டான். அதில் குளிர்காய அவனால் ஒரு நாள் கூட முடிந்தது கிடையாது. அது எனக்கு நல்லாவே தெரியும். தயவு செய்து நீங்க அவனை வைத்து, அனுவை தவறா நினைக்காதீங்க..." ஒரு வேளை அவன் அப்படி நினைக்கிறானோ என கலங்கிப் போனாள்.

"ஐயோ.... நான் அப்படி நினைக்கவே இல்லை. என் அன்னம் எப்படின்னு எனக்குத் தெரியாதா என்ன? அவனது சுயரூபம்

அவளுக்குத் தெரிந்தால் நல்லா இருக்கும். அதற்கு என்ன வழின்னுதான் யோசிக்கறேன்..." தாடையை தேய்த்துக் கொண்டான்.

"அண்ணா.... எனக்குத் தெரிந்து அவனாக எதையாவது உளறினால்தான் உண்டு. நாம எதையும் கண்டுபிடிக்கவே முடியாது. ஏன்னா.., அவன் அவ்வளவு அமுக்குணி. எதுக்கும் நீங்க என் கல்யாணத்துக்கு வாங்க, நிச்சயம் ஏதாவது ஒரு வழி கிடைக்கும். ஏன்னா.... ரித்திஷ் எங்க காலேஜில் படித்தவர்தான்.

"அவரோட ப்ரண்ட்ஸ்.... கொலீக்.... இப்படி நிறையபேர் வருவாங்க. அதை வைத்துதான் சொல்கிறேன்..." யோசனையாக உரைத்தாள்.

"அப்படியா.... அப்போ கண்டிப்பா வரேன். ரொம்ப தேங்க்ஸ்ம்மா.... அன்னத்தின்மேல் நீ வைத்திருக்கும் பாசத்தை நினைத்தால், எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இனிமேல் எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்..." அவளுக்கு நம்பிக்கை அளித்தான்.

"இதுக்கு எதுக்குண்ணா தேங்க்ஸ் எல்லாம்.... ஒரு நல்ல தோழி என்ன செய்வாளோ, அதைத்தான் நானும் செய்தேன். எனக்கு உண்மையான சந்தோஷமே.... நீங்க ரெண்டுபேரும் சந்தோஷமா.... ஒற்றுமையான தம்பதிகளா இருப்பதில்தான் இருக்கு..." உரைத்தவள்....

"அண்ணா.... நான் உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்னு ரொம்ப நாளா நினைச்சுட்டே இருக்கேன். உங்களை இதுக்கு முன்னாடி எங்கேயோ பார்த்த மாதிரியும் இருக்கு, பார்க்காத மாதிரியும் இருக்கு. ஏன்னா.... நான் சென்னைக்கு வந்ததே கிடையாது. ஒரு வேளை.... நீங்க கோயம்புத்தூருக்கு வந்திருக்கீங்களா...?" அவனிடம் கேட்டாள்.

ஒரு நொடியில் விகசித்த அவன் முகம், "ம்ஹூம்.... ஒரு வேளை அப்படியும் இருக்கலாம்..." அவன் குரலே நான்

சொல்வது உண்மையில்லை எனச் சொன்னது.

மைத்ரேயி அதைப்பற்றி கேட்கும் முன்னர், "பஸ் கிளம்பிடப் போகுது.... சீக்கிரம் வாங்க..." அவன் உரைக்க, அடுத்த பேச்சு பேச அவள் தயாராக இருக்கவில்லை.

"பாத்துக்கங்கண்ணா..." இறுதியாக சொல்லிவிட்டே விரைந்தாள்.

'ஜஸ்ட் எஸ்கேப்.... இல்லன்னா இந்நேரம் உண்மை வெளிப்பட்டிருக்கும்...' ஆசுவாசமாக மூச்சு விட்டான். அதென்னவோ.... தன்னைப் பற்றிய உண்மை முதலில் அனன்யாவுக்கு தெரிய வேண்டும் என்றே விரும்பினான். அதுவும் தன் வாயால் சொல்ல, அதைக் கேட்கும் அவள் முகம் வெளிப்படுத்தும் பாவங்களை அருகில் இருந்து காண விரும்பினான்.

"ஏண்டி.... பேகை எடுக்க இவ்வளவு நேரமா...? பஸ்ஸே கிளம்பியிருக்கும்.... சீக்கிரம் ஏறு..." பேருந்து கிளம்பிவிட்டிருக்கவே, அனன்யா படபடத்தாள்.

"ஏய்.... கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடியே வர.... இல்ல.... உன்கிட்டே பேசவே மாட்டேன் பாத்துக்கோ. அண்ணா.... நீங்கதான் பொறுப்பு..." படியில் நின்றவாறே கத்தினாள்.

"அம்மாடி.... படியில் நின்னுட்டு என்ன பேச்சு.... உள்ளே வா..." தந்தையின் குரல் கேட்கவே, தோழியிடம் கையசைத்தவள், உள்ளே சென்றாள்.

அனன்யா பேருந்து கண்ணை விட்டு மறையும் வரைக்கும் பார்த்துக் கொண்டே இருக்க, "என்ன.... அப்படியே அந்த பஸ்ஸில் ஏறி கோவை போகணும் போல இருக்கோ...?" அவள் செய்கையைப் பார்த்து கேலி செய்தான்.

"அதெல்லாம் இல்லை. என் வீட்டுக்குப் போகணும்னு நான் என் புருஷன் கிட்டே சொன்னால்.... உடனே என்னை

ப்ளைட்ல கூட்டிப் போவார். பிறகு ஏன் நான் ஏங்கணும்...?" அவனிடம் திருப்பிக் கேட்க, சட்டென அவளுக்கு முன்னால் வந்து நின்றவன், அவளை விழுங்கும் பார்வை பார்த்தான்.

அவன் செய்கையை எதிர்பாராத அனன்யா, அவன் நெஞ்சில் மோதி, நடையை நிறுத்தியவள், அவனை ஏறிட்டாள்.

"ஐ ஃபீல் லைக் ஹக் யூ..." ஆழமான குரலில் அவன் உரைக்க, இதற்குமுன், அவன் இப்படி பேசி கேட்டிராதவள், விழி விரிய, அவனை வெறித்தவளது பார்வை அப்பட்டமான அதிர்ச்சியையும், நாணப் பூக்களையும் வெளிப்படுத்தியது.

ஒரு வேளை.... மைத்ரேயியின் மூலம் அவன் அறிந்த விஷயம், அவனை தன் இயல்பை வெளிப்படுத்த தூண்டியதோ?

‘நான் எப்போ வேண்டாம்னு சொன்னேனாம்...?’, மனதுக்குள் எண்ணியவளது பார்வையோ, இப்பொழுது சுற்றிலும் சுழன்றது. நள்ளிரவை நெருங்கிய நேரமாகையால், அங்கே அவ்வளவாக கூட்டம் இருக்கவில்லை.

அவளது மௌனமும், நாணமும், சிவந்துபோன முகமும், அவளை அப்படியே இழுத்து அணைத்துகொள்ளும் வேகத்தை கொடுத்தாலும், இருக்கும் சூழல் அவனைத் தடுக்க, அவள் கரத்தை பற்றியவன், விலகி நடந்தான்.

தன் கரத்தில் உணர்ந்த அவனது வெப்பம், அவளை உருக்க, அவன் கைகளை இறுக்கிய விதம், தேகத்தை நடுங்கச் செய்தது.

காருக்கு வந்தவர்கள், அந்த பயணத்தை விரும்பி ரசிக்க, அவளை எடுத்துகொள்ளச் சொல்லி, நகுலின் மனமும், உடலும் கெஞ்சிற்று.

வீட்டுக்கு வந்தவளுக்கோ.... தன் அறைக்குள், படுக்கையில் விழுந்த பிறகும், மனதின் எழுச்சி மறையும் வழியைக் காணவில்லை. ஊட்டியில் இருந்து வந்த இத்தனை நாட்களில், தினமும் அவன் கைகளுக்குள் அடங்கச் சொல்லி அவள் மனம் முரண்டுவதுபோல், இன்று அதிகமாக முரண்டியது.

அன்று அவள் இதழ்களுக்குள் தொலைந்துபோக நினைத்த அவன் செய்கையை நினைத்தவளது தேகம் மொத்தமாக சூடேறிய உணர்வு.

அதைவிட, அன்று ஒற்றை ஸ்வெட்டருக்குள் ஒடுங்கிய வேளையில், நகுலின் உணர்வுகள் வெளிப்பட்ட விதம், அதை தான் அறிந்த விதம்.... அப்பொழுது அவன் கொண்ட சங்கடம்.... வருத்தம், தன் முகம் பார்க்க தயங்கிய அவன் செய்கை, தன்னை விட்டு விலக முயன்ற அவன் முயற்சி.... எண்ணியவள், கட்டிலில் இருந்த தலையணையை அணைத்துக் கொண்டாள்.

கண்களை இறுக மூடியவள், அந்த சிந்தையை அடக்க முயல, அதுவோ, தறிகெட்டு பயணித்தது. தன்னைவிட்டு அவன் விலக முயல்கிறான் என்பதை உணர்ந்த அனு, அவனை அதைச் செய்ய விடாமல், மேலும் அவனை நெருங்கியவள், அழுத்தமாக அவன்மேல் ஒட்டிக் கொண்டு, ‘எனக்குப் புரியுது.... ப்ளீஸ்...’, அவன் காதில் உரைத்தபொழுது, அவன் கரங்கள் இரண்டும் தன்னை வளைத்ததை எண்ணி சிலிர்த்துக் கொண்டாள்.

‘அவன் என் கணவன்.... அவனுக்கு எல்லா உரிமையும் தன்மேல் உண்டு...’ இந்த எண்ணம் அவளை விடாமல் துரத்தியது.

இதற்குமேல் படுக்கையில் புரள முடியாது என எண்ணியவள், நகுலைத் தேடிச் சென்றாள். வழக்கம்போல் பால்க்கனியில், கூடை நாற்காலியில் அமர்ந்திருந்தவன், விழிகளை வானத்தில் நிலைக்க விட்டிருந்தான்.

கடந்த சில நாட்களாகவே, தான் உறக்கத்தை தழுவும் வரைக்கும், அவன் படுக்கைக்கு வருவதில்லை என்பதை எண்ணிப் பார்த்தவளுக்கு, வேதனை நெஞ்சை அடைத்தது.

அவன் தன் உணர்வுகளை கொன்றுகொண்டிருக்கிறான் என்பதை எண்ணுகையில், அவளுக்கே அவளை பிடிக்கவில்லை. ஓடிப் போய் அவனை கட்டிக் கொள்ளச் சொல்லி அவள் உணர்வுகள் கெஞ்ச, அதைச் செய்ய முடியாமல், அவள் கால்கள் வேரோடியது.

தன் மௌனம் அவனை வதைக்கிறது என்பது புரிய, விம்மல் வெடித்துக் கிளம்பியது. ஓடிப்போய் கட்டிலில் விழுந்தவள், குலுங்கி அழுதாள். தன் காதலை அவனிடம் சொல்ல ஒரு நொடி கூட ஆகாது எனப் புரிந்தாலும், ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

ஒரு வேளை, அவள் வாய்ப்பூட்டு அவிழ ஒரு சரியான சந்தர்ப்பம் தேவைப்படுகிறதோ?

நகுலோ.... தீவிர சிந்தனையில் இருந்தான். மைத்ரேயி, வேந்தனைப் பற்றி சொல்லிச் சென்ற விஷயங்கள் வேறு அவனை, அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிக்கத் தூண்டியது.

அதையும் மீறி.... அனன்யாவின் நினைவு அவனை அலைக்கழித்தது. இப்பொழுதெல்லாம் தன் உணர்வுகள் தன் பேச்சை கேட்பதில்லை என்பது புரிய, ஒவ்வொரு இரவும் அவனுக்கு ஒரு யுகமாய் கழிந்தது.

அவள் மௌனங்களை அவனால் மொழி பெயர்க்க முடிகிறதுதான். ஆனால்.... அவன் கவலையே.... அந்த மௌனங்களை தனக்கு சாதகமாக மட்டுமே தான் மொழி பெயர்த்துவிட்டால் என்ற அச்சம்தான் காரணம்.

ஏதோ ஒரு விதத்தில், அவள் தன் மனதில் இருப்பதை வெளிப்படுத்தினால் பரவாயில்லையே.... ஏக்கப் பெருமூச்சு எழுந்தது. வார்த்தைகள் தேவையில்லை, வெளிப்பாடு

வேண்டுமே.... சிந்தனையின் வேகத்தில், அவனுக்கு தலை வலிப்பதுபோல் இருந்தது.

தலை வலிப்பது எப்பொழுதுமே நல்லதுக்கு கிடையாது, என்ற மருத்துவரின் அறிவுரை நினைவிற்கு வர, தன் சிந்தையை ஒதுக்கிவிட்டு, இருக்கையில் இருந்து எழுந்தவன், பால்க்கனியில் கால்கள் களைத்துப் போகும்வரைக்கும் நடந்தான்.

அவன் அறைக்குள் நுழைகையில், அனன்யா அழுது களைத்து உறங்கியிருந்தாள். அவள் அருகில் சென்று அமர்ந்தவன், அவள் முகத்தையே விடி விளக்கின் ஒளியில் இமைக்காமல் பார்த்தான்.

கண்ணீர் கறை படிந்த அவள் கன்னத்தை, தன் கரத்தால் வருடியவன், தன்னை மீட்டுக்கொள்ள முடியாமல், அவள் கன்னத்தில் இதழ் பதித்தான்.

அதே நேரம்.... நீண்ட நாட்களுக்குப் பிறகு.... கனவில் ஒரு முகம் அனன்யாவை துரத்தியது. முகம் முழுக்க ரத்தத்தில் தோய்ந்து.... நடுங்கும் கரத்தை அவள் பக்கம் நீட்டியவன், "என்னை விட்டுப் போய்விட்டாயே..." என கேட்பதுபோல் தோன்றியது.

வழக்கமாக அந்த இடத்தில் விழித்துவிடும் அவள், அன்று அது முடியாமல், அந்த முகம், நகுலின் முகமாக உரு மாற, அது ஏற்படுத்திய தாக்கமும், அப்படி அவனைக் காண முடியாத பதட்டமும், நிஜமாகவே அவனுக்கு எதுவோ என்ற நடுக்கமும் சேர,

நகுல் நிஜத்தில் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே.... அவள் தேகம் வெளிப்படையாய் நடுங்க, அவன் என்னவென்று உலுக்கும் முன்பே.... மூச்சுத் திணறியவள்.... "நகுல்...." என்ற வீறிடலோடு படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தாள்.

26

நகுல், அனன்யாவின் அருகில் அமர்ந்து, இரவு விளக்கின் ஒளியில் அவள் முகத்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே.... அவளது முகம் சிறு பதட்டத்துக்குப் போக, அவள் ஏதோ கனவு காண்பதை உணர்ந்து கொண்டான்.

சற்று நேரத்தில் அவள் சரியாகிவிடுவாள் என அவன் நினைக்க, அவன் நினைப்பிற்கு மாறாக, நிஜமாகவே அவள் மூச்சுக்கு திணற, அவளை எழுப்ப முயன்ற வேளையே.... தன் பெயரைச் சொன்னவாறு, அலறி எழுந்த அவளைக் கண்டு திகைத்துப் போனான்.

நொடியில் அருகில் இருந்த விளக்கை ஒளிர விட்டவன், "அன்னம்.... என்ன ஆச்சு...? இரு வரேன்..." ஒரே தாவலில், அவளது பஃப்பை எடுத்து வந்தவன், "இதை போட்டுக்கோ..." தானே அவள் வாயில் வைத்து ஸ்ப்ரே செய்தான்.

நொடியில் அதை உள் வாங்கி, மூச்சை இழுத்தவள், வாய்வழியாக மூச்சை இழுத்து தன்னை நிலைப்படுத்தினாள்.

அவள் நெஞ்சில் கை வைத்து நீவியவன், "என்னம்மா.... ஏதாவது கெட்ட கனவா...? அதெல்லாம் எதுவும் நிஜம் இல்லம்மா.... ரிலாக்ஸ். உனக்குத்தான் எமோஷனல் ஆனால் ஒத்துக்காதே.... பிறகு ஏன்..." ஒவ்வொரு வார்த்தைக்கும் அவன் வருடல் அதிகரிக்க, சற்று தவித்துதான் போனாள்.

அவள் தவிப்பை உணராதவன், "இரு, சுடுதண்ணி எடுத்துட்டு வரேன்..." படுக்கையில் இருந்து இறங்க முயன்றான்.

சட்டென அவனைத் தடுத்தவள், "என்னங்க.... நீங்க.... உங்களுக்கு எதுவும் இல்லையே..." படபடத்தவள், அவன் தலையையும், முகத்தையும், தன் கைகளால் தடவி உணர முயன்றாள்.

"என்னம்மா.... எனக்கு என்ன? எனக்கு ஒண்ணும் இல்லடா.... இதோ பார்.... உன் கண்ணு முன்னாடிதான் இருக்கேன்..." அவள் கன்னம் தாங்கி, தன் கண்ணைக் காண வைத்தான்.

ஆனால்.... அவ்வளவு சுலபமாக அவளால் இயல்புக்குத் திரும்ப முடியவில்லை. "இல்ல.... எனக்கு என்னவோ பயம்மா..." போர்வையை உதறியவள், அவனை அணைத்துக் கொண்டாள்.

"உன்னைப் பார்த்தால்.... எனக்கு சின்னப் புள்ளை மாதிரி இருக்கு. ஒரு கனவுக்கு போய் இவ்வளவு பயப்படுவாங்களா? அதுவும் மூச்சே திணறுற அளவுக்கா...?" செல்லமாக கடிந்தவன், அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

"ம்ச்.... உங்களுக்கு விளையாட்டா இருக்கா? எவ்வளவு வருஷம் ஆனாலும், என்னால் அந்த விபத்தை மறக்க முடியும்னு தோணலை..." அவன் முதுகில் வலிக்காமல் குத்தியவள், அவனை இறுகிக் கொண்டாள்.

"ஆக்சிடன்ட்டா...? எந்த ஆக்சிடண்ட்...? எனக்கா ஆக்சிடண்ட்...?" அவள் தோள் தொட்டு விலக்கி, அவள் முகம் பார்த்தான்.

சட்டென அவன் வாயை அடைத்தவள், "ப்ளீஸ்.... அப்படில்லாம் சொல்லாதீங்க. ஏதோ ஒரு விபத்தையே என்னால் தாங்கிக்க முடியலை, இதில்..." வியர்வை அரும்பியிருந்த தன் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டாள்.

"என்னம்மா...? எதுக்கு இவ்வளவு எமோஷனல் ஆகற? என்ன விஷயம்...?" ஒரு வேளை தனக்கு நேர்ந்த விபத்தைதான் சொல்கிறாளோ? அவளை அருகில் அமர்த்தியவனது மனம் தவித்தது.

அவள் அமைதியாக இருக்கவே.... "மனசு விட்டு பேசு அன்னம்.... அப்படி பேசினால் தானே என்ன விஷயம்னு தெரிஞ்சுக்க முடியும்? நீ எதைப்பற்றி வேண்டுமானாலும் என்கிட்டே பேசலாம். அதை ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்குற.., சரி.., உனக்கு சொல்ல விருப்பம் இல்லையென்றால் வேண்டாம்..." குரலை இயல்பாக மாற்ற முயன்றாலும், அதில் ஒரு சிறு வருத்தம் இழையோடவே செய்தது.

ஏற்கனவே வேந்தனிடம் இதைப்பற்றி பேசி, அவன் கண்டித்தது அசந்தர்ப்பமாக நினைவிற்கு வர, அதை ஒதுக்கியவள், "நான் முதல் முதல்ல சென்னைக்கு வந்தப்போ.... ஒரு ஆக்சிடண்ட்டை நேர்ல பார்த்தேன். என் அண்ணனும் விபத்தில் இறந்த காரணத்தால், என்னால் அதைப் பாத்துட்டு சும்மா இருக்க முடியலை.

"அந்த நேர உந்துதல்.... எப்படியாவது அந்த உயிரை காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற தவிப்பு.... அந்த உயிர் துடித்த துடிப்பு.... என்னால் எதையுமே அந்த நேரம் யோசிக்க முடியலை.

"அந்த ரத்தம் தோய்ந்த முகம், ரத்தத்தில் சூடு.... அதன் நிறம்.... அது அவன் முகத்தில் படர்ந்திருந்த விகாரம்.... இப்படி எதுவுமே அந்த நேரம் என்னை தேக்கவே இல்லை. அவன் தலையில் இருந்து வழிந்த ரத்தத்தை முதல்ல நிறுத்தணும் என்பது மட்டும்தான் என் நினைவில் இருந்தது.

"கொஞ்சம் கூட யோசிக்காமல்.... என்னோட துப்பட்டாவை எடுத்து அவன் தலையில் கட்டு போட்டேன். ஆம்புலன்ஸ் வந்து, அதில் ஏற்றி, அவனை ஹாஸ்பிடல் கூட்டி போற

வழியில், அவனுக்கு பிக்ஸ் வந்து மயங்கிட்டப்போ.... என் இதய துடிப்பே ஒரு நிமிஷம் நின்னுடுச்சு.

"நர்ஸ், அது சாதாரண மயக்கம்தான்னு சொன்ன பிறகுதான் கொஞ்சமாவது மூச்சே வந்தது. ஆனா.... ஹாஸ்பிடல் போன உடனேயே, போலீஸ், கேஸ்.... அது இதுன்னு, மையூ பயம் காட்ட, கூடவே எங்க மேமோட போன் வேற வர,

"ஹாஸ்பிடல்ல இருந்து, அந்த போலீஸ் கண்ணில் படாமல், அப்படியே ரயில்வே ஸ்டேஷன் போய்ட்டோம். ஆனா.... அவனுக்கு என்ன ஆச்சோ என்னவோ.... பிழைத்தானா இல்லையா...? எப்படி இருக்கானோன்னு ஒவ்வொரு நாளும் நான் பட்ட துன்பம் எனக்கு மட்டும்தான் தெரியும்.

"அவன் நல்லா இருக்கான்னு ஒரு வார்த்தை தெரிந்துகொண்டால் நிம்மதியா இருக்கும்னு, ஜிஹெச்க்கு போன் போட்டால்.... அவன் பெயரைச் சொல்லுன்னு கேள்வி.... எனக்கே தெரியாத பெயரை நான் எப்படிச் சொல்ல?

"தினமும் இரவில், அவனோட ரத்தம் தோய்ந்த முகம், கண்ணு முன்னாடி வந்து, 'என்னை பாதியில் விட்டுட்டு போயிட்டியே'ன்னு கேள்வி கேட்டு தொல்லை செய்யும். எத்தனையோ இரவுகள் தூங்காமல் கழித்திருக்கிறேன்.

"அதுக்குப் பிறகு.... ஒரு வேளை.... அவன் பிழைத்திருக்க மாட்டானோ என்ற பயம் மனதை பாடா படுத்தியது. மையூதான்.... அப்படி ஆக சான்சே இல்லைன்னு சொல்லி, என்னை நார்மலுக்கு கொண்டு வந்தா. அதற்குப் பிறகு, படிப்படியா அந்த கனவு வரது நின்னுடுச்சு.

"இப்போ ரொம்ப நாள் கழித்து.... கிட்டத்தட்ட நானே அந்த விஷயத்தை மறந்துட்டேன்னு நினைச்சுட்டு இருந்தப்போ.... இப்போ.... மறுபடியும் அதே கனவு...." மீண்டும் கனவு நிழல்படமாக நினைவிற்கு வர, சிலிர்த்துக் கொண்டாள்.

தான் ஓரளவு யூகித்திருந்த விஷயம்தான்.... ஆனால்.... அதை அவள் வாயால் கேட்க, சற்று சிலிர்த்துத்தான் போயிருந்தான். அதுவும் ஏற்ற இறக்கங்களோடு அவள் விவரித்த விதம், மனதுக்குள் சற்று நேரம் அதை அசை போட்டவனுக்கு,

‘நான்தான் அந்த விபத்தில் சிக்கியவன் அன்னம்.... இதோ உன் கண் முன்னாடிதான் இருக்கிறேன்...’, நுனி நாக்குவரை வந்த வார்த்தைகளை கடித்து விழுங்கினான்.

இந்த விஷயத்தைச் சொல்லி, அவளை தன் பக்கம் திருப்பி விட்டதாக எண்ணிவிடக் கூடாதே.... அதைவிட, அவள் தன் காதலுக்காக மட்டுமே தன்னோடு இருக்க வேண்டும் என அவன் விரும்பியதில் தவறேதும் இல்லையே.

தன் நினைவில் மூழ்கியவன், அவள் தேகம் நடுங்குவதை உணர்ந்து, "ஓ.... ஒரு வேளை.... உன்னை அறியாமலேயே அதை நினைத்தாயோ என்னவோ, அதான் கனவா வந்துடுச்சு போல. சரி.... கனவுக்கும், நீ என் பேரைச் சொல்லி கத்துனதுக்கும் என்ன சம்பந்தம்?" இதை கேட்கும் முன்னர், அவன் இதயம் தடதடத்தது.

"ஐயோ.... கேக்காதீங்க.... இவ்வளவு நாள்.... ஏதோ முகம் தெரியாத பிம்பமா இருந்த உருவம், இன்னைக்கு.... இன்னைக்கு...." ஒரு பேச்சுக்கு கூட அவளால், அவனை அப்படி பார்த்ததை உரைக்க முடியவில்லை.

"இன்னைக்கு.... அந்த முகம், என் முகமா தெரிந்ததோ...?" அவன் என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டான்.

"சொல்லாதீங்க..." கைகளால் தன் காதை மூடியவள், "தெரியாமல் நடந்ததையே என்னால் தாங்க முடியலை, இப்போ.... உங்க முகம்.... தெரிய வரப்போ.... என்னால் தாங்கவே முடியலை.... ஏன் இப்படி...?" வெம்பினாள்.

"அன்னம்.... நெருப்புன்னு சொன்னால் வாய் வெந்துடுமா என்ன? சாதாரண கனவுக்கு போய்.... சரி விடு....

இப்போவாவது உன் மனசுக்குள்ளே இருப்பதை சொல்..." அவள் கன்னத்தை தாங்கிக் கொண்டான்.

அவள் அந்த விபத்தை மறக்கவில்லை என்பதே ஒரு ஆறுதல் என்றால்.... தன் முகம் அவள் மனதில் தெரிகிறது என்றால்.... தான் அவள் மனதுக்குள் எந்த அளவு இருக்கிறோம் என்பதை எண்ணி மனம் சந்தோஷத்தில் விம்மியது.

அப்படியே அவளை இழுத்து அணைத்துக் கொண்டால் என்ன.... மனதின் எண்ணத்தை விழிகள் பிரதிபலித்தது.

அவன் கன்னத்தை தாங்கிய விதம், கண்களில் வழிந்த கருணை, அவன் பார்வை தன்னை வருடிய விதம், அவனுக்குள் கரைந்து போக விரும்பினாள்.

அவன் நெஞ்சுக்குள் உறங்கிய நாட்கள் நினைவில் எழ, அந்த ஊட்டி நாட்கள் திரும்பி வராதா என அவள் மனம் ஏங்கியது.

"சொல்லும்மா..." வார்த்தைக்கே வலிக்குமோ என வருடியது அவன் குரல். அதில் கலைந்தவள்,

அவன் வார்த்தைகள் மனதை ஊடுருவ, "என் மனசுக்குள்ளே..." சற்று நேரம் இமை மூடியவள், கண்கள் பளிச்சிட, "அவன் எப்படி இருக்கான்னு தெரிஞ்சுக்கணும்னு ஒரு ஆசை. அவன் உயிரோடதான்னு இருக்கான்னு தெரிஞ்சால் கூட போதும்.... அது நடக்குமான்னு தெரியலை.... உங்களால் முடியுமா?" கண்கள் எதிர்பார்ப்போடு அவனை ஏறிட்டது.

‘உன் கண்ணு முன்னாடிதான்ம்மா இருக்கிறேன்....’, வாய்வரை வந்த வார்த்தைகளை விழுங்கினான்.

"உன் மனசுக்குள் நினைப்பதையே நான் நிறைவேற்றி வைப்பேன். இப்போ நீ வாய்விட்டு கேட்டிருக்க.... இதை

நிறைவேற்றாமல் போவேனா?" அவள் கன்னத்தை விலக்காமல் கேட்க,

"நிஜமா...?" அவன் கரத்தின்மேல் தன் கரத்தை வைத்தவளது குரலில் ஒரு குழந்தையின் குதூகலம்.

"சத்தியமா..." உறுதி கொடுத்தவன், "அப்படி அவனை உன்முன்னால் கொண்டு வந்து நிறுத்தினால்..." விழி ஊடுருவ அவளைப் பார்க்க, "ச்சீ..." சன்னமாய் முனகியவள், அவன் கரத்தை விலக்கிவிட்டு, அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

அவள் செய்கையில், அவனால்தான் சாதாரணமாக இருக்க முடியவில்லை. 'உன் மனதில் நான் இருக்கிறேன் என்பதை வெளிப்படுத்திவிடேன்...' அவன் மனம் கெஞ்சியது.

இரவுகளின் சோதனைகள் தனக்கு இன்னும் நீங்கவில்லை என்பதை உணந்தவனுக்கு, ஒரு பக்கம் வேதனையாக இருந்தது. அவள் மனதில் தான் இல்லை என்ற நினைப்பு இருந்த வரைக்கும் விலகி இருக்க முடிந்த அவனால், அவள் மனதுக்குள் தான் இருக்கிறோம் என்பதை உணர்ந்த பிறகு, விலகியிருப்பது பெரும் கொடுமையாக இருந்தது.

அவளை தன்னவளாக மாற்றிக்கொள்ள ஒரு நிமிடம் கூட ஆகாது. ஆனால்...., அவளது அடைக்கலம் புரிந்தாலும், அவள் தன் மனதை வெளிப்படுத்தாமல், தானாக அவளை அடைவதை அவன் விரும்பவில்லை.

நூற்றில் ஒன்றாக.... வேந்தனது சத்தியத்துக்கு கொடுக்கும் மதிப்பைபோல், தான் கட்டிய தாலிக்கு மதிப்பளிக்க வேண்டும் என அவள் எண்ணியிருந்தால்.... அவனது இந்த நினைவே அவளை அடைவதை தேக்கியது.

தன் நெஞ்சில் சாய்ந்திருந்தவளை விலக்கிவிட மனமில்லாமல், ஒரு கையால் விளக்கை நிறுத்தியவன், மறு கையால், அவளை அணைத்தவாறு படுத்துக்

கொண்டான். அவளோ.... இன்னும் வாகாக அவன்மேல் ஒட்டிக் கொண்டவள், பாதி படர்ந்த நிலையில் இருந்தாள்.

அவன் நெஞ்சில் இருந்து தலையை நிமிர்த்தியவள், அவன் முகம் பார்க்க, விடிவிளக்கின் ஒளியில், அவளிடம் தலையசைவில் என்ன என்று கேட்டான்.

"எப்பவுமே இப்படி சூடாகவே இருக்கீங்களே எப்படி...?" கேட்டவள், தன் கன்னத்தை அவன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டாள்.

‘ஆண்டவா.... சத்திய சோதனை வைக்கிறாளே...’, அவனால் அதற்குமேல் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல், சட்டென அவளை படுக்கையில் சாய்த்தவன், சற்று முரட்டுத்தனமாக அவள்மேல் படர்ந்து, அழுத்தமாக அவள் இதழ்களை கவ்விக் கொண்டான்.

அவன் கரங்கள் முதல்முறையாக அவள் மேனியில் இடம் மாற, அவன் கரங்களும் முரட்டுத்தனத்தை வெளிப்படுத்த, திணறித்தான் போனாள். தன் தேகத்தில் அலையலையாக பரவிய அந்த உணர்வின் தாக்கம், அவளை மொத்தமாக உருக்கியது.

பார்க்கும் பார்வையில் கூட வருடுபவன், நெருக்கத்தில் காட்டும் பாய்ச்சல், அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன் இதழ்களுக்குள் ஆராய்ச்சியே நடத்தும் அவன் செய்கை, கரங்களில் வேகம், அவன் உணர்வுகள் உரைத்த செய்தி, நொடியில் உறைந்தே போனாள்.

மூச்சுக்காற்றுக்கு அவள் நெஞ்சுக்கூடு தவிக்க, அவனுக்கோ.... அப்படி ஒரு நினைப்பு இருந்ததாகவே தெரியவில்லை. மூச்சடக்கி முத்துக் குளித்துக் கொண்டிருந்தான். தன் தேகம் உணர்த்திய அவள் மென்மை, தன் கரங்கள் உணர்ந்த அவள் வடிவங்கள்.... மீளவே முடியாமல், அவளுக்குள் மூழ்க முயன்றான்.

அவளுக்கோ.... இதற்குமேல் முடியாது என, தன் சக்தி அனைத்தையும் திரட்டி, அவன் முகத்தை விலக்க முயல, அப்பொழுதுதான் கலைத்தவன், விருட்டென எழுந்து, அறையை விட்டு வெளியேறிப் போனான்.

"சாரி..." அறையை விட்டு வெளியேறும் முன்னர், அவள் முகம் பாராமல் அவன் உரைத்துச் செல்ல, துடித்துப் போனாள்.

‘மூச்சுவிட முடியவில்லை என்றுதானே அவர் முகத்தை விலக்கினேன்...’ தன் செய்கைக்கு விளக்கமளித்தவள், அவன் விட்டுச்சென்ற கோலத்திலேயே படுகையில் விழுந்திருந்தாள். அவன் கரங்கள் ஊர்ந்த இடமெல்லாம்.... தீயாய் தகித்தது.

தனக்குள் கிளர்ந்தெழுந்த உணர்வுகள், தணிய முடியாமல் தவித்தது. இன்னும் தன் இதழ்களில் மிச்சமிருந்த அவன் வெம்மை, கீழ் உதட்டை பற்களால் கடித்துக் கொண்டவளுக்கு, அவன் இதழ்களுக்குள் சிக்கியிருந்த இதம் நினைவிற்கு வர, கண்களில் கோடை மழை.

‘எப்பொழுதும் இப்படித்தான் செய்கிறார்...’ மனம் செல்ல கோபம் கொண்டது.

நெருங்கிவந்து.... விலகிச்செல்லும் அவன் செய்கையை, அவ்வளவு சுலபமாக அவளால் ஏற்க முடியவில்லை.

அறையை விட்டு வெளியேறிய நகுலோ.... தன்னை நிலைப்படுத்த முடியாமல் தவித்துப் போனான். ‘அவள் இப்பொழுதே வேண்டும்...’ அவன் உடலின் செல் அனைத்தும், ஓலமிட்டன.

அருகில் இருந்த விருந்தினர் அறையில் புகுந்தவன், தலையை அழுத்த பற்றிக் கொண்டான். உச்சத்தில் நின்ற அவன் உணர்வுகள், இறங்கவே மாட்டேன் என சண்டித்தனம் செய்தது.

அவள் தன்னை விலக்கியதன் காரணம் அவனுக்கு தெளிவாகப் புரிந்தது. ‘டேய்.... அவளுக்கு மூச்சுவிடக் கூட அனுமதி கொடுக்க மாட்டாயா...?’ தன்னையே கேட்டவன், தன் கன்னத்தில் அறைந்து கொண்டான்.

‘ஏற்கனவே அவளுக்கு வீசிங்.... இதில் நீவேற உன் முரட்டுத்தனத்தை காட்டுற...’ தன்னையே கடிந்து கொண்டான்.

தான் எவ்வளவு தூரம் அவளை விட்டு விலகி இருக்கிறோமோ.... அதைவிட பல மடங்கு அவள்மேல் வேட்கை அதிகரிக்கிறது என்பதை திகைப்பாய் உணர்ந்தான்.

நிச்சயம் தன் முதல் கூடலில் அவளை முரட்டுத்தனமாக அணுகிவிடுவோம் என்பதை உணர்ந்தவனுக்கு, அதை தவிர்க்கும் மார்க்கம்தான் புரியவில்லை.

இப்பொழுது கூட, அவள் இதழ்களை விட்டு பிரிந்த மறு நிமிடம், மீண்டும் புதைந்து போகத்தான் விரும்பினான். ஆனால்.... அவள் கண்களில் தெரிந்த சிறு பயம்.... வாயை அகலமாகத் திறத்து, மூச்சுவிட்ட அவள் செய்கை மட்டுமே அவனை வேகமாக விலகி வரத் தூண்டியது.

பாத்ரூமுக்குள் சென்று, முகத்தில் நீரடித்து கழுவியவன், ஆழமாக மூச்செடுத்து தன்னை படிப்படியாக நிதானத்துக்கு கொண்டு வந்தான்.

அங்கே இருந்த டவ்வலால் முகத்தை துடைத்தவன், அந்த அறையை விட்டு வெளியேற, வீடே வெளிச்சத்தில் மிதப்பதைக் கண்டான்.

‘என்ன இது...?’ எண்ணியவன் படிகளில் தடதடவென இறங்கினான்.

அங்கே.... "அம்மா.... ரொம்ப வலிக்குதும்மா..." வருணா தன் இடையைப் பற்றியவாறு சன்னமாக முனகிக்

கொண்டிருந்தாள்.

"கொஞ்சம் வலி பொறுத்துக்கோ வருணா.... இப்போ ஹாஸ்பிடல் போய்டலாம்..." தாய் அவளுக்கு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தார்.

"வருணா..." நிலைமையை யூகித்தவன், தங்கையின் அருகில் ஓடினான்.

"அண்ணா..." அழைத்தவள், அவன் கரத்தை பற்றிக் கொண்டாள்.

"நவீன் எங்கேம்மா...? எங்கே போய் தொலைந்தான்...?" தங்கையை தவிக்க விட்டு, எங்கே சென்றான் என்ற கோபம் அவனிடம் வெளிப்பட்டது.

"ம்ச்.... இப்போ ஏன் சத்தம் போடுற? டிரைவரை எழுப்ப போயிருக்கான். அதோ வரான் பார்..." அவனுக்கு பதில் கொடுத்தவர், கையில் இருந்த பொருட்களை சரி பார்த்தார்.

"வரு.... என்னம்மா.... ரொம்ப வலிக்குதா...?" ஓடி வந்தவன், அவள் இடக்கரத்தை பற்றிக் கொண்டான்.

"அம்மா.... வெந்நீர் கேட்டீங்களே.... இந்தாங்க..." பொன்னம்மா கொடுக்க, அதை பதமா ஆற்றி இருக்கியா.... அவளிடமிருந்து வாங்கியவர், "இதைக் குடி..." மகளிடம் கொடுத்தார்.

"அப்பா எங்கேம்மா..?" தாயிடம் கேட்க,

"இடியே விழுந்தாலும், உங்க அப்பா தூங்கிட்ட பிறகு அவரை அசைக்க முடியுமா? தூங்கறார்.... காலையில் சொல்லிக்கலாம் விடு..." அத்தோடு நிறுத்திக் கொண்டார்.

தந்தையைப் பற்றி தெரிந்தவன், அதை விடுத்து, "வருணா.... நீ முதல்ல வந்து உக்கார்..." அவளை அழைத்து வந்து, சோபாவில் அமர வைக்க முயன்றான் நகுல்.

"ம்ச்.... அவ நிக்கட்டும்.... நீ போய் கிளம்பி வா..." அவனை அனுப்ப முயன்றார்.

"அவ வலியில் துடிக்கறா.... நீங்க என்னன்னா நிக்கட்டும்னு சொல்றீங்க. பாவம்மா..." பதட்டமடைந்தான். நவீன் வரவே, தங்கையை விட்டு, தாயின் அருகில் சென்று நின்றுகொண்டான்.

"ம்ச்.... அவளுக்கு வலி விட்டு விட்டுதான் இருக்குப்பா. எப்படியும் டெலிவரி ஆக காலை ஆயிடும். நடந்தால்தான் பிரசவம் சுலபமா இருக்கும், அதான் சொல்றேன்... நீ போ..." அவனுக்கு விளக்கினார்.

"என்னது.... காலை வரைக்குமா...?" நவீன் அலறியே விட்டான்.

வருணா இப்பொழுது மீண்டும் துடிக்க, "அம்மா.... வரு ரொம்ப துடிக்கிறா.." நவீன் விட்டால் அழுதே விடுவான் போல் இருந்தான்.

"அடடா.... இந்த பசங்க இருக்காங்களே.... பொண்ணா பொறந்தால் எல்லாத்தையும் தாங்கித்தான் ஆகணும். சரி கார் ரெடியா? வருணா.... கொஞ்ச நேரம் கழிச்சு போகலாமா.., இல்ல இப்போவே போகணுமா...?" அவளுக்கு வலி சற்று விட்டு விட்டு வரவே கேட்டார்.

"கொஞ்ச நேரம் ஆகட்டும்மா.... லேபர் ரூமுக்குள்ளே போய்ட்டா..." மீதியைச் சொல்லாமல், நவீனின் கரத்தை இறுக பற்றிக் கொண்டாள்.

அவனோ.... அவளை தோளில் சாய்த்தவன், அவள் வயிற்றை இதமாய் வருடினான். "ரொம்ப வலிக்குதா வரு..." வார்த்தைகள் வலியோடு வெளிவர, "ம்ஹூம்..." மறுப்பாக தலை அசைத்தவள், அவன் தோள் சாய்ந்தவள், "ம்..." இதழ் கடித்து வலியை அடக்கினாள்.

நகுல் தன் அறைக்கு விரைந்தவன், "அன்னம்..." மெதுவாக அழைக்க, அவனது அந்த அழைப்புக்கே சட்டென எழுந்து அமர்ந்தாள்.

27

அவ்வளவு நேரமாக தன் உணர்வுகளிலேயே மூழ்கி இருந்தவள், உறக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரள, அவனது மெதுவான அழைப்பிலேயே விழித்துக் கொண்டாள்.

"என்னங்க...?" வேகமாக எழுந்தவள் கேட்க, "வருணாவை ஹாஸ்பிடல் கூட்டி போறாங்க..." அவன் உரைத்த அடுத்த நொடி, அவனிடம் என்னவென்று கூட கேட்காமல், எழுந்து ஓடினாள்.

"அன்னம் பாத்து..." அவன் குரல் அவளைத் தொடர, அவள் அதை கண்டுகொள்ளவே இல்லை.

"வரு..." குரல்கொடுத்தவாறே ஓடியவள், மற்றவர்கள் பதறுவதை கண்டுகொள்ளாமல், வந்த வேகத்தில் அவள் அருகில் வந்து மூச்சு வாங்கினாள்.

"அனு.... உன்னை யார் இப்படி ஓடி வரச் சொன்னா? பார் மூச்சு வாங்குது..." அந்த நேரத்திலும் அவளை கடிந்து கொண்டாள் வருணா.

"ம்ச்.... அதை விடு.... உனக்கு எப்படி இருக்கு...?"

"ம்..." அந்த நிமிடம் வலி வர, அவளால் பேச முடியவில்லை. அதன் பிறகு, வலி அதிகரிக்க, உடனடியாக மருத்துவானைக்கு கிளம்பி விட்டார்கள். ஏற்கனவே மருத்துவர் ரம்யாவுக்கு தகவல் கொடுத்து விட்டதால், அவள் தயாராக இருந்தாள்.

லேபர் வார்டுக்குள், நவீன் வருவேன் என அடம் பிடிக்க, பிடிவாதமாக அவனை மறுத்தாள் வருணா.

உள்ளே வந்த அவளிடம், "நவீனை அனுமதித்திருக்கலாமே வருணா..." கையில் கிளவுஸை மாட்டியவாறே கேட்டாள்.

"நான் இந்த வலியை தாங்கிப்பேன். ஆனா.... அவரால் தாங்கிக்க முடியாது அதான்..." அவள் உரைக்க, அவள் நேசத்தை எண்ணி வியந்தாள்.

"நல்ல புருஷன் பொண்டாட்டி.... அவன் என்னன்னா.... என் பொண்டாட்டிக்கு வலிக்காமல் பிரசவம் பார்ன்னு மிரட்டுறான். நீ என்னன்னா.... அவனுக்கு தாங்க முடியாதுன்னு சொல்ற.... நடக்கட்டும்..." சின்ன சிரிப்பில் உரைத்தாள்.

அடுத்த நிமிடங்களில் அவள் வலி அதிகரிக்க..... "அம்மா..." அவளது அலறல் அறைக்கு வெளியே கேட்க, நவீன் துடித்துப் போனான்.

"டேய்.... என்ன இது...?" அவன் படும் துன்பத்தை காண சகிக்காமல், நகுல் அவன் தோளை அழுத்தினான்.

"உனக்கும் வரும்.... அப்போ தெரியும்..." மூடிய கதவை பார்த்தவாறே உரைத்தான். நகுல், அருகில் இருந்த தன் மனைவியை நோக்க, லேசாக சிவந்தவள்,

"அண்ணா.... இன்னும் கொஞ்ச நேரம்தான்..." அனன்யாவும்...

"நவீன்.... பிரசவம்னா அப்படித்தான். வலிக்காமல் பிள்ளை பெற முடியுமா?" பார்வதியும் உரைக்க, எதுவும் அவன் காதில் ஏறவே இல்லை.

நிமிடத்துக்கு நிமிடம் உயர்ந்த வருணாவின் குரலும், கடந்த நிமிடங்களும், அவனை முள்ளின்மேல் இருக்கும் உணர்வில் தவிக்க வைத்தது.

இறுதியாக.... வருணாவின் உச்ச அலறலும், குழந்தையின் அழுகையும் சேர்ந்து ஒலிக்க, "மச்சான்.... வாழ்த்துக்கள்..." அவனை இறுக கட்டிக் கொண்டான்.

"வருணா பேஷண்டுக்கு பையன் பொறந்திருக்கான்..." செவிலி குரல் கொடுத்துச் செல்ல, நவீன் கண்களில் நீர் நிறைய சிரித்தவன், "வருணா..." அவளிடம் கேட்க,

"இன்னும் அரைமணி நேரத்தில் பேஷண்டை ரூமுக்கு மாத்திடுவோம்.., நீங்க அங்கே பார்க்கலாம்..." உள்ளே சென்றவள், அடுத்த பத்து நிமிடத்தில், கையில் ஒரு பூக்குவியலாய் குழந்தையை ஏந்தி வந்து, நவீனிடம் கொடுக்க முயன்றாள்.

"அம்மா.... நீங்க வாங்குங்க..." குழந்தையை ஏந்த தெரியாமல் தடுமாறியவன், பார்வதியிடம் உரைக்க, வேகமாக வந்து குழந்தையை வாங்கிக் கொண்டார்.

"அப்படியே வருணாவை உரிச்சு வச்சிருக்கான் இல்ல..." நவீன் பெருமிதமாக மகனைப் பார்த்தவாறே வினவ, "ஆமா..." அங்கிருந்த அனைவரும் ஒத்துக் கொண்டார்கள்.

அந்த நிமிடம், தன்னை யாரோ பார்ப்பதுபோல் இருக்க, வேகமாக நிமிர்ந்து பார்த்த அனன்யா, ஆழமான பார்வையில் தன்னை நோக்கும் நகுலைக் கண்டு, முகம் சிவக்க, பார்வையை திருப்பிக் கொண்டாள்.

இதயம் தாறுமாறாக துடித்தது. "அம்மா.... நான் எந்த ரூம்னு கேட்டுட்டு வரேன்..." நகுல் விலகிச் சென்ற பிறகுதான் அவளால் இயல்பாக மூச்சு விடவே முடிந்தது.

நவீனோ.... குழந்தையை எப்படி தூக்குவது என பார்வதியிடம் பாடம் படிக்க, தட்டுத் தடுமாறி, கைகள் நடுங்க குழந்தையை வாங்கியவன், உச்சி முகர்ந்தான்.

அவன் மீசை முடியின் உராய்வில், சற்று சிணுங்கிய குழந்தை, மீண்டும் விழிகளை மூடிக் கொண்டது.

அதைப் பார்த்தவாறே வந்த நகுல், "அம்மா.... தேர்ட் ப்ளோர்.... ரூம் நம்பர் திரி ஜீரோ போர்.... நாம அங்கே போய்டலாம். லேபர் ரூமில் இருந்து, வருணாவை

அங்கேயே கூட்டி வந்துடுவாங்களாம்..." அவன் தகவல் சொல்ல, அனைவரும் கிளம்பினார்கள்.

"மச்சான்.... இந்த மூக்கு மட்டும் என்னை மாதிரி இருக்குல்ல.... இல்லடா.... அதுவும் வருணாவேதான்..." நவீன் விடாமல் உற்சாகத்தில் மிதந்தான்.

நண்பனின் குதூகலம் நகுலையும் தொற்றிக்கொள்ள, "பொறாமைப்பட வைக்கிறானே..." சன்னமாக முனக, அது அனன்யாவுக்கு தெளிவாக கேட்டது.

"ம்ச்..." மெதுவாய் மறுத்தவள், அவன் கையை கோர்த்துக் கொண்டாள். அதென்னவோ.... அவனது வார்த்தைகள் அவளை மிகவும் பாதித்தது.

அதற்குள் அறை வந்துவிட, குழந்தையோடு நவீன் முதலில் நுழைய, அவர்களுக்கு முன்பாகவே வருணா அங்கே இருந்தாள்.

"வரு..." அவன் அழைக்க, சோம்பலாக கண் திறந்தவள், மென்மையாக புன்னகைத்தாள்.

மனைவியின் நெற்றியில் இதழ் பதித்தவன், "ரொம்ப கஷ்டபட்டியாடா..." குரல் நெகிழ்ந்து போனது.

அவனை அருகிழுத்தவள், "உங்க அளவுக்கு இல்லை..." அவள், அவன் காதில் கிசுகிசுக்க, செல்லமாக அவள் நெற்றியில் முட்டினான்.

அதே நேரம்.... குழந்தை தன் இருப்பை சிணுங்கலாக வெளிப்படுத்த, "அடேய்.... அவ என் பொண்டாட்டிடா.... நான் கொஞ்சினால் உனக்கு அதுக்குள்ளே பொறுக்கலையா...?" நவீன் போலியாக கோபம் கொள்ள, அங்கிருந்த அனைவருமே சிரித்து விட்டார்கள்.

"நவீன்..." சிணுங்கியவள், "பையன் என்ன சொல்றான்...?" அவனிடம் கேட்டாள்.

"அவனுக்கு அம்மாதான் வேணுமாம்..." அவன் உரைக்கும் முன்பே, தன் சிணுங்கலை அழுகையாக மாற்றி இருந்தான்.

"வருணா.... குழந்தைக்கு பசியாற்று.... குழந்தையை வாங்கிக்கோ..." பார்வதி உரைக்க, அவள் குழந்தையை ஏந்த தடுமாறவே, குழந்தையை நவீனிடம் இருந்து வாங்கியவர்,

"நவீன்.... அவளை கொஞ்சம் எழுப்பி உக்கார வைப்பா..." அவர் உரைத்தார்.

"அம்மா.... அவளுக்கு வலிக்கும்..." நவீன் பதற,

"ஐயோ ஆண்டவா.... இப்போ சொன்னதை மட்டும் செய்ங்க..." வருணா அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

முழுதாக அவளைத் தாங்கி அமர வைத்தவன், "நீங்க பாத்துக் கோங்கம்மா..." அங்கிருந்து வெளியேறினான். மற்றவர்களும் வெளியேறியிருக்க, குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் முறையை விளக்கினார் பார்வதி.

குழந்தை பசியாற, வருணாவிற்கு குடிக்க சூடாக ஹார்லிக்ஸ் கலக்கத் துவங்கினார்.

குழந்தை உறங்கியதும், அவனை தொட்டிலில் கிடத்தியவர், அவளுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்தார். "நீயும் கொஞ்சம் தூங்கும்மா..." அவர் உரைக்க, மௌனமாக கண் மூடினாள்.

சற்று நேரத்தில் குழந்தை சிணுங்கவே.., அறைக்குள் இருந்த அனன்யா, குழந்தையை தூக்கியவள், அவன் படுக்கையை ஈரம் செய்திருக்கவே, வேகமாக அவனுக்கு துணி மாற்றினாள்.

அதைப் பார்த்த பார்வதி வியக்க, அவர் பார்வையை உணர்ந்தவள், "என் தம்பி கெவினை நான்தான் குழந்தையில் பாத்துகிட்டேன். அதான்..." குழந்தையை

வெகு இயல்பாய் தூக்கி.... கரங்களுக்குள் பொத்தி வைத்து, உறங்க வைக்க முயன்றாள்.

அவள் செய்கையைப் பார்த்த நகுல், தன் அலைபேசியில் அவளையும், குழந்தையையும் புகைப்படம் எடுக்க, "என்ன பண்றீங்க.... குழந்தைக்கு ஒத்துக்காது..." அவனை தடுத்தாள்.

"அன்னம்.... ப்ளாஷ் போடாமல்தான் எடுக்கறேன். அதனால் பரவாயில்லை. ப்ளாஷ் போட்டால்தான் குழந்தையின் கண்பார்வையே போய்விடும் அபாயம் இருக்குன்னு எனக்கும் தெரியும். அன்னைக்கு நியூஸ் கூட பார்த்தோமே..." தன் அலைபேசியை நவீனின் கையில் கொடுத்தான்.

"இதை ஏண்டா என்கிட்டே கொடுக்கற?" அவன் புரியாமல் கேட்க,

"ஒரே ஒரு போட்டோ எடு..." உரைத்தவன், அனன்யாவின் முதுகின் பின்னால் போய் நின்றவன், அவள் தோளில் கை போட்டவாறு இணைந்து நிற்க, நவீனின் முகம் ஒரு நொடியில் சுருங்கித்தான் போயிற்று.

நகுலின் செய்கை, அவன் மனதில் இருக்கும் ஏக்கத்தை வெளிப்படுத்த, அவனுக்கு தொண்டைக்குழியின் துக்கம் சுழன்றது.

"சீக்கிரம்டா..." நகுல் குரல் கொடுக்க, கேமராவை இயக்கினான்.

"இப்படி ஒரு பாக்கியம் எனக்கு அமையுமான்னு தெரியலை..." குழந்தையின்மேல் பார்வையை பதித்து, நகுல் உரைக்க, அடிபட்ட பாவனையில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் அனன்யா.

‘ஏன்...’ அவனிடம் கேள்வி கேட்கும் முன்னர், அவளை விட்டு விலகிச் சென்றிருந்தான். அனைத்து காட்சிகளையும்,

நவீன் அற்புதமாக படம் பிடித்திருந்தான்.

அதிலும்.... எதிர் எதிராக இருவரும் முகம் பார்த்து நின்று, பார்வையால் பேசிய தருணம் மிகவும் அழகாய் பதிவாகியது.

அடுத்த மூன்று நாட்களும், வீட்டில் பக்குவமாக சமைக்க உதவுவதும், அதை வருணாவிற்கு எடுத்துச் செல்வது என அனன்யா சுழல, மருத்துவமனைக்கும் அலுவலகத்துக்கும் என அல்லாடினான் நகுல்.

புதிய கம்பெனிக்கு வாங்க வேண்டிய உபகரணங்களை உடனடியாக வெளிநாட்டில் இருந்து வாங்கியாக வேண்டிய சூழ்நிலை. யூனிட் வேலைகள் முடிந்து அலுவலகம் தயாராகி விட்டது.

வருணா மூன்றாம் நாள் வீட்டுக்கு வருவதாக முடிவாக, அடுத்த இரண்டு நாட்களில் அவன் வெளிநாடு செல்வதாக ஏற்பாடானது.

வருணா வீட்டுக்கு வந்துவிட்டிருக்க, "அம்மா.... நான் நாளைக்கு காலையில் கிளம்பணும். நாலுநாள் கழித்துதான் வருவேன். உங்களுக்கு இங்கே ஏதாவது வேலை இருக்கா? சொன்னீங்கன்னா செய்துட்டு கிளம்புவேன்...." அவர் அருகில் அமர்ந்தவாறு உரைத்தான்.

"நீ வந்த பிறகுதான் வேலை இருக்கும் நகுல். குழந்தைக்கு பேர் வைக்கும் சடங்கு இருக்கே..." அவனுக்கு நினைவூட்டினார்.

"அப்போ சரி.... அதை நான் வந்த பிறகே பாத்துக்கறேன்..." அவன் சொல்ல,

"டேய்.... இந்த டென்ஷனை எல்லாம் நீ தலையில் போட்டுக்காதே. அதையெல்லாம் நான் பாத்துக்கறேன். என் அப்பாகிட்டே சொன்னால் போதும், அப்படியே பக்காவா

ப்ளான் போடுவார். சோ.... நீ நல்லபடியா போயிட்டு வா..." நவீன் உரைத்தான்.

"அதென்னடா.... அங்கிள்க்கு அப்படி ஒரு பிடிவாதம்.... வருணா வீட்டுக்கு வர வரைக்கும், இங்கே வந்து தங்குங்கன்னா கேக்கவே இல்லை. எனக்கு ரொம்ப கஷ்டமா போச்சுடா..." ஒரு வாரமாக அவரிடம் போராடி, வெற்றிகரமாக தோல்வியைத் தழுவியதால் அவ்வாறு உரைத்தான்.

"உனக்கே தெரியுமேடா.... மனுஷர் சும்மா இருக்காமல்.... ஏழை பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கறார். வேண்டாம்னு சொன்னால், எனக்கு தெம்பு இருக்கற வரைக்கும் செய்யறேன்னு டயலாக் வேற, விடுடா.... தனியாவே இருந்து பழகிட்டார்.... இப்போதைக்கு அவர் போக்கிலேயே போகட்டும், அவருக்கு முடியாதப்போ பாத்துக்கலாம்..." தந்தைக்கு பரிந்து வந்தான்.

"இருந்தாலும் ரொம்ப ஆச்சரியம்டா.... அவரோட தைரியம் யாருக்கும் வராது..." சிலாகித்தவன், "சரிம்மா.., நான் ப்ரெஷ் ஆகிட்டு வரேன்..." தன் அறைக்கு விரைந்தான்.

அவன் அறைக்குள் நுழையும் நேரம்.... "சரி.... நான் வரேன். விஜயா மால் தானே.... ஒருமணி நேரம்தான்.... ஓகே..." தன் அலைபேசியை அணைத்து வைத்தாள்.

அவள் பேசியதை வைத்தே.... அது வேந்தனிடம் என்பதை உணர்ந்தவனுக்கு, முதல் முறையாக கோபம் எட்டிப் பார்த்தது.

அதை அடக்கும் வழி தெரியாமல், உடை மாற்றும் அறைக்குள் புகுந்தவன், டவ்வலை எடுத்துகொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

ஓர விழியில், அவள் தன்னிடம் பேச விரும்புவது தெரிந்தாலும், அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

நிதானமாக குளித்தவன், வெளியே வர, அறைக்குள் அவள் இருக்கும் சுவடே இருக்கவில்லை.

‘எங்கே போய்ட்டா...?’ யோசனையோடு கீழே இறங்க,

"ஏண்ணா.... என்னதான் டயடா இருந்தாலும், அனுவை ஒரு எட்டு கூட்டி போனால் குறைஞ்சா போய்டுவ? பாவம் அவ.... தனியா போயிருக்கா..." வருணா குறைபட, சற்று திடுக்கிட்டான்.

‘என்ன.... தனியா வெளியே போயிட்டாளா...?’ அதை ஜீரணிக்கவே அவனுக்கு சற்று நேரமானது.

"இல்லம்மா.... கொஞ்சம் தலைவலி அதான்.... சரி அம்மா எங்கே...? எனக்கு டீ வேணுமே.... நான் கார்டன்ல இருக்கேன்.... கொஞ்சம் பொன்னம்மாவை எடுத்துட்டு வரச் சொல்லு..." குரலை சாதாரணமாக்க முயன்றவாறு உரைத்துவிட்டுச் சென்றான்.

"என்னது தலைவலியா...?" வருணா அலற, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவ்வளவு நேரமாக குழந்தையிடம் கவனமாக இருந்த நவீன், நண்பனின் முதுகை வெறித்தவன், "வரு.... குழந்தையைப் புடி, நானே மாப்பிள்ளைக்கு டீ எடுத்துட்டு போறேன்...." பொன்னம்மாவை டீ தயாரிக்கச் சொல்லி வாங்கியவன், அதை வாங்கிக்கொண்டு சென்றான்.

நகுலோ.... தன் கோபம் அடங்காமல் உலாத்திக் கொண்டிருந்தான். ‘அவனை தனியா சந்திக்க போற அளவுக்கு வந்தாச்சா? ஒரு வார்த்தை சொல்லணும்னு கூட தோணலை....’, மனதுக்குள் பொருமினான்.

அவனுக்கு அவள் சென்றிருக்கும் இடம் தெரியும், அவளை தேடிச் செல்ல ஒரு நொடி கூட ஆகாது. ஆனால்.... அதைச் செய்ய அவனுக்கு மனமில்லை. மனைவியை உளவு பார்க்கும் அளவுக்கு அவன் தரம் தாழ்ந்து விடவில்லை.

அவனது கோபம் கூட, அவள் வேந்தனை காணப் போயிருக்கிறாள் என்பதை விட, அவன் அவளை என்ன சொல்லி குழப்பி விடுவானோ என்பதை விட, என்ன மிரட்டல் விடுவானோ என்பதிலேயே சுழன்றது.

அவனைப்பற்றி முழுதாகத் தெரியாமல், அவனைபோய் இவள் நம்புகிறாளே.... அவனுக்கு ஆற்றாமையாக வந்தது.

"என்னடா மச்சான்.... மூட் ஆஃபா இருக்க போல..." டீயை அவன் கையில் கொடுத்தான்.

"அதெல்லாம் இல்லடா.... ஏதோ யோசனை..." சம்மாளித்தான்.

"இல்லையே.... எனக்கென்னவோ அப்படித் தெரியலை. அனுவை அவ்வளவு சீக்கிரம் நீ எங்கேயும் தனியா அனுப்ப மாட்டியே. அவ சொன்ன கதையை வரு வேண்ணா நம்பலாம். ஆனா நான் நம்ப மாட்டேன். உண்மையைச் சொல்லு..." அவனை உலுக்கினாள்.

"என்னத்த சொல்லச் சொல்ற...? எனக்கே தெரியாததை நான் எப்படிடா உனக்குச் சொல்ல முடியும்? மனுஷன் இருக்குற நிலைமை தெரியாமல், போடா..." டீயை அங்கே வைத்துவிட்டு விலக முயன்றான்.

"டேய்.... சரி நான் எதுவும் கேக்கலை. அதுக்கு ஏன் டீயை குடிக்காமல் போற? முதல்ல டீயை குடி..." அதை அவன் கையில் திணித்தவன், அவன் குடித்து முடிக்கும்வரைக்கும் எதுவும் சொல்லவில்லை.

"ஏண்டா.... அந்த வேந்தன் சென்னைக்கு வந்திருக்கான் போல..." அவன் சொல்ல, நகுல் அவனை ஆனமட்டும் முறைத்தான்.

"இல்லடா.... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி.... நம்ம வீட்டுக்கு முன்னாடி அவனை மாதிரி ஒருத்தனைப் பார்த்தேன் அதான்..." தயக்கமாக இழுக்க,

"என்னடா சொல்ற...?" அதிர்ந்தான்.

"ஆமாடா.... தங்கச்சி வெளியே போகும்போது.... நானும் துணைக்கு வரட்டுமான்னு கேக்க நினைத்தேன். ஆனா.... தேவையில்லாமல் ஏன் வருவுக்கு சந்தேகத்தை கிளப்பணும்னுதான் பேசாமல் இருந்துட்டேன். எதுவோ சரியில்லை மச்சான்...." அவன் சொல்லச் சொல்ல, நகுலின் கோபம் கரையைக் கடந்தது.

‘அப்படின்னா.... அவன் எதையோ சொல்லி மிரட்டித்தான் அவளை அழைத்தானா? இவள் அவனிடம் சண்டை போடத்தான் போனாளா? அதனால்தான் என்கிட்டே சொல்லலையா? ஐயோ.... ஏடாகூடமா ஏதாவது நடந்தால்...’, அவனால் அங்கே நிற்கவே முடியவில்லை.

"டேய்.... நான் சொல்லிட்டே இருக்கேன்.... நீ இப்படி சைலாட்டா இருந்தால் என்னடா அர்த்தம்...?" அவனை உலுக்கினாள்.

"தைரியமா போனால்ல.., அப்போ அவளே சம்மாளிப்பா.... நீ உன் வேலையைப் பார்..." விட்டேற்றியாக உரைத்தாலும், மனதுக்குள் பெரும் அதிர்வு.

"நகுல்.... நீதான் தப்பு பண்ற.... ஏற்கனவே சொல்லிட்டேன்.... இது விடுபட முடியாத பந்தம். அது மட்டும் இல்லை.... தங்கச்சிக்கும் உன்னை பிடித்திருக்கு, அதை புரிஞ்சுக்காமல், கிறுக்குத்தனமா எதையாவது பண்ணி வைக்காதே.... அவ்வளவுதான் சொல்வேன்..." கோபத்தில் கத்தினான்.

"உனக்கே தெரியும்போது எனக்குத் தெரியாதா? இன்னும் ஒரே வாரம்.... எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டறேன்..." ஆத்திரமாக உரைத்துவிட்டு அகன்றான்.

அதே நேரம்.... தன் கோபம் குறையாமல் வேந்தன் முன்னால் அமர்ந்திருந்தாள் அனன்யா.

28

தன் முன்னால் கோபமாக அமர்ந்திருந்த அனன்யாவை கண்டு கொள்ளாமல், தன் முன்னால் இருந்த கோக் டின்னை வாயில் சரித்துக்கொண்டான் வேந்தன்.

"என்னை எதுக்கு வரச் சொன்ன?" கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டு வினவினாள்.

"அட, ரொம்ப சூடா இருக்க போல, கோக் குடிக்கறியா...?" தன் கோக் டின்னை அவள் முன்னால் நீட்ட, அருவருப்பில் முகம் சுழித்தாள்.

அதே நேரம்.... நகுல் குடிக்கும் ஜூஸில், ஒரு சிப் ஆசைக்கு தான் அருந்துவதும்,தன் தட்டில் இருந்த பதார்த்தங்களை அவனும், சங்கோஜமே இல்லாமல் பகிர்ந்து கொண்டது நினைவிற்கு வந்து சுகமாய் இம்சித்தது.

"ஓ.... எச்சில்ன்னு பாக்கறியோ.... ப்ரெஷ்ஷா சொல்லவா...?" அவன் கேட்க,

"நான் இங்கே ஜூஸ் குடிக்க வரலை. என்னை எதுக்காக அவ்வளவு அவசரமா பாக்கணும்னு சொன்ன? சொல்..." அவள் அதிலேயே நின்றாள்.

"நான் ஏற்கனவே சொன்னேனே.... என் தங்கைக்கு கல்யாணம், அவளோட அண்ணி என்ற முறையில், அவளுக்கு நீ ஏதாவது செய்யணுமே.... அதான்..." இழுத்தான்.

"உன் தங்கைக்கு கல்யாணம்.... அதுக்கு நான் என்ன செய்ய? அதேபோல்.... இப்படி மிரட்டி என்னை வர வைப்பது இதுவே கடைசி முறையா இருக்கட்டும், இது தொடர்ந்தால்.... நான் வேற மாதிரி முடிவெடுக்க வேண்டி இருக்கும்..." அழுத்தமாக உரைத்தாள்.

அவளிடம் தான் கோபமாகப் பேசுவது வேலைக்கு ஆகாது என்பதை உணர்ந்தவன், "நான் உன்னை மிரட்டுவதா? என்னால் உன்னை பார்க்காமல் இருக்க முடியலை அனு, அதான்.... உன்னை பார்க்க விரும்பினேன்.

"உன்னால் வெளியே வர முடியாதுன்னு சொன்னப்போ.... நானே வீட்டுக்கு வந்து பாக்கறேன்னு சொன்னேன், அவ்வளவுதான். இதை நீ மிரட்டல்ன்னு சொல்ற, நான் காதல்ன்னு சொல்றேன். நமக்குள் துவக்கம் முதலே இதுதான் பிரச்சனை.... என் காதலுக்கு உன்னிடம் மதிப்பே இல்லை இல்ல.... என் உயிரை விட்டால்தான் நீ நம்புவாயா அனு..." அவன் உருகலில், வீழ்ந்துதான் போனாள்.

‘இவனை என்னால் தனியா சம்மாளிக்க முடியாது...’ காலம் கடந்த நினைவு.

"இந்த பேச்சை முதல்ல நிறுத்து வேந்தன். உனக்கு என்ன வேண்டும்? நேரடியா சொல்..." அவன் மனதில் இருப்பதை அறிய முயன்றாள்.

"எனக்கு நீதான் வேண்டும்..." அவன் வசனத்தில், அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

"ம்ச்.... நீ எதுக்கு என்னை பாக்கணும்னு சொன்னியோ, அதைச் சொல்..." அவனது உயிர் மிரட்டல் வழக்கம்போல் அவளை செயலிழக்கச் செய்தது.

"சரி.... நான் கேட்ட அதை உன்னால் செய்ய முடியலை, அப்போ.... எனக்கு அவசரமா பத்து லட்சம் பணம் வேண்டும். என் தங்கைக்கு கல்யாணம் வைத்திருக்கிறேன். அதையாவது கொடு..." அவன் நேரடியாக கேட்க, திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

"என்ன கேட்ட...? பத்து லட்சம்.... என்ன விளையாடுறியா? என்கிட்டே ஏது அவ்வளவு பணம்...?" குரல் எழும்பவே இல்லை.

சட்டென மூச்சுத்திணறும் உணர்வு. "பெரிய பிசினஸ் மேக்னேட்டோட மனைவி, தொழிலதிபரின் மகள், அப்பா வீட்டு சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசு, உனக்கு பத்துலட்சம் பெருசா?" எகத்தாளமாக கேட்டான்.

"என்ன சொல்ற...?" அதிர்ந்து கேட்டாள்.

"உன் புருஷன் கிட்டே கேக்க முடியலன்னா.... உன் அப்பாகிட்டே கேள்.... உனக்குத் தராமல் யாருக்கு கொடுக்கப் போறார்? அவரோட சொத்துக்கு நீதானே வாரிசு.... அதைக் கேளு..." தன் மனதில் இருக்கும் அழுக்குகளை அவன் அறியாமல் கொட்டிக் கொண்டிருந்தான்.

அவன் பேச்சை கேட்ட அனன்யா, நம்ப முடியாமல் அவனை வெறித்தாள். தன் காதல் மட்டுமே வேண்டும், நீ இல்லையென்றால் உயிரையே விட்டுவிடுவேன் என சுற்றிய வேந்தனா இது?

என் சொத்து விவரங்கள் முதல், அதன் மதிப்பு, அதில் அவளுக்கு இருக்கும் உரிமை.... என விவரிக்க, தன் காதுகளையே நம்ப முடியாமல் அமர்ந்திருந்தாள்.

அவன் தன்னிடம் பணம் கேட்ட விஷயத்தை விட, தன் சொத்து மதிப்பை அளவிட்டதுதான் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவன் பேச்சே.... இந்த விஷயத்தை அவன் இப்பொழுது மட்டும் சிந்திக்கவில்லை என எண்ணத் தூண்டியது.

முழுதாக விவரித்தவன், "உன் அப்பாகிட்டே.... அந்த நகுல் கேட்டான்னு கேளு, மறு வார்த்தை பேசாமல் கொடுத்துட்டு போறார்.... இல்லையா.... எனக்கு கொடுக்காமல் யாருக்கு கொடுக்கப் போறீங்கன்னு கேளு..." அவளுக்கு ஆலோசனை வேறு வழங்கினான்.

அவனது ஆலோசனை கடும் எரிச்சலை அவளுக்கு கொடுத்தது.

அவன் நகுலைப் பற்றி பேசிய அடுத்த நொடி, தன் தந்தை வரவேற்பின் செலவுகளுக்காக, அவனிடம் கொடுத்த பத்துலட்சம் ரூபாயை, தன் கையில் கொடுத்ததையும், அது இன்னும் தன் அக்கவுண்டில் தூங்குவதையும் நினைத்தவளுக்கு,

‘உரிமையுள்ளவன் விலகி நிற்க, எவனோ ஒருவன் பணக்கணக்கு பார்ப்பதை எண்ணி கொந்தளித்துப் போனாள். இவனது இந்த செய்கைக்கு, தான் தானே காரணம்.... தன்னை நினைத்தே வெட்கினாள்.

அவன் கேட்ட பணத்தை ஒரு நொடியில் அவளால் தூக்கி கொடுத்துவிட முடியும். அந்த பணத்தைப் பற்றி, நகுல் எந்த காலத்திலும் தன்னிடம் கேட்க மாட்டான் என்பது அவளுக்கு உறுதியே. ஆனால்.... இது இத்தோடு முடிந்துவிடுமா...? என்ற வினா எழ, உள்ளுக்குள் ஒரு அச்சம் எழுந்தது.

பணம் அவளுக்கு ஒரு பொருட்டே இல்லை. அவன் பணம் வேண்டும் என சாதாரணமாக கேட்டிருந்தால் எதுவும் தோன்றியிருக்காதோ என்னவோ.... சொத்துக்களின் பட்டியலிட்டதை எதார்த்தமாக எடுக்க முடியவில்லை.

என்ன செய்வது...? என தடுமாறிப் போனாள். மனதின் ஓரத்தில் எதிலோ தோற்றுப் போகும் உணர்வு. மைத்ரேயி எத்தனையோ முறை, உன்னிடம் நடிக்கிறான் என உரைத்தபொழுது, அப்படி இருக்காது என வாதாடியவளுக்கு, அவனது சுயரூபம் வெளிப்படும் விதம் கண்டும், தான் எவ்வளவு ஏமாளியாக இருந்திருக்கிறோம் என்பதை எண்ணியும் வெட்கினாள்.

எங்கே அவன் முன்பாகவே அழுது விடுவோமோ என அஞ்சியவள், "எனக்கு யோசிக்க டைம் வேணும்..." குரல் இறுக உரைத்தாள்.

"தாராளமா யோசி.... அதாவது பணத்தை எங்கே எப்படி தரதுன்னு யோசி.... ஏன்னா.... ரொம்பநாள் வெயிட் பண்ண முடியாது. இன்னும் ஒரு மாசம்தான் உனக்கு டைம்..." அப்பட்டமான மிரட்டல், ஆனால்.... கொஞ்சும் குரலில் அவன் உரைக்க, படமெடுத்து ஆடும் நாகப் பாம்பாக, அவன், அவள் கண்களுக்குத் தெரிந்தான்.

‘தவறு செய்துவிட்டேன்.... மையூ சொன்ன அன்றே இவனைப்பற்றி யோசித்திருக்க வேண்டும். உயிரைக்காட்டி காதலை யாசித்தவன் இல்லை இவன்.... உயிரைக் காட்டி, உயிரை வாங்கும் எமன்.... உடனே நகுலிடம் பேச வேண்டும்...’, சிந்தை முழுவதும் இதுவாகத்தான் இருந்தது.

"நான் போறேன்..." அவன் பதிலை எதிர்பாராமல் கிளம்பி விட்டாள். அவனோ.... வெற்றி பெற்ற உணர்வில், இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டவன், கோக்கை காலிசெய்யும் முயற்சியில் இறங்கினான்.

வீட்டுக்கு வந்த அனன்யாவை, பார்வதியே வரவேற்றார். "அனு.... வாம்மா.., சாயங்காலம் காபி கூட குடிக்கலன்னு வருணா சொன்னா. இப்போ காபி குடிக்கறியா?" கேட்டவர், அவள் முகம் வெளிறியிருப்பதைப் பார்த்து, "என்னம்மா.... உடம்பு சரியில்லையா...? வீசிங் இருக்கா என்ன...?" அவளை கைபிடித்து அழைத்து வந்தார்.

தாமதமாக வீட்டுக்கு வந்த தன்னை, எங்கே போயிருந்தாய்? என ஒரு வார்த்தை கேட்காமல், தன் உடல்நிலையை மட்டுமே பார்க்கும் அவரை எண்ணி பூரித்தவளுக்கு, மனதின் அழுத்தம் தாளாமல் அழுகை வந்தது.

"அத்தை..." அழைத்தவள், அவர் தோளில் சாய்ந்து கொண்டவள், முயன்று அழுகையை அடக்கினாள். தன் கண்ணீர் தேவையற்ற பல வினாக்களை எழுப்பும் என்பதால், அமைதி காத்தாள்.

அவள் நெஞ்சு லேசாக விம்மித் தணிய, "என்னம்மா.... அம்மா ஞாபகமா?" அவள் முதுகை வருடியவர், "மூச்சு

திணறுதே.... இரு வரேன்..." அவளை விலக்கிவிட்டு, மாடிப் படியருகில் சென்றவர்,

"நகுல்.... அனுவோட இன்ஹெயிலரை எடுத்துட்டு வா..." கீழே இருந்து குரல் கொடுக்க, அவ்வளவு நேரமாக அவள்மேல் கோபமாக இருந்தவன், அதை மறந்து, பப்பை எடுத்துக் கொண்டு ஓடினான்.

அவள் கையில் கொடுத்தவன், முகத்தை இறுக்கமாக வைத்துகொண்டு, அவள் எதிரில் அமர்ந்தான். அவனது அமைதி அவளை வதைக்க, பார்வதியின் முன்னால் எதையும் சொல்லாமல், அமைதியாக பப்பை யூஸ் செய்தாள்.

"இப்போ ஓக்கேயா? சூடா ஏதாவது குடிக்கறியா?" அவள் தலை வருட,

"இல்ல அத்த.... ஒரேடியா நைட் சாப்ட்டுக்கறேன். எனக்கு எதுவும் வேண்டாம்..".

"அப்போ சரி.... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு..." அவளை அறைக்கு அனுப்ப, அனன்யாவின் கண்கள், அவனை வரச்சொல்லி கெஞ்சியது.

அவனோ, அதைக் கண்டுகொள்ளாமல், "அம்மா.... குட்டிப் பையனை கொஞ்சம் தூக்கிட்டு வாங்களேன்... நாளைக்குப் பிறகு ஒரு வாரம் அவனை பாக்க முடியாது..." தாயிடம் உரைக்க, அனன்யாவின் கண்கள், அவனிடம் 'எங்கே செல்கிறாய்..?' என கேட்டது.

அனன்யா அங்கேயே நிற்பதைப் பார்த்த பார்வதி, "ரெஸ்ட் எடுக்கலையாம்மா? நீயும் இங்கேயே உக்காருகிறாயா?" ஒருவேளை, அவள் நகுலோடு நேரம் செலவிட விரும்புகிறாளோ என எண்ணியவராக கேட்டார்.

அவள் அவன் முகம் பார்க்க, அவனோ அழுத்தமாகவே அமர்ந்திருந்தான். ஏனோ அவன் பாராமுகத்தை தன்னால்

தாங்கிக்கொள்ள முடியும் எனத் தோன்றாமல், "இல்லத்த.... ரூமுக்கே போறேன்..." படிகளில் விரைந்தாள்.

அவள் முகம் நோக்காமல் இருந்தாலும், அவள் கண்களில் தெரிந்த தவிப்பை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனால்.... அவளை பேச வைக்க, அவள் மனதில் இருப்பதை வெளிக்கொணர, அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

சற்றும் அசைந்து கொடுக்காமல் இருந்தவனைப் பார்த்து, உள்ளம் வெதும்ப அறைக்குத் திரும்பியவள், பால்க்கனியில் சென்று அமர்ந்து கொண்டாள்.

வேந்தனது வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தை ஜீரணிக்க, அவளுக்கு அந்த தனிமை தேவைப்பட்டது.

அவனது நிஜ முகம் தெரிந்ததை எண்ணி ஸ்தம்பித்து போயிருந்தாள். இப்பொழுதாவது அவன் முகம் தெரிந்ததை எண்ணி சந்தோஷப்படுவதா, இல்லை துக்கப்படுவதா என்றே அவளுக்குப் புரியவில்லை.

பணத்துக்காக மனிதர்கள் எதையெல்லாமோ செய்வதை கேள்வி பட்டிருக்கிறாள். காதலைக் காட்டி, பணம் கேட்பதை இப்பொழுதுதான் காண்கிறாள். பாசத்துக்கு விலை பேச முடியுமா? ஒரு வேளை.... நகுல் இதேபோல் எதையாவது பேசினால்.... அதைக் கேட்டுக்கொண்டு தன்னால் உயிரோடு இருந்திருக்கவே முடியாது என எண்ணினாள்.

வேந்தனது நிஜ முகம் தெரிந்தபொழுது, அதிர்ச்சியும் கோபமும் மட்டுமே எழுந்ததே தவிர, எந்தவிதமான ஏமாற்றமோ, இழப்போ தெரியவில்லையே..... தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

உண்மை நேசம் எதுவென புரிய, நெஞ்சம் நிறைய நகுல் நிறைந்தான். இருக்கும் சூழலை தன்னால் தனியாகக் கையாள முடியாது என்பது அவளுக்குப் புரிந்து போனது.

பண விஷயத்தை எப்படியாவது நகுலிடம் சொல்லியே ஆகவேண்டும் என முடிவெடுத்தவளுக்கு, அதை எப்படிச் சொல்லவென்றுதான் தெரியவில்லை.

நகுலின் பாராமுகம் ஒரு பக்கம் வதைக்க, அவன் ஏதோ வெளிநாடு போவதாக பேசியதை கேட்டவளுக்கு, அவன் இங்கே இல்லாத நாட்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என தவிப்பாக இருந்தது.

கலவையான மனநிலையில் இருந்தவள், இரவு உணவுக்காக கீழே இறங்கி வர, நகுல், நவீன், வருணா என அனைவரும் அங்கே இருந்தார்கள்.

"ஏய்.... எவ்வளவு நேரம்தான் உக்காந்து அரட்டை அடிச்சுட்டு இருப்ப, பச்ச உடம்புக்காரி.... முதல்ல போய் படு. குழந்தையை நகுல் தானே பாத்துக்கறான்..... போ..." பார்வதி விரட்டினார்.

"ஆமா.... வா.... போய் ரெஸ்ட் எடுக்கலாம்..." நவீன் அவளோடு சேர்ந்து எழ, தன் தலையிலேயே வலிக்காமல் அடித்துக் கொண்டவள்,

"என் மானத்தை வாங்காதீங்க..... பேசாமல் இங்கேயே இருங்க..." அவன் தோளை அழுத்தி அமர வைத்தவள்,

"நீங்க வந்தா நான் ரெஸ்ட் எடுத்த மாதிரிதான்..." அவன் காதுக்குள் முனகியவள், கண்களை சிமிட்டிவிட்டு சென்றாள்.

"வரு..." அவன் பரிதாபமாக கெஞ்ச, "டேய்.... நானெல்லாம் இங்கேதான் இருக்கேன்.... கொஞ்சம் கூட வெக்கமே இல்லையாடா...?" நகுல் அவனைச் சீண்ட, "நகுல்..." பார்வதி கண்டிக்கும் குரலில் அழைத்தவர், அங்கிருந்து சென்றார்.

"நான் எதுக்குடா வெக்கப்படணும்...? என் பொண்டாட்டி, நான் கெஞ்சுறேன், இல்ல கொஞ்சறேன்.... உனக்கென்ன வந்தது...?" வெட்கமே இல்லாமல் வழிந்தான்.

"அட ஆண்டவா.... தெரியாமல் சொல்லிட்டேண்டா.... நீ போ ராசா.... குழந்தை அழுதால் அம்மாகிட்டே கொடுத்து அனுப்பறேன். யூ கோ..." அவனை அனுப்பினான்.

"தேங்க்ஸ்டா மச்சான்..." துள்ளலாய் அறைக்குச் சென்றான்.

"இவன் என்ன இப்படி ஆயிட்டான்..." சின்னச் சிரிப்பில் உரைத்தவன், "டேய் குட்டிப் பையா.... உன் அப்பனைப் பாத்தியா.... உன்னை விட்டுட்டு, அம்மாவை தாங்க போய்ட்டான்..." அந்த மழலையை அணைத்தவாறு மொழிய, அவனோ.... கைகளை கழுத்தடியில் புதைத்து, நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

அவன் அருகில் மௌனமாக வந்து அமர்ந்தவள், "என்னங்க.... சாப்பிடலாமா?" அவனிடம் மெதுவாக கேட்டாள்.

"ம்..." முனகியவன், "அம்மா.... கொஞ்சம் குட்டிப்பையனை பிடிங்க..." தாய்க்கு குரல் கொடுக்க,

"இங்கே தாங்க.... நான் தூக்கறேன்..." அவன் கரத்தில் இருந்து வாங்கிக் கொண்டாள்.

"தேங்க்ஸ்..." உரைத்தவன், விலகிச் செல்ல, ஏனென்றே தெரியாமல் அவள் கண்கள் கலங்கியது.

அறைக்குபோய் முகம் கழுவி வந்தவன், மேஜைமுன் அமர, பார்வதி, அனன்யாவிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டவர், "போய் சாப்பிடும்மா..." அவளை அனுப்பினார்.

பார்வதியின் முகம் யோசனையில் சுருங்க, தன் மகனை அதே யோசனையோடு கவனித்தார். அனன்யாவுக்கோ.... அவனது அமைதி கொல்லாமல் கொன்றது.

அவன் தட்டில் மூன்று சப்பாத்தியை வைத்தவள், குருமாவை ஊற்றிவிட்டு, அமைதியாக அவனை ஏறிட்டாள்.

"உக்காந்து சாப்பிடு..." உரைத்தவன், வேகமாக உண்ண, அவன் இடக்கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள். வார்த்தைகள் பேச முடியாத தவிப்பு.... "நகுல்..." வார்த்தைக்கு வலிக்குமோ என அவள் அழைக்க,

‘உணர்ச்சிவசப்படும்போது மட்டும்தான் உனக்கு என் பெயர் தெரியுமா அன்னம்...’ அவளிடம் மனதுக்குள் கேட்டவன், "இப்போ நான் சாப்பிடவா எழுந்து போகவா...?" அவன் கேள்வியில், எழுந்த விம்மலை அடக்கியவள், பார்வதி தங்களை கவனிப்பதை உணர்ந்து, அவன் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

முதல் முறையாக அவனது கோபத்தை காண்கிறாள். அதிலும், குரல் உயர்த்தாமல், முகம் மாறாமல் கோபத்தை வெளிப்படுத்த முடியும் என்பதையே அவள் இப்பொழுதுதான் உணர்ந்து கொண்டாள்.

அவள் அறியாத விஷயம்.... அவனுக்கு அவள்மேல் கோபமே இல்லை என்பதுதான். அவள்மேல் சிறு வருத்தமும், அவள் தன்னிடம் எதையும் பகிர்ந்து கொள்ளாததால் எழுந்த ஏமாற்றமுமே.

அதைவிட.... வேந்தன் எவ்வளவு ஆபத்தானவன் என்பதை உணர்ந்து கொள்ளாமல், அவனிடம் சிக்கிவிட்டால்.... என்ற பயமுமே அவனிடம் அதிகம் இருந்தது. அவளின் முகம் பார்த்தாலே தன் முகமூடி கழண்டு விழுந்துவிடும் என்பதால் மட்டுமே, அவள் முகம் பார்க்க மறுத்தான்.

அவன் தன்னிடம் எதையாவது கேள்வி கேட்டு, இரண்டு அடி அடித்தால் கூட, அவளுக்கு இவ்வளவு வலித்திருக்காது. அவன் மௌனமும், பாராமுகமும்.... இதயத்தை பிசைந்தது. தான் அழுதால், அவன் தாங்கமாட்டான் என்பது புரிய, நெஞ்சம் விம்ம, அழுகையை அடக்கிக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

முயன்று ஒரு சப்பாத்தியை உண்டவள் மாடியேற முயல, அவள் கையில் மஞ்சள் தூவிய பாலை அவள் கையில்

திணித்தவர், அவளை குடிக்க வைத்தார்.

"நகுலோட கோபம் எல்லாம் கொஞ்ச நேரம்தாம்மா.... காலையில் எழுந்தால் மறந்துடுவான். நீ வருத்தப்படாதே..." பார்வதி தன் மகனை அறிந்தவராக, அவளுக்கு ஆறுதல் அளித்தார்.

"எல்லாம் என்னோட தப்புதான் அத்தை.... அவர்..." வேகமாகத் துவங்கியவள், பார்வதியின் முகத்தில் சிரிப்பைப் பார்க்க, வார்த்தையை முடிக்காமல், வேகமாக பாலை குடித்துவிட்டு கிளம்பிவிட்டாள்.

‘நல்ல புள்ளைங்க...’ எண்ணியவர், தோட்டத்துக்குச் சென்றிருந்த மகன் உள்ளே வரவே, "ஏண்டா அனுவை இப்படி வதைக்கிற? ஏதாவது கோபம்னா பேசி தீர்க்கணும்.... இப்படி மௌனமா இருந்து இம்சை பண்ணக் கூடாது புரியுதா? நான் என் பையனுக்கு இதையெல்லாம் கத்துக் கொடுக்கலையே ராஜா...." அவன் கன்னம் வருடியவர், மென்மையாக கடிந்து கொண்டார்.

"அவமேலே எனக்கென்னம்மா கோபம்.... இது வேற..." தாயிடம் இதற்குமேல் எதையும் சொல்ல முடியாமல் அமைதியானான்.

"இது உன் வாழ்க்கை நகுல்.... அதை சந்தோஷமா மாத்திகிறது உன் கையில்தான் இருக்கு..." தாயின் உள்ளம் பரிதவித்தது.

"கண்டிப்பாம்மா.... எனக்குப் புரியுது..." இதுவரை எதையும் மறைத்துப் பழகியிராத தான்.... திருமணத்திற்கு பிறகு, தாயிடம் உண்மையாக இல்லை என்பதை உணர்ந்தவனுக்கு, மனதுக்கு வருத்தமாக இருந்தாலும், இதுவும் தாயின் நிம்மதிக்காகத்தானே என தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டான்.

"போப்பா.... ட்ராவல்க்கு எல்லாம் எடுத்து வைக்கணுமே.... வச்சுட்டியா?" அவனிடம் கேட்க,

"இனிமேல் தாம்மா அன்னத்துகிட்டே சொல்லணும்.... எல்லாம் அவ பாத்துப்பா..." உணர்ந்து உரைக்க, பார்வதியின் மனதில் சிறு நிம்மதி.

அறைக்கு விரைந்தவன், தன் பொருட்களை தானே எடுத்து வைக்க, கையைப் பிசைந்தவாறு நின்றிருந்தாள் அனன்யா.

அவன் கோபத்தை ஏற்கனவே கண்டவளுக்கு, தானாக அவனிடம் பேச பயமாக இருந்தாலும், விலகியிருக்க முடியாமல், "என்னங்க.... நான் ஏதாவது ஹெல்ப் பண்ணவா...?" மென்மையாக வினவியவள்,

"நீங்க என்கிட்டே எங்கே போறீங்கன்னு சொல்லவே இல்லை. நான் உங்களுக்கு அவ்வளவு வேண்டாதவள் ஆகிட்டேனா...?" அவன் அமைதி தாங்காமல் பொங்கினாள்.

அவளை ஆழமாகப் பார்த்தவன், "நீ மட்டும் சொன்னியா அன்னம்...?" கேட்டவன், தன் வேலையில் கவனமாக, அவன் கேள்வி ஏற்படுத்திய அதிர்வு விலகாமல் அப்படியே நின்றிருந்தாள் அனன்யா.

29

நகுல் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திகைத்திருந்தாள். அவளும் அவனை அழைத்துக்கொண்டு செல்லத்தான் விரும்பினாள். ஆனால்.... மாலையில் அவன் வீட்டுக்கு வரும்பொழுதே சோர்ந்து போய் இருந்தான்.

அப்படி இருக்கையில்.... அலுவலகத்தில் இருந்து வந்ததும், வராததுமாக, அவனை, தன் சுயநலத்துக்காக இழுத்துக்கொண்டு சுற்ற, அவளுக்கு மனமில்லை.

அதைவிட, வேந்தன், அவனை அவமதிப்பதுபோல் பேசிவிட்டால், தன்னால் தாங்க முடியாது என்பதாலேயே அவ்வாறு செய்தாள் என்பது அவள் மனம் மட்டுமே அறிந்த உண்மை.

கட்டிய கணவன் மற்றவன் முன்னால் அவமானப்படுவதை எந்த மனைவிதான் விரும்புவாள்? அவள் இவ்வாறு நினைத்திருக்க, தான் அவனிடம் சொல்லாமல் சென்றதை எண்ணி, அவன் வருந்தியிருப்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டாள்.

"அது.... நான்..." தன் நினைவை அவனிடம் பகிர்ந்துகொள்ள முடியாமல் திணற,

"எனக்கு நாளைக்கு இயர்லி மார்னிங் ப்ளைட்.... சோ.., நான் தூங்கப் போறேன்..." அவள் கேள்விக்கு எந்த பதிலையும் சொல்லாமல் படுக்கச் சென்றான்.

சற்று நேரம் அசையாமல் நின்றவள், வேகமாக அவனை நெருங்கியவள், "எங்கே போறீங்கன்னு சொல்ல மாட்டீங்களா?" அவன் காலைத் தொட்டு அசைத்தாள்.

"சைனா கிளம்பறேன்.... மெஷின் எல்லாம் வாங்கிட்டு வர எப்படியும் ஒரு வாரம் ஆகலாம்..." இமைகளை பிரிக்காமல்,

அறிவிப்பாக உரைத்துவிட்டு, திரும்பி படுத்துக் கொண்டான்.

அவனது அப்பட்டமான தவிர்ப்பை உணர்ந்தவளுக்கு, தான் சில்லு சில்லாக நொறுங்கிப் போகும் உணர்வு. அவனை அப்படியே உலுக்கி, 'ஏன் இப்படி செய்கிறாய்...?' என கேட்கும் வேகம் எழுந்தாலும், அதைச் செய்ய வழியில்லாமல், வழி தெரியாமல் விழி பிதுங்கினாள்.

'எங்கே போனாய்...? என்ன செய்தாய்...? என்ன பிரச்சனை...? ஏதாவது சொல்லு அன்னம்....', மனதுக்குள் புலம்பியவனுக்கு, தான், அவளுக்கு பேச சந்தர்ப்பமே கொடுக்கவில்லை என்ற உண்மை புரியத்தான் செய்தது.

ஆனாலும்.... தன்னிடம் முழு உரிமை உள்ளவள், அதே உரிமையோடு சொல்ல வேண்டும் என எண்ணியதில் தவறேதும் இல்லையே.

ஒருவேளை.... இதுவே அவன் அவளுக்கு வைத்த பரீட்சை தானோ?

எவ்வளவு நேரம் அவன் அருகிலேயே நின்றாளோ.... தன் நினைவு கலைந்து அவனைப் பார்க்கையில், நிம்மதியான நித்திரையில் இருந்தான் நகுல்.

அவன் அருகில் தயக்கமாக அமர்ந்தவள், "என்மேல் கோபமா...? பேச மாட்டீங்களா...? அத்தை நீங்க காலையில் சரியாயிடுவீங்கன்னு சொன்னாங்க.... ஆனா.... எனக்கு பயம்மா இருக்கே..." காலையில் அவன் கிளம்புவது வேறு நெஞ்சை அழுத்தியது.

தூக்கத்தில்.... தன் அலைபேசி அலாரம் அடித்து அவனை எழுப்ப, அனன்யா விழித்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில், சட்டென கையை நீட்டி அதை நிறுத்தியவன், எழும்ப முயல்கையில், தன் நெஞ்சில் ஏதோ பாரத்தை உணர்ந்தான்.

பட்டென விழி திறந்தவன், தன் நெஞ்சில் சாய்ந்து, பதுமையென உறங்கும் அனன்யாவைப் பார்த்தவன், இமைக்க கூட மறந்து, அவளையே வெறித்தான்.

அவன் இடையில் ஒரு கையும், அவன் கழுத்தில் ஒரு கையையும் போட்டிருந்தவள், அவன் நெஞ்சில் தலை சாய்த்து குழந்தையென உறங்கிய அவளைக் காண தெவிட்டவில்லை. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே.... முகத்தை அழுத்தமாக அவன் நெஞ்சில் தேய்த்தவள், மீண்டும் உறக்கத்தை தொடர்ந்தாள்.

மற்ற நேரமாக இருந்திருந்தால், மூச்சடக்கி காத்திருந்திருப்பான். ஆனால்.., விமானத்துக்கு சரியான நேரத்துக்கு செல்லவேண்டி இருந்ததால்.... தன் இரு கரத்தால் அவளை குழந்தையென தாங்கியவன், அவள் உறக்கம் கலைந்துவிடாமல் படுக்கையில் கிடத்தினான்.

"ம்..." செல்ல சிணுங்கலோடு, அவள் உறக்கத்தை தொடர, அவள் நெற்றியில் அழுந்த இதழ் பதித்து விலகியவன், வேகமாக குளித்து கிளம்பினான்.

அவளை எழுப்பி, விடைபெற மனம் முழுக்க தவித்தாலும், அவளிடம் விடைபெற்றுச் செல்லும் தைரியம் இருக்கவில்லை. தான் எவ்வளவு பலவீனமானவன் என்பதை அவன் உணர்ந்த தருணம் அதுவாகத்தான் இருக்கும்.

"நகுல்.... டைம் ஆச்சு..." நூறாவது முறையாக நவீனின் குரல் அறைக்கு வெளியே கேட்க, மீண்டும் தன் மனைவியின் நெற்றியில் இதழ் பதித்துவிட்டு, தன் லேப்டாப் பேகை எடுத்துக்கொண்டு அங்கிருந்து அகன்றான்.

"ஏண்டா கத்தற.... அன்னம் தூங்கறால்ல..." அவனை கடிந்து கொண்டான்.

"தூங்கறாளா..." ஒரு மாதிரி குரலில் கேட்டவன்,

"அடேய்.... உனக்கே இது ஓவரா இல்ல.... என்னமோ நான் ப்ளைட்டுக்கு போகப்போற மாதிரி தவிச்சுகிட்டு இருக்கேன். நீ.... தூங்குற பொண்டாட்டிகிட்டே சொல்லிட்டு வர உனக்கு இவ்வளவு நேரமா? அப்போ முழிச்சுட்டு இருந்திருந்தால் என்னடா பண்ணியிருப்ப...? நீ கிளம்பியே இருக்க மாட்ட போல...

"சரி.... இப்போ ஏர்ப்போர்ட் போறோமா இல்லையா...?" கடுப்பானான்.

"ரொம்ப பண்ணாதடா.... வா.... வா..." காருக்கு விரைந்தான்.

"தங்கச்சிகிட்டே சொல்லிட்டு கிளம்பியிருக்கலாமே மாப்ள..." பெரும் தயக்கத்துக்குப் பிறகு, விமான நிலையத்துக்குள் கார் நுழைய கேட்டான்.

"சொல்லிட்டு கிளம்ப முடியும்னு தோணலடா அதான்..." தன் மொபைலில் பார்வையை பதித்தவாறு அவன் உரைக்க, அதற்குமேல் எதையும் கேட்கும் தைரியம் நவீனுக்கு இருக்கவில்லை.

நேற்று வேந்தனிடம் பேசிவிட்டு வந்த அனு ஏதாவது சொன்னாளா? என தெரிந்துகொள்ள நெஞ்சு முட்ட வேகம் இருந்தாலும், ஊருக்கு கிளம்பும் நண்பனிடம் அதைப்பற்றி கேட்கும் சந்தர்ப்பம் இதுவல்ல என அமைதி காத்தான்.

நவீன், விமான நிலைய பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, நகுலின் சிறிய சூட்கேசை எடுத்துகொண்டு வர, அவன் கூடவே வந்த நகுல், "மச்சான்.... நம்ம ராக்கேஷ் கிட்டே ஒரு டீட்டெயில் கேட்டிருந்தேன். அது என்ன ஆச்சுன்னு கொஞ்சம் ஃபாலோ பண்ணி எனக்குச் சொல்..." செக்கியூரிட்டி செக்குக்கு போகும் முன்னர் உரைத்தான்.

"ராக்கேஷ்...?" கேள்வியாக நெற்றியைத் தடவியவன்.... "டேய்.... அவன் ஏதோ வெட்டியா சுத்திட்டு இருக்கான்னு அவங்க அப்பா அன்னைக்கு என் கம்பெனிக்கே வந்து புலம்பினார்.... நீ என்னன்னா.... அவன்கிட்டே டீட்டெயில்

கேட்டிருந்தேன்னு சொல்ற.... என்னடா நடக்குது...?" கிட்டத்தட்ட அலறினான்.

"நீ அவனுக்கு போன் பண்ணு.... உனக்கே புரியும்..." வேகமாக சென்று மறைந்தான்.

"டேய்.... சொல்லிட்டுப் போடா..." கத்தியவனது குரலை கண்டுகொள்ளாமல் நகுல் சென்றுவிட, இவனுக்கு என்னை மண்டை காய விடுறதே வேலையா போச்சு..." புலம்பியவாறு வீட்டுக்குச் சென்றான்.

காலையில் கண்விழித்த அனன்யா.... முதலில் பார்த்தது நேரத்தை தான். அது காலை ஆறு முப்பதைக் காட்ட, 'அப்படின்னா...?' திடுக்கிட்டவள், ஒரு குருட்டு நம்பிக்கையில், நகுலின் லேப்டாப் பேக் இருக்கும் இடத்தைப் பார்த்தாள்.

அது வெறுமையாக இருக்க.... அவன் தன்னிடம் சொல்லாமலே சென்றுவிட்டான் என்ற உண்மை முகத்தில் அறைய, உலகம் அதன் இயக்கத்தை நிறுத்திய நிலையில், உறைந்துபோய் அமர்ந்திருந்தாள்.

"ஆ..." அடுத்த நிமிடம் வெடித்து அழுதவள், படுக்கையில் கிடந்தது விம்மினாள்.

எவ்வளவு நேரம் அழுதாளோ.... கடிகாரத்தின் ஓசையில் கலைந்தவள், குளித்துவிட்டு, கீழே இறங்கி வந்தாள்.

கிச்சனுக்குள் அவளைப் பார்த்த பார்வதி, "அனு.... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்க வேண்டியது தானே. நகுல் ரெண்டு மணிக்கு கிளம்பியிருப்பானே.... லேட்டா தூங்கிட்டு.... இவ்வளவு சீக்கிரம் முழிக்கணுமா...?" அக்கறையாக வினவினார்.

அவரது அக்கறையில் அவளுக்கு கண்கள் பனித்தது. அதை அவள் முகம் மறைக்காமல் வெளிப்படுத்த, "என்னம்மா.... நகுல் போயிட்டான்னு கவலையா இருக்கா?

முதல் முறையில்ல அதான்.... போயிட்டு உடனே போன் பண்ணுவான். வருத்தப்படாதே சரியா. வேண்ணா நான் சின்னவனை தூக்கிட்டு வரவா...?" அவள் கையில் காபியை திணித்தவாறு கேட்டார்.

"ம்..." மௌனமாக தலை அசைத்தவள், அவன் தன்னிடம் சொல்லாமல் சென்றதை தெரிவிக்க முடியாமல் அமைதியானாள்.

காபியை பெற்றுக்கொண்டு அவள் வெளியேற, "புள்ள முகமே மாறிப்போச்சு...." பொன்னம்மா, பார்வதியிடம் சொல்வது கேட்க, 'என் முகம் என்ன அப்படியா என் மனதை காட்டுகிறது....?" தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

காபியை குடித்து முடிக்கும் வேளை, பார்வதி குழந்தையை தூக்கிக் கொண்டு வர, ஒரு வாரமே ஆன குழந்தை, காலை வேளையில் பசியாறிய குஷியில், கையைக் காலை அசைத்து, விழியை மெதுவாக மலர்த்துவதும், மூடுவதுமாக அவள் கையில் நெளிந்தான்.

"அம்மாடி.... காலை வெயில் குழந்தைக்கு ரொம்ப நல்லது. தோட்டத்துக்கு தூக்கிட்டு போ அனு..." குழந்தையின் அசைவில் அவள் லயித்திருக்க, பார்வதியின் குரலுக்கு கட்டுப்பட்டு, குழந்தையோடு தோட்டத்துக்குச் சென்றாள்.

இளம் வெயிலில், இயற்கையின் காற்று ஏற்படுத்திய சிலிர்ப்பு, புதிய சூழல் ஏற்படுத்திய இதம், சின்னவன், விழி திறக்க முயன்று, முடியாமல், அந்த இதத்தை ரசிக்க முயன்றான்.

"என்னடா செல்லம்.... வெயில் அடிக்குதா? கண்ணு கூசுதா?" அவன் காதுக்குள் மெல்லியதாக கேட்க, அவனுக்கு என்ன புரிந்ததோ.... அவள் கன்னத்தில் தன் கன்னம் தேய்த்தான்.

தன் இடக்கையில் குழந்தையை அணைத்தவன், வலக்கை விரலால் சொடக்கு போட்டு ஓசை எழுப்ப, அவன் தலை

திருப்பி பார்க்க முடியாமல், கை, காலை வேகமாய் அசைத்து, தனக்கு அந்த ஓசை கேட்பதை அவளுக்கு உணர்த்தினான்.

"அட.... என் பட்டுக்கு இந்த சத்தம் கேக்குதா? பிடிச்சிருக்கா?" அந்த மழலையின் அசைவில் தன்னை தொலைத்தாள். அவ்வளவு நேரமாக அவள் மனதை அழுத்திய அனைத்து துன்பங்களும் காணாமல் போயிருக்க, அவனது சின்னச் சின்ன அசைவுகளும், செய்கைகளும் அவளை லேசாக்கியது.

எந்த துன்பமாக இருந்தாலும், ஒரு குழந்தையின் முகம் பார்த்தால் காணாமல் போய்விடும் என்பது எவ்வளவு பெரிய உண்மை என்பதை உணர்ந்து கொண்டாள்.

இப்படி ஒரு குழந்தை தனக்கு வேண்டும் என்ற ஆசை முதல் முறையாக முளை விட்டது. மருத்துவமனையில் வைத்து நகுலின் பார்வை, அவன் பேச்சு.... என அனைத்தும் நினைவிற்கு வர, அவனைப்போல் ஒரு பையன் வேண்டும் என மனம் ஏங்கியது.

‘எங்கள் பிள்ளை யாரைப்போல் இருப்பான்.... நகுலைபோல் அமைதியாகவா? என்னைப்போல் குழப்பவாதியாகவா? அவனைப்போல் கண், மூக்கு.... அவனைப்போல் கலர்...’, ஒவ்வொன்றாக நினைக்க, தன்னை அறியாமலே குழந்தையை தன் மார்போடு இறுகிக் கொண்டாள்.

நேரம் போவது அறியாமல் அவனோடு விளையாடியவள், குழந்தை விரல் சப்பவே.... "என்னம்மா.... பசிக்குதா எங்க குட்டிக்கு.... வீட்டுக்கு போய்டலாமா..." கேட்டவள், அவனை பதமாக அணைக்க, பசியில் இருந்த குழந்தை அவள் மார்போடு ஒடுங்கினான்.

தாயின் மார்பைத்தேடி அவன் இதழ்கள் அலைபாய.... அது ஏற்படுத்திய குறுகுறுப்பில், கன்னித்தாயாகும் உணர்வு. பெண்மைக்கே உரிய தாய்மை குணம் தலை தூக்க,

அவனை ஏமாற்ற மனமில்லாமல், "அம்மாகிட்டே போய்டலாமா.... வாங்க..." அவள் திரும்பி நடக்கத் துவங்கினாள்.

சின்னவனோ.... விடாப்பிடியாக.., தான் தேடியது கிடைக்காமல் குரல் எடுத்து அழவே துவங்கி விட்டான்.

"ஓ.... ஓ..... இதோ வந்துட்டோம் செல்லம்..." அவனை சமாதானப்படுத்தியவள், "அத்த.... குழந்தை பசியில் அழறான்..." அவள் அழைத்துக்கொண்டே வர, அவளை எதிர்கொண்டாள் வருணா.

"அனு.... இவ்வளவு நேரம் உன்கிட்டேயா இருந்தான்...? நைட் முழுக்க தூங்காமல் பாடா படுத்தறான். அதான்... இப்போ நிம்மதியா தூங்கினேன்." உரைத்தவள், குழந்தையை வாங்கிக்கொண்டாள்.

குழந்தை பெரும் குரலெடுத்து அழ, "ஹப்பா.... பசி வந்தால் ஒரு நிமிஷம் பொறுக்க மாட்டான். அப்படியே அப்பா மாதிரி..." பெருமையும், பூரிப்புமாக அவள், உரைத்துச் செல்ல, அவள் வார்த்தைகள் சில பல அதிர்வுகளை அனன்யாவுக்குள் விதைத்தது.

‘அப்போ என் பிள்ளையும் நகுல் மாதிரிதான் இருப்பான்...’, தன் மார்பில் பாலூறும் உணர்வு. இது திருமணமான பெண்களுக்கு இயல்பாய் ஏற்படும் ஏக்கம்.... தான் ஒரு தாயாக எப்பொழுது மாறுவோம் என்ற தவிப்பு.... அதற்கு அனன்யாவும் விதி விலக்கில்லை.

அவ்வளவு நேரமாக எழாத நகுலின் நினைவு வெடித்துக் கிளம்ப, அவனைக் காணவேண்டும் என்ற வேகம் பிறந்தது.

அது இப்பொழுது முடியாது என்ற உண்மை புலப்பட, தன் அலைபேசியை எடுத்து, அவனது அழைப்பு எதுவாவது வந்திருக்கிறதா என பார்த்தாள்.

அதுவோ.... எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் இருக்க, சோர்ந்து போனாள். ஆனாலும்.... அப்படியே இருக்க முடியாமல், ஏதோ ஒரு வேலையைச் செய்தவாறு நேரத்தை கடத்த முயன்றாள்.

நொடிக்கொருமுறை அலைபேசியில் தன் பார்வை செல்வதை தடுக்க முடியாமல் திண்டாடினாள். அலைபேசி ஏதாவது அழைப்பென்றால் ஒலி எழுப்பும் என்ற உண்மை மூளைக்கு எட்டிய அளவு, மனதுக்கு எட்டவில்லை.

நேரம் செல்லச் செல்ல, அவன் போய் சேரவேண்டிய நேரம் கடந்து, மேலும் இரண்டுமணி நேரங்கள் கடந்திருக்க, எப்பொழுதும் எழும் அந்த பயம் எழுந்து அவளை அலைக்கழித்தது.

பெயருக்காக எதையோ உண்டு.... கடமைக்காக மற்றவர்களோடு உரையாடி, குழந்தையோடு குலாவி.... என அவள் தன் பொழுதை நெட்டித்தள்ள, அவள் எதிர்பார்க்கும் அழைப்பு மட்டும் நகுலிடம் இருந்து அவளுக்கு வரவில்லை.

மற்றவர்கள் அதைபற்றிய கவலையே இல்லாமல் இருக்க, அவளால் அதையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இரவு உணவுக்காக அனைவரோடும் சேர்ந்து அமர, "வரு.... நகுல் உன்கிட்டே ஏதோ நோட்ஸ்.., கேட்டிருந்தானாமே.... அதை நீ கொடுக்கவே இல்லையாம்.... மெயிலில் இருப்பதை பார்வேர்ட் பண்ண எவ்வளவு நேரமாகும்னு ஒரே சத்தம். இதை மதியமே கேட்டான்.... நான் மறந்துட்டேன்....." பதட்டமாக வாயில் இருந்த உணவை அவசரமாக விழுங்கிவிட்டு கேட்டான்.

அவன் அவசரத்தைப் பார்த்தவள், "இதுக்கு ஏன் இவ்வளவு அவசரம்? கொஞ்சம் மெதுவாத்தான் கேளுங்களேன். எனக்கு அப்போவே போன் பண்ணி கேட்டான்.... நானே அனுப்பிட்டேன். உங்க ஞாபக சக்தியில் தீய வைக்கன்னு என்கிட்டே பொரிஞ்சான்..." சொன்னவள் கலகலத்து சிரித்தாள்.

"அப்படியா சொன்னான்...? அவன் வரட்டும் வச்சுக்கறேன்..." நவீன் கருவினான்.

"பார்வதி, நகுல் பேசினானா?" நகுலின் தந்தை கேட்க, "காலையில் போய் ரீச் ஆன உடனே பேசினாங்க.... இது வழக்கமா நடக்குறது தானே.... என்ன திடீர்ன்னு...?" கணவனை கேள்வியாக நோக்கினார்.

"இல்ல.... சும்மாதான் கேட்டேன்..." தன் உணவில் அவர் கவனமாக, அவர்கள் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த அனன்யாவுக்குத்தான், வாயில் வைத்த உணவு தொண்டைக்குழியில் இறங்காமல் சண்டித்தனம் செய்தது.

‘அப்படின்னா.... எல்லார்கிட்டேயும் பேசியிருக்கிறார்.... என்கிட்டே மட்டும் பேசவில்லையா.... ஏன்...? அப்படியென்ன என்மேல் கோபம்...? இல்லையென்றால் என்னை மறந்துவிட்டாரா?’ தொண்டைக்குழி அடைக்க, கண்களோ உடைப்பெடுக்கும் நிலையில் இருந்தது.

உணவை இதற்குமேல் ஒரு வாய் கூட உண்ண முடியாது என எண்ணியவள், "அத்த.... எனக்கு.... பசிக்கலை.... போதுமே..." கெஞ்சினாள்.

அவள் முகம், அவளது மனநிலையை உரைக்க, "போதும்னா விடும்மா.... பால் மட்டுமாவது குடிச்சுட்டு போ.... பொன்னம்மா..." அழைத்தவர், அவளை பால் குடிக்க வைத்த பிறகே அனுப்பினார்.

அவள் செல்லவே.... "அனுவுக்கு முகமே சரியில்லை.... அண்ணா இவளையும் கூட்டி போயிருக்கலாமே..." வருணாவின் குரல் முதுகின் பின்னால் ஒலித்தது.

"வரு.... அவன் பிஸினஸ் விஷயமா போயிருக்கான்..." நவீன் இடைபுக,

"பேசாதீங்க.... எனக்கு வாயில நல்லா வந்துடும். நீங்க மட்டும்..." துவங்கியவளுக்கு முன்பாக, கைகள்

இரண்டையும் தலைக்குமேல் குவித்து வணங்கியவன், "வேணாம் வரு.... நான் தாங்க மாட்டேன்..." அழும் குரலில் அவன் உரைக்க, பெரியவர்களே சிரித்துவிட்டார்கள்.

அந்த சிரிப்பொலி கூட அனன்யாவை தீண்டவே இல்லை. அறைக்குள் நுழைந்தவள் ஆனமட்டும் அழுது தீர்க்க, உறக்கம் மட்டும் வருவேனா என விளையாட்டு காட்டியது.

அவனிடம் பேசியே ஆகவேண்டும் என முடிவெடுத்தவள், அவனது அலைபேசிக்கு முயல, அது அணைத்து வைக்கப்பட்டிருப்பதாக உரைக்கவே சோர்ந்து போனாள்.

அதே நேரம்.... தன் அலைபேசியில் இருந்து அவனது மின்னஞ்சல் முகவரிக்கு மெயில் அனுப்ப நினைக்க, வைஃபையை ஆன் செய்ய.... வாட்ஸ்ஆப் குறுந்தகவல்கள் வரிசையாக வந்துகொண்டிருக்க, 'யார் இது...?' என்ற கேள்வியோடு அதை திறந்தாள்.

அவை அனைத்துமே நகுலிடம் இருந்து வந்திருக்க, ஆர்வமாக அவற்றை பார்வையிட்டாள். அதில் அவள் மனம் குளிரும்படி, பல புகைப்படங்கள் இருந்தன. அன்று மருத்துவமனையில், தானும் அவனும், குழந்தையோடு எடுத்துக்கொண்ட புகைப்படங்களை வரிசையாக அனுப்பியிருந்தான்.

அவற்றை பார்த்தவளுக்கு, கண்களை அவற்றில் இருந்து பிரிக்க முடியவில்லை. அதிலும்.., தன்னை தோளணைத்து நிற்கையில், அவன் கண்களில் வழிந்த கனவும், எதிர்பார்ப்பும்.... இமைக்க கூட முடியாமல் அதை வெறித்தாள்.

எதிரெதிராக நின்ற புகைப்படத்தில், அவன் கண்கள் கேட்ட கேள்வியும், முகத்தில் படர்ந்திருந்த கவலையும்.... இப்பொழுதே அவன் நெஞ்சில் விழுந்து, கதறித்தீர்த்துவிட துடித்தாள்.

‘நான் உனக்குத்தான்.... உனக்கு மட்டுமே சொந்தமானவள்.... என்னை எடுத்துகொள்...’, அவனிடம் உரைத்துவிடும் வேகம் எழுந்தது.

அவன் தன் அருகே இருக்கும்வரைக்கும் அவனிடம் வார்த்தைகள் உரைக்க மனமின்றி இருந்தவள், இப்பொழுதோ.... அவனிடம் உரைத்துவிடும் முடிவில் இருந்தவளுக்கு, அவன் அருகில்லாதது பெரும் குறையாகப் போனது.

காதலின் வலியையும், பிரிவின் துயரையும் ஒருங்கே அனுபவித்துக் கொண்டிருந்தாள் அந்த பேதை.

மெயில் அனுப்ப அலைபேசியை எடுத்தவள், அந்த புகைப்படங்களைப் பார்த்தவாறு, கன்னங்களில் கண்ணீர் கறை படிய, உறங்கிப் போனாள். நிச்சயம் நாளை அவன் அழைப்பான் என்ற நம்பிக்கையில் உறங்கியவளுக்கு, அது நடக்காது எனத் தெரிந்தால்?

30

முழுதாக ஐந்து நாட்கள் கடந்து விட்டது. நகுல், அனன்யாவோடு அலைபேசியில் மட்டுமல்ல, வீட்டு தொலைபேசியில் கூட உரையாடவில்லை. அதை நினைத்தவளுக்கு, இதயத்தை யாரோ கசக்கிப் பிழியும் உணர்வு.

தன்னை அவன் வேண்டாம் என முடிவு செய்துவிட்டானோ.... இந்த நினைவுதான் அவளை கொன்று கூறு போட்டது.

அப்படி அவன் முடிவு செய்திருந்தால் கூட பரவாயில்லை, தன் மனதுக்குள் அவன் இருக்கிறான் என்பதை தீர்த்து சொல்லிவிட வேண்டும்.... தீர்மானித்துவிட்டாள்.

அவன் தன்னிடம் பேசவில்லை, தன்னை தவிர்க்கிறான், வேண்டாம் என முடிவே செய்துவிட்டான்.... இப்படியான பல நினைவுகளையும் வலிகளையும் மீறி, அவன்மேல் தான் கொண்ட நேசத்தை மனதுக்குள் வைத்துக்கொண்டு புழுங்குவதுதான் மிகப்பெரும் கொடுமையாக இருந்தது.

அவன் தன் நேசத்தை வேண்டாம் என மறுத்து, அவனை விட்டு விலகிச் செல்லச் சொன்னால்.., அவனை விட்டும், அவன் நேசத்தை விட்டும், அவன் அக்கறையை விட்டும் விலகிச் செல்வது என்பதை நினைக்கவே முடியவில்லை.

தன் தாய்க்கு நிகராக.... அவரைவிட ஒரு படி மேலே போய்.... தன்னை கவனிக்கும் அவனது அக்கறை, வாழ்நாள் முழுவதும் வேண்டும் என மனம் முரண்டியது.

வேந்தனது விஷயத்தை அவனிடம் சொல்லி, அவன் என்ன சொல்கிறானோ, அவன் என்ன செய்யலாம் எனச் சொல்கிறானோ அப்படியே நடக்க வேண்டும் என முடிவெடுத்துவிட்டவளுக்கு, அவன், தான் சொல்வதை கேட்பானா...? என்ற மிகப்பெரும் கவலை நெஞ்சடைக்கச் செய்தது.

வீட்டில் மற்றவர்களிடம் அவன் பேசுகிறான் என்பது தெரிந்த பிறகு, தன்னிடம் அவன் பேசவில்லை என்பதை வெளியிட அவளுக்கு மனம் வரவில்லை.

அவர்களிடம் பேசிவிட்டான் என்பதை தெரிந்து கொள்ளும் வரைக்கும், ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டிருக்குமோ.... என அவள் மனம் தவித்ததை, அவள் யாரிடம் போய்ச் சொல்ல? அதையும் அவனிடமே பகிர்ந்துகொள்ள மனம் தவித்தது.

கணவன் மனைவிக்குள் இருக்கும் விஷயத்தை, மூன்றாம் மனிதரிடம் பகிர்ந்துகொள்ள அவளுக்கு மனம் வரவில்லை.

அன்று காலையில் எழும்பொழுது, எதுவோ நடக்கப் போகிறது என்று அவள் மனம் அடித்துக் கொண்டது.

அதை அசட்டை செய்ய முடியாமல் அவள் தடுமாற, குழந்தையை அவளிடம் கொடுக்க வந்த வருணா.... "என்ன அனு.... இதையெல்லாம் நீ கேக்கவே மாட்டியா...? ஊர்ல இருந்து வந்த அண்ணா.... அவன்பாட்டுக்கு ஆபீஸ் போய் உக்காந்திருக்கான்.... இதை கேட்டுட்டு நீ எப்படி பேசாமல் இருக்க?

"இந்த அண்ணா இப்போ ரொம்ப மாறிட்டான்.... இதே இது, நவீ மட்டும் செஞ்சிருக்கணும், அவனை ஆபீஸ்கே போய் ஒரு வழி பண்ணியிருப்பேன். நீ என்னன்னா.... ரொம்ப கூலா குழந்தையை கேட்டு அனுப்பி இருக்க..." பொரிந்தவாறே குழந்தையை அவள் கையில் கொடுத்தாள்.

"என்ன சொல்ற வருணா? உங்க அண்ணா வந்துட்டாரா...? எப்போ...? எங்கே...? இப்போ எங்கே இருக்கார்...?" குழந்தையை வாங்காமல் படபடத்தாள்.

"என்ன நீ...? என்னமோ காந்தி செத்துட்டாரான்னு கேக்குற மாதிரி கேக்கற? அவன் காலையில் எட்டு மணிக்கே ரீச் ஆயிட்டான். நேரா ஆபீஸ்கே போய்ட்டான். இப்போ மணி

பத்து.... ரொம்ப கூலா கேக்கற...? அவன் வரதை கூட உன்கிட்டே சொல்லலையா?

"இந்த அண்ணா ஏன் இப்படி மாறிட்டான்...? உன்னை கல்யாணம் பண்ணிக்க ஆசைபடப்போ, அப்படியே தாங்குவான்னு நினைத்தேன்.... இங்கே என்னன்னா.... எல்லாம் உல்ட்டாவா இருக்கு..." ஆதங்கபட்டாள்.

அவள் புலம்பலைக் கேட்க அனன்யா அங்கே இருக்கவில்லை. படிகளில் அவள் பாய்ந்தோட, வருணா சற்று பயந்தே போனாள்.

"ஏய்.... பாத்து போ.... அவன் எங்கேயும் போய்ட மாட்டான்..." அவள் கூச்சல், அனன்யாவின் காதைக் கூட எட்டவில்லை.

வாசலில் நின்ற காரில் ஏறியவள், அதை தானே ஓடிக்கொண்டு சென்றாள். அவளுக்கு கார் ஓட்டகூட நகுல் தான் சொல்லிக் கொடுத்திருந்தான், வற்புறுத்தி அவளை பள்ளிக்கு அனுப்பி, லைசென்ஸ் வேறு, வாங்க வைத்தான்.

அதை இப்பொழுது எண்ணியவளுக்கு, இருக்கும் அவசரத்தில் கூட, கண்கள் கலங்கியது. நான்கு நாட்கள் அவனைக் காணாத ஏக்கம், அவனோடு பேசாத தவிப்பு.... அவள் கார் சாலையில் சீறியது.

காரை அலுவலகத்தின் முன்னால் நிறுத்தியவள், படிகளில் ஏறி, லிப்டின் முன்னால் சென்று நின்றாள். அந்த தளத்தில் இருந்த அனைவருமே, அவளை சற்று வித்தியாசமாக நோக்கியதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

லிப்ட் வர தாமதமாகவே, படிகளில் விரைந்தாள். முதல் தளத்தில் இருந்த நகுலின் அறைக்குச் சென்றவள், கதவை படீரென திறந்துகொண்டு புயலென உள்ளே நுழைந்தாள்.

‘யார் அது...?’ எண்ணியவன், அவனது உதவியாளன் செல்வராஜிடம் இருந்து கலைந்து, வாயிலை நோக்கினான்.

அங்கே இருந்த அனன்யாவை எதிர்பாராமல் ஒரு நொடி உறைந்துதான் போனான்.

செல்வாவும் திகைத்துத்தான் போயிருந்தான், ஆனாலும், நொடியில் கலைந்து, "எக்ஸ்கியூஸ் மீ சார்..." சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

அவன் செல்லவே, "அன்னம்..." தன்னை மீட்டுக் கொண்டவன், கேள்வியாக நிமிர,

"ஆமா.... அன்னம்தான்.... இப்போதான் என் பேரே ஞாபகத்துக்கு வருதா...?" கேட்டவள், ஒரே பாய்ச்சலாக அவனை நெருங்கினாள்.

அவள் வேகத்துக்கு.... எங்கே விழுந்துவிடுவாளோ என அஞ்சியவன், சுழல்நார்காலியில் இருந்து எழுந்து, அவளை எதிர்கொண்டான்.

"பாத்தும்மா...." அவள் கரத்தைப் பிடித்து நிறுத்தினான்.

அவனிடம் மேலே ஒரு வார்த்தை பேசவில்லை. அவன் கையைப் பிடித்து இழுத்தவள், வாசலுக்கு வெளியே நடந்தாள்.

"அன்னம்.... இங்கே கொஞ்சம் வேலை இருக்கும்மா.... முடிச்சுட்டு நானே வரேன்...." அவன் பேச்சுக்கு, அவளிடம் எந்த எதிர்வினையும் இருக்கவில்லை.

அவள், அவன் கையை விடாமல் வெளியே நடந்து, படிகளில் இறங்க, அலுவலகம் மொத்தமும் அவள் செய்கையை வேடிக்கை பார்த்தது.

"அன்னம்.... சொல்றதைக் கேளும்மா..." அவளிடமிருந்து தன் கையை உருவிக்கொள்ளாமல், அவள் அன்புக்கும், கோபத்துக்கும் கட்டுப்பட்டு அவளோடு நடந்தான்.

தான் வந்த காரில் அவனைத் திணித்தவள், சுற்றிக்கொண்டு வந்து காரை கிளப்பினாள்.

"அன்னம்.... நீயா காரை எடுத்துட்டு வந்த...?" ஆச்சரியம் தாளாமல் வினவினான். எத்தனையோ நாள்.... அவளை காரை எடுக்கச் சொல்லியும், தனக்கு தனியாக ஓட்ட தைரியம் இல்லை என்று சொல்லி மறுத்தவள், இன்று தானாகவே காரை எடுத்து வந்து, தன்னைக் காண வந்தது அவனுக்கு பெரும் மகிழ்வைக் கொடுத்தது.

"காரை ரொம்ப நல்லா ஓட்டுற அன்னம்..." அவள் டிரைவிங்கை ரசிக்க, அவனைத் திரும்பி முறைத்தவள், சாலையில் கவனமானாள். இவ்வளவு நேரம் அவன் பேசியதில், அவளது எதிர்வினை இவ்வளவாகத்தான் இருந்தது.

அவனோ.... வானத்தில் மிதந்து கொண்டிருந்தான். அவள் தன்னைத் தேடி வந்ததில் அவ்வளவு ஆனந்தம். அதை முகத்தில் மறைக்காமல் வெளிப்படுத்தியவன், அவள் முகத்தையே பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

அப்பொழுதுதான் அந்த வித்தியாசம் அவனுக்கு உறைத்தது.... தலையைக் கூட வாராமல் மொத்தமாக தூக்கி ஒரு கிளிப்பில் அடக்கியிருந்தவள், நெற்றியில் பொட்டு இல்லாமல், வகிட்டில் வைத்த குங்குமத்தோடு, உடை கூட.... சுடிதாரில் இருந்தவள், துப்பட்டாவை மறந்து வந்திருப்பதை உணர்ந்தான்.

தன்னைக் காண வேண்டும் என்ற வேகத்தில், எதைபற்றியும் கவலைப்படாமல், தன் தோற்றத்தை கூட மறந்து, உடையிலும் கவனமில்லாமல், அவள் வந்திருப்பதில் இருந்தே.... தன்னைக் காண எத்தனை தவித்திருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான்.

கார் தங்கள் வீட்டின் முன்னால் நிற்க, அவனை அதேபோல் இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைய, ஹாலில் இருந்த யாரைப் பற்றியும் அவள் கவலைப்படவில்லை.

"என்னடி இது...?" பார்வதி புரியாமல் கேட்க,

"உங்க புள்ளைக்கு டிரீட்மென்ட் கொடுக்க கூட்டி போறா போல..." சொன்ன வருணா களுக்கென சிரிக்க, அவள் தோளிலேயே அடி போட்டவர், "நீ உன் ரூமுக்கு போடி.... பையன் தனியா இருக்கான்..." அவளை அனுப்பியவர், தானும் எழுந்து சென்றார்.

தங்கள் அறைக்குள் நுழைந்து கதவை தாழ் போட்டவள், "ஏண்டா.... ஏன் இப்படிப் பண்ண...? ஏன் என்கிட்டே பேசலை...? வெளிநாடு போனால் என்னை மறந்துடுவியா....?" அவன் சட்டை காலரைப் பிடித்து உலுக்கினாள்.

அவளிடம் இப்படி ஒரு அதிரடியை எதிர்பாராதவன் திகைத்துப் போனான். அதுவும், அவளது மரியாதை தன்மையற்ற, ஒருமை அழைப்பு அவனை வியப்பின் உச்சிக்கே அழைத்துச் சென்றது. அது அவனுக்கு பிடித்தும் இருந்தது என்பதுதான் உண்மை.

அவன் அதிர்வை கண்டுகொள்ளாமல், "எல்லார்கிட்டேயும் பேசத் தெரியுது, என்கிட்டே மட்டும் பேச மாட்டியா...?" தன் கேள்வியைத் தொடர்ந்தாள்.

"நான் பேசலன்னா என்னவாம்...?" அவளை பேச வைக்க விரும்பினான்.

"நீ பேசலன்னா.... என்ன சொன்ன.... எங்கே இன்னொரு முறை சொல்லுங்க பாப்போம்.... என்கிட்டே பேசாமல் யார்கிட்டே பேசுவீங்களாம்..?" ஒருமை இப்பொழுது பன்மைக்கு மாறியது.

"நான் யார்கிட்டே பேசப் போறேன்...? உனக்குத்தான் நான் பேசினால் டிஸ்டப்பா இருக்கும்.... அதான் பேசாமல் இருந்தேன்...." ஆழமான குரலில் உரைக்க, அதுவரை அவன் சட்டையைப் பற்றியிருந்த அவள் கை தளர்ந்தது.

கண்கள் கலங்க, அவனை விட்டு விலக முயல, தளர்ந்த அவள் கரத்தை பற்றியவன், "சொல்லு அன்னம்.... நான் பேசினால் உனக்கு டிஸ்டப்பா தானே இருக்கும்..." அப்படி இல்லை எனத் தெளிவாகத் தெரிந்தும் கேட்டான்.

"யாரு சொன்னா...? நான் சொன்னேனா...? உங்ககிட்டே சொன்னேனா...? எனக்கு நீங்கதான் முக்கியம் என்பது உங்களுக்கு இதுவரைக்கும் தெரியவே இல்லையா? இன்னைக்கு வரைக்கும், யார்கிட்டேயாவது உங்களை விட்டுக் கொடுத்திருக்கேனா?

"என்னை காதலிக்கிறேன்னு சொன்ன வேந்தன் முன்னாடி கூட, உங்க கௌரவம் முக்கியம்னு நினைத்தவள் நான். அப்படி இருக்கும்போது..... எதை வைத்து நீங்க முடிவு பண்ணீங்க...?" அவனிடமே திருப்பிக் கேட்டாள்.

"உன்னை காதலிக்கிறேன்னு சொன்ன வேந்தன்...' அப்போ நீ அவனை காதலிக்கவே இல்லையா...?" அவனுக்குத் தெரிந்த விஷயம்தான்.... ஆனாலும் அவள் வாயால் கேட்க விரும்பினான்.

"இல்ல.... இல்ல.... இல்லவே இல்லை. என்னைக்குமே நான் அவனைக் காதலிக்கிறதா அவன்கிட்டே கூட சொன்னதில்லை. அவ்வளவு ஏன்...? உங்க கிட்டே கூட சொன்னதா எனக்கு ஞாபகம் இல்லையே..." அவள் மூக்கை உறிய, அவளை கைபிடித்து அழைத்து வந்து அருகில் அமர்த்தினான்.

"ஹப்பா.... எவ்வளவு கோபம்.... இந்த உண்மை என் பொண்டாட்டிக்கு எப்போ தெரிய வந்ததுதாம்...?" அவள் கரத்தை கைகளுக்குள் அடக்கிக் கொண்டான்.

தன் தலையைக் குனிந்தவள், "அவனுக்கு வாக்கு கொடுத்த அன்னைக்கே எனக்கு அந்த உண்மை தெரியும்..." அவள் சின்னக் குரலில் உரைக்க, திகைத்துப் போனான்.

"அன்னம்..." அதிர்ந்துபோய் அழைக்க,

"ஆமா.... ஆனா.... அந்த உண்மையை அவன்கிட்டே தைரியமா சொல்ல முடியாமல்தான் இவ்வளவு நாள் நானும் குழம்பி, உங்களையும் குழப்பி, தவிக்க விட்டுட்டேன்.... சாரி..." குரல் வெளியேற சண்டித்தனம் செய்தது.

"அடிப்பாவி.... அப்போ இவ்வளவு நாளும் நீ தெளிவாத்தான் இருந்தியா? நான்தான் புரியாமல் குழம்பிப் போயிட்டேனா...?" கிட்டத்தட்ட அலறினான்.

"இப்பவும் பெரிய குழப்பம் இருக்கு.... அவன் பிரச்சனையும் இன்னும் முடியலை, ஆனா.... என்னால்.... நீங்க இல்லாமல் இருக்க முடியாது. உங்களை விட்டு தூரமா இருக்க முடியாது. உங்க பார்வை என்னை அந்நியமா பார்ப்பதை தாங்கிக்க முடியாது.... இப்படி..." அவள் சொல்லிக்கொண்டே போக, அவளை இறுக அணைத்திருந்தான்.

எலும்புகள் அனைத்தும் நொறுங்கிவிடும் அளவுக்கு இறுகிய அணைப்பு. அந்த அணைப்பில், அவனது உரிமையும், ஆளுமையும் புரியும் படியான அணைப்பு.

அவள் முதுகை தன் கரத்தால் வருடியவன், அவள் கரம், கன்னம், முகம் என உணர, அவன் செய்கைக்கான காரணம் புரியாமல், குழப்பமாய் அவனை ஏறிட்டாள்.

"என்னடா.... என்னமோ சின்னக் குழந்தையை முதல்ல கையில் ஏந்தும் போது, தொட்டுப் பாக்கற மாதிரி செய்யறானேன்னு யோசிக்கறியா? உரிமையான மனைவியா நீ இருந்தாலும், ஆசையா.... பாசமா.... அவ்வளவு ஏன்.... உன் அவசியத்துக்குக் கூட, அந்நியன் மாதிரி நடந்துகொள்ள வேண்டி வந்தப்போ.... ரொம்ப கஷ்டமா இருந்தது.

"ஆனா இப்போ.... உன் மனசுக்குள் நான் இருக்கேன்னு தெரிய வந்தப்போ.... என்னோட மனசுக்குள் இருக்கும் உணர்வுகளை, எனக்கு எப்படிச் சொல்ல,

வெளிப்படுத்தன்னு தெரியலை.... அதான்..." அவன் கரம், அவள் கன்னம் தழுவ, அவன் பார்வை, அவளை மயிலிறகாய் வருடியது.

"நகுல்..." கேவலாய் அழைத்தவள், அவன் கன்னம் தாங்கி, தன் இதழ்களை ஒரு வேகத்தில் அவன் முகம் முழுக்க ஒற்றி எடுத்தாள். அவ்வளவு நேரமாக, மனதுக்குள் முட்டி மோதிய பாரம் அனைத்தும் காணாமல் போன உணர்வு, தான் காற்றாகிக் போன உணர்வு...

"ஐ லவ் யூ நகுல்..." ஒவ்வொரு முத்தத்தின் இடையிலும் அவள் முனக, தன் இத்தனைநாள் கனவு, நிஜமாகிப்போன உணர்வு. மனதோடு சேர்த்து, உடலும் பறப்பதுபோல் உணர்ந்தான்.

அவள் செய்கைக்கு தன்னைக் கொடுத்தவன், அவள் இடையைக் கட்டிக்கொண்டு அவள் இதழ் தீண்டலில் கரைந்து போனான். எவ்வளவு நேரம் அந்த செய்கை தொடர்ந்ததோ.... ஒரு கட்டத்தில் தன்னைத் தெளிந்தவள், அவனை விட்டு விலக முயல,

"இந்த முகத்தில் 'இது..' மட்டும் என்ன பாவம் செஞ்சதாம்..." அவன் தன் இதழை குவித்துக் காட்ட,

"ம்ஹூம்..." தன் செய்கையில் வெட்கம் கொண்டவளாய்.... மறுப்பாக தலையசைத்து, அவனை விட்டு விலக முயன்றாள்.

"அதெல்லாம் முடியாது.... ப்ளீஸ்..." அவளை விலக அனுமதிக்காமல் கெஞ்சினான்.

"கண்ணை மூடுங்க.... அப்போதான்..." காற்றாகிப்போன குரலில் அவள் உரைக்க, அவள் கோரிக்கையை ஏற்று விழி மூடினான்.

மிகுந்த தயக்கத்தோடு அவன் இதழை அணுகியவள், பட்டும் படாமல் ஒற்றி எடுக்க முயல, அடுத்த நிமிடம், அவள்

இதழ் இரண்டும் அவனது இதழ்களுக்குள் சிறை பட்டிருந்தன.

அங்கே..... முத்தம்.... கொடுக்கப்படவில்லை.... பரிமாறப்பட்டன. ஒரு முத்தம் உலகையே நிறுத்துமா...? சுற்றுபுறத்தை உறையவும், தனக்குள் பிரளயத்தையும் ஏற்படுத்துமா...? அனைத்தும் உணர்ந்தாள்.

ஏதோ ஒரு சுழலுக்குள், சூறாவளிக்குள் சிக்கிக்கொள்ளும் உணர்வு. கண்கள் இருள, கால் கை துவள, தன்மேல் சரிந்தவளை, தன்னோடு இறுகிக் கொண்டு, படுக்கையில் விழுந்தான்.

மூச்சுக்காற்றுக்கு திணறியவள், அவன் கன்னம் பற்றிக்கொண்டு, தன் இதழ்களை பிடுங்கிக் கொண்டவள், வேகமாய் மூச்சிழுக்க, ஒரு நொடி அவளை அனுமதித்தவன், மீண்டும் அவள் இதழ்களை கவ்விக் கொண்டான்.

அவன் கரங்கள் சற்று இடம் மாறி, தன்னவளை உணர முயல, "ம்ஹூம்..." அவன் இதழ்களுக்குள் முனகியவள், அவன் கரம் தடுக்க முயன்றாள்.

அந்த பிடிவாதக்காரன் அவளையும் தன் செய்கைக்கு துணைக்கழைக்க, வெட்கமாய் தன் கரத்தை விலக்கிக் கொண்டவள், அவன் கரத்த சற்று எல்லை மீற அனுமதித்தாள்.

இன்னும்.... இன்னும்.... எதுவோ.... புரியாத உணர்வுகள், தேகம் மொத்தமும் அலையடிக்கும் உணர்வு. அவளை புரட்டியவன், அவள்மேல் படர, உலகம் மறந்து போனது.

‘இது என்ன...? இது ஏன் இப்படி...?’ தனக்குள் நிகழும் மாற்றம் அவளை துவள வைக்க, சட்டென அவள் இதழ்களைப் பிரிந்தவன், அவள் முகம் பார்த்தான்.

‘என்ன ஆயிற்று...’, கிளர்ந்தெழுந்த உணர்வுகள் அடங்க மறுத்த விதத்தில், அவன் முகம் பார்க்க, இமை சிமிட்டி அவன் சிரிக்க, தன்மேல் இருந்த அவனை புரட்டித் தள்ளியவள், எழுந்து ஓட முயன்றாள்.

அவளை இழுத்து தன்மேல் சாய்த்தவன், தலையணையை அணைவாக வைத்துவிட்டு, சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவளோ.... கேள்வியாக அவன் முகத்தை ஏறிட,

அவள் நெற்றியில் முட்டியவன், "இந்த நிமிஷம்.... நம் ரெண்டுபேருக்குள் எந்த தடையும் இல்லை. அது எனக்கும் புரியுது. ஆனால்.... இப்போ நான் உன்னை எடுத்துக் கொண்டால்.... இத்தனை நாள், நான் காத்திருந்தது இதுக்குத்தான்னு ஆயிடும்..." அவன் உரைக்க, வேகமாய் அவன் இதழை மூடினாள்.

"அப்படிச் சொல்லாதீங்க.... உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். நீங்க நினைத்திருந்தால்.... என்றைக்கோ என்னை சொந்தமாக்கியிருக்க முடியும், ஆனால்.... நீங்க அப்படிச் செய்யவே இல்லையே..." அவன் கண்களுக்குள் பார்த்து உரைத்தாள்.

அவள் கரத்தை விலக்கியவன், "அதுக்குன்னு எனக்கு ஆசையே இல்லைன்னு நான் பொய் சொல்ல மாட்டேன். சில இரவுகளில் நீ வேண்டும் என்று தவித்திருக்கிறேன். ஒரு நார்மல் மனிதன் இந்த அளவுக்கு கூட இல்லன்னா எப்படி....?" அவன் பார்வை அவளிடம் கேள்வி கேட்க, வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

"நீங்க ரொம்ப மோசம்..." குழைவாக உரைக்க,

"அதுக்குள்ளே கண்டு புடிச்சுட்டியா...?" அவன் கேலி செய்ய, "போங்க..." சிணுங்கினாள்.

"இப்படி ஒரு நாள் என் வாழ்க்கையில் வரவே செய்யாதோன்னு எத்தனை நாள் கவலைப் பட்டிருப்பேன்

தெரியுமா...?" அவளை இறுகிக் கொள்ள, அவளும் வாகாக அவனிடம் ஒட்டிக் கொண்டாள்.

அந்த மோன நிலையை இருவருமே கலைக்க முயலவில்லை. அவனுக்கோ.... தன் கனவு மெய்யாகிபோன நிறைவு.... அவளுக்கோ.... தன் காதலை நேசத்தை அவனிடம் சொல்லிவிட்ட நிம்மதி.... அந்த நிமிடத்தில் கட்டுண்டு கிடந்தார்கள்.

31

நவீன் தன் தந்தை நடராஜோடு நகுலின் வீட்டுக்கு வர, வரவேற்பறையில் அமர்ந்திருந்த நகுல், "வாங்க மாமா.... வாடா..." அவர்களை வரவேற்றவன், "அம்மா.... வருணா..." தாயையும், தங்கையையும் அழைத்தான்.

"வாங்கண்ணா.... இந்த வீட்டுக்கு வர இப்போதான் வழி தெரிந்ததா...?" பார்வதி வரவேற்றவர், மனத்தாங்கலாய் கேட்டார்.

"வாங்க மாமா.... நல்லா இருக்கீங்களா....?" வருணா குழந்தையை அவர் கையில் கொடுத்தாள்.

"என்ன தங்கச்சி இப்படி சொல்லிட்ட, ரெண்டு நாள் முன்னாடி தானே வந்து, இந்த சிங்கக் குட்டியை பாத்துட்டு போனேன்..." அவருக்கு பதில் கொடுத்தவர், "அம்மாடி.... நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க? உடம்புக்கு நல்லா இருக்குதானே..." பேரனை கொஞ்சியவாறே அவர்களுக்கு பதில் கொடுத்தார்.

அதே நேரம்.... கையில் அவருக்கான காபியோடு வந்த அனன்யா, "வாங்கப்பா..." வரவேற்றவாறே அவர் எதிரில் இருந்த டீபாயில் வைத்தாள்.

சற்று நேரம் குழந்தையை கொஞ்சியவர், "தங்கச்சி.... அரசு இல்லையா...? அவரும் இருந்துட்டா.... நான் பேச வேண்டியதை பேசிடலாம்னு பார்த்தேன்..." பார்வையை சுழட்டியவாறே கேட்டார்.

"சொல்லுங்க சம்பந்தி, இதோ வந்துட்டேன்..." அவர் பேச்சை கேட்டவாறே, வாசலில் இருந்து உள்ளே வந்தவர், பதில் கொடுத்தார்.

"அட.... வெளியே போயிருந்தீங்களா...? இந்த நேரம் வீட்டில் இருப்பீங்கன்னுதான் தைரியமா வந்தேன்...".

"வழக்கமா வீட்டில்தான் இருப்பேன்..... இன்னைக்கு ஒரு சின்ன வேலை.... அதான்..." அவர் அருகில் அமர்ந்தார் அரசு.

"ஆமா.... வேலை வந்தால் செய்துதானே ஆகணும். நீங்க போய் ப்ரெஷ் ஆகிட்டு வாங்க.... நாம பேசலாம்...".

"அப்படியெல்லாம் டயடா இல்லை சம்பந்தி.... ஆபீஸ்ல இருந்து வீட்டுக்கு வந்துட்டு, ப்ரெஷ் ஆகிட்டுத்தான் வெளியே போயிருந்தேன்.... நீங்க சொல்லுங்க..." அவர் பக்கம் திரும்பி அமர்ந்தார்.

"ஒரு நிமிஷம் இருங்க, அம்மாடி.... குழந்தையை வாங்கிக்கோ..." அவர் உரைக்க, அனன்யா குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"அது.... குழந்தைக்கு பேர் வைக்கணுமே.... அதான்.... ஒரு வார்த்தை நேர்ல பேசிட்டு போகலாம்னு வந்தேன். நீங்க ஏதாவது நாள் பாத்தீங்களா? ஜோசியர் என்ன சொன்னார்...?".

"உங்ககிட்டே கலந்து பேசாமல் நாங்களா என்னைக்கு முடிவெடுத்து இருக்கோம்? பார்வதிதான் காலண்டரை வச்சு பாத்துட்டு இருந்தா.... நீங்க அவகிட்டே கேளுங்க...." இருவரும் அவரைப் பார்த்தார்கள்.

"நான் நல்லநாள் என்னைக்குன்னுதான் பார்த்தேன்..... இன்னும் நாலு நாளில் ஒரு நல்ல நாள் இருக்கு. மத்தபடி.... ஜோசியர்கிட்டே அவன் ஜாதகம் கணிக்க சொல்லி இருக்கேன்.... நாளைக்கே வேண்ணா அவரைப் போய் பாத்துட்டு வந்துடலாம்..." அவர் உரைக்க, அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெரியவர்கள் மேலே தங்களுக்குள் உரையாடத் துவங்க, மனைவியை சைட் அடித்துக் கொண்டிருந்த நண்பனை நெருங்கிய நவீன், "வாடா மாப்ள.... உன்கிட்டே விசாரிக்க வேண்டி இருக்கு..." அவனை இழுத்துக் கொண்டு தோட்டத்துக்கு விரைந்தான்.

"எதுக்குடா என்னைய இப்படி தள்ளிகிட்டு வர.... விடுடா..." தன் கையை அவனிடமிருந்து உருவிக் கொள்ள முயன்றான்.

"ஆமா.... ஆமா.... இப்போ நாங்கல்லாம் தொட்டால் பிடிக்குமா? பொண்டாட்டி தள்ளிகிட்டு போனான்னா புடிக்கும்.... அப்படித்தானே..." அவன் கண்ணைச் சிமிட்ட, அவனை போலியாக அடித்தான் நகுல்.

"அட கிராதகா.... அவ என் கையைப் புடிச்சிட்டு போனதுக்காடா ஒரு குடும்பமே சேர்ந்து ஓட்டுவீங்க? என் பொண்டாட்டி என்னன்னா.... ரெண்டு நாளா வீட்டுக்குள்ளே என்னை நிமிந்து பாக்க மாட்டேங்குறா. அந்த பிசாசு வருணா என்ன சொல்லி அவளை ஓட்டினான்னே தெரியலை, அவளைப் பாத்தாலே அலறுறா.... விடுங்கடா.... நீங்க மட்டும் புள்ளை குட்டியோட இருக்கீங்க, எங்களை அதுக்கு ட்ரை கூட விட மாட்டேங்குறீங்க..." அவனை விரட்டினான்.

"பட்டப்பகல்ல அத்தனை பேர் முன்னாடி உன் கையை மட்டும் அந்த அம்மாவுக்கு புடிச்சு இழுத்துட்டு போகத் தெரியும், கேட்டால்.... அப்படியே பச்ச புள்ள மாதிரி ரியாக்ட் குடுக்குறது. நாங்க நம்பிடுவோமா?" அவன் அடிகளை வாங்கிக்கொண்டு விடாமல் பேசினான்.

"அடேய்.... என்னை கொலைகாரனா மாத்தாதடா.... அவ முன்னாடி எதையாவது பேசி வச்ச, உன்னை கொன்னே புடுவேன்..." அனன்யாவின் வெட்கம் அவனை இவ்வாறு பேசத் தூண்டியது.

அன்று ஒரு வேகத்தில் அவள், அவனை இழுத்துக் கொண்டு போய் பேச, அவள் கீழே வந்தபொழுது நமுட்டு சிரிப்பில் அவளை கேலி செய்து தள்ளிவிட்டாள் வருணா.

அதோடு.... "அனு.... இந்த கோலத்திலியாடி அண்ணா ஆபீஸ்க்கு போன, உனக்கு ரொம்ப அவசரம்தான்..." அவள் கேலிசெய்த பிறகுதான், தன் தோற்றத்தையே ஆராய்ந்தாள்.

'ஐயோ.... அவர் கூட சொல்லலையே...', இதழ் கடித்தவள், ஒரு அசட்டு சிரிப்பு சிரிக்க, "எங்க அண்ணாவை எங்கே.... ரொம்ப டயட் ஆயிட்டாரோ" கண்களைச் சிமிட்ட, "ஏய்.... வரு.... அப்படியெல்லாம் எதுவும் இல்லை..." அவள் திணற, வருணாவின் சிரிப்பு அதிகரிக்கவே, "சும்மா இருடி..." கணவன் வருவதைப் பார்த்து, வேகமாக அவளை அடக்கினாள்.

இது எதையும் அறியாத நகுல், நேராக அனன்யாவிடம் வந்தவன், "அன்னம், ரொம்ப டயடா இருக்கு.... ஒரு கப் காபி ப்ளீஸ்..." சாதாரணமாக கேட்க, அந்த நேரம் வருணா அவளைப் பார்த்த பார்வையில், கிச்சனுக்குள் ஓடியே போனாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், "ஏய் வாலு.... அவ ஏன் இப்படி ஓடுறா? அவளை என்ன சொன்ன...?" கிச்சனுக்குள் எட்டிப் பார்த்தான்.

அங்கே நின்ற பார்வதியோ.... அனன்யாவின் கன்னம் தொட்டு வழித்து திருஷ்டி கழிக்க, "அத்த..." சிணுங்கியவள், அவர் முதுகின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

அவர் எதிர்பார்த்த அந்த மாற்றமும், மகனின் மலர்ந்த முகமும், அனன்யாவின் வெட்கமும், அவர்கள் வாழ்கை சீராகிவிட்டதை பார்வதிக்கு உணர்த்த, நிம்மதியாக உணர்ந்தார்.

அதன் பிறகு, மற்றவர் முன்னிலையில் நகுலின் முகம் பார்க்கவே அவள் தயங்க, காதல்மொழி பேசும் நகுலின் கண்கள், அவள் பார்வையை சந்திக்க முடியாமல் சோர்ந்து போனாலும், அவளது வெட்கம் அவனை உயிர்பிக்கவே செய்தது.

அறைக்குள்.... "ஏன் அன்னம் மத்தவங்க ரொம்ப கேலி பண்றாங்களா? நான் வேண்ணா சொல்லி வைக்கவா...?" அக்கறையாக அவன் வினவ,

"ஏன்.... அவங்க என்னை இப்போ ஓட்றது பத்தாதா? நீங்க ஒண்ணுமே சொல்ல வேண்டாம்..." அவன் கையணைப்புக்குள் ஒடுங்கியவாறு உரைத்து, அவனை அடக்கி விட்டாள்.

அதை இப்பொழுது எண்ணியவன்தான், நண்பனிடம் போலியாக கோபம் கொண்டு விரட்டினான்.

"டேய் மாப்ள.... உன்னை இப்படிப் பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? உன்கிட்டே உரிமையா என்ன வேண்ணா சொல்லலாம்., நீ என் மச்சான் மட்டும் இல்லை, என் நண்பனும் கூட.... அந்த உரிமையில் செய்யிறது, தங்கச்சிகிட்டே முடியுமா? அதெல்லாம் என் பொண்டாட்டி பாத்துப்பா..." இதைச் சொல்லி, இன்னும் பல அடிகளை பெற்றுக் கொண்டான்.

"ம்ம்ம்..." அதை ஏற்றுக் கொண்டவன், "நான் உன்னை அந்த ராக்கேஷை போய் பாக்கச் சொன்னேனே.... அது என்ன ஆச்சு...?".

"முக்கியமா உன்னை அதுக்குதான் இங்கே தள்ளிகிட்டு வந்தேனே.... அந்த வேந்தன் இருக்கானே..." துவங்கியவன், அவனைப்பற்றி ராக்கேஷ் உரைத்த தகவல்களை தெரிவிக்க, நகுலின் முகம் கோபத்துக்குப் போனது.

"ராஸ்கல்.... எப்படி டபிள் கேம் விளையாடுறான் பாருடா. இதை இப்படியே விடக் கூடாது. ஏதாவது செய்தே ஆகணும்.

அன்னம் மனசுக்குள் இருக்கும் அந்த குற்ற உணர்ச்சி போயே ஆகணும். அதைப் போக வைக்கலன்னா..... நானெல்லாம் என்ன புருஷன்.... செய்யறேன்....

"நீ அவனுக்கு போனைப் போட்டு..." அவன் செய்ய வேண்டியவற்றைச் சொல்ல, "சூப்பர் ஐடியா மாப்ள.... அப்படியே செய்யறேன்... இதுக்கு மேல அவன் என்ன சொன்னாலும் தங்கச்சியே பாத்துப்பா..." உரைத்தவன் உற்சாகமாகச் சென்றான்.

இரவு உணவை முடித்தவன், தன் அறைக்குச் செல்ல, அறையில் அனன்யா இல்லாமல், உடை மாற்றும் அறையில் வெளிச்சம் தெரியவே, 'இந்த நேரம் அங்கே என்ன பண்றா...', யோசனையோடு அங்கே செல்ல, அவளோ.... சூட்கேசை திறந்து வைத்துக்கொண்டு, வார்ட்ரோபுக்குள் தலையை நுழைத்திருந்தாள்.

பூனைபோல் நடந்து அவளை நெருங்கியவன், பின்னால் இருந்து அவளை அணைக்க, "என்னங்க.... உங்களுக்கு எந்த ட்ரெஸ் எடுத்து வைக்கட்டும்.... 'கோட்'டா.... இல்ல குர்தாவா.... இல்ல பட்டு வேஷ்டியா...? இல்லன்னா எல்லாத்தையும் எடுத்து வைக்கட்டுமா?" பார்வை துணிகளின்மேல் இருந்தாலும், வாகாக அவன்மேல் சாய்ந்து கொண்டாள்.

"அன்னம்.... கல்யாண மாப்பிள்ளை அவனா.... இல்லை நானா...? எனக்கெதுக்கு அதெல்லாம்..." அவள் இடையை வளைத்துக்கொண்டு, பின்கழுத்தில் இதழ் பதித்தான்.

அவன் கைகளுக்குள் திரும்பியவள், "ஐயாவுக்கு அப்படி ஒரு ஆசை வேற இருக்கா? இன்னொரு முறை புது மாப்பிள்ளை ஆகணும்னு..." அவனை போலியாக முறைத்தாள்.

"ஏய்.... நான் இன்னும் புது மாப்பிள்ளை தான்.... இன்னும் பழசாகவே இல்லை. அது யாருக்குத் தெரியுதோ இல்லையோ.... உனக்குத் தெரியுமே.." அவள் காதுக்குள்

கிசுகிசுக்க.... "ஆண்டவா.... நான் எதைச் சொன்னா.... நீங்க என்ன சொல்றீங்க..." தன் முகத்தை அவன் நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டாள்.

அவளை தனக்குள் புதைத்துக் கொள்ளும் விதத்தில் இறுக்கியவன், "இப்போ ட்ரெஸ் எடுத்து வைக்கிறோமா இல்ல.... பெட்டுக்கு போகலாமா.?" அவளை சீண்ட, "ஆமா.... போனா மட்டும்..." அவனுக்கு கேட்கும் விதத்தில் முனகியவள், அவனிடமிருந்து விலகினாள்.

அவளது பேச்சு தன் காதைத் தீண்டினாலும், அதை கேட்காததுபோல் பாவித்தவன், அவள் இதழில் அழுந்த முத்தமிட்டவன், "சரி.... நாம ட்ரெஸ்சே எடுத்து வைக்கலாம்.... உனக்கு மூட் இல்ல போல, விலகிட்ட..." அவள் பக்கம் திருப்பியவன், உடைகளை தெரிவு செய்வதில் கவனமானான்.

"நாளைக்கு.... எப்போ கிளம்பறோம்...? கார்லையா.., இல்ல.., ப்ளைட்லயா?".

"கார்ல கிளம்பினால் தான் வசதியா இருக்கும் அன்னம்.... டிரைவர் கூட வரார்.... சோ நோ ப்ராபளம்...".

"ஓ..." ஏனோ டிரைவர் உடன் வருவது அவளுக்கு அவ்வளவாக பிடிக்கவில்லை.

அவள் குரலின் பேதம் உணர்ந்தாலும், எதுவும் சொல்லாமல் தன் வேலையில் கவனமானான். சற்று முகம் வாடினாலும், நீண்டநாள் கழித்து காணப்போகும் தன் பெற்றவர்கள், தம்பி, தோழி.... என அனைவரும் நினைவிற்கு வர, உற்சாகம் திரும்பப் பெற்றவளாய் அவனோடு இணைந்தாள்.

மறுநாள் காலையில் அதிகாலையில் கிளம்பியவர்கள், மதிய உணவுக்கு அவள் வீட்டில் இருந்தார்கள்.

"வாங்க மாப்ள.... வாம்மா.... பிரயாணம் எல்லாம் சுகமா இருந்ததா? உள்ளே வாங்க, முதல்ல சாப்பிடலாம்..." மூர்த்திதான் வாயிலுக்கே வந்து வரவேற்றார்.

அவரிடம் நலம் விசாரித்த அனன்யாவின் கண்களோ.... தன் தம்பியைத் தேடி சுழன்றது.

"வா அனு.... என்ன வேடிக்கை பாக்குற? மாப்பிள்ளையை மேலே ரூமுக்கு கூட்டி போ.... முகம் கைகால் கழுவிட்டு வாங்க..." முத்துலட்சுமி மகளை முடுக்கினார்.

"சரிம்மா..." தன் யோசனையை கைவிட்டவளாக அறைக்கு விரைந்தாள்.

"அத்த.... வெளியே டிரைவர் இருக்கார்..." நகுல் உரைக்க, "அவரை நான் பாத்துக்கறேன் மாப்ள.... நீங்க கவலையே படாதீங்க..." மூர்த்தி இடைபுக, ஒரு தலையசைப்போடு அவர்களிடம் விடை பெற்றான்.

அறைக்குச் சென்றவன்.... "வாவ்.... அப்படியே நம்ம ரூம் மாதிரி இந்த ரூமை செட் பண்ணியிருக்காங்க. மேலே புல்லா இந்த ஒரு ரூம்தான் இருக்கும் போல..." அவர்களுக்காக கட்டப்பட்ட அந்த புதிய அறையை சுற்றி வந்தான்.

"ஆமா.... என்கிட்டே கேட்டுதான் செய்தாங்க..." அவளும் முதல்முறையாக வருவதால், அறையை ஆசையாக சுற்றி வந்தாள்.

"எனக்கு என்னவோ.., உன்னோட பழைய ரூம்தான் புடிச்சிருக்கு..." அவளுக்கு முன்பாக நின்றவன், ஆழமான குரலில் உரைக்க, சட்டென அவன் முகம் பார்த்தவள், அவன் எண்ணம் புரிந்தவளாக, அவனை நெருங்கியவன், அவன் தோளில் சாய்ந்து, "எல்லாத்துக்கும் மனசுதான் காரணம்.... ரூம்ல என்ன இருக்கு..." அவன் முகம் பாராமல் உரைக்க,

"அதுவும் சரிதான்..." உடனே ஒத்துக் கொண்டான்.

கூடவே.... "சரி இரு.... ஜஸ்ட் ஒரு குட்டி குளியல் போட்டுட்டு ஓடி வரேன்..." அடுத்த பத்து நிமிடங்களில், இருவரும் உடை மாற்றி, கீழே வந்தார்கள்.

சாப்பாட்டு மேஜைமுன் அமர்ந்தவர்கள், உணவை உண்ணத் துவங்க, "அம்மா.... எங்கேம்மா கெவினை ஆளையே காணோம்.... டென்த் போனாலும் போனான்.... ஊருக்கு வந்த அக்காவை பாக்கக் கூடவா வராமல் இருப்பான்..." சற்று கோபம் கொண்டாள்.

அவள் பேச்சில் திடுக்கிட்டுப் பார்த்த மூர்த்தியும், முத்துலட்சுமியும், நகுலின் முகம் பார்க்க, சற்று சங்கடமாக நெளிந்தவன், 'ஆண்டவா.... இதை எப்படி மறந்தேன்.... இவங்க யாருமே சொல்லையா...?', மானசீகமாக தலையிலேயே அடித்துக் கொண்டவன், சம்மாளிப்பாக அவர்களை ஏறிட்டான்.

அனன்யாவோ.... அவர்களைக் கண்டுகொள்ளாமல், "போன் பண்ணா கூட பேச மாட்டேங்கறான்.... சித்தியைக் கேட்டால்.... நீ ஊருக்கு வான்னு ஒரே பதில் தான்.... என்னம்மா நடக்குது இங்கே.... இப்போ கூட பாருங்க, நான் வந்து இவ்வளவு நேரமாச்சு.... அவனை ஆளையே காணோம்..." கோபம் குறையாமல் கேட்டாள்.

அத்தோடு.... "என்கிட்டே போன்லே பேசணும்னா கூட, ஐயா எனக்கு நேரடியா பேச மாட்டார்.... இவரோட போனுக்குதான் போடுவார்.... அதுவும் பத்தே நிமிஷம் பேசுவான்.... அப்படியே வச்சுடுவான்..." பொரிந்தாள்.

"முதல்ல சாப்பிடு.... பிறகு பேசலாம்..." முத்துலட்சுமி பேச்சுக்கு முற்றுபுள்ளி வைக்க, சாப்பிடும்பொழுது பேசினால் தந்தைக்கு பிடிக்காது என்பதால், அமைதியாக உண்டாள்.

சாப்பிட்டு முடித்து, அனைவரும் ஹாலில் குழும, "மாப்ள.... நீங்க வேண்ணா கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க..." மூர்த்தி உரைக்க,

"அப்படியெல்லாம் டயடா இல்லை மாமா.... காரை டிரைவர் தானே ஓட்டினார், அதனால் நான் நல்லா தூங்கினேன்..." அங்கிருந்த செய்தித்தாளை கையில் எடுத்துக் கொண்டான்.

அதே நேரம்.... அனன்யாவின் சித்தி வீட்டுக்கு வர, "வாங்க மாப்ள, சவுக்கியங்களா...? அம்மாடி.... எப்படி இருக்க...? இளைச்சு போயிட்டியே..." அனன்யாவை பாசமாக தழுவிக் கொண்டார்.

"சித்தி.... நான் உங்க மேலே கோபமா இருக்கேன். எங்கே அந்த பய? அவனை நீங்கதான் அனுப்பலையா? இன்னைக்கு இங்கே லோக்கல் ஹாலிடே தானே.... எனக்குத் தெரியும்..." முறுக்கிக் கொண்டாள்.

"அவன் எங்கே இங்க இருக்கான்...? அவன்தான் காரைக்குடி போடிங் ஸ்கூல்ல போய் ரெண்டு மாசம் ஆகுதே. நம்ம மாப்பிள்ளை தானே சேர்த்து விட்டார்.... நீ சொல்லித்தான் செய்யறேன்னு சொன்னாரே..." இப்பொழுது அனைவரும் அவனை ஏறிட்டார்கள்.

"அத்தை.., நான் அன்னத்துகிட்டே எதுவும் சொல்லவே இல்லை. ஏன்னா.... ஏற்கனவே தம்பியை தனியா விட்டுட்டு வந்துட்டேன்னு புலம்பிட்டு இருந்தா.... இதில் அவனை ஹாஸ்டல்ல சேத்துட்டேன்னு தெரிந்தால், என்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவா.... அதான்.... இங்கே வந்த பிறகு தெரிஞ்சுகட்டும்னு விட்டுட்டேன்..." சாதாரணமாக உரைத்தவன், செய்தித்தாளில் கவனமானான்.

பெண்கள் மூவரும் உள்ளே செல்ல, "அம்மாடி.... நீ சொல்லித்தானே மாப்ள அவனை ஸ்கூல் மாத்துறதா சொன்னார்.... உனக்குத் தெரியாதா?" சித்தி கவலையானார்.

"ஐயோ சித்தி.... அதான் பசங்களோட சேர்ந்து விளையாடிட்டே இருக்கான்னு நீங்க சொன்னீங்கல்ல.... அதை நான் அப்படியே அவர்கிட்டே புலம்பினேன். அதுவும்

அடுத்த வருஷம் பத்தாப்பு வேற போறான்.... சொல்லிக் கொடுக்க வேற நான் பக்கத்தில் இல்லன்னு சொன்னேன்.... அதான் இப்படி ஒரு ஏற்பாட்டை பண்ணியிருக்காங்க.... நான் சொல்லாமல் செய்வாங்களா? நீங்க யாரும் என்கிட்டே சொல்லலையேன்னு நான் சும்மா உங்களை கேலி செய்தேன்.... அதுக்குபோய்.... விடுங்க..." அழகாய் சம்மாளித்தாள்.

ஆனாலும்.... மனதுக்குள் சிறு பாரம் ஒட்டிக் கொண்டது. அதையும் மீறி, தான் எப்பொழுதோ சொன்ன ஒரு வார்த்தைக்காக, கெவினுக்காக அவன் எடுத்த முயற்சியை அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

தன்மேல் மட்டுமல்ல, தன்னைச் சுற்றி இருப்பவர்கள் மேலும் அவன் கொண்ட அக்கறையும், அன்பும் அவளை அசைத்துதான் பார்த்தது.

அவளது பேச்சு வெளியே அமர்ந்திருந்த அவனுக்கும் கேட்கவே செய்தது. ‘எவ்வளவு அழகா சம்மாளிக்கிறா.... இருந்தாலும் நான் ஒரு வார்த்தை சொல்லியிருக்கணும்...’, தன்னையே நொந்து கொண்டான்.

"சரி மாமா.... கொஞ்சம் படுத்து எந்திரிக்கறேன்..." அவன் விடைபெற, "அனு.... நீயும் போ..." அவளையும் அனுப்பினார்கள்.

அவள் வரவுக்காக அறையில் காத்திருந்தவன், அவள் வரவே, "சாரி அன்னம், கெவின் பற்றி, நான் உன்கிட்டே சொல்லியிருக்கணும். அவங்க சொல்லியிருப்பாங்கன்னு விட்டது என் தப்பு. நீ அவன்கிட்டே போன் பேசுவதை வைத்து, உனக்குத் தெரியும்னு நினைத்தேன்..." வெகுவாக தயங்கினான்.

அவன் அருகே அமர்ந்தவள், "நீங்க என்ன வேணும்னா என்கிட்டே மறைத்திருக்கப் போறீங்க. உங்க வேலை, அண்ணியோட பிரசவம், வெளிநாட்டுப் பயணம்.... இப்படி உங்களுக்கு தொடர்ந்த வேலை, இதுக்கு நடுவில், நான்

எப்பவோ சொன்ன வார்த்தைக்காக, கெவினுக்கு நல்ல ஸ்கூல்ல பாதியில் இடம் எடுத்து கொடுத்திருக்கீங்களே....

"அதுக்கே நான் உங்களுக்கு பெரிய தேங்க்ஸ் சொல்லணும். என்ன.... நீங்க சொல்லியிருந்தால், நான் அவங்க முன்னாடி முழிச்சிருக்க மாட்டேன்.... இப்போ கூட சம்மாளிச்சுட்டேன்.... எனக்கு சந்தோஷம்தான்.... நீங்க வருத்தப் படாதீங்க..." அவளது புரிதலை எண்ணி வியந்தான்.

"தேங்க்ஸ் அன்னம்.... என்னை இவ்வளவு புரிஞ்சுப்பன்னு நான் நினைக்கவே இல்லை. ஆனாலும்.... நான் உன்கிட்டே சொல்லாமல் விட்டதுக்கு சாரி..." மனமார மன்னிப்பு வேண்டினான்.

"ம்ச்.... இப்போ எதுக்கு தேங்க்ஸ்சும், சாரியும்.... அப்படிப் பாக்கப் போனா.... நான்தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும்...".

"இது என்னோட கடமை அன்னம்..." வேகமாக உரைக்க, "உங்களை நான் கணவனா அடைய கொடுத்து வச்சிருக்கணும்..." உளமார உரைத்தாள்.

"உன்னை அடைய நான்தான் கொடுத்து வைத்திருக்கணும் அன்னம்..." உரைத்தவன், அவளை அணைத்துக் கொண்டான்.

"சரி.... கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க.... சாயங்காலம் மண்டபத்துக்கு வேற போகணும். அங்கே என்னோட ப்ரண்ட்ஸ்சை பாக்கபோற சந்தோஷத்தில் எனக்கு தூக்கம் வரும்னே தோணலை..." அவள் உரைக்க,

"நீ போய் உங்க அம்மாவோட பேசிட்டு இரு.... போ..." அவளை அனுப்ப, அவன் புரிதலை எண்ணி வியந்தவள், அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டுவிட்டு, சிட்டாகப் பறந்தாள்.

சின்ன சிரிப்போடு படுக்கையில் விழுந்தவன், ‘உன் ப்ரண்ட்ஸ்சைப் பார்த்து, நீ சந்தோஷபட்டால் பரவாயில்லை அன்னம்...’, அங்கே நிகழப்போவதை எண்ணியவனாக, விழி மூடினான்.

32

மாலையில், மண்டபத்துக்கு காரில் சென்று இறங்க, அவர்களை வாசலுக்கே வந்து வரவேற்றார் மைத்ரேயியின் தந்தை.

"வாங்க.... வாங்க தம்பி, நீங்க வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்..." அவன் கரத்தை பற்றிக் கொண்டார். அவரால் நம்பவே முடியவில்லை.... தன் மனைவியின் தோழி திருமணத்துக்கு, முந்தின நாளே அவளை அழைத்துவந்த அவனை ஆச்சரியமாக ஏறிட்டார்.

இப்படி ஒரு புரிதல் உள்ள கணவனை அடைய அனன்யா கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றே எண்ணினார். அத்தோடு.... 'அவளோட குணத்துக்கு ஏத்த பையன் தான்...' அவர் உள்ளம் பூரிப்பாக எண்ணிக் கொண்டது.

"இந்த பக்கம் வாங்க.... இப்போ மாப்பிள்ளை அழைப்பு முடிஞ்சுடும்.... உக்காருங்க..." அவனுக்காக தானே இருக்கையை காட்டினார்.

"ஐயோ.... நீங்க ஏன் சிரமப்படுறீங்க? உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும், நீங்க அதைப் போய் பாருங்க..." அவரை கட்டாயப்படுத்தி அனுப்பினான்.

"நீங்க இருங்க.... வரேன்.... டேய் தம்பி.... இவங்களுக்கு ஜூஸ் கொடு..." அங்கிருந்த பையனை அழைத்து உபசரிக்கச் சொல்லிவிட்டே அங்கிருந்து அகன்றார்.

இருவரும் இருக்கையில் அமர, ஜூஸைப் பார்த்த நகுல், வேண்டாம் என மறுத்துவிட்டு அமர, "நீங்க குடிங்க..." அவள் ஒரு கோக் பாட்டிலை கையில் எடுத்துக் கொள்ள, "நான் இப்போல்லாம் ஜூஸ் குடிக்கிறதில்லை" சொல்லிவிட்டு, அவன் தன் அலைபேசியில் வந்த குறுஞ்செய்தியில் கவனமானான்.

அவன் சொன்ன விஷயம் அவளைத் தாக்க, ‘தனக்காகவா.... தான் சாப்பிடுவதில்லை என்றா...?’ நெகிழ்வாக அவனை நோக்கினாள்.

அதே நேரம்.... "அக்கா.... நீங்க எப்போ வந்தீங்க...? ஏன் அக்காவை பாக்க வரலை, நீங்க வந்தால், உங்களை தனியா விடவே கூடாதுன்னு என்கிட்டே கண்டிசனா சொல்லிட்டா.... நீங்க வாங்க..." மைத்ரேயியின் தங்கை நளினி ஆர்ப்பாட்டமாக கூவி அவளை பற்றிக் கொண்டாள்.

"ஹலோண்ணா.... எப்படி இருக்கீங்க...?" அவனிடம் கேட்டாள்.

"நல்லா இருக்கேம்மா..." மைத்ரேயிக்கும், அவளுக்கும் இருக்கும் உருவ ஒற்றுமையைப் பார்த்து, அவள் யார் என்பதை யூகித்தான்.

"ஏய் நல்ஸ்.... என்ன என்னைப் பாக்க வந்துட்ட.... எங்கே உன் கோஷ்டியை எல்லாம் காணோம்...?" தானும் அவளைப் பார்த்ததில் மகிழ்ந்து போனாள்.

"எல்லாம் அங்கே இருக்காங்க.... ஒரு பத்து நிமிஷம்னு சொல்லிட்டு நான் தப்பிச்சு வந்திருக்கேன். நீங்க வாங்க..." அவள் கை பிடித்து இழுக்க, அனன்யா தன் கணவனின் முகம் பார்த்தாள்.

அவள் தன் கணவனைப் பார்ப்பதை உணர்ந்தவள், "அட ராமா... அண்ணாவை எந்த காக்காவும் தூக்கிட்டு போய்டாது. வேண்ணா இப்படி பண்ணலாம்.., அவங்களையும் கூட்டி வாங்க...." அவள் உரைக்க, சற்று சங்கடமாக மனைவியை ஏறிட்டான்.

அவன் பார்வையைப் உணர்ந்த அனன்யா.... "நீங்க தனியா...?" அவள் மேலும் தயங்க,

"எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை.... ஒரு பத்து நிமிஷம் வெளியே போயிட்டு வரேன்.... நீ போய் பார்..."

தான் இங்கே தனியாக அமர்ந்திருந்தால் அவள் கவலைப்படுவாள் என்பதால், கிளம்பி விட்டான்.

அவன் செல்லவே.... தோழியை காணப்போகும் உற்சாகத்தில், நளினியோடு கிளம்பினாள்.

"உனக்கு காலேஜ் இந்த வருஷம் முடியுது தானே.... மேலே என்ன பண்ணப்போற?" மைத்ரேயியின் அறைக்கு போகும் வழியில் உரையாடினாள்.

"எம்சிஏ பண்ணலாம்னு நினைக்கறேன்.... எப்படியும் இன்னும் ஒரு ரெண்டு மூணு வருஷத்துக்கு என்னை தொல்லை பண்ண மாட்டாங்க..." உற்சாகம் குறையாமலே உரைத்தாள்.

"ரொம்ப கவலையா சொல்ற மாதிரி இருக்கு...?" கேலியாக கேட்க,

"அதானே.... நீங்க அவ ப்ரண்டில்ல.... அப்போ இப்படித்தான் இருப்பீங்க..... உங்க கோழி உள்ளேதான் இருக்கா.... நீங்க போங்க...".

"என்னது கோழியா.... கேட்டவள்.... அவள் தோழியைத்தான் அப்படி உரைக்கிறாள் என்பது புரிய, சின்ன சிரிப்போடு அறையைத் தட்டிவிட்டு அது திறக்க காத்திருந்தாள்.

அறை திறக்கவே.... அறையில், சொந்தங்கள் சூழ, நடுவில் அமர்ந்திருந்த மைத்ரேயியைப் பார்த்தவள், "மையூ..." அழைத்தவள், ஓடிபோய் கட்டிக் கொண்டாள்.

"அனு.... வாடி..." தானும் இறுக கட்டிக் கொண்டாள்.

"அப்பா.., முடியல.... இவங்க பாசத்தில் எனக்கு கண்ணு வேர்க்குதே..." நளினியின் கேலிக் குரலை கேட்ட பிறகுதான் கலைந்து பிரிந்தார்கள்.

"ஏய்.... கண்ணு வைக்காம போடி..." மையூ அவளை விரட்ட,

"அதானே.., உன் வேலை முடிஞ்சதுல்ல.... நீ இதுவும் பேசுவ, இன்னமும் பேசுவ.... நாளைக்கும் என் தயவு உங்களுக்கு வேணும்.... நல்லா யோசனை பண்ணிச் சொல்லு..." கையை கட்டிக்கொண்டு, முறுக்கிக் கொண்டாள்.

"சரிதான் போடி.... அதெல்லாம் இவ புருஷன் பாத்துப்பார்..." அக்கா தங்கை இருவரும் வழக்கடித்தார்கள்.

"இவளுக சக்களத்தி சண்டையை தீக்கவே இவ ஆத்தா காரிக்கு பொழுது சரியா போய்டும் போல..." சொந்தங்களில் ஒரு கிழவி குரல் கொடுக்க, இருவரும் கப்பென வாயை மூடிக் கொண்டார்கள்.

'நல்லவேளை.... அம்மா இங்கே இல்லை...' இருவரும் ஒன்றுபோல் எண்ணிக் கொண்டார்கள்,

அவர்களை நார்மலாக்கும் பொருட்டு, "என்ன கல்யாணப் பொண்ணு.... சந்தோஷத்தில் ஒரு சுத்து பெருத்துட்ட போல..." தோழியை கேலி செய்தாள்.

"ஒரு சுத்தா.... நல்லா பாருங்க.... நாலு அஞ்சு சுத்து இருக்கும்..." நளினி இடை புக,

"போடி புடலங்கா..." ஒல்லியாக இருக்கும் தன் தங்கையை பதிலுக்கு கேலி செய்தாள்.

"உன் பக்கத்தில் நான் இருந்தால்.... புடலங்காய் இல்லை.... முருங்கைக்காய் மாதிரிதான் இருப்பேன்.... ஏன்னா உன் சைஸ் அப்படி..." அவள் விடாமல் கலாய்க்க.., அனன்யா பக்கென சிரித்தே விட்டாள்.

"பாத்தியா.... அனு அக்காவே ஒத்துகிட்டாங்க..." அவள் உரைக்க, பக்கென சிரிப்பை நிறுத்தியவள், 'இது எப்போ...?' என்பதுபோல் விழித்தாள்.

'ஏய்.... இல்லடி...' தோழியிடம் சமாதானமாக உரைக்க, 'துரோகி...' பதிலுக்கு மைத்ரேயியின் பார்வை அவளை

குற்றம் சுமத்தியது.

"அவ சும்மா விளையாடுறா.... நீ ஏன் சீரியஸா எடுத்துக்கற விடு.... உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா...?" தோழியை சமாதானமாக அணைக்க, சற்று இறங்கினாள்.

அவளை மேலும் கலைக்க, "என்னடி.... நம்ம செட்டில் வேற யாரையும் காணோம்...?" விழிகளை சுழற்ற, "எல்லாம் நாளைக்கு கல்யாணத்துக்குதான் வருவாங்கன்னு நினைக்கறேன், பார்க்கலாம்.... சரி அண்ணா எங்கே...? உன்னை கூட்டி வந்து விட்டுட்டு கிளம்பிட்டாங்களா?".

"ஆமா.... ஏதோ வெளியே போயிட்டு வரேன்னு சொன்னாங்க...".

"சரி.... நீங்க கொஞ்ச நேரம் பேசுங்க.... நான் என் ப்ரண்ட்சை பாத்துட்டு வரேன்..." நளினி கிளம்பினாள்.

"நல்லு.... நலங்கு வைக்கிறப்போ நீதான் இவளுக்கு கம்பெனி கொடுக்கணும், எங்கேயும் போய்டாதடி..." மைத்ரேயியின் குரல் அவளைத் தொடர்ந்தது.

"கேக்குறது ஹெல்ப்பு.... ஆனா கூட உனக்கு குசும்பு போகலை பாத்தியா? நல்லு.... புல்லுன்னு சொல்ற.... இருந்தாலும், நாளையில் இருந்து இந்த தொல்லை கிடையாதே என்ற சந்தோஷத்தில் செய்யறேன்.... சரி.... சரி..." அவளும் அசால்ட்டாக பதில் கொடுத்துவிட்டு விரைந்தாள்.

"என்னடி நடக்குது இங்கே.... எலியும் பூனையும் மாதிரி சண்டை போட்டுக்கிட்டு, இப்போ நீ என்னமோ கேக்குற, அவளும் ரொம்ப சாதாரணமா சரிங்கறா...?" அக்கா தங்கை பாசம் அவளை வியக்க வைத்தது.

"அது அப்படித்தான்.... நீ சொல்லு.... சரி வா.... நாம அப்படி பால்க்கனி பக்கம் போய்டலாம்..." தோழியை அழைத்துக் கொண்டு சென்றாள்.

இருவரும் தங்களை மறந்து உரையாட.... போன நளினி, சற்று நேரத்தில், தன் கல்லூரித் தோழியோடு அங்கே திரும்ப வந்தாள்.

"என்னடி...?" அவளைப் பார்த்து தன்மையாகவே கேட்டாள் மைத்ரேயி.

"அக்கா.... இவளுக்கு உன்கிட்டே என்னவோ கேக்கணுமாம்.... நாளைக்கு கேக்க டைம் இருக்காது.... இப்போவே கேக்கணும்னு ஒரே பிடிவாதம்.... அதான் அழைச்சுட்டு வந்தேன்..." அவள் அசால்ட்டாக உரைக்க,

"ஏய்.... நான் எப்போடி அடம் பண்ணேன்...?" வந்தவள் அவள் கையை சுரண்ட,

"அட.... ரொம்ப பண்ணாதடி.... கொஞ்ச நாளா என் காதை பஞ்சறாக்குறியே, இப்போ நீயே கேட்டுக்கோ..." அவள் சொல்ல, வந்தவள், அவர்களை சங்கடமாக ஏறிட்டாள்.

"என்னம்மா.... சொல்லு..." மைத்ரேயி கேட்க,

"இல்ல.... நீங்க இங்கே.... பக்கத்தில் இருக்கும் இஞ்சினியரிங் காலேஜில் தானே படிச்சீங்க..." அவள் தயங்க...

"ஏண்டி.... நீயென்ன அங்கே யாரெல்லாம் படிச்சாங்கன்னு கணக்கா எடுக்கற? கேக்க வந்ததை கேளுடி...".

"நல்லு.... அவளே தயங்குறா.... இதில் நீவேற அவளை கிண்டல் பண்ணிட்டு, பேசாம இரு..." தங்கையை அடக்கியவள், அவளிடம் திரும்பினாள்.

"சாரி.... நான் இப்போ கேக்க வேண்டாம்னுதான் நினைத்தேன்.... இவதான்.." அவள் சங்கடம் விலகாமல் உரைக்க,

"அட ஆண்டவா.... என் பொறுமையை ரொம்ப சோதிக்கறாளே..." வாய்விட்டே புலம்பியவள்,

"அக்கா.... இவ உட்பி உங்க காலேஜில்தான் படிச்சாராம்.... அதான்.... அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியுமான்னு கேக்க வந்தா.... ஏய்.., இதுதானடி மேட்டரு.... நானே கேட்டுட்டேன் போதுமா...?" படபடத்தாள்.

"ஓ.... வாழ்த்துக்கள். எந்த க்ரூப், எந்த பேச்.... இதெல்லாம் தெரிந்தால், சொல்ல ட்ரை பண்றோம்.... மத்தபடி..." மைத்ரேயி இழுத்தாள்.

"அப்படியா...?" வந்தவளுக்கு சுருதி இறங்கியே விட்டது. அவளுக்குமே அவர்கள் சொல்வதில் இருந்த நியாயம் புரிந்ததுதான்..... ஆனாலும்.... எதிர்பார்த்து வந்ததால் சற்று ஏமாற்றமாக உணர்ந்தாள்.

"அட.... முதல்ல உன் ஆளோட பேரைச் சொல்லுடி.... அவங்களுக்கு தெரியுதான்னு பாத்துட்டு பீல் பண்ணிக்கலாம்..." தோழியை உலுக்கினாள்.

"அவர் பெயர்.... வேந்தன்.... உங்களுக்கு ஒரு பேச் முன்னாடின்னு நினைக்கறேன். எனக்கு சரியாத் தெரியலை..." நம்பிக்கையில்லாமல் உரைத்தாள்.

"என்ன...?" "என்ன பேர் சொன்ன...?" மைத்ரேயியும், அனன்யாவும் ஒரே நேரம் கூவினார்கள்.

அங்கே கூடியிருந்த பெண்களில் ஒரு சிலர், அவர்களது கூச்சலைக் கேட்டு இவர்கள் பக்கம் பார்க்க, சட்டென தங்களை மீட்டவர்கள், அமைதியானார்கள்.

ஆனாலும்.... இவர்கள் கூச்சலைக் கேட்ட புதியவள், "எனக்கா.... எதுவும் பிரச்சனையா...?" கவலையானாள்.

கிட்டத்தட்ட அனைத்தும் முடிந்து, அவள் படிப்பு முடிந்தவுடன் திருமணம் என முடிவாகிவிட்ட இந்த நேரத்தில், அவன்தான்

தன் கணவன் என அவள் மனதுக்குள் வரித்து விட்டிருக்க, அவர்களது அலறல் பெரும் பிரளயத்தையே மூட்டியது.

அவளுக்கு அப்படியென்றால்.... அதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்களின் நிலையும் அதை ஒத்தே இருந்தது.

"இல்ல.... அப்படியெல்லாம் எதுவும் இல்லை. எங்க காலேஜில் ரெண்டு மூணு வேந்தன் உண்டு அதான். நீங்க சொல்லுங்க.... உங்க வேந்தன் கம்பியூட்டர் இஞ்சினியரா இல்ல..." மைத்ரேயி வேண்டுமென்றே இழுக்க,

"ஆமா.... அவர் கம்பியூட்டர் இஞ்சினியர் தான். அவருக்கு ரெண்டு தங்கை கூட இருக்காங்க.... பெண்ணெடுத்து.... பெண் கொடுப்பதா இருக்கிறோம். அவருக்கு அப்பா கூட இல்லை..." அவள் அடுக்கிய அனைத்துமே வேந்தனோடு ஒத்துப் போனது.

அனன்யாவின் மனதுக்குள் இருந்து சட்டென ஏதோ ஒரு மிகப்பெரும் பாரம் விலகி ஓடிய உணர்வு. தான் ஏதோ சுதந்திரமடைந்து விட்ட உணர்வு.

கூடவே.., ஒரு மிகப்பெரும் கோபம்.... அது அவன் தன்னை ஏமாற்றி விட்டானே என்பதால் வந்ததல்ல.... மாறாக.... இவ்வளவு தூரம் ஒரு பெண்ணைப் பார்த்து, பேசி முடிவெடுத்த பிறகும், தன்னை சந்தித்து பேசிய அவனது செய்கை.... ஒரு மாதிரி அருவருப்பை கொடுத்தது.

அன்றைக்காவது ஏதோ ஒரு விதத்தில் அவன் பணம் கேட்டதை ஒத்துகொள்ள முடிந்த அவளால்.... இன்று.... அவன் காதலைக் காட்டி பணம் பறிக்க நினைத்ததாகவே இப்பொழுது தோன்றியது. அதை அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

‘எவ்வளவு பெரிய ஈனத்தனம்...’ கோபம் கனன்றது. ‘ஒரு நாள்.... ஒரு பொழுது கூட, அவனைத் தன் காதலனாக எண்ணியிராததை நினைத்து நிம்மதி கொண்டாள்.

அதே நேரம்.... தான் இல்லையென்றால் இறந்துவிடுவேன் எனக் கூறியே தன்னை முட்டாளாக ஆக்கிவிட்டானே...' நினைத்தாலே நெஞ்சு பொறுக்கவில்லை.

இப்பொழுதே அனைத்து உண்மையையும் இவளிடம் உரைத்து விடுவோமா? எண்ணியவள் அந்த நினைப்பை ஒத்தி வைத்தாள். அவ்வளவு நேரமாக, தோழியின் முகத்திலும், தங்கையின் தோழியின் பேச்சிலும் கவனமாக இருந்தவள், அனன்யா ஒரு முடிவிற்கு வந்ததை உணர்ந்தவளாக, அவள் முகம் ஏறிட்டாள்.

தன்னிடம் பேசிகொண்டிருந்த மைத்ரேயி, மற்றவளின் முகம் பார்க்கவே, தானும் அவள் முகம் பார்த்தாள்.

"அக்கா.... எதுவா இருந்தாலும் பட்டுன்னு சொல்லிடுங்க.... நீங்க வைக்கிற சஸ்பென்சில் என் நெஞ்சே நின்னுடும் போல இருக்க, இவ நெஞ்சு வெடிச்சே போய்டும் போல..." நளினிதான் அவளை உலுக்கினாள்.

"ஹாங்..." தன் நினைவில் இருந்து கலைந்தவள், "ஓ.... ம்.... எங்களுக்கு நல்லா தெரியுமே.... அந்த வேந்தன்.... யார் வம்புக்கும் போனதில்லை, இருக்குற இடமே தெரியாது. கும்பல்ல கூட அமைதியா இருப்பான்.... நல்ல படிப்பான்.... கேம்பஸ்ல கூட செலெக்ட் ஆனான்னு நினைக்கறேன்..." அனன்யா சொல்லிக்கொண்டே போக, மற்றவள் விழி விரித்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அப்போ.... உங்களுக்கு அவரை நல்லா தெரியுமா...?" அவள் கேட்கவே,

"நல்லா தெரியுமான்னா..... அப்படியெல்லாம் இல்லை.... கேண்டீன் போறப்போ வரப்போ.... காத்து வாக்கில் தெரிய வர விஷயம் தான். அது மட்டும் இல்லை.... அன்னைக்கு வேலை கிடைச்சப்போ அவனோட ப்ரண்ட்ஸ்க்கு எல்லாம் கேண்டீன்ல ட்ரீட் கொடுத்தான்.... அதை வைத்துதான் சொல்கிறேன்.... அப்படிதானேடி மையூ..." தோழியையும் உடன் அழைத்தாள்.

இவ்வளவு நேரமாக அவள் அடுக்கியவற்றை வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தவள், அவள் தன்னை அழைக்கவே.... 'அப்படியே பக்கா சுயநலவாதின்னும் சொல்லியிருக்கலாம்...' மனதுக்குள் புலம்பியவள், வேகமாக தலை அசைத்து ஆமோதித்தாள்.

வேந்தனைப் பொறுத்த வரைக்கும், அனன்யா சொன்னவை அனைத்தும் உண்மை, கூடவே.... சற்று சுயநல வாதி என்பதும் அப்பட்டமான உண்மையே. அதை இப்பொழுது சொல்வதால் யாருக்கும் எந்த பயனும் இருக்கப் போவதாகத் தெரியவில்லை.

மைத்ரேயியைப் பொறுத்த வரைக்கும், அவன் கண்களில் ஒரு துளி கூட அனன்யாவின்மேல் கொண்ட காதலை அவள் கண்டதில்லை. அதில் ஒளிந்திருக்கும் கயமை மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது. அதே நேரம்.... அவன் கல்லூரியில் மற்ற பெண்களிடம் பார்வையால் கூட எந்த வம்புக்கும் போனதில்லை என்பதையும் அவள் ஒத்துக்கொள்ளவே வேண்டி இருந்தது.

தனக்கு அவனைப் பிடிக்காததுபோல்.... அவனுக்கும் தன்னை பிடிக்காது என்பதில் அவளுக்கு மாற்று கருத்து எதுவும் இருந்ததில்லை. அதற்காக.... அவளை டீஸ் செய்வதோ.... மிரட்டுவதோ.... கோபம் காட்டுவதோ என எதையும் அவன் செய்ததும் கிடையாது என்பதையும் அவள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டி இருந்தது.

சில சூழல்கள் நல்லவர்களையும் கெட்டவர்களாக நடக்கத் தூண்டிவிடுமோ.... எண்ணியவள்.... அவனிடம் இருந்து தன் தோழி தப்ப வேண்டுமென்று எண்ணினாள்..... அது நடந்துவிட்டதே.... அது மட்டுமல்லாமல், பெண்ணெடுத்து பெண் கொடுப்பது என்றால்....

அவனது குடுமியும் இவர்கள் வீட்டில் சிக்கும் என்பதால் பெரிதாக பிரச்சனை வர வாய்ப்பில்லை என்று கருதியே....

தோழி இவ்வாறு முடிவெடுத்திருக்கிறாள் என்பதை சட்டென யூகித்தவள், வேகமாக அதை ஆமோதித்தாள்.

"அட ஆமாங்க.... பொண்ணுங்க கிட்டே பேசி கூட நாங்க பார்த்ததில்லை. நல்ல டைப் தான்.... அதுக்கு மேலே..." தானும் பேச்சில் கலந்து, தோளைக் குலுக்கினாள்.

"இது போதுங்க..." சந்தோஷமாக உரைத்தவள், மைத்ரேயிக்கு திருமண வாழ்த்தை தெரிவித்துவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

அவள் செல்லவே.... "அனு.... அவன் உன்கிட்டே இதைப் பத்தி சொன்னான்...?" கேள்வியாக இழுத்தாள். ஏற்கனவே அனன்யாவின் அதிர்ந்த முகம் அவளுக்குத் தேவையான பதிலை கூறியிருந்தாலும், அவள் வாயால் அதை தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

"இல்லடி..." பல்லைக் கடித்தாள்.

"ஏய்.... அதுக்கு ஏண்டி நீ கடுப்பாவுற...? விட்டது சனியன்னு இருக்க வேண்டியது தானே..." புரியாமல் கேட்டாள்.

"அதுக்கு அவன் அப்படி இருந்திருக்கணும்..." அவளுக்கு ஆத்திரம் குறையவே இல்லை.

"ஏய்.... நீயேண்டி புதுசா பூதத்தை கிளப்புற...?" கவலையானாள்.

"புது பூதமில்லை.... பழைய பிசாசுதான்..." எதையாவது செய்யும் வேகம் அவளிடம்.

"புரியிற மாதிரி சொல்லுடி.... கல்யாணப் பொண்ணை இவ்வளவு எல்லாம் யோசிக்க வைக்கக் கூடாது..." சற்று இலகுவானாள்.

"ம்.... அதுவும் சரிதான். ட்ரீம் அடிக்கிற நேரத்தில் யோசிக்கச் சொன்னால்.." இழுத்தவள், மெல்லியதாக சிரிக்க,

மைத்ரேயி, அவளை முறைக்க முயன்று தோற்றாள்.

"ரெண்டு வாரத்துக்கு முன்னாடி என்னை போன் பண்ணி வரச்சொல்லி, அவன் தங்கச்சிக்கு கல்யாணம்.... அதுக்கு.... அவ அண்ணி நிலையில் இருந்து நான்தான் எல்லாம் செய்யணும்னு சொன்னான். அது மட்டும் இல்லை.... பத்து லட்சம் பணம் வேற கேட்டான்..." அவள் பல்லைக் கடிக்க,

"என்னடி சொல்ற...? பணம் கேட்டானா...? ஓ.... அப்போ பயபுள்ள உன்னை சுத்துனதுக்கு காரணம் பணம் தானா...? நானும் நினைத்தேன்.... என்னடா.... என்னத்துக்கு நீதான் வேணும்னு தொங்கறான்னு.... இப்போதானே புரியது. சரி.... அதுக்கு நீ என்ன சொன்ன...?".

"யோசிச்சு சொல்றேன்னு சொன்னேன். அந்த நேரம் அவன் பணம் கேட்டது பெருசா தெரியலை.... ஆனா இப்போ.... இதை சும்மா விடக் கூடாது. உன் தங்கச்சிகிட்டே சொல்லி.... எனக்கு அவளோட டீட்டெயில் எல்லாம் வாங்கிக் கொடு.... எல்லாம் நான் பாத்துக்கறேன்...".

"கண்டிப்பா செய்யறேன்.... உனக்கு செய்யாமல் யாருக்கு செய்யப் போறேன்...".

"சாரிடி.... கல்யாணப்பொண்ணு.... உன்னைபோய் வேலை வாங்குறது கஷ்டமாதான் இருக்கு..." அவள் தயங்க,

"ஏய்.... லூசு மாதிரி உளறாதே. இந்த பிரச்சனை வேரோட பிடுங்கி எறிந்தால்தான் எனக்கும் நிம்மதி. பாத்துடி.... தனியா எதையாவது செஞ்சு சிக்கல்ல மாட்டிக்காதே.... அண்ணாகிட்டே சொல்லு..." அவள் உரைக்க,

"அவர் இல்லாமல் இனிமேல் நான் எதையும் செய்யிறதா இல்லை. ஆனாலும்.... இதை நானும் கொஞ்சம் கவனிக்க வேண்டி இருக்கு...." அவள் முகத்தில் இருந்த தீவிரம், மைத்ரேயியையே கலங்கச் செய்தது மட்டும் உண்மை.

33

காருக்குள், தன் அருகில்.... இறுக்கமாக அமர்ந்திருந்த அனன்யாவைப் பார்த்த நகுல், அவள் பக்கம் சற்று நகர்ந்து, அவள் கரத்தை இறுக பற்றிக் கொண்டான்.

தானும் அவன் இடக்கரத்தை நன்றாக கோர்த்தவள், அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். டிரைவர் இருந்ததால், அவர்களால் எதையும் பேசிக்கொள்ள முடியவில்லை.

முந்தினநாள் மைத்ரேயியின் திருமண நலுங்கு சம்ப்ரதாயங்கள், வரவேற்பு என முடித்து, வீட்டுக்கு வரவே நள்ளிரவைத் தாண்டி விட்டிருக்க, குளித்துவிட்டு களைப்பில் உறங்கிவிடத்தான் முடிந்தது.

இன்று காலையில் கூட, திருமணத்துக்கு கிளம்பும் அவசரத்தில், தான் வேந்தனைப் பற்றி கேள்விப்பட்ட விஷயத்தை அவனிடம் சொல்ல, அவள் குரலில் இருந்த பாவனை அவனை சற்று திடுக்கிடவே செய்தது.

"ஏய்.... என்னம்மா.... அவன் ஏதோ தெரியாமல் செய்திருப்பான்.... இல்லன்னா.... அவனுக்கு என்ன சூழலோ..." அவளை சமாதானம் செய்ய அவன் உரைக்க,

"நீங்க என்ன அவனுக்கு சப்போட் பண்ணுறீங்க. அவனுக்கு இருக்கு..." நகுலிடம் முறுக்கிக் கொண்டவள், அதன் பிறகு அவனிடம் அதிகம் பேசவே இல்லை.

நகுலுக்கு, ராக்கேஷ் மூலம் தெரிய வந்த விஷயங்கள், வேந்தனது சூழ்நிலையை, நிலையை, வாழ்க்கையை உணர்த்தியதாலோ என்னவோ, அவன்மேல் கோபம் பெரிதாக எழவில்லை.

ஆனாலும்.... காதல் என்ற விஷயத்தைச் சொல்லி, தற்கொலை என்ற ஆயுதத்தை பயன்படுத்தி, தன் அன்னத்தை வருந்தச் செய்துவிட்டானே என்ற கோபம்

மட்டுமே அவனிடம் இருந்தது. அதையும் மீறி.... ஏதாவது முட்டாள்த்தனமாகச் செய்து, தங்கள் திருமணத்தை நிறுத்தாததை எண்ணி மகிழாமல் இருக்க முடியவில்லை.

இந்த எண்ணங்களே.... அவனுக்கு சாதகமாக அவளிடம் பேசத் தூண்டியது. எப்பொழுது அவளுக்கு பிடிக்கவில்லை என்பதை உணர்ந்தானோ.... அப்பொழுதே அதை விட்டுவிட்டான். தன்னால் முடிந்தால் ஏதாவது செய்ய வேண்டும் என முடிவெடுத்தான்.

காலையில் திருமணம் முடிந்தவுடன், காலை உணவை உண்ட உடனே, மைத்ரேயியிடம் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டாள். இரண்டுநாள் இருந்துவிட்டுச் போகச் சொன்ன, பெற்றவரின் பேச்சை கூட அவள் கேட்கவில்லை.

அவள் மனதுக்குள் என்ன இருக்கிறது என தெரியாமல் குழம்பிப் போனான்.

அவளுக்கோ.... மனதுக்குள் ஒருவித எரிச்சல், அது எதனால் என்பதை அவளால் பிரித்தறியவே முடியவில்லை. ஒரு பெண்ணுக்கு நம்பிக்கை அளித்த வேந்தனால்.... எப்படி தன்னிடம் மீண்டும் உரையாட முடிந்தது என்பதே பெரும் வினாவாக எழுந்து அவளை அலைக்கழித்தது.

இப்பொழுது மட்டும் அவனைப் பற்றிய உண்மை தனக்கு தெரியாமல் போயிருந்தால்...? நிச்சயம் அவனுக்கு பணம் கொடுத்திருப்பாளா என்பதை அவளால் உறுதியாக எண்ணமுடியவில்லை என்றாலும், அது தன் வாழ்க்கைக்கு மிகப்பெரும் உறுத்தலாக இருந்திருக்கும் என்பதில் அவளுக்கு எந்த ஐயமும் இல்லை.

இந்த மண் குதிரைக்காக, இவ்வளவு நாள் என் வாழ்க்கையை பணையம் வைத்திருந்தேனே...' அவளால் தன் செய்கையையே ஒத்துகொள்ள முடியவில்லை.

கெட்டதிலும் ஒரு நல்ல விஷயமாக, எந்த சூழ்நிலையிலும், எந்த இக்கட்டிலும் ஒரு முறை கூட நகுலை எதற்காகவும்,

யாருக்காகவும் விட்டுகொடுத்ததில்லை என்னும் நினைப்பு பெரிய ஆறுதலை அளிக்க, அவன் கரத்தை மேலும் கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

"என்னம்மா.... மூட்ஆஃபா இருக்கறியா? ரிலாக்ஸ்..." தன் தோள் சாய்ந்தவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

"ம்ச்.... மூட்ஆஃப் எல்லாம் இல்லை.... என்னவோ எரிச்சலா இருக்கு. எதுவும் பிடிக்கலை, எங்கேயும் இருக்க முடியலை.... உடனே ஏதாவது செஞ்சே ஆகணும்னு வெறியா இருக்கு..." தன் மனதை அவனிடம் மறைக்க முடியாமல் உரைத்தவளின் குரல், உயர்ந்துகொண்டே செல்ல, டிரைவர் கூட சற்று திரும்பிப் பார்த்தான்.

அதை உணர்ந்தவன்.... "கண்ணப்பா.... நல்ல ஹோட்டலா பாத்து வண்டியை நிறுத்து...." அவனிடம் உரைத்தவன், "ஓகே.... ஓகே.... நாம பேசலாம்..." மனைவியிடம் குழைந்தான்.

அவளோ.... டிரைவர் இருப்பதைப் பற்றி கவலை கொள்ளாமல், அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டாள்.

வேந்தனைப் பற்றிய உண்மை தெரிந்தால், தெளிவாகிவிடுவாள் என்று தான் போட்ட கணக்கு தப்பாமல் நடந்ததில் அவனுக்கு சந்தோஷம்தான். ஆனால்.... மனைவி மனதளவில் படும் அவஸ்தையை, எரிச்சலை என்ன செய்து தணிப்பது என அவனுக்குப் புரியில்லை.

வீட்டுக்குப் போய் பார்த்துக் கொள்ளலாம் என்றால்.... அதுவரைக்கும் அவள் தாங்குவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு குறைந்துகொண்டே வந்தது.

அவள் பேச்சைக் கேட்டு, உடனடியாக கிளம்பியிருக்கக் கூடாதோ என மிகுந்த வருத்தப்பட்டான். அங்கே இருந்தாலுமே.... தாங்கள் பேசுவது எந்த விதத்திலாவது

அவளது பெற்றவர்களுக்கு எட்டிவிடக் கூடாதே என்ற கவலையில்தான், அவள் உரைக்கவே உடனே கிளம்பிவிட்டாள்.

அதைவிட, அவள் ஒன்று சொல்லி, அதை மறுத்துப் பேசும் எண்ணமே அவனுக்கு இருந்ததில்லையே....

அடுத்த கால்மணி நேரத்தில்.... உயர்தர சைவ ஹோட்டல் பார்வைக்கு கிடைக்க, கண்ணப்பா, காரை விட்டு இறங்கிச் சென்றுவிட, அவர்களுக்கு கதவைத் திறந்துவிட வந்த செக்கியூரிட்டியையும் அவனே தடுத்துவிட, ஒருவித விடுதலை உணர்வோடு மனைவியை ஏறிட்டான்.

தன் கழுத்தில் புதைந்திருந்தவளை, மனமே இல்லாமல் விலக்கியவன், "அன்னம், இங்கே பார்.... இப்போ என்ன நடந்ததுன்னு இவ்வளவு டென்ஷனா இருக்க...?" அவள் கன்னம் தாங்கினான்.

"அதெல்லாம் சொல்லத் தெரியலை.... எரிச்சலா இருக்கு அவ்வளவுதான்..." புருவம் சுருக்கி, கண்கள் சுருக்கி, அவன் கைகள்மேல் தன் கையை வைத்தவள், எரிச்சல் குறையாமலே உரைத்தாள்.

"அதுதான் ஏன்...?" அவள் கண்களுக்குள் ஊடுருவி அவன் கேட்க, அவளுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

"என்ன.... அவன் உன்னை ஏமாத்திட்டானேன்னு கோபமா இருக்கா...?" அவன் கேட்க, வெடுக்கென அவன் கரத்தை தள்ளி விட்டவள்,

"அவன் என்ன என்னை ஏமாத்துறது...? ராஸ்கல்.... தெரிஞ்சே நான் ஏமாந்து போய்ட்டனேன்னு என்மேலேயே எனக்கு கோபமா வருது. துவக்கம் முதலே.... ஏதோ உள்நோக்கம் அவன்கிட்டே இருக்குன்னு தெரிந்தும், சாவு என்ற ஒரு சொல்லில்.... முட்டாள் மாதிரி நடந்திருக்கேனேன்னு நினைத்தால்.... எனக்கே என்னை பிடிக்கலை.

"இப்போ கூட.... அவனுக்கு கல்யாணம்னு தெரிஞ்சப்போ கோபம் வரலை, ஆத்திரம் வரலை, அழுகை வரலை.... எதிலிருந்தோ தப்பிச்சிட்டோம்னு ஒரு நிம்மதிதான் வந்தது.

"அதையும் மீறி.... அவன் மனசுக்குள் என்னைப் பற்றி எப்படி நினைத்திருந்தால், அப்படியெல்லாம் பேசியிருப்பான்? கடைசியா பாத்தப்போ கூட.... எவ்வளவு தைரியமா பணம் கேட்டான்.... அப்போ கூட, தங்கச்சி கல்யாணத்துக்கு பணம் இல்ல போலன்னுதான் நினைத்தேனே தவிர.... இப்படி...

"ச்சீ.... அவனெல்லாம் ஒரு ஆம்பளையா...? இவனுக்கும், உடம்பை வித்து பிழைப்பு நடத்தும் பொண்ணுக்கும் என்ன வித்தியாசம்.... அதை நினைத்தாலே.... இப்படி ஒருத்தன்கிட்டே.... சாதாரணமா பேசியிருக்கோம்னு நினைத்தாலே பத்திகிட்டு வருது.

"அவனையெல்லாம் அப்படியே நிக்க வச்சு.... கன்னம் கன்னமா அறையணும்னு ஆத்திரமே வருது..." தான் பேசுவது தாங்க முடியாமல், வேகமாக மூச்சு விட்டாள்.

அதைப் பார்த்தவன்.... "அன்னம்.... ரொம்ப எமோஷனல் ஆகாதே.... இரு.., இங்கே பஃப் இருக்குமே..." அவன் காருக்குள் தேட, அவன் கரம் பிடித்து தடுத்தாள்.

அவளுக்காகவே.... காருக்குள் ஒன்று, அறையில் ஒன்று, அவள் கைப்பையில் ஒன்று, தன் லேப்டாப் பேகில் ஒன்று என அவன் பஃப் வைத்துக்கொள்ளாத இடங்களே கிடையாது. அவற்றில் தெரியும் அவன் அக்கறையில் எப்பொழுதும்போல், இப்பொழுதும் சுகமாய் நனைந்தாள்.

"என்னை சீக்காளியாவே முடிவு பண்ணிட்டீங்களா...?" அவள் போலியாக கோபம் கொள்ள,

"என்ன அன்னம்.... இப்படி பேசுற...?" அவளை அருகே இழுத்துக் கொண்டான்.

"உங்களைக் கூட.... ரொம்ப தவிக்க விட்டுட்டேன் இல்ல.... உங்கமேல்தான் ஆசை வைத்திருக்கேன்னு எனக்கு தெளிவா தெரிஞ்சப்போ கூட, கேவலம்.... அவனுக்கு கொடுத்த வாக்குன்னு தொங்கிட்டு இருந்தேன் பாருங்க. அதையெல்லாம் நினைத்தால்....

"ரியல்லி சாரி நகுல்..." அவன் நெஞ்சில் விழுந்து கதற, "அன்னம்..." அவளை சமாதானம் செய்ய முடியாமல் தவித்தான்.

"உங்களுக்கு என்மேல் கோபமே வரலையா நகுல்.... எப்படி...? இப்படி ஒரு பாசத்தை இழக்க என்னால் முடியவே முடியாது. அத்தை, மாமா, வருணா.... இவங்களுக்கெல்லாம் நான் என்ன செய்தேன்.... அவங்க பாசத்தை, அக்கறையை இழக்க முடியாது.

"எனக்கு எல்லோரும் வேணும்.... நீங்க என்னை.... இந்த லூசுப் பொண்ணை வெறுக்கலை தானே. நான் மனசால் கூட ஒரு நாளும் அவனை நினைத்தது கிடையாது.... நீங்க நம்பறீங்க தானே.... என்னை வெறுத்துட மாட்டீங்களே..." அவள் குழம்பிய மனம், கண்டதையும் நினைத்து கலங்கியது.

"இங்கே பார் அன்னம்.... நீ என் உயிர்.... என் உயிரை நான் வெறுக்கறதா? என்னால் அது முடியுமா? இனிமேல் இப்படி ஒரு பேச்சுக்கு கூட நீ இப்படி கேக்கக் கூடாது.., புரியுதா?" அவளை தன் நெஞ்சோடு வைத்து அழுத்திக் கொண்டான்.

"ஏய்.... அதான் எல்லா பிரச்சனையும் முடிஞ்சுடுச்சே.... இன்னும் இப்படியே அழுதுட்டு இருந்தால்...? உன் நகுல் ரொம்ப பாவம்..." அவள் காதுக்குள் மென்மையாக முனகியவனது இதழ்கள், அவள் காதுமடலை மென்மையாக வருடிச் சென்றது.

"அதெல்லாம் ஒரு பாவமும் இல்லை..." அவன் செய்கையில் சிலிர்த்து, குரல் குழைய உரைத்தவள், அவன் திறந்திருந்த

டிஷர்ட் பட்டன் வழியாகத் தெரிந்த அவன் உரமேறிய நெஞ்சில், தன் இதழை அழுந்த புதைத்துக் கொண்டாள்.

அவள் செய்கையில் சற்று கிளர்ந்தவன், இன்னும் அழுத்தமாக அவளை புதைத்தவன், சட்டென அவளை நிமிர்த்தி, அவள் இதழோடு தன் இதழைக் கலந்தான்.

"ஸ்.... ம்..." அவன் பற்கள் பதிய கடிக்க, வலித்தாலும், சுகமாய் தாங்கிக் கொண்டவள், அவன் வேகத்தில் சற்று மிரண்டுதான் போனாள். அவன் தன் இதழ்களுக்குள் நடத்தும் ஆராய்ச்சியில், தேகம் மொத்தமும் குழைய, அவன்மேல் மொத்தமாய் சரிந்தே விட்டாள்.

அவள் கன்னம் தாங்கிய கரங்கள், அவள் மேனியில் இடம் மாற, அவனுக்குள் கரைந்துவிடத் துடித்தாலும், இருக்கும் இடமும், சூழலும் நினைவிற்கு வர, "ந..கு..ல்.... ம்...ஹு...ம்..." அவன் இதழ்களுக்குள் சிக்கியிருந்த தன் இதழ்களை அசைத்து, அவளால் ஒவ்வொரு எழுத்தையும் முனகவே முடிந்தது.

அவசரமாய் அவன் கரங்களுக்கு அணைபோட, அவள் முயற்சி உணர்ந்து, தானே அவளை விட்டு விலகியவன், வேகமாய் காரில் இருந்தும் இறங்கி நின்றான்.

எப்பொழுதும்போல்.... 'இவனால் எப்படி உடனே இயல்புக்கு வர முடிகிறது' என்ற கேள்வியோடு, முயன்று தன்னை மீட்டுக் கொண்டாள்.

அவள் காரில் இருந்து இறங்க, "ரியல்லி ஐ கான்ட்..." ஆழமான குரலில் அவன் உரைக்க, அந்த நேரம்.... அவனுக்காக எதையாவது செய்துவிட மாட்டோமா.... என்ற வேகம் அவளிடம் எழுந்தது மட்டும் உண்மை.

தன் சம்மதம் தெரிந்த பிறகும், விலகியிருக்கும் அவன்மேல் செல்லக் கோபம் எழ, "உங்களுக்கு தைரியம் பத்தாது.... அதுக்கு நான் பழியா...?" கண்களை வேறெங்கோ திருப்பி அவள் வினவ, "ஏய்..." அவள் பேச்சில் கிளர்ந்தவன்,

"வீட்டுக்கு வா.... பேசுற வாயை கடிச்சு வைக்கறேன்..." அவன் பேச்சைக் கேட்டவள், கிளுக்கிச் சிரித்தாள்.

அதை ரசனையாகப் பார்த்தவன், அவள் மனநிலையை மேலும் மாற்ற எண்ணி, "அன்னம்.... உனக்கு வீட்டுக்குப் போன உடனே ஒரு சர்ப்பிரைஸ் இருக்கு..." அவன் உரைக்க,

"சர்ப்பிரைசா.... என்னால் சஸ்பென்ஸ் எல்லாம் தாங்க முடியாது, இப்போவே சொல்லுங்களேன்..." அவன் கரத்தை பற்றிக்கொண்டு கெஞ்சினாள்.

"இதை மட்டுமே இப்போதைக்கு யோசி.... வா போகலாம்..." எந்த நேரத்திலும் தன் மனதை எண்ணிப்பார்க்கும் கணவனை எண்ணி பூரித்தவளாக அவன் பின்னால் சென்றாள்.

உணவை உண்டு முடித்தவர்கள், சென்னைக்கு கிளம்ப, தன் முகம் பார்ப்பதும், மீண்டும் சாலையில் கவனம் திருப்புவதுமாக இருந்த மனைவியை, "கொஞ்ச நேரம் தூங்கு..." அவளை மடி சாய்க்க, சந்தோஷமாக படுத்துக் கொண்டாள்.

இரவு உணவுக்கு வீட்டுக்கு வந்தவர்களைப் பார்த்த பார்வதி, "வாங்க.... நகுல்.... இன்னும் ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு வந்திருக்கலாமே.... உடனே அவளை அழைச்சுட்டு வந்துட்ட.... அவளுக்கும் அங்கே இருக்கணும்னு ஆசை இருக்காதா...?" மென்மையாக கடிந்து கொண்டார்.

அனன்யா என்ன சொல்வது எனத் தெரியாமல் நிற்க, "அம்மா.... புது யூனிட்டை கொஞ்சம் கவனிக்கணும்மா.... இன்னும் ஒரு மாசம் போனால், லேபர்ஸ் எல்லாரும் கொஞ்சம் ஸ்டேபிள் ஆயிடுவாங்க.... பிறகு தாராளமா கூட்டி போறேன்..." தாயிடம் உரைக்க, தன்னை காட்டிகொடுக்காமல் தாங்கும் அவன் மேல் அனன்யாவுக்கு காதல் கூடியது.

அதையே அவள் பார்வை வெளிப்படுத்த, தானும் அவளைப் பார்த்தவன், இமை சிமிட்டி புன்னகைத்தான். அவர்களது பார்வைப் பரிமாற்றத்தைப் பார்த்த பார்வதி, "சரி.... சரி.... அதெல்லாம் பாத்துக்கலாம். அம்மாடி.... முதல்ல போய் ட்ரெஸ் மாத்திட்டு வாங்க.... சாப்பிடலாம்..." அவர்களை அனுப்பினார்.

அறைக்குள் நுழைந்தவன்.... அதே வேகத்தில் அவளை கட்டிக்கொள்ள, "ஐ லவ் யூ நகுல்..." ஆவேசமாக அவனை அணைத்து முத்தமிட்டாள்.

அவள் செய்கையில் தன்னை தொலைத்தவன், "அன்னம்..." அவளை இறுக்கினான்.

"என்னை ஏன் இப்படி தாங்கறீங்க...? அப்படி உங்களுக்கு நான் என்ன செய்தேன்...?" அவன் அணைப்புக்குள் திணறியவாறு அவள் கேட்க,

"நீ என் மனைவி.... உன்னை ரெண்டு..." துவங்கியவன், "இல்ல.... அதை பிறகு சொல்றேன்.... முதல்ல ப்ரெஷ் ஆகு.." அவளை விட மனமற்றவனாக, அவள் கழுத்து வளைவில் வாசம் பிடித்தவனாக உரைத்தான்.

அவனுக்கு வாகாக இழைந்தவள், "நகுல்.... என்னவோ சொல்ல வந்தீங்க..." கேட்டவள், அவன் மறுப்பாக தலை அசைக்கவே, "சரி அப்போ.... சர்பிரைசாவது என்னன்னு சொல்லுங்க...?" ஆர்வம் தாங்காமல் கேட்டாள்.

"எல்லாம் பிறகுதான்..." அவள் இதழில் அழுத்தமாக முத்தமிட்டவன், அவளை குளியலறையை நோக்கி தள்ளினான்.

"ம்..." சிணுங்கலாக உரைத்தவள், "இந்த உதட்டைக் எச்சபண்றதைத் தவிர உங்களுக்கு வேற எதுவுமே தெரியாதா...?" கேலியாகச் சொன்னவள், அவன் அவளை விரட்டத் துவங்கவே, வேகமாக குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

"வெளியே வா.... உன்னை வச்சுக்கறேன்..." கதவை ஓங்கி தட்டியவன், அவளுக்கு தான் கொடுக்க வேண்டிய சர்பிரைசுக்காக அங்கிருந்து விலகிச் சென்றான்.

வெந்நீரில் உடல் குளித்து முடித்தவள், அதன் பிறகுதான், தான் மாற்றுடை எதையும் எடுத்து வராததை உணர்ந்தாள். எப்பொழுதும் அங்கே இருக்கும் நீள டவ்வலால் தன்னை சுற்றிக் கொண்டவள், தயக்கமாக கதவைத் திறந்து பார்த்தாள்.

அவன் அறைக்குள், கட்டில் அருகில் நிற்பதைப் பார்த்தவள், அவன் தன்னை நெருங்குவதற்குள், அருகில் இருக்கும் ட்ரசிங் ரூமுக்குள் புகுந்துகொள்ள வேண்டி, வெளியேற.... எதேச்சையாக கட்டிலைத் திரும்பிப் பார்த்த அனன்யாவின் கால்கள் இரண்டும் ஆணியடித்தாற்போல் அங்கேயே நின்றுவிட்டன.

34

அவளை அந்த நேரம்.... அப்படி ஒரு கோலத்தில் எதிர்பாராத நகுலும், இமைக்க மறந்து அவளைத்தான் வெறித்தான். அவன் பார்வையை கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல், தான் இருக்கும் கோலத்தையும் மறந்து, அவனை நெருங்கினாள்.

அவள் இளமையின் செழுமைக்கு கீழ், முழங்கால் வரைக்கும் மட்டுமே நீண்டிருந்த அவள் உடையைப் பார்த்தவன், அவஸ்தையாக எச்சில் விழுங்கிக் கொண்டான். அவள் கழுத்தைச் சுற்றிலும், துளித்துளியாக படர்ந்திருந்த நீர்த்திவலைகள் ஒன்றுகூடி, அவள் நெஞ்சுக்குழிக்குள் இறங்க, கொஞ்சம் கூட லட்ஜையின்றி அவன் பார்வை அதனோடு பயணித்தது.

நீர்த்துளி சென்று மறைய, அவனுக்குத்தான் பார்வையை திருப்பிக் கொள்ளவே முடியவில்லை. அவளிடம், அந்த ஆடைக்குள் மறைந்து கிடக்கும் புதையல்களை தெரிந்து, அறிந்துகொள்ளும் வேகம்.... கட்டுப்படுத்தவே மிகுந்த சிரமப்பட்டான்.

‘அன்னம்...’, ஏசியின் குளுமையை மீறி, வியர்வை வழியும் உணர்வு. சட்டென நா வரள.... அவள் மேனியில் மிச்சமிருக்கும் நீர்த்துளிகளை தன் இதழ்களுக்குள் சேகரிக்க, அவன் தேகம் பரபரத்தது.

எவ்வளவு நேரமாக அவளை வெறித்தான் என்பது தெரியவில்லை. அவள் அடியெடுத்து தன்னை நெருங்க, அவள் செழுமையில் இருந்து பிரிய மறுத்த விழிகளை கீழே இறக்க, இடை சிறுத்து, முழங்காலுக்கு கீழே.... அடியெடுத்து வைக்கும் அவள் பாதங்களைப் பார்த்தவனுக்கு, மூச்சடைக்கும் உணர்வு.

‘ஆண்டவா...’ தன்னை மீட்டுகொள்ளவே முடியாமல் அவன் போராட,

"நகுல்.... இது...? இதெப்படி...? அப்படின்னா...?" சந்தோஷத்தில், உணர்ச்சி மேலிட, அவள் குரலும், தேகமும் ஒருங்கே நடுங்கியது.

அவள் குரலில் கலைந்தவன், காய்ச்சல் கண்டவன்போல், இமைக்க கூட மறந்து, பெரும் அவஸ்தையாக அவளை ஏறிட்டான்.

அப்பொழுதுதான் அவள் முகத்தில் இருந்த பரிதவிப்பை, ஆச்சரியத்தை, நம்ப முடியாத தன்மையை நடுக்கத்தை என அனைத்தையும் கண்டான்.

அவளோ.... தன் உணர்வுகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல், கட்டிலில் அமர்ந்தவள், நடுங்கும் கரத்தால், கட்டில்மேல் இருந்த அந்த மஞ்சள் வர்ண ஷாலை கையில் எடுத்தாள்.

"இது.... இது என்னோட ஷால்.... உங்ககிட்டே.... அப்படின்னா.... நீங்க.., அது யார்ன்னு கண்டு புடிச்சுட்டீங்களா? நிஜமாவா...?" கண்களில் நீர் நிறைய வினவியவள்.... அவன் தலை ஆமென அசையவே, படாரென எழுந்து அவனை நெருங்கினாள்.

‘ம்...’, மீண்டும் மௌனமாக அவன் தலை அசைக்க,

"அவ...ன்.., அவன்.... நல்லா இருக்கான் தானே.... அவனுக்கு..." எதுவும் எதிராக சொல்லிவிடாதே என அவள் குரல் கெஞ்ச, விழிகளோ ஏனென்றே தெரியாமல் நீரை வடித்தது.

"ச்சு.... இப்போ எதுக்கு அழற...?" அவளை கடிந்து கொண்டவன், அவள் விழி நீரை துடைத்தான்.

"இது.... அழுகை கிடையாது.... இது.... ஒரு மாதிரி.... சந்தோஷத்தில்..." அவன் கரத்தை பற்றிக் கொண்டவள், "சொல்லுங்க..." அவனை உலுக்கினாள்.

"உனக்கு அவனை பாக்கணுமா அன்னம்...?" கண்கள் மின்ன அவன் கேட்க,

"ம்ச்.... அப்படியெல்லாம் இல்லை.... ஒரு உயிரை காப்பாற்றி விட்டோமா என்பதை தெரிஞ்சுக்க ஒரு ஆசை.... அதில் ஒரு திருப்தி.... எங்க அண்ணா சொர்க்கத்தில் இருந்து சந்தோஷப்படுவான் என்ற நம்பிக்கை.... ப்ளீஸ் சொல்லுங்க..." அவன் தோளை உலுக்கினாள்.

"அவனா.... அவன் ரொம்ப சந்தோஷமா இருக்கான். அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சு.... இப்போ கூட, அவனோட பொண்டாட்டி அவனைப் போட்டு உலுக்கிட்டு இருக்கா. அவனும் அவன் பொண்டாட்டியை கட்டிக்கிட்டு இருக்கான்..." உரைத்தவன், அவள் இடையை இறுக்க,

"அதெப்படி.... இப்போ நடக்குறது உங்களுக்கு...." வேகமாக கேட்டுக் கொண்டிருந்தவள், சட்டென மூளைக்குள் மின்னலடிக்க., பட்டென அவன் பிடியில் இருந்து விலகி நின்றவள்....

"அ.... நீ.... ஆ..." 'அப்படியென்றால்.... நீங்களா அது...?' கேட்க வந்தவளுக்கு, வார்த்தைகள் தொண்டைக்குழிக்குள் சிக்கிக் கொண்டு சண்டித்தனம் செய்ய, நம்ப முடியாமல், அப்பட்டமான அதிர்ச்சியை முகத்தில் தேக்கி, அவனை வெறித்தாள்.

"டீ நகர்.... ஆக்சிடண்ட்.... கூடவே மைத்ரேயி.... நீ ஓடி வந்தது.... இந்த ஷாலை கழட்டி எனக்கு தலையில் கட்டு போட்டது.... என் செல்போனை பாக்கெட்டில் இருந்து எடுத்து, நவீனுக்கு போன் செய்தது..." அவன் சொல்லிக்கொண்டே போக, பாய்ந்து வந்து அவனை அணைத்திருந்தாள்.

"நகுல்.... நகுல்.... நீங்க..." அவள் திணற, தான் எப்படி உணர்கிறோம் என்றே இவளுக்குத் தெரியலை. ஆனால்.... மனதுக்குள் அப்படி ஒரு நிம்மதி, சந்தோசம்.... நீண்டநாள் பிரிந்த தாயைப் பார்க்கையில், குழந்தை தன் தாயை

அடித்து, கடித்து, தன் கோபத்தையும், சந்தோஷத்தையும் வெளிப்படுத்துமே.... அப்படி அவனிடம் நடந்து கொண்டாள்.

செல்லமாய் அவனை அடித்து.... செல்லமாய் குத்தி.... இழுத்து அணைத்து, முத்தமிட்டு.... "ஏண்டா.... ஏன் என்கிட்டே அப்போவே சொல்லலை.... ஏன்...?" சரமாரியாக அவனை அடித்தாள்.

அந்த உரிமை செய்கை அவனுக்கு அவ்வளவு பிடித்தது. அவள் கோபம், மகிழ்ச்சி, ஆசை, பாசம் என சற்று நேரம் நெகிழ்ந்தவன், நனைந்தவன், அவள் மூச்சுக்கு திணறுவதாகத் தோன்றவே....

"அன்னம்.... கூல்.... நீ வா..." அவளை கரம் பிடித்து அழைத்து வந்தவன், படுக்கையில் அமர வைத்து, அவள் காலடியில் முட்டி போட்டு, அவள் மடியில் முகம் புதைத்தான்.

அவன் தலையை தன் மார்போடு அணைத்தவள், தானும் அவன்மேல் சரிந்துகொண்டாள். எவ்வளவு நேரம் இப்படியே இருந்தார்களோ தெரியாது. அவளிடம் இருந்து சற்று நிமிர்ந்தவன்,

தன் நெற்றியில் இருந்த காயம் ஆறிய வடுவை, தலைமுடியை விலக்கிக் காட்டியவன், "இன்னும்.... இங்கே.... உள்ளே.... ஆப்பரேஷன் செய்த தழும்பு இருக்கும்..." அவள் கரத்தை தன் சிகைக்குள் நுழைத்தான்.

ஒருவித இறுக்கத்தில் அவன் செய்கையை கோதியவள், "அப்போ.... அதான் உங்களுக்குத் தலைவலின்னா எல்லாரும் துடிச்சு போய்டறாங்களா...?" அவள் கேள்விக்கு, அவன் தலை சம்மதமாக ஆடியது.

"இன்னும்.... வேற இடத்திலும் உங்களுக்கு அடி பட்டிருந்ததே..." அவள் கண்ணீரோடு அவனிடம் கேட்க, தன் தோள்ப்பட்டை, கால்.... கை முறிவு என அனைத்தையும் காட்ட.... என்னவோ இப்பொழுதுதான் அவனுக்கு அடி பட்ட நினைப்பில், துடித்து போனாள்.

அவள் துடிப்பதைப் பார்த்தவன், "அன்னம்.... அது மூணு வருஷத்துக்கு முன்னாடி நடந்தது.... என்னவோ இப்போ நடந்த மாதிரி தவிக்கிற...?" அவளை மாற்ற அவன் உரைக்க,

"ஏதோ மூணாவது மனுஷனுக்கு நடந்ததுன்னு நான் நினைத்தால்.... என் நகுலுக்கு.... நடந்திருக்கு. இதை எப்படி என்னால் தாங்கிக் கொள்ள முடியும்?" அதற்கு ஒரு பாட்டம் அழுது, கதறி தீர்த்தாள்.

"ஏய்.... உண்மையைச் சொன்னால் சந்தோஷப்படுவன்னு பார்த்தால், இப்படி அழறியே.... ஏன் என்னை பார்த்தது அவ்வளவு கொடுமையாவா இருக்கு? இவனை கட்டிக்கிட வேண்டி வந்திருந்தால்.... அப்படியே விட்டிருக்கலாம்னு தோணுதோ..." அவன் குறும்பாக கேட்க, நிஜமாகவே அவனை படீரென அறைந்திருந்தாள்.

"என்னடி.... அடிக்கிற...?" அவன் அதிர்ச்சியாக வினவ,

"பின்ன.... நீங்க எப்படி அப்படிச் சொல்லலாம். அப்போவே என் வாழ்க்கையை நான் காப்பாற்றி இருக்கிறேன். அப்படியிருக்கும்போது.... நீங்க இப்படிச் சொன்னால்.... என்னால் எப்படி தாங்கிக்க முடியும்..." அவன் கன்னத்தில் தன் இதழை புதைத்தாள்.

சட்டென நினைவிற்கு வந்தவளாக, "உங்களுக்கு எப்போ இந்த உண்மை தெரியும்? நான் சொன்ன பிறகு தேடி கண்டு பிடிச்சீங்களா...?" அவள் ஆர்வமாக வினவ, மறுப்பாக தலை அசைத்தவன், அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

"இல்லையா...? பிறகு எப்போ...?" கேட்டவளது குரல், இப்பொழுது உள்ளே இறங்கிப் போனது. அவன் தாடை ரோமங்கள் ஏற்படுத்திய தாக்கமும், தான் அவன் முன்னால் இருக்கும் கோலமும் அப்பொழுதுதான் நினைவிற்கு வர, சற்று நடுங்கித்தான் போனாள்.

அவன் இதழ்கள் அவள் மேனியில் சரிந்து இறங்க, அவன் தலைமுடியைப் பற்றி அசையாமல் பிடித்தவள், "சொல்லுங்க..." அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

"நான்தான் உன்னை மறக்கவே இல்லையே..." அவள் கழுத்து வளைவில் இருந்து முகம் நிமிர்த்தி உரைத்தவன், அவள் விழிகள் வியப்பில் விரிவதை ரசித்தவாறே.... விபத்து நடந்த அன்று நடந்தது முதல், அவளைத் தேடியது, கோவையில் பேருந்தில் கண்டது, அவளை மிஸ் செய்தது, தவித்தது.... ஒவ்வொன்றாக உரைக்க,

தன்மேல் ஒருவன் இந்த அளவு பித்து கொண்டு அலைந்து, விரும்பி, நேசித்து தேடி அலைந்ததைக் கேட்டு, உறைந்து போய்தான் அமர்ந்திருந்தாள். அதிலும்.... அவன் பேருந்து சம்பவத்தைச் சொல்ல, அவன் இதழ்களை முரட்டுத்தனமாக கவ்வியிருந்தாள் அவள்.

அவளது முயற்சியை அவன் முற்றுகையாக மாற்ற, அந்த முத்தத்தை முடித்து வைக்க முடியாமல் இருவரும் திணற, அவளுக்குத்தான் மீதியையும் தெரிந்துகொள்ளும் ஆர்வம் தலைதூக்க, "பிறகு..." அவன் இதழ்களுக்கு அருகில் அவள் முனக,

"நகைக்கடையில் அவளைப் பார்த்தது.... அவனது தந்தை அவனுக்காக எடுத்த முயற்சி, அவளது பெற்றவர்களை கோவைக்கு நேரில் சென்று பார்த்து, உண்மையை உரைத்து, பெண் கேட்டு, நிச்சயம் முடித்து, திருமணம் வரைக்கும் உரைத்தவன்,

"முதல் இரவில் எவ்வளவு ஆசையா இதையெல்லாம் உன்கிட்டே சொல்லி, உன் ரியாக்ஷன் என்னவா இருக்கும்னு தெரிஞ்சுக்க எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? அது முடியாமல் போனப்போ துடிச்சு போயிட்டேன்.

"அப்போ கூட.... எனக்கு காதல் தோல்வி வலிக்கிற மாதிரி தானே உனக்கும் வலிக்கும்னு நினைத்துதான், உன்னை..."

அதற்குமேல் அவன் சொல்லாமல் நிறுத்த,

"லூசாடா நீ.... ரெண்டு வருஷம் தேடி, அலைந்து, காதலித்து என்னை கட்டிக்கிட்டு, இன்னொருத்தனுக்கு விட்டுக் கொடுத்துடுவியா...? உன்னை அவ்வளவு சீக்கிரம் விட்டு போய்டுவேனா...? இந்த அன்பை இழக்க நான் என்ன உன்னை மாதிரி லூசா..." ஒருமையில் அழைத்து, அவனை சரமாரியாக தாக்கினாள்.

அவள் அடிகளை பெருந்தன்மையாக ஏற்றவன், "எனக்கு அப்போவே ஒரு உண்மை புரிஞ்சது..." அவன் சொல்ல, அவள் அடிப்பதை நிறுத்திவிட்டு என்னவென்று பார்க்க, "நீ அவனை விரும்பவே இல்லை என்பதுதான்..." அவன் நிதானமாக உரைக்க,

"டேய்..." கூச்சலோடு.... அவனைப் படுக்கையில் தள்ளி, அவன்மேல் பாய்ந்திருந்தாள்.

"ஏய்.... ரொம்ப சோதிக்கிறடி பொண்டாட்டி..." அவன் குரலில் இருந்த பேதத்தை உணர்ந்து, அவனை நிமிர்ந்து பார்க்க, அவன் கண்கள் பதிந்த இடத்தைப் பார்த்தவளுக்கு, குப்பென வேர்த்துப் போனது.

அவள் கட்டியிருந்த ஒற்றை துண்டு, அபாயகரமான விதத்தில் நெகிழ்ந்திருக்க, அதைப் பார்த்தவள், வேகமாக அவனிடமிருந்து விலகி, டவ்வலை சரிசெய்ய முயல, அவள் முயற்சியை வேகமாகத் தடுத்தவன், அவள் கரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டான்.

"ரொம்ப கஷ்டப்படாதே.... நான் ஹெல்ப் பண்றேன்..." டவ்வலின் முடிச்சை அவன் சரி செய்ய முயல,

"ச்சீ...." அவன் கரத்தை வேகமாக தட்டி விட்டாள்.

"அதெல்லாம் முடியாது..." அந்த பிடிவாதக்காரன் அடாவடியை துவங்க, "நகுல்.... போய் ட்ரெஸ் மாத்திட்டு

வரேன்..." அவன் கரத்தை தடுக்க முயன்று தோல்வியுற்று, நெகிழ்ந்து, குழைந்து அவள் உரைக்க,

"இப்போ மாத்தினால் மட்டும்..." மீதியை அவள் காதுக்குள் உரைக்க,

"நீங்க ரொம்ப மோசம்..." அவன் நெஞ்சில் பொய்யாக குத்த, "நான் எவ்வளவு மோசம்னு இப்போ காட்டறேன் பார்..." அவள் என்னவென்று உணரும் முன்பே, அறையை இருளில் தள்ளியவன், அவளுக்கு ஆதரவாக இருந்த ஒற்றை உடைக்கு போட்டியாக.... தான் மாறியிருந்தான்.

"ஐயோ.... என்ன பண்றீங்க..." போர்வைக்குள் தன்னை அவள் திணித்துக் கொள்ள, தானும் உடன் சென்றவன்,

"என்ன சொன்ன.... உதட்டை எச்சபண்றதை தவிர வேற எதுவும் தெரியாதன்னு கேட்டல்ல.... இப்போ பார்...." ஒருவித வேகத்தில் கேட்டவன், அதே வேகத்தை அவளிடம் வெளிப்படுத்தினான்.

தன் மேனியில் புதைந்துபோன அவனை விலக்க அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியை தழுவ, "ம்ஹூம்.... வேண்டாம்..." அவன் முரட்டுத்தனம் தாங்காமல் முனகினாள்.

பொய்யாக மறுத்த அவள் இதழ்களுக்கு தகுந்த தண்டனையை வழங்கியவன், தன்னவளை மொத்தமாக உணரத் துவங்கினான். அவளை அப்படியே கொள்ளையிட்டான் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

‘என்ன இது...? ஏன் இப்படி...? அம்மம்மா...’, அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் அவளை உருக்க, அவன் தேடலுக்கும், தாபத்துக்கும், தீண்டலுக்கும் கரைந்துதான் போனாள்.

அவனது நெருக்கம் ஏற்படுத்திய தகிப்பு, அவன் வேகம்.... "நகுல்.... முடியல.... மெதுவா...." அவனை அடக்க முயன்று தோற்றாள்.

"அவ்வளவுதான்.... இன்னும் கொஞ்சம்.... ப்ளீஸ்..." அவனது கொஞ்சல், கெஞ்சல் அனைத்தும், அவளை, அவனுக்கு உடன்படவே செய்தது.

உணவு உண்ணவில்லை என்பதையும் மறந்து, உண்ண அழைத்த பெற்றவளையும் மறந்து, உலகமே மறந்து இருவரும் தனி உலகில் சஞ்சரித்தார்கள்.

தேகம் மொத்தமும் இனிமையான வலியில் துடிக்க, மொத்த உறவையும் இன்றே முடித்துவிடத் துடித்த அவன் வேகம் கண்டு மிரண்டுதான் போனாள்.

அவனோ.... அவளை விட்டு விலகும் எண்ணமே இல்லாமல் மீண்டும் மீண்டும் அவளை நாட.... களைத்து, சோர்ந்து போனாள்.

ஒரு கட்டத்தில்.... இதற்குமேல் தன்னால் முடியாது எனத் தோன்ற, "போதுமே..." கொஞ்சல் கலந்து, அவன் தேவையை மறுக்கிறோமே என்ற வருத்தம் இழையோட அவள் உரைக்க, "அன்னம்..." சற்று துடித்துப் போனான்.

அவன் துடிப்பதை உணர்ந்தவள், "ம்ச்.... ஒண்ணுமில்லை.... இன்னைக்குதானே.... அதான்..." முகம் செவ்வானமாய் சிவக்க, அவன் நெஞ்சுக்குள் தன் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

அவளை தன்மேல் மொத்தமாக சாய்த்தவன், "சாரிம்மா.... என்னால்..." அவன் விளக்கம் கொடுக்க முயல, அவன் வாயை கையால் பொத்தியவள், "எனக்கும் இந்த முரட்டுத்தனம் தேவையாகத்தான் இருந்தது...." குரல் வெளியே வராமல் அவள் உரைக்க, அவள் தனக்காகத்தான் சொல்கிறாள் என்பதை அறிந்த அவன், அவளை அணைத்தவாறு படுத்துக் கொண்டான்.

மனதுக்குள் அமைதி சூழ, அதுவரை இருந்த குழப்பங்கள், எரிச்சல் அனைத்தும் மறைய, தானும் அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

"ஏன் நீங்க இந்த உண்மையை அப்போவே சொல்லலை..." தன் மனதில் உறுத்திய விஷயத்தை மெதுவாகக் கேட்டாள்.

"எப்படிச் சொல்ல...? உன்னை பார்த்த அன்றே அதைச் சொல்லத்தான் எண்ணினேன். உன்னிடம் அதை மட்டும் சொல்வதாக இருந்தால், அப்பொழுதே சொல்லிவிட்டு விலகியிருப்பேன். ஆனால்.... நான் உன்மேல் காதல் கொண்டுவிட்டேனே.... உன்னை என் கையணைப்புக்குள் வைத்துக் கொண்டு சொல்ல வேண்டும் என எண்ணிய என்னால், முதலில் அது முடியாமல் போனது.

"முதலிரவிலோ பெரிய தடை.... பிறகு.... எத்தனையோ நாள் உண்மையை உரைக்க நினைத்தாலும், எங்கே இதைச் சொல்லி, உன்னை தடுப்பதாக நீ நினைத்துவிடுவாயோ என்ற தயக்கம் என் வாயை கட்டி போட்டுவிட்டது.., அதான்....

"ஆனா இப்போ..." அவளை இறுக்க, அவன் மனம் புரிந்தவளாக தானும் அவன் நெஞ்சில் புதைந்தவள், "அப்போவே சொல்லியிருந்தால் இவ்வளவு லேட் ஆகி இருக்காது..." அவனை சீண்டும் குரலில் உரைக்க, "இப்போ மட்டும் என்னவாம்..." கேட்டவன் தன் வேலையை காட்டத் துவங்க,

"ஐயோ.... ம்ஹூம்.... முடியாது..." உரைத்தவளோ, அவனைவிட்டு விலகவே இல்லை. அவள் நிலை புரிந்தவனாக, அவள் தலை கோதியவன், விடியலின் துவக்கம் ஆரம்பமாக, அப்பொழுதுதான் விழி மூடினார்கள்.

தாமதமாக உறங்கினாலும், ஏழு மணிக்கே அவன் விழித்துவிட, தன் மேல் கிடந்தவளை, பூப்போல் கீழே படுக்க வைத்தவன், ஆசையாக அவள் நெற்றியில் முத்தமிட்டான். எத்தனைநாள் கண்ட கனவு இது.... நிஜமாகிப் போனதில்.... அவளை விட்டு விலகிச் செல்லவே அவன் விரும்பவில்லை.

ஆனாலும்.... இரவு உணவைக் கூட உண்ணச் செல்லாமல்.... காலையிலும் செல்லாமல் இருந்தால், மற்றவர்களின் கேலிக்கு ஆளாக நேரிடும் என எண்ணியவன், வேகமாக குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

கீழேயோ.... கையில் ட்ரேயோடு இறங்கிய பொன்னம்மா.... "அம்மா.... தம்பி நைட் சாப்பிடவே இல்ல போலம்மா.... வச்ச சாப்பாடு அப்படியே இருக்கு. இன்னும் கூட எழுந்த மாதிரியும் தெரியலை..." உரைத்தவள், அவற்றை சுத்தம் செய்ய எடுத்துச் சென்றாள்.

அதைக் கேட்டு குழப்பமாக பார்வதி நிற்க, பொன்னம்மாவின் பேச்சைக் கேட்டவாறே வந்த வருணா, "என்னம்மா.... பொன்னம்மா என்னவோ சொல்லிட்டு போறாங்க...." தாயை நெருங்கினாள்.

"அதுதாம்மா எனக்கும் புரியலை.... ஊர்ல இருந்து வேற உடனே வந்துட்டாங்க, நைட் சாப்பிடவும் இல்லை.... எனக்கு என்னவோ.... கவலையா இருக்கு..." அவருக்கு எழுந்த சந்தேகம் இன்றுவரை தீராத காரணத்தால், அவரால் உறுதியாக எதையும் நினைக்க முடியவில்லை.

"அம்மா.... அண்ணாவைப் பத்தி உங்களுக்கே தெரியாதா? அவன்போய் அண்ணிகிட்டே சண்டை போடுவானா? எனக்கென்னவோ..." பேச்சை பாதியில் நிறுத்தியவள், படிகளில் இறங்கிவரும் அவனைக் கண்டு பேச்சை பாதியில் நிறுத்தினாள்.

அத்தோடு.... "அம்மா.... அண்ணா முகத்தில் பல்ப் எரியுது பாருங்க. அண்ணாக்கு என்னவோ நேத்துதான் கல்யாணம் ஆன மாதிரி பீல் பண்ணிட்டு வரான் பாருங்க.." தாயின் காதில் கிசுகிசுத்தவள், அவன் அவர்களை நெருங்கி விடவே....

"குட் மார்னிங்ண்ணா..." அவனை குறுகுறுவென பார்த்து அவள் உரைக்க, அவள் பார்வையில் பொருள்

உணர்ந்தவனுக்கு, சற்று சங்கடமாகத்தான் இருந்தது. "குட் மார்னிங் வருணா..." தலையை கோதியவன், அத்தோடு.... தாயையும் ஏறிடத் தயங்கியவாறு, அழகாய் வெட்கப்பட்டான்.

"அம்மா.... உங்கபுள்ள வெக்கமெல்லாம் படறாம்மா.... ஐயோ.... இதைப் பாக்க நவீ இல்லாம போயிட்டாரே.... அப்படியே இருண்ணா ஒரு போட்டோ எடுத்துக்கறேன்..." அவள் தன் அலைபேசியை தேட,

"ஏய்.... சும்மா இருடி.... உன் பையன் அழறான் பாரு.... அவனைப் போய் பார்..." அவள் முதுகில் கை கொடுத்து தள்ளினான்.

"அண்ணா.... இதைத்தான் நான் உன்கிட்டே அப்போவே எதிர்பார்த்தேன். என்ன.... கொஞ்சம் லேட்டாலும் லேட்டஸ்டா இருக்கு.... அனு எங்கே.... ஓகே தானே...." கேலி இழையோட கேட்க, அவள் முதுகில் ஒன்று போட்ட பார்வதி, "ரூமுக்கு போடி.... புள்ளையை கேலி பண்ணிக்கிட்டு..." அவளை விரட்டினார்.

"ஆமா.... பச்ச புள்ளதான்..." அதற்கும் பேச, "முருகா.... காலங்காத்தாலே என்னடி இது.... போ..." மகளை முறைத்தாலும், மகனது அமைதியும், ஒரு சங்கடமான முகபாவமும்.... அவருக்கு ஓராயிரம் செய்தியை உரைக்க, பூரித்துப் போனார்.

அவள் செல்லவே.... "அம்மா..." அவன் தயங்க, "பொன்னம்மா.... கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து எடுத்துட்டு வாங்க..." குரல் கொடுத்தவர், "நீ உக்கார்.., அம்மா எடுத்துட்டு வரேன்..." அவர் கிச்சனுக்குச் செல்லத் திரும்பவே,

"என் அம்மான்னா அம்மாதான்..." தாயை தோளோடு அணைத்தவன், அவர் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

"டேய் போக்கிரி.... கொஞ்ச நாளா இந்த அம்மாவை கொஞ்சக் காணோமே, உரைத்தவர், அவன் முகம் சற்று வாட, அதைப் பார்த்தவர், "என் புள்ளை எப்பவும் சந்தோஷமா இருக்கணும்.... அதுதான் கண்ணா எனக்கு வேணும்..." அவன் தலையை வருடினார்.

"உங்க புள்ளையோட சந்தோஷத்துக்கு என்னம்மா.... அவனைச் சுத்தி எப்பவும் நல்லதுதான் நடக்கும்..." உற்சாகமாக உரைக்க, அவன் மகிழ்ச்சி அவரையும் தொற்றிக் கொண்டது.

பொன்னம்மா கையில் இரண்டு கப்போடு வர, அதை வாங்கி, அவன் கையில் கொடுத்தவர், "போய் அனுவுக்கு கொடு.." அவனை அனுப்பினார்.

'ம்...' அவரிடமிருந்து பெற்றுக் கொண்டவன், அறைக்குள் நுழைந்து, டீபாவின்மேல் வைத்துவிட்டு, அனன்யாவை நெருங்கினான். ஏசி குளிருக்கு, போர்வைக்குள் அவள் சுருண்டிருக்க, அதை நிறுத்தியவன், ஃபேனை சுழல விட்டு, அவள் அருகில் அமர்ந்து, அவளது கலைந்த கூந்தலை, ஒதுக்கினான்.

அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டவன், "அன்னம்..." மென்மையாக அவள் காதுக்குள் முனக, "ம்.... இன்னும் கொஞ்ச நேரம்.., ப்ளீஸ்..." அவன் கரத்தை, தன் கழுத்தில் வைத்து அழுத்தியவள், அதன்மேலே படுத்து உறக்கத்தை தொடர்ந்தாள்.

அவனது கதகதப்பு அவளுக்குள் இறங்கும் உணர்வு.... "ஏய்.... இப்படியெல்லாம் செய்தால்..." அவள் அருகில் ஒட்டியவாறு படுத்தவன், அவள் இடையில் கை போட்டு அழுத்த, அவன் நெஞ்சில் ஒட்டிக் கொண்டவள், உறக்கத்தை மட்டும் கைவிடவே இல்லை.

அவள் செய்கையில் கிளர்ந்தவன், காதல் கணவனாக உரு மாற.... அவன் கரங்கள் ஏற்படுத்திய கிளர்ச்சியை தாங்க முடியாமல்.... "ம்ஹூம்.... போ.., போ..." செல்லமாக

சிணுங்கியவள், பேச்சு வேறாகவும், செய்கை வேறாக, அவனை இழுத்து அணைத்தாள்.

‘கொல்றாளே...’, மனதுக்குள் முனகியவன், அவள் விழி திறக்க முடியாமல், தூக்கத்தில் அமிழ்வதைப் பார்த்தவன், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு, "அன்னம்.... இந்த ஹார்லிக்ஸை மட்டும் குடிச்சுடும்மா..... பிறகு நீ தூங்கு..." அவள் செல்ல சிணுங்கள், போலி மறுப்பு, எதையும் கண்டுகொள்ளாமல், அவளுக்கு புகட்டியவன், அவள் நெற்றியில் முத்தமிட்டு விலகிச் சென்றான்.

35

அலுவலகத்தில் ஆயிரம் வேலைகள் காத்திருக்க, அனன்யாவை விட்டுச் செல்ல மனமற்றவனாக, தந்தையைத் தேடி வந்தான்.

உணவு மேஜை முன்பு, தந்தை காலை உணவை உண்ண, "அப்பா.... உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்..." அவர் அருகில் அமர்ந்தான்.

"பேசலாம்.... முதல்ல சாப்பிடு.... பாரு.... நகுல்க்கு தட்டு வை..." மனைவியிடம் உரைத்தவர், உணவில் கவனமானார்.

மறுக்காமல் இரண்டு இட்லியை உண்டவன், "போதும்மா.... நான் அன்னத்தோட சேர்ந்து சாப்பிடுறேன்..." உரைத்தவன், உணவை முடித்த தந்தையோடு சேர்ந்து.... ஹாலுக்கு வந்தவன், அவர் அருகில் அமர்ந்தான்.

"சொல்லுப்பா..." மகனது முகம் பார்க்க, சற்று தயங்கியவன், "அப்பா.... புது யூனிட்டை.... இன்னைக்கு கொஞ்சம் பாத்துக்கறீங்களா...? நாளைக்கு நான் வந்திடுவேன்..." சற்று கெஞ்சலாகக் கேட்டானோ...?!

அவரோ.... கொஞ்சம் கூட தயங்காமல்.... "அதுக்கென்னப்பா.... தாராளமா பாத்துக்கறேன். இப்போ ட்ரையல் தானே போகுது.... மெயின் வேலை துவங்க எப்படியும் ஒரு மாசமாகும். அதை பாக்க எனக்கென்ன கஷ்டம்...? இதுக்கு ஏன் இவ்வளவு தயங்கற?" உரிமையாக கடிந்து கொண்டார்.

"தேங்க்ஸ்ப்பா..." எழுந்து அவரை கட்டிக் கொண்டான்.

"இதுக்கெல்லாம் எதுக்கு தேங்க்ஸ்...? நீ இன்னும் ஒரு மாசம் கழித்து வந்தால் கூட எனக்கு சம்மதம் தான்..." அவனை தட்டிக் கொடுத்தவர், தூரத்தில் நின்ற

மனைவியிடம் பார்வையைப் பதித்தவாறு அவர் உரைக்க, நகுலும் தன் தாயை சட்டென திரும்பிப் பார்த்தான்.

"அம்மா..." தாவியோடி அவரை கட்டிக்கொள்ள.., அதைப் பார்த்த அரசு, "பாரு.... உன் பையனை அப்படியே பத்து வயசில் பாத்த மாதிரி இருக்கு.... அதே துள்ளல்.... அதே அம்மா கோண்டு.... எனக்குத்தான் பொறாமையா இருக்கு..." அவர்களைச் சீண்ட,

"கண்ணு வைக்காதீங்க.... ஏன்.... வேண்ணா நீங்களும் கொஞ்சுங்களேன், யார் வேண்டாம்னு சொன்னது..." பார்வதி திருப்பிக் கேட்க,

"ஏன்... இவ்வளவு நேரம் நல்லாத்தானே போயிட்டு இருக்கு.... என் அப்பாவையும் எதுக்கு உங்க பக்கம் இழுக்கறீங்க..." கையில் மகனோடு, தந்தையின் அருகில் தொப்பென அமர்ந்தாள் வருணா.

"அம்மாடி.... பாத்து..." அவளை தாங்கியவர், "அவங்க இழுத்தா, என் செல்ல பொண்ணை விட்டு நான் போய்டுவனா?" அரசு, அவள் கையில் இருந்து பேரனை வாங்கிக் கொள்ள, "அதானே.... என் அப்பான்னா அப்பாதான்.... வ.., வ.... வ.." அவர்களைப் பார்த்து அளவம் காட்ட, மீண்டும் குழந்தைப் பருவத்துக்கே தங்கள் குழந்தைகள் போய்விட்ட உணர்வு.

அவர்கள் திருமண வாழ்க்கை கூட, எந்தவிதமான மாற்றத்தையும், பிரிவையும் மனதளவில் கூட ஏற்படுத்தாததை எண்ணி, பெரியவர்கள் இருவரும், மருமகனையும், மருமகளையும் எண்ணி பெருமிதம் கொண்டார்கள்.

அவர்கள் வீட்டில் இந்த சந்தோசம் எப்பொழுதும் நிலைக்க வேண்டும் என அந்த பெற்றவர்கள் உள்ளம் வேண்டிக் கொண்டது.

காலையில் மணி பதினொன்றை நெருங்கிய பிறகும், உறக்கம் கலையாமல் இருந்த மனைவியை நெருங்கி, "என்ன பொண்டாட்டி.... நாளைக்கு விடியிறப்போதான் எழுந்திரிப்பீங்களா? மணி என்ன தெரியுமா?" அவள் காது மடலில் இதழ் பதிக்க, அவளுக்கு சட்டென உறக்கம் கலைந்து போனது.

"டைம் என்ன...?" கேட்டவள் சட்டென எழுந்து அமர, அவள் மேனியிலிருந்து நழுவிய போர்வையில், பதறிப் போய் அதைத் தாங்க, அவள் தாமதபட்டுப் போனதை, அவனது முரட்டு அணைப்பு உணர்த்த, தன் ஆடையாக அவனை இறுக்கிக் கொண்டாள்.

அந்த காதல் கள்வன், தன் தாபத்தை.., இதழ் தீண்டலில் உணர்த்த, தனக்குள் புதையும் அவனை தவிர்க்கவும் முடியாமல், அவனை விட்டு விலகவும் முடியாமல், "நகுல்.... கீழே போகணும்.... அத்தை தேடுவாங்க..." முனகினாள்.

"அப்படியா...?" கேட்டவனுக்கு அவளை அனுப்பும் எண்ணமே இருக்கவில்லை என்பதை, அவன் கரங்கள் அவளை வளைத்துக்கொண்ட விதத்தில் உணர்த்த, "கெட்ட பையன் நீங்க..." கிணற்றுக்குள் ஒலித்த அவள் குரலே.... அவன் எவ்வளவு கெட்டவன் என அவனுக்கு உணர்த்த, ஆர்ப்பாட்டமாக சிரித்தவன், அவளை கொள்ளையிட்ட பிறகே விலகினான்.

"முரடு.... இப்படியா பண்ணுவீங்க...? உடம்பெல்லாம் வலிக்குது..." செல்லமாய் அவனை குத்தியவள், குளிக்கச் செல்ல, தானும் அவளோடு புகுந்தவன், அவள் அலறலையோ, மறுப்பையோ கண்டுகொள்ளாமல், "நான் ஏற்படுத்திய காயத்துக்கு நானே மருந்து போடறேன்..." மிதமான வெந்நீரின் அடியில் அவளை நிறுத்தினான்.

"பிராடு.... பிராடு..." காயத்தை ஆற்றுவதாகச் சொன்னவன், செய்த லீலைகளில், மேலும் காயம் கொண்டாள், என்பதை

அவளது பேச்சே உணர்த்த, காதலை அவளுக்கு உணர்த்துவதில் பிடிவாதக்காரனாகத்தான் இருந்தான்.

ஒரு வழியாக அவர்கள் குளித்து கீழே வருகையில், மதிய உணவு வேளையே வந்திருந்தது. "அனு..." வருணாவின் குரல் ராகமாக இழுக்க, அவள் முகம் பார்க்க நாணியவள், கிச்சனுக்குள் புகுந்து கொண்டாள்.

அங்கே.... பார்வதி அவள் கன்னம் வழித்து திருஷ்டி கழிக்க, "அத்தை..." சிணுங்கியவாறு அவர் முதுகின் பின்னால் ஒட்டிக் கொண்டாள்.

அன்று முழுவதுமே.... மற்றவர் முன்னால் செல்ல அவள் தயங்கி, குழைய, வருணாவின் கேலியும் சேர, கணவனது நெஞ்சிலே தன் முகத்தை புதைத்து, நாணம் மறைக்க, அதற்கும் அவளை கேலி செய்தாள் வருணா.

"அன்னம்.... அவ கேலி பண்றதுக்கெல்லாம் பீல் பண்ணா ஆச்சா? நவீன் வரட்டும்.... அம்மணி எப்படி குழையிறான்னு மட்டும் பார். அதோட, 'குட்டிப் பையனை கொஞ்சம் பாத்துக்கோ'ன்னு உன்கிட்டே வந்து நிப்பால்ல.... அப்போ.., முடியாதுன்னு சொல்லி அவளை பழி வாங்கு..." மனைவிக்கு கள்ளத்தனத்தை சொல்லிக் கொடுத்தான் அந்த கள்வன்.

"டேய் அண்ணா.... ஏன் இப்படி.... அனு.... நீ நல்ல பொண்ணு தானே.... அப்படியெல்லாம் சொல்லக் கூடாது சரியா...?" வெட்கமே இல்லாமல் கெஞ்ச, சிறியவர்களின் பேச்சை கேட்ட பார்வதி, தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

அத்தோடு.... "ஆண்டவா.... நடு கூடத்தில் பேசுற பேச்சைப் பார்.... ஏய்.... வருணா.... நீ என்கிட்டே அடிதான் வாங்கப்போற..." பார்வதி அவளை கடிந்துகொண்டிருக்கையிலேயே.... வீட்டுக்குள் வந்த நவீன்....

"வரு.... நேத்து ஒரு ஃபயிலை கொண்டு வந்தேனே.... பாத்தியா...?" கேட்டவாறு அறைக்குள் நுழைந்தவன், "வரு.... பையனை கொடுத்துட்டு வா..." அவன் குரல் அறைக்குள் இருந்து பாய்ந்து வர, அனன்யாவும், நகுலும் பக்கென சிரித்தே விட்டார்கள்.

"நவீ..." பல்லைக் கடித்த வருணா.... கோபமாக எழுந்து செல்ல முயல, "ஏய்.... புள்ளைய கொடுத்துட்டு போடி.... நீ போற வேகத்தைப் பாத்தா எனக்கே பயம்மா இருக்கு..." பார்வதி குழந்தையை வாங்கிக் கொள்ள, "அம்மா.... நீங்களுமா..." காலை தரையில் உதைத்து அவள் சிணுங்க,

"புள்ள பெத்த உடம்புடி.... பாத்து..." அவள் செய்கையில் பதறியவர் உரைக்க, "வரு..." அதற்குள் நவீனின் குரல் பொறுமையின்றி ஒலிக்க, நகுலோ.... "வருணா.... அம்மா சொன்னதை கேட்டுக்கோ...." சிரிப்பை அதக்கிய குரலில் உரைக்க, அனன்யா விழுந்து புரண்டு சிரித்தாள்.

"ஏய்.... புருஷனும் பொண்டாட்டியும் சேர்ந்து கலாய்கிறீங்களா...?" அனுவை போலியாக குத்தியவள், "அவனுக்கு இன்னைக்கு இருக்கு..." கறுவிக் கொண்டு அறைக்குச் சென்றாள்.

அவள் உள்ளே சென்ற அடுத்த நிமிடம், "ஆ.... அம்மா.... வரு.... ஏன் அடிக்கற? சொல்லிட்டு அடி..." அவனது அலறலும், "ஆண்டவா.... வாயை மூடுங்க..." வருணாவின் குரலோடு.... "அ...து..." நவீனின் குரல் அதற்குமேல் அவர்களை வெட்கம் கொள்ள வைக்க, அனைவரும் நாகரீகம் கருதி அங்கிருந்து நகர்ந்தார்கள்.

அடுத்த இரண்டு நாட்களும்.... நகுல், அனன்யா இருவரின் தேனிலவு நாட்களாக மாறிப்போக, "எனக்கு இதெல்லாம் பத்தாது..." அவளுக்குள் புதைந்தவாறு அவன் உரைக்க,

"ச்சீ..." நாணியவள், "ஏற்கனவே வரு என்னை ஓட்டித் தள்றா.... நீங்க வேற..." குழைந்துபோனாள்.

"என்னவோ உனக்கு புடிக்காத மாதிரி பேசற..." அவன் முறுகிக் கொள்ள, "என் மானத்தை வாங்காதீங்க..." அவனுக்கு பிடித்த விதத்தில் அவனை கவனித்தாள்.

அதில் குழைந்தவன்.... "பொண்டாட்டி.... ஹனிமூன் போகலாமா...?" ஏக்கமாக ஒலித்தது அவன் குரல்.

சட்டென அவள் யோசனைக்குச் செல்ல, "என்ன.... வேண்டாமா...? போர் அடிச்சுடுச்சா...?" முகத்தை தூக்கி வைத்துக் கொண்டான்.

அவன் தலையில் வலிக்காமல் குட்டியவள், "எனக்கு ஒரு சின்ன வேலை இருக்கு.... அதான் யோசித்தேன்.... நாளைக்கு விஜயா மால் போகணும்.... என்னோட வரீங்க சரியா...?" கட்டளையாக உரைத்தாள்.

"உத்தரவு மகாராணி..." கை கட்டி உரைத்தவன், "என் பொண்டாட்டிக்கு மூடு வரதைப் பொறுத்து பேச்சு மாறிடுது. ஒரு நேரம் டேய்.... ஒரு நேரம் என்னங்க.... ஒரு நேரம் நகுல்.... ஒரு நேரம்.... ந..கு..ல்..." அவன் இழுக்க, பட்டென அவன் வாயை மூடியவள் சிவந்து போனாள்.

அதை ரசித்தவாறே.... "விஜயா மால்ல என்ன...?" அவன் கேட்க, "பாக்க தானே போறீங்க..." அவள் தன் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

அவள் சொல்லவில்லை என்றாலும்.... அவள் அங்கே செல்வதற்கான காரணம் அவனுக்கு புரியவே செய்தது.

மறுநாள்.... காரில் சென்று மாலில் இறங்க, "கொஞ்ச நேரத்துக்கு என் கிட்டேயே வராதீங்க புரியுதா...?" போலியாக மிரட்டியவள், சற்று முன்னால் நடந்தாள்.

‘ஐயோ.... என்ன செய்யப் போறாளோ தெரியலையே...’, அவள் பின்னால் சென்றான்.

அங்கே இருந்த புட்கோர்ட்டுக்கு சென்றவள், பார்வையைச் சுழற்றி தேடியவள், அவனைக் கண்டுகொண்டு, அவன் எதிரில் சென்று அமர்ந்தாள்.

வேந்தனோ.... அவள் செய்கையை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில், அவள் தனக்கு அலைபேசியில் அழைப்பு விடுத்ததே திகைபென்றால், தன்னை தனியாக பேசவேண்டும் எனச் சொன்னது ஒரு அதிர்வென்றால்.... இப்பொழுது தனியாக வந்து, தன் எதிரில் அமர்ந்தது அதிர்ச்சியை அளித்தது.

அவன் அதிர்ச்சியை அளவிட்டவாறே.... "சொல்லு வேந்தன்.... எப்போ என்னை கூட்டி போற...?" நேரடியாக விஷயத்துக்கே வந்தாள்.

அவள் கேள்வியில் அதிர்ந்தவன், "எங்கே...?" கேட்டே விட்டான்.

"என்ன இப்படி கேக்கற...? அதான் ஒரு வருஷம் முடிந்த உடனே, நான் உன்னோட வரணும் என்பது தானே உன் கண்டிஷன்.... அதான்.... ஒரு வருஷம் ஆகப் போகுது.... சோ.... என்னைக்கு கூட்டி போறன்னு கேக்கத்தான் வந்தேன்.

"நான் ரெடி.... என்னால் இதற்குமேல் பொறுமையா இருக்க முடியாது. உன்னையும் எவ்வளவு நாள்தான் காக்க வைக்க முடியும்? அதான்.... முதல்ல உன்னோட வரேன்.... பிறகு எல்லாத்தையும் பாத்துக்கலாம்..." அவள் சொல்லச் சொல்ல, பேயடித்த உணர்வில் சிலையாகிப் போய் அமர்ந்திருந்தான்.

தூரத்தில் அமர்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நகுல், கஷ்டப்பட்டு தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். 'அடிப்பாவி.... அப்படி என்னடி சொன்ன? பயபுள்ள இப்படி முழிக்கிறான்...', மனதுக்குள் அவளோடு கேட்டுக் கொண்டான்.

"ஏய்.... என்ன விளையாடுறியா...? அதெல்லாம்.... அப்படி பட்டுன்னு முடிவெடுக்க முடியாது..." திணறினான்.

அதை ரசித்தவாறே.... "ஏன் முடிவெடுக்க முடியாது...? உன் தங்கச்சிக்கு கல்யாணம்.... நான் அண்ணி ஸ்தானத்தில் இருந்து எல்லாம் செய்யணும்னு நீதானே சொன்ன...? உரிமையா அதை செஞ்சுட்டு போறேன்...." அவன் எச்சில் விழுங்கிக் கொண்டான்.

வேந்தனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அதைவிட, அனன்யாவின் குணத்துக்கு, எப்பொழுது அவள் கழுத்தில் தாலி ஏறியதோ, அப்பொழுதே தன்னை ஏற்றுகொள்ள மாட்டாள் என்று உறுதியாக நம்பினான்.

அத்தோடு.... அடுத்தவனின் மனைவியாகிவிட்ட ஒருத்தியை.... ஒன்றும் இல்லை, நடக்கவில்லை என்றாலும், ஒரு வருடம்.... ஒருத்தனோடு, ஒற்றை அறையில்.... ஒரே படுக்கையில்.... பகிந்து வாழ்ந்தவளை ஏற்றுகொள்ளும் அவளுக்கு அவன் ஒன்றும் நல்லவன் கிடையாதே.

"பணம் வேணும்னு கேட்டல்ல.... இதோ பார்.... பத்து லட்சம் ரூபாய்.... என் அக்கவுண்டில் ஏற்பாடு பண்ணிட்டேன்.... இதை அப்படியே.... மொத்தமா உனக்கு கொடுத்தடறேன்.... அது மட்டும் இல்லை.... என்னோட நகை, என் அம்மாவோட நகை.... இப்படி எல்லாம் எடுத்துட்டு வரேன்...

"உன் அடுத்த தங்கையின் பிரச்சனையும் முடிஞ்சது. நீயும் நல்ல வேலையில் இருக்க.... நானும் வேலைக்கு போறேன்.., என்ன ஹேப்பி தானே.... எப்போ வச்சுக்கலாம்..." அவள் சொல்லிக்கொண்டே போக, இப்படி ஒரு திருப்பத்தை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை அவன் முகமே காட்டிக் கொடுத்தது.

அவன் அவளிடம் எதிர்பார்த்த பணம் அவன் முன்னால் மொத்தமாக இருந்ததுதான். நகை.... பணம்.... அவள் சொல்லச் சொல்ல.... ஒருவித போதை ஏறியதுதான்.

ஆனால்.... இதற்கு முன்னால் இருந்ததுபோல், அதன்மேல் ஒரு ஆவேசம் கிளம்பவில்லை.

‘இது எதனால்...’ அவனால் சிந்திக்க முடியவில்லை. ‘ஒரு வேளை.... அவனுக்காக பார்த்திருக்கும் அவள்.... ரேணுகா.... அவளை உண்மையாக விரும்பத் துவங்கியதால் இருக்குமோ?’, அவனால் சட்டென விடை கண்டறிய முடியவில்லை.

முதலில் எல்லாம்.... அனன்யாவிடம் இருந்து, முடிந்த அளவு பணத்தை கறந்துவிட வேண்டும் என எண்ணியவன்தான். அத்தோடு அவளை கழட்டி விட்டுவிட எண்ணியிருந்தவன் தான்.... ஆனால்.... பணம், நகையோடு.... என்னையும் அழைத்துச் செல்.... என அவள் சொல்கையில், அதை தன்னால் செய்ய முடியாது என அவன் மனம் முரண்டியது.

"என்ன வேந்தன்.... நான் சொல்லிட்டே இருக்கேன்.... நீ எதுவுமே சொல்லாமல் அமைதியா இருந்தால் என்ன அர்த்தம்? உனக்கு ஓகே தானே.... நகை, பணம், என் அப்பாவோட சொத்து.... இப்படி..." அவள் சொல்லிக்கொண்டே போக,

"ஓகே இல்லை..." சட்டென வீறிட்டான். சுற்றிலும் இருந்த ஒன்று இரண்டு பேர், அவர்களைத் திரும்பிப் பார்க்க, அதைக் கண்டு கொள்ளாதவனுக்கு, இப்பொழுது அவளிடம் பணம் மட்டும் போதும், உன்னை பிறகு அழைத்துக் கொள்கிறேன் என்று கூட சொல்ல முடியவில்லை.

அப்படிச் சொல்லி.... தன் திருமணத்துக்குப் பிறகு, தன்னை தேடி வருகிறேன் என அவள் கிளம்பிவிட்டால்.... தன் வாழ்க்கையும், தன் தங்கையின் வாழ்க்கையும் என்ன ஆகும்...? தான் செய்த தவறுக்கு சிலுவையை தன் தங்கை சுமப்பதா? அவனால் சிந்திக்கவே முடியவில்லை.

தலையே வெடித்துவிடும்போல் இருந்தது. அதைவிட, தனக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது என்ற உண்மையை

சொல்லக் கூட அவனுக்கு தைரியம் இருக்கவில்லை. தான் உண்மையைச் சொல்லி, ‘அப்படியென்றால் எந்த மூஞ்சியோடு இங்கே வந்தாய்...’ எனக் கேட்டால் அவன் என்ன பதில் சொல்வான்?

அவன் மிகப்பெரிய கோழை ஆயிற்றே.... அவனால் உண்மையைச் சொல்லி, அவளிடம் பாவ மன்னிப்பை வேண்ட அவனால் முடியவில்லை.

இவை எல்லாம் விட, அன்று அவளிடம் பணம் கேட்கும் முன்னரும் அவனுக்கு ரேணுகாவோடு மணம் பேசிவிட்டார்கள் தான்.... அப்பொழுது அனன்யாவிடம் தயங்காமல் பணம் கேட்க முடிந்த அவனால்.... இடைப்பட்ட நாட்களில், ரேணுகாவுடனான பேச்சு, அவன் மனதில் சில மாற்றங்களை விதைத்து இருந்தது.

அதுவே இப்பொழுது அவனிடம் வெளிப்பட, அதை அனன்யாவிடம் வெளிப்படுத்த முடியாமல் தேங்கினான்.

"கூல் வேந்தன்.... என்ன இல்லை.... நான் கொண்டு வர நகை பத்தாதுன்னு சொல்றியா? இல்ல பணம் போதாதா...? நகுல்கிட்டே கேட்டால்.... இன்னும் எவ்வளவு வேண்ணாலும் தருவார்.... ஒரு கோடி.... ஒரு கோடி.... உனக்கு போதுமா...?" அவனுக்கு ஆசை காட்டினாள்.

"ஸ்டாப் இட் அனு.... உன்கிட்டே நான் இதை எதிர்பார்க்கவே இல்லை..." அவள் முகம் பார்க்காமல் தடுமாறியவன்,

"இது.... இது தப்பு.... இது சரி வராது.... என்னால் என் குடும்பத்துக்கு துரோகம் பண்ண முடியாது...?" உண்மையைச் சொல்ல முடியாமல், தன் குடும்பத்தை உள்ளே கொண்டு வந்தான்.

"உன் குடும்பமா...? அப்போ நான்...?" அவள் கேட்க,

"நீ.... நீ.... எனக்குத் தெரியாது. உன் பணம், நகை, எதுவும் எனக்கு வேண்டாம். இனிமேல் எனக்கு போன்

பண்ணாதே.... நான் பேச மாட்டேன். நீ நகுலோடவே இரு..." ஒருவித வேகத்தில் உரைத்தான்.

"நகுல்.... நீ என்ன சொல்ற வேந்தன்...? அவர்கிட்டே அப்போ அப்படி சொல்லிட்டு, இப்போ மாத்தி சொன்னால்...? அவர் என்னை ஏத்துக்கலன்னா என்னோட நிலை.... நீ யோசிச்சுதான் பேசறியா..?" வெடித்தாள்.... இல்லை.... இல்லை.... நடித்தாள்.

சுயநலம்.... சுயநலம்.... அவள் மனம் பொருமியது.

"அது.... உன்னோட கவலை.... என்னை விட்டுடு.... இதற்குமேல் நானும் உன்னை தொல்லை செய்ய மாட்டேன். நீயும் என்னை தொல்லை செய்யாதே..." இருக்கையில் இருந்து எழுந்து ஓட முயன்றான்.

அவனை அவ்வளவு சீக்கிரம் விட்டுவிட மனமற்றவள், "எங்கே ஓடுற வேந்தன்.... ஒருவேளை.... ரேணுகா யார்ன்னு நான் கேட்டுடுவேன்னு பயப்படுறியோ...?" அவள் எள்ளலாக கேட்க, எழுந்து செல்ல முயன்றவனின் கால்கள் அப்படியே நின்றுவிட்டது.

"என்ன உளர்ற...?" தைரியமாக கேட்க முயன்றவன், அப்படியே அமர்ந்து விட்டான்.

"உளறுறேனா.... நானா...? எங்கே என் கண்ணைப் பாத்து சொல்.... நான் உளறுறேன்னு..." அவள் சவால்விட, அவனுக்கோ உள்ளே சர்வமும் அடங்கியது.

பேச்சு வராமல் அவன் தவிக்க, "அப்போ உனக்கு ரேணுகாவை யார்ன்னே தெரியாது...." அவள் நிதானமாக கேட்க, அவளது இந்த அவதாரம் வெடவெடக்கச் செய்தது.

அவள் கேள்விக்கு பதில் சொல்லக்கூட தோன்றாமல்.... நாக்கு குழற, "ரே..,ரே....ணுகா..." அவன் தந்தியடிக்க,

"ஹாங்.... ரேணுகாவேதான்.... ஞாபகம் வந்துடுச்சா? இல்லன்னா சொல்.... அவளோட போன் என்கிட்டே இருக்கு..." தன் அலைபேசியை நோண்டியவள், ரேணுகா என தான் பதிந்திருந்த எண்ணை அவன் முகத்துக்கு முன்னால் காட்ட, அவனுக்கோ முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

"இதுதானே அவ நம்பர்.... நான் கால் பண்ணி கேக்கறேன்.... என்னப்பா.... வேந்தன், ரேணுகான்னா யார்ன்னே தெரியாதுன்னு சொல்றான்னு..." அவள் கைகள் அலைபேசியை தன் பக்கம் நகர்த்தி, பச்சை பட்டனை அழுத்த முயல,

சர்வமும் நடுங்கியவனாக.... "ஏய்.... என்ன பண்ற...? வேண்டாம்..." அலைபேசியை அவளிடமிருந்து பறிக்க முயன்றான்.

சட்டென அதை முறியடித்தவள்.... "அப்போ உனக்கு அவளைத் தெரியும்..." போலி ஆச்சரியம் அவள் குரலில் வழிய, நெருப்பின்மேல் நிற்கும் அவஸ்தையை வேந்தன் உணர்ந்தான்.

தூரத்தில் இருந்த நகுலோ.... வேந்தனின் வெளிறிய முகமும், படபடப்பும், பயமும் ஒருவித சுவாரசியத்தை அளிக்க, அவர்களை வேடிக்கை பார்த்தவாறு அங்கேயே அமர்ந்து கொண்டான்.

அவன் விசாரித்த வரைக்குமே.... வேந்தன் ஒரு புள்ளைப் பூச்சி என்பது அவனுக்குத் தெரியும். எனவேதான் தைரியமாக ஒரு காபியை வாங்கி, நிதானமாக உறிஞ்சியவாறே பார்த்துக் கொண்டிருந்தான்.

"தெரியும்..." குரல் எழும்பாமல் உரைத்தான்.

"ஓ.... அவளுக்கு உன்னோட காதலும்.... காத்திருப்பும்.... பணம் கேட்டதும் தெரியுமா...?" நக்கலாக.... ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி, நிதானமாக வினவ,

அவனுக்குள் கொஞ்சம் நஞ்சம் ஒட்டியிருந்த தைரியமும் ஆட்டம் கண்டது.

"ஐயோ.... அனு.... அவளுக்கு எதுவும் தெரியாது. உன் காலில் வேண்ணாலும் விழறேன்.... நீ அவகிட்டே எதையும் சொல்லிடாதே. இனிமேல் உன் வழியில் நான் குறுக்கே வரவே மாட்டேன். என்னை மன்னிச்சு விட்டுடு..." கெஞ்சினான்.

"மன்னிப்பா.... நீ மன்னிப்பு கேட்டால்.... என் வாழ்க்கையில் நடந்த குழப்பம் எல்லாம் சரியா போய்டுமா...?" கோபம் அடங்கவில்லை அவளுக்கு.

ஏதோ.... நகுல் தன்மேல் உயிரையே வைத்திருந்ததால் அனைத்தும் நேராக போயிற்று.... இதுவே.... வேறு நிலையாக மாறியிருந்தால்.... தன் வாழ்க்கை என்னவாகி இருக்கும்? அதைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல், சுயநலமாக ஓட முயலும் அவனை விடுவதா? அவளுக்கு அடங்கவில்லை.

"அனு ப்ளீஸ்.... நான் வேண்ணா உன் கணவனிடம் பேசுகிறேன்..." அவள் முகத்தில் மறுப்பைக் கண்டவன்,

"என்னால்.... எனக்கு.... இதில் என் தங்கையின் வாழ்க்கையும் அடங்கி இருக்கிறது. நான் செய்தது மிகப்பெரிய பிழைதான். இதை நான் செய்தே இருக்கக் கூடாதுதான்.... இப்போ எல்லாம் முடிவிற்கு வரவேண்டிய நேரம் வந்துவிட்டது. முடித்து விடலாம்..." நழுவுவது மட்டுமே அவனுக்கு பிரதானமாக இருந்தது.

அதை உணர்ந்துகொண்டவளோ.... "ச்சீ.... சீ..... இப்படி விட்டேற்றியா பேச உனக்கு அசிங்கமா இல்லை.... நீயெல்லாம் ஒரு மனுஷனா? உன் வேலை, உன் முடிவு, உன் விஷயம்.... சுயநல மிருகம் நீ..." அதீத வெறுப்பை உமிழ்ந்தன அவள் விழிகள்.

அதை உணர்ந்தாலும், அந்த நிமிடம் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அனன்யாவோ.... "எப்படி, எப்படி.... நீயா வருவ, காதலிக்கிறேன்னு புலம்புவ, நீ இல்லன்னா செத்துப் போய்டுவேன்னு மிரட்டுவ, அதைக் கேட்டு நாங்க பயந்து நடுங்குவோம்.... உங்களுக்கு தேவையான வரைக்கும் காதலை யூஸ் பண்ணிட்டு, தூக்கிப் போட்டு போய்டுவீங்க....

"நாங்களும்.... உங்க சூழ்நிலை, குடும்பம், தங்கச்சின்னு வாழ்த்து பாடணும், ஒதுங்கி போய்டணுமா...? என்ன ஒரு கெட்ட எண்ணம்.... இதுவே.... நான் நீ காதலை சொன்னப்போ ஒத்துக்காமல் போயிருந்தா.... நீ எந்த எக்ஸ்ட்ரீம் வரைக்கும் போயிருப்ப.

"அப்போ.... எங்களுக்குன்னு ஒரு மனசு, அதில் தனிப்பட்ட விருப்பம், ஆசை, கனவு எதுவும் இருக்கக் கூடாது. உங்களுக்கு வேணும்னு சொன்னா வேணும்.... வேண்டாம்னு சொன்னால் வேண்டாம்.... என்னை என்ன இளிச்ச வாய்ன்னு நினைச்சியா?

"இப்போ கூட.... உனக்கு கல்யாணம் முடிவாயிடுச்சு.... உன் தங்கைக்கு ஒரு வாழ்க்கை அமையப் போகுதுன்னு சொன்ன உடனே.... என்னை என் புருஷன் கூட வாழச் சொல்ற.... இதுவே விஷயம் வேற மாதிரி இருந்தால், என்னைக் கூப்ட்டு மிரட்டுவ, பணம் கேப்ப.... எல்லாத்துக்கும் நான் மண்டையை மண்டையை ஆட்டணுமா? இது எந்த ஊர் நியாயம்...?" கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தாள்.

அவளது எந்த கேள்விக்கும் அவனால் பதில் கூறவோ, சம்மாளிக்கவோ வேந்தனால் முடியவில்லை.

"எவ்வளவு கூலா.... உன் புருஷனோடவே இருன்னு சொல்ற.... கொஞ்சமாவது யோசிச்சு பாத்தியா...? முதுகெலும்பில்லாத பிள்ளைபூச்சி உன்னை நம்பி.... நகுல் கிட்டே பேசிட்டாளே.... அவன் இப்போ அவளை

ஏத்துப்பானா... இல்லையா.... அதெல்லாம் உனக்கு அவசியமே இல்லை இல்ல...." கூர்மையான பார்வையில் அவள் கேட்க, அவனுக்கு குளிர் ஜுரமே அடித்தது.

"நீ காதலிக்கிறேன்னு சொன்னப்போ மண்டையை மண்டையை ஆட்டிட்டு கேட்டுட்டு போன அதே கேணச்சின்னு என்னை இன்னும் நினைச்சுட்டு இருக்க இல்ல.... அப்படி நினைத்தால்.... ஐ'ம் சாரி.... இந்த அனு புதுசு. ரொம்ப புதுசு...

"இப்போ கூட.... உன் சாக்கடை புத்தியில்.., இவ புருஷன் கிட்டே சொல்லி,உன் பொண்டாட்டி என்னை வந்து பாக்க வந்தான்னு அப்படியே பிளேட்டை திருப்பி போட்டுடலாம்னு ஒரு குறுக்கு புத்தி ஓடும். ஆனா பாரு.... என் புருஷன், இங்கேதான் இருக்கார். உனக்கு சந்தேகம்னா சொல்லு.... அவரை இப்போவே கூப்பிடுறேன்..." மீண்டும் அவள் அலைபேசியை கையில் எடுக்க, மறுக்க கூட தோன்றாமல் உறைந்திருந்தான்.

"அது மட்டும் இல்லை.... இன்னொரு முக்கியமான விஷயம்.... இனிமேல்.... என் வாழ்க்கையில், ஏதாவது குழப்பம் பண்ணணும்னு நீ நினைத்தால் கூட, உன் வாழ்க்கை அந்தரத்தில் தொங்க நான் கேரண்டி.... எப்படின்னு பாக்குறியா.... என்ன என்னைக்கு நீ எனக்கு போன் பண்ண.... என்னை எங்கே வர வச்ச.... எல்லாத்துக்கும் ஆதாரம் என்கிட்டே இருக்கு.

"ஒரு கல்யாணமான பொண்ணு... என் வாழ்க்கையில் குழப்பம் பண்ண பாக்குற.... உன் குணம் என்ன.... உன் வண்டவாளம் என்ன.... இப்படி எல்லாம்.... ஒண்ணு விடாமல் ரேணுகாவுக்கு ஒலிபரப்பப்படும். ஒரு முக்கியமான விஷயம்.... ரேணுகா வேற யாரும் இல்லை.... மைத்ரேயி இருக்காளே.... அவ தங்கச்சியோட குளோஸ் பிரண்டுதான்....

"என்ன.... உனக்கு தகவல் போதுமா இல்ல.... இன்னும் வேணுமா?" அவள் கேட்க, இப்பொழுது தன் பிடி மொத்தமும் அவள் கையில் என்பதை தெளிவாக உணர்ந்தான்.

இத்தனைநாள் தான் அவளை மிரட்டியது போக, இப்பொழுது அவள் தன்னை மிரட்டும் காலம் வந்ததை ஒருவித அதிர்வோடு உள்வாங்கிக் கொண்டான்.

"இல்ல.... என் பக்கம் இருந்து உனக்கு எந்தவிதமான தொந்தரவும் இனிமேல் இருக்காது..." அவன் வேகமாக உரைக்க, அவளோ.... "இருக்கக் கூடாது..." அழுத்தி உரைத்தவள்,

"கடைசியா ஒண்ணு.... உன்னை இப்படியே விட எனக்கு மனசில்லைதான், ஆனாலும்.... என் கணவன் சொன்னார் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் உன்னை இத்தோட.... விடறேன். இனிமேல்.... உன்னை நம்பி வரும் பெண்ணையாவது ஏமாற்றாமல் காப்பாற்று..." அவள் அதீத வெறுப்பில் உதிர்க்க, இதுவே போதும் என எண்ணியவன்.... எழுந்து ஓடியே போனான்.

இனிமேல் தப்பித்தவறி கூட அவள் வழியில் வந்துவிடும் தைரியம் அவனுக்கு இருக்காது என்பதை, அவன் செல்லும் வேகத்திலேயே உணர்ந்தார்கள், நகுலும், அனன்யாவும்.

அனன்யாவுக்குத்தான் அவனை இத்தோடு விட்டுவிட்டது மனது ஆறவே இல்லை. அவனை மேலும் நார் நாராக கிழிக்க வேண்டும் என்றே மனம் வெதும்பியது. ஆனால்.... முதுகெலும்பே இல்லாமல்.... வளைந்துபோகும் அவனை இதற்குமேல் கேள்விகேட்க அவளுக்கும் மனமில்லை.

அவன் செல்லவே.... தலையில் கை வைத்து அமர்ந்தவள், அங்கிருந்து எழவே இல்லை. அவன் சுயநலத்தின் எல்லையை எண்ணியவளுக்கு மனதின் ஓரம் வலித்தது. ‘இவனை நம்பியிருந்தால்...? அப்படி நடந்திருந்தால்...?’ அவளால் எண்ணவே முடியவில்லை.

ஆனாலும்.... அவன் அப்படியே ஓடியதில் மனம் நிம்மதியில் திளைக்கவும் மறக்கவில்லை. அதே நேரம்.... அவள் தோளில் ஒரு கரம் விழ, அது யார் என உணர்ந்தவள், தன் கன்னத்தை அந்த கையின்மேல் பதித்தாள்.

"வா.... முதல்ல இங்கே இருந்து போகலாம்..." அவளை அழைத்துக் கொண்டு காருக்கு விரைந்தவன், "என்ன.... அவன் அலறிட்டு ஓடுறான்? அப்படி என்ன சொன்ன...?" அவன் கேட்க,

"என்னை எப்போ கூட்டி போறன்னு கேட்டேன்.... அவ்வளவு தான்..." அவள் சொல்லி முடிக்கவே, அவன் கோபம் கொள்வான் என அவள் எதிர்பார்க்க, அவனோ.... வயிற்றை பிடித்துக்கொண்டு சிரித்தான்.

"டேய்.... ஏண்டா சிரிக்கற...?" அவன் சட்டையைப் பிடித்து உலுக்க,

"உன் உண்மையான சுயரூபம் தெரிஞ்சு போச்சு போல, எப்படி அலறிட்டு ஓடுறான் பாத்தியா...?" சிரிப்புக்கு இடையில், அவன் வார்த்தைகளை உதிர்க்க, அவனை முறைக்க முயன்று தோற்றவள், தானும் அவனோடு இணைந்து கொண்டாள்.

அவன் முயற்சி புரிய, "கோபம் இல்லையா...?" அவன் கரத்தை பற்றிக்கொண்டு கேட்டாள்.

"எதுக்கு கோபம்...? என் அன்னத்தைப் பற்றி எனக்குத் தெரியாதா? வேந்தன் பிரச்சனையை நீயே சம்மாளித்ததில் எனக்கு சந்தோசம் தான்.." அவளை அணைத்துக் கொண்டான்.

"என்னம்மா.... ஏதாவது மனசுக்கு கஷ்டமா இருக்கா?" அவன் பேசியதில் ஏதாவது அவளுக்கு வருத்தமோ என அறிய முயன்றான்.

"எதுக்கு கஷ்டம்...?" அவனிடம் திருப்பிக் கேட்டவள், அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

"அவனை உண்டு இல்லன்னு பண்ணிட்ட போல, என்ன.... ரேணுகா பத்தியும் சொல்லிட்டியா...?" அவளிடம் கேட்க,

"உங்களுக்கு எப்படி அவ பேர் தெரியும்.." கேட்டவள்.... "ஓ.... இந்த மையூ வேலையா இது...?" தானே விடை உரைத்தவள், அவன் தடுமாற்றத்தை கவனிக்கவில்லை.

அவனுக்குமே அவளிடம் உண்மையை சொல்ல தயக்கமாக இருந்தது. ஒரு வேளை.., என்மேல் நம்பிக்கை இல்லாமல் ஆராய்ந்தாயா என கேட்டுவிட்டால், அவனால் தாங்க முடியாது என்ற அச்சம்....

பலவீனம் இல்லாத மனிதன் உண்டா என்ன...?

அவன் மௌனத்தை கவனிக்காமல்.... "அவன்கிட்டே சொல்லி.... அவன் முகத்திரையை கிழிச்சு.... உன் வண்டவாளம் எல்லாம் தெரியும்டான்னு சொல்லிட்டுதான் வந்திருக்கேன். நான் செய்தது சரிதானே..." அவனிடம் கேட்க,

"நூறு சதவீதம் சரிடா... உனக்கு கஷ்டமா இருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்.... வேறே எதுவும் இல்லை" அவளை ஆதரவாக அணைத்தான்.

"எனக்கு என் நகுல் இருக்கும் போது கஷ்டம் என்னை நெருங்குமா? இது.... ஒரு மாதிரி வெறுப்பு.... அவனோட சுயநலத்தைப் பார்த்து வந்த அருவருப்பு..." அவள் உரைக்க, அமைதியாக அவளைப் பார்த்திருந்தான்.

"ச்சே.... நான் எவ்வளவு பெரிய ஏமாளியா இருந்து இருக்கேன்? எவ்வளவு பலவீனமானவளா இருந்து இருக்கிறேன். ஒரு பெண்ணோட வீக்னசை எவ்வளவு சுலபமா இந்த ஆம்பளைங்க பயன்படுத்திக்கிறாங்க.

"ஒரு பொண்ணுக்கு.... அவளுக்குன்னு ஒரு மனசு இருக்காதா? உணர்வுகள், உணர்சிகள் இருக்காதா? எதையுமே மதிக்காமல், சுயநலமா எப்படி இப்படியெல்லாம் சிந்திக்க முடியுது?

"சும்மா இருந்த என் மனதைக் கலைத்துவிட்டோம்.... டென்ஷனை கொடுத்து விட்டோம்.... பாடாய் படுத்தி விட்டோம்.... மிரட்டி இருக்கிறோம், இப்படி எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாமல், எவ்வளவு சுலபமா இத்தோட முடிச்சுக்கலாம்னு சொல்றான்.... ஸ்கவுண்ட்ரல்..." பல்லைக் கடித்தவளுக்கு, மனதின் கொதிப்பை அடக்கவே முடியவில்லை.

"என்னைப் புரிந்துகொண்ட நீங்க என் வாழ்க்கைத் துணையாக கிடைக்காமல் போயிருந்தால்...? இதே போல்.... என் மனசுக்குள் அவனது நினைப்பு முழுமையாக பதிந்திருந்தால்...? என்னால் நினைத்து பார்க்கவே முடியலை. சும்மா இருந்த பொண்ணோட மனசை கலைச்சுட்டோம்னு கொஞ்சம் கூட குற்ற உணர்ச்சியே இல்லாமல்.... இவனால் எப்படி இப்படி இருக்க முடியுது?

"இப்போ இருக்க பசங்களுக்கே.... பொண்ணுன்னா அவனுங்களுக்கு விளையாட்டு பொருளா போயிட்டோமா? அவன் காதலிச்சால் காதலிக்கணும், வேண்டாம்னா விலகிடணும்.... ஆசைபட்டா.... அதுக்கு இணங்கணும்.... நாங்க மனுஷங்களா இல்ல.... வேற எதுவுமா?

"எங்க உடம்பிலும் ரத்தமும், சதையும் அதே மாதிரி தானே இருக்கு. பிறகு.... அவனை இத்தோட விட்டிருக்கக் கூடாது..." பொருமியவள்,

"நகுல்.... நீங்க மட்டும் இல்லன்னா.... உண்மை காதல் என்னன்னு எனக்கு புரிய வைக்காமல் போயிருந்தால்.... இவனை நம்பி.... நான்.... என்ன ஆகி இருப்பேன்னே எனக்குத் தெரியலை. என்னை நினைத்தாலே எனக்கு அசிங்கமா இருக்கு..."

"அதிலும்.... அவனை நினைத்தால்.... அப்படியே பத்திகிட்டு வருது.... அருவருப்பா இருக்கு.... நீங்க.... எனக்கு கடவுள் கொடுத்த வரம்..." அவனை இறுக்கிக் கொண்டாள்.

அவனோ.... "இல்ல அன்னம்.... நீதான் என்னை காப்பாற்ற வந்த தேவதை, நீ இல்லன்னா.... நான் இல்லை.... நான் உன்னை என் உயிரா நேசிக்கிறேன். உன்மேல் எனக்கு எப்பொழுதும் முழு நம்பிக்கை இருக்கு..." மேலும் அவளை இறுக்கியவன், அவளுக்கு தான் இருக்கிறேன் என்பதை உணர்த்தினான்.

"அன்னம்.., என்னவோ அருவருப்பா இருக்குன்னு சொன்னியே.... அது போக நான் ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா...?" குழைவாக கேட்க, "ரொம்ம்ம்ப..." அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள்.

அடுத்து வந்த வாரத்தில்.... நவீனின் குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா நடக்க, வேலைகளோடு சேர்த்து.... அவள் பின்னாலேயே வால் பிடித்து அலைந்தான் நகுல்.

ஒரு கட்டத்தில்.... "நகுல்.... என்ன பண்றீங்க...? எல்லாரும் நம்மளையே பாக்கறாங்க..." அவன் செய்கையில் நாணியவள், அடிக்குரலில் அவனை கடிந்து கொண்டாள்.

"பாக்கட்டும்.... எனக்கென்ன வந்தது..." அவன் அசால்ட்டாக உரைக்க, அவனைத் திருத்த முடியாது என எண்ணியவள், "என்னவோ போங்க..." அப்படியே விட்டு விட்டாள். ஆனாலும்.... மனதுக்குள் அவன் செய்கை தித்திப்பாய் இறங்கியது.

இப்படி ஒரு கணவன் கிடைக்க அவள் கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்.

"அண்ணா.... உன் அழும்பு தாங்கலடா.... நீ விடுற ஜொள்ளில் சென்னைக்கே குடிநீர் சப்ளை பண்ணலாம் போல..." வருணா கேலி செய்ய, "ஆமா.... நவீனையும் கூட

சேத்துக்கறேன்..." நகுல் அசராமல் அடிக்க, சொந்தங்கள் அனைத்தும் சிரித்தது.

"ஏண்டாப்பா.... நீங்க எப்போ நல்ல சேதி சொல்லப் போறீங்க...?" ஒரு பாட்டி கேட்க,

"அடுத்த பத்தாவது மாசம் நீங்க அடுத்த பங்க்ஷன்க்கு வர நான் கேரண்டி..." அவன் உரைக்க, அனன்யா தன் அறைக்கு ஓடியே போனாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், பூரித்து சிரித்தாலும், தந்தை கேட்ட கேள்வி அவன் செவியைத் தீண்டி இம்சித்தது.

"நகுல்.... அவளை வீட்டுக்குள் பூட்டி வைக்கப் போகிறாயா?" அவர் சாதாரணமாக கேட்டாரா...? இல்லை.... உள்நோக்கத்தோடு கேட்டாரா என்பது புரியவில்லை, ஆனால்.... அந்த கேள்வியில் இருந்த உண்மை அவன் முகத்தை அறைந்தது.

தன் மனைவியின் எண்ணம் என்னவென்று அறிய, "ஏன் அன்னம்.... உன் படிப்பு வீணாக போகுதே.... ஏதாவது வேலை.... அதாவது நம்ம கம்பெனியில் செய்கிறாயா...?" அவன் கேட்டபொழுது, அவள் முகம் மலர்ந்த விதம்.... தன் தந்தையின் கேள்வியில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை அவனுக்கு உணர்த்தியது.

ஆனாலும்.... "ஒரு ரெண்டு வருஷம் கழிச்சு வரேன்..." அவள் குழைந்து உரைக்க,

"ஏன்...? இப்போ நல்ல நாள், நேரம் இல்லையா...?" அவன் கேலி செய்ய,

"எனக்கு குட்டி நகுல் பெத்துகிட்ட பிறகுதான் போகணும்.... என்னை உயிரா நேசிக்கிற அத்தைக்கு.... இதைவிட பெரிய பரிசை நான் கொடுக்க முடியாது..." அவள் உரைக்க, தன் மனைவியை எண்ணி நெகிழ்ந்து போனான்.

"அன்னம்..." அவன் அதை வார்த்தையில் வெளிப்படுத்த,

"அது என்னன்னு தெரியலை.... அத்தை என்னை உயிரா பாத்துக்கறாங்க. அது.... நான் அவங்க புள்ளையை காப்பாத்தி கொடுத்தேன் என்ற நினைப்பா இருக்கலாம். ஆனா.... அதையும் மீறி.... அவங்க கண்ணில் தெரியும் கலக்கம்.... அது ஏன்னு எனக்குப் புரியலை.

"ஒரு பேரப்பிள்ளையை அவங்களுக்கு கொடுத்தால்.... அவங்க அலைப்புறுதல் நிக்குமான்னு எனக்கு தெரிஞ்சுக்கணும். என் அம்மாவை விட மேலா பாத்துக்கற என் அத்தைக்கு நான் வேற என்ன செய்ய முடியும்?" அவன் தோள் சாய்ந்தாள்.

தன் மனைவி, தன் தாயை இந்த அளவு கவனிக்கிறாளா? அவர் கவலை இவளுக்கு புரிகிறதா? அவனுக்கு இதைவிட வேறு எதுவும் வேண்டாம் என்றே தோன்றியது.

"உனக்கு இவ்வளவு இளகிய மனசா..." அவளுக்குள் மிகவும் ஆசையாக கரைந்து போனான்.

"என்னங்க.... என்ன யோசனை...? அண்ணா கூப்பிடுறாங்க பாருங்க.... போங்க..." அவனைக் கலைக்க.... "இதோ போறேன் அன்னம்.... நீயும் வா..." அவளையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

மனதுக்குள்.... தன் புதிய யூனிட்டில், அவளுக்கான வேலை என்ன என்பதை அவன் தீர்மானித்துக் கொண்டான்.

அன்று மாலையே.... இருவரும் ஊட்டிக்குச் செல்ல, "டேய் நகுல்.... விட்ட இடத்திலேயே புடிக்கப் பாக்குற...?" நவீன் கேலியாக அவனை கிண்ட,

"ம்..." இமை சிமிட்டியவன், வெட்கமே இல்லாமல் புன்னகைத்தான்.

"நகுல்.... ஊட்டி வேண்டாமே.... வேற எங்கேயாவது போயிட்டு வாயேன்..." பார்வதி புலம்ப, 'அப்படியா...?' நகுல் மனைவியிடம் கண்களால் வினவ, அவளோ விழிகளால் மறுத்தாள்.

அதைப் பார்த்தவர்.... அது அனன்யாவின் விருப்பம் என்பதை உணர்ந்தவர், "சரி.., பாத்து போயிட்டு வாங்க.... எதுன்னாலும் போன் பண்ணு. அவளை அவங்க அம்மா வீட்டுக்கு கூட்டி போயிட்டு வா.... அப்படியே கெவினையும் பாத்துட்டு வாங்க..." பார்வதி அடுக்க, அனன்யா தன் அத்தையை கட்டிக் கொண்டாள்.

அவள் நெற்றியில் முத்தமிட்டவர், "ஹெல்த்தை பாத்துக்கோ.... எதுன்னாலும் நகுல் கிட்டே சொல்லு, எனக்கு கால் பண்ணு..." அவளை ஊட்டிக்கு அனுப்ப மனமில்லாமல் தடுமாறினார்.

"அம்மா.... நீங்க விட்டாதான் அவங்க கிளம்ப முடியும்..." வருணா உரைக்க, அவள் குழந்தையை வாங்கியவள், இறுக முத்தமிட்டு, "இந்த குட்டிப் பையனை ரொம்ப மிஸ் பண்ணுவேன்..." தவிப்பாய் உரைத்தாள்.

"ஏய்.... உனக்கு குட்டி வர வேலையைப் பாக்க வேண்டிய நேரத்தில், என்ன பீல் பண்ணிக்கிட்டு.... முதல்ல நீ கிளம்பு..." அவளுக்கு மட்டும் கேட்குமாறு கடிந்து கொண்டாள்.

"போடி..." அவள் சிணுங்க.... "ம்ஹூம்.... இது வேலைக்காகாது.... எங்க அண்ணா உன்னை ரூமுக்குதான் தள்ளிட்டு போகப்போறான் பார்..." வருணா உரைக்க, முகம் சிவக்க, அவளை முறைத்தாள்.

மனைவியை ரசனையாக பார்த்தாலும், அவளும் தன் தங்கையும் உரையாடுவதை ஆசையாகப் பார்த்தான். எத்தனை வீடுகளில் இப்படி ஒரு காட்சி கிடைக்கும்?

"அம்மா.... இப்போ சம்மர் தானேம்மா.... சோ கிளைமேட் மிதமாத்தான் இருக்கும். நான் பாத்துக்கறேம்மா..." தாயின் மனம் புரிய, ஆறுதலாக உரைத்தவன் கிளம்பிவிட்டான்.

கார் சாலையில் சீற, அவன் தோள் சாய்ந்தவள், அவன் இடக்கரம் கோர்த்து, அழுத்தமாக அவன்மேல் சாய்ந்து கொண்டாள்.

இப்படி அவளோடு பயணிக்க விரும்பியவன் தானே.... தன் கனவு நிஜமானதில் பூரித்துப் போனவன், அவள் உச்சந்தலையில் அழுத்தமாக இதழ் பதித்தான்.

அவன் கனவு நிஜமானது.

(முற்றும்)